செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–9

பொருள்வயிற்பிரிவு - 2

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

பொருள்வயிற்பிரிவு - 2

தொகுதி - 9

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-776-4 (Vol-9)

தனிப்பிரதி விலை ரூ. 550/–
(தொகுதி-9)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431-2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427-2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422-2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452-2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424-2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xv

மதிப்புரை xx

பதிப்புரை xxi

அகத்திணை xxiii

பொருள்வயிற்பிரிவு - 2

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 1	வண்டுபடத்	மாமூலனார்	697
அகநானூறு 19	அன்றுஅவண்	பொருந்தில் இளங்கீரனார்	611
அகநானூறு 21	மனைஇள	காவன் முல்லைப்பூதனார்	607
அகநானூறு 31	நெருப்புஎனச்	மாமூலனார்	780
அகநானூறு 33	வினைநன்று	மதுரை அழக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	587
அகநானூறு 40	கானல்	குன்றியனார்	794
அகநானூறு 41	வைகுபுலர்	குன்றியனார்	532
அகநானூறு 45	வாடல்	வெள்ளிவீதியார்	783
அகநானூறு 47	அழிவுஇல்	ஆலம்பேரிச் சாத்தனார்	604
அகநானூறு 53	அறியாய்	சீத்தலைச்சாத்தனார்	650
அகநானூறு 57	சிறுபைந்	நக்கீரர்	540
அகநானூறு 61	நோற்றோர்	மாமூலனார்	642
அகநானூறு 67	யான்எவன்	நோய்பாடியார்	700

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 79	தோட்பதன்	குடவாயிற் கீரத்தனார்	596
அகநானூறு 83	வலம்சுரி	கல்லாடனார்	520
அகநானூறு 91	விளங்குபகல்	மாமூலனார்	660
அகநானூறு 103	நிழல்அறு	காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்	703
அகநானூறு 109	பல்இதழ்	கடுந்தொடைக் காவினார்	571
அகநானூறு 111	உள்ஆங்கு	பாலை பாடிய பெருங்கடுங்கோ	478
அகநானூறு 113	நன்றுஅல்	கல்லாடனார்	797
அகநானூறு 123	உண்ணா	காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	578
அகநானூறு 129	உள்ளல்	குடவாயிற்கீரத்தனார்	619
அகநானூறு 135	திதலை	பரணர்	771
அகநானூறு 151	தம்நயந்து	காவன் முல்லைப் பூதரத்தனார்	421
அகநானூறு 159	தெண்கழி	ஆமூர்க் கவுதமன் சாதேவனார்	666
அகநானூறு 169	மரம்தலை	தொண்டி ஆமூர்ச் சாத்தனார்	563
அகநானூறு 171	நுதலும்	கல்லாடனார்	461
அகநானூறு 173	அறம்தலைப்	முள்ளியூர்ப் பூதியார்	454
அகநானூறு 177	தொல்நலம்	செல்லூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்	626
அகநானூறு 181	துன்அருங்	பரணர்	614

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 185	எல்வளை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	424
அகநானூறு 197	மாமலர்	மாமூலனார்	457
அகநானூறு 201	அம்ம	மாமூலனார்	669
அகநானூறு 209	தோளும்	கல்லாடனார்	623
அகநானூறு 211	கேளாய்	மாமூலனார்	754
அகநானூறு 213	வினைநவில்	தாயங்கண்ணனார்	677
அகநானூறு 223	பிரிதல்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	632
அகநானூறு 227	நுதல்பசந்	நக்கீரர்	760
அகநானூறு 231	செறுவோர்	மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்	442
அகநானூறு 233	அமைரல்	மாமூலனார்	630
அகநானூறு 237	புன்காற்	தாயங்கண்ணனார்	663
அகநானூறு 239	அளிதோ	எயினந்தை மகன் இளங்கீரனார்	546
அகநானூறு 241	துனிஇன்று	காவன் முல்லைப் பூதனார்	427
அகநானூறு 247	மண்ணா	மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்	694
அகநானூறு 249	அம்ம	நக்கீரனார்	429
அகநானூறு 251	தூதும்	மாமூலனார்	673
அகநானூறு 255	உலகுகிளர்ந்	மதுரை மருதனிளநாகனார்	808

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 265	புகையின்	மாமூலனார்	654
அகநானூறு 267	நெஞ்சு	பாலை பாடிய பெருங்கடுங்கோ	764
அகநானூறு 279	நட்டோர்	இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்	551
அகநானூறு 281	செய்வது	மாமூலனார்	433
அகநானூறு 287	தொடிஅணி	குடவாயிற் கீரத்தனார்	548
அகநானூறு 289	சிலைஏறு	எயினந்தை மகன் இளங்கீரனார்	565
அகநானூறு 291	வானம்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	590
அகநானூறு 295	நிலம்நீர்	மாமூலனார்	757
அகநானூறு 297	பானாட்	மதுரை மருதனிளநாகனார்	543
அகநானூறு 299	எல்லையும்	எயினந்தைமகனார் இளங்கீரனார்	574
அகநானூறு 303	இடைபிறர்	ஔவையார்	805
அகநானூறு 309	வயவாள்	கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்	802
அகநானூறு 311	இரும்பிடிப்	மாமூலனார்	469
அகநானூறு 313	இனிப்பிறிது	பாலை பாடிய பெருங்கடுங்கோ	466
அகநானூறு 323	இம்மென்புறநாட்டுப்	பெருங்கொற்றனார்	464

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 329	பூங்கணும்	உறையூர் முதுகூத்தனார்	706
அகநானூறு 331	நீடுநிலை	மாமூலனார்	419
அகநானூறு 333	யாஅ	கல்லாடனார்	789
அகநானூறு 343	வாங்குஅமை	மதுரை மருதனிளநாகனார்	593
அகநானூறு 349	அரம்போழ்	மாமூலனார்	657
அகநானூறு 357	கொடுமுள்	எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்	475
அகநானூறு 359	பனிவார்	மாமூலனார்	472
அகநானூறு 361	தூமலர்த்	எயினந்தை மகனார் இளங்கீரனார்	599
அகநானூறு 365	அகல்வாய்	மதுரை மருதனிளநாகனார்	569
அகநானூறு 371	அவ்விளிம்பு	எயினந்தை மகன் இளங்கீரனார்	560
அகநானூறு 373	முனைகவர்ந்து	பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்	554
அகநானூறு 381	ஆளி	மதுரை இளங்கௌசிகனார்	557
அகநானூறு 391	பார்வல்	காவன் முல்லைப் பூதனார்	435
அகநானூறு 393	கோடுஉயர்	மாமூலனார்	635
அகநானூறு 395	தண்கயம்	எயினந்தை மகனார் இளங்கீரனார்	438

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 399	சிமையக்	எயினந்தை மகனார் இளங்கீரனார்	639
ஐங்குறுநூறு 318	ஆய்நலம்	ஓதலாந்தையார்	778
ஐங்குறுநூறு 319	கண்பொர	ஓதலாந்தையார்	692
ஐங்குறுநூறு 320	முள்அரை	ஓதலாந்தையார்	690
ஐங்குறுநூறு 321	உறைறுதலைப்	ஓதலாந்தையார்	519
ஐங்குறுநூறு 322	நெடுங்கழை	ஓதலாந்தையார்	527
ஐங்குறுநூறு 323	வள்எயிற்றுச்	ஓதலாந்தையார்	523
ஐங்குறுநூறு 326	அழல்அவிர்	ஓதலாந்தையார்	528
ஐங்குறுநூறு 327	பொறிவரித்	ஓதலாந்தையார்	524
ஐங்குறுநூறு 329	ஆள்வழக்	ஓதலாந்தையார்	585
ஐங்குறுநூறு 330	வெந்துகள்	ஓதலாந்தையார்	617
ஐங்குறுநூறு 334	அம்ம	ஓதலாந்தையார்	423
ஐங்குறுநூறு 335	அம்மா	ஓதலாந்தையார்	693
ஐங்குறுநூறு 336	அம்ம	ஓதலாந்தையார்	769
ஐங்குறுநூறு 337	அம்ம	ஓதலாந்தையார்	653
ஐங்குறுநூறு 431	நன்றே	பேயனார்	713
ஐங்குறுநூறு 432	நன்றே	பேயனார்	714
ஐங்குறுநூறு 433	நன்றே	பேயனார்	715
ஐங்குறுநூறு 434	நன்றே	பேயனார்	716
ஐங்குறுநூறு 435	நன்றே	பேயனார்	718
ஐங்குறுநூறு 436	நன்றே	பேயனார்	719

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 437	நன்றே	பேயனார்	720
ஐங்குறுநூறு 438	நன்றே	பேயனார்	722
ஐங்குறுநூறு 439	நன்றே	பேயனார்	723
ஐங்குறுநூறு 440	நன்றே	பேயனார்	721
ஐங்குறுநூறு 468	வரிநுணல்	பேயனார்	818
ஐங்குறுநூறு 469	பைந்தினை	பேயனார்	817
ஐங்குறுநூறு 470	இருநிலம்	பேயனார்	819
ஐந்திணை ஐம்பது 1	மல்லர்க்	மாறன் பொறையனார்	831
ஐந்திணை ஐம்பது 2	அணிநிற	மாறன் பொறையனார்	832
ஐந்திணை ஐம்பது 3	மின்னும்	மாறன் பொறையனார்	814
குறுந்தொகை 11	கோடீஈர்	மாமூலனார்	792
குறுந்தொகை 12	எறும்பி	ஓதலாந்தையார்	684
குறுந்தொகை 39	வெந்திறல்	ஔவையார்	685
குறுந்தொகை 43	செல்வார்	ஔவையார்	773
குறுந்தொகை 59	பதலைப்	மோசிகீரனார்	734
குறுந்தொகை 60	குறுந்தாள்	பரணர்	776
குறுந்தொகை 67	உள்ளார்	அள்ளூர் நன்முல்லையார்	775
குறுந்தொகை 77	அம்ம	மதுரை மருதனிளநாகனார்	779
குறுந்தொகை 79	கான	குடவாயிற்கீரத்தனார்	786
குறுந்தொகை 104	அம்ம	காவன் முல்லைப்பூதனார்	788
குறுந்தொகை 130	நிலம்தொட்டுப்	வெள்ளி வீதியார்	744

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 147	வேனிற்	கோப்பெருஞ்சோழன்	537
குறுந்தொகை 253	கேளார்	பூங்கண்ணன்	646
குறுந்தொகை 274	புறவுப்	உருத்திரன்	525
குறுந்தொகை 275	முல்லை	ஒக்கூர் மாசாத்தியார்	815
குறுந்தொகை 281	வெண்மணற்	குடவாயிற் கீரத்தன்	687
குறுந்தொகை 283	உள்ளது	பாலை பாடிய பெருங்கடுங்கோ	688
குறுந்தொகை 350	அம்ம	ஆலத்தூர்கிழார்	440
குறுந்தொகை 398	தேற்றாம்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	417
கைந்நிலை 21	ஆந்தை	புல்லங்காடனார்	708
கைந்நிலை 23	சிலையொலி	புல்லங்காடனார்	709
திணைமொழி ஐம்பது 22	மென்முலைமேல்	கண்ணஞ் சேந்தனார்	821
திணைமொழி ஐம்பது 23	சென்றார்	கண்ணஞ்சேந்தனார்	822
திணைமொழி ஐம்பது 24	செஞ்சுணங்கின்	கண்ணஞ்சேந்தனார்	823
திணைமொழி ஐம்பது 25	கருஇயல்	கண்ணஞ்சேந்தனார்	824
திணைமொழி ஐம்பது 26	இருங்கடல்	கண்ணஞ்சேந்தனார்	825
திணைமொழி ஐம்பது 27	ஆயர்இனம்	கண்ணஞ்சேந்தனார்	826

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமொழி ஐம்பது 28	அதிர்குரல்	கண்ணஞ்சேந்தனார்	827
திணைமொழி ஐம்பது 29	கோடல்அம்	கண்ணஞ்சேந்தனார்	829
திணைமொழி ஐம்பது 30	அருவி	கண்ணஞ்சேந்தனார்	830
திருக்குறள் 1151	செல்லாமை	திருவள்ளுவர்	481
திருக்குறள் 1152	இன்கண்	திருவள்ளுவர்	483
திருக்குறள் 1153	அரிதரோ	திருவள்ளுவர்	484
திருக்குறள் 1154	அளித்(து)அஞ்சல்	திருவள்ளுவர்	485
திருக்குறள் 1155	ஓம்பின்	திருவள்ளுவர்	486
திருக்குறள் 1156	பிரி(வு)உரைக்கும்	திருவள்ளுவர்	488
திருக்குறள் 1157	துறைவன்	திருவள்ளுவர்	489
திருக்குறள் 1158	இன்னா(து)	திருவள்ளுவர்	490
திருக்குறள் 1159	தொடிற்சுடின்	திருவள்ளுவர்	491
திருக்குறள் 1160	அரி(து)ஆற்றி	திருவள்ளுவர்	493
திருக்குறள் 1161	மறைப்பேன்மன்	திருவள்ளுவர்	494
திருக்குறள் 1162	கரத்தலும்	திருவள்ளுவர்	495
திருக்குறள் 1163	காமமும்	திருவள்ளுவர்	497
திருக்குறள் 1164	காமக்	திருவள்ளுவர்	498
திருக்குறள் 1165	துப்பின்	திருவள்ளுவர்	499
திருக்குறள் 1166	இன்பம்	திருவள்ளுவர்	500
திருக்குறள் 1167	காமக்	திருவள்ளுவர்	501

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1168	மன்உயிர்	திருவள்ளுவர்	503
திருக்குறள் 1169	கொடியார்	திருவள்ளுவர்	504
திருக்குறள் 1170	உள்ளம்போன்(று)	திருவள்ளுவர்	505
திருக்குறள் 1171	கண்தாம்	திருவள்ளுவர்	506
திருக்குறள் 1172	தெரிந்துஉணரா	திருவள்ளுவர்	507
திருக்குறள் 1173	கதும்எனத்	திருவள்ளுவர்	509
திருக்குறள் 1174	பெயல்ஆற்றா	திருவள்ளுவர்	510
திருக்குறள் 1175	படல்ஆற்றா	திருவள்ளுவர்	511
திருக்குறள் 1176	ஓஒ	திருவள்ளுவர்	512
திருக்குறள் 1177	உழந்(து)உழந்து	திருவள்ளுவர்	513
திருக்குறள் 1178	பேணாது	திருவள்ளுவர்	515
திருக்குறள் 1179	வாராக்கால்	திருவள்ளுவர்	516
திருக்குறள் 1180	மறைபெறல்	திருவள்ளுவர்	517
திருக்குறள் 1231	சிறுமை	திருவள்ளுவர்	736
திருக்குறள் 1232	நயந்தவர்	திருவள்ளுவர்	737
திருக்குறள் 1233	தணந்தமை	திருவள்ளுவர்	738
திருக்குறள் 1234	பணைநீங்கிப்	திருவள்ளுவர்	739
திருக்குறள் 1235	கொடியார்	திருவள்ளுவர்	741
திருக்குறள் 1236	தொடியொடு	திருவள்ளுவர்	742
திருக்குறள் 1237	பாடு	திருவள்ளுவர்	743

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1261	வாள்அற்றுப்	திருவள்ளுவர்	745
திருக்குறள் 1262	இலங்கிழாய்	திருவள்ளுவர்	747
திருக்குறள் 1263	உரன்நசைஇ	திருவள்ளுவர்	748
திருக்குறள் 1264	கூடிய	திருவள்ளுவர்	749
திருக்குறள் 1265	காண்கமன்	திருவள்ளுவர்	750
திருக்குறள் 1266	வருகமன்	திருவள்ளுவர்	751
திருக்குறள் 1267	புலப்பேன்கொல்	திருவள்ளுவர்	752
நற்றிணை 28	என்கைக்	முதுகூத்தனார்	724
நற்றிணை 41	பைங்கண்	இளந்தேவனார்	447
நற்றிணை 92	உள்ளார்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	726
நற்றிணை 103	ஒன்றுதெரிந்து	மதுரை மருதனிளநாகனார்	580
நற்றிணை 105	முளிகொடி	முடத்திருமாறன்	602
நற்றிணை 112	விருந்துஎவன்	பெருங்குன்றூர்கிழார்	811
நற்றிணை 113	உழைஅணைந்து	இளங்கீரனார்	530
நற்றிணை 148	வண்ணம்	கண்ணம்பாளனார்	449
நற்றிணை 189	தம்அலது	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	729
நற்றிணை 208	விறல்சாய்நொச்சி	நியமங்கிழார்	731
நற்றிணை 240	ஐதே	நப்பாலத்தனார்	681

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 243	தேம்படு	காமக்கணிப்பசலையார்	648
நற்றிணை 252	உலைவஅம்மெய்யன்	நாகனார்	452
நற்றிணை 274	நெடுவான்	காவன்முல்லைப் பூதனார்	710
நற்றிணை 284	புறம்தாழ்பு	தேய்புரிப் பழங்கயிற்றினார்	583
நற்றிணை 286	ஊசல்துறைக்	பாலங்கொற்றனார்	444
நற்றிணை 314	முதிர்ந்தோர்	முப்பேர் நாகனார்	767
நற்றிணை 346	குணகடல்	எயினந்தைமகன் இளங்கீரனார்	538
நற்றிணை 352	இலைமாண்	மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்	534

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராகு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, “பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று” மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
　　பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
　　தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
　　தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
　　கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
　　சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
　　பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
　　காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
　　செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
　　ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
　　குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
　　எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
　　எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
　　நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, ''உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தியிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பொருள்வயிற்பிரிவு – 2

தொகுதி 9

பக்கம் 417 முதல் 833 வரை

தலைவி கூற்று

குறுந்தொகை 398 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழி, 'தலைமகன் பிரிந்து வினைமுற்றி வரும் துணையும் ஆற்றியுளராவர்' என்று, உலகியல்மேல் வைத்து உரைத்தாட்குத் தலைமகள், ஆற்றாமை மீதூரச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவைத் தலைவியிடம் உணர்த்தத் தோழி, 'உலகிலுள்ள மகளிர் தம் தலைவர் வினை முடித்து வருமளவும் ஆற்றியிருப்பர்' என்று உலகின் மேல் வைத்துக் கூறி, 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' என்பதை அறிவுறுத்தினாளாக, 'நம்மை அறிவுறுத்துவாரையன்றி நம் துயரைப் போக்குவாரைக் கண்டிலேம்' என்று தலைவி கூறியது.

தேற்றாம் அன்றே தோழி! தண்ணெனத்
தூற்றும் திவலைத் துயர்கூர் காலை,
கயல்ஏர் உண்கண் கனங்குழை மகளிர்
கையுறை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயர் எடுப்பும் புன்கண் மாலை,
அரும்பெறற் காதலர் வந்தென, விருந்துஅயர்பு,
மெய்ம்மலி உவகையின் எழுதரு
கண்கலிழ் உகுபனி அரக்கு வோரே.

தெளிவுரை

"தோழியே! குளிர்ந்த மழைத்துளிகளைச் சிந்தித் துயரத்தைத் தரும் கார் கால மாலைக்காலம்; இம்மாலைப்பொழுதில் கயல் போலும் கண்களையும் கனத்த குழையையும் கொண்ட மகளிர், தம் கையே கருவியாக (கையின் துணைகொண்டு) நெய்யைப் பெய்து, துன்பத்தை மிகுவிக்கும் விளக்கை ஏற்றி வைத்துள்ளனர். துயரம் மிகுந்த இம்மாலைக்காலத்தில், 'காதலர் வந்துவிட்டார்' எனக் கூறி, விருந்து செய்து, உடம்பு பூரித்து மகிழுமாறு முன்னர் நான் கலங்கியதால் வீழ்ந்திருந்த என் கண்ணீர்த்துளியைத் துடைத்துத் தேற்றுவார் எவரையும் காணேன்."

கருத்து

எனக்கு அறிவுரை கூறுபவர் பலரைக் காண்கிறேன்; ஆனால், என் துன்பத்தை அறிந்து நீக்குவார் எவரையும் காணேன்.

விளக்கம்

தலைவன் பொருள்தேடப் பிரியவிருக்கிறான் என்பதைத் தலைவியிடம் கூறிய தோழி, 'உலகில் உள்ள பெண்கள், தம் காதலர் கருதிச் சென்ற செயலை முடித்துக்கொண்டு வரும் வரையிலும் துன்பத்தைத் தாங்கிக்கொண்டிருப்பர்; இதுவே அவர் இயல்பு. ஆதலால், நீயும் அவர் வரும்வரையிலும் பொறுத் திருத்தல் வேண்டும்' என்றும் கூறினாள். தோழியின் இவ்வுரை யைக் கேட்ட தலைவி, "துன்பத்தைத் தாங்கியிருக்குமாறு அறிவுரை கூறுகின்றவரைத்தான் காணுகின்றேன். தலைவர் 'வந்தார்' என்று சொல்லி, அழுத என் கண்களைத் துடைப் பவரைக் காண்கிலேன்" என்று சொல்லி வருந்தினாள்.

சொற்பொருள்

1. தேற்றாம் - காணோம்; தண் என - குளிர்ச்சி உண்டாகும்படி.
2. திவலை - நீர்த்துளி; துயர்கூர் காலை - துன்பம் அடையும் கார் காலத்தில்.
3. கயல் ஏர் - கயல் மீன் போன்ற அழகிய; குழை - மகளிர் காதணி.
4. கையுறை - கையே கருவியாய்; நெய் - எண்ணெய்; மாட்டிய - ஏற்றி வைத்த.
5. சுடர் - விளக்கின் சுடர்; எடுப்பும் - மிகுவிக்கின்ற; புன்கண் - துயரம்.
6. அயர்பு - பெய்து, செய்து.
7. மெய்ம்மலி உவகை - உடம்பு பூரிக்கும் மகிழ்ச்சி; எழுதரு - உண்டாகின்ற.
8. கண்கலிழ் - கண்கள் கலங்கி; உகுபனி - சிந்துகின்ற நீர்; அரக்குவோர் - துடைப்பவர்.

தலைவி கூற்று

அகநானூறு 331 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்றுள்ளதால் ஆற்றாது வருத்த முற்றிருக்கும் தலைவி, தோழியை நோக்கிச் சொல்லியது.

நீடுநிலை அரைய செங்குழை இருப்பை,
கோடுகடைந் தன்ன, கொள்ளை வான்பூ,
ஆடுபரந் தன்ன ஈனல் எண்கின்,
தோடுசினை உரீஇ உண்ட மிச்சில்
பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்
கண்திரள் நீள்அமைக் கடிப்பின் தொகுத்து,
குன்றகச் சிறுகுடி மறுகுதொறும் மறுகும்
சீறூர் நாடு பலபிறக்கு ஒழிய,
சென்றோர் அன்புஇலர்– தோழி!– என்றும்,
அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாணர் ஆர்ப்ப, பலகலம் உதவி,
நாளவை இருந்த நனைமகிழ் திதியன்,
வேளிரொடு பொரீஇய, கழித்த
வாள்வாய் அன்ன வறுஞ்சுரம் இறந்தே!

தெளிவுரை

“தோழி! நீண்ட அடிமரத்தோடு சிவந்த தளிர்களைக் கொண்ட இருப்பை மரங்களில், தந்தத்தைக் கடைந்து வைத்தது போல, வெண்மையான பூக்கள் பெருமளவில் பூத்திருக்கும். ஆடுகள் பரவியிருப்பதைப் போலக் குட்டிகளை ஈன்றுள்ள பெண்கரடிகளின் கூட்டம், அம்மரக்கிளைகளில் ஏறிப் பூக்களைப் பறித்துண்ணும்; அவை உண்டவை போக எஞ்சி இருக்கும் பூக்களை, பசுமையான தழை ஆடையை அணிந்துள்ள எயினர் மகளிர், கணுக்கள் திரண்டு நீண்டுள்ள மூங்கில்

குழாய்களில் சேர்த்து வைப்பர். இவ்வாறு அடைத்து வைத்துள்ள பூக்களைக் குன்றுகளின் இடையில் அமைந்துள்ள சிறிய ஊர்களின் தெருதோறும் சுற்றித் திரிந்து விற்பர். அத்தகைய அழகு மிக்க சிற்றூர்களைக் கொண்ட நாடுகள் பலவற்றைக் கடந்து தலைவர் பிரிந்து சென்றுள்ளார். அரியதான பண்ணையும் திறத்தையும் முழுமையாய் அறிந்தவரும், கரிய தண்டினைக் கொண்ட யாழினை உடையவருமான பாணர்கள் ஆரவாரிக்கும்படியாக அவர்களுக்குத் திதியன் என்பான், அணிகள் பலவும் தந்து, நாளவை கொண்டிருப்பான்; கள்ளினால் ஏற்பட்ட மகிழ்வைக் கொண்ட அத்திதியன், வேளிருடன் போரிட உருவிய வாளின் வெட்டும் பகுதியைப் போன்ற கொடிய வறண்ட பாலை வழியினை நம் தலைவர் கடந்து சென்றுள்ளார். அவர் நம்மிடம் அன்பில்லாதவர் ஆனார். (நாம் என்ன செய்வது?)"

கருத்து

நம்மைப் பிரிந்து சென்றுள்ள தலைவர் நம்மிடம் அன்பில்லாத வராயுள்ளார்.

விளக்கம்

"தோழி! அழகிய சிறிய ஊர்களைக் கொண்ட நாடுகள் பலவற்றைக் கடந்து, வறண்ட கொடிய பாலைநில வழியில் சென்றுள்ள தலைவர் நம்மிடம் அன்பில்லாதவராயுள்ளார்; நாம் என்ன செய்வோம்?" என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. நீடு - நீண்ட; அரை - அடிமரம்; செங்குழை - சிவந்த தளிர்; இருப்பை - இருப்பை மரம்.
2. கோடு - தந்தம்; கொள்ளை - மிகுதி; வான்பூ - வெண்மையான பூ.
3. ஈனல் - குட்டிகள்; எண்கு - கரடி.
4. தோடு - இலை; சினை - கிளை; உரீஇ - பறித்து, உருவி; மிச்சில் - எஞ்சியது.
5. பைங்குழை - பசிய தளிர்; தழையர் - தழையாடை அணிந்தவர்; பழையர் - எயினர், கள் விற்போர்.
6. கண்திரள் - கணுக்கள் திரண்டுள்ள; நீள் - நீண்ட; அமைக் கடிப்பு - மூங்கில் குழாய்; அமை - மூங்கில்.

7. மறுகு - வீதி; மறுகும் - (விற்றுத்) திரியும்.
8. பிறக்கு ஒழிய - பின்னாகச் செல்ல.
10. அருந்துறை முற்றிய - பண்ணிசையில் தேர்ந்த; (அருந்துறை - பண்ணும் திறமும் ஆகிய இசையின் கூறுபாடுகள்); கோடு - தண்டு.
11. ஆர்ப்ப - ஆரவாரிக்க; கலம் - அணிகலன்.
12. நாள்அவை - நாள் ஒலக்கம்; நனை - கள்; திதியன் - மன்னருள் ஒருவன்.
13. வேளிர் - வேளிர் என்னும் இனத்தவர்; பொரீஇய - போர் செய்தற்கு; கழித்த - உருவிய.
14. வாள்வாய் - வாளின் வெட்டும் பகுதி.

தலைவி கூற்று

அகநானூறு 151 **காவன் முல்லைப் பூதரத்தனார்**

திணை : பாலை

கூற்று :

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரும் பொருட்டுச் சென்ற தலைவன் பிரிவை ஆற்ற இயலாத தலைவி வருந்திச் சொல்லியது.

தம்நயந்து உறைவோர்த் தாங்கி, தாம்நயந்து
இன்அமர் கேளிரோடு ஏம்உறக் கெழீஇ,
நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோர்என,
மிகுபொருள் நினையும் நெஞ்சமோடு அருள்பிறிது
ஆபமன் – வாழி தோழி கால்விரிபு
உறுவளி எறிதொறுங் கலங்கிய பொறிவரிக்
கலைமான் தலையின் முதன்முதல் கவர்த்த
கோடுஅலம் கவட்ட குறுங்கால் உழிஞ்சில்
தாறுசினை விளைந்த நெற்றம், ஆடுமகள்
அரிக்கோல் பறையின், ஐயென ஒலிக்கும்
பதுக்கைத்து ஆய செதுக்கை நீழல்,
கள்ளி முள்அரைப் பொருந்தி, செல்லுநர்க்கு

உறுவது கூறும், சிறுசெந் நாவின்
மணிஓர்த்து அன்ன தெண்குரல்
கணிவாய்ப் பல்லிய காடுஇறந் தோரே.

தெளிவுரை

தோழீ! தலைவன் சென்றுள்ள காட்டுவழியில் குறுகிய அடிமரம் கொண்ட வாகை மரங்களின் கிளைகள் புள்ளிகளும் வரிகளும் பொருந்திய ஆண்மானின் தலையிலுள்ள கப்புவிட்ட கொம்புகள்போலத் தோற்றமளிக்கும். அக்கிளைகளில் முற்றிக் காய்ந்து குலைகுலையாய்த் தொங்கும் வாகை நெற்றுகள், ஆங்குப் பரவலாய்க் காற்று வீசுந்தோறும் அசைந்து, கூத்தியர் ஆடும்போது கோலால் அடிபடும் பறைபோல 'ஐ' என ஒலிக்கும். கற்குவியலில் இருக்கும் முள்கொண்ட கள்ளிச் செடிகளின் அடியிலிருக்கும் சிறிதளவான நிழலில் தங்கியுள்ள சிறிய சிவந்த நாக்கினையுடைய பல்லி, அவ்வழிச் செல்வோர்க்கு நடக்கவிருப்பதைக் கூறும் கணியன்போல, மணியொலி கேட்டாற்போலும் தெளிவான குரலில் ஒலித்துக் கொண் டிருக்கும். நம்மிடம் அருள் பொழிந்த நம் தலைவர் இத்தகைய காட்டைக் கடந்து சென்றுள்ளார்.

தம்மை விரும்பி உடன்வாழ்பவரைப் பேணுவதற்கும், இனிமை பொருந்திய உறவினர்களோடு இன்பம் பெறுமாறு ஒன்றுபட்டிருப்பதற்கும் இயலாதவர்கள் வறுமையின்பாற்பட்ட அருளில்லாதவர் ஆவர் என்று கருதி, இச்செயல்களை நிறை வேற்றுவதற்கெனப் பொருள் தேடிவரச் சென்று, நம்மிடம் அருள் வேறுபட்டார்போலும்.

கருத்து

தோழீ! காடு கடந்து சென்ற நம் தலைவர், தம்மை விரும்பி உறைவோரைக் காக்கவும், நாம் விரும்பி இனிமையாகப் பொருந்திய நட்பினரை இன்பமுறத் தழுவி மகிழவும் இயலாதவர் வறுமையுற்றவர் எனச் சொல்லி, மிக்க பொருளை ஈட்ட நினையும் நெஞ்சோடு நம்மேல் அருளற்றவர் ஆனார்.

குறிப்பு

செல்லுநர்க்கு உறுவது கூறும் பல்லி, தலைவியின் ஆற்றாமையைத் தலைவனுக்குக் கூறியிருக்குமே! இருந்தும் அவன் இரங்கி மீளவில்லையே எனத் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. தம்நயந்து - தம்மை விரும்பி; தாங்குதல் - பேணுதல்.
2. இன்அமர் - இனிமை பொருந்திய; கேளிர் - உறவினர்; ஏம் - இன்பம்; கெழீஇ - பொருந்தி, ஒன்றுபட்டு.
3. ஆற்றார் - இயலாதவர்; நல்கூர்ந்தோர் - வறுமையுற்றவர்.
4. அருள்பிரிது - அருள் இல்லாதவர்.
5. ஆப - ஆவர்; கால்விரிபு - எத்திசையிலும் பரந்து.
6. வளி - காற்று; எறிதொறும் - வீசுந்தொறும்; கலங்கிய - அசைந்து; பொறிவரி - புள்ளியும் வரியும்.
7. கலைமான் - ஆண்மான்; கவர்த்த - கப்புவிட்ட.
8. கோடு - கொம்பு; உழிஞ்சில் - வாகை மரம்.
9. தாறு - குலை; சினை - கிளை; நெற்றம் - முற்றிய நெற்று.
10. அரிக்கோல் - கோலால் அடிபடும்; ஐஎன - 'ஐ' எனும் ஒலியுடன்.
11. பதுக்கை - கற்குவியல்; செதுக்கை - குறைந்த, சிறிதளவான.
12. கள்ளி - ஒருவகை முள்செடி; செல்லுநர்க்கு - வழிச் செல்வோர்க்கு.
13. உறுவது - நடக்கவிருப்பது; ஓர்த்தல் - கேட்டல்; தெண்குரல் - தெளிவான குரல்.
14. கணி - கணியன் (சோதிடன்); இறந்தோர் - கடந்து சென்றுள்ளார்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 334 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுநீட ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்கவியலாதவளாகிய தலைவி, தோழிக்கு வருந்தி உரைத்தது.

அம்ம வாழி தோழி! சிறியிலை
நெல்லி நீடிய கல்காய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் பின்செலச் சென்றோர்
கல்லினும் வலியர் மன்ற;
பல்லிதழ் உண்கண் அழப்பிரிந் தோரே!

தெளிவுரை

"தோழி! கேள்! வெயில் வெம்மையினால் கற்கள் சூடேறி யுள்ள காட்டுவழியே தலைவர் சென்றுள்ளார். சிறிய இலை களைக் கொண்ட நெல்லி மரங்கள் மிகுதியாய் வளர்ந்திருக்கும் அக்காட்டில் என் பேதை நெஞ்சம் அவரைப் பின்தொடர, பூவிதழ் போன்ற என் கண்கள் அழுமாறு அவர் பிரிந்து சென்றுள்ளார். அதனால், என் காதலர் கல்லைக் காட்டிலும் வலிய இதயத்தினைக் கொண்டவர்."

கருத்து

நம் தலைவர் கல்லினும் வலிய நெஞ்சினர்.

சொற்பொருள்

1. சிறியிலை நெல்லி - சிறிய இலைகளைக் கொண்ட நெல்லி மரம்.
2. நீடிய - மிகுதியாய்; கல் காய் இடம் - கற்கள் சூடேறியுள்ள காடு.
3. பேதை - அறியாமை கொண்ட தலைவி; சென்றோர் - தலைவர்.
4. வலியர் - வன்மை வாய்ந்தவர்.
5. பல் இதழ் உண்கண் - பல இமைகளைக் கொண்ட மையுண்ட கண்.

தலைவி கூற்று

அகநானூறு 185 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயின் தலைவன் பிரிந்ததால் ஏற்பட்ட துயரத்தால் வாட்டமடைந்து உடல் நலனும் கேடுற்றமையால் தலைவி, அதனைத் தன் தோழியிடம் வருந்திக் கூறியது.

எல்வளை ஞெகிழச் சாஅய், ஆய்இழை
நல்எழிற் பணைத்தோள் இருங்கவின் அழிய,
பெருங்கை அற்ற நெஞ்சமொடு நத்துறந்து,
இரும்பின் இன்உயிர் உடையோர் போல,
வலித்து வல்லினர், காதலர், வாடல்
ஒலிகழை நிவந்த நெல்லுடை நெடுவெதிர்
கலிகொள் மள்ளர்வில் விசையின் உடைய,
பைதுஅற வெம்பிய கல்பொரு பரப்பின்
வேனில் அத்தத்து ஆங்கண், வான்உலந்து
அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்,
பெருவிழா விளக்கம் போல, பலஉடன்
இலைஇல மலர்ந்த இலவமொடு
நிலைஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

“தலைவர் கடந்து சென்றுள்ள காட்டில் உயர்ந்து வளர்ந்துள்ள மூங்கில்களும் இக்கோடை காலத்தில் வாடிவிட்டன. அவற்றில் தோன்றி, மேல்நோக்கி எழுந்த சிறு தண்டுகளில், நெற்கதிர்கள் ஒன்றோடொன்று உரசி ஒலிக்கின்றன. அங்குத் திரியும் ஆரவார மிக்க மறவர் செலுத்தும் அம்பின் விசையினால் மூங்கில்கள் பிளவுபடுகின்றன. பசுமையற்று வெம்பிய பாலைநிலப் பெரு வழியில் உள்ள பருக்கைக் கற்கள் நடந்து செல்வோரின் கால்களைக் குத்திக் கிழிக்கின்றன. வேனிலால் வழியெங்கும் வறட்சியாய் உள்ளது. வறட்சியால் மலைகளில் உள்ள அருவிகளில் நீர் கொட்டவில்லை. ஆயினும், மலை உச்சிகளில் இலவ மரங்கள் கார்த்திகை விழாவிற்கு ஏற்றும் விளக்கு வரிசைபோல இலையே இன்றிப் பூத்துள்ளன. இம் மலைச்சாரல்களைத் தாண்டி நம் தலைவர் சென்றுள்ளார். அதனால் ஒளி வீசும் கைவளையல்கள் கழன்று விழுமாறு நம் உடல் இளைத்தது. ஆராய்ந்தெடுத்த அணிகலன்களையும், நல்ல அழகையும் கொண்ட நம் பெரிய தோள்கள் மெலிந்து அழகிழந்தன. அவரைப் பிரிந்து செயலற்ற நெஞ்சத்தோடு நாம் இருக்க அவர் பிரிந்து சென்றார்; சென்றவர், இரும்பின் உறுதி போன்ற வன்கண்மையான மனத்தைப் பெற்று விட்டார்.

இத்தகைய மனத்தை எப்படித்தான் பெற்றாரோ?" என்று தலைவி தோழியிடம் வருத்தத்தைப் புலப்படுத்துகிறாள்.

கருத்து

பிரிந்து சென்ற தலைவர் இரும்பு மனம் கொண்டவராகிவிட்டார். இப்படி மாற, அன்பு கொண்ட அவருக்கு எவ்வாறுதான் மனம் இசைந்ததோ?

விளக்கம்

தோழி! தலைவர் வறட்சிமிக்க பெரிய மலையினைத் தாண்டிச் சென்றார்; அதனால் நம் தோள்கள் நெகிழ்ந்தன; அழகு கெட்டுச் செயலற்ற நெஞ்சத்தோடு இருக்கின்றோம். நம்மைக் கைவிட்டு இரும்பினாலான இதயம் கொண்டவர்போலப் பிரிந்து சென்று விட்டார்; சென்ற இடத்திலேயே இருக்க வல்லமையும் பெற்றுள்ளார்.

சொற்பொருள்

1. எல்வளை - ஒளி வீசும் வளையல்; ஞெகிழ்தல் - கழலுதல்; சாஅய் - மெலிந்து; ஆய்இழை - ஆய்ந்தெடுத்த அணிகலன்.
2. பணைத்தோள் - பெரிய தோள்; கவின் - அழகு.
3. பெருங்கை அற்ற - பெரிதும் செயலற்ற (கையறுதல் - செயலறுதல்).
4. இரும்பின் இன்உயிர் - இரும்பினால் ஆன இனிய உயிர்.
5. வலித்து - கடினமாய் இருக்க; வல்லினர் - வல்லமை கொண்டவராயினார்; வாடல் - வாடுதலுற்ற.
6. கழை - தண்டு; நிவந்த - உயர்ந்த; நெடுவெதிர் - நீண்ட மூங்கில்.
7. கலிகொள் - ஆரவாரம் கொண்ட; மள்ளர் - மறவர்; உடைய - பிளந்திட.
8. பைதுஅற - பசுமையற்றுப் போக; கல்பொரு - பருக்கைக் கற்கள் உறுத்துகின்ற.
9. அத்தம் - வழி; வான் - மேகம்; உலந்து - வற்றி.
10. உயர்சிமை - உயர்ந்த உச்சி.
11. பெருவிழா விளக்கம்போல - பெரிய (கார்த்திகை) விழாவிற்கு எடுக்கப்பட்ட விளக்குகள்போல.
12. இலைஇல - இலை இல்லாது; மலர்ந்த - மலர்கள் மட்டும் உள்ள; இலவம் - இலவ மரம்.
13. நிலைஉயர் - உயர்ந்த நிலையைக் கொண்ட; பிறங்கல் மலை - பக்க மலை; இறந்தோர் - கடந்து சென்ற நம் தலைவர்.

தலைவி கூற்று

அகநானூறு 241 **காவன் முல்லைப் பூதனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவி மிகவும் வருத்தமுற்றிருந்தாள். தோழி, அவளை ஆற்றியிருக்குமாறு கூற, அதைக் கேட்ட தலைவி தன் ஆற்றாமையைத் தோழியை நோக்கிக் கூறியது.

'துனிஇன்று இயைந்த துவரா நட்பின்
இனியர் அம்ம, அவர்'என முனியாது
நல்குவர் நல்ல கூறினும், அல்கலும்,
பிரியாக் காதலொடு உழையர் ஆகிய
நமர்மன், வாழி! தோழி!- உயர்மிசை
மூங்கில் இளமுளை திரங்க, காம்பின்
கழைநரல் வியல்அகம் வெம்ப, மழைமறந்து
அருவி ஆன்ற வெருவரு நனந்தலை,
பேஎய் வெண்தேர் பெயல்செத்து ஓடி,
தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை
புலம்பெயர்ந்து உறைதல் செல்லாது, அலங்குதலை,
விருந்தின் வெங்காட்டு வருந்தி வைகும்
அத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
வட்டக் கழங்கின் தாஅய், துய்த்தலைச்
செம்முக மந்தி ஆடும்
நல்மர மருங்கின் மலைஇறந் தோரே!

தெளிவுரை

"தோழி! வாழ்க! தலைவர் என்றும் என்னை வெறுக்காது இணங்கியிருப்பவர்; பிரியாத நட்பினைக் கொண்டவர்; இனியர்; அருள் புரிபவர்" என்று அவர் நற்குணங்களைப் பாராட்டிப் பேசினாய். நீங்காத காதலொடு என் அருகேயே இருக்கும்

உறவினைக் கொண்ட அவர் இப்பொழுது என் அருகில் இல்லையே! அவர் சென்றுள்ள வழியில் மலை உச்சியில் மூங்கிலின் இளைய முளைகள் வாடியிருக்கும்; மூங்கில்கள் வளர்ந்திருக்கும் பாறைகள் கொதித்திருக்கும்; மழை பெய்யாமை யால் அருவிகள் வீழவில்லை. அச்சம் தரும் அகன்ற இடத்திலே தோன்றிய கானல் நீரை மழை என்று கருதி, தாகம் கொண்டு தனித்திருந்த ஒரு முதிய மான் அதை நோக்கி ஓடும். அருகில் சென்றதும் ஏமாறும். ஆயினும், அந்த இடத்திலிருந்து அகலாது, கானல்நீர் தோன்றிய அந்தப் புதிய காட்டிலேயே வருத்தத்துடன் தங்கியிருக்கும். பஞ்சு போன்ற தலைமயிரினையும் சிவந்த முகத்தினையும் கொண்ட பெண் குரங்குகள், வழியில் கிடக்கும் இனிய சுவையுள்ள திரண்ட வட்டமான நெல்லிக்காய்களைக் கழங்குகளாய்க் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும். இத்தகைய நல்ல மரங்கள் பொருந்திய பக்கத்தைக் கொண்ட மலையினைக் கடந்து சென்றுவிட்டார்.

கருத்து

என்னோடு மிகுதியும் அன்புடன் கூடியிருந்தவர், இப்போது நான் வாடி வருந்துமாறு பிரிந்து சென்றுவிட்டார்.

விளக்கம்

“தோழி! ‘தலைவர், இடையறா நட்பினைக் கொண்ட இனிய குணங்களைக் கொண்டவர்; என்றும் பிரியா அன்போடு அருள் புரிபவர்’ என்று அவர் கொண்டிருக்கும் நல்ல குணங்களை நீ பலவாறு சொன்னபோதிலும், இப்போது அவர் அருகில் இல்லாது, அருள் நீங்கி, மலையினைக் கடந்து தொலைவில் சென்றுள்ளார்; ஆதலின், நான் பொறுத்திட இயலாதவளா யுள்ளேன்” என்று தலைவி, தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. துனி - வெறுப்பு; இயைதல் - இணங்குதல்; துவரா நட்பு - பிரியா நட்பு; துவர்தல் - பிரிதல்.
2. முனிதல் - வெறுத்தல்.
3. நல்குதல் - அருள் புரிதல்; அல்கலும் - எப்போதும்.
4. உழையர் - அருகிருப்போர்.

5. நமர் - உறவினர்; உயர்மிசை - மலை உச்சி.
6. திரங்க - வாடி வதங்க; காம்பின் கழை - மூங்கில் தண்டு.
7. நரல் - ஒலிக்கும்; வியல்அகம் - அகன்ற இடம்; வெம்பல் - கொதித்தல்.
8. ஆன்ற - இல்லையாகிய; வெருவரு - அச்சம் தரும்; நனந்தலை - அகன்ற இடம்.
9. பேஎய் வெண்தேர் - வெள்ளிய கானல்நீர்; பெயல் செத்து - மழை என்று கருதி.
10. தாஅம் - தாகம்; முதிர் - முதிய; கலை - ஆண்மான்.
11. புலம் - இடம்; உறைதல் - தங்குதல்; அலங்குதலை - அசையும் இடம்.
12. விருந்து - புதிய; வெங்காடு - வெம்மையான காடு; வைகும் - தங்கும்.
13. அத்தம் - வழி; நெல்லி - நெல்லி மரம்; தீஞ்சுவை - இனிய சுவை; திரள் - திரண்ட.
14. கழங்கு - கழற்சிக்காய்; தாஅய் - தாவி; துய் - பஞ்சு.
15. செம்முகம் - சிவந்த முகம்; மந்தி - பெண்குரங்கு; ஆடும் - தாவும், குதிக்கும்.
16. மருங்கு - பக்கம்.

தலைவி கூற்று

அகநானூறு 249 **நக்கீரனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றான். தலைவனைப் பிரிந்த தலைவி மிகவும் ஆற்றாமையால் வருந்தி உடல் மெலிந்தனள். அவளை ஆற்றியிருக்குமாறு தோழி உரைக்க, அப்போது தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

அம்ம– வாழி!– தோழி!– பல்நாள்
இவ்ஊர் அம்பல் எவனோ? வள்வார்
விசிபிணித்து யாத்த அரிகோல் தெண்கிணை
இன்குரல் அகவுநர் இரப்பின், நாடொறும்
பொன்கோட்டுச் செறித்து, பொலந்தார் பூட்டிச்,
சாந்தம் புதைத்த ஏந்துதுளங்கு எழில்இமில்
ஏறுமுந் துறுத்து, சால்பதம் குலைஇ,
நெடுந்தேர் களிற்றொடு சுரக்கும் கொடும்பூண்
பல்வேல் முசுண்டை வேம்பி அன்னஎன்
நல்எழில் இளநலம் தொலையினும், நல்கார்–
பல்பூங் கானத்து அல்குநிழல் அசைஇ,
தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்
நாகுஆ வீழ்த்து, திற்றி தின்ற
புலவுக்களம் துழைஇய துகள்வாய்க் கோடை
நீள்வரைச் சிலம்பின் இரைவேட்டு எழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து,
வேறுவேறு கவலைய ஆறுபரிந்து, அலறி,
உழைமான் இனநிரை ஓடும்
கழைமாய் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

தோழி! வாழ்க! தலைவர் சென்ற காட்டில், மயிலிறகால் தொடுத்த மாலை அணிந்த மழவர், பல பூக்களைக் கொண்ட காட்டின் சுருங்கிய நிழலில் தங்கி இளைய பசுவைக் கொன்று அதன் ஊனைத் தின்று பசியாறியிருப்பர். அங்கு எழும் புழுதியோடு கூடிய மேல் காற்று, புலால் நாற்றத்தைப் பரப்பும். காற்று வேகமாய் வீசுவதால் உண்டாகும் ஒலியினை, மலைச்சாரலில் இரைக்காகத் திரியும் புலி, பெண்மானைப் பற்றியதால் அம்மான் எழுப்பும் ஒலி எனக் கருதி ஆண்மான் அஞ்சித் தன் இனத்தோடு வேறு வேறு வழிகளில் அலறி ஓடும். அத்தன்மை கொண்ட மூங்கில் காடுகளையும், பக்க மலைகளையும் கொண்ட இடங்களைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

முசுண்டை என்னும் வள்ளல் வளைவான பல அணிகலன்களை அணிந்தவன்; வேற்படை கொண்டவன். வாரினால் இறுகப் பிணித்துக் கட்டிய கிணைப்பறையில் இனிய குரலை எழுப்பிப் பாடும் பாணர்கள் இரந்து வேண்டினால் அவன் நாள்தோறும் அவர்களுக்குப் பல பொருள்களை வழங்குவான். முதலில் காளை மாடுகளை, அவற்றின் கொம்புகளில் பொன் பூட்டி, பொன்னரி மாலையைக் கழுத்தில் அணிவித்து, திமிலில் சந்தனம் பூசி அழகு படுத்திக் கொடுப்பான். பின்னர்க் குவியலான உணவுப்பொருள்களைக் கொடுப்பதோடு, யானைகளுடன் நீண்ட தேர்களையும் கொடுப்பான்.

அவனுடைய வேம்பி என்னும் ஊர் போன்று சிறந்து விளங்கும் என் பேரழகும் இளமை நலமும் சிதைந்த போதும், நம் தலைவர் அருளில்லாதவராய் உள்ளார். அவ்வாறிருக்க, நம் ஊர்மக்கள் ஏனோ நம்மையே பழிக்கின்றனர்! இதற்கு என்ன பொருள்?

கருத்து

நம் அழகும் இளமையும் சிதையுமாறு தலைவன் நம்மைப் பிரிந்திருக்க, அவனை விடுத்து, இவ்வூரார் நம்மைப் பழிக்கின்றனரே! இஃது ஏன்?

விளக்கம்

‘தோழி! மலை கடந்து பொருளீட்டச் சென்ற நம் தலைவர் என் இளமையும் அழகும் தொலையவும் இன்னும் வந்து அருள் செய்யாதவராய் உள்ளார். ஆனால், பல நாளாய் இவ்வூரார் என்னைத் தூற்றும் பழிச்சொற்கள் மட்டும் குறையாமல் உள்ளன. இஃது ஏனோ?’ எனத் தலைவி தோழியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

‘அவர் பிரிந்ததற்கு நான் வருந்தவில்லை; ஊரார் தூற்றும் பழிச்சொல்லுக்கே துயருறுகிறேன்’ எனத் தலைவி தன் துன்பத்தை மறைமுகமாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

2. அம்பல் - பழிச்சொல்; வள்வார் - வளம் பொருந்திய வார்.
3. விசி பிணித்து - இழுத்துக் கட்டி; அரிகோல் - அகவுநர் அடிக்கும் கோல்; தெண்கிணை - தெளிந்த குரலைக் கொண்ட கிணைப்பறை.
4. அகவுநர் - பாணர்; இரப்பின் - இரந்து கேட்டால்.
5. கோடு - கொம்பு; செறித்து - பொருத்தி; பொலந்தார் - பொன்னரி மாலை.
6. சாந்தம் - சந்தனம்; புதைத்த - பூசிய; ஏந்துதுளங்கு - உயர்ந்து விளங்கும்; இமில் - திமில்.
7. ஏறு - எருது; சால்பதம் - மிகுந்த உணவு.
8. சுரக்கும் - அளிக்கும்; கொடும்பூண் - வளைந்த ஆபரணம்.
9. முசுண்டை - வள்ளல்களுள் ஒருவன்; வேம்பி - முசுண்டையின் ஊர்.
10. தொலையினும் - அழிந்தாலும்; நல்கல் - அருளுதல்.
11. அல்குநிழல் - சுருங்கிய (குறைந்த) நிழல்; அசைஇ - தங்கி.
12. தோகை - மயில் இறகு; தொடைத்தார் - தொடுக்கப்பட்ட மாலை; மழவர் - வீரர்.
13. நாகு ஆ - இளைய பசு; வீழ்த்து - கொன்ற; திற்றி - ஊன்.
14. புலவுக்களம் - புலால் வீசும் இடம்; துழைஇய - துளாவிய; துகள் - புழுதி; கோடை - மேல்காற்று.
15. நீள்வரை - நீண்ட மூங்கில்; சிலம்பு - பக்க மலை; வேட்டு - விரும்பி.
16. வாள்வரி - ஒளி பொருந்திய வரிகளைக் கொண்ட; வயம் - வலிமை; விளிசெத்து - ஒலியாய்க் கருதி.
17. கவலை - பிரிவுபட்ட; ஆறு - வழி; பரிந்து - வருந்தி.
18. உழைமான் - ஆண்மான்; இனநிரை - கூட்டமாகிய மானினம்.
19. கழைமாய் - மூங்கிலால் மறையும்; பிறங்கல் - பக்க மலை; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

அகநானூறு 281 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் சென்றுள்ளான்; தலைவி உடல் மெலிவுற்று வருந்தினாள்; அது கண்டு தோழியும் வருந்தினாள். அப்போது தலைவி, தோழியை நோக்கித் தாம் இனிச் செய்ய வேண்டியவற்றை ஆராயுமாறு கூறியது.

செய்வது தெரிந்திசின்– தோழி! அல்கலும்,
அகலுள் ஆண்மை அச்சுஅறக் கூறிய
சொல்பழுது ஆகும் என்றும் அஞ்சாது,
ஒல்குஇயல் மடமயில் ஒழித்த பீலி,
வான்போழ் வல்வில் சுற்றி, நோன்சிலை
அவ்வார் விளிம்பிற்கு அமைந்த நொவ்வுஇயல்
கனைகுரல் இசைக்கும் விரைசெலல் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து,
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந்து, அவரோ சென்றனர்–
பறைஅறைந் தன்ன, அலர்நமக்கு ஒழித்தே.

தெளிவுரை

"தோழி! நாள்தோறும் வீட்டிலிருக்கும் போதெல்லாம், 'நான் உன்னைப் பிரியேன்' என்று தலைவர், நம் அச்சம் நீங்கிடக் கூறினார். அச்சொல் பழுதுபடும் என்று அஞ்சாமல் இப்போது பிரிந்து சென்றுவிட்டார்.

வடநாட்டு மன்னர்களாகிய மௌரியர் தென்திசை நாடுகளைக் கவர எண்ணினர்; அதற்குத் தமிழ்நாட்டின் எல்லையில்

ஆட்சி புரிந்து வந்த வடுகரைத் துணை கொண்டனர். அவ்வடுகர், வளைந்து நடக்கும் இளைய மயில் உதிர்த்த தோகையை நீண்ட வாரினால் தம் வில்லில் வைத்துக் கட்டியிருப்பவர். வலிமையுள்ள அந்த வில்லின் அழகிய நாணிற்கும் விளிம்பிற்கும் பொருந்துமாறு அம்பினைப் பூட்டி, விரைந்து செல்லுமாறு அம்பு செலுத்துபவர்.

அவ்வடுகர்கள் வில்லின் நாணை எழுப்பி அம்புகளைத் தொடுத்து முன்னே செல்ல, தென்திசை நாடுகளைக் கவரப் போந்த மௌரியர் பின் தொடர்ந்தனர். மௌரியர்கள் தம் ஒளி பொருந்திய தேர்ச்சக்கரங்கள் தடையின்றிச் செல்ல, வானளாவி உயர்ந்ததும் பனியினைக் கொண்டதுமான பெரிய மலையினை வெட்டிப் பாதை உண்டாக்கினர். பாறை நிறைந்த அப் பாதையினைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார். நாமோ பறை அறைந்தாற்போன்ற ஒலியுடன் நம் ஊரில் எழுந்துள்ள பழிச்சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாம் வருந்தாதிருக்க இனிச் செய்ய வேண்டியதை ஆராய்ந்து காண்க" என்று தோழியிடம் கூறினாள், தலைவி.

கருத்து

ஊரார் கூறும் பழிச்சொற்களை நமக்கென்று விட்டுவிட்டு, அவர் பொருள் தேடப் பிரிந்து சென்றுவிட்டார்.

விளக்கம்

தோழி! நம்முடன் இருந்து நம் அச்சம் நீங்க அவர் கூறிய சொல் பழுதாகும் என்று கருதாது, நம் தலைவர் பாறைகளைக் கடந்து, பழிச்சொற்களை நமக்கு உரித்தாக்கிவிட்டுச் சென்று விட்டார். நாம் இனிச் செய்வது இன்னது என ஆராய்ந்து காண்க.

சொற்பொருள்

1. தெரிந்திசின் - ஆராய்க; அல்கலும் - நாள்தோறும்.
2. அகலுள் - ஊரிலேயிருந்து, வீட்டிலிருந்து; அச்சு அற - அச்சம் நீங்க.
3. பழுது - குற்றம்.
4. ஒல்குஇயல் - அசைந்து நடக்கும் இயல்பினைக் கொண்ட; மடம் - இளமை; ஒழித்த - உதிர்ந்த; பீலி - தோகை.

5. வான்போழ் - வானைப் பிளக்கும்; வல்வில் - வலிய வில்; நோன் சிலை - வீர வில்.
6. விளிம்பு - ஓரம்; நொவ்வுஇயல் - விரைந்து செல்லல்.
7. கனைகுரல் - மிக்க ஒலி; கடுங்கணை - கடிய அம்பு.
8. முரண் - மாறுபாடு; வடுகர் - அரச மரபினர்; முன்னுற - முன்னே செல்ல; மோரியர் - வடநாட்டை ஆண்டு கொண்டிருந்த மௌரிய அரச மரபினர்.
9. மாதிரம் - திக்கு; முன்னிய - எண்ணிய; வரவு - வருகை.
11. திகிரி - தேர்ச்சக்கரம்; உருளிய - தடையின்றி உருண்டு செல்ல; குறைத்த - வெட்டிய.
12. அறை - பாறையில் அமைத்த பாதை; அவர் - தலைவர்.
13. அறைந்தன்ன - அடித்து ஒலித்ததுபோல; அலர் - பழிச்சொல்.

தலைவி கூற்று

அகநானூறு 391 **காவன் முல்லைப் பூதனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டச் சென்றிருந்தான். அவன் பிரிவை நினைந்து தலைவி வருந்தியிருந்தாள். அவளைத் தோழி தேற்றியபோது, தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

பார்வல் வெருகின் கூர்எயிற்று அன்ன,
வரிமென் முகைய நுண்கொடி அதிரல்
மல்குஅகல் வட்டியர், கொள்வுஇடம் பெறாஅர்,
விலைஞர் ஒழித்த தலைவேய் கான்மலர்
தேம்பாய் முல்லையொடு ஞாங்கர்ப் போக்கி,
தண்நறுங் கதுப்பில் புணர்ந்தோர் – புனைந்தஎன்
பொதிமாண் முச்சி காண்தொறும், பண்டைப்
பழஅணி உள்ளப் படுமால்– தோழி!–
இன்றொடு சில்நாள் வரினும், சென்றுநனி,

படாஅ வாகும்,எம் கண்ணே– கடாஅ
வான்மருப்பு அசைத்தல் செல்லாது, யானைதன்
வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பின் தோன்றும்
என்றூழ் வைப்பின், சுரன்இறந் தோரே!

தெளிவுரை

"தோழி! மெல்லிய வரிகளைக் கொண்ட அரும்புகளுடன் கூடிய காட்டுமல்லிகை மலர்கள், தன் இரையினைப் பார்த்திருக்கும் காட்டுப்பூனையின் கூரிய பற்களைப் போன்றிருக்கும். அவ்வரும்புகள் நிறைந்த அகன்ற பூக்கூடைகளைக் கொண்ட பூ விற்போர், அவற்றை வாங்கிக்கொள்வோர் இல்லாததால், கொண்டுவந்து கொட்டிய காட்டுமல்லிகையுடன் தேன் வடியும் முல்லை மலர்களையும் சேர்த்துச் சூடியிருந்தேன். அப்பூக்களை அங்கிருந்து அகற்றி நறுமணம் மிக்க அழகிய என் கூந்தலில் உறங்கி மகிழ்ந்தவர், நம் தலைவர். இப்போது, மதங் கொண்ட யானை, மரத்தில் ஊன்றிய வெண்மையான கொம்பினை அசைத்துப் பெயர்க்க இயலாததால், தன் வலிமை குன்றிய பெரிய துதிக்கையை வாயினுள் நுழைக்க, அது குகையின் உள்ளே நுழையும் பாம்பைப் போல் தோன்றும் வெப்பம் மிக்க இடங்களைக் கொண்ட காட்டைக் கடந்து சென்றுள்ளார்.

"அவர் முன்பு தம் கையால் புனைந்து அழகு செய்த செறிந்த அழகிய எனது கூந்தல் முடியைக் காணுந்தோறும், என் பழைய அழகினை நினைக்கிறேன்.

அவர் சென்று இன்றோடு சில நாள்களே ஆயின. எனினும், எம் கண்கள் பொருந்தி உறங்காதிருக்கின்றன. (என் செய்வேன்?)"

கருத்து

தலைவன் பிரிந்து சில நாள்களே ஆயின. ஆயினும், என் துயரமோ பெரிதாயுள்ளது.

விளக்கம்

"தோழி! குளிர்ந்த என் கூந்தலிலே கிடந்து துயின்ற தலைவர் இப்போது வெம்மைமிக்க காட்டினைக் கடந்து சென்றுள்ளார்.

அவர் அலங்கரித்த என் தலைமுடியைக் காணுந்தோறும், என் பழைய அழகினை நினைக்கிறேன். அவர் சென்று சில நாள்களே கடந்துள்ளன. ஆயினும், என் கண்கள் துயிலாதிருக்கின்றன" என்று தன் ஆற்றாத் தன்மையைத் தோழியிடம் கூறித் தலைவி வருந்துகின்றாள்.

சொற்பொருள்

1. பார்வல் - (தன் இரையினைப்) பார்த்திருக்கும்; வெருகு - காட்டுப் பூனை; எயிறு - பல்.
2. வரிமென் முகை - வரிகளைக் கொண்ட மெல்லிய அரும்பு; அதிரல் - காட்டுமல்லிகை.
3. மல்கு - நிறைந்த; அகல் - அகன்ற; கொள்வு - வாங்கிக் கொள்வதற்கு; இடம் பெறாஅர் - இடம் இல்லாமையால்.
4. விலைஞர் - பூ விற்போர்; ஒழித்த - விட்டுச் சென்ற; கான்மலர் - காட்டு மலர்.
5. தேம்பாய் - தேன் வழியும்; ஞாங்கர்ப் போக்கி - அங்கிருந்து அகற்றி.
6. கதுப்பு - கூந்தல்; புணர்ந்தோர் - கூடியவர், உறங்கியவர்; புனைந்த - சூட்டிய.
7. பொதிமாண் முச்சி - நறுமணம் நிறைந்த அழகிய கூந்தல்.
8. பழஅணி - பழைய அழகு; உள்ளுதல் - நினைத்தல்.
9. இன்றொடு சில்நாள் வரினும் - சென்று சில நாள்களே ஆயின எனினும்; நனி - மிகவும்.
10. படாஅ - துயிலாதன; கடாஅம் - மதம்.
11. வான்மருப்பு - வெண்மையான கொம்பு; அசைத்தல் - பெயர்த்தல்; செல்லாது - இயலாது.
12. வாய்நிறை கொண்ட - வாய் நிறையுமாறு புகுத்திய; வலிதேம்பு - வலிமை குறைந்த; தடக்கை - பெரிய துதிக்கை.
13. புகு - நுழையும்.
14. என்றூழ் - வெப்பம்; வைப்பு - இடம்; சுரன் - காடு; இறந்தோர் - கடந்து சென்றோர்.

தலைவி கூற்று

அகநானூறு 395 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதனால் ஆற்றாது வருந்தியிருந்த தலைவியைத் தேற்றியுரைத்த தோழியை நோக்கித் தலைவி தன் ஆற்றாமையைக் கூறியது.

தண்கயம் பயந்த வண்கால் குவளை
மாரி மாமலர் பெயற்குஏற் றன்ன,
நீரொடு நிறைந்த பேர்அமர் மழைக்கண்
பனிவார் எவ்வம் தீர, இனிவரின்
நன்றுமன்– வாழி, தோழி!– தெறுகதிர்,
ஈரம் நைத்த நீர்அறு நனந்தலை
அழல்மேய்ந்து உண்ட நிழல்மாய் இயவின்,
வறல்மரத்து அன்ன கவைமருப்பு எழிற்கலை,
அறல்அவிர்ந் தன்ன, தேர்நசைஇ ஓடி,
புலம்புவழிப் பட்ட உலமரல் உள்ளமொடு,
மேய்பிணைப் பயிரும் மெலிந்தழி படர்குரல்,
அருஞ்சுரம் செல்லுநர் ஆள்செத்து ஓர்க்கும்,
திருந்துஅரை ஞெமைய, பெரும்புனக் குன்றத்து,
ஆடுகழை இருவெதிர் நரலும்,
கோடுகாய் கடற்ற காடுஇறந் தோரே!

தெளிவுரை

தோழி! வாழி! சுடுஞாயிற்றின் வெப்பமான கதிர்கள் ஈரத்தைத் தொலைத்தமையால் அகன்ற இடம் நீரற்றிருந்தது. அங்குத் தீ கவர்ந்து உண்டமையால், மரங்கள் நிழலில்லாது காணப்பெற்றன. அவ்வழியில் வற்றிய மரக்கொம்பைப்போல் பிளவுபட்ட கொம்புகளைக் கொண்ட அழகிய கலைமான் வரிவரியாய்க் கிடக்கும் மணலைப் போன்ற பேய்த்தேரைக் கண்டு நீர் என விரும்பி ஓடித் தனிமை அடைந்தது. அதனால் அது

கலங்கிய உள்ளத்தோடு, தன் பெண்மானை அழைக்கும். இம் மானின் மெலிவுற்று ஒழியும் துன்பக்குரலைக் கேட்டுக் காட்டுவழிச் செல்வோர், அஃது ஆளின் குரல் என்று எண்ணி ஆராயும் நிலையில் உள்ளது, அக்காடு. அங்குச் செம்மையான அடியைக் கொண்ட ஞெமை மரங்கள் வளர்ந்துள்ள, பெரிய கொல்லைகளைக் கொண்ட குன்றில், அசையும் தண்டினைக் கொண்ட பெரிய மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்து ஒலிக்கின்ற மலை உச்சி வெம்பியிருக்கும். இத்தகைய மலைச் சாரலிலுள்ள காடுகளைக் கடந்து நம் தலைவர் சென்றார்.

மழைக்காலத்தே குளிர்ச்சி பொருந்திய குளத்தில் தோன்றிய வளமான காம்பினைக் கொண்ட குவளையின் மலர்ந்த கூரிய மலர், மழைக்கு எதிர்ப்பட்டாற்போல, நீரால் நிறைந்த, பெரிய, அமர்த்த, குளிர்ச்சி பொருந்திய என் கண்களிலிருந்து நீர் ஒழுகும் துன்பம் ஒழிய, தலைவர் இப்பொழுதே வருவாராயின் நன்று. அவர் வரவில்லையே! என்ன செய்வோம்?

கருத்து

நம் துன்பம் ஒழியத் தலைவர் இப்பொழுதே வருவாராயின் நன்று.

விளக்கம்

“தோழி! வாழி! மலைப்பக்கத்திலுள்ள காடுகளைக் கடந்து சென்றுள்ள நம் தலைவர், என் கண்களிலிருந்து நீர் ஒழுகும் துன்பம் ஒழிய இப்பொழுது வருவாராயின் நன்று; வந்திலரே (என் செய்வோம்?)” என்று ஆற்றாளாகிய தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. தண்கயம் - குளிர்ச்சி பொருந்திய குளம்; பயந்த - தோன்றிய; குவளை - குவளை மலர்.
2. மாரி - மழை(க் காலத்தில் மலர்ந்த); மாமலர் - கரிய மலர்; பெயற்கு - மழைக்கு; ஏற்றன்ன - எதிர்பட்டாற்போல.
3. பேர்அமர் - பெரிய விரும்பத்தக்க; மழைக்கண் - குளிர்ந்த கண்.
4. பனிவார் - நீரொழுகும்; எவ்வம் - துன்பம்; இனிவரின் - இப்பொழுது வருவாராயின்.
5. தெறுகதிர் - (ஞாயிற்றின்) சுடுகதிர்.

6. ஈரம் நைத்த - ஈரத்தினைத் தொலைத்தமையால்; நனந்தலை - அகன்ற இடம்.
7. அழல் - தீ; மேய்ந்து - கவர்ந்து; நிழல்மாய் - நிழல் நீங்கிய; இயவு - வழி.
8. வறல்மரம் - வற்றிய மரம்; கவைமருப்பு - பிளவுபட்ட கொம்பு; எழில் - அழகு; கலை - ஆண்மான்.
9. அறல் அவிர்ந்தன்ன - அறல் விளங்கினால் ஒத்த; தேர் - பேய்த் தேர்; நசைஇ - விரும்பி.
10. புலம்பு - தனிமை; உலமரல் - கலங்கிய.
11. மேய்பிணை - மேயும் பெண்மான்; பயிரும் - அழைக்கும்; மெலிந்து அழி - மெலிவுற்று ஒழியும்; படர் - துன்பம்.
12. ஆள்செத்து - ஆள் என்று கருதி; ஓர்த்தல் - ஆராய்தல்.
13. திருந்து அரை - செம்மையான அடிமரம்; ஞெமை - ஒருவகை மரம்; புனம் - காடு.
14. ஆடு கழை - அசையும் தண்டு; இரு வெதிர் - பெரிய மூங்கில்; நரலும் - ஒலிக்கும்.
15. கோடு - உச்சி; காய் - காய்ந்து கிடக்கும்; கடற்ற - மலைச் சாரலிலுள்ள (கடறு - மலைச்சாரல்).

தோழி தலைவியைத் தேற்றியது.

தோழி கூற்று

குறுந்தொகை 350 **ஆலத்தூர்கிழார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு நேர்ந்த தலைமகள், அவனது நீக்கத்துக்கண் வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது. (நேர்ந்த - உடம்பட்ட).

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும் பொழுது அவன் பிரிந்து செல்வதற்கு உடம் பட்டிருந்து, அவன் சென்ற பின் ஆற்றாமை எய்திய தலைவியைத் தோழி வற்புறுத்தி ஆற்றுவித்தது.

அம்ம வாழி தோழி! முன்நின்று,
பனிக்கடுங் குரையம் செல்லா தீம்'எனச்
சொல்லினம் ஆயின், செல்வர் கொல்லோ
ஆற்றுஅயல் இருந்த இருந்தோட்டு அம்சிறை
நெடுங்கால் கணந்துள் ஆள்அறி வுறீஇ,
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கானம் நீந்தி,
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே?

தெளிவுரை

தலைவியே! வாழி! ஒன்று கூறுவேன், கேள்! பாலை வழியருகில் அழகிய சிறகுகளையும் நீண்ட கால்களையும் கொண்டு கூட்டமாயிருக்கும் கணந்துள் பறவைகள், வழியிலே வழிப்பறி கள்வர் உளரென்பதை முன்னதாக அறிவுறுத்தும். அவ்வாறு அறிவுறுத்தி அவ்வழியிலே செல்லும் பயணியர் கூட்டத்தை வேறு வழியில் போகுமாறு செய்யும். அத்தகைய மலைகள் சூழ்ந்த காடுகளைக் கடந்து, நிலை நில்லாத பொருள் வேட்கையால், நம்மைத் தலைவன் பிரிந்தபோது, அவர் முன் நின்று, 'பனிக்காலத்தே தாங்க இயலாத் துயர் அடைவோம்; ஆதலின் பிரிந்து செல்லாதீர்' என்று முன்பே சொல்லியிருப் போமாயின் அவர் சென்றிருப்பாரோ? (முன்னே தடுத்திருந்தால் சென்றிருக்க மாட்டார்.)

கருத்து

அன்று போதற்கு உடம்பட்டு, இன்று பிரிவிற்கு வருந்துதல் பயனற்றது.

சொற்பொருள்

1. முன்நின்று - அவருக்கு முன்னாலே நின்று.
2. கடுங்குரையம் - கடிய துன்பம் அடைவோம்.
3. செல்வர் கொல்லோ? - சென்றிருப்பாரா?
4. ஆற்று அயல் - வழியின் அருகில்; இருந்தோடு - பெரிய கூட்டம்; அம்சிறை - அழகிய சிறகு.
5. நெடுங்கால் - நீண்ட கால்; கணந்துள் - ஒருவகைப் பறவை.
6. வம்பலர் - புதியவர்; படை - கூட்டம்; தலை பெயர்க்கும் - வேறு வழியாய்ச் செல்லச் செய்யும்.
7. நீந்தி - கடந்து.

தோழி கூற்று

அகநானூறு 231 **மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடச் சென்றான். பிரிவாற்றாமையால் வருந்தினாள், தலைவி. அது கண்ட தோழி, 'நம் தலைவர் கடமையில் கருத்தூன்றியவர்; ஆயினும், உன்னிடத்தில் பெருங்காதல் கொண்டவர். உன்னைப் பிரிந்து அவர் இருக்க மாட்டார். எனவே, ஆற்றி இருப்பது உன் கடமை' என்று கூறினாள்.

'செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு
உறும்இடத்து உய்க்கும் உதவி ஆண்மையும்,
இல்இருந்து அமைவோர்க்கு இல்'என்று எண்ணி,
நல்இசை வலித்த நாணுடை மனத்தர்
கொடுவில் கானவர் கணைஇடத் தொலைந்தோர்,
படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கைக்
கள்ளிஅம் பறந்தலைக் களர்தொறும் குழீஇ,
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை
வெஞ்சுரம் இறந்தனர்ஆயினும், நெஞ்சுஉருக
வருவர்— வாழி, தோழி!— பொருவர்
செல்சமம் கடந்த செல்லா நல்இசை,
விசும்புஇவர் வெண்குடை, பசும்பூண் பாண்டியன்
பாடுபெறு சிறப்பின் கூடல் அன்னநின்
ஆடுவண்டு அரற்றும் முச்சித்
தோடுஆர் கூந்தல் மரீஇ யோரே.

தெளிவுரை

"தலைவியே! வாழ்க! நம் தலைவர், பொருளும் அதனால் புகழும் ஈட்ட விரும்பினார். பகைவரின் செருக்கை ஒழிப்பதும், உறவினர் இடர்ப்பட்ட காலத்தில் அவர்க்கு உதவுதலும், வீட்டில் வாளாவிருந்து வாழ நினைப்போர்க்கு இல்லை என்று

கருதும் அவர் நாண உணர்வு பொருளீட்டிவர அவரைத் தூண்டியது.

"அவர் சென்ற பாலைநில வழி, நினைத்தாலே அச்சம் தருவது; வழிப்பறிக்காக வில்லேந்தித் திரியும் வேடர்கள் வழிச்செல்வோரைக் கொன்று, அப்பிணங்களின்மீது கற்களைக் குவிப்பர். அக்குவியல்களின் மேல் பிணங்களின் மயிரோடு கூடிய தலை, ஒருமுறை பார்ப்பவருக்கு, மறுமுறை நினைத்தாலே நடுக்கத்தை உண்டாக்கும். பாழ் இடமாகிய அக்களர்நிலம் எங்கும் இக்காட்சியே காணப்படும். அத்தகைய கொடிய பாலை நிலத்தை நம் தலைவர் கடந்து சென்றுள்ளார். ஆயினும்,

"போர் வெற்றியையும், வானோங்கிய வெண்கொற்றக் குடையினையும் உடைய பசும்பூண் பாண்டியனின் மதுரையை யொத்து வண்டு மொய்க்கும் கொண்டையிட்ட உன் கூந்தலில் பொருந்தி வாழ்வதை எண்ணி, அவர் உளமுருகி இங்கு ஓடோடி வந்து விடுவார். ஆகையால், வருந்தாதே."

கருத்து

இல்லறக் கடமைகளை இனிதே நிறைவேற்றத் தலைவர் பொருளீட்டி வரப் பிரிந்துள்ளார். அவர் உன்னை நினைந்து விரைவில் ஓடோடி வருவார்; வருந்தாதே!

விளக்கம்

"தலைவியே வாழி! பகைவரை அழித்தற்கும் நட்பினை ஆக்கிக் கொள்வதற்கும் பொருள் இன்றியமையாததாகலின், பொருளீட்டும் முயற்சியின்றி இல்லில் இருப்போரால் அவ்வாறு செயல்பட இயலாது என்பதால், அவ்வாறு செயல்படுவதற்கான பொருளை ஈட்டி வரத் தலைவர் பிரிந்து சென்றுள்ளார். ஆயினும், உன் கூந்தலை மருவி இன்புற்ற அவர், அதனை நினைத்துத் தம் நெஞ்சம் உருகுவராதலால் உடனே வருவார், வருந்தாதே!" என்று தலைவரை எண்ணி ஆற்றாத் தன்மை எய்திய தலைவியிடம் தோழி சொல்கிறாள்.

சொற்பொருள்

1. செறுவோர் - பகைவர்; செம்மல் - செருக்கு; வாட்டல் - ஒழித்தல்.

2. உறும் இடத்து - ஒரு துன்பம் நேரும்பொழுது; உய்க்கும் - உதவி செய்யும்.
3. இல் இருந்து - இல்லத்தில் இருந்து; இல் என்று - இல்லை என்று.
4. நல் இசை - நல்ல புகழ்; வலித்த - கருதிய; நாண் - நாணம்.
5. கொடுவில் - கொடிய வில்; கணைஇட - அம்பினை விட; தொலைந் தோர் - இறந்தோர்.
6. படுகளத்து - விழுந்து கிடக்கும் இடத்தில்; மயிர்த்தலை - மயிரினைக் கொண்ட தலை (வெளிப்படும்); பதுக்கை - கற்குவியல்.
7. பறந்தலை - பாழிடம்; களர் - களர் நிலம்; குழீஇ - திரண்டு.
8. உள்ளுநர் - நினைப்போர்; பனிக்கும் - நடுங்கச்செய்யும்; ஊக்கரும் - யாரும் செய்யத் துணியாத; கடம் - காடு.
9. இறந்தனர் - கடந்து சென்றனர்.
10. பொருவர் - பகைவர்.
11. செல்சமம் - எதிர்ந்த போர்; கடந்த - ஒழித்த; செல்லா நல்லிசை - கெடாத நல்ல புகழ்.
12. இவர்தல் - பரவுதல்; பசும்பூண் பாண்டியன் - பாண்டிய மன்னன் ஒருவன்.
13. பாடு - பெருமை; கூடல் - மதுரை மாநகர்.
14. ஆடுதல் - அசைதல்; அரற்றும் - ஒலிக்கும்.
15. தோடுஆர் - பூவிதழ் பொருந்திய; மரீஇ - மருவி, பொருந்தி. (முச்சி - கொண்டை முடி.)

தோழி கூற்று

நற்றிணை 286 **துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவனை எண்ணித் தலைவி பெரிதும் வருந்தியிருந்தாள். அது கண்ட தோழி தலைவியைத் தேற்றிச் சொல்லியது.

ஊசல் ஒண்குழை உடைவியத்து அன்ன
அத்தக் குமிழின் ஆயிதழ் அலரி
கல்லென வரிக்கும் புல்லென் குன்றம்
சென்றோர் மன்ற செலீஇயர்என் உயிர்எனப்
புனையிழை நெகிழ விம்மி நொந்துநொந்து
இனைதல் ஆன்றிசின் ஆயிழை, நினையின்
நட்டோர் ஆக்கம் வேண்டியும் ஒட்டிய
நின்தோள் அணிபெற வரற்கும்
அன்றோ தோழிஅவர் சென்ற திறமே!

தெளிவுரை

"தலைவியே! நம் தலைவர் சென்றுள்ள வழியில் மகளிர் காதுகளில் தொங்கி ஊசலாடும் காதணிகளைப் போன்று, பொற்காசுகளைப் போன்ற இதழ்களைக் கொண்ட குமிழ மலர்கள் கற்கள் இறைந்து கிடப்பதுபோல எங்கும் கிடந்து அழகு செய்யும். மேலும், அவ்வழியில் உடைமரங்களும் நிறைந்திருக்கும். இத்தகைய குன்றங்கள் பொருந்திய பாலை வழியைக் கடந்து நம் காதலர் சென்றுள்ளார். அதனால், 'என் உயிரும் உடன் நீங்கட்டும்' என்று, இழைகள் நெகிழ்ந்து கழன்றோட, மனம் வருந்தி, விம்மி நொந்து அழுகின்றாய்! ஆராய்ந்து அணிந்த நல்ல அணிகலன்களைக் கொண்டவளே! ஆராய்ந்து பார்த்தால், நண்பர்களுக்கு வெற்றியும் பொருளும் உண்டாகவும், உயிரோடு கலந்த அவர் காதலியாகிய உன் தோள்கள் உயரிய அணிகலன்களால் வனப்பெய்தவும் தேவைப்படும் பொருளை ஈட்டி வருவதற்குத்தானே தலைவர் சென்றுள்ளார். இதனை எண்ணி ஆற்றியிரு" என்று தலைவியிடம் தோழி கூறித் தேற்றினாள்.

கருத்து

இல்லறத்தைச் செழிப்புறச் செய்யவே தலைவர் பொருளீட்டி வரச் சென்றிருக்கிறார். அவ்வாறிருக்க ஆற்றாது இருக்கலாமா?

விளக்கம்

தலைவன் பிரிவைத் தலைவியால் பொறுத்திட இயலாத தாயிற்று. தலைவன் சென்றுள்ள வழியில் குமிழ மரத்தின் பூவும்

பழமும் உதிர்ந்து பொலிவிழந்திருக்கும் குன்றத்தை நினைத்துக் கண்ணீர் சொரிந்தாள். 'அவர் நீங்கியதால் என் உயிரும் நீங்கட்டும்' எனப் புலம்பினாள். அது கேட்ட தோழி, 'நீ அழாதே! அவர், தம்முடன் நட்புப் பூண்டவர்கள் செழிப்புறு வதற்கும், நீ உயரிய அணிகலன்களை அணிவதற்கும் தேவைப் படும் பொருளை ஈட்டி வருவதற்காகத்தானே புறப்பட்டுச் சென்றுள்ளார். அவ்வாறிருக்க நீ ஆற்றியிராது வருந்திக்கொண் டிருப்பது தவறு' என்று கூறித் தோழி தலைவியைத் தேற்று கிறாள்.

உவமை விளக்கம்

குமிழம் பூ மகளிர் காதில் அணியும் குழை போன்றது; குமிழின் பழம் மகளிர் அணியும் பொற்காசு போன்றது.

சொற்பொருள்

1. உடை - உடைமரம்; வியம் - வழி.
2. குமிழ் - குமிழ மரம்; அலரி - பூ.
3. வரிக்கும் - அழகு செய்யும்; புல் - பொலிவிழந்த.
4. செலீஇயர் என் உயிர் - என் உயிர் செல்லட்டும்.
5. புனை இழை - அணிந்துள்ள அணிகலன்; நொந்து - வருந்தி.
6. இனைதல் - துன்புறுதல்; ஆன்றிசின் - அழுதலைச் செய்கின்றனை; நினையின் - ஆராயுமிடத்து.
7. நட்டோர் - நண்பர்; ஆக்கம் வேண்டியும் - வெற்றியும் பொருளும் பெறவும்; ஒட்டிய - உயிரோடு ஒன்றுகலந்த.
8. நின்தோள் - காதலியாகிய உன் தோள்கள்; அணி பெற - வனப்பெய்த; வரற்கும் - பொருளை ஈட்டி வருவதற்கும்.
9. திறம் - கருத்து.

தோழி கூற்று

நற்றிணை 41 **இளந்தேவனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகளைத் தோழி உலகியல் கூறி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவை அறிந்த தலைவி ஆற்றாளாயினாள். தோழி, ஆடவர் பொருள் தேடி வருதலால் உண்டாகும் இல்லறத்தின் சிறப்பினைக் கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு சொல்லியது.

பைங்கண் யானைப் பரூஉத்தாள் உதைத்த
வெண்புறக் களரி விடுநீறு ஆடி,
சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்
பாஅர் மலிசிறு கூவலின் தணியும்
நெடுஞ்சேண் சென்று வருந்துவர் மாதோ!
எல்லி வந்த நல்இசை விருந்திற்குக்
கிளர்இழை அரிவை நெய்துழந்து அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றி,
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே.

தெளிவுரை

பொலிவினைக் கொண்ட அணிகளை அணிந்த தலைவியே! இரவுப் பொழுதில் புகழினைக் கொண்ட விருந்தினர்க்காக நீ நெய்யை விட்டுத் துழாவிய கொழுவிய ஊனைச் சமைத்ததனால் உண்டான புகை, நெற்றியில் படிந்து சிறிய நுண்ணிய பல வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தது. குறுகிய நடையோடு பைய பைய நீ நடந்து சென்றாய். உன்னோடு இணைவதைத் தலைவர் அக்காலத்தில் விரும்பினார். அத்தகைய தலைவர் பசிய கண்களைக் கொண்ட யானை தன் பருத்த காலால் உதைத்த லால் பொடிபட்ட வெண்மையான நிறத்தையுடைய களர் நிலத்தில் எழுந்த சிறு புழுதி மேலே படியும்படியாகச் சுரத்தில் செல்வார். அப்போதுண்டாகும் நீர்வேட்கையைப் பாறைகள்

மிகுதியாயுள்ள சிறிய கிணற்றில் ஊறும் தண்ணீரைக் கொண்டு தணித்துக் கொள்வார். அவர் நெடுந்தொலைவு சென்று பொருள் ஈட்டுவதெல்லாம் பின்னர், விருந்தினர்களைப் பேணி உன்னோடு இல்லறம் வழுவாது நடத்துவதற்காகவே என்பதை நீ அறிவாய்.

கருத்து

இல்லறம் பேணுவதற்கு வேண்டிய பொருளை ஈட்டி வருவதற்காகவே தலைவன் சென்றுள்ளான். ஆகவே, நீ ஆற்றியிருக்க வேண்டும் எனக் கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

விளக்கம்

"தலைவியே! முன்பொரு நாள் இரவுப்பொழுதில் நம் வீட்டுக்கு விருந்தினராய் ஒருவர் வந்தார். அவருக்காக நீ உன் நெற்றியில் புகை படிந்து வியர்வை துளிர்க்குமாறு நெய் பெய்து உணவு சமைத்ததைத் தலைவர் பாராட்டிப் பெரிதும் இன்புற்றார் அன்றோ? அத்தகைய இனிய விருந்தோம்பல் கடமையை இடையறாது நிறைவேற்றுவதற்காகப் பொருள் தேடி வரவே தலைவர் பிரிந்துள்ளார். ஆகவே, நீ இவ்வாறு வருந்தியிருந்தால் அவர் மேற்கொண்டுள்ள செயல் தடைபடும்; நீ ஆற்றியிருக்க வேண்டும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

பல நாள் இன்பத்தின்பொருட்டே சில நாள் பிரிவைத் தலைவர் மேற்கொண்டுள்ளார். ஆகவே, ஆற்றியிரு.

வியர்வை பூக்கும் துன்பத்தோடு தலைவி உணவு சமைத்தல், இனிதெனஉண்ணுதற்கே ஆகும். துன்புற்றுப் பொருள் ஈட்டுவது அத்தகைய இன்பம் நிறைந்த வாழ்க்கைப் பயனைத் துய்ப்பதற்கே.

கோடைக்காலத்தில் தலைவர் தம் வழியிடை, தம்மேற் படிந்த புழுதியைச் சிறு கூவலிடத்துள்ள நீரால் கழுவித் தம் வருத்தத்தைப் போக்குவார். அது போலப் பிரிவுத் துயராலே ஏற்பட்டுள்ள உன் பசலை முழுவதையும் அவர் மீளவந்து உன்னைத் தழுவி நீக்கி விடுவார்.

சொற்பொருள்

1. பரூஉத்தாள் - பருத்த கால்.
2. களரி - களர் நிலம்; விடு நீறு - எழுந்த சிறு புழுதி.
3. பைப்பய - மெல்ல.
4. பாஅர் மலி - பாறைகள் மிகுதியாய் உள்ள; கூவல் - கிணற்றில் (ஊறும் தண்ணீரால்); தணியும் - நீங்கும்.
5. நெடுஞ்சேண் சென்று வருந்துவர் - தொலைவிலுள்ள நாட்டுக்குச் சென்று வருந்தியிருப்பர்.
6. எல்லி வந்த - இரவுப் பொழுதில் வந்த; விருந்து - விருந்தினர்.
7. கிளர் இழை அரிவை - ஒளிரும் இழையணிந்த அரிவையாகிய நீ; நெய்துழந்து அட்ட - நெய் பெய்து சமைத்த.
8. விளர் ஊன் நறும்புகை எறிந்த - கொழுவிய தசையிடத்து எழும் நறிய புகை படிதலால்.
9. சிறுநுண் பல்வியர் பொறித்த நெற்றி சிறிய பல வியர்வையுண்டாகிய நெற்றி.
10. குறுநடை - குறுகுறுவென நடக்கும் நடை; கூட்டம் வேண்டுவோர் - கூட்டத்தையே பெரிதும் விரும்பும் காதலர்.

தோழி கூற்று

நற்றிணை 148 **கண்ணம்பாளனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்ந்து வேறுபட்ட தலைவியைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைப் பிரிந்து செல்லவிருப்பதைத் தலைவி அறிந்தாள். அதனால் அவள் மெலிவுற்றாள். அவளது வருத்தத்தைத் தீர்க்கும் வகையில் தோழி கூறியது.

வண்ணம் நோக்கியும், மென்மொழி கூறியும்,
'நீஅவண் வருதல் ஆற்றாய்' எனத்தாம்
தொடங்கி ஆள்வினைப் பிரிந்தோர், இன்றே
நெடுங்கயம் புலர்ந்த நீர்இல் நீள்இடை,

செங்கால் மராஅத்து அம்புடைப் பொருந்தி,
வாங்குசிலை மறவர் வீங்குநிலை அஞ்சாது,
கல்அளைச் செறிந்த வள்உகிர்ப் பிணவின்
இன்புனிற்று இடும்பை தீரச் சினம்சிறந்து,
செங்கண் இரும்புலிக் கோள்வல் ஏற்றை
உயர்மருப்பு ஒருத்தல் புகர்முகம் பாயும்
அருஞ்சுரம் இறப்ப என்ப;
வருந்தேன் தோழி! வாய்க்கஅவர் செலவே!

தெளிவுரை

"தலைவி! தலைவர் உன் மேனி எழிலைக் கண்டு மனம் மகிழ்ந்தார்; மென்மையான இனிய சொற்களைக் கூறி என்னை மகிழ்வித்தார். 'நான் பொருளீட்டச் செல்லும் வழியில் வருவதற்கு உன்னால் இயலாது' எனப் பல முறையும் கூறித் தாம் பொருளீட்டும்பொருட்டுப் பிரிந்து செல்லத் தலைப்பட்டார். அம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தலைவர், பாலைநிலப் பெருவழியில் நீரற்ற நீண்ட வழியில் செல்வார். அங்குச் சிவந்த அடியினைக் கொண்ட மராமரத்தின் அழகிய பக்கங்களில் பொருந்தி வழிவருவாரின் வருகையினை எதிர்பார்த்தபடி வளைந்த வில்லினைக் கையிலே கொண்ட ஆறலை கள்வர்கள் மிகுதியாய் இருப்பர். அவர்கட்கும் தலைவர் அஞ்ச மாட்டார். மலைக்குகையில் சோர்ந்து கிடக்கும் பெரிய நகங்களைக் கொண்ட பெண்புலி இனிதான குட்டிகளை ஈன்றிருக்கும். அப்புலி கொண்ட நோயும் பசியும் தீரும்பொருட்டுச் சின மிகுதியாற் சிவந்த கண்களைக் கொண்டதும், வேட்டை யாடுதலிலே வல்லமை கொண்டதுமாகிய பெரிய ஆண்புலி, உயர்ந்த கொம்புகளைக் கொண்ட களிற்றின் நெற்றியிலே பாய்ந்து அதனைக் கொல்லும். அத்தன்மையினைக் கொண்ட கடத்தற்கு அரியதுமான சுர நெறியையும், 'இன்றைக்கே நான் கடந்து செல்வேன்' எனவும் அவர் கூறுவார். அவர் செல்வதனை அறிந்த நான் சிறிதும் வருத்தமடையேன். நீயும் வருந்தாதிரு. அவர் சென்ற செயல் அவருக்குக் கைகூடட்டும்."

கருத்து

"தலைவி! உன்னால் கொடுமையான காட்டுவழியில் நடக்க இயலாது என்பதால் காதலர் தனித்துப் பொருளீட்டச் செல்வாராயினர். ஆதலால், நீ வருந்தாதே! அவர், தாம் மேற்கொண்டுள்ள செயலில் வெற்றி பெற்று விரைவில் திரும்பி வருமாறு வாழ்த்துவதே முறை" என்று தலைவியிடம் தோழி கூறி, அவளை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தினாள்.

இறைச்சி

குட்டிகள் ஈன்ற பெண்புலியின் பசியைப் போக்க ஆண்புலி, ஆண்யானையைக் கொன்று இழுத்துக்கொண்டு வரும் என்பதன்மூலம், தலைவனும் இல்லத்து வறுமை அகலப் பொருளினை மிகுதியாக ஈட்டிக்கொண்டு வருவான் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

நீரற்ற நெடுவழியில் மறைந்திருக்கும் ஆறலை கள்வர்க்கும் கொடும் புலிக்கும் அஞ்சாது கடந்து சென்று பொருளீட்டி வருதல், இல்லறத்தில் தலைவியுடனிருந்து அதனால் அறம் பல செய்து இன்புறற்கேயாம்.

சொற்பொருள்

1. வண்ணம் - அழகு.
2. அவண் - அங்கு, காட்டுவழியே.
3. தொடங்கி - செலவினைத் தொடங்கி.
4. கயம் - குளம்; புலர்ந்த - வற்றிய; நீர்இல் - நீர் இல்லாத.
5. மராஅம் - மரா மரம்; அம்புடைப் பொருந்தி - அழகிய பக்கங்களில் பொருந்தி.
6. வாங்கு சிலை - வளைந்த வில்; வீங்கு நிலை - உயர்ந்த நிலை.
7. அளை - குகை; வள்உகிர் - கூரிய நகம்; பிணவு - (பெண்) கரடி.
8. புனிற்று இடும்பை - அண்மையில் குட்டியை ஈன்றதால் உண்டாகும் பசித் துன்பம்; சிறந்து - மிகுந்து.
9. கோள்வல் ஏறு - கொல்லவல்ல ஆண்.
10. உயர் மருப்பு - உயர்ந்த கொம்பு; ஒருத்தல் - யானை; புகர் முகம் - புள்ளி பொருந்திய முகம்.
11. இறப்ப - கடந்து (செல்வார்).
12. வாய்க்க - கைகூடட்டும்.

தோழி கூற்று

நற்றிணை 252 **அம்மெய்யன் நாகனார்**

திணை : பாலை

கூற்று

'பொருள்வயிற்பிரியும்' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிய இருப்பதை அறிந்த தலைவி, அவன் பிரிவுக்கு வருந்தினள். தலைவன் எண்ணத்தை நன்கு அறிந்த தோழி அவன் பிரிவை ஆற்றியிருத்தலே தக்கது என்று தலைவியிடம் கூறியது.

உலவை ஓமை ஒல்குநிலை ஒடுங்கிச்
சிள்வீடு கறங்கும் சேய்நாட்டு அத்தம்,
திறம்புரி கொள்கையொடு இறந்துசெயின் அல்லது,
அரும்பொருள் கூட்டம் இருந்தோர்க்கு இல்என
வலியா நெஞ்சம் வலிப்பச் சூழ்ந்த
வினைஇடை விலங்கல போலும் புனைசுவர்ப்
பாவை அன்ன பழிதீர் காட்சி,
ஐதுஏய்ந்து அகன்ற அல்குல், மைகூர்ந்து
மலர்பிணைத் தன்ன மாஇதழ் மழைக்கண்,
முயல்வேட்டு எழுந்த முடுகுவிசைக் கதநாய்
நல்நாப் புரையும் சீறடிப்
பொம்மல் ஓதி, புனைஇழை குணனே!

தெளிவுரை

சுவரிலே புனைந்து எழுதப்பட்ட ஓவியத்தைப் போன்ற குற்றமற்ற அழகிய தோற்றத்தினைக் கொண்டவள், தலைவி; மெல்லியதாய அகன்ற அல்குலைக் கொண்டவள்; மை எழுதப்பட்டு நீலமலரைப் பிணைத்து வைத்தது போன்ற கரிய இமையுடன் விளங்கும் குளிர்ச்சி பொருந்திய கண்களையும் கொண்டவள்; முயல் வேட்டைக்கு எழுந்து விரைந்த வேகத்துடன் செல்லும் சினம் கொண்ட நாயின் நல்ல நாவை ஒத்த சிறிய அடிகளையும் கொண்டவள். திரண்ட கருங்கூந்தலைக்

கொண்டவள். கிளைகளைக் கொண்ட ஓமை மரங்களில் ஒடுக்குற்ற இடங்களிலே மறைந்திருந்து 'சிள்வீடு' ஒலிக்கின்ற வேற்று நாட்டின் வழியே சென்று பொருள் ஈட்டத் தலைவர் விரும்பினார். வீட்டிலேயே சோம்பியிருப்பவரிடம் அரிய பொருள் சேராது என்று கருதிய அவர் நெஞ்சு, பொருள் ஈட்டுதலை வலியுறுத்தியதால், தலைவியின் அழகிய குண நலன்கள் குறுக்கிட்டு அவர் செல்வதைத் தடுக்கவில்லை போலும்!

கருத்து

'தலைவன் பொருள் தேடிவர உறுதி கொண்டுள்ளான். ஆதலின், தலைவி பொறுமையுடன் ஆற்றியிருத்தலைத் தவிரச் செய்யத்தக்கது வேறு இல்லை' எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

இறைச்சி

'சிள்வீடு' ஓமை மரத்தில் பட்டுப்போன கிளையோடு மறைந்து உள் ஒடுங்கி ஒலிக்கும் என்பதிலிருந்து, தலைவியின் காமமும் கற்பின் மிகுதியால் வெளிப்படத் தோன்றாது, உள்ளத்தே நின்று வருத்தும் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. உலவை - கிளை, மரக்கொம்பு; ஓமை - ஒருவகை மரம்; ஒல்கு நிலை - ஒடுக்கப்பட்டுள்ள இடங்கள்; ஒடுங்கி - மறைந்து.
2. சிள்வீடு - ஒருவகை வண்டு; கறங்கும் - ஒலிக்கும்; சேய்நாடு - தொலை வில் உள்ள நாடு.
3. இறந்து செயின் - கடந்து சென்று செய்தாலொழிய.
4. இருந்தோர்க்கு - வீட்டிலேயே இருப்பவர்க்கு; இல் - இல்லை.
5. வலிப்ப - வற்புறுத்தலால்; சூழ்ந்த - துணிந்து மேற்கொண்ட.
6. வினைஇடை - செய்யும் செயலிடையே; விலங்கல - தடுக்கவில்லை; புனைசுவர் - அழகிய சுவர்.
7. பழி தீர் காட்சி - குற்றமில்லாத தோற்றம்.
8. ஐது - மெல்லிது; ஏய்ந்து - பொருந்தி; மை கூர்ந்து - மை தீட்டப் பெற்று.

9. மலர் - நீல மலர்; பிணைத்தன்ன - பிணைத்து வைத்தது போன்ற; மா - கரிய; மழைக்கண் - குளிர்ந்த கண்.
10. வேட்டு எழுந்த - வேட்டைக்கு எழுந்த; முடுகு விசை - விரைந்த வேகம்; கதம் - சினம்.
11. நல் நா - நல்ல நா; சீறடி - சிறிய அடி.
12. பொம்மல் - திரண்ட; குணன் - நற்குணங்கள்.

தோழி கூற்று

அகநானூறு 173 **முள்ளியூர்ப் பூதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் காரணமாய்ப் பிரியும்பொழுது, ‘சில நாளில் வருவேன், அதுவரை பொறுத்திரு’ என்று சொல்லிப் பிரிந்தான். அதனால் தலைவி வருந்தினாள். அது கண்ட தோழி, ‘அவர் சொன்னபடி ஆற்றியிருத்தலே சரியானது. தலைவர் கூறியபடியே திரும்பி வருவார்’ என்று வலியுறுத்திக் கூறி ஆற்றுவித்தது.

‘அறம்தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும், நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்’எனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர், ‘நறுநுதல்
மைஈர் ஓதி! அரும்படர் உழத்தல்
சில்நாள் தாங்கல் வேண்டும்’ என்று,நின்
நல்மாண் எல்வளை திருத்தினர் ஆயின்,
வருவர்– வாழி, தோழி! பலபுரி!–
வார்கயிற்று ஒழுகை நோன்சுவல் கொளீஇ,
பகடுதுறை ஏற்றத்து உமண்விளி வெரீஇ,
உழைமான் அம்பிணை இனன்இரிந்து ஓட,
காடுகவின் அழிய உரைஇ, கோடை

நின்றுதின விளிந்த, அம்பணை, நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கும் மண்ணா முத்தம்
கழங்குஉறழ் தோன்றல, பழங்குழித் தாஅம்,
இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! வாழ்க! அறநெறியிலிருந்து நீங்காது இல்வாழ்வை முறைப்படி நடத்துதல், சிறந்த சுற்றத்தாரின் பல்வகைத் துன்பங்களையும் தடுத்து நிறுத்துதல் ஆகிய இரண்டையும், முயற்சி இன்றி ஊக்கமின்றி இல்லில் தங்கி இருப்பவரால் செய்ய இயலாது என்று கருதி, நம் தலைவர் பொருள் ஈட்டும் முயற்சியை மேற்கொண்டு மலைப் பாதையைக் கடந்து சென்றார். உப்பு வாணிகர், பல புரிகளை முறுக்கிச் செய்த கயிற்றால் பிணித்த வண்டிகளில் செல்லும்போது ஏற்றமான இடத்தில் மாடுகளை அதட்டி ஓட்டுவர். அவ்வொலியால் ஆண்மானும், பெண்மானும் அஞ்சி ஓடும். அக்காட்டின் அழகு சிதையக் கோடை வெயில் நிலைபெற்று நீரை உறிஞ்சுதலால் வற்றிப்போன நீண்டு உயர்ந்த மூங்கிலின் கணுக்கள் பிளவுற அவற்றிலிருந்து தெறிக்கும் முத்துகள், மகளிர் ஆடும் கழஞ்சிக்காய் போலத் தோன்றி (அங்குள்ளவர் ஆடிய) பழைய குழியில் விழும். இனிய களிப்பைத் தரும் கள்ளினையும், நன்கு இயற்றப்பட்ட தேரினையும் உடையவன், நன்னன். அவனது வானளாவிய மூங்கிலைக் கொண்ட மலைப்பக்கத்தையும், பொன் பொருந்திய இடங்களைக் கொண்ட மலையினையும் கடந்து சென்றுள்ளார், நம் தலைவர்.

"அவர் பிரியும் முன்பு உன்னிடம், 'அழகிய நெற்றியும், அடர்ந்த கூந்தலும் கொண்டவளே! நீ சிறிது காலம் பிரிவுத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள வேண்டும்' என்று சொல்லி உன் மாட்சிமைப்பட்ட வளையல்களைத் திருத்தி அருள் மொழி கூறிச் சென்றார். அதனால் விரைவில் வந்துவிடுவார்" என்று தோழி தலைவியிடம் தேறுதல் மொழிகள் கூறினாள்.

கருத்து

'சில நாள் பொறுத்திரு' என்று சொல்லிப் பிரிந்தவராதலின், அவர் அதை நினைந்து விரைந்து வருவார்.

விளக்கம்

"தலைவி! வாழி! 'அறவழியில் நீங்காது நடத்தல், சிறந்த உறவினர்களின் துன்பங்களை நீக்கி அவர்களைத் தூக்கி நிறுத்தல் ஆகிய இரண்டையும் ஊக்கத்தோடு பொருளீட்டி வாராது, வீட்டிலேயே தங்கியிருப்பவரால் செய்ய இயலாது என்பதால் நான் பொருள் தேடி வர விரும்புகிறேன்; ஆதலால், கரிய நறிய கூந்தலைக் கொண்டவளே! பிரிவால் ஏற்படும் துன்பத்தைச் சில நாள் பொறுத்திருக்க வேண்டும்' என்று சொல்லித் தலைவர் உன் மாட்சிமைப்பட்ட வளையல்களைத் திருத்தி அருள்மொழி கூறிச் சென்றார். ஆதலால், மலைகளைக் கடந்து சென்ற அவர் உறுதியாய் விரைந்து வருவார்" என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. அறம் தலைப் பிரியாது - அற வழியிலிருந்து நீங்காது; ஒழுகல் - நடத்தல்.
2. கேளிர் - சுற்றத்தார்; கேடுபல - பல வகையான துன்பங்களை; ஊன்றலும் - தாங்கலும்.
3. வருந்தா உள்ளமொடு - முயற்சி மேற்கொண்டு வருந்தாது; இருந்தோர்க்கு இல் - இருப்பவர்க்கு இல்லை.
4. செய்வினை - பொருளீட்டும் செயலை; புரிந்த - விரும்பிய.
5. மைஈர் ஓதி - கரிய குளிர்ந்த கூந்தல்; அரும்படர் - தீர்த்தற்கரிய துன்பம்; உழத்தல் - வருந்துதல்.
6. தாங்கல் - பொறுத்துக்கொள்ளுதல்.
7. நல்மாண் - நல்ல மாட்சிமைப்பட்ட; எல் வளை - ஒளி பொருந்திய வளையல்.
8. பல புரி - பல புரிகள்.
9. வார் கயிறு - நீண்ட கயிறு; ஒழுகை - வண்டி; நோன் - வலிய; சுவல் - பிடரி, கழுத்து; கொளீஇ - பூட்டி.
10. பகடு - எருது; துறை ஏற்றத்து - ஏற்றமான துறைகளில்; உமண் - உமணர், உப்பு வாணிகர்; விளி - உரப்பும் ஒலி; வெரீஇ - (கேட்டு) அஞ்சி.

11. உழைமான் - ஆண்மான்; அம்பிணை - அழகிய பெண்மான்; இனன் - இனம், கூட்டம்; இரிதல் - ஓடுதல்.
12. கவின் - அழகு; கோடை - கோடைக்காலம்; உரைஇ - பரவி.
13. நின்று - நிலைபெற்று; தின - (நீரினை) உறிஞ்சுதலால்; விளிந்த - வற்றிய; அம்பணை - அழகிய பெரிய; நெடுவேய் - நெடிய மூங்கில்.
14. கண்விட - கணுக்கள் பிளக்க; மண்ணா - கழுவப்பெறாத; முத்தம் - முத்து.
15. கழங்கு - கழற்சிக்காய்; உறழ் - ஒத்து; தோன்றல் - தோன்றி; தாஅம் - விழும்.
16. இன் களி நறவு - இனிய களிப்பைத் தரும் கள்; இயல் தேர் - இயற்றப்பட்ட தேர்; நன்னன் - குறுநில மன்னருள் ஒருவன்.
17. விண்பொரு - விசும்பினைத் தொடுகின்ற; நெடுவரை - நெடிய மூங்கில்; கவாஅன் - பக்க மலை.
18. பொன்படு - பொன் பொருந்திய; மருங்கு - பக்கம், இறந்தோர் - கடந்து சென்றவர்.

தோழி கூற்று

அகநானூறு 197 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவைப் பொறுக்கலாற்றாது தலைவி வருந்தினாள். 'தலைவன் வரும்வரை ஆற்றி இருப்பதே உன் கடன்' என்று தோழி வற்புறுத்திக் கூறியது.

மாமலர் வண்ணம் இழந்த கண்ணும்,
பூநெகிழ் அணையின் சாஅய தோளும்,
நன்னர் மாக்கள் விழைவனர் ஆய்ந்த
தொல்நலம் இழந்த துயரமொடு, என்னதூஉம்
இனையல் வாழி, தோழி! முனைஎழ
முன்னுவர் ஓட்டிய முரண்மிகு திருவின்,
மறம்மிகு தானை கண்ணன் எழினி—

தேம்முது குன்றம் இறந்தனர் ஆயினும்
நீடலர் யாழநின் நிரைவளை நெகிழ—
தோள்தாழ்பு இருளிய குவைஇருங் கூந்தல்
மடவோள் தழீஇய விறலோன் மார்பில்
புன்தலைப் புதல்வன் ஊர்புஇழிந் தாங்கு,
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு
இனம்சால் வேழம், கன்றுஊர்பு இழிதர,
பள்ளி கொள்ளும் பனிச்சுரம் நீந்தி,
ஒள்இணர்க் கொன்றை ஓங்குமலை அத்தம்
வினைவலி யுறூஉம் நெஞ்சமொடு
இனையர் ஆகி,நம் பிரிந்திசி னோரே.

தெளிவுரை

"தலைவியே! நீ வாழ்க! கரிய குவளை மலரினைப் போன்ற உன் கண்கள் அழகினை இழந்தன; உன் தோள்களும் நெகிழ்ந்த தலையணையைப் போலத் தளர்ந்து வாடின. நன்மை உடைய ஆயத்தினர் (தாமும் பெற விரும்பினவராக) முன்னெல்லாம் ஆராயும் உன் பழைய நலத்தினை இழந்தனை. அவற்றாலாய துயரத்துடனுள்ள நீ வருந்தாதிரு.

"தோள்களிலே தாழ்ந்து தொங்கும் இருண்டு திரண்ட அடர்த்தியான கூந்தலையும், மடப்பத்தையும் கொண்ட தன் இளமை பொருந்திய மனைவியைத் தழுவிக்கொண்டிருக்கும் ஆற்றல் மிகுந்தவன் மார்பிலே, புல்லிய தலையினைக் கொண்ட அவர்களின் புதல்வன் ஏறி இறங்குவதுபோல -

"நிறைந்த சூலினையும் மடப்பத்தினையும் தன் பிடியினைத் தழுவிக் கிடந்த, வெண்மையான கொம்புகளைக் கொண்டு தன்னினத்திலேயே சிறந்து விளங்கிய களிறு, தன் கன்று தன்மீது ஏறி இறங்கி விளையாடுமாறு படுத்துக்கொண்டிருக்கும்.

"நடுக்கத்தைத் தரும் அத்தகைய சுரநெறியைக் கடந்து, ஒள்ளிய பூங்கொத்துகளைக் கொண்ட கொன்றை மரங்கள் உயரமாய் வளர்ந்திருக்கும் மலைகளைச் சார்ந்த நெறியிலே, பொருளீட்டும் செயலை வலியுறுத்தும் நெஞ்சத்துடன், உன்

நிரைத்த வளைகள் நெகிழுமாறு, அருள் அற்றவராய்ப் பிரிந்து சென்றார், நம் தலைவர்.

"போரிட விரும்பிப் போர்முனைக்கு எழுவதற்கு முற்பட்ட வரை, அச்சத்தால் ஓடச்செய்த, வலி மிகுந்த வீரச்செல்வத்தினையும், வீரம் மிகுந்த படையினையும் உடைய கண்ணன் எழினி என்பவனது, தேன் மிகுந்த முதுகுன்றம் என்ற மலைப்பகுதியைக் கடந்து சென்றனராயினும், அவர் இனியும் காலம் நீட்டித் திருப்பவரல்லர்; விரைவிலே வந்துவிடுவார்" என்று, பிரிவிடை வேறுபட்ட தலைவியிடம் தலைவனின் சிறந்த பண்பைக் கூறித் தோழி தெளிவித்தனள்.

கருத்து

நெடுந்தொலைவு சென்றிருந்தாராயினும் இனியும் காலம் நீட்டிக்காது உன்னை நினைந்து உடனே வருவார்; வருந்தாதே.

விளக்கம்

"தலைவி! வாழி! அழகிழந்த கண்களும், நெகிழ்ந்த அணை போன்று தளர்ந்த தோள்களும் கொண்டவளாய்ப் பழைய நலம் இழந்த துயரத்தோடு இருக்கிறாய்.

"துன்பம் மிக்க சுரங்களைக் கடந்து, ஓங்குமலை வழியில், பொருளீட்டும் உள்ளத்துடன், உன் வளை நெகிழும்படி அருளில்லாதவராய் நம் தலைவர் பிரிந்துள்ளார்.

"கண்ணன் எழினி என்பானுடைய தேன்மிக்க முதுகுன்றத்தைக் கடந்து சென்றனராயினும், நீட்டித்திராது விரைவாய் வந்து சேர்வார். வருந்தாதிரு" எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

உவமை

மடப்பிடிக்கு மடவோளும், அதனைத் தழுவியிருந்த வெண் கோட்டுக் களிற்றுக்கு விறலோனும், அதன்மீது ஏறி இறங்கும் கன்றுக்கு இவன்மேல் ஏறி இறங்கும் புன்தலைப் புதல்வனும் உவமை.

சொற்பொருள்

1. மாமலர் - கரிய குவளை மலர்; வண்ணம் - நிறம்.
2. பூநெகிழ் அணை - நெகிழ்ச்சியுற்ற மலரணை; சாஅய - வாடிய.
3. நன்னர் மாக்கள் - நன்மையுடைய விளையாட்டுத்தோழியர்; விழைவனர் - தாமும் உன் போன்ற அழகு பெற விரும்பியவராய்; ஆய்ந்த - ஆராய்ந்த.
4. தொல்நலம் - பழைய அழகு; என்னதூஉம் - சிறிதும்.
5. இனையல் - வருந்தாதே; முனைஎழ - போர்முனைக்கு எழுவதற்கு, போர் செய்ய.
6. முன்னுவர் - முற்பட்டோர்; ஓட்டிய - ஓடச்செய்த; முரண்மிகு திரு - வலிமை மிக்க வீரச்செல்வம்.
7. மறம்மிகு - வீரம் மிக்க; தானை - படை; கண்ணன் எழினி - தலைவருள் ஒருவன்.
8. தேம் முதுகுன்றம் - தேன் மிக்க முதுகுன்றம் என்னும் மலை.
9. நீடலர் - நீட்டித்து இரார்; யாழ - தோழி; நிரைவளை - நிரையான (வரிசையான) வளையல்.
10. தோள் தாழ்பு - தோளிலே தொங்கும்; இருளிய - இருண்ட; குவை - அடர்த்தியான; இருங்கூந்தல் - கரிய கூந்தல்.
11. மடவோள் - மடப்பம் பொருந்தியவள்; விறலோன் - மேம்பட்ட தலைவன்.
12. புன்தலை - புல்லிய தலை; ஊர்பு இழிந்து ஆங்கு - ஏறி இறங்குவது போல.
13. கடுஞ்சூல் - நிறைந்த கருப்பத்தினைக் கொண்ட; மடப்பிடி - இளைய பெண்யானை; வெண்கோடு - வெள்ளிய கொம்பு.
14. இனம்சால் - இனத்தில் மேம்பட்ட (சிறந்து விளங்கிய); வேழம் - ஆண்யானை.
15. பள்ளி கொள்ளும் - படுத்திருக்கும்; பனிச்சுரம் - குளிர்ந்த காட்டுவழி.
16. ஒள்இணர் - ஒளி பொருந்திய பூங்கொத்து; கொன்றை - கொன்றை மரங்கள்; ஓங்குமலை - ஓங்கிய மலை; அத்தம் - வழி.
17. வினைவலியுறூஉம் - பொருளீட்டும் செயலை வற்புறுத்தும்.
18. இனையர் ஆகி - இங்ஙனம் அருள் அற்றவராகி; நம் பிரிந்திசினோர் - நம்மைப் பிரிந்து சென்றவர் (தலைவர்).

தோழி கூற்று

அகநானூறு 171 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவனது பிரிவால் தலைவி வாடினாள். அவளது பிரிவாற்றாமையைக் கண்ட தோழி, அவளை ஆற்றுவிக்கக் கூறியது.

'நுதலும் நுண்பசப்பு இவரும்; தோளும்
அகல்மலை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த
பணைஎழில் அழிய வாடும்; நாளும்
நினைவல் மாதுஅவர் பண்பு'என்று ஒவாது
இனையல்– வாழி, தோழி! புணர்வர்
இலங்குகோல் ஆய்தொடி நெகிழ, பொருள்புரிந்து
அலந்தலை ஞெமையத்து அதர்அடைந் திருந்த
மால்வரைச் சீறூர் மருள்பல் மாக்கள்
கோள்வல் ஏற்றை ஓசை ஓர்மார்,
திருத்திக் கொண்ட அம்பினர், நோன்சிலை,
எருத்தத்து இரீஇ, இடம்தொறும் படர்தலின்,
கீழ்ப்படு தாரம் உண்ணா, மேற்சினைப்
பழம்போற் சேற்ற தீம்புழல் உணீஇய,
கருங்கோட்டு இருப்பை ஊரும்
பெருங்கை எண்கின் சுரன்இறந் தோரே!

தெளிவுரை

"தலைவி! நீ வாழ்க! அது பெரிய மலையடிவாரத்திலேயுள்ள சிறிய ஊர். அங்கே வழியில் வாடிய உச்சியைக் கொண்ட ஞெமை மரங்கள் அடர்ந்திருக்கும். மருட்சி கொண்ட மக்கள் பலரும், கொல்லுதலிலே வல்ல ஆண்கரடி வருகின்ற ஒலியினை உணர்வர். உடனே தீட்டிய அம்புகளையுடையவராகவும், வலிய

வில்லைத் தோளிலே கொண்டவராகவும், இடமெங்கும் பரவி வந்துகொண்டிருப்பர். அதனால் பெரிய கையினைக் கொண்ட கரடிகள், தரையில் கிடக்கும் உணவுகளை உண்ணாமல், மரங்களின் மேலேயுள்ள கிளைகளிலே, பழம்போல இனிக்கும் சாற்றினையும் இனிய துளையினையும் கொண்ட பூக்களை உண்பதற்காக, கரிய கொம்புகளைக் கொண்ட இருப்பை மரத்தின் மேலே ஏறி இருக்கும். அத்தகைய சுரநெறியினைக் கடந்து, பொருள் சேர்த்துவர விரும்பிச் சென்றுள்ளார், நம் தலைவர்.

"செய்தொழில் சிறப்பினைக் கொண்ட அழகிய உன் வளையல்கள் கழன்று வீழ்ந்தன. நெற்றியும் நுண்ணிய பசலை படரப்பெற்றுள்ளது. அகன்ற மலைக்காட்டிலே, ஆராய்ந்து அறுத்த மூங்கில் துண்டைப் போன்ற தோள்களும் தம் பழைய எழில் அழியப் பெற்று வாட்டமுற்றன. 'அவர் அருட்பண்பினை நாடோறும் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று நீ சொல்லி, ஓயாதே வருந்தியிருப்பதை விடு. அவர் விரைந்து வருவார்" என்று, தலைவன் பிரிவிடை வேறுபட்ட தலைவியைத் தோழி வற்புறுத்திக் கூறினாள்.

கருத்து

'உன் வளையல்கள் கழன்று விழுவதையும், தோள்கள் அழகிழந்து வாடுவதையும் போக்கத் தலைவர் விரைந்து வந்து சேர்வார்; வருந்தாதே!'

விளக்கம்

"தலைவி! வாழி! உன் நெற்றியில் பசலை படர்ந்துள்ளது; மூங்கில் போன்று அமைந்துள்ள அழகு அழியுமாறு தோள்கள் வாடுகின்றன; 'பிரிந்து சென்ற தலைவரின் பண்பை நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லி நாளும் ஓயாது வருந்துவதைத் தவிர். செய்தொழிலில் சிறந்த, திரண்ட உன் வளை நெகிழுமாறு பொருளீட்டி வர, கரடிகள் உலவும் காட்டு வழியைக் கடந்து சென்றுள்ள தலைவர் விரைவில் மீண்டு வந்து சேர்வார். (அவர் வருவதை எதிர்நோக்கியிரு)" எனத் தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

குறிப்பு

இப்பாடல்கள்மூலம் கரடி மரம் ஏறும் என்பதை அறியலாம்.

சொற்பொருள்

1. நுதல் - நெற்றி; நுண்பசப்பு - நுண்ணிய பசலை; இவரும் - படரும்.
2. இறும்பு - காடு; ஆய்தல் - ஆராய்தல்.
3. பணை - மூங்கில்.
4. மாது - அசைச்சொல், இதற்குப் பொருளில்லை; ஓவாது - ஓயாது.
5. இனையல் - வருந்தாதே; புணர்வர் - கூடுவர்.
6. ஆய்தொடி - ஆராய்ந்தெடுத்த வளையல்; நெகிழ - கழன்று விழ; புரிந்து - விரும்பி.
7. அலந்தலை - அலந்த தலை - வாடிய உச்சி; ஞெமை - ஒரு வகை மரம்; ஞெமையத்து அதர் - ஞெமை மரங்கள் இருக்கும் வழி; அடைந் திருந்த - சார்ந்திருந்த.
8. மால்வரை - பெரிய மலை; சீறூர் - சிறிய ஊர்; மருள் - மருட்சி.
9. கோள்வல் - கொல்லுதலில் வல்ல, தன் இரையைக் கொல்லு வதற்கான வலிமை கொண்ட; ஏற்றை - ஆண்விலங்கு (கரடி); ஓர்மார் - ஒலியினை உணர்ந்தவராய்.
10. திருத்திக் கொண்ட - தேய்த்துக் கூர்மையாக்கிக் கொண்ட; நோன் - வலிய; சிலை - வில்.
11. எருத்தம் - கழுத்து; இரீஇ - இருத்தி; படர்தல் - பரவி இருத்தல்.
12. கீழ்ப்படு - தரையில் கிடக்கும்; தாரம் - பண்டம் (உண்ணும் பொருள்); மேற்சினை - மேலேயுள்ள கிளை.
13. சேற்ற - சாற்றினைக் கொண்ட; தீம் - இனிய; புழல் - உள்துளையினைக் கொண்ட; உணீஇய - உண்ணுவதற்கு.
14. கருங்கோடு - கரிய கிளை; இருப்பை - இலுப்பை மரம்; ஊரும் - ஏறும்.
15. பெருங்கை - பெரிய கை; எண்கு - கரடி; சுரன் - காடு; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தோழி கூற்று

அகநானூறு 323 **புறநாட்டுப் பெருங்கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவர் பொருள்வயிற்பிரிய, தலைவி பெரிதும் வருந்தியிருந்தாள். 'அவர் வருவதாய்க் கூறிச் சென்ற கார் காலம் தொடங்கியது; தலைவர் விரைந்து வருதல் உண்மை; அதுகாறும் நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' எனத் தலைவியிடம் தோழி கூறியது.

இம்மென் பேர்அலர், இவ்ஊர், நம்வயின்,
செய்வோர் ஏச்சொல் வாட, காதலர்
வருவர் என்பது வாய்வ தாகல்,
ஐய செய்ய, மதன்இல, சிறியநின்
அடிநிலன் உறுதல் அஞ்சி, பையத்
தடவரல் ஒதுக்கம் தகைகொள இயலி,
காணிய வம்மோ?– கற்புமேம் படுவி!–
பலவுப்பல தடைஇய வேய்பயில் அடுக்கத்து,
யானைச் செல்இனம் கடுப்ப, வானத்து
வயங்கும்கதிர் மழுங்கப் பாஅய், பாம்பின்
பைபட இடிக்கும் கடுங்குரல் ஏற்றொடு
ஆலி அழிதுளி தலைஇக்
கால்வீழ்ந் தன்று,நின் கதுப்புஉறழ் புயலே!

தெளிவுரை

"கற்பினால் மேம்பட்ட தலைவியே! பலா மரங்கள் பல திரண்டு வளர்ந்துள்ளதும், மூங்கில் மிகுந்துள்ளதுமான பக்கமலைச் சாரலில் செல்லுகின்ற யானைக்கூட்டத்தைப் போல, வானில் இயங்கும் ஞாயிறும் ஒளி மழுங்குமாறு கருமுகில்கள் பரவின; அவை பாம்பின் படம் அழியுமாறு கடுமையான ஒலியொடு இடித்தன; ஆலங்கட்டியுடன் கூடிய மிக்க துளிகளைத் தூவியவாறு உன் கூந்தலை ஒத்த அம் மேகக்கூட்டம் கால் இறக்கியது.

"இவ்வூரில் 'இம்' என்று எழும் (இடைவிடாது பேசும்) பழிச் சொற்களைக் கூறித் தூற்றுபவர்களின் செருக்குற்ற சொல் ஒழிய, நம் காதலர் வந்துவிடுவார் என்பது உண்மை.

"உன் அழகிய, சிவந்த, வலுவற்ற சிறிய அடிகள் நிலத்தில் படுவதற்கு அஞ்சி, மெல்லென உடலை வளைத்து, நீ நடக்கும் நடை அழகுபெற நடந்து, கார் கால மழையைக் காண்பதற்கு வெளியில் வா!"

கருத்து

"பழிச்சொல் பேசுவோர் செருக்கடங்கத் தலைவர் வருவது உறுதி."

விளக்கம்

"கற்பினால் மேம்பட்டவளே! இடியுடன் கூடிய கருமேகம் மழைக்காலை இறக்கியுள்ளது. இவ்வூரில் நம்மீது பழிச்சொற்கள் கூறியோர் செருக்கடங்கத் தலைவர் வந்துவிடுவார். அவர் வருவ தாய்க் கூறிச் சென்ற கார்ப்பருவ மழை ஆலங்கட்டியுடன் துளி களைத் தூவிப் பெய்தலைக் காண, உன் அம்செஞ்சீறடி அழகு பெற நடந்து, வெளியில் வந்து பார். தலைவர் கூறிச் சென்ற பருவம் வந்துவிட்டது; அவரும் வந்துவிடுவார்" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. இம் என் - 'இம்' என்று எழும்; பேர் அலர் - பெரிய பழிச்சொற்கள்; நம்வயின் - நம்மீது.
2. செய்வோர் - கூறுவோர்; ஏச்சொல் - செருக்குற்ற சொல்; வாட - அழிய, நீங்க.
3. வாய்வது ஆகல் - உண்மை ஆதல் (உறுதி).
4. ஐய - சிறிய; செய்ய - சிவந்த; மதன்இல - வலிமையில்லாத.
5. நிலன் உறுதல் - நிலத்தில் படிதல்; பைய - மெல்லென.
6. தடவரல் - உடல் வளைந்து; ஒதுக்கம் - நடக்கும் நடை; தகை கொள - அழகு பெற; இயலி - நடந்து.
7. காணிய - காண்பதற்கு; வம் - வருக; மேம்படுவி - மேம்பட்டவளே!
8. பலவு - பலா மரம்; தடைஇய - திரண்டுள்ள; வேய் - மூங்கில்; பயில் - நெருங்கிய; அடுக்கம் - மலைச்சாரல், பக்கமலை.
9. செல்இனம் - செல்லுகின்ற கூட்டம்.

10. வயங்கும் - விளங்கும்; கதிர் - ஞாயிறு; பாஅய் - பரவி.
11. பை பட - படம் அழிய; கடுங்குரல் - கடிய குரல்; ஏறு - இடி.
12. ஆலி - ஆலங்கட்டி; அழிதுளி - மிக்க துளி; தலைஇ - பொருந்தி.
13. கால் - மழைக்கால்; வீழ்ந்தன்று - இறக்கியது; கதுப்பு - கூந்தல்; உறழ் - ஒத்த; புயல் - மேகம்.

தோழி கூற்று

அகநானூறு 313 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுக்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்றான். அவனது பிரிவினை ஆற்றாது தலைவி பெரிதும் வருந்தினாள். அது கண்ட தோழி, 'தலைவன் வருமளவும் ஆற்றியிருத்தல் உன் கடமை' எனத் தலைவியிடம் கூறியது.

'இனிப்பிறிது உண்டோ? அஞ்சல் ஓம்பு'என,
அணிக்கவின் வளர முயங்கி, நெஞ்சம்
பிணித்தோர் சென்ற ஆறுநினைந்து, அல்கலும்,
குளித்துப்பொரு கயலின் கண்பனி மல்க,
ஐய ஆக வெய்ய உயிரா,
இரவும் எல்லையும் படர்அட வருந்தி,
அரவுநுங்கு மதியின் நுதல்ஒளி கரப்ப,
தம்அலது இல்லா நம்இவண் ஒழிய,
பொருள்புரிந்து அகன்றனர் ஆயினும், அருள்புரிந்து,
வருவர்– வாழி, தோழி!– பெரிய
நிதியம் சொரிந்த நீவி போலப்
பாம்புஊன் தேம்பும் வறம்கூர் கடத்திடை,
நீங்கா வம்பலர் கணைஇடத் தொலைந்தோர்
வசிபடு புண்ணின் குருதி மாந்தி,

15 ஒற்றுச்செல் மாக்களின் ஒடுங்கிய குரல
இல்வழிப் படூஉம் காக்கைக்
கல்உயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! வாழி! 'நீ இனி வருந்துவதற்கு ஒன்றும் இல்லை; அஞ்சுவதை நீக்கு' என்று கூறி, அழகிய உன் மேனி ஒளி மேலும் அழகு பெருகுமாறு ஆரத்தழுவி, நம் உள்ளத்தைக் கவர்ந்தவர், நம் தலைவர்.

"அவர் சென்ற காட்டுவழியை நாள்தோறும் நினைத்து நினைத்து, ஆழநீரில் மூழ்கி ஒன்றொடொன்று போரிடும் அருங்கயல் மீன்களைப் போன்றுள்ள உன் இரு விழிகளும் நீர் சொரிகின்றன. மென்மையான பெருமூச்செறிகிறாய்; இரவும் பகலும் வருந்தி, பாம்பு விழுங்கிய மதிபோல் பசப்பூர்ந்து உன் நெற்றி ஒளியிழந்திருக்கிறது. அவரையன்றி ஆதரவில்லாத நாம் இவ்விடம் தனித்திருக்க, அவரோ பொருள் விரும்பிச் சென்று விட்டார்.

அவர் சென்ற காடோ, தன்னுள் இடப்பட்ட மிக்க நிதியத்தைக் கீழே கொட்டிவிட்ட உள்ளீடு இல்லாத நீண்ட துணிப்பை போலப் பாம்பானது உடல் வாடிச் சுருண்டு கிடக்கும் வெம்மை மிகுந்தமையால் ஆறலை கள்வர் அம்பினை எய்தமையால், பாலை நிலத்தில் இடைவிடாது சென்றுகொண்டிருக்கும் வழிப்போக்கர்கள் இறந்துபட்டனர்; அவர் உடலிலிருந்து ஒழுகும் குருதியைக் குடித்த காகங்கள், ஒற்றுத்தொழிலை மேற்கொண்டார்போல் உள்ளடங்கிய குரலுடன் மனையிடத்தே வந்து தங்கும்; அத்தகைய கல் உயர்ந்த செறிந்த மலையைக் கடந்து சென்ற தலைவர், நம்மேல் கருணை காட்டி விரைந்து வருவார்; வருமளவும் ஆற்றியிரு" எனத் தோழி தலைவியை வற்புறுத்துகிறாள்.

கருத்து

நம் உள்ளங் கவர்ந்த தலைவர், நம்மிடம் அருள் கொண்டு விரைவில் வருவார்.

விளக்கம்

“தலைவி! வாழ்க! நம் நெஞ்சம் கவர்ந்த தலைவர், அவரையன்றி உயிர் வாழும் ஆற்றல் இல்லாத நாம் இங்கே தங்கியிருக்க, பொருளை விரும்பிச் சென்றார். ஆயினும், பல மலைகளைக் கடந்து சென்ற அவர், நம்மிடம் அருள் செய்து விரைவில் வருவார். (ஆதலின், நீ அழாதே)” என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

உவமை

நிதியம் இழந்த பை நீண்டு சுருண்டு கிடத்தல்போல, பாம்பும் வெம்மை பொறாது உடல் வாடிச் சுருண்டுகிடக்கும்.

சொற்பொருள்

1. பிறிது உண்டோ? - வேறு ஒன்று உண்டோ?; அஞ்சல் ஓம்பு - அஞ்சுதலை ஒழி.
2. அணிக்கவின் - நல்ல அழகு; முயங்கி - தழுவி.
3. பிணித்தோர் - கவர்ந்தவர் (தலைவர்); ஆறு - வழி.
4. குளித்துப் பொரு - தண்ணீரில் மூழ்கி ஒன்றோடொன்று போரிடும்; கயல் - கயல்மீன்கள்; கண்பனி - கண்ணீர்; மல்க - பெருக.
5. ஐய ஆக - மென்மையாய்; வெய்ய உயிரா - வெவ்விய பெருமூச்சு விட்டு.
6. எல்லை - பகல்; படர் - துன்பம்; அட - வருத்த.
7. அரவு நுங்கு - பாம்பு விழுங்கிய; மதியின் - நிலவைப் போல; கரப்ப - (ஒளி) இழக்க.
8. தம் அலது இல்லா நம் - அவரையன்றி வேறு ஆறுதல் இல்லாத நாம்; இவண் - இங்கே; ஒழிய - தனித்திருக்க.
9. பொருள் புரிந்து - பொருளை விரும்பி (புரிதல் - விரும்புதல்).
11. நிதியம் - நிதியினை; சொரிந்த - கீழே கொட்டிவிட்ட; நீவி - பணப்பை.
12. ஊன் தேம்பும் - உடல் வற்றிக் கிடக்கும்; வறம் கூர் - வறட்சி மிக்க; கடம் - காடு.
13. நீங்கா - இடைவிடாது (பயணம் செய்யும்); வம்பலர் - புதியோர், வழிப்போக்கர் (மீது); கணை இட - அம்பு எய்தலால்; தொலைந் தோர் - இறந்தோர்.
14. வசிபடு - பிளவுபட்ட; மாந்தி - வயிறாரக் குடித்து.

15. ஒற்றுச்செல் மாக்கள் - ஒற்றுச் செல்லும் மக்கள், ஒற்றர்கள்; ஒடுங்கிய - உள்ளடங்கிய; குரல - குரலை உடையவனாய்.
16. இல் வழி - வீட்டினிடத்தே; படரும் - வந்து தங்கும்.
17. கல் உயர் - கற்கள் உயர்ந்த; பிறங்கல் - பக்க மலை; இறந்தோர் - கடந்து சென்றவர்.
10. (வருவர், வாழி, தோழி).

தோழி கூற்று

அகநானூறு 311 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்றான்; குறித்த பருவத்தில் வாராது காலம் நீட்டித்தான்; பிரிவாற்றாது தலைவி வருந்தினாள்; அதுகண்ட தோழி, தலைவனது அன்பின் மிகுதியை எடுத்துக்கூறி, தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூறியது.

இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்று,
அருங்கடிக் காப்பின் அகல்நகர் ஒருசிறை,
எழுதி யன்ன திண்நிலைக் கதவம்
கழுதுவழங்கு அரைநாள், காவலர் மடிந்தென,
திறந்துநப் புணர்ந்து, 'நும்மின் சிறந்தோர்
இம்மை உலகத்து இல்'எனப் பல்நாள்,
பொம்மல் ஓதி நீவிய காதலொடு,
பயம்தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப,
வருவழி வம்பலர்ப் பேணி, கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நல்நாட்டு உம்பர், செல்அருஞ்
சுரம்இறந்து ஏகினும், நீடலர்—
அருள்மொழித் தேற்றிநம் அகன்றிசி னோரே.

தெளிவுரை

"தலைவி! நம் தலைவர் (களவுக் காலத்தில்) கரிய நிறப் பெண் யானையினைப் பரிசிலாய்ப் பெறும் பாணர் போல நமது வீட்டின் வாயிலில் வந்து நிற்பார். அரிய காவலைக் கொண்ட மதில் சூழ்ந்த மனைக்கு ஒரு பக்கத்தே ஓவியத்தில் எழுதி வைத்தாற்போன்ற அழகுடன் விளங்கும் திண்ணிய நிலையைக் கொண்ட கதவினைப் பேய்கள் திரியும் நள்ளிரவில், காவலர் சோர்ந்திருக்கும் நேரம் பார்த்துத் திறந்து உட்புகுவார். இவ்வாறு வந்தவர் நம்மோடு கூடி, 'உம்மைக்காட்டிலும் அன்பிற்சிறந்தார் இவ்வுலகத்தில் எவரும் இலர்' என்று கூறி, பொலிவு பெற்ற நம் கூந்தலைத் தடவி மகிழ்வார்; இரக்கம் தோன்ற அன்புமொழி பேசி நம்மைவிட்டுப் பிரிந்து செல்வார். (அத்தகைய அன்பினைக் கொண்டவர்.)

"மழை பெய்யாது பொய்த்தமையால் திசையெல்லாம் வெப்பம் மிகுந்தது; பாலைவழியில் வரும் புதியோரைப் பேணிக் காக்கும் பண்பினைப் பெற்ற ஆயர்கள், இளைய எருதுகளின் கழுத்தில் கட்டிய மூங்கிற்குழாயுள் அடைத்து வைத்த சுவைமிக்க புளிச்சோற்றினை, தேக்கின் இலையில் இட்டு அவர் பசி நீங்கக் கொடுப்பர்.

"அத்தகைய புல்லி என்பானது வேங்கட நாட்டிற்கு அப்பாலுள்ள கடத்தற்கரிய பாலை வழியைக் கடந்து, இப்பொழுது நம் தலைவர் சென்றிருந்தாலும், நம்மைத் தேற்றி அருள்மொழிகளைக் கூறிச் சென்ற அவர் காலந்தாழ்த்தாது உன்னை நினைந்து விரைந்து வருவார்." (அதுவரை ஆற்றியிரு என்று தலைவியிடம் தோழி கூறினாள்.)

கருத்து

காதலுடன் இரக்கம் தோன்றும் மொழியால் நம்மைத் தெளிவுபடுத்திச் சென்ற தலைவர் காலம் தாழ்த்தியிரார்; வருந்தாதே; வந்து சேர்வார்.

விளக்கம்

"தலைவியே! நம்மோடு கூடி, நம்மினும் அன்பிற்சிறந்தார் எவரும் இவ்வுலகத்தில் இலர் என்று சொல்லிப் பல நாள் நம்

கூந்தலைத் தடவி, அன்புமொழி பேசி, நம்மை விட்டுப் பிரிந்து சென்றார், நம் தலைவர். அவர் வேங்கட நாட்டிற்கு அப்பால் உள்ள காட்டு வழியைக் கடந்து சென்றிருப்பாராயினும் தாமதியாது விரைவில் வருவார்; ஆற்றியிரு" என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. இரும்பிடி - பெரிய பெண்யானை; பரிசிலர் - பாணர்; கடை நின்று - வாயிலில் நின்று.
2. அருங்கடிக் காப்பு - அரிய கடுமையான காவல்; அகல்நகர் - அகன்ற மனை; ஒருசிறை - ஒரு பக்கம்.
3. எழுதி அன்ன - ஓவியத்தில் எழுதினாற்போன்ற (அழகு வாய்ந்த); திண்நிலை - செறிந்த நிலையினைக் கொண்ட; கதவம் - கதவு.
4. கழுது - பேய்; வழங்கும் - திரியும்; அரைநாள் - நடு இரவு; மடிந்தென - சோர்ந்திருக்கும் சமயம் (மடிதல் - சோர்ந்திருத்தல்).
5. நப்புணர்ந்து - நம்மைக் கூடி; நும்மின் சிறந்தோர் - நும்மினும் அன்பிற் சிறந்தோர்.
6. இம்மை உலகம் - இவ்வுலகம்; இல் - இல்லை; பல்நாள் - பல நாள்.
7. பொம்மல் - பொலிவு பெற்ற; ஓதி - கூந்தல்; காதல் - அன்பு.
8. பயம் தலைபெயர்ந்து - நீரற்று ஒழிய (பயம் - பயன்); மாதிரம் - திசை; வெம்ப - கொதிக்க.
9. வம்பலர் வருவழி - புதிய வழிப்போக்கர் வரும்பொழுது; பேணி - போற்றி; கோவலர் - ஆயர், இடையர்.
10. மழ விடை - இளைய எருது; குழாஅய் - குழாயிலுள்ள; தீம்புளி - இனிய புளிச்சோறு.
11. செவிஅடை - (பசியால் உண்டான) காதடைப்பு; தேக்கிலை - தேக்கு மரத்தின் இலை; பகுக்கும் - பகிர்ந்தளிக்கும்.
12. புல்லி - தலைவன் ஒருவன்; நல் நாடு - (அவனுடைய வேங்கடம் என்னும்) நல்ல நாடு; உம்பர் - அப்பால்; செல் அரும் - செல்லுதற்கு அரிய.
13. சுரம் - காடு; இறந்து - கடந்து; ஏகினும் - சென்றிருப்பினும்.
14. அருள் மொழி - இரக்கம் தோன்றும் மொழியால்; தேற்றி - (நம்மைத்) தெளிவித்து; அகன்றிசினோர் - அகன்று சென்றவர்.

தோழி கூற்று

அகநானூறு 359 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்தானாக, குறித்த பருவத்தில் வாராமையின் பெரிதும் வருந்திய தலைவியிடம் தோழி சொல்லியது.

'பனிவார் உண்கணும், பசந்த தோளும்,
நனிபிறர் அறியச் சாஅய், நாளும்
கரந்தனம் உறையும் நம்பண்பு அறியார்,
நீடினர் மன்னோ, காதலர்' எனநீ
எவன்கை யற்றனை? இகுளை– அவரே
வான வரம்பன் வெளியத்து அன்னநம்
மாண்நலம் தம்மொடு கொண்டனர்– முனாஅது,
அருஞ்சுரக் கவலை அசைஇய கோடியர்,
பெருங்கல் மீமிசை, இயம்எழுந் தாங்கு,
வீழ்பிடி கெடுத்த நெடுந்தாள் யானை
சூர்புகல் அடுக்கத்து மழைமாறு முழங்கும்,
பொய்யா நல்இசை மாவண் புல்லி,
கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாள்
முதைச்சுவல் மூழ்கிய, கான்சுடு குரூஉப்புகை
அருவித் துவலையொடு மயங்கும்
பெருவரை அத்தம் இயங்கி யோரே!

தெளிவுரை

"தலைவி! 'மையுண்ட கண்கள் அழுது நீர் சொரிந்திடவும், பசலை பாய்ந்திடவும், பிறர் அறியும்படி உடல் வாடி மெலிந்திடவும், நாம் நாள்தோறும் அவற்றைப் பிறர் அறியாவண்ணம் மறைத்து வாழ்கின்ற தன்மையினராய் இருக்கிறோம். இதனை அறியாராய் நம் தலைவர், குறித்த பருவத்து வாராது மிகவும்

காலம் தாழ்த்தினர்' என்று நீ பெரிதும் வருந்திச் செயல் இழந்தது ஏனோ?

"முன்னே இருக்கும் அரிய காட்டின் பிரிவுபட்ட வழிகளில் தங்கியிருக்கும் கூத்தர்கள் முழக்கிய வாச்சிய ஒலி, பெரிய மலையில் எதிரொலித்தாற்போல, தன்னால் பெரிதும் விரும்பப்படும் பிடியினைக் காணாது தவித்த, நீண்ட காலை கொண்ட ஆண்யானை, தெய்வம் விரும்பி வாழும் மலைப் பக்கத்தே இடியொடு மாறுபட்டுப் பேரொலி எழுப்பும்; அங்கு, உண்மையான புகழை உலகிலே நிலைநிறுத்தியவனும், பெரிய வள்ளலுமாகிய புல்லி என்பானது கிளைத்த கதிர்களைக் கொண்ட வரகங்கொல்லையாகிய மேட்டு நிலத்தைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதியைச் சுட்டு எரித்தமையால் எழும் புகை, அருவியின் நுண்ணிய துளிகளுடன் கலந்து தோன்றும் பெரிய மலைகள் பொருந்திய காட்டினைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

"அவ்வாறு சென்றவர், வானவரம்பன் என்பானது வெளியம் என்னும் இடத்தையொத்த நம் அழகினையும் தம்முடன் கொண்டு போய்விட்டார்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவர் நம் அழகினையும் தம்மொடு கொண்டு சென்றார். அதனைத் திரும்பத் தர விரைந்து வருவார்.

விளக்கம்

"தலைவியே! 'காதலர் நம் கண்ணும் தோளும் வாடவும் அதனைப் பிறர் அறியாதபடி மறைத்து வாழும் நம் பண்பினை அறியாராய், வாராது காலம் தாழ்த்தினர்' என்று நீ செயலற்றுப் பெரிதும் வருந்தியிருப்பது ஏனோ? பெருமலை பொருந்திய காட்டில் சென்ற அவர் நமது சிறந்த அழகினையும் தம்முடன் கொண்டுசென்றனர். (இதனை அறிந்து, அழகினை உடனே திரும்பத் தரவேண்டும் என்று விரைந்து வருவார்)" என்று தோழி ஆறுதல் கூறுகின்றாள்.

சொற்பொருள்

1. பனிவார் - நீர் ஒழுகும்.
2. நனிபிறர் அறிய - பிறர் மிகவும் அறியும்படி; சாஅய் - வாடி மெலிய.
3. கரத்தல் - மறைத்தல்; உறைதல் - வாழ்தல்; பண்பு - இயல்பு.
4. நீடினர் - காலம் தாழ்த்தினர்.
5. கையற்றனை எவன்? - செயலிழந்தது ஏனோ?; இகுளை - தோழி.
6. வான வரம்பன் - தலைவருள் ஒருவன்; வெளியம் - வானவரம்பனுக்குரிய இடம்.
7. மாண்நலம் - சிறந்த அழகு; கொண்டனர் - கொண்டு சென்றுவிட்டார்; முனாஅது - முன்னே.
8. கவலை - பிரிவுபட்ட வழி; அசைஇ - தங்கியிருக்கும்; கோடியர் - கூத்தர்.
9. பெருங்கல் - மலை; மீமிசை - மேலிடம்; இயம் - வாச்சிய ஒலி; எழுந்தாங்கு - எதிரொலித்தாற்போல.
10. வீழ் பிடி - தான் விரும்பும் பெண்யானை; கெடுத்த - இழந்த, காணாத.
11. சூர் புகல் - தெய்வம் விரும்பி உறையும்; அடுக்கம் - மலை; மழைமாறு - இடியோடு மாறுபட்டு.
12. பொய்யா - பொய்யில்லாத, உண்மையான; நல்இசை - நல்ல புகழ்; மாவண் - சிறந்த வலிமை; புல்லி - தலைவருள் ஒருவன்.
13. கவைக் கதிர் - கிளைத்த கதிர்; யாணர் - அழகிய; பைந்தாள் - பசிய தட்டை.
14. முதைச் சுவல் - பழைய கொல்லை; மூழ்கிய - மூடியுள்ள; கான் - காடு; சுடு - சுடுவதால்; குரூஉப் புகை - எழும் நிறமுள்ள புகை.
15. துவலை - துளி; மயங்கி - விரவி, கலந்து.
16. பெருவரை - பெரிய மலை; அத்தம் - வழி; இயங்கியோர் - சென்றவர் (ஆகிய நம் தலைவர்).

தோழி கூற்று

அகநானூறு 357 **எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்தான். பிரிந்து சென்றவன் குறித்த பருவத்தில் வாராமையின் தலைவி பெரிதும் வருந்தினாள். அதுகண்ட தோழி தலைவியை நோக்கி, 'தலைவர் உன்பால் பெரிதும் அன்பு கொண்டவர்; ஆதலின், விரைவில் மீள்வர்; அவர் வருமளவும் ஆற்றியிருத்தலே உன் கடமை' என்று வற்புறுத்திச் சொல்லியது.

கொடுமுள் ஈங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை இறும்பின் வயவொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் தீரிய,
தடமருப்பு யானை வலம்படத் தொலைச்சி,
வியல்அறை சிவப்ப வாங்கி, முணங்குநிமிர்ந்து,
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயில்இருங் கானத்து வழங்கல் செல்லாது,
பெருங்களிற்று இனநிரை கைதொடூஉப் பெயரும்,
தீம்சுளைப் பலவின் தொழுதி, உம்பற்
பெருங்காடு இறந்தனர்ஆயினும், யாழநின்
திருந்துஇழைப் பணைத்தோள் வருந்த நீடி,
உள்ளாது அமைதலோ இலரே; நல்குவர்—
மிகுபெயல் நிலைஇய தீம்நீர்ப் பொய்கை
அடைஇறந்து அவிழ்ந்த தண்கமழ் நீலம்—
காலொடு துயல்வந் தன்ன,நின்
ஆய்இதழ் மழைக்கண் அமர்த்த நோக்கே.

தெளிவுரை

தலைவியே! வளைந்த முள்ளினைக் கொண்ட இண்டஞ்செடி பிரம்பங்கொடியுடன் பின்னிக் கிடக்கும் வெண்ணிற

அரும்புகளைக் கொண்ட குறுங்காட்டில், கருவுற்ற வேட்கையுடன் உண்ணாதுகிடந்த பெண்புலியின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு, ஆண்புலி பெரிய கொம்பினைக் கொண்ட களிற்றியானையைத் தன் வலப்பக்கம் வீழுமாறு அடித்துக் கொன்றது. அவ்விடத்திருந்த அகன்ற பாறைகள் குருதியால் சிவக்கும்படி அதன் உடலைக் கிழித்து இழுத்து வந்தது. பின்னர், மூரி நிமிர்ந்து சோம்பல் முரித்துப் புலால் நாறும் உடலுடன் புற்கள் மீது கிடந்து புரண்டது; அவ்வாறு புரண்டமையால் புற்கள் சாய்ந்து கிடக்கும் சிறிய வழிகள் மிக்க பெருங்காட்டிடையே செல்லுதலைத் தவிர்த்து, யானைக் கூட்டம் தம் கைகளால் தோண்டி உண்டு செல்லும், இனிய சுளைகளைக் கொண்ட பலா மரங்கள் கூட்டமாயுள்ள பெரிய உம்பற்காட்டினை நம் தலைவர் கடந்து சென்றுள்ளார்.

"அவ்வாறு கடந்து சென்றுள்ளார் என்றாலும், திருத்தமுறச் செய்யப்பெற்ற அணிகலன்களை அணிந்த மூங்கில்போலும் பெருத்த உன் தோள்கள் வருந்தி மெலியுமாறு நம் தலைவர் காலம் தாழ்த்தமாட்டார்.

"மழை பெய்தல் நிலைத்தமையால், நீர் நிறைந்த பொய்கையில் பூத்திருக்கும் மணங்கமழும் நீலப்பூக்கள் காற்றில் அசைந்தாற் போன்ற அழகிய இதழ்கள் பொருந்திய குளிர்ச்சி பொருந்திய கண்களினால் இனிதாய்ப் பார்க்கும் உன் விருப்பமிக்க பார்வை யினை அவர் நினையாதிருக்கமாட்டார். எனவே, நம் தலைவர் நம்பால் அருள் செய்வார்."

கருத்து

உன் கண்களினால் இனிதாய்ப் பார்க்கும் விருப்பமிக்க உன் பார்வையினை நினைத்து அவர் உடனே திரும்புவார்.

விளக்கம்

தலைவி! நம் தலைவர் பெருங்காட்டினைக் கடந்து சென்றார்; ஆயினும், உன் பெரிய தோள்கள் வருந்தி மெலிய இடந்தர மாட்டார்; உன் குளிர்ச்சி பொருந்திய கண்களின் அமர்த்த (விருப்பமுண்டாக்கும்) பார்வையை நினையாது இரார்; ஆதலின், வருந்தாதே! அவர் வந்து அருள் செய்வார்.

சொற்பொருள்

1. கொடுமுள் - வளைந்த முள்; ஈங்கை - இண்டஞ்செடி; சூரல் - பிரம்பு; மிடைந்த - செறிந்துள்ள.
2. வான்முகை - வெள்ளிய அரும்பு; இறும்பு - குறுங்காடு; வயவு - சூலுற்ற வேட்கை; வதிந்த - தங்கியிருந்த.
3. உண்ணா - உணவு உண்ணாத; பிணவு - பெண்புலி; உயக்கம் - வருத்தம்; தீரிய - தீர்க்க.
4. தடமருப்பு - பெரிய கொம்பு; வலம்பட - வலப்பக்கத்தே வீழும்படி; தொலைச்சி - அடித்துக் கொன்று.
5. வியல் அறை - அகன்ற பாறை; வாங்கி - இழுத்து வந்து; முணங்கு நிமிர்ந்து - முட்டி நெறித்து, சோம்பல் முரித்து.
6. புலவு - புலால் (நாறும்); சாய் - சாய்ந்து கிடக்கும்.
7. இருங்கானம் - பெரிய காடு; வழங்கல் - இயங்குதல்.
8. இன நிரை - கூட்டமாகிய வரிசை; கைதொடூஉ - கைகளால் தோண்டி (உண்டு); பெயரும் - போகும்.
9. தீம் - இனிய; பலவு - பலா மரம்; தொழுதி - கூட்டம்.
10. உம்பற் பெருங்காடு - சேர நாட்டில் உள்ள ஓர் இடம்; இறந்தனர் - கடந்தனர்; யாழ - தோழி.
11. வருந்த - வருந்தி இளைக்குமாறு; நீடி - காலம் தாழ்த்து.
12. உள்ளாது அமைதல் - நினையாது இருத்தல்; நல்குவர - அருள் உண்டாக.
13. மிகுபெயல் - மிக்க மழை; நிலைஇய - நிலை பெற்றமையால் (பெருகிய); தீம் நீர் - இனிய நீர்.
14. அடை இறந்து - இலைகளை விட்டு மேலெழுந்து; அவிழ்ந்த - மலர்ந்த; தண்கமழ் - மணம் வீசும்; நீலம் - நீல மலர்.
15. கால் - காற்று; துயல்வரல் - அசைதல்.
16. ஆய்இதழ் - அழகிய இமைகள்; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; அமர்த்த - விருப்பமிக்க; நோக்கு - பார்வை.

தோழி கூற்று

அகநானூறு 111 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் ஈட்டச் சென்றமையால் தலைவி பெரிதும் வருந்தினாள். அது கண்ட தோழி, அவளுக்குத் தலைவன் கருத்தை உணர்த்தி ஆற்றுவித்தது.

உள்ஆங்கு உவத்தல் செல்லார், கறுத்தோர்
எள்ளல் நெஞ்சத்து ஏஎச்சொல் நாணி
வருவர்– வாழி, தோழி! – அரச
யானை கொண்ட துகிற்கொடி போல,
அலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி
ஓடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர,
மழைஎன மருண்ட மம்மர் பலஉடன்
ஒய்களிறு எடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்
அத்தக் கேழல் அட்ட நற்கோள்
செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்ப,
குருதி ஆரும் எருவைச் செஞ்செவி,
மண்டுஅமர் அழுவத்து எல்லிக் கொண்ட
புண்தேர் விளக்கின், தோன்றும்
விண்தோய் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! வாழி! பட்டத்துயானை தன்மீது கொண்ட துகிற் கொடிபோல, ஓடை என்னும் பெயர் கொண்ட குன்றத்தில் உலர்ந்த உச்சியினைக் கொண்ட 'ஞெமை' மரத்தின்மீது பின்னப் பட்ட சிலந்திக்கூடு மேல்காற்றினால் அசைந்து ஆடியது.

"நீர் இல்லாது மயக்கமுற்றிருந்த இளைத்த களிறுகள் பலவும், அச்சிலந்திக்கூட்டினை மேகமெனக் கருதி மயங்கின; அவை

அதனைப் பற்றுதற்கு ஒருங்குகூடி உயர்த்திய நீர்வேட்கைத் துன்பத்தைக் கொண்ட நெடிய கைகள், புரவலரின் புகழினைத் தொகுத்துக் கூறும் கூத்தரது தூம்பினைப் போல ஒலித்தன.

"அத்தகைய காட்டில் தன் இரையினை நன்கு பற்றவல்ல ஆண் செந்நாய், பன்றியினைக் கொன்று அதனை விரைந்து இழுத்துச் செல்லும். அதனால் வழியெலாம் ஒழுகிய குருதியைப் பருகும் பருந்தின் சிவந்த செவிகள், அடுத்தடுத்துப் போர் செய்யும் போர்க்களப் பரப்பில், இரவில் விழுப்புண் பட்டு வீழ்ந்த வீரர்களின் புண்களை ஆராயும்பொருட்டுக் கையிற்கொண்ட விளக்குகளைப் போன்று தோற்றம் அளிக்கும்.

"அன்ன தன்மை வாய்ந்த விண்ணைத் தீண்டும் செறிந்து உயர்ந்த மலைகளைக் கடந்து, தம்மிடத்து உள்ள பொருள் போதும் என மகிழ்ச்சி அடையாராய், இகழும் உள்ளத்துடன் பகைவர் கூறும் அம்பு போன்ற சொற்களுக்கு நாணி (மிக்க பொருளை ஈட்டும் நினைவுடன்) சென்ற நம் தலைவர் விரைந்து வருவார்.

"ஆதலால், அவர் வருமளவும் நீ ஆற்றியிரு" எனத் தோழி கூறினாள்.

கருத்து

பொருளீட்ட, மலைவழி பலவற்றைக் கடந்து சென்ற நம் தலைவர் விரைந்து வருவார்.

விளக்கம்

"ஓடை மலையில் காய்ந்த ஞெமை மரத்தில் கட்டப்பட்ட சிலந்திக் கூடு, அரசர்கள் பட்டத்து யானைமீது கொண்ட துகிற் கொடிபோல, வீசும் காற்றால் அசைகிறது. அதனை மழைமேகம் என்று மயங்கிய இளைத்த யானைகள் அதனைப் பற்றுதற்கு எடுத்த கைகள், கூத்தரது பெருவங்கியம்போல ஒலிக்கின்றன; பன்றியைக் கொன்ற ஆண்செந்நாய் அதனை விரைய இழுத்துச் செல்ல வழியெல்லாம் ஒழுகிய குருதியை உண்ணும் பருந்து களின் சிவந்த செவிகள் போர்க்களத்தில் வீரர் புண்களை ஆராயும் பொருட்டுப் பிடித்த விளக்குகள்போலத் தோன்று

கின்றன. அத்தகைய மலைகளைக் கடந்து சென்றுள்ள தலைவர் 'உள்ளது போதும்' என்று மகிழ்ச்சி கொள்ளாது, மேலும் பொருள் தேடி வரச் சென்ற தலைவர் வந்து சேர்வார்; நீ வருந்தற்க" என்று கூறித் தோழி, தலைவியைத் தேற்றினாள்.

குறிப்பு

1. உள்ளது போதும் என்று கருதாமல் பொருள் தேடப் புறப்பட்டான் தலைவன் என்பதோடு அல்லாமல், பகைவர்கள், 'இவன் பொருள் தேட இயலாதவன்' எனக் கூறிய ஏளனப் பேச்சிற்கு அவர்களே வெட்கப்படுமாறு பெரும் பொருள் தேடப் பிரிந்தான் என்றும் கொள்க.

2. கோடியர் தூம்பின் ஒலியும், யானையின் உயிர்ப்பும் ஒரு தன்மையன.

உவமை

ஓடைக் குன்றத்துக்கு அரச யானையும், ஞெமையத்து வலைந்த சிலந்திக் கூட்டிற்குத் துகிற் கொடியும் உவமம்.

உள்ளுறை

சிலந்திக்கூட்டினை மேகமெனக் கருதும் யானையைக் காணும் தலைவர், தாம் பொருளல்லதனைப் பொருளெனக் கருதியதனை உணர்ந்து விரைய மீள்வர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. உள்ளாங்கு உவத்தல் செல்லார் - தம்மிடம் உள்ள செல்வத்தினால் மகிழ்ந்திராமல்; அஃதாவது, தம்மிடம் உள்ள பொருளே போதும் என்று நிறைவு கொண்டுள்ளாமல்; கறுத்தோர் - சினங்கொண்ட பகைவர்.
2. ஏ - அம்பு (போலும்); எச்சொல் - பழிச்சொல்.
4 அரச யானை - பட்டத்துயானை; துகில் - துணி.
5. அலந்தலை - காய்ந்த உச்சி (அலந்த தலை என்பது அலந்தலை என விகாரப்பட்டது); ஞெமை - ஒரு வகை மரம்; வலந்த - பின்னிய; சிலம்பி - சிலந்தி.
6. ஓடை - ஒரு மலையின் பெயர்; கோடை - மேல்காற்று; துயல்வர - அசைய.

7. மருண்ட - மயங்கிய; மம்மர் - மயக்கம்.
(நீர்வேட்கையால் மெலிந்து வருந்திய களிறு, மலைமேலுள்ள சிலந்திக் கூட்டினை மேகமெனக் கருதி மருட்சி கொண்டு, அதனைப் பற்றி நீருண்ணுதற்காகக் கையை மேலே தூக்கியது என்க).
8. ஒய் களிறு - இளைத்த களிறு; எடுத்த - தூக்கிய; நோயுடை - துன்பத்தினைக் கொண்ட.
9. தொகுசொல் கோடியர் - புகழினைத் திரட்டிக் கூறும் கூத்தர்; தூம்பு - ஊதுகருவி (மூங்கிலின் கணுக்களை அறுத்துச் செய்யப்பட்ட பெருவங்கியம் எனும் இசைக்கருவி, இது யானையின் கைபோல இருக்கும்).
10. அத்தம் - காட்டுவழி; கேழல் - பன்றி; அட்ட - கொன்ற; நற்கோள் - இரையினை நன்கு பற்றிக்கொள்ளும் திறன் கொண்ட.
11. செந்நாய் ஏற்றை - ஆண் செந்நாய்; கம்மென - விரைவாய்; ஈர்ப்ப - இழுக்க.
12. ஆரும் - உண்ணும் (ஆர்தல் - உண்ணுதல்); எருவை - பருந்து, கழுகு.
13. மண்டு அமர் - மிக்க போரினைக் கொண்ட; அழுவம் - போர்க்களம்; எல்லி - இரவு.
14. புண்தேர் - புண்களை ஆராயும்.
15. பிறங்கல் மலை - உயர்ந்து தோன்றும் மலை (பிறங்கல் - மலை).

திருக்குறள் - அதிகாரம் 116 பிரிவு ஆற்றாமை

தோழி கூற்று

திருக்குறள் 1151 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'பிரிந்து, கடிதில் வருவல்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வரப் பிரிந்து செல்ல நினைக்கும் தலைவன், தான் சென்று விரைவில் திரும்பி விடுவதாய்ச் சொன்னபோது, தோழி அவனுக்குக் கூறியது.

செல்லாமை உண்டேல் எனக்(கு)உரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்(கு) உரை.

தெளிவுரை

பிரிந்து செல்வதில்லையென்றால் அதை எனக்குச் சொல்; பிரிந்து சென்று விரைவில் வருதலை, நீ திரும்பும்போது உயிரோடிருப்பவர்க்குச் சொல்.

கருத்து

தலைவ! நீ பிரியும்போதே தலைவி இறந்துபடுவள்.

விளக்கம்

தலைவி, தன்னை உடல் எனவும் தலைவனை உயிரெனவும் கொண்டு வாழ்ந்திருப்பவள். உயிர் பிரிந்த பின் உடல் வாழ முடியாதுபோலத் தலைவன் பிரிந்தால், தலைவி வாழாள் என்கிறாள் தோழி.

குறிப்பு

தலைவிக்கும் தோழிக்கும், 'தான், அவள்' என்ற வேற்றுமையில்லையாதலால், தோழி, 'எனக்கு உரை' என்றாள்.

இக்குறளைத் 'தலைவி கூற்று' என்பாரும் உளர்.

சொற்பொருள்

1. செல்லாமை உண்டேல் - நீ (எம்மை விட்டுப்) பிரிந்து செல்வது இல்லை என்றால்; எனக்கு உரை - அதனை என்னிடம் சொல்; மற்று - அதை விடுத்து.
2. நின் வல் வரைவு - (நீ பிரிந்து சென்று) விரைவில் வருதலை; வாழ்வார்க்கு - (நீ திரும்பும்போது) உயிரோடிருப்பவர்க்கு; உரை - கூறு.

தலைவி கூற்று

திருக்குறள் 1152 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது குறிப்பான் பிரிவுணர்ந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டிவரச் செல்ல இருப்பதை, அவனுடைய சில குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குச் சொல்லியது.

இன்கண் உடைத்(து)அவர் பார்வல் பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு.

தெளிவுரை

தலைவன் பார்வை தனி இன்பம் கொண்டதாய் இருக்கிறது; இணைவதும் அவனுடைய இயல்புக்கு மாறாக மிகுதியும் நெருக்கம் கொண்டதாய் இருக்கிறது. இந்த இணக்கம் அவன் பிரிவானோ என்ற அச்சத்தை ஊட்டுகிறது.

கருத்து

தலைவன் பிரிவனோ என்று தலைவி அஞ்சுகிறாள்.

விளக்கம்

தலைவன் வழக்கமாய் இருப்பதைவிட நெருக்கமாய் இருக்கிறான்; பார்வையே தனித்தன்மையுடன் இனியதாய் இருக்கிறது. இவை அவன் பிரிவதற்கான குறிப்புகள் எனத் தலைவி கருதுகிறாள்.

குறிப்பு

தலைவியைப் பிரிய இருக்கிறோம் என்னும் ஏக்கம், தலைவனிடம் வழக்கத்திற்கு மாறான செயல்களைத் தோற்றுவிக்கிறது.

சொற்பொருள்

1. அவன் பார்வல் - அவனுடைய பார்வை; இன்கண் உடைத்து - தனி இன்பம் கொண்டதாய் இருக்கிறது.

2. புணர்வு - (அவனுடைய இயல்புக்கு மாறான) நெருக்கம்.
1. பிரிவு அஞ்சும் - 'பிரிவனோ' என்று அஞ்சுகின்ற.
2. புன்கண் - துன்பத்தினை; உடைத்து - தருகிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1153 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது குறிப்பான் பிரிவுணர்ந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டிவரச் செல்ல இருப்பதை, அவனுடைய சில குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குச் சொல்லியது.

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவு(ஓ)ர் இடத்து(உ)ண்மை யான்.

தெளிவுரை

பிரிவுத் துன்பத்தை நன்கு அறிந்துள்ள தலைவனும் ஒரொரு வேளை பிரிந்து செல்ல நேரிடுவது உண்டு. ஆதலால், தலைவன் 'பிரியேன்' என்று சொல்வதை நம்புதற்கில்லை.

கருத்து

பிரிவு என்பது நடக்கக்கூடிய ஒன்று; ஆதலால் தலைவன், 'பிரியேன்' என்று சொல்லுவதை நம்புதற்கில்லை.

விளக்கம்

தலைவன் பிரிவனோ என்று அஞ்சிய தலைவியிடம் தோழி, 'அவன் பிரிய மாட்டான்' என்றாள். அது கேட்ட தலைவி, 'இப்போது அவன் பிரியாது இருக்கிறான்; ஆயினும், எப்போதும் பிரியான் என்று சொல்வதற்கில்லை' என்றாள்.

குறிப்பு

'பொருள் தேடி வருதல்' என்பதைக் காரணமாய்க் கொண்டு, தலைவன் பிரிய இருக்கிறான் என்பதைத் தலைவி உணர்கிறாள்.

சொற்பொருள்

1. அறிவுடையார் கண்ணும் - (பிரிவுத் துன்பத்தை) அறிந்துள்ள தலைவனிடமும்.
2. பிரிவு - பிரிந்து செல்வது; ஓர் இடத்து - ஒரொரு வேளை; உண்மை - உள்ளது. (இயல்பு.)
1. தேற்றம் - (பிரியேன் என்று தலைவன் சொல்லும் உறுதி மொழியைத்) தெளிதல், நம்புதல்; அரிது - முடியாது.

தலைவி கூற்று

திருக்குறள் 1154 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது குறிப்பான் பிரிவுணர்ந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டிவரச் செல்ல இருப்பதை, அவனுடைய சில குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குச் சொல்லியது.

அளித்(து)அஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியாற்(கு) உண்டோ தவறு.

தெளிவுரை

எனக்கு அருள் செய்து, 'உன்னை என்றும் பிரியேன்; அஞ்சாதே' என்று சொன்ன தலைவன் பிரிந்து சென்றான் என்றால், அவன் சொல்லை உண்மை என்று நம்பித் தெளிந்த என்னிடத்தில் தவறு உண்டா?

கருத்து

நான் தவறு அற்றவள்; சொன்ன சொல்லைக் காப்பாற்றாத தலைவனே குற்றமுடையவன்.

விளக்கம்

"தலைவன், என்னைக் கூடுமுன்னர், 'உன்னை என்றும் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என்று உறுதி கூறினான். இதனை நம்பி அவனை ஏற்றேன்; இன்று சொல் மாறி, அன்பு காட்டாது பிரிந்து சென்றான் என்றால், என்னிடம் உள்ள தவறு என்ன?" என்று தலைவி தோழியைக் கேட்கிறாள்.

குறிப்பு

'அவன் சொல்லைத் தெளிந்தேன்; அது தவறா? சொல்லை மீறும் தவறு நிகழாவாறு அவன் பயணத்தை நீதான் நிறுத்த வேண்டும்' என்று தோழிக்குத் தலைவி குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அளித்து - (எதிர்ப்பட்ட நாளில்) அருள் செய்து; அஞ்சல் என்றவர் - (உன்னை என்றும் பிரியேன்) அஞ்சாதே என்று கூறியவர்; நீப்பின் - பிரிந்து செல்வாரெனில்; தெளித்த சொல் - (அவருடைய) தெளிவான சொல்லை.
2. தேறியார்க்கு - உண்மையென்று நம்பிய என்மீது; தவறு உண்டா? - குற்றம் உண்டா?

தலைவி கூற்று

திருக்குறள் 1155 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது குறிப்பான் பிரிவுணர்ந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டிவரச் செல்ல இருப்பதை அவனுடைய சில குறிப்புகளால் அறிந்த தலைவி அதனைத் தோழிக்குச் சொல்லியது.

ஓம்பின் அமைந்தார் பிரி(வு)ஓம்பல் மற்(று)அவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

தெளிவுரை

என்னைக் காப்பதாயின் தலைவன் பிரிவைத் தடுத்து நிறுத்து. அவன் பிரிந்துசெல்வது உறுதியாயின், மீண்டும் என்னைக் கூடுதல் அரிது.

கருத்து

அவன் பிரிவதைத் தடுத்து நிறுத்து; அவன் பிரிந்தால் என் உயிர் பிரியும்.

விளக்கம்

'தலைவன் பிரிவானாயின், அவன் திரும்ப வந்து என்னைக் கூடுவது அரிது; என் உயிர் நீங்கிவிடும். ஆதலால், அவனைப் பிரியாமல் தடுத்து நிறுத்து' என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

உயிருக்குக் காப்பாய் இருக்க வேண்டியவனே, உயிரை அழிக்கலாமா?

சொற்பொருள்

1. ஓம்பின் - என்னைக் காப்பதாய் இருந்தால்; அமைந்தார் - என் வாழ்க்கைத்துணையாய் அமைந்த தலைவன்; பிரிவு - பிரிந்து செல்வதை; ஓம்பல் - தடுத்து நிறுத்து; அவர் - தலைவன்.
2. நீங்கின் - பிரிவானாயின்; புணர்வு அரிது - (அவன் திரும்ப வந்து) கூடுதல் அரிது.

தலைவி கூற்று

திருக்குறள் 1156 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழிக்குத் தெரிவித்தான். அதனைத் தோழி தலைவியிடம் சொல்ல, அதற்குத் தலைவி சொல்லியது.

பிரி(வு)உரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரி(து)அவர்
நல்குவர் என்னும் நசை.

தெளிவுரை

தலைவன், 'நான் சென்று வருவேன்' என்று நம்மிடமே சொல்லும் நெஞ்சழுத்தம் உடையவன் என்றால், அவன் திரும்ப வந்து அருள் செய்வான் என்னும் நம் விருப்பம் வீண்.

கருத்து

தலைவன், திரும்ப வந்து அருள் செய்வான் என்னும் ஆசை கைகூடாது.

விளக்கம்

தலைவன், தான் பிரிந்து செல்லவிருப்பதை நம்மிடமே சொல்லுகின்ற நெஞ்சழுத்தம் கொண்டவனாய் இருப்பதால், அவன் திரும்பவந்து அருள் செய்வான் என்னும் ஆசையை விட்டுவிட வேண்டும். (அதுவரை என் உயிர் நில்லாது.)

குறிப்பு

பிரிவு உரைக்கும் மன உறுதி உடையவரிடம், அருள் செய்யும் பற்று இராது.

சொற்பொருள்

1. அவர் - தலைவன்; பிரிவு உரைக்கும் - (நம்மிடமே தன்) பிரிவைச் சொல்லும்; வன்கண்ணர் - அருளில்லாதவன், நெஞ்சழுத்தம் உடையவன்; ஆயின் - என்றால்.

2. நல்குவர் - (திரும்ப வந்து) அருள் செய்வான்; என்னும் நசை - என்னும் விருப்பம்.
1. அரிது - கைகூடாது.

தலைவி கூற்று

திருக்குறள் 1157 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குத் தலமைகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழிக்குத் தெரிவித்தான். அதனைத் தோழி தலைவியிடம் சொல்ல, அதற்குத் தலைவி சொல்லியது.

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

தெளிவுரை

தலைவன் பிரிந்து சென்றமையை என் முன் கை மணிக்கட்டி லிருந்து கழன்று விழும் வளையல்களே ஊரெல்லாம் அறிவித்து விட்டன.

கருத்து

தலைவன் பிரிந்தமையைக் கழன்று விழுந்த தலைவியின் கைவளைகள் தெரிவிக்கின்றன.

விளக்கம்

“தலைவன் என்னை விட்டுப் பிரிதலை அவன் சொல்லாது, தாமே தெரிந்து என் கையிலுள்ள வளையல்கள் கழன்று விழுந்து ஊரெல்லாம் அறிவித்துவிட்டனவே! அவ்வாறிருக்க, அவன் பிரிவை அவன் அறிவிக்க அதனைக் கேட்டுவந்து நீ அறிவித்தல் வேண்டுமா?” என்று, தலைவி தோழியை நோக்கிக் கூறுகிறாள்.

குறிப்பு

'தலைவன் செலவைத் தடுத்து நிறுத்தாது அவன் சென்று விட்டான் என்பதைச் சொல்ல வந்து விட்டாயே' எனத் தோழியிடம் தலைவி வருத்தம் கொள்கிறாள்.

தலைவன் பிரிந்து விட்டான் என்பதை அறிந்த அளவிலேயே தலைவியின் உடல் மெலிதலால், முன்கையில் இறுகத் தழுவியிருந்த வளையல்கள் கழன்று விழுகின்றன.

சொற்பொருள்

1. துறைவன் - நெய்தல் நிலத் தலைவன்; பிரிந்தமை - (என்னைப்) பிரிந்து சென்றதை.
1-2.முன்கை இறை - முன் கை மணிக்கட்டிலிருந்து; இறவா நின்ற வளை - கழன்று விழும் வளையல்கள்.
1. தூற்றா கொல் - (ஊரெங்கும்) தெரிவித்து விட்டன.

தலைவி கூற்று

திருக்குறள் 1158 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழிக்குத் தெரிவித்தான். அதனைத் தோழி தலைவியிடம் சொல்ல, அதற்குத் தலைவி சொல்லியது.

இன்னா(து) இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னா(து) இனியார்ப் பிரிவு.

தெளிவுரை

(தம் குறிப்பறிந்து) அன்பு காட்டுபவர் இல்லாத ஊரில் வாழ்வது துன்பமுடையது; அதைவிடத் துன்பமுடையது, அன்புடைய தலைவனைப் பிரிந்திருத்தல்.

கருத்து

தலைவனைப் பிரிந்திருப்பது, துன்பம் எல்லாவற்றிலும் பெருந்துன்பம்.

விளக்கம்

தன்னிடம் அன்பு காட்டுபவர் இல்லாத ஊரில் ஒருவர் குடியிருப்பது மிகவும் துன்பமுடையது; அதைவிடத் துன்பம், தலைவி தன் தலைவனைப் பிரிந்திருப்பது. இவ்விரண்டு துன்பங்களையும் தான் அடைந்திருப்பதாய்த் தலைவி சொல்கிறாள்.

குறிப்பு

தலைவன் பிரிவதைத் தடுத்து நிறுத்தாது, பிரிவுக்கு உடன்பட்டு வந்திருக்கும் தோழி மீது கொண்ட வருத்தத்தால், 'இனன் இல் ஊரில்' தான் வாழ்வதாய்த் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. இனன் இல் ஊர் - தன் குறிப்பறிந்து அன்பு காட்டுபவர் இல்லாத ஊர்; வாழ்தல் - குடியிருப்பது; இன்னாது - துன்பமுடையது; அதனினும் - அதனைவிட.
2. இனியார்ப் பிரிவு - தலைவனைப் பிரிந்திருப்பது; இன்னாது - துன்பமுடையது.

தலைவி கூற்று

திருக்குறள் 1159 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'காமம் தீயே போன்று, தான் நின்ற இடத்தைச் சுடுமாகலான், நீ ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவை ஆற்றியிருக்க வேண்டும்' என்று சொன்ன தோழிக்கு, 'தீயினும் கொடுமையாய்ச் சுடும் காமநோயை எப்படி நான் ஆற்றியிருப்பேன்' என்று தலைவி சொல்லியது.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

தெளிவுரை

நெருப்பு தன்னைத் தொட்டவர்களை மட்டுமே சுடும்; தன்னைத் தொடாமல் பிரிந்திருப்பவரைச் சுடும் ஆற்றல், காமநோய்போல அந்நெருப்பிற்கு உண்டா? சொல்.

கருத்து

தீ, தொட்டால்தான் சுடும்; காமநோயோ, விலகி விட்டிருக்கும்போதுதான் சுடும்.

விளக்கம்

"தீயைத் தொடும்போது துன்பம் தரும்; விலகியிருப்பின் துன்பமில்லை. காமத் தீயோ விலகியிருக்கும்போது துன்பம் தரும்; தொடும்போது இன்பம் தரும். தீயினும் கொடியதான பிரிவினை நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்" என்று தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

நெருப்பும் காமமும் வருத்தும் தன்மையன. நெருப்பு, தொட்டால் உடலை வருத்தும்; காமமோ, விட்டால் உயிரை வருத்தும். காமம் ஒரு புதுமையான தீ.

சொற்பொருள்

2. தீ - நெருப்பு.
1. தொடின் - தொட்டால்; சுடின் அல்லது - சுடுமே அல்லாது; காமநோய் போல - காமநோயைப் போல.
2. விடிற் சுடல் ஆற்றுமோ? - தன்னை விட்டு அகன்றாரைச் சுடும் ஆற்றலுள்ளதா? (ஆற்றல் இல்லாதது.)

தலைவி கூற்று

திருக்குறள் 1160 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'பிரிவாற்றியிருக்கும் தலைமகளிரும் பலருளர்; நீ அது செய்கின்றிலை' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவை ஆற்றியிருக்கும் தலைவியர் பலர் உள்ளனர். நீ அவ்வாறு ஆற்றியிருக்கவில்லையே' என்று சொன்ன தோழியிடம் தலைவி சொல்லியது.

அரி(து)ஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரி(வு)ஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.

தெளிவுரை

பிரிவுக்கு உடன்பட்டு, பிரிதலால் உண்டாகும் துன்பத்தையும் நீக்கி, பிரிந்த பின்னரும் பொறுத்திருந்து, அதன் பின்னும் உயிருடன் வாழும் மகளிர், உலகில் பலர் இருக்கலாம். (என்னால் அது முடியாது.)

கருத்து

தலைவனைப் பிரிந்து ஆற்றியிருப்பவர் பிறர் இருக்கலாம்; என்னால் முடியாது.

விளக்கம்

'பிரிவுக்கு உடன்படல் அரிது; பிரிவினால் ஏற்படும் துன்பத்தைப் போக்குதலும் இயலாது; பிரிந்த பின்னர், அப் பிரிவைப் பொறுத்திருத்தலும் முடியாது. இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு உயிர் வாழ்வார் பலர் இருக்கலாம். ஆனால் என்னால் முடியாது' என்கிறாள் தலைவி.

குறிப்பு

'தலைவனைப் பிரிந்து வாழ்வார் ஒருவரும் இரார்' என்பதை எள்ளல் குறிப்பாய், 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்று தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அரிது ஆற்றி - (தலைவன் பிரிவை அறிவித்தபோது) அதற்கு உடன்பட்டு; அல்லல் நோய் நீக்கி - (பிரியும்போது உண்டாகும்) துன்ப நோயையும் நீக்கி; பிரிவு ஆற்றி - (பிரிந்த பின்னரும்) அப்பிரிவினையும் பொறுத்து.
2. பின் இருந்து - அதன் பின்னும் உயிரோடு வாழ்பவர்; பலர் - (உலகில்) பலர் உள்ளனர்.
   (பலர் பொறுத்திருக்கலாம்; என்னால் முடியாது.)

அதிகாரம் 117 படர் மெலிந்து இரங்கல்

தலைவி கூற்று

திருக்குறள் 1161 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'காமநோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்கு ஏலாது' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தி உடல் மெலிந்து வாடுதல் உன் நாணுடைமைக்கு ஏற்றதன்று என்று சொல்லிய தோழிக்குத் தலைவி கூறியது.

மறைப்பேன்மன் யான்;இஃதோ நோயை இறைப்பவர்க்(கு)
ஊற்றுநீர் போல மிகும்.

தெளிவுரை

என் துன்பத்தைப் பிறர் அறியாமல் மறைக்கத்தான் செய்கிறேன். அதுவோ, இறைக்க இறைக்க ஊறும் ஊற்று நீர்போலப் பெருகிக் கொண்டே இருக்கிறது.

கருத்து

இறைக்க இறைக்க ஊறும் ஊற்றுப்போலப் பெருகிக் கொண்டே இருக்கிறது, என் காதல் நோய்.

விளக்கம்

எவ்வளவுக்கெவ்வளவு இறைக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு ஊற்றுநீர் பெருகிக்கொண்டே இருக்கும். அதுபோலக் காமநோயை உள்ளத்தே அடக்க அடக்க அது மிகவும் வெளிப் பட்டுக் கொண்டேயிருக்கும்.

குறிப்பு

பிரிவுத் துயர் இருக்கும்வரை உடல் மெலிவு இருக்கத்தான் செய்யும்.

சொற்பொருள்

1. யான் - நான்; நோயை - (என்) துன்பத்தை; மறைப்பேன் - (பிறர் அறிதலை நாணி) மறைக்கின்றேன். (அப்படியிருக்கவும்) இஃதோ - அதுவோ; இறைப்போர்க்கு - நீரை இறைப்பவர்க்கு.
2. ஊற்று நீர்போல மிகும் - (இறைக்க இறைக்க ஊறும்) ஊற்று நீர்போல மிகுகின்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1162 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'அண்டையார் அறிய மறைத்தல், ஆண்டையார் அறியத் தூது விடல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவன் பிரிவினால் உண்டான உன் காமநோயைப் பிறர் அறியாமல் மறைக்க வேண்டும்; அல்லது தலைவனுக்குத் தூது அனுப்பி அவனை உடனே வரவழைத்து உன் நோயைப் போக்க வேண்டும்; இந்த இரண்டனுள் ஒன்று செய்ய வேண்டும்" என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கரத்தலும் ஆற்றேன்,இந் நோயை;நோய் செய்தார்க்(கு)
உரைத்தலும் நாணுத் தரும்.

தெளிவுரை

(தலைவன் பிரிவினால் உண்டான) இந்நோயைப் பிறர் அறியாமல் மறைக்கவும் என்னால் முடியவில்லை. தலைவனுக்குத் தூது அனுப்பித் தெரிவிக்கவும் எனக்கு வெட்கமாயிருக்கின்றது. (என் செய்வேன்?)

கருத்து

காமநோயை மறைக்கவும் முடியவில்லை; நோய் செய்த தலைவனிடம் தூது அனுப்பிக் கூறவும் வெட்கமாயிருக்கிறது.

விளக்கம்

தலைவன் பிரிவினால் துன்பப்படும் தலைவி, அந்நோய்த் துன் பத்தைத் தன்னால் மறைக்கவும் முடியவில்லை; தலைவனுக்குத் தூதுவழி அறிவித்து வரவழைக்கலாம் என்று மனம் விரும்பி னாலும் நாணம் தடுக்கிறது என்று தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

பிரிந்தது அண்மைக் காலமேயாதலாலும், இல்லற வாழ்க்கைக்கு இன்றி யமையாத பொருளீட்டுதலைத் தடுத்தல் அறிவுடைமையாகாமையாலும், 'உரைத்தல் நாணுத் தரும்' என்கிறாள்.

சொற்பொருள்

1. இந் நோயை - இக் காமநோயை; கரத்துலும் ஆற்றேன் - (அருகிருப்போர் அறியாமல்) மறைக்கவும் முடியவில்லை; நோய் செய்தார்க்கு - இந்நோயைத் தந்த தலைவனுக்கு.
2. உரைத்தலும் - (தூதுவழி) சொல்லவும்; நாணுத் தரும் - வெட்க மாயிருக்கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1163 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'அன்டையார் அறிய மறைத்தல், ஆண்டையார் அறியத் தூது விடல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவன் பிரிவினால் உண்டான உன் காமநோயைப் பிறர் அறியாமல் மறைக்க வேண்டும்; அல்லது தலைவனுக்குத் தூது அனுப்பி அவனை உடனே வரவழைத்து உன் நோயைப் போக்க வேண்டும்; இந்த இரண்டனுள் ஒன்று செய்ய வேண்டும்" என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து.

தெளிவுரை

தலைவன் பிரிவைத் தாங்க முடியாத என் உடம்பிலே, என் உயிர் காவடித்தண்டாயிருக்க அதன் ஒருமுனையில் காம நோயும், மறுமுனையில் நாணமும் தொங்குகின்றன.

கருத்து

காமமும் நாணமும் ஒன்றற்கொன்று சமமாய் வருத்துகின்றன.

விளக்கம்

உயிர், காவடித்தண்டாயிருக்க அதன் ஒருபுறம் காமமும் மறுபுறம் நாணமும் தொங்குகின்றன. இவை இரண்டும் சமமா யிருப்பதால் உயிர் நிலைத்திருக்கிறது. ஒன்று மிகுமானாலும் உயிர் ஒரு நிலையில் நிற்காது.

குறிப்பு

நோயை ஆற்றியிருக்கவும் முடியவில்லை; தலைவனுக்குத் தூதனுப்ப நாணம் தடுக்கிறது. இரண்டு துன்பங்களும் சம அளவில் என்னை வாட்டு கின்றன.

சொற்பொருள்

2. நோனா - (பிரிவினைத்) தாங்க முடியாத; உடம்பின் அகத்து - என் உடம்பினிடத்தில்.
1. உயிர் காவா - உயிரே காவடித்தண்டாக; காமமும் நாணும் - காமம் ஒரு பக்கமும் நாணம் ஒரு பக்கமும்; தூங்கும் - தொங்குகின்றன.

தலைவி கூற்று

திருக்குறள் 1164 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'தலைமகளிர் காமக் கடல்படார்; படினும் அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பர்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உலகில் தலைவியர் பிரிவுத் துயரில் ஆழ்ந்து போகார்; அத்துயரைத் தக்க வகையில் தாங்கியிருப்பர்; அவ்வாறிருக்க நீ வருந்தியிருப்பதேன்' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

காமக் கடல்மன்னும் உண்டே; அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

தெளிவுரை

காமக் கடல் மட்டுமே என்னிடம் நிலைத்து உள்ளது. ஆனால் அதைப் பாதுகாப்பாய் நீந்திக் கடக்கும் தெப்பம் என்னிடம் இல்லை.

கருத்து

காமநோயைப் பொறுத்திருக்க வழியேதும் தெரியவில்லை.

விளக்கம்

'காதல் ஒரு கடல். அதைப் பாதுகாப்பாய்க் கடக்கத் தெப்பம் வேண்டும். தலைவன் என்னும் அத்தெப்பம் இப்போது இங்கே இல்லையே! நான் எவ்வாறு கடக்க முடியும்?' என்று, தலைவி வருந்துகிறாள்.

குறிப்பு

'தூதனுப்பித் தலைவனை வரவழைத்து என் காமத்தைத் தீர்க்க வழி காணாது, அறிவுரை கூற வந்துவிட்டாய்' என்று, தோழிக்குத் தலைவி குறிப்பாய்ச் சொல்கிறாள்.

சொற்பொருள்

1. காமக் கடல் உண்டே - காமம் என்னும் கடல் நிலைத்து இருக்கிறது; அது நீந்தும் - (ஆனால்) அதனை நீந்திக் கடப்பதற்கு.
2. ஏமப் புணை இல் - பாதுகாப்பான தெப்பம் (படகு) எதுவும் இல்லையே!

தலைவி கூற்று

திருக்குறள் 1165 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

தூது விடாமை நோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

'பிரிந்திருக்கும் தலைவனை ஆள் அனுப்பி அழைத்து வரவில்லையே' என்று, தோழியிடம் தலைவி வருத்தம் கொண்டது.

துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

தெளிவுரை

இன்பம் செய்தற்குரிய நண்பர்களிடத்திலேயே துன்பம் செய்பவர், துன்பம் செய்தற்குரிய பகைவரிடத்து என்ன செய்வரோ?

கருத்து

நட்பாய் இருக்கும்போதே துன்பம் செய்பவர், பகைவரானால் எப்படிப் பட்டவராய் இருப்பாரோ?

விளக்கம்

'என்னுடன் நட்பாயிருந்து என் மனநிலையை நன்கு அறிந்துள்ள தோழி, தலைவன் பிரிவால் நான் எவ்வளவு துன்பப்படுவேன் என்பது தெரிந்தும் தூதனுப்பி அவனை அழைத்துவர ஏதும் செய்யாமலிருக்கிறாள். இவள் எனக்குப் பகையாய் இருந்தால் என்ன செய்வளோ?'

குறிப்பு

'தன் வருத்தம் தீரத் தோழி ஏதும் செய்யவில்லை' என்பதைத் தலைவி தோழிக்குக் குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

2. நட்பினுள் - நட்புள்ள போதே.
1. துயர் வரவு - துன்பம் வரும்படி.
2. ஆற்றுபவர் - செய்பவர்.
1. துப்பின் - பகையுள்ளபோது; எவன்ஆவர் - எப்படிப்பட்டவராய் இருப்பரோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1166 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'காமத்தால் இன்பமுற்றார்க்கு அதனினாய துன்பமும் வரும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் சேர்ந்திருக்கும்போது காமத்தால் இன்பமுற்றிருப்ப வர்க்கு, தலைவன் பிரிவினால் அக்காமம் துன்பம் தரும் என்பதை அறிதல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

இன்பம் கடல்மற்றுக் காமம்; அஃ(து)அடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

தெளிவுரை

தலைவனுடன் கூடியிருக்கும்போது காதல் தரும் இன்பம் கடல் போன்றது; ஆனால் அதுவே தலைவன் பிரிவினால் தரும் துன்பம் கடலைவிடப் பெரியது.

கருத்து

கூடியிருக்கும் இன்பம் கடல் போன்றது; பிரிவுத் துன்பமோ கடலினும் பெரிது.

விளக்கம்

புணர்ச்சியில் இன்பமும் பிரிவால் துன்பமும் தருகிறது, காதல். புணர்ச்சி தரும் இன்பத்தின் அளவைவிடப் பிரிவு தரும் துன்பத்தின் அளவு பெரிது.

குறிப்பு

கூடல் தரும் இன்பத்தினும், பிரிவு தரும் துன்பம் பெரிது.

சொற்பொருள்

1. காமம் இன்பம் - காதல் (தலைவனுடன் சேர்ந்திருக்கும்) இன்பம்; கடல் - கடல் போன்றது; அஃது - அக்காமம்; அடுங்கால் - (தலைவன் பிரிவினால்) வருத்தும்போது.
2. துன்பம் - (அதனால் நேரிடும்) துன்பம்; அதனில் - கடலைவிட; பெரிது - பெரியது.

தலைவி கூற்று

திருக்குறள் 1167 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'காமக்கடலை நிறை புணையாக நீந்தல் கூடும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'காமமாகிய கடலை நிறை என்னும் தோணியால் நீந்திக் கடக்க முடியும்' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

தெளிவுரை

காதலின்பம் என்னும் பெரிய கடலைக் கற்பு என்னும் தோணியால் நான் தனியே நீந்தி அதன் கரையைக் காண இயலாமல் கலங்குகிறேன். யாதொரு துணையுமின்றி நள்ளிரவிலும் நான் மட்டுமே விழித்து உள்ளேன்.

கருத்து

காமக் கடலைத் தனியே நீந்தி எல்லை காண முடியாது.

விளக்கம்

தோழி! காமக் கடலை நீந்தி அதன் எல்லை காண முடியும் என்கிறாய். காதலன் பிரிந்துள்ளான். அவன் துணையில்லாத நான் மட்டும் இரவெல்லாம் விழித்து நீந்தினேன்; ஆயினும் எல்லை காண முடியவில்லை. விழித்திருக்கும் நான் ஒருத்தி மட்டுமே அவ்விரவுக்குத் துணையாய் இருக்கிறேன். (என்னைத் தவிர அனைவரும் துயின்றனர்.)

குறிப்பு

'தோழி! நீயும் எனக்குத் துணையாயில்லை' என்பதைத் தலைவி, 'யாமத்தும் நானே உளேன்' எனக் குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. காமக் கடும்புனல் - காமமாகிய கடல்; நீந்தி - (காதலன் துணையின்றித்) தனியே நீந்தி; கரை காணேண் - எல்லை காணேன்.
2. யாமத்தும் - நள்ளிரவிலும்; நானே உளேன் - (இரவுக்குத் துணையாய்) நான் ஒருத்தி மட்டுமே இருக்கிறேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1168 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

இரவின் கொடுமை சொல்லி வருந்தியது.

கூற்று விளக்கம்

இரவெல்லாம் உறங்காது தான் வருந்தியிருந்ததைத் தலைவி தோழிக்குக் கூறியது.

மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்(து),இரா
என்அல்ல(து) இல்லை துணை.

தெளிவுரை

உலகிலுள்ள உயிர்களை எல்லாம் உறங்கச் செய்து, என்னைத் தவிர வேறு துணையில்லாமல் இருக்கின்ற இரவு, மிகவும் இரங்கத்தக்கது.

கருத்து

(காதலன் பிரிவால்) இரவை நான் ஒருத்தி மட்டுமே துயிலாது கழிக்கிறேன்.

விளக்கம்

'இரவுப் பொழுதில் எல்லா உயிர்களும் உறங்கி ஓய்வு பெறு கின்றன. நான் ஒருத்தி மட்டுமே காதலன் பிரிவை நினைந்து தூங்காது வருந்திக் கலங்குகிறேன்' என்று தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

இரவு எல்லா உயிர்களுக்கும் அருள் செய்கிறது; தலைவி தூங்காது துணையிருந்து அவ்விரவுக்கு அருள் செய்கிறாள்.

சொற்பொருள்

1. இரா அளித்து - இரவு இரக்கத்திற்குரியது; மன்உயிர் எல்லாம் - உலகிலுள்ள உயிர்களையெல்லாம்; துயிற்றி - உறங்கச் செய்து.
2. என் அல்லது இல்லை துணை - என்னைத் தவிர வேறு துணை யில்லாமல் இருக்கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1169 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

இரவின் கொடுமை சொல்லி வருந்தியது.

கூற்று விளக்கம்

இரவெல்லாம் உறங்காது தான் வருந்தியிருந்ததைத் தலைவி தோழிக்குக் கூறியது.

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.

தெளிவுரை

என் காதலன் என்னுடன் இல்லா நாள்களில் இரவு நீண்ட நேரமாய்த் தோன்றிக் கொடுமை செய்கிறது. அதனால் பிரிவினால் என் காதலன் செய்யும் கொடுமையைவிட, இரவு கூடுதல் கொடுமை செய்கிறது.

கருத்து

காதலனைப் பிரிந்துள்ள காதலிக்கு இரவுப் பொழுது நீண்டிருப்பதாய்த் தோன்றுகிறது.

விளக்கம்

ஒரு நாளில் இரவு எவ்வளவு நேரமோ, குறித்த அந்த அளவே இருக்கும்; நீளவும் நீளாது; குறையவும் குறையாது. ஆனால் காதலிக்குக் காதலனோடு கூடியிருக்கும்போது இரவு குறியதாயும் (விரைவில் விடிந்துவிட்டதாயும்), பிரிந்திருக்கும் போது அது நெடியதாயும் (விடிய நீண்ட நேரம் ஆனதாயும்) தோன்றுகிறது.

குறிப்பு

ஒரு பொருள் உள்ளது உள்ளபடியே இருக்க, அதனை அடைந்தவன் தன்மைக்கேற்ப அது கூடியோ குறைந்தோ தோன்றும் என்பது பொது உண்மை.

சொற்பொருள்

1. இந்நாள் - (தலைவனைப் பிரிந்து துன்புறுகின்ற) இந்நாள்களில்.
2. நெடிய கழியும் இரா - இரவுகள் நெடுநேரம் சென்று விடிவதாய்த் தோன்றுகின்றன.
1. கொடியார் - (பிரிந்த) கொடியவனின் (தலைவனின்); கொடுமையின் தாம் கொடிய - கொடுமையைப் பார்க்கிலும் இவ்விரவுகள் கொடியன.

தலைவி கூற்று

திருக்குறள் 1170 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் பேரழகு இழக்கின்றனவாகலின் அழற்பாலையல்லை' என்றாட்குச் சொல்லியது. (அழற்பாலையல்லை - அழக் கூடாது.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தி அழுத தலைவியை, 'அழாதே' என்று தோழி கூறியபோது, தலைவி சொல்லியது.

உள்ளம்போன்(று) உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.

தெளிவுரை

என் மனத்தைப்போல என் கண்களும் காதலர் உள்ள இடத்திற்கு விரைவில் செல்ல முடியுமாயின் அவை கண்ணீர் வெள்ளத்தில் நீந்திக் கொண்டிரா.

கருத்து

என் மனம்போலக் கண்களும், தலைவன் உள்ள இடத்திற்குத் தாவிச் செல்லுமாயின், அவை வெள்ளம்போல் நீர் வடிக்கா.

விளக்கம்

தலைவன் இருக்குமிடத்திற்கு என் உள்ளம், தான் நினைத்த அளவிலேயே சென்றுவிடுவதுபோலக் கண்களும் சென்றடையு

மாயின், அவை இப்படிக் கண்ணீர் வெள்ளத்தில் நீந்த வேண்டி யதில்லை.

குறிப்பு

'வேறு இடத்தில் இருக்கும் தலைவனை, மனம் நினைத்த அளவிலேயே சென்றடைகிறது; ஆனால் கண்களால் காணமுடியாமல் போகவே, அவை வருந்தி அழுகின்றன' எனத் தன் கண்களை நினைத்துத் தலைவி வருந்து கிறாள்.

சொற்பொருள்

1. உள்ளம் போன்று - என் மனம்போல; உள்வழி - காதலர் உள்ள இடத்திற்கு; செல்கிற்பின் - செல்ல முடியுமானால்.

1-2. பின் என் கண் - பின் என் கண்கள்; வெள்ள நீர் நீந்தல - கண்ணீர் வெள்ளத்தில் நீந்த வேண்டியதில்லை.

அதிகாரம் 118 கண்விதுப்பு அழிதல்

தலைவி கூற்று

திருக்குறள் 1171 — **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

கண்தாம் கலுழ்வ(து) எவன்கொலோ? தண்டாநோய்
தாம்காட்ட யாம் கண்டது.

தெளிவுரை

கண்கள் அவரை அன்று எனக்குக் காட்டியதால்தானே இன்று இத்தீரா நோயை அனுபவிக்கிறேன். எனக்கு இந்நோய்

உண்டாகக் காரணமாயிருந்த கண்கள், இப்பொழுது அழுவது ஏனோ?

கருத்து

நோய் உண்டாகக் காரணமாயிருந்த கண்கள் அழுவது ஏன்?

விளக்கம்

கண்கள் அவரைக் கண்டதால்தான் காதல் தோன்றியது. திருமணமும் நடைபெற்றது. இன்று அவர் பிரிந்திருக்கிறார்; நான் பிரிவைப் பொறுக்க முடியாது நோய் உற்றுள்ளேன். தாம் கண்டதுதான் இந்நோய்க்குக் காரணம் என்றுணராது கண்கள் அழுவது ஏன்?

குறிப்பு

'யாம் கண்டது' என்பது இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவி தலைவனைக் கண்டதைக் குறிக்கின்றது.

சொற்பொருள்

1. தண்டா நோய் - தீராத நோய்.
2. தாம் காட்ட - கண்கள் காட்ட; யாம் கண்டது - நான் கண்டதால் (உண்டானது).
1. கண் - கண்கள்; தாம் கலுழ்வது எவன் கொல்? - தாம் அழுவது ஏனோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1172 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்(து)உணராப்
பைதல் உழப்ப(து) எவன்?

தெளிவுரை

பின் விளைவு எதையும் ஆராய்ந்து அறியாமல் அன்று தலைவனைக் காதலோடு நோக்கிய மை தீட்டப் பெற்ற என் கண்கள், இன்று இத்துன்பம் தம்மால்தான் வந்தது எனச் சிந்தித்து உணராமல் வருந்தித் துன்பப்படுவது எதற்காக?

கருத்து

பின் விளைவைச் சிந்திக்காமல் தலைவனைப் பார்த்த, மை தீட்டப் பெற்ற என் கண்கள், தமது தவற்றை உணர்ந்து கொள்ளாது, இப்பொழுது வருந்துவது ஏனோ?

விளக்கம்

அன்று தலைவனைக் காணுமுன் அவரைக் காணலாமா வேண்டாமா என்று ஆராய்ந்திருக்க வேண்டும். அது செய்யாது அன்று அவரைக் கண்டு, இன்று அவரைக் காண இயலாது வருந்துகின்றன. அதற்கு யார் பொறுப்பு?

குறிப்பு

முன்பு அவர் நல்லவர் என்று அவரை ஏற்குமாறு பரிந்துரைத்த கண்கள், இப்போது அழுவது எதற்காக?

சொற்பொருள்

1. தெரிந்து உணரா - பின் விளைவை ஆராய்ந்து அறியாமல்; நோக்கிய - (அன்று தலைவனை) நோக்கிய; உண்கண் - மை தீட்டப் பெற்ற என் கண்கள்; பரிந்து - (இந்நோய்) நம்மால்தானே வந்தது என்று; உணரா - சிந்தித்து உணராவாய்.
2. பைதல் - துன்பம்; உழப்பது - வருந்துவது; எவன்? - எதற்காக?

தலைவி கூற்று

திருக்குறள் 1173 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற அவளுக்குத் தலைவி கூறியது.

கதும்எனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க(து) உடைத்து.

தெளிவுரை

இக்கண்கள் அன்று ஒன்றும் யோசியாமல் விரைந்து சென்று தலைவனை நோக்கின. இன்று அவை தாமே அழுகின்றன. இச் செய்கை நகைப்புடையதாய் இருக்கிறது.

கருத்து

அன்று விரைந்து சென்று தலைவனை நோக்கிய கண்கள், இன்று அழுவது நகைப்புக்குரியதாய் இருக்கிறது.

விளக்கம்

என்னையும் கேளாது அன்று தலைவனை இந்தக் கண்கள் விரைந்து சென்று கண்டு இன்பமடைந்தன; ஆனால், அவர் பிரிந் தமையால் இன்று காணமுடியாமல் அவை தாமே அழுகின்றன. மகிழ்வதும் அவை; அழுவதும் அவையே! இது நகைப்புக் குரியதாய் உள்ளது.

குறிப்பு

தாம் செய்த தவற்றுக்குத் தாமே அழுவது நகைத்தற்குரியது.

சொற்பொருள்

1. தாம் - கண்கள்; கதும் என - (தலைவனை) விரைந்து சென்று (நோக்கின); தாமே - அக்கண்கள்; கலுழும் - அழுகின்றன.
2. இது - கண்களின் இச்செய்கை; நக - நகைக்கும்; தக்கது உடைத்து - தன்மையதாய் உள்ளது.

தலைவி கூற்று

திருக்குறள் 1174 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி அழுது அழுது அவள் கண்கள் அழகு இழந்தன. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா
உய்(வு)இல்நோய் என்கண் நிறுத்து.

தெளிவுரை

மை தீட்டிய என் கண்கள் நான் உயிர் பிழைக்க முடியாதவாறு எனக்குத் தீராத காதல் நோயை உண்டாக்கிவிட்டுத் தாமும் அழ முடியாமல் நீர்வற்றிப் போயின.

கருத்து

தீராத நோயை எனக்குத் தந்த கண்கள், அழுது அழுது இனி அழ முடியாதவாறு நீர் வற்றிப் போயின.

விளக்கம்

தலைவனைக் காண்பித்து இன்பமூட்டி அவர் பிரிவால் எனக்குத் தீராத நோயைத் தந்துள்ள கண்கள், இப்போது

அவரைக் காண முடியாது அழுது அழுது இனி அழ முடியாமல் நீர்வற்றி நிலைகுலைந்துள்ளன.

குறிப்பு

இன்ப வாழ்வை நான் இழந்தேன்; விழிநீர் பெருக்குதலைக் கண்கள் இழந்தன. என்னை நோய்வயப்படச் செய்த கண்களுக்கு, இது தக்க தண்டனையே.

சொற்பொருள்

1. **உண்கண்** - மை தீட்டப் பெற்ற கண்கள்; **உயல் ஆற்றா** - நான் பிழைக்க முடியாதபடி.
2. **உய்வு இல் நோய்** - தீராத காதல் நோய்; **என்கண்** - என்னிடத்தில்; **நிறுத்து** - உண்டாக்கிவிட்டு.
1. **பெயல் ஆற்றா** - (தாமும்) அழ முடியாமல்; **நீர் உலந்த** - கண்ணீர் வற்றிவிட்டன.

தலைவி கூற்று

திருக்குறள் 1175 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.

தெளிவுரை

கடலும் ஒப்பில்லை என்று சொல்ல முடியா அளவு ஆழமான பிரிவுத் துன்பத்தை எனக்கு உண்டாக்கிய என் கண்கள், தூக்கமில்லாமல் துன்பப்படுகின்றன.

கருத்து

எனக்குத் துன்பம் ஏற்படுத்திய கண்கள், இப்போது தாமே துன்பப்படு கின்றன.

விளக்கம்

தலைவனைக் காணாமல் என்னைப் பிரிவு நோய் வாட்டு கிறது. அவரைக் கண்டால் என் நோய் தீரும். கண்கள் அவரைக் காட்டுமானால், நான்தான் இன்பமடையப் போகிறேன். அதனால் கண்களுக்கு என்ன பயன்? அவ்வாறிருக்க இந்தக் கண்கள் ஏன் வருந்த வேண்டும்?

குறிப்பு

பிறரைத் துன்புறுத்துவர் தாமே துன்புறுவர்.

சொற்பொருள்

1. கடல் ஆற்றா - கடலும் ஒப்பில்லை என்று சொல்லும் (அளவுக்கு ஆழமான).
2. காமநோய் - பிரிவுத் துன்பத்தை; செய்த என் கண் - உண்டாக்கிய என் கண்கள்.
1. படல் ஆற்றா - தூக்கமில்லாது; பைதல் உழக்கும் - துன்பப்படுகின்றன.

தலைவி கூற்று

திருக்குறள் 1176 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி, அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

ஓஒ இனிதே எமக்(கு)இந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

தெளிவுரை

எனக்கு இந்நோயை உண்டாக்கிய கண்கள் தாமும் தூங்காத துன்பத்துள் அகப்பட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியே.

கருத்து

எனக்குத் துன்பம் உண்டாக்கிய கண்கள், தாம் துன்பப்படுவது காண எனக்கு மிக்க மகிழ்ச்சி.

விளக்கம்

எனக்கு இந்நோயைக் கொடுத்த கண்கள், இப்போது தாமே துன்பம் அனுபவிக்கின்றன. இது எனக்கு மகிழ்ச்சியே.

குறிப்பு

பிறர்க்கு இன்னா செய்பவர்க்குத் தமக்கு இன்னா தானே வரும் என்பது இயற்கை.

சொற்பொருள்

1. எமக்கு - எனக்கு; இந்நோய் - இத்துன்பத்தை; செய்த கண் - உண்டாக்கிய கண்கள்.
2. தாஅம் இதற்பட்டது - தாமும் தாங்காத துன்பத்துள் அகப்பட்டது.
1. ஓஒ இனிதே - மிகவும் இனிதே (மகிழ்ச்சியே!)

தலைவி கூற்று

திருக்குறள் 1177 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நின் கண்கள் அழுதழுது அழகிழந்தன; இனித் துன்பத்தை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான். அப்பிரிவைப் பொறுக்க முடியாத தலைவி, அழுது அழுது அவள் கண்கள் அழகு நீங்கின. தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூற, அவளுக்குத் தலைவி கூறியது.

உழந்(து)உழந்து உள்நீர் அறுக விழைந்(து)இழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்!

தெளிவுரை

விரும்பி மனம் உருகி அன்று தலைவனைக் கண்ட கண்கள், இன்று வருந்தி வருந்தித் தம்மிடம் உள்ள நீர் அற்றுப் போகட்டும்.

கருத்து

கண்கள் நீரற்றுப் போகும்வரை அழட்டும்.

விளக்கம்

கண்களில் ஈரம் இல்லையானால் அவை உருவங்களைக் காண முடியா. என்னைத் தலைவருக்குக் காட்டாக் கண்கள், தாமும் காண முடியாதவாறு நீரற்றுப் போகட்டும்.

குறிப்பு

தனக்குத் துன்பம் இழைத்தவர் அத்துன்பத்தை அவரும் அடைய வேண்டும் என நினைப்பது இயல்பே!

சொற்பொருள்

1. விழைந்து இழைந்து - விரும்பி மனம் உருகி.
2. அவர் - தலைவனை; கண்ட கண் - (அன்று) கண்ட கண்கள்.
1. உழந்து உழந்து - (இன்று) வருந்தி வருந்தி; உள்நீர் - தம்மிடமுள்ள நீர்; அறுக - அற்றுப் போகட்டும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1178 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'காதலர் பிரிந்து போயினார் அல்லர்; அவர் ஈண்டுளர்; அவரைக் காணுமளவும் நீ ஆற்றியிரு' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

காதலர் பொருளீட்டப் பிரிந்து சென்றுள்ளதால் தலைவி வருந்தி யிருந்தாள். அவளிடம், 'தலைவர் பிரிந்துள்ளார் என்று எண்ணாதே; மிக அண்மையிலேதான் அவர் உள்ளார்; கண்கள் அவரைக் காணும்வரை நீ பொறுத்திருக்க வேண்டும்' என்று கூறிய தோழிக்குத் தலைவி சொல்லியது.

பேணாது பெட்டார் உளர்மன்னோ, மற்(று)அவர்க்
காணாது அமை(வு)இல கண்.

தெளிவுரை

உள்ளத்தில் விருப்பமின்றிச் சொல்லால் மட்டும் அன்பு காட்டிய தலைவர் பிரிந்திருக்கிறார்; கண்கள் அவரைக் காணவில்லையே எனப் பொறுமை இழந்து வருந்துகின்றன.

கருத்து

தலைவனைக் காணாமல் கண்கள் அமைதியின்றி இருக்கின்றன.

விளக்கம்

என்னைப் பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து தலைவன் தவறிவிட்டார். 'என்றும் பிரியேன்' என்று சொன்னவர், சொல்லாலும் பிழைத்து விட்டார். அவர் இப்போது இங்கு இல்லை; அவரை நேரில் காண முடியாக் கண்கள் பொறுமை இழந்துள்ளன.

குறிப்பு

அன்பில்லாது சென்றவரிடம் கண்கள், அன்பு காட்டுவது ஏனோ?

சொற்பொருள்

1. பேணாது பெட்டார் - உள்ளத்தில் விருப்பமின்றிச் சொல்லால் மட்டும் அன்பு காட்டிய தலைவர்; உளர் - பிரிந்திருக்கிறார்.

1-2.மற்று அவர்க் காணாது - அவரைக் காணாமல்.

2. கண் அமைவில - கண்கள் அமைதியற்றுள்ளன.

தலைவி கூற்று

திருக்குறள் 1179 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நீயும் ஆற்றி நின் கண்களும் துயில்வனவாதல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவர் பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்தார். பிரிவுத் துன்பத்தை ஆற்றாது தலைவி வருந்தித் துயிலாதிருந்தாள். அவள் ஆற்றியிருக்க வேண்டுமென்றும், அவள் கண்கள் உறங்க வேண்டும் என்றும் கூறிய தோழிக்குத் தலைவி கூறியது.

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆர்அஞர் உற்றன கண்.

தெளிவுரை

தலைவர் வராவிட்டாலும் என் கண்கள் உறங்குவதில்லை; வந்து விட்டாலும் அவை உறங்குவதில்லை. இவ்விரு வகைகளிலும் கண்கள் பெருந்துன்பத்தையே அடைகின்றன.

கருத்து

என் கண்கள் ஒருபோதும் தூங்கும் நிலையில் இல்லை.

விளக்கம்

தலைவன் வராதபோது என் கண்கள் அவர் எப்போது வருவாரோ என விழித்தவண்ணம் அவரை நோக்கியிருப்பதால்

உறங்குவதில்லை. அவர் வந்த பிறகும் பிரிந்து விடுவாரோ என்ற அச்சத்தால் அவரைக் கண்காணித்திருக்க உறங்குவதில்லை. ஆக, இரு வகைகளிலும் கண்கள் துயிலாது துன்பமே அடைகின்றன.

குறிப்பு

காமம், உறங்குதற்கு இடந்தராத ஒரு கொடிய நோய்.

சொற்பொருள்

1. வாராக் கால் - (தலைவர்) வராத பொழுது; துஞ்சா - (அவர் வரவை எதிர்நோக்கி) தூங்குவதில்லை; வரின் - வந்த பிறகும்; துஞ்சா - பிரிந்து விடுவாரோ என்ற அச்சத்தால் தூங்குவதில்லை; ஆயிடை - இவ்விரு வகைகளிலும்.
2. கண் - என் கண்கள்; ஆர்அஞர் - பெருந்துன்பம்; உற்றன - அடைந்தன.

தலைவி கூற்று

திருக்குறள் 1180 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

‘காதலரை இவ்வூர் இயற்பழியாவாறு அவர் குற்றத்தை மறைக்க வேண்டும்’ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி பெரிதும் வருந்தி மெலிந்திருக்கக் காரணம் ‘தலைவன் அவளைப் பிரிந்து சென்றதே’ என்று ஊரார் பழித்துப் பேசினர். ‘ஊராருடைய இப்பழிச்சொல்லை நீக்கத் தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றியிருக்க வேண்டும்’ என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

மறைபெறல் ஊரார்க்(கு) அரிதுஅன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

தெளிவுரை

அடிக்கப்படும் பறைபோலச் செய்தியை வெளிப்படுத்துகின்ற கண்களை உடைய என்னைப் போன்றவரின் உள்ளத்தில் உள்ள மறைபொருளை அறிதல் ஊரார்க்கு எளிதே.

கருத்து

நான் மறைத்தாலும் என் உள்ளத்தில் உள்ளதைக் கண்கள் வெளிப்படுத்தி விடுகின்றன.

விளக்கம்

“தோழி! என் மனத்தில் உள்ள பிரிவுத் துன்பத்தை மறைத்து, ஊரார் பழிச்சொல்லை நீக்கவேண்டுமென்கிறாய். நான் மறைக்கத்தான் செய்கிறேன். பறையறைவோர் செய்தியை வெளிப்படுத்துவதுபோல, என் உள்ளத்தில் உள்ளவற்றை என் கண்கள் ஊரார்க்குத் தெரிவித்து விடுகின்றனவே; அவ்வாறிருக்க நான் எவ்வாறு மறைப்பது” என்று, தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

ஒருவர் உள்ளத்தில் உள்ளதை எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும், கண்கள் அதனை வெளிப்படுத்திவிடும்.

சொற்பொருள்

2. அறைபறை கண்ணார் - அடிக்கப்படும் பறைபோல் (உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தும்) கண்களை (உடைய).
1. எம்போல் - என்னைப் போன்றவருடைய.
2. அகத்து - மனத்தில் (உள்ள).
1. மறைபெறல் - மறைபொருளை அறிதல்; ஊரார்க்கு - ஊரில் உள்ளவர்க்கு; அரிது அன்று - அரியது அன்று (எளியதே!)

இடைச்சுரத்துத் தலைவன்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 321 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்துபோகா நின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து செல்லுகின்ற தலைவன் இடைவழியில் தலைவியின் பண்புகளை நினைத்து இரங்கிக் கூறியது.

உலறுதலைப் பருந்தின் உளிவாய்ப் பேடை
அலறுதலை ஓமை அம்கவட்டு ஏறிப்
புலம்புகொள விளிக்கும் நிலம்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை இறப்பினும்
ஒழிதல் செல்லாது ஒண்டொடி குணனே.

தெளிவுரை

“கோடை வெம்மையால் வறண்ட தலையைக் கொண்ட ஆண் பருந்தின் பேடை உளிபோலும் கூரிய அலகினைக் கொண் டுள்ளது. ஓமை மரம் காய்ந்து விரிந்து நிற்கிறது. கவையாகப் பிரிந்த அதன் கிளையில் ஏறி அமர்ந்து பெட்டைப்பருந்து தன் தனிமை தோன்றச் சேவலை அழைத்துக் கத்துகிறது. பாலை நிலம் வறண்ட காடுகளைக் கொண்டது. வேறுபட்ட மொழி பேசும் மக்கள் வாழுகின்ற மலைகளைக் கடந்து வந்துள்ளேன். எனினும், ஒள்ளிய தொடியணிந்த என் காதலியின் இனிய பண்புகள் என் நினைவை விட்டும் அகலாது தொடர்கின்றன.”

கருத்து

நெடுந்தொலைவு சென்ற பின்னும் தலைவியின் குணச்சிறப்பு இடைவிடாது தொடர்ந்து வந்து அவளை நினைப்பூட்டிக் கொண்டிருக் கிறது.

குறிப்பு

தனிமையில் இருந்த பேடைப்பருந்தின் ஒலி தலைவனுக்குக் காதலியின் தனிமைத் துயரை நினைவூட்டுகிறது.

மரத்தின் கிளையில் ஏறிப் பெண்பருந்து சேவலை நினைந்து விளிப்பது போலத் தன் தலைவியும் இல்லத்தில் மாடிமீது ஏறி நின்று, தான் சென்ற திசையை நோக்கித் துன்பப்படுவாள் என்று தலைவன் உள்ளம் கருதுகிறது.

சொற்பொருள்

1. உலறுதல் - காய்தல்; பருந்து - ஒரு பறவை. உளிவாய்ப் பேடை - உளி போன்ற அலகினைக் கொண்ட பெண்பருந்து.
2. அலறு தலை - விரிந்த உச்சி; ஓமை - பாலைநில மரம்; கவடு - இரண்டாய்ப் பிரியும் மரக்கிளைப் பகுதி.
3. புலம்பு - தனிமை; விளிக்கும் - ஓசையிட்டு அழைக்கும்.
4. மொழி பெயர் பன்மலை - வேறுபட்ட மொழி வழங்கும் நாட்டிலுள்ள பல மலைகள்; இறப்பினும் - கடந்து சென்ற பிறகும்.
5. ஒழிதல் செல்லாது - நீங்குதலைச் செய்யாது, நீங்காது; குணன் - பண்புகள்.

தலைவன் கூற்று

அகநானூறு 83 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டி வரும் காரணமாய்ப் பிரிந்தான், தலைவன். காட்டுவழியில் செல்லும் போது, தலைவியின் குணங்களை எண்ணி அவன் வருந்தித் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

வலம்சுரி மராஅத்துச் சுரம்கமழ் புதுவீச்
சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடிக்
கறைஅடி மடப்பிடி கானத்து அலறக்
களிற்றுக்கன்று ஒழித்த உவகையர், கலிசிறந்து,

கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து,
பெரும்பொளி வெண்நார் அழுந்துபடப் பூட்டி,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்,
நறவுநொடை நல்இல் பதவுமுதற் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நல்நாட்டு வேங்கடம் கழியினும்,
சேயர் என்னாது, அன்புமிகக் கடைஇ,
எய்த வந் தனவால் தாமே நெய்தல்
கூம்புவிடு நிகர்மலர் அன்ன
ஏந்துஎழில் மழைக்கண்எம் காதலி குணனே.

தெளிவுரை

"நெஞ்சே! வேடர் வலமாய்ச் சுரித்து மலர்ந்த மணமிக்க வெண்கடப்ப மலர்களைச் சுருண்ட மயிரினைக் கொண்ட தம் தலையில் சூடிக் கொண்டனர்; உரல் போன்ற அடியினையுடைய பெண்யானை காட்டில் பிரிந்து அலற, அதன் கன்றைப் பிரித்து மகிழ்ச்சி கொள்வர். வெண்கடப்ப மரத்தின் நாரினை உரித்துத் திரித்த கயிற்றால் அக்கன்றினை அழுத்தம் பெறக் கட்டி இழுத்துச் சென்று கள்ளுக்கு விலையாகக் கடையின்முன் கொண்டுவந்து கட்டுவர். கன்றைப் பிரிந்த பெண்யானை கதறி அழும். அத்தகைய வேட்டைத் தொழில் அன்றி வேறு எதுவும் அறியாத வேடர்குலத் தலைவனாகிய புல்லி என்பவனது திருவேங்கடமலையைக் கடந்து நெடுந்தூரம் பொருள் தேட நாம் வந்துவிட்டோம். ஆயினும், நெய்தல் மலரை ஒத்த அழகினை ஏந்திய குளிர்ச்சி பொருந்திய கண்ணினளாகிய நம் காதலியின் குணங்கள், அன்புமிகச் செலுத்தி, நம்மை அணுக வந்து, நம் கண் முன்னே தோன்றுகின்றன.

கருத்து

எத்தொலைவில் இருந்தாலும் அவள் குணங்கள் என்னைத் தேடி ஓடி வந்து என் முன்னே நிற்கின்றன.

விளக்கம்

பிரிந்து செல்கின்ற தலைவன் வழியிடையில் தன் நெஞ்சிற்குச் சொல்கிறான்: "வில் ஏந்திய வேடுவர்கள் வலப்பக்கமாய்ச்

சுருண்டு பூக்கும் வெண்கடப்பம் பூக்களைத் தம் தலையிலே சூடியுள்ளனர். பெண்யானை காட்டிலே கதற அதன் ஆண் கன்றினை அவர்கள் பற்றிக்கொண்டனர். அக்கன்றை, மரா மரத்தின் கொம்பைப் பிளந்து உரித்த நாரால் அழுந்தக் கட்டி, கள் விற்கும் கடையின் வாயிலில் கட்டி வைத்துள்ளனர். அவ் வேடுவர்களின் தலைவனான புல்லி என்பவனுக்குரிய வேங்கட மலையைக் கடந்து நாம் வந்து விட்டோம். அப்போதும் நெடுந் தொலைவு சென்றுவிட்டார் என்று கருதித் தங்கிவிடாமல், நெய்தல் மலரொத்த அழகான காதலியின் குணநலன்கள் நம்மை நெருங்கி வந்தடைந்துள்ளன."

குறிப்பு

எந்நேரமும் தலைவியின் பண்புகளைத் தலைவன் நினைத்தவண்ணம் இருக்கிறான் என்னும் குறிப்பும் இங்கே வெளிப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. வலம் சுரி மராஅத்து புதுவீ - வலப்பக்கமாய்ச் சுற்றி மலரும் வெண் கடம்பின் புதிய மலர்.
2. சுரிஆர் - சுருள் கொண்ட; உளைத்தலை - குதிரையின் தலையாட்டம் போல் தொங்கும் மயிர் கொண்ட தலை.
3. கறைஅடி - உரல் போன்ற அடி; அலற - அஞ்சிப் பேரொலி எழுப்ப.
4. ஒழித்த - பிரித்துக்கொண்ட; கலி சிறந்து - ஆரவாரம் மிக்கு.
6. பெரும் பொளி - பெரிதாக (பட்டையாக) உரித்த; அழுந்துபடி - (அக்கன்றினை) அழுத்தமாய்; பூட்டி - இறுகக் கட்டி.
7. நுடங்கும் - அசையும்; நியமம் - கடைத்தெரு.
8. நறவு நொடை - கள்ளுக்கு விலையாய்; பதவுமுதல் - வீட்டின் முன்பக்கம், வாயிலிடம்.
9. இளையர் - வேடர்; பெருமகன் - தலைவன்; புல்லி - புல்லி என்பவன்.
10. வேங்கடம் - வேங்கட மலை; கழியினும் - கடந்து செல்லினும்.
11. சேயர் என்னாது - தொலைவிலுள்ளார் என்று கருதாது; கடைஇ - செலுத்தி.
12. எய்த வந்தன - (தாம்) நம்மை அடைய வந்துள்ளன.
13. கூம்பு விடு - தளை அவிழ்ந்த, மலர்ந்த.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 323 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்த தலைமகன், 'அவள் பண்பு வந்தன' என உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் செல்லுகின்ற காட்டுவழியின் இடையில், தலைவியின் குணத்தை நினைத்து, 'அவள் பண்புகள் நெடுந்தொலைவு தாண்டி என்னிடம் வந்துள்ளன' என மகிழ்ந்து தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

வள்எயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளிஅம் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த, நெஞ்சம்!நீ நயந்தோள் பண்பே!

தெளிவுரை

"கூர்மையான பற்களைக் கொண்ட ஓர் ஆண்செந்நாய், குட்டியினை ஈன்றதால் ஏற்பட்ட நோயுடனிருந்த தன் பெண் நாயின் பசியைப் போக்கக் கள்ளிகள் நிறைந்த பாலைநில வழியில் காட்டுப் பன்றியின் வரவை எதிர்பார்த்திருக்கும். நெஞ்சமே! வெம்மையினைக் கொண்ட அத்தகைய கிளை வழிகள் பலவற்றைக் கொண்ட காட்டினைக் கடந்து பயணம் செய்து நம்மை விரும்பும் தலைவியின் பண்பு நலன்கள் நாம் இருக்கும் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கின்றன."

கருத்து

நெஞ்சமே! தலைவியின் இனிய பண்புகளை நினைக்காமல் இருக்க இயலவில்லையே. (அவள் எந்நேரமும் நினைவிலேயே நிற்கிறாளே!)

குறிப்பு

வெம்மையான காட்டினைக் கடந்து வந்த பின்னும் தலைவனின் உள்ளத்தில் தலைவியின் நினைவே மேலோங்கி நிற்கிறது.

சொற்பொருள்

1. வள் எயிறு - கூரிய பல்; செந்நாய் - காட்டில் வாழும் ஒரு வகை நாய்; வய உறு - குட்டியினை ஈன்றதால் ஏற்பட்ட நோய்; பிணவு - பெட்டை.
2. கள்ளி - கள்ளிச்செடிகள்; கடம் - பாலை நிலம்; கேழல் - ஆண்பன்றி; பார்க்கும் - எதிர்நோக்கிக் காத்திருக்கும்.
3. வெம் சுரம் - வெம்மையான வழி; கவலை - கவர்த்த வழிகள்; நீந்தி - கடந்து.
4. நயந்தோள் - விரும்பியவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 327 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

காட்டுவழியே செல்லும்போது தலைவனின் உள்ளத்தே தலைவியின் நினைவு, அவள் நலன்கள் பலவற்றை அலை அலையாய்த் தோற்றுவித்தது. அதனால் வெம்மையான காடுகூட அவனுக்குக் குளிர் சோலையாய்த் தோன்றியது.

பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா
வெயில்முளி சோலைய, வேய்உயர் சுரனே
அன்ன ஆரிடை யானும்
தண்மை செய்த,இத் தகையோள் பண்பே.

தெளிவுரை

"*புள்ளிகளையும் பல வரிகளையும் தன் பெரிய கை வெந்து விடும் எனப் பயந்து சிறிய கண்ணைக் கொண்ட யானை நிலத்தைத் தொடாதிருக்கும் அக்காட்டிலுள்ள சோலைகள்*

கரிந்துள்ளன. உலர்ந்த மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ளன. அத்தகைய காட்டு வழியேயாயினும் தலைவியின் இனிய பண்புகளை நினைத்ததும் அவை மிகுந்த குளிர்ச்சியைத் தந்தன."

கருத்து

கடத்தற்கரிய வழியேயாயினும் தலைவியின் உயர்ந்த பண்புகள் உள்ளத்தே எப்போதும் நிரம்பி நிற்பதால், நான் எப்போதும் குளிர்ச்சி யையே உணர்கிறேன்.

சொற்பொருள்

1. பொறிவரித் தடக்கை - புள்ளிகளையும் வரிகளையும் கொண்ட வளைந்த துதிக்கை; வேதல் - சுடுதல், வெந்து விடுதல்.
2. செல்லா - செய்யாது.
3. முளிதல் - உலர்தல்; சோலைய - சோலைகளைக் கொண்டது; வேய் - மூங்கில்.
4. ஆரிடையானும் - அரிய வழியிடத்தும்.
5. தண்மை - குளிர்ச்சி; இத்தகையோள் - இத்தகைய பெருமைத் தன்மையினைக் கொண்டவள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 274 — **உருத்திரன்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. (வலித்த - வற்புறுத்திய.)

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரத் தலைவியைப் பிரியக் கருதிய தலைவன், காட்டின் கொடுமையை நினைத்தான். தலைவியின் இனிய உறவை நினைத்தபடியே சென்றால், அக்கொடுமையும் இனியதாகிவிடும் எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

புறவுப் புறத்தன்ன புன்கால் உகாஅய்க்
காசினை அன்ன நளிகனி உதிர,
விடுகணை வில்லொடு பற்றி, கோடுஇவர்பு,
வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்
நீர்நசை வேட்கையில் நார்மென்று தணியும்
இன்னாக் கானமும், இனிய பொன்னொடு
மணிமிடை அல்குல் மடந்தை
அணிமுலை ஆகம் உள்கினம் செலினே.

தெளிவுரை

நெஞ்சே! புறாவின் முதுகைப் போன்ற மென்மையான அடிமரத்தைக் கொண்ட உகாய் மரத்தில் பொன்மணிகள்போலக் காணப்படும் பழுத்த பழங்களைப் பாலைநில மக்கள் அம்பெய்து உதிர்ப்பர். பின் அம்பொடும் வில்லொடும் அம்மரத்தின் உயர்ந்த கிளைகளின் மேலே ஏறி நின்று வழிப்பறி செய்வதற்காக வழி வருவோரை இரக்கமற்றவராய் எதிர்நோக்கியிருப்பர். அவர்கள் நீர் வேட்கையுற்றால் மரப்பட்டையை மென்று தாகத்தைத் தணித்துக் கொள்வர். நான் செல்லும் வழியில் இருக்கும் காடு இத்தகையது. இன்னாமை கொண்ட இக்காடும், பொன்னொடு மணியும் சேர்த்துச் செய்த அணிகலன்களை அணிந்த அல்குல் பரப்பினையும், அழகிய முலைகளைக் கொண்ட மார்பினையும் கொண்ட நம் தலைவியை நினைந்தபடியே சென்றேனேயானால் இனியதாகிவிடும்.

கருத்து

அவள் நினைவால் கடுமையான காட்டுவழியும் எனக்கு இனிதாகிறது.

குறிப்பு

தலைவன் தான் செல்ல வேண்டிய வழியின் கொடுமையை நினைத்தான். தலைவியின் உருவத்தை நினைந்தவண்ணம் சென்றால் அவ்வழியின் கொடுமை தன்னை ஒன்றும் செய்யாது என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான்.

சொற்பொருள்

1. புறவு - புறா; புறம் - முதுகு; புன்கால் - மென்மையான அடிமரம்; உகாய் - ஒரு வகை மரம்.

2. காசு - மணி; நளி - பழுத்த.
3. விடுகணை - விடுகின்ற அம்பை; கோடு இவர்பு - கிளைகளில் ஏறி நின்று.
4. வன்கண் - கொடுமையான; ஆடவர் - ஆறலை கள்வர்.
5. நீர் நசை - நீரை விரும்பும்; வேட்கை - தாகம்; நார் - மரப்பட்டையிலுள்ள நார்; தணியும் - நீங்கும்.
6. இன்னா - துன்பம் மிக்க; கானம் - காடு.
7. மிடை - சேர்ந்த.
8. ஆகம் - மார்பு; உள்கினம் - நினைந்துகொண்டே; செலின் - சென்றால்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 322 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துக்கண் தலைமகன், தலைமகள் குணம் நினைத்தலின் தனக்குற்ற வெம்மை நீங்கியது கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டத் தன் காதலியைப் பிரிந்து சென்ற தலைவன் எப்பொழுதும் தன் காதலியை நினைந்தமையால் வழியின் வெப்பத்தை அவன் உணர வில்லை. அதுபற்றித் தன்னுள்ளே அவன் வியந்து சொல்லியது.

நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின முன்னே; இனியே
ஒள்நுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின, சுரத்திடை ஆறே.

தெளிவுரை

"பொருள் தேட விரும்பி, நான் வெப்பமிக்க காட்டுவழியில் சென்று கொண்டிருக்கிறேன். இங்கே கோடைக் காலம் நீடித்தமையால் வெப்ப மிகுதியால் நீண்ட மூங்கில்கள் உலர்ந்து நிற்கின்றன; ஞாயிற்றின் கதிர்கள் கற்கள் பிளக்குமாறு

காய்கின்றன. நான் புறப்படும்பொழுது இவ்வழிகள் எனக்கு வெப்பமுடையனவாய்த் தோன்றின. இப்பொழுது ஒளிவீசும் நெற்றியைக் கொண்ட என் காதலியை நினைக்கும் போதெல் லாம் குளிர்ச்சியுடையனவாய்த் தோன்றுகின்றன.''

கருத்து

காதலியைப் பற்றி நினைப்பதனால் எழும் குளிர்ச்சி, காட்டின் வெம்மையையும் தணித்துவிட்டது.

சொற்பொருள்

1. நெடுங்கழை - நீண்ட மூங்கில்; முளிய - உலர; வேனில் - கோடைக் காலம்; நீடி - நிலைத்து நின்று.
2. கடுங்கதிர் - சுடுகதிர்கள்; கல் பக - கல் பிளக்குமாறு; தெறுதலின் - காய்தலின்.
3. வெய்ய ஆயின - வெப்பம் பொருந்தினவாயின; முன்னே - முன்பு புறப் பட்ட பொழுது; இனியே - இப்பொழுது.
4. ஒள் நுதல் - ஒளி வீசும் நெற்றி; உள்ளுதொறும் - நினைக்கும் போதெல்லாம்.
5. தண்ணிய ஆயின - குளிர்ச்சி பொருந்தினவாயின; சுரம் - பாலைநிலக் காடு; ஆறு - வழி.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 326 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்து வெம்மை ஆற்றானாகிய தலைமகன், தலைமகள் குணம் நினைந்து, தன் பயணத்தை நொந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

இடைவழியில் வெம்மையைப் பொறுக்கவியலாதவனாய் மிகவும் மனக்கவலையடைகிறான், தலைவன். அப்போது அவன் மனம், தலைவியின் குணம்பற்றிய நினைவுகளைப் பற்றிப் படர்கிறபோது அவன் சொல்லியது.

அழல்அவிர் நனந்தலை நிழலிடம் பெறாது
மடமான் அம்பிணை மறியொடு திரங்க,
நீர்மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னா மன்ற சுரமே!
இனிய மன்ற,யான் ஒழிந்தோள் பண்பே!

தெளிவுரை

"வெப்பம் மிகுந்த அகன்ற இடத்தைக் கொண்ட காட்டுவழி; ஒதுங்குதற்கு நிழலிடம் யாதும் இன்மையால் இளமானின் அழகிய பிணை தன் குட்டியோடும் கூடி வெம்பி வாடி வருந்தி நின்றது. வழி, முன்பு பெய்த மழைநீரால் பக்கம் அறுக்கப்பட்டு நடந்து முடிவு பெறாததாயிருந்தது. அச்சுரம் உறுதியாய் எனக்குத் துன்பத்தையே விளைவித்தது. ஆயினும், நான் பிரிந்து நீங்கியவளின் பண்பு நலன்கள், அவ்விடத்தும் என்னிடம் தோன்றி எனக்கு இனிமை தந்தன."

கருத்து

இன்னாச் சுரத்திடையினும் தலைவியின் பண்பட்ட உள்ளம் தோன்றுதலால் கொடிய வழியும் இனிதாயிற்று. (சுரம் இன்னா; தலைவியின் பண்பு இனிய.)

குறிப்பு

அவளை நினைக்கும்போது அந்த நினைவின் இனிமையிலேயே திளைக்கும் மனம், வழியின் இன்னாமை பலவற்றையும் மறந்து விடும் என்பது, அவன் அவளிடம் கொண்ட காதல் மிகுதியை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. அழல் அவிர் - நெருப்புப் பரந்து கிடப்பது போன்ற வெம்மை நிறைந்த; நனந்தலை - அகன்ற காடு.
2. மடமை - இளமை; அம்பிணை - அழகிய பெண்மான்; மறி - குட்டி; திரங்க - வாட.
3. மருங்கு - பக்கம்; அறுக்க - அழிக்கப்பட்ட; நிரம்பா - நடந்து முடிவு பெறாத; இயவு - வழி.
4. ஒழிந்தோள் - தனியே விடப்பட்டவள்.

தலைவன் கூற்று

நற்றிணை 113 **இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்து ஆற்றானாய தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பொருள்வயிற் பிரியவிருப்பதைத் தலைவியிடம் சொன்னான்; தலைவி ஆற்றாது அழுதாள். ஆயினும், தலைவன் புறப்பட்டு விட்டான். ஆனால், வழியெங்கும் அவள் கலங்கியழுத தோற்றம் தன் கண்முன்னேயே நிற்பதாய்த் தலைவன் சொல்லியது.

உழைஅணந்து உண்ட இறைவாங்கு உயர்சினைப்
புல்அரை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய்
கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்காடு இறந்தும், எய்தவந் தனவால்
அருஞ்செயல் பொருட்பிணி முன்னி, யாமே
சேறும் மடந்தை! என்றலின் தான்தன்
நெய்தல் உண்கண் பைதல் கூர,
பின்இருங் கூந்தல் மறையினள் பெரிதுஅழிந்து,
உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல்அம் குழலின் ஏங்கிக்
கலங்குஅஞர் உறுவோள் புலம்புகொள் நோக்கே!

தெளிவுரை

" 'பெண்ணே! செயற்கரிய செயலான பொருள் ஈட்டும் எண்ணங்கொண்டு, நான் உன்னைப் பிரிந்து காட்டுவழியே செல்ல உள்ளேன்' என்று தலைவியிடம் நான் கூறினேன். உடனே, நெய்தல் மலர் போன்ற மை தீட்டப் பெற்ற அவள் கண்கள் கலங்கின; பின்னுகின்ற கூந்தலை விரித்து முகத்தை மறைத்துக் கலங்கிப் பெருந்துன்பம் கொண்டாள்; சினந்து சென்று உதியஞ்சேரலாதன் ஆரவாரிக்கும் போர்க்களத்தில் இசைவாணர்கள் 'இம்' என்னும் ஓசையுண்டாக இசைக்கும்

ஆம்பல் என்னும் குழலிசைபோல் அழுது, கலங்கி, வருந்தித் துன்பமுற்ற கண்களால் என்னைப் பார்த்தாள்.

"தழையுண்ணும்போது மானினம் நிமிர்ந்து தன் தலையை மேலே உயர்த்திக் கழுத்தை ஒரு பக்கமாய் வளைத்திருப்பது போல, சற்றே வளைந்து உயர்ந்த கிளைகளையும் புன்மையான அடிமரத்தையும் கொண்ட இலந்தையின் பசிய காய், பரல் பொருந்திய சிறிய வழியில் பரவிக் கிடக்கும் பெருங்காட்டினைக் கடந்து இப்போது சென்று கொண்டிருக்கிறேன். ஆயினும், நான் பிரியும்போது அவள் அழுது புலம்பிப் பார்த்த பார்வை என் கண் முன்பு தென்பட்டுக்கொண்டே இருக்கிறது. இது வியப்பாய் உள்ளது" எனத் தலைவன் தன்னுள் கூறிக்கொள்கிறான்.

கருத்து

பிரிந்தபோது அவள் அழுது புலம்பிய பார்வை பெருங்காட்டிடையே சென்றுகொண்டிருக்கும்போதும் என் முன் தோன்றிக்கொண்டேயிருக் கின்றது.

சொற்பொருள்

1. உழை - உழை மான்; அணந்து - தலையை மேலே உயர்த்தி; இறை வாங்கு - பக்கத்தே வளைந்த.
2. புல் அரை - புன்மையான அடிமரம்; இரத்தி - இலந்தை மரம்; பொதிப்புறம் - பொதியப்பட்ட மேற்புறம்.
3. மல்க - நிறைய; தாஅம் - பரவிக் கிடக்கும்.
4. எய்த வந்தன - என் கண் முன்னே வந்து நிற்கின்றன.
5. பொருட்பிணி - பொருள் பற்று (ஆசை); முன்னி - நினைந்து.
6. சேறும் - (காட்டுவழியே) செல்வேன்.
7. நெய்தல் - நெய்தல் பூ; பைதல் - வருத்தம்; கூர - மிகுதியாக.
8. மறையினள் - (முகத்தை) மறைத்துக் கொண்டாள்; அழிந்து - கலங்கி.
9. உதியன் - உதியஞ்சேரலாதன் (சேர மன்னன் ஒருவன்); மண்டுதல் - சினத்தல்; ஒலிதலை - ஒலி மிகுந்த; ஞாட்பு - போர்க்களம்.
10. இயவர் - குழலூதுவோர்.
11. அம்பல்அம் குழல் - 'ஆம்பல்' என்னும் குழலோசை.
12. அஞர் - துன்பம்; புலம்பு - தனிமை.

தலைவன் கூற்று

அகநானூறு 41 **குன்றியனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்த இடத்து, கிழத்தியை நினைந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் கருதிய தலைவன் பிரிந்து அயல்நாட்டில் இருந்தபோது, தலைவியை நினைத்து, அவளிடம் தான் வருவதாய்க் குறித்து வந்த பருவம் கண்டபோது தலைவியை எண்ணி இரங்கித் தன் நெஞ்சுக்குக் கூறியது.

வைகுபுலர் விடியல், மைபுலம் பரப்பக்
கருநனை அவிழ்ந்த ஊழ்உறு முருக்கின்
எரிமருள் பூஞ்சினை இனச்சிதர் ஆர்ப்ப,
நெடுநெல் அடைச்சிய கழனிஏர் புகுத்துக்
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர,
அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்
ஓதைத் தெள்விளி புலம்தொறும் பரப்ப,
கோழ்இணர் எதிரிய மரத்த, கவினி,
காடுஅணி கொண்ட காண்தகு பொழுதில்,
நாம்பிரி புலம்பின் நலம்செலச் சாஅய்,
நம்பிரிபு அறியா நலனொடு சிறந்த
நல்தோள் நெகிழ, வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்
தாதுஇன் துவலை தளிர்வார்த் தன்ன
அம்கலுழ் மாமை கிளைஇய
நுண்பல் தித்தி மாஅ யோளே?

தெளிவுரை

இருள் புலர்ந்திடும் விடியற்காலத்தில் எருமைகள் புல் மேய்வதற்குக் காட்டுப்பகுதிக்குச் செல்லுகின்றன. முருக்க மரத்தின் பெரிய அரும்புகள், முருக்கவிழ்ந்து, தீயைப் போன்ற பூக்களைக் கொண்ட மரக்கிளைகளில் கூட்டமாய் வண்டுகள் ஒலிக்கின்றன.

நெடிய நெற்பயிர் நட்டு முடிக்கப்பட்ட வயல்களில் உள்ள ஏர்களை உழவர்கள் கட்டிகளைக் கொண்ட புன்செய் நிலங்களில் சேர்க்கின்றனர். உழவர்களுள் சிலர் அரிதாளைக் கொண்ட நிலம் பிளவுறுமாறு மண் பிறழும்படியாக உழு கின்றனர். அவர்களின் தெளிந்த ஓசை எல்லா இடங்களிலும் பரவுகின்றது. மலர்க் கொத்துகள் நிரம்பிய மரங்களைக் கொண்ட இக்காடு, இளவேனிற்காலத்தில் அழகு பெற்றுக் காட்சிக்கு இனிதாய் விளங்குகிறது.

"நெஞ்சமே! மென்மையான சிறகினைக் கொண்ட வண்டினம் மொய்த்துக்கொண்டிருக்கும் குளிர்ச்சி பொருந்திய மணம் கொண்ட பூங்கொத்துகளிலே உள்ள தாதுடன் கூடிய தேன் துளிகள் தளிரில் ஒழுகினால் எப்படியோ, அப்படிப்பட்ட அழகொழுகும் மாமை நிறத்தில் சிறுசிறு தேமற்புள்ளிகளைக் கொண்டவள், நம் தலைவி. பிரிவு என்பதை அறியாமல் இயற்கை அழகுடன் கூடியிருந்த நம் தலைவியின் தோள்கள் நாம் பிரிந்து விட்டமையால், அவ்வழகு மிகவும் கெட, இப்போது மிகவும் மெலிந்து வருந்தி இருப்பாளோ?" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

கருத்து

'தலைவி தனித்திருப்பது காரணமாய் அவள் இயற்கை அழகு கெடத் தோள்கள் மெலிவுற்று, நெஞ்சம் நெகிழப் பெற்று, இவ்விளவேனிற் காலத்தில் மிகவும் வருந்தியிருப்பாளோ?'

இளவேனிற்காலம்

புலர்கின்ற விடியற்காலையில் எருமைகள் நிலத்தில் பரந்து செல்கின்றன; நெருப்பைப் போன்ற நிறத்துடன் முருக்க மலர்கள் பூத்துள்ளன. அம்மரக்கிளைகளில் வண்டுகள் கூட்டமாய் ஒலிக் கின்றன. ஏர் உழும்போது உழவர் எழுப்பும் ஓசை இடந்தோறும் பரவியுள்ளது. இத்தகைய அழகுக் காட்சிகளைக் கொண் டுள்ளது, இளவேனிற்காலம்.

தலைவியின் தோற்றம்

வண்டுகள் படிவதால் பூந்தாதில் உண்டான தேன்துளிகள் தளிரின் மேல் ஒழுகியது போன்று, சிறிய பல தேமல் புள்ளிகள்

தலைவியின் அழகொழுகும் மாமை நிறத்திடையே கிளைத்துத் தோன்றுகின்றன.

சொற்பொருள்

1. வைகு புலர் - தங்கிய இருள்; புலர் - புலர்ந்திடும்; மை - எருமை; புலம் - நிலம்; பரப்ப - பரந்து செல்ல.
2. கருநனை - பெரிய அரும்பு; ஊழ்உறு - பூக்கள் நிறைந்த; முருக்கு - முருக்க மரம்.
3. சிதர் - வண்டில் ஒருவகை.
4. அடைச்சிய - நட்ட.
5. குடுமிக் கட்டி - குவிந்த கட்டிகள்; படப்பை - தோட்டம்.
6. அரிகால் - அரிதாள் (கொண்ட நிலத்தை); போழ்ந்த - பிளந்து உழுத; தெரிபகடு - ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட எருதுகள்.
7. ஓதை - ஓசை; தெள்விளி - தெளிந்த ஒலி; புலம் - இடம்.
8. கோழ் இணர் - செழித்த பூங்கொத்துகள்; எதிரிய - தோன்ற.
10. புலம்பு - தனிமை; நலம் - அழகு; சாஅய் - மெலிந்து.
13. மென் - மென்மை.
14. துவலை - தேன்; வார்தல் - ஒழுகுதல்.
15. அம்கலுழ் - அழகு ஒழுகுகின்ற; கிளைஇய - கிளைத்துத் தோன்றும்.
16. நுண்பல் - சிறிய பல; தித்தி - தேமற்புள்ளி.

தலைவன் கூற்று

நற்றிணை 352 மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துக்கண் ஆற்றானாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டுதற்காகத் தலைவியைப் பிரிந்து வேற்று நாடு சென்ற தலைவன் இடைவழியில் தலைவியின் உருவத்தோற்றம் அவன் எதிரே தோன்றுவது கண்டு, அவள் அங்கு எப்படி வந்தாள் என மருண்டு தனக்குள்ளே சொல்லியது.

இலைமாண் பகழிச் சிலைமாண் இரீஇய
அன்புஇல் ஆடவர் அலைத்தலின், பலருடன்
வம்பலர் தொலைந்த அஞ்சுவரு கவலை,
அழல்போல் செவிய சேவல் ஆட்டி,
நிழலொடு கதிக்கும் நிணம்புரி முதுநரி
பச்சூன் கொள்ளை மாந்தி, வெய்துற்று
தேர்திகழ் வறும்புலம் துழைஇ, நீர்நயந்து,
பதுக்கை நீழல் ஒதுக்குஇடம் பெறாஅ
அருஞ்சுரக் கவலை வருதலின்; வருந்திய
நமக்கும் அரிய ஆயின; அமைத்தோள்
மாண்புடைக் குறுமகள் நீங்கி,
யாங்குவந் தனள்கொல்? அளியள் தானே!

தெளிவுரை

"*நெஞ்சே! அன்பில்லாத வீரர் கூட்டம் இலை வடிவிலமைந்த அம்புகளை வில்லில் பொருத்திப் புதிதாய் வரும் வழிப் போக்கரைக் கொல்வர். அவ்வாறு கொல்லப்பட்டோரின் உடல்களைத் தின்னவரும் கழுகுச்சேவல்களை, தன் நிழலோடு விளையாடிக் கொண்டிருக்கும் நரி துரத்தியடிக்கும். பின்னர், பச்சை ஊனை மிகுதியாய்த் தின்ற அந்நரி நீர் வேட்கையால், பேய்த்தேர் உலவுவதைக் கண்டு, அதனை நீரென்று கருதி ஓடி அலையும்; அது, நீரன்று என அறிந்து வருந்தும்; அங்குக் கிடந்த கற்குவியல்களின் நிழல் ஒதுங்குதற்கும் போதாமையால் களைப்பாறவும் இடமின்றி வருந்தும். அத்தகைய அஞ்சத்தக்க பல பிரிவாய்ச் செல்லும் பாதைகளைக் கடந்து வருவது நமக்கே அரிதாயிருக்க, மூங்கிலையொத்த தோள்களைக் கொண்ட காதலி இங்கு எவ்வாறு வந்தாளோ, அறியேன். அவள் இரங்கத்தக்கவள்" என்று, தலைவியின் உருவெளித்தோற்றத் தைக் காணும் தலைவன் சொல்லுகிறான்.*

கருத்து

'அன்பில்லாது மறவர்களால் கொல்லப்பட்ட உடல்களைத் தின்னவரும் கழுகுச் சேவல்களை விரட்டிய நரி, ஊனை மிகுதியாய்த் தின்றுவிட்டு, குடிக்க நீரில்லாமலும் களைப்பாற நிழலில்லாமலும் திரியும். அத்தகைய

கொடிய பாலைவழியில் என் காதலி எவ்வாறு வந்தாள், அறியேன்!' என்று அவள் உருவெளித்தோற்றத்தைக் கண்டு மயங்குகிறான், தலைவன்.

விளக்கம்

ஒருவரை இடைவிடாது நினைந்துகொண்டேயிருந்தால், அவர் அங்கு வரவில்லையாயினும், அவர் உருவம் அவரை நினைத்துக் கொண்டிருப்பவர் முன் தோன்றும். இஃது உருவெளித்தோற்றம் எனப்படும்.

காதலன், காதலியை இடைவிடாது நினைத்துக்கொண்டே யிருப்பதால் அவள் உருவெளித்தோற்றம் அவன் முன்னர்த் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. பகழி - அம்பு; சிலை - வில்; இரீஇய - இருத்திய.
2. அன்பில் ஆடவர் - அன்பில்லாத வீரர் கூட்டம்.
3. வம்பலர் - புதிய வழிப்போக்கர்; தொலைந்த - இறந்த; கவலை - பலவாய்ப் பிரிந்துள்ள வழி,
4. அழல் - நெருப்பு; செவிய - காதுகளைக் கொண்ட; சேவல் - கழுகுச் சேவல்.
5. கதிக்கும் - குதித்து விளையாடும்; நிணம்புரி - நிணத்தைத் தின்ன விரும்பிய; முதுநரி - கிழ நரி.
6. பச்சூன் - பசிய புலாலை; கொள்ளை - மிகுதி; மாந்தி - உண்டு; வெய்துற்று - நீர்வேட்கையுற்று, களைத்து.
7. தேர்திகழ் - பேய்த்தேர் (கானல் நீர்) தோன்றுகின்ற; துழைஇ - தேடி.
8. பதுக்கை - கற்குவியல்; ஒதுக்கு இடம் - ஒதுங்குதற்குரிய இடம்.
10. அமை - மூங்கில்,
11. நீங்கி - வீட்டிலிருந்து நீங்கி.
12. அளியள் - இரங்கத்தக்கவள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 147 **கோப்பெருஞ்சோழன்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்த இடத்துக் கனாக் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தான் சென்ற இடத்தில் துயிலும் போது தலைவியைக் கனவில் கண்டு விழித்து, ஆற்றாமையினால் கூறியது.

வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன
மயிர்ஏர்பு ஒழுகிய அம்கலுழ் மாமை,
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல,
இன்துயில் எடுப்புதி கனவே!
எள்ளார் அம்ம, துணைப்பிரிந் தோரே.

தெளிவுரை

"கனவே! வேனிற்காலத்தில் மலரும் பாதிரியின் வளைந்த மலரில் உள்ள துய்யினைப் (மயிரைப்) போல, மயிரெழுந்து படர்ந்தமைந்த மாமை நிறத்தினையும் நுண்ணிய வேலைப் பாடமைந்த அணிகலன்களையும் கொண்ட என் தலைவியை நேரில் கொண்டுவந்து காட்டியதுபோலக் கனவில் காட்டி என்னை இனிய உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்டாய்; என்றாலும், வாழ்க்கைத் துணையைப் பிரிந்திருப்பவர் உன்னை (ஏன் துயில் எழுப்பினாய்? என்று) இகழ மாட்டார்."

கருத்து

தலைவியைக் கொண்டுவந்து காட்டிய கனவினைப் போற்றுகிறேன்!

விளக்கம்

தலைவன் தலைவியைக் கனவிற்கண்டு பொருக்கென விழித்தான். கனவு, துயில் நீங்குவதற்குக் காரணமாயிருந்தது; ஆயினும், அது தலைவியைக் கொண்டுவந்து காட்டியதால் அதனை இகழாது புகழ்ந்தனன். 'காதலியைக் காட்டும் கனவினை

யாரும் இகழார்' எனத் தன் உணர்வினை உலகின்மேல் வைத்துக் கூறுகிறான்.

சொற்பொருள்

1. வேனில் - வேனிற்காலத்தில்; பாதிரி - பாதிரியின்; கூன்மலர் - வளைந்த மலர்.
2. மயிர் ஏர்பு - மயிர் எழுந்து; ஒழுகிய - படர்ந்த; அம் கலுழ் - அழகு ஒழுகும்; மாமை - மாமை நிறம்.
3. நுண்பூண் - நுண்ணிய வேலைப்பாட்டினைக் கொண்ட அணிகலன்; மடந்தை - பெண் (தலைவி); தந்தோய் - கொணர்ந்து கொடுத்தாய்.
4. எழுப்புதி - எழுப்புகின்றாய்.
5. எள்ளார் - (உன்னை) இகழார்.

தலைவன் கூற்று

நற்றிணை 346 **எயினந்தைமகன் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகன் ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வர வேற்று நாட்டுக்குச் சென்ற தலைவன் காதலியைப் பிரிந்து ஆற்றாதவனாய்த் தனக்குள் சொல்லிக்கொண்டது.

குணகடல் முகந்து, குடக்குஏர்பு இருளி,
தண்கார் தலைஇய நிலம்தணி காலை,
அரசுபகை நுவலும் அருமுனை இயவின்,
அழிந்த வேலி அம்குடிச் சீறூர்
ஆள்இல் மன்றத்து, அல்குவளி ஆட்டத்
தாள்வலி ஆகிய வன்கண் இருக்கை,
இன்று,நக் கனைமன் போலா என்றும்
நிறையும் மதியின் இலங்கும் பொறையன்
பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக்
கடிபதம் கமழும் கூந்தல்
மடமா அரிவை தடமென் தோளே?

தெளிவுரை

"நெஞ்சே! கீழ்க்கடலில் நீரை முகந்துகொண்டு, மேற்கு நோக்கி எழுந்து சென்று, இருண்டு குளிர்ச்சி பொருந்திய மேகம் மழையைப் பொழிய, அதனால் நிலத்தின் வெம்மை தணிந்திருக்கிறது. அரசர் பகைமை கொண்டு போர்க்களம் நோக்கிச் சென்ற வழியில், அழிந்து சிதைந்த வேலியைக் கொண்டதும், முன்னர் மக்கள் வாழ்ந்திருந்ததும், இப்போது மக்களற்றதுமாகிய சிற்றூர்; அங்கு ஆள் நடமாட்டமில்லாத காற்று மோதியலைக்கும் பொதுமன்றத்தில் இப்போது தங்கி இருக்கின்றேன். எக்காலத்தும் முழுமதியைப் போல விளங்கும் பொறையனின் பெருமையினையும் குளிர்ச்சியினையும் கொண்ட கொல்லிமலையில் வளரும் பசுமையான காட்டுமல்லிகை மலரைச் சூடுதலால் மணமிகுந்த கூந்தலினையும் இளமையினை யும் அழகினையும் கொண்டவளான தலைவியின் மென்மை யான பருத்த தோள்களை நீ இங்கே தனித்திருக்கும் இவ்வேளை யில் தழுவக் கருதுகின்றனையோ?" என்று தலைவன் தனக்குள் சொல்லிக்கொள்கிறான்.

கருத்து

வினை முடிந்து திரும்பித் தலைவியைத் தழுவி மகிழும் இன்ப நாள் எந்நாளோ?

விளக்கம்

கார்முகில் பொழிந்து அதனால் வெப்பம் தணிந்து குளிர்ந் துள்ள காலம்; படையோடு அரசன் சென்ற வழியில் அழிந்து பட்டிருந்த ஊரின் பொது மண்டபத்தில் பொருள் தேடச் சென்ற தலைவன் தங்கியிருக்கிறான். அங்குக் காட்டுமல்லிகை மணம் வீசுகிறது. உடனே தலைவனுக்கு மல்லிகை மணக்கும் கூந்தலைக் கொண்ட தன் காதலியின் பருத்த தோள்களைத் தழுவி மகிழ விருப்பம் எழுகிறது. அந்த இன்பத்தைப் பெற வினையை விரைவில் முடித்துத் திரும்ப வேண்டுமெனத் தலைவன் தன் மனத்தில் உறுதி கொள்கிறான்.

சொற்பொருள்

1. குணகடல் - கிழக்குக் கடல்; குடக்கு - மேற்கு; ஏர்பு - எழுந்து.
2. தண்கார் - குளிர்ந்த மேகம்; தலைஇய - மழை பொழிய.
3. அரசு பகை - வேந்தன் பகைமை கொண்டு; நுவலும் - தன் படையெடுப்பைப் பற்றி முன்னரே கூறிச் செயல்பட்ட; அருமுனை - போர்முனையை; இயவு - (நோக்கிச் செல்லும்) வழியில்.
4. அழிந்த - சிதைந்த; சீறூர் - சிறிய ஊர்.
5. ஆள் இல் - ஆள் நடமாட்டமில்லாத; அல்குவளி - செறிந்த காற்று; ஆட்ட - வீசி அடிக்க.
6. தாள் வலி ஆகிய - முயற்சியால் பெற்ற வலிமை துணை ஆக; வன்கண் இருக்கை - கொடுமை நிறைந்த இந்த இடத்தில்.
7. நக்கனை - (இப்போது தங்கி) துன்பச் சிரிப்புச் சிரிக்கின்றாய்.
8. நிறையும் மதி - முழு நிலவு; இலங்கும் - விளங்கும்; பொறையன் - சேர மன்னன்.
9. கொல்லி - கொல்லி மலை; குளவி - காட்டுமல்லிகை.
10. கடிபதம் - நறுமணம்.
11. மடமா - இளமை அழகு; தட - அகன்ற, பருத்த (தோளைத் தழுவும் நாள் எந்நாளோ?)

தலைவன் கூற்று

அகநானூறு 57 — **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகன், கிழத்தியை நினைந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளுக்காகப் பிரிந்த தலைவன், இடையறாது தன்னை நினைத்து அழுகின்றவளாகிய தலைவி தன் அழகு நீங்கப் பெற்றுச் சிறிய பீர்க்கம் பூவின் நிறத்தினைக் கொண்டனளோ என வருந்துகின்றான்.

சிறுபைந் தூவிச் செங்காற் பேடை
நெடுநீர் வானத்து, வாவுப்பறை நீந்தி,
வெயில்அவிர் உருப்பொடு வந்து,கனி பெறாஅது,
பெறுநாள் யாணர் உள்ளி, பையாந்து,
புகல்ஏக் கற்ற புல்லென் உலவைக்

குறுங்கால் இற்றிப் புன்தலை நெடுவீழ்
இரும்பிணர்த் துறுகல் தீண்டி, வளிபொர,
பெருங்கை யானை நிவப்பில் தூங்கும்
குன்ற வைப்பின் என்றூழ், நீள்இடை,
யாமே எமியம் ஆக, தானே
பசுநிலா விரிந்த பல்கதிர் மதியில்
பெருநல் ஆய்கவின் ஒரீஇ, சிறுபீர்
வீஏர் வண்ணம் கொண்டன்று கொல்லோ
கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்துறை முசிறி முற்றி,
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநரின் வருந்தினள், பெரிதுஅழிந்து,
பானாட் கங்குலும் பகலும்
ஆனாது அழுவோள் ஆய்சிறு நுதலே?

தெளிவுரை

“நெஞ்சே! சிறிய மெல்லிய சிறகினையும் சிவந்த காலினையும் கொண்ட வெளவால் நீண்ட தூரம் வானில் பறந்தும் ஒரு கனியேனும் பெறாமல் வருந்தி, முன்பு பல கனிகளைப் பெறுவதற்குக் காரணமாய் அன்றைய நாளில் அமைந்திருந்த வளத்தினை எண்ணி ஏங்கி இருக்கிறது. இற்றி மரத்தின் பொலிவற்ற நீண்ட விழுது அம்மரத்தின் கீழே உள்ள சொர சொரப்பான உருண்டையான பாறைக் கல்லைத் தொட்டுக் கொண்டிருக்கும். அது காற்றடிக்கும்தோறும், பெருங்கை யானை துதிக்கையை உயர்த்தியிருப்பதுபோல் காட்சி தருகிறது. அச்சம் பொருந்திய குன்றுகளைக் கொண்ட இக்காட்டு வழியில் நாம் தனிமையில் இங்கே இருக்கிறோம். கொடி கட்டிய தேரினை யுடைய வீரமிக்க பாண்டியன் கடல்துறைப் பகுதியான முசிறியை வளைத்துக்கொண்டமையால் ஏற்பட்ட போரில் யானைகளை மடியச் செய்தான்; விழுப்புண் பெற்ற வீரர்கள் இரவிலும் பகலிலும் மனம் நொந்து வருந்தினர். அவர்களைப் போலத் தனிமையில் தலைவி அழுதுகொண்டிருக்க, அவள் அழகு குறைந்து, நிலாப் போன்ற அவள் நெற்றி ஒளியிழந்து, பீர்க்க மலரைப் போன்று பசலை கொண்டதோ?”

கருத்து

'அவள் என் பிரிவால் அழுது புலம்பி, ஒளியிழந்த நெற்றி பசலை கொண்டு அழகிழந்திருப்பாளோ?'

விளக்கம்

"நான், இங்கே மலைகள் நிரம்பிய வெப்பம் மிகுந்த நீண்ட வழியில் தனித்திருக்கிறேன். பாண்டிய மன்னன் முசிறியை முற்றுகையிட்டு, அழிவினை ஏற்படுத்திய போர்க்களத்தில் புண்ணுற்ற மற்றவர்கள் வருந்தியதைப் போலத் தலைவி தனிமையில் வருந்தியிருப்பாள். மனம் அழிந்து கங்குலும் பகலும் இடையறாது அழுவதால் நிலவு போன்ற அவள் நெற்றியின் அழகு மங்கி, பீர்க்கம் பூவின் நிறத்தைப் போன்ற பசலையைக் கொண்டதோ?" என்று, பொருள்வயிற் பிரிந்த தலைவன், தான் செல்லும் வழியில் தலைவியை நினைந்து வருந்திப் பேசுகிறான்.

குறிப்பு

முசிறி : இது, சேர நாட்டுச் சுள்ளியாறு கடலுடன் கலக்குமிடத்திலிருந்த பெரிய கடற்றுறைப் பட்டினம். முற்காலத்தில் மேற்கத்திய யவனர் மரக்கலங்கள் மிளகு கொள்ளுதற்கு மிகுதியாய் நிறுத்தப்பட்ட துறைமுகம். தாலம், பிளினி முதலிய மேற்றிசைப் பயணிகளும் இப்பட்டினத்தைப் பற்றியும், இங்கு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதைப் பற்றியும் தம் நூலில் கூறியுள்ளனர்.

சொற்பொருள்

1. பை - மெல்லிய; தூவி - சிறகு; பேடை - பெண் (வௌவால்).
2. வாவுப் பறை - தாவிப் பறத்தல்.
3. உருப்பு - வெப்பம்.
4. பெறுநாள் - தான் முன்பு கனிகளைப் பெற்ற நாள்; யாணர் - வளப்பம்; பையாத்தல் - வருத்தமுறுதல்.
5. ஏக்கறல் - ஆசை மிகுதியால் ஏங்கியிருத்தல்; உலவை - காய்ந்த கிளை.
6. இற்றி - இத்தி மரம்; நெடுவீழ் - நீண்ட விழுது.
7. பிணர் - சொரசொரப்பு; துறுகல் - குண்டுக்கல்; வளி - காற்று.
8. நிவப்பின் - உயர்ந்திருப்பதுபோல் தோன்றி.
9. என்றூழ் - வெப்பம்.

10. எமியம் ஆக - தனித்து இருப்ப; தான் - தலைவி.
11. பசு நிலா - குளிர்ந்த நிலா.
12. ஆய்கவின் - ஆராயத்தக்க அழகு; ஒரீஇ - நீங்கி; பீர் - பீர்க்கம்.
13. வீ - பூ; ஏர் - ஒத்த; வண்ணம் - நிறம்.
14. கொய் சுவல் - கொய்யப்பட்ட பிடரி மயிர்; புரவி - குதிரை; செழியன் - பாண்டிய மன்னன்.
15. முதுநீர் - கடல்; முசிறி - ஒரு துறைமுகம்; முற்றி - வளைத்து.
16. எருக்குதல் - கொல்லுதல், அழித்தல்; ஞாட்பு - போர்.
18. பானாள் - நடுயாமம்; கங்குல் - இருள்.
19. ஆனாது - அமையாது.

தலைவன் கூற்று

அகநானூறு 297 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயின் போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் கருதிப் பிரிந்து செல்லத் தலைவன் முயன்றபோது தானும் உடன் வருவதாய்த் தலைவி கூறினாள். அதற்குத் தலைவன் உடன்பட மறுத்துக் கூறிப் பிரிந்தான். இடைவழியில் அவன் அவளை நினைந்து இரங்கித் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

பானாட் கங்குலும், பெரும்புன் மாலையும்,
ஆனா நோயொடு அழிபடர்க் கலங்கி,
நம்வயின் நினையும் இடும்பை கைம்மிக,
என்னை ஆகுமோ, நெஞ்சே நம்வயின்;
இருங்கவின்; இல்லாப் பெரும்புன் தாடிக்
கடுங்கண், மறவர் பகழி மாய்த்தென,
மருங்குல் நுணுகிய பேஎம்முதிர் நடுகல்,
பெயர்பயம் படரத் தோன்று குயில்எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது, அசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்
சூர்முதல் இருந்த ஓமைஅம் புறவின்,

நீர்முள் வேலிப் புலவுநாறு முன்றில்,
எழுதி யன்ன கொடிபடு வெருகின்
பூளை அன்ன பொங்குமயிர்ப் பிள்ளை,
மதிசூழ் மீனின், தாய்வழிப் படூஉம்
சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு
எருவைச் சேவல் இருஞ்சிறை பெயர்க்கும்
வெருவரு கானம், நம்மொடு,
வருவல் என்றோள் மகிழ்மட நோக்கே?

தெளிவுரை

"நெஞ்சே! நாம் கடந்து வந்த காட்டில் நடுகற்கள் உள்ளன. அவற்றில் இறந்தோரின் பெயரும், பெருமையும் எழுதி வைக்கப் பட்டுள்ளன. பொலிவற்ற தாடியினையும் கொடுமை வாய்ந்த கண்களையும் கொண்ட மறவர் தம் அம்பினை அந்நடுகற்களில் தீட்டுதலால், அவற்றிலுள்ள எழுத்துகள் தேய்ந்து இடை யிடையே மறைந்துள்ளன. அதனால் வழிச்செல்வோர், அவ்வெழுத்துகளைப் பொறுமையாய்ப் பார்க்கக்கூட மனமின்றிப் பயத்தால் விரைவாய்ச் செல்கின்றனர். ஓமை மரங்களின் நிழலில் தங்கிச் செல்லும் அவர்கள் அம்மரங்களில் தெய்வம் குடியிருக்கின்றது என்பதையும் அறியார். அவர்கள் செல்லும் வழியில் மறவர்களின் சிற்றூர்கள் உள்ளன. அங்குள்ள மெலிந்த காட்டுப் பூனையின் பூளைப் பூவினையொத்த மயிரினைக் கொண்ட குட்டிகள் திங்களைச் சூழ்ந்துள்ள விண்மீன்கள்போலத் தாயைச் சூழ்ந்துள்ளன. சிற்றூரிலுள்ள மறவர்களின் ஏறுகோட்பறை முழங்கும் ஒலியைக் கேட்கும் ஆண்பருந்து, தான் தங்கியிருக்கும் மரக்கிளையை விட்டுத் தன் பெரிய சிறகினை எழுப்பிப் பறந்தோடும்.

இத்தகைய அச்சம் தரும் காட்டின் வழியைப் பற்றி நான் எடுத்துக் கூறியும், 'நானும் உங்களோடு வருவேன்' என்று தலைவி கூறினாள். அப்போது அவள் பார்வையில் மகிழ்ச்சி ததும்பியது. இப்போது இரவிலும் பொலிவற்ற மாலைக் காலத்தும் மிகுந்த வருத்தத்தோடு கண்கள் கலங்க, அவள் நம்மையே நினைத்துக்கொண்டிருப்பாள். அவளது அளவு கடந்த துன்பம் நமக்கு என்ன தீமையை விளைவிக்குமோ?

கருத்து

"நெஞ்சே! அச்சம் தரும் காட்டில் நம்முடன் வருவதாய்க் கூறிய, நம் தலைவியின் மகிழ்ச்சி தரும் பார்வை, இரவிலும் பகலிலும் காமநோய் வருத்தத்தால் கலங்கி, நம்மை நினைத்து என்ன ஆகுமோ?"

உவமை

வெண்ணிறம் கொண்ட பூனைக்கு மதியும், அதனைச் சேர்ந்திருக்கும் குட்டிகளுக்கு விண்மீன்களும் உவமையாயின.

சொற்பொருள்

1. பால் நாள் - பாதி நாள்; கங்குல் - இரவு.
2. நோய் - காம நோய்; அழிபடர் - மிக்க துன்பம்.
3. நம்வயின் நினையும் இடும்பை - நம்மை நினைத்தலால் ஆகும் துன்பம்; கைம்மிக - அளவு கடத்தலின்.
4. நம்வயின் - நம்மிடத்து, நமக்கு.
5. பெரும்புல்தாடி - பொலிவிழந்த பெரிய தாடி.
6. கடுங்கண் - கொடுமையுயினைக் கொண்ட கண்; மாய்த்தல் - தீட்டுதல்.
7. மருங்குல் - பக்கம்; பேஎம் - அச்சம்; முதிர் - மிக்க.
8. பெயர் பயம் - பெயரும் பெருமையும்; படர - விரிவாய்; குயில் எழுத்து - பொறித்த எழுத்து (குயிறல் - பொறித்தல்).
9. அசை - தளர்ச்சி.
10. விட்டனர் - விடுத்து.
11. சூர் - தெய்வம்; முதல் - (மரத்தின்) அடியில்; ஓமை - ஒரு வகை மரம்; புறவு - காடு.
12. நீர்முள்வேலி - (உடலைக்) கிழிக்கின்ற முள்வேலி; புலவு -புலால்.
13. எழுதியன்ன - ஓவியத்தில் எழுதினாற் போன்ற; கொடிபடு - மெலிந்து நீண்ட; வெருகு - காட்டுப்பூனை.
14. பூளை - பூளைப்பூ; பிள்ளை - பூனையின் குட்டிகள்.
15. மதி - நிலவு; தாய்வழி - தாயின் பின்; படூஉம் - சூழ்ந்திருக்கும்.
16. சேக்கோள் - ஏறு கோட்பறை; தண்ணுமைக்கு - பறை ஒலிக்கு.
17. எருவை - பருந்து; பெயர்க்கும் - எழும்பிப் பறக்கும்.
18. வெருவரு - அஞ்சத்தக்க.
19. மகிழ்மட நோக்கு - மகிழ்ச்சியைத் தரும் மடப்பம் வாய்ந்த பார்வை.

தலைவன் கூற்று

அகநானூறு 239 **எயினந்தை மகன் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை விடுத்துப் பொருள் ஈட்டுவதற்காக அரிதில் பிரிந்து செல்கின்ற போது, இடைவழியில் பிரிவாற்றாமையால் தலைவியை நினைந்து நெஞ்சிற்குச் சொல்லியது.

அளிதோ தானே, எவன்ஆ வதுகொல்?
மன்றும் தோன்றாது, மரனும் மாயும் –
புலிஎன உலம்பும் செங்கண் ஆடவர்
ஞெலியொடு பிடித்த வார்கோல் அம்பினர்,
எல்ஊர் எறிந்து பல்ஆத் தழீஇய
விளிபடு பூசல் வெஞ்சுரத்து இரட்டும்
வேறுபல் தேஎத்து ஆறுபல நீந்திப்
புள்ளித் தொய்யில், பொறிபடு சுணங்கின்,
ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை, யாம்இவண் ஒழிய,
ஈட்டுஅருங் குரைய பொருள்வயிற் செலினே,
நீட்டுவிர் அல்லிரோ, நெடுந்தகை யீர்?எனக்
குறுநெடும் புலவி கூறி, நம்மொடு
நெருநலும் தீம்பல மொழிந்த
சிறுநல் ஒருத்தி பெருநல் ஊரே.

தெளிவுரை

" '*பெருமை வாய்ந்தவரே! நீயிர் செல்ல விரும்பும் பாலை நிலத்தில் புலிபோலும் சிவந்த கண்ணைக் கொண்ட மறவர் இரவில் கொள்ளிக்கட்டையுடனும், வில் அம்புடனும் சென்று, மாற்றார் ஊரினை அழித்துப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து வருவர். அதனால் உண்டாகும் ஆரவாரம் கொடிய காட்டுவழியில்*

மாறிமாறி ஒலிக்கும். வேற்று மொழிகள் வழங்கும் பல நாடுகளில் வழிகள் பலவற்றைக் கடந்து செல்லவிருக்கின்றீர். நீயிர் செல்லும் காலத்தில் இங்குப் பொலிவில்லாத மாலைப் பொழுதில் மார்பில் தொய்யிலும், தேமலும் கொண்ட பெண்கள் மூன்றாம் பிறையினைத் தொழுவர்; நாங்கள் தனித்திருப்போம். நீயிர் பொருள் ஈட்டுவதே நோக்கமாய், காலம் நீட்டிப்பீர்' என்று நேற்றுக்கூட நம் தலைவி ஊடல் உரைகள் பலவற்றையும் நம்மிடம் இனிமை தரக் கூறினாள்.

இளமையும் அழகும் கொண்ட அந்த நல்லவளைப் பிரிந்து நான் இவ்வூரை விட்டுச் செல்கின்றேன். மனமின்றித் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கிறேன். மன்றம் மறைந்து விட்டது. மரங்கள் மங்கின. அவ்வூர் தோன்றுமோ? இனி எத்தன்மையது ஆகுமோ? அவ்வூர் இரங்கத்தக்கது."

கருத்து

முதல் நாள் ஊடிப் பிணங்கி உரை குளறிய தலைவியின் நிலையை நினைந்து, பிற்றை நாள் மாலையில் வழியிடையேயுள்ள தலைவன், 'அவள் வாழ்ந்துகொண்டிருக்கும் ஊரும் மறைகிறதே, என் செய்வேன்?' என்று தன் நெஞ்சத்திடத்து வருந்திக் கூறுகிறான்.

விளக்கம்

'பகைவர் நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து வரும் வீரர்கள் ஒலியெழுப்பும் சுரவழியில் நாடு பல கடந்து பொருள் தேடச் செல்கின்றீர்! நாங்கள் இங்கே தனித்திருக்க, அங்கே நீங்கள் காலத்தை நீட்டிக்கவும் செய்வீர்' என்று நேற்று நம்மோடு குறுகியனவும் நீண்டனவுமாகிய ஊடல் உரைகள் பலவற்றை நம்மிடம் இனிமை தரக் கூறினாள். அவள் வாழும் ஊர் மெல்ல மெல்ல மறைகிறது. இனி என்ன ஆகுமோ?" என்று தலைவன் வருந்திக் கூறுகிறான்.

குறிப்பு

பிரிய மனமின்றிப் பிரிந்து போகும் தலைவன், ஊரினைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் செல்லுகின்றானாதலின், 'மன்றும் தோன்றாது, மரமும் மாயும்' என்றான்.

சொற்பொருள்

1. எவன் ஆவது கொல் - என்ன ஆகுமோ?
2. மன்றும் - ஊர்ப் பொதுவிடம்; மாயும் - மறையும்.
3. உலம்பும் - முழங்கும்; செங்கண்ஆடவர் - பசுக்களைக் கவரும் வீரர்.
4. ஞெலி - தீக்கொள்ளி; வார் - நீண்ட.
5. எல் - இரவு; ஊர் எறிந்து - மாற்றார் ஊரினை அழித்து; பல்ஆ - பல பசுக்கள்; தழீஇ - கவர்ந்து.
6. விளிபடு - கூப்பாட்டுடன் கூடிய; பூசல் - பேரொலி; இரட்டும் - மாறி ஒலிக்கும்.
7. ஆறு - வழி; நீந்தி - கடந்து.
9. உயர் பிறை - உயர்வான மூன்றாம் பிறை.
11. ஈட்டு - ஈட்டுவதற்கு; அருங்குரைய - அரிதான.
12. நீட்டுவிர் - காலம் நீட்டிப்பீர்.
13. குறுநெடும் புலவி - குறிய நெடிய ஊடலுரை.
14. நெருநல் - நேற்று; தீம் - இனிய.
15. சிறுநல் ஒருத்தி - இளமையும் அழகும் கொண்ட தலைவி.

தலைவன் கூற்று

அகநானூறு 287 **குடவாயிற் கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்து போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்து நின்று, தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடக் கருதிய தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான்; பிரிவாற்றாமையால் இடைவழியில் தலைவியை நினைந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

தொடிஅணி முன்கைத் தொகுவிரல் குவைஇப்
படிவ நெஞ்சமொடு பகல்துணை ஆக,
நோம்கொல்? அளியள் தானே! தூங்குநிலை,
மரைஏறு சொறிந்த, மாத்தாள் கந்தின்

சுரைஇவர் பொதியில் அம்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரிஅரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப்புறா இரிக்கும் தூமழை நனந்தலை,
கணைக்கால் அம்பிணை ஏறுபுறம் நக்க,
ஒல்குநிலை யாஅத்து ஓங்குசினை பயந்த
அல்குறு வரிநிழல் அசையினம் நோக்க,
அரம்புவந்து அலைக்கும் மாலை,
நிரம்பா நீள்இடை வருந்துதும், யாமே.

தெளிவுரை

அழகிய குடியிருப்பினைக் கொண்ட சிற்றூரில் உள்ளார் அம்பலத்தில் உள்ள நடுகல்லுக்குப் பலியிட மறந்தமையால் ஒருவரும் அங்கு வருவதில்லை. மன்றத்தில் சுரைக்கொடி படர்ந் திருக்கிறது. பலிபீடம் வெறுமையாய் உள்ளது. பலிபீடத்திற்கு அருகில் ஓர் ஆலமரம், தன் விழுதுகளை இறக்கி மதில் சுவர்போல் சூழ்ந்துள்ளது. கோடைக்காற்று விழுதுகளை மோதித் தாக்க அவற்றில் அமர்ந்திருந்த புறாக்கள் பறந்தோடின. சிறிதளவும் மழை பெய்யவில்லை. ஒரு பக்கத்தில் பெண்மானின் முதுகை ஆண்மான் அன்போடு நாவினால் நக்கி வருடுகிறது. உயர்ந்த யாமரத்தின் சுருங்கிய வரிவரியாய் உள்ள நிழலில் நாம் தங்கியிருந்து பகல் பொழுதைக் கழித்தோம். மாலை நேரம் குறும்பாய் நம்மைத் துன்புறுத்துகிறது. சென்று முடிவுறாத பாலைநில வழியில் நாம் தனித்து வருந்தியிருக்கிறோம்.

நம் தலைவி வளையல் குலுங்கும் தன் கைவிரல்களைக் குவித்து நம் நலத்திற்காக விரதம் கொண்ட நெஞ்சத்துடன் வணங்கிப் பகல் நேரமே தனக்குத் துணையாய் அமைய வருந்தியிருப்பாளோ? அவள் மிகவும் இரங்கத்தக்கவள்.

கருத்து

நெஞ்சே! காட்டுவழியில் சென்ற நம்மை விரைவில் காண வேண்டு மென்று விரதம் மேற்கொண்ட நெஞ்சுடன் தலைவி வருந்தியிருப்பாளோ?

விளக்கம்

"நெஞ்சே! நாம் யாமரத்து நிழலில் நம்மைத் துன்புறுத்தும் இம்மாலையில் தனித்து வருந்துகின்றோம். நம் தலைவியோ, வளையல் அணிந்த முன்கையின் விரல்களைத் தொகுத்துக் குவித்து நம்மை விரைவில் காண வேண்டுமென்று விரதங் கொண்டுள்ள நெஞ்சத்தோடே, வேறு துணையின்றிப் பகற் பொழுதே தனக்குத் துணையாய் அமைய வருந்தியிருப்பாள்' என்று, பிரிந்து சென்ற தலைவன் இடை வழியில் ஆற்றாமையால் தன் நெஞ்சை நோக்கிச் சொல்கிறான்.

சொற்பொருள்

1. குவைஇ - குவித்து.
2. படிவம் - விரதம்.
3. நோம் கொல்? - வருந்தியிருப்பளோ?; தூங்குநிலை - அசையும் நிலை.
4. மரைஏறு - ஆண்மான் (மரை - ஒருவகை மான்); சொறிந்த - தினவு நீங்கத் தேய்த்த; மாத்தாள் - கரிய அடிப்பகுதியைக் கொண்ட; கந்து - தூண்.
5. சுரை - சுரைக்கொடி; இவர்தல் - படர்தல்; பொதியில் - அம்பலம், பொது இடம்.
6. நாட்பலி - விடியற்காலைப் பலி; நரைக்கண் - வெறிச்சோடிய இடம்; இட்டிகை - செங்கல்.
7. புரிசை - மதில்; மூழ்கிய - சூழ்ந்துள்ள; பொரிஅரை - பொரிந்த அடிப்பகுதி; ஆலம் - ஆலமரம்.
8. நெடுவீழ் - நீண்ட விழுது; உதைத்த - அசைத்த; கோடை - மேல் காற்று.
9. இரிக்கும் - ஓட்டும்; தூமழை - மழை ஒழிந்த (தூவுதல் - ஒழிதல்).
10. கணை - திரட்சி; அம் பிணை - அழகிய பெண்மான்; ஏறு - ஆண் மான்; நக்க (முதுகிடத்தே நாவினால்) நக்க.
11. ஒல்குதல் - அசைதல்; யாஅ - யா மரம்; பயந்த - உண்டாக்கிய.
12. அல்குறு - சுருங்கிய; வரிநிழல் - வரி வரியாய் உள்ள நிழல்; அசையினம் நோக்க - தங்கியிருந்து பார்க்க.
13. அரம்பு வந்து - குறும்பாக வந்து; அலைக்கும் - வருத்தும்.
14. நிரம்பா - சென்று முடிக்க முடியாத; நீள்இடை - நீண்ட வழியிடை.

தலைவன் கூற்று

அகநானூறு 279 **இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் இடைவழியில் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

நட்டோர் இன்மையும், கேளிர் துன்பமும்,
ஒட்டாது உறையுநர் பெருக்கமும் காணூஉ,
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல,
பொன்அவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோர்என;
நள்ளென் கங்குலும் பகலும், இயைந்துஇயைந்து
உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி
ஆள்வினை மாரியின் அவியா, நாளும்
கடறுஉழந்து இவணம் ஆக; படர்உழந்து
யாங்குஆ குவள்கொல் தானே தீம்தொடை
விளரி நரம்பின் நயவரு சீறியாழ்
மலிபூம் பொங்கர் மகிழ்குரல் குயிலொடு
புணர்துயில் எடுப்பும் புனல்தெளி காலையும்,
நம்முடை மதுகையள் ஆகி, அணிநடை
அன்னமாண் பெடையின் மென்மெல இயலி,
கையறு நெஞ்சினள், அடைதரும்
மைஈர் ஓதி மாஅ யோளே?

தெளிவுரை

“நெஞ்சே! தேமல் படர்ந்த நெருங்கிப் பணைத்த மென்மை யான மார்பகங்களைவிட்டு நீங்காத நெஞ்சினர்தாம் அவர்கள் நண்பர்கள் வறுமையால் வாடுவதையும், உறவினர் துன்புறு வதையும், பகைவர்கள் செல்வச் செருக்கோடு வாழ்வதையும்

பார்த்துக் கொண்டு ஒரே ஊரில் வாழ வல்லவர். அது நம்மால் இயலாது. உறவினர், நண்பர் ஆகியோரின் துன்பத்தை நீக்க வேண்டுமென்னும் விருப்பத்தினால் இரவு பகலாய் நம்மை எரித்துச் சுடுகின்ற கவலையாகிய மிக்க தீயினை, முயற்சி என்னும் தண்ணீரால் அணைத்துப் பொருள் ஈட்டப் புறப்பட்டு விட்டோம். வழியில் இக்காட்டில் ஒவ்வொரு நாளும் துன்பத்தை அனுபவிக்கின்றோம் என்பது உண்மை.

"தலைவி, நம்மைப் பிரிந்து வாழ்கிறாள். இக்காலம் காதலர் மகிழ்ந்து வாழும் இளவேனிற்காலம். வைகறைப்பொழுதில் சிறிய யாழில் வாசிக்கப்பெறும் விளரி என்னும் பண்ணும் மலர்ந்த மரங்களிலிருந்து மகிழ்ந்து கூவும் குயிலின் இசையும் காதலர் களைத் துயில் எழுப்பும். நம்மையே தன் வலிமையாய்க் கொண்டிருப்பவள், நம் தலைவி. மாண்புற்ற அன்னப்பெடை போலும் அழகிய நடையால் மெல்லென நடந்து, செயலற்ற நெஞ்சினளாய், நம்மை அணையும் கரிய நெடிய கூந்தலைக் கொண்ட மாமை நிறத்தவளாகிய அவள் துன்பத்தால் வருந்தி என்ன நிலையை எய்துவளோ?"

கருத்து

நெஞ்சே! பொருளீட்ட நாம் புறப்பட்டு வந்துவிட்டோம். மகளிர் காதலரோடு கூடி மகிழும் இவ்விளவேனிற் காலத்தில் நம் தலைவி என்ன ஆவளோ?

விளக்கம்

"நண்பரும் உறவினரும் வறுமையால் வாடுவதையும் பகைவர் தருக்குற்றுப் பெருமிதத்தோடு வாழ்வதையும் பார்த்து, அவருடன் ஒரே இடத்தில் வாழ்ந்திருப்பது மானமுடையார்க்குப் பொறுத்தற்கரியது. எனவே, இவற்றைக் களையத் தலைவியைப் பிரிந்து அவ்வருத்த நெருப்பை முயற்சி என்னும் நீரால் அவித்துப் பொருள் தேடப் புறப்பட்டு விட்டோம். இக்காட்டில் நாள்தோறும் வருந்திய நிலையில் பிரிந்து வாழ்கிறோம். மகளிர் காதலரோடு மகிழ்ந்து வாழும் இவ்விளவேனிற் காலத்தில் தலைவி அங்கே எப்படி வருந்தியிருப்பாளோ?" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லி வருந்தினான்.

சொற்பொருள்

1. நட்டோர் - நட்புக் கொண்டோர்; இன்மை - வறுமை; கேளிர் - உறவினர்.
2. ஒட்டாது - பொருந்தாது; பெருக்கம் - செல்வச்செருக்கு; காணூஉ - கண்டும்.
3. ஒருபதி வாழ்தல் ஆற்றுப - ஒரே ஊரில் வாழப்பொறுத்திருப்பார்கள்.
4. அவிர் - ஒளி; சுணங்கு - தேமல்; செறிய - நெருங்க; வீங்கிய - பருத்த.
5. கடவாதோர் - நீங்காதோர்.
6. நள்என் - 'நள்' என்னும் ஓசை கொண்ட; இயைந்து இயைந்து - தோன்றித் தோன்றி.
7. பொத்திய - மூண்ட; உரம் - நெஞ்சு; கூர் - மிக்க.
8. ஆள்வினை - முயற்சி; மாரி - மழை; அவியா - அவித்து.
9. கடறு - காடு; இவணம் - இங்கே; படர் - துன்பம்.
10. தீந்தொடை - இனிதாய்த் தொடுத்தல்.
11. நயவரு - இனிமை பொருந்திய; சீறியாழ் - சிறிய யாழ்.
12. மலி - மிக்க; பூம் பொங்கர் - பூங்கொம்பு.
13. புனல் தெளிகாலை - நீர் தெளிந்து வரும் பொழுது (இளவேனிற் காலம்).
14. மதுகை - வலிமை.
15. அன்னமாண் - அன்னத்தின் மாட்சிமைப்பட்ட; பெடை - பெண்; இயலி - நடந்து.
16. கையறு - செயலற்ற; அடைதரும் - அணைத்துக்கொள்ளும்.
17. மை ஈர் ஓதி - கரிய குளிர்ந்த கூந்தல்; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 373 **பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்து போகாநின்ற தலைமகன், இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். இடைவழியில் தலைவியை நினைத்து அவன் நெஞ்சம் மறுகியது. அப்போது அவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

முனைகவர்ந்து கொண்டென, கலங்கி, பீர்எழுந்து,
மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்து,
பணைத்தாள் யானை பரூஉப்புறம் உரிஞ்சி,
செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியில்,
அருஞ்சுரம் நீந்திய வருத்தமொடு கையற்று,
பெரும்புன் மாலை புலம்புவந்து உறுதர,
மீளி உள்ளம் செலவுவலி யுறுப்ப,
தாள்கை பூட்டிய தனிநிலை இருக்கையொடு,
தன்நிலை உள்ளும் நம்நிலை உணராள்;
இரும்பல் கூந்தல் சேயிழை மடந்தை,
கனைஇருள் நடுநாள், அணையொடு பொருந்தி,
வெய்துற்றுப் புலக்கும் நெஞ்சமொடு, ஐதுஉயிரா,
ஆய்இதழ் மழைக்கண் மல்க, நோய்கூர்ந்து,
பெருந்தோள் நனைக்கும் கலுழ்ந்துவார் அரிப்பனி
மெல்விரல் உகிரின் தெறியினள், வெள்வேல்
அண்ணல் யானை அடுபோர் வேந்தர்
ஒருங்குஅகப் படுத்த முரவுவாய் ஞாயில்
ஓர்எயில் மன்னன் போல
துயில்துறந் தனள்கொல்? அளியள் தானே!

தெளிவுரை

“நெஞ்சே! போர்முனையில் பகைமன்னர் போரிட்டுக் கைப்பற்றியதால், அவ்வூர் மன்றம் சிதைவுற்றுப் பீர்க்கங்

கொடிகள் படர்ந்து, வீடுகளும் பாழ்பட்டன. மரை மான்கள் வந்தடையும் மன்றத்தில் உள்ள பெரிய தூண், யானை தன் பருத்த முதுகால் உராய்ந்ததால், தளர்வுற்ற விட்டங்கள் விழுந்து விட, முதிய தூண்கள் நிற்கின்ற அம்பலம் பொலிவிழந்து காணப்பட்டது. அரிய வழியைக் கடந்து வந்த துன்பத்துடன் மாலைக்காலத்துத் தனிமைத் துன்பமும் ஒருசேர வந்தடைய அவ்வம்பலத்திலே நாம் உறங்கியிருக்கிறோம். மறம் பொருந்திய வலிமையையும், சிறந்த ஊக்கத்தையும் கொண்ட நம் உள்ளமானது பொருள்வயிற் போகாது தலைவியிடம் மீண்டு போதலை வற்புறுத்துகிறது. நம் தலைவியோ, தன் கைகளால் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, தான் அடையும் துன்பத்தை நினைத்துப் பார்க்கின்றாளேயன்றி இவ்விடம் நாம் படும் துயரினை உணர்பவளாய் இல்லை.

"நீண்ட கருமையான திரண்ட கூந்தலையும், சிவந்த பொன் அணிகளையும் கொண்ட நம் தலைவி இருள் நிறைந்த இந்த நள்ளிரவில் படுக்கையில் கிடந்தவளாய், கொதிப்புற்று நம்மை வெறுக்கும் நெஞ்சத்துடன் பெருமூச்சு விடுவாள். கண்களிலிருந்து ஒழுகும் கண்ணீர் தோளினை நனைக்க, அதனை மெல்விரல் நகத்தால் வழித்து உதறித் தெறிப்பாள். வெற்றி வேல்களுடன் தலைமைத் தன்மைமிக்க யானைப் படைகளையும், போராற்றலையும் கொண்ட மன்னர் ஒன்றாய்ச் சேர்ந்து போரிட்டதால், இடிக்கப்பட்ட பல இடங்களைக் கொண்ட ஒற்றை மதிலுக்குள் அகப்பட்ட குறுமன்னன் ஒருவனைப் போல, தன் தூக்கத்தையும் முழுமையாய்க் கைவிட்டனளோ? அவள் இரங்கத்தக்கவள். (என்ன செய்வேன்?)"

கருத்து

நெஞ்சே! தலைவி நம் நிலை உணராள். தன் தனிமையை நினைந்து வருந்தியவளாய், முற்றுகையிடப்பட்ட கோட்டைக்குள் அகப்பட்டுக் கலங்கியிருக்கும் மன்னன் ஒருவனைப் போலக் கலங்கி, தூக்கத்தையும் மறந்து இருப்பாளோ?

விளக்கம்

"நெஞ்சே! நாம் அரிய வழியினைக் கடந்து வந்த வருத்தத்தால் செயலற்றுத் தனிமைத்துயருடன் பாழடைந்த பொதுமன்றத்தில்

தங்கியுள்ளோம். நம் உள்ளம் தலைவியிடம் மீண்டு போதலை வலியுறுத்துகிறது. நம் தலைவியோ, தன் நிலையையே நினைத்த வளாய், நம் இயல்பினை அறியாதவளாய், நள்ளிரவில் படுக்கை யோடு பொருந்தி, பெருமூச்சு விட்டு, துன்பம் மிகுந்து, தூக்கம் துறந்து வருந்தியிருப்பளோ?" எனத் தலைவன் ஏக்கம் கொள் கின்றான்.

சொற்பொருள்

1. முனை - போர்முனை; பீர் - பீர்க்கங்கொடி; எழுந்து - பரந்து.
2. மரை - ஒருவகை மான்.
3. பணைத்தாள் - பெரிய தூண்; பருஉப்புறம் - பெரிய முதுகு; உரிஞ்சி - உராய்ந்து.
4. செதுகாழ் - கூரை இல்லாத விட்டம்; முதுகால் - பழைய தூண்; பொதியில் - அம்பலத்தில்.
5. கையற்று - செயலற்று.
6. புலம்பு - தனிமை.
7. மீளி - வலிமை; செலவு - (மீண்டும் தலைவியிடம்) செல்ல; வலியுறுப்ப - வற்புறுத்த.
8. தாள் - முழந்தாள்.
10. இரும்பல் - கரிய செறிந்த; சேயிழை - அணிகலன் அணிந்த தலைவி.
11. கனை - நிறைந்த; அணை - தலையணை.
12. வெய்துற்று - பெருமூச்சு விட்டு; புலக்கும் - வெறுக்கும்; ஐது - மெல்ல; உயிரா - பெருமூச்சு விட்டு.
13. ஆய்இதழ் - அழகிய பூவிதழ்; மழைக்கண் - கண் நீர்; மல்க - பெருக.
14. பெருந்தோள் - பெரிய தோள்; கலுழ்ந்து - அழுது; வார் அரி பனி - ஒழுகும் கண்ணீர்த்துளி.
15. உகிர் - நகம்; தெறியினள் - தெறிப்பாள்; வென் - வெற்றி.
16. அண்ணல் - பெருமை, தலைமை; அடுபோர் - வெல்லும் போர்.
17. ஒருங்கு அகப்படுத்த - ஒருசேரக் கைப்பற்றிய; முரவுவாய் - இடிந்து போன இடம்; ஞாயில் - மதிலின் ஓர் உறுப்பு.
18. எயில் - மதில்.
19. துயில் - உறக்கம்.

தலைவன் கூற்று

அகநானூறு 381 **மதுரை இளங்கௌசிகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டி வரும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான்; இடைச்சுரத்தில் தலைவியை நினைந்து வருந்தித் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ஆளி நல்மான் அணங்குடை ஒருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப,
ஏந்தல் வெண்கோடு வாங்கி, குருகுஅருந்தும்
அஞ்சுவரத் தகுந ஆங்கண், மஞ்சுதப,
அழல்கான்று திரிதரும் அலங்குகதிர் மண்டிலம்
நிழல்சூன்று உண்ட நிரம்பா நீள்இடை,
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
வில்சினம் தணிந்த வெருவரு கவலை,
குருதி ஆடிய புலவுநாறு இருஞ்சிறை
எருவைச் சேவல் ஈண்டுகிளைத் தொழுதி,
பச்சூன் கொள்ளை சாற்றி, பறைநிவந்து,
செக்கர் வானின் விசும்புஅணி கொள்ளும்
அருஞ்சுரம் நீந்திய நம்மினும், பொருந்தார்
முனைஅரண் கடந்த வினைவல் தானைத்
தேன்இமிர் நறுந்தார், வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன்எயில் போல,
பெரும்பாழ் கொண்ட மேனியள், நெடிதுஉயிர்த்து,
வருந்தும்கொல்? அளியள் தானே—சுரும்புஉண,
நெடுநீர் பயந்த நிரைஇதழ்க் குவளை
எதிர்மலர் இணைப்போது அன்ன,தன்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே!

தெளிவுரை

விலங்குகளைத் துன்புறுத்தும் ஆற்றலினைக் கொண்ட ஆண் ஆளி, வலிமை பொருந்திய ஆண்யானை வருந்த அதன் நிமிர்ந்த வெண்மையான கொம்பைப் பிடுங்கிக் குருத்தைத் தின்னும் காட்டு வழியில் வந்துள்ளோம்.

அத்தகைய அச்சம் தரும் காட்சிகளைக் கொண்ட காட்டில், மேகம் மழை பெய்யாது நீங்கியதால், தீயைக் கக்கும் கதிர்களைக் கொண்ட ஞாயிறு, நிழலினைத் தோண்டி உண்டது போன்ற வெப்பம் மிக்குள்ளது.

செல்லச் செல்ல முடிவு பெறா நீண்ட வழியில், கன்றின் தோலால் மூடப்பட்ட குடிலினையும், சினமிக்க நாயையும், கொண்ட வடுகர் வழிப் போவாரைத் தம் வில்லால் கொன்று தம் சினம் தணியும் அச்சம் தரும் பிரிவுபட்ட வழிகளில் சென்று கொண்டுள்ளோம்.

பசிய ஊனின் மிகுதியை அறிவிக்கும் குருதி படிந்த சிறகுடைய ஆண்பருந்தின் சுற்றத்தோடு கூடிய கூட்டம், பறந்து எழுந்து சென்று செவ்வானம்போல, ஆகாயத்தை அழகு செய்யும். அத்தகைய பாலைநில வழியைக் கடந்து வந்துள்ள நம்மைக் காட்டிலும், பகைவர் அரணை வெல்லும் போர்த்தொழிலில் வல்ல படையினையும் வண்டுகள் ஒலிக்கும் மாலையையும் உடைய சேர வேந்தன் போர் புரிந்து அழித்த பகைவரின் மதில் போன்று தலைவி மிகவும் பாழ்பட்ட மேனியளாகித் துன்புற்றி ருப்பாள்.

வண்டு தேன் உண்ணுதற்கு இடமானவையும் ஆழம் கொண்ட நீரில் தோன்றியவையுமான குவளையின் புதிய மலர்களை ஒத்த, வரிகள் படர்ந்த சிவந்த குளிர்ந்த கண்கள் தெளிந்த நீரை வடிக்கப் பெருமூச்சு எறிந்து அவள் வருந்தி இருப்பளோ? அவள் இரங்கத் தக்கவள்.

கருத்து

நெஞ்சே! பாழ்பட்ட மதில்போல மேனியழகு பாழ்படக் கண்களில் நீர் வழியத் தலைவி வருந்தி இருப்பாளோ?

விளக்கம்

தலைவன் சுரத்திடையில் தன் நெஞ்சைத் தேற்றுகிறான்:

"நெஞ்சே! அரிய சுர நெறியைக் கடந்து வந்துள்ள நம்மைக் காட்டிலும், நம் தலைவியின் மேனியழகு மிகவும் பாழ்பட பெருமூச்சுவிட்டுக் கண்கள் நீர் சொரிய வருந்தியிருப்பாள்! அவள் மிகவும் இரங்கத்தக்கவள்" என்று சொல்லித் தன் நெஞ்சைத் தேற்றினான்.

குறிப்பு

ஆளி - சிங்கம் போன்ற ஒரு விலங்கு. இப்போது அவ்விலங்கு இல்லை. திருக்கோவில்களில் தூண்களைச் சுமந்து நிற்பதுபோலக் கற்களில் இதன் உருவம் வடிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம்.

சொற்பொருள்

1. ஆளி - ஒரு வகை விலங்கு; நல்மான் - நல்ல விலங்கு; அணங்குதல் - வருத்துதல்; ஒருத்தல் - ஏறு, ஆண்.
2. மீளி - வலிமை கொண்ட; நெடுந்தகை - தலைமைத் தன்மை கொண்ட யானை.
3. ஏந்தல் - நிமிர்ந்த; கோடு - கொம்பு; வாங்கி - பிடுங்கி; குருகு - குருத்து.
4. மஞ்சு - மேகம்; தப - தப்ப - பெய்யாது ஒழிய.
5. கான்று - கக்கி; அலங்கு கதிர் - அசையும் கதிர்களைக் கொண்ட; மண்டிலம் - சூரியன்.
6. சூன்று - அகழ்ந்து, தோண்டி; நிரம்பா - செல்ல முடிவுறாத; நீள் இடை - நீண்ட வழி.
7. கற்றுரி - கன்று உரி - கன்றின் தோல்; குடம்பை - குடிசை; கதம் - சினம்; வடுகர் - இனம் ஒன்றைச் சார்ந்தவர் (தெலுங்கு மொழி பேசுவோர்).
8. வெருவரு - அஞ்சத்தக்க; கவலை- கவர்த்த வழி.
9. ஆடிய - படிந்த; புலவு - புலால்; இருஞ்சிறை - பெரிய சிறகு.
10. எருவை - தலை வெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து; சேவல் - ஆண்; ஈண்டு கிளை - சுற்றத்துடன் கூடிய; தொழுதி - கூட்டம்.
11. பச்சூன் - பசிய ஊன்; கொள்ளை - மிகுதி; சாற்றி - தெரிவித்து; பறை நிவந்து - பறந்து எழுந்து.

12. செக்கர் வான் - செவ்வானம் (குருதி படிந்த சிறகுடன் பருந்தின் கூட்டம் வானிலே வட்டமிடுவதால் வானம் செவ்வானம் போலாயிற்று).
13. பொருந்தார் - பகைவர்.
14. முனை - போர்முனை; அரண் கடந்த - கோட்டையை வென்ற; வினைவல் - (போர்த்) தொழில் வல்ல; தானை - சேனை, படை.
15. தேன் - வண்டுகள்; இமிர் - ஒலிக்கும்; தார் - மாலை (அணிந்த); வானவன் - சேர மன்னன்; உடற்றிய - (போர் புரிந்து) அழித்த.
16. ஒன்னா - மாறுபட்ட; தெவ்வர் - பகைவர்; எயில் - மதில், கோட்டை.
17. பெரும்பாழ் - மிக்க பாழ்பட்ட; உயிர்த்து - பெருமூச்சு விட்டு.
18. அளியள் - இரங்கத்தக்கவள்; சுரும்பு - வண்டு.
19. நிரை - இதழ் - நிரையாய் உள்ள இதழ்கள்.
20. எதிர்மலர் - புதிய மலர்; இணைப்போது - இணையான இரண்டு மலர்கள்.
21. தெண்பனி - தெளிந்த நீர்.

தலைவன் கூற்று

அகநானூறு 371 **எயினந்தை மகன் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்து போகாநின்ற தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான்; அவன் இடைவழியில் தன் தலைவியை நினைந்து, அவள் தனிமையில் எத்தகைய துன்பத்தை அடைவாளோ என்று கூறியது.

அவ்விளிம்பு உரீஇய விசைஅமை நோன்சிலை
செவ்வாய்ப் பகழி செயிர்நோக்கு ஆடவர்
கணைஇடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளி,
குறுநெடுந் துணைய மறிபுடை ஆட,
புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை
மேய்பதம் மறுத்த சிறுமையொடு, நோய்கூர்ந்து,

நெய்தல்அம் படுவில் சில்நீர் உண்ணாது,
எஃகுஉறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்,
பைதுஅற வெம்பிய பாழ்சேர் அத்தம்,
எமியம் நீந்தும் எம்மினும், பனிவார்ந்து,
என்ன ஆம்கொல் தாமே, 'தெண்நீர்
ஆய்சுனை நிகர்மலர் போன்ம்'என நசைஇ,
வீதேர் பறவை விழையும்
போதுஆர் கூந்தல் நம்காதலி கண்ணே?

தெளிவுரை

"நெஞ்சே! தேனை விரும்பி மலர்களை ஆராயும் வண்டுகளானவை தெளிந்த நீரைக் கொண்ட பல அழகிய சுனையில் உள்ள மலர்கள்போலும் என்று கருதி மொய்ப்பதற்கு இடமான வகையில் மலர்களைக் கொண்ட கூந்தலைக் கொண்டவள், நம் தலைவி. (அவள் கண்கள் என் பிரிவால் வருந்தி அழுமே.)

"வலிமையான விசை அமைந்த வில்லையும், குருதியால் சிவந்த அம்பினையும், சினம் கொண்ட பார்வையையும் கொண்ட மறவர், அழகிய விளிம்பினை உருவி எய்த அம்பால் பெண்மான் ஒன்று இறந்து வீழ்ந்தது. அதன் காதல்மிக்க ஆண்மான் அதனை நினைத்து வருந்தியிருந்தது. சிறியதும் பெரியதும் ஆகிய அதன் இரு குட்டிகள் தம் தாய் இறந்ததை உணராமல் தந்தை அருகே விளையாடிக் கொண்டிருக்கின்றன.

"முறுக்குண்ட கொம்புகளைக் கொண்ட அந்த ஆண்மான் புல் மேய்தலையும் வெறுத்தது; களர் நிலத்தில் உள்ள சிறிய நீர்க் குழியில் கிடக்கும் சிறிதளவு நீரையும் பருகாது, அம்பு தைக்கப்பெற்ற மக்களைப் போல வருந்திக் கண் அயர்ந்து கிடக்கும்.

"இத்தகைய பசுமையற்ற, வெப்பம் மிகுந்த, பாழ்பட்ட காட்டு வழியாகச் செல்லும்போது நமக்கு வருத்தம் ஏற்படுகிறது. நம்மைக் காட்டிலும் தலைவியின் கண்கள் நீர் ஒழுகப்பெற்று எத்தகைய துன்பத்தினை எய்துமோ?" என்று பொருள்வயிற் பிரிந்த தலைவன் தலைவியை நினைந்து ஏங்கிக் கூறுகிறான்.

கருத்து

நெஞ்சே! நம் பிரிவால் தலைவியின் கண்கள் கண்ணீர்விட்டு எத்தகைய துன்பத்தை அடையுமோ?

விளக்கம்

பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் தன் நெஞ்சத்தினிடம், "நெஞ்சே! சுர வழியைத் தனியாய்க் கடந்து செல்லும் என்னைக் காட்டிலும் நம் காதலியின் கண்கள் நீர் சிந்தி எத்தகைய துன்பத்தை அடைந்திருக்குமோ? அறியேன்; என் செய்வேன்?" எனக் கலங்கிக் கூறுகிறான்.

சொற்பொருள்

1. அம் விளிம்பு - அழகிய விளிம்பு; உரீஇய - உருவி; நோன் - வலிமை; சிலை - வில்.
2. பகழி - அம்பு; செயிர்நோக்கு - சினம் கொண்ட பார்வை.
3. கணை - அம்பு; கழிந்த - இறந்த; வீழ் - விரும்பும்; துணை - துணையாகிய பெண்மான்.
4. குறுநெடுந்துணைய - சிறிதும் பெரிதுமான இரட்டையான; மறி - குட்டிகள்; புடைஆட - அருகே விளையாடிக்கொண்டிருக்க.
5. புன்கண் - வருத்தம்; திரிமருப்பு - முறுக்குண்ட கொம்பு; இரலை - ஆண் மான்.
6. பதம் - உணவு; சிறுமையொடு - வெறுப்புடன்.
7. நெய்தல் - களர் நிலம்; படு - சிறிய குழி; சில்நீர் - சிறிதளவு நீர்.
8. எஃகு - அம்பு; இனைந்து - வருந்தி; கண்படுக்கும் - கண்ணயர்ந்து கிடக்கும்.
9. பைதுஅற - பசுமை நீங்கிய; வெம்பிய - கொதித்த.
10. எமியம் - தனியாய்; நீந்தும் - செல்லும்; பனி வார்ந்து - நீர் ஒழுக.
12. ஆய்சுனை - அழகிய நீர்ச் சுனை; போன்ம் - போன்றது; நசைஇ - விரும்பி.
13. வீ - மலர்; தேர் - ஆராயும்; பறவை - வண்டு.
14. போது - மலர்; ஆர் - நிறைந்த.

தலைவன் கூற்று

அகநானூறு 169 **தொண்டி ஆமூர்ச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் விருப்பத்தால் தலைவியைப் பிரிந்தான், தலைவன்; காட்டுவழிகள் பலவற்றையும் கடந்து சென்றவன் இடைவழியில் தன் காதலியை நினைத்துக் கொள்கிறான்; அதனைத் தன் நெஞ்சிற்குச் சொல்லுகிறான்.

மரம்தலை கரிந்து நிலம்பயம் வாட,
அலங்குகதிர் வேய்ந்த அழல்திகழ் நனந்தலை,
புலிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழிஊன்
கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை,
ஞெலிகோல் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்
கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்
சுனைகொள் தீம்நீர்ச் சோற்றுஉலைக் கூட்டும்
சுரம்பல கடந்த நம்வயின் படர்ந்து,நனி
பசலை பாய்ந்த மேனியள், நெடிதுநினைந்து,
செல்கதிர் மழுகிய புலம்புகொள் மாலை
மெல்விரல் சேர்த்திய நுதலள், மல்கிக்
கயல்உமிழ் நீரின் கண்பனி வார,
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லலொடு
வருந்துமால், அளியள், திருந்திழை தானே.

தெளிவுரை

"நெஞ்சே! இக்கோடைக்காலத்தில் பாலை நில வழிகளால் கதிரவனின் வெப்பத்தால் மரங்களின் தளிர்கள் கரிந்து, நிலம் காய்ந்து, வளம் குன்றியுள்ளது. புலி யானையைக் கொன்று உண்டு விட்டுச் சென்ற எஞ்சிய ஊனை அங்கு வந்த வேட்டுவர், தம் இரும்புக்கோலில் கோத்து எடுத்துச் சென்றனர். அவர்கள் எடுத்துச் சென்ற பின்னும் பெய்து ஆக்கிய சோற்றுடன்

எஞ்சியதை, நெய்தல் நிலத்திலிருந்து உப்பு விற்கச் செல்லும் வணிகர் கூட்டம் தீக்கடைகோலால் உண்டாக்கிய நெருப்பில் வதக்கி, சுனையில் நீர் முகந்து கொணர்ந்து உலையில் சேர்த்து உண்பர். இத்தகைய காட்சிகள் கொண்ட வழிகளில் நான் வந்துள்ளேன். திருந்திய அணிகலன்களை அணிந்து மனையில் இருக்கும் என் தலைவி என்னை நினைந்து, கதிர் மங்கிய தனிமையை மிகுவிக்கும் மாலைப் பொழுதில், பசலை பரந்த மேனியளாய், துன்பத்தால் தாழ்ந்த தன் தலையைத் தன் மெல்லிய விரல்களால் நெற்றியில் சேர்த்துத் தாங்கியவண்ணம், கயல்மீன் உமிழும் நீர்போலக் கண்களிலிருந்து நீர் பெருகி வழியத் தன் பெரிய தோள்கள் மெலியப் பெற்றுத் துன்பத்தில் இருந்து வருந்தியிருப்பாள். அவள் நிலை இரங்கத்தக்கது."

கருத்து

நெஞ்சே! நான் காட்டுவழியில் வந்துள்ளேன். என்னைப்பற்றி எண்ணியே தலைவி கண்களில் நீர் வழியத் துன்பத்துடன் வருந்தி யிருப்பாள்.

விளக்கம்

"நெஞ்சே! கடும் வெயிலால் மரங்கள் கரிந்தன. அத்தகைய பாலை நிலத்தில் புலி யானையைக் கொன்று அதனை உண்டு கைவிட்டுச் சென்ற பின் மீதமுள்ள ஊனை, வேடுவர்கள் கோலிலே கோத்து எடுத்துச் செல்கின்றனர். அவர்கள் எடுத்துச் சென்ற பின்னும் மிகுந்திருப்பதை உப்பு வாணிகர்கள் தாம் உலையில் ஆக்கிய சோற்றுடன் சேர்த்துச் சிறு நெய்யில் வதக்கி உண்கின்றனர். இத்தகைய, காட்சிகள் கொண்ட அரிய வழிகள் பலவற்றை நாம் கடந்து வந்துள்ளோம். நம் தலைவி ஞாயிறு மறைந்த மாலைப்பொழுதில் தனிமையாய் இருப்பாள்; பசலை படர்ந்த மேனியளாய், தன் மென்மையான விரல்களை நெற்றி யில் சேர்த்தவண்ணம், கண்களில் நீர் வழிய, பெரிய தோள்கள் மெலிந்து வாட நம்மையே நினைந்து வருந்தியிருப்பாள்; அவள் இரங்கத்தக்கவள்."

சொற்பொருள்

1. தலை - உச்சி; பயம் - பயன்; வாட - குன்ற.
2. அலங்குதல் - அசைதல்; கதிர் - ஞாயிற்றின் கதிர்; வேய்ந்த - சூழப் பெற்ற.

3. தொலைத்து - கொன்று; கழிஊன் - எஞ்சிக் கிடந்த ஊன்.
4. கலி - ஆரவாரம்; காழ் - கோல்; ஒழிந்ததை - எஞ்சியதை.
5. ஞெலி கோல் - தீக்கடை கோல்; மாட்டி - வதக்கி.
6. கடல்விளை அமிழ்து - உப்பு; கணம் - கூட்டம்; உமணர் - உப்பு வாணிகர்.
7. தீம் - இனிய.
8. சுரம் - காடு; படர்ந்து - (தன் உள்ளம்) பற்றலால்.
10. மழுகிய - மங்கிய; புலம்பு - தனிமை.
11. மல்குதல் - நிறைதல்.
12. கயல் உமிழ்நீர் - கயல்மீன் உமிழ்ந்த நீர் போல; வார்தல் - ஒழுகுதல்.
13. செல்லல் - துன்பம்.
14. அளியள் - இரங்கத்தக்கவள்; திருந்திழை - திருந்திய அணிகலன்களை அணிந்த தலைவி.

தலைவன் கூற்று

அகநானூறு 289 **எயினந்தை மகன் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் காரணமாய்ப் பிரிந்து செல்கின்றான். அவன், தன் பிரிவினால் அன்பு மிக்க தலைவி என் ஆவாளோ என்று இரங்கித் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

சிலைஏறு அட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்
சுரனிடை விலங்கிய மரன்ஒங்கு இயவின்,
வந்து,வினை வலித்த நம்வயின், என்றும்,
தெருமரல் உள்ளமொடு வருந்தல் ஆனாது,
நெகிழா மென்பிணி வீங்கிய கைசிறிது
அவிழினும் உயவும் ஆய்மடத் தகுவி

சேண்உறை புலம்பின் நாள்முறை இழைத்த
திண்சுவர் நோக்கி, நினைந்து, கண்பனி,
நெகிழ்நூல் முத்தின், முகிழ்முலைத் தெறிப்ப,
மைஅற விரிந்த படைஅமை சேக்கை
ஐமென் தூவி அணைசேர்பு அசைஇ,
மையல் கொண்ட மதன்அழி இருக்கையள்,
பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி,
நல்ல கூறுஎன நடுங்கி,
புல்லென் மாலையொடு பொரும்கொல் தானே?

தெளிவுரை

"இரவில் மெத்தென்ற அணைப்பு நெகிழ்ந்து சிறிது விலகினாலும் வருந்தக்கூடியவள், என் தலைவி. அத்துணைப் பேதைமை கொண்டவள், அவள். பொருளீட்டுதற்குப் பிரிந்த என்னை நினைந்து அவள் வருந்தாத நேரம் இராது. நான் வந்த வழியில் வழிப்பறி கள்வர் அம்பெய்து, பயணிகளைக் கொன்று, உயிர் நீங்கப் பெற்ற உடல்களைக் கற்குவியலால் மூடி வைப்பர். அக்கற்குவியலின்மீது அவர்கள் இட்ட படர்ந்த காட்டு மல்லிகைப்பூக்கள் கோடைக்காற்றால் ஒன்று சேர்ந்து அருகில் உள்ள நடுகல்லுக்குக் காலையில் இடும் படையலாய்ச் சேரும். அத்தகைய பாலைநில வழியில் சென்று பொருளீட்ட உறுதி கொண்டுள்ள என்னையே நினைத்துத் தலைவி வருந்தியிருப்பாள்.

"நான் பிரிந்த நாள்களை அறியும்பொருட்டு வீட்டுச்சுவரில் நாள்தோறும் ஒவ்வொரு கோடிட்டு வருவாள். அந்தக் கோடுகளைப் பார்த்து நெடு நேரம் நின்று என் நலம்பற்றி நினைப்பாள்; எல்லையின்றி வருந்துவாள். அவள் கண்களில் பெருகும் நீர், நூலற்று உதிரும் முத்துகளைப் போல, முகிழ்த்த முலைமீது தெறித்து விழும். குற்றமற்ற விரிப்புப் பொருந்திய படுக்கையில் அழகிய மெல்லிய அன்னச்சிறகால் ஆகிய தலையணையைச் சேர்த்துப் பிடித்து மயக்கங்கொண்டு தன் வலிமையழிந்திருப்பாள். சுவரில் எங்காவது பல்லி ஒலித்தால் தெய்வத்தை வணங்கி, 'நல்ல குறி சொல்' என்று பல்லியை வேண்டிக்கொண்டிருப்பாள். இந்நிலையில் பொலிவற்ற மாலைக்காலத்தோடு எவ்வாறு போராடுவாளோ?"

கருத்து

நெஞ்சே! தலைவி, நான் திரும்ப வரும் நாள்களைக் கணக்கிட்டு எண்ணுவதோடு, பல்லியை நற்சொல் கூற வேண்டுமென்றும் பரவி, மாலைக் காலத்தில் மயங்கியிருப்பாள்.

விளக்கம்

"(நெஞ்சே!) தழுவிய கை சிறிது நெகிழினும் வருந்துபவள், நம் தலைவி; பொருள்வயிற் பிரிந்து செல்லும் நம்மை நினைத்து வருந்தியிருப்பாள்; நாம் பிரிந்த ஒவ்வொரு நாளும் சுவரில் ஒவ்வொரு கோடிட்டு, அச்சுவரை நோக்கி நாம் திரும்பி வர இன்னும் எத்தனை நாள்கள் ஆகுமோ என எண்ணிக் கண்ணீர் வடிப்பாள்; படுக்கையில் சாய்ந்தபடி பல்லி ஒலிப்பதைக் கேட்டு, நற்சொல் சொல்லுமாறு அதனை வணங்குவாள்; இவ்வாறு மாலை நேரத்தோடு போரிட்டுக்கொண்டு இருப்பாளே" என்று தலைவன் கவலைப்பட்டுச் சொல்கிறான்.

குறிப்பு

1. பதுக்கை : பாலைநிலத்தில் செல்லும் புதியவரை அந்நிலத்துள்ள ஆறலை கள்வர் கொன்று, இறந்தோருடலைக் கற்குவையால் மூடுவர்; இத்தகைய கற்குவியல்கள் ஆறலை கள்வர்கள் பதுங்கிக் கொள்ளப் பயன்பட்டமையால் 'பதுக்கை' எனப் பெயர் பெற்றதென்று கொள்ளலாம்.

2. நடுகல்: வீர மரணம் அடைந்தவரைப் புதைத்த இடத்தில், 'கல் நடுதல்' மரபு. இது நடுகல் என்றும், வீரக்கல் என்றும் வழங்கப்படும். இக்கல்லில் விழுப்புண் பட்டு இறந்தோரது பெயரும் பெருமையும் எழுதப்படும். இக்கல்மீது மயில் தோகையைச் சேர்த்துப் பூவிட்டு வழிபடுவர்.

3. தலைவன் பிரிந்ததும் ஒவ்வொரு நாளும் தலைவி சுவரில் ஒவ்வொரு கோடு இடுவாள். அக்கோடுகளை எண்ணித் தலைவன் தன்னைப் பிரிந்து சென்று எத்தனை நாள்கள் ஆயின என அறிந்து வருந்துவாள்.

> வாளற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல் (குறள் 1261)

என்னும் திருக்குறளை இங்கு நினைவு கொள்ளலாம்.

4. பல்லி ஒலிப்பதைக் கேட்டு, அதனால் இன்ன பலன் ஏற்படும் என உணரும் வழக்கம் பண்டு இருந்திருக்கிறது.

சொற்பொருள்

1. சிலை ஏறுஅட்ட - வில்லில் கோத்த; கணை - அம்பு; வம்பலர் - புதியவர்.
2. பதுக்கு - உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்; இவர்ந்த - படர்ந்த; ததர் - நெருங்கிய; அதிரல் - காட்டுமல்லிகையின் பூக்கள்.
3. நாள் பலி - விடியற்காலத்துப் பலி; கூட்டும் - கூட்டப்பெறும்.
4. விலங்கிய - குறுக்கிட்ட; இயவு - வழி.
5. வினை வலித்த - பொருளீட்டுவதில் உறுதி கொண்டுள்ள.
6. தெருமரல் - மனம் சுழலுதல்; ஆனாது - அமையாது.
7. நெகிழா - நெகிழ்ந்து; மென்பிணி - மெத்தென்ற பிணிப்பு; வீங்கிய - மிக்க; கை சிறிது - கை அணைப்பு சிறிது.
8. அவிழினும் - விலகினும்; உயவும் - வருந்தும்; மடத்தகுவி - இளம பருவத்தினளாய தலைவி.
9. நாள் முறை - நாள்தோறும்; இழைத்த - கோடிட்டு வந்த.
10. நினைந்து - (சென்ற நாள்களையும் இனியும் கழிய வேண்டிய நாள்களையும்) எண்ணிப் பார்த்து; கண்பனி - கண் நீர்.
11. முகிழ்தல் - குவிதல்.
12. படைஅமை - விரிப்பு பொருந்திய; சேக்கை - படுக்கை.
13. ஐ - அழகு; தூவி - (அன்னப்பறவையின்) சிறகினுள் உள்ள பஞ்சு போன்ற மயிர்த்தொகுதி; அணை - தலையணை; சேர்பு - சேர்ந்து; அசைஇ - தங்கி.
14. மையல் - மயக்கம்; மதன் அழி - வலிமையற்ற.
15. பகுவாய் - பிறந்த வாய்; படுதொறும் - ஒலிக்கும்தொறும்; பரவி - தெய்வத்தைத் தொழுது.
16. நல்ல கூறு - நல்ல மொழியினைச் சொல்.

தலைவன் கூற்று

அகநானூறு 365 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன், இடைச்சுரத்து நின்று சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்தான்; இடைச்சுரத்தில் அவன் நெஞ்சம் தலைவியை நினைந்து மறுகியது; அதனால் தலைவன் தன் நெஞ்சினை இடித்துக் கூறியது.

அகல்வாய் வானம் ஆல்இருள் பரப்ப,
பகல்ஆற்றுப் படுத்த பையென் தோற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை,
அத்த நடுகல் ஆள்என உதைத்த
கான யானைக் கதுவாய் வள்உகிர்,
இரும்பனை இதக்கையின் ஒடியும் ஆங்கண்,
கடுங்கண் ஆடவர் ஏமுயல் கிடக்கை,
வருநர் இன்மையின் களையுர்க் காணா
என்றூழ் வெஞ்சுரம் தந்த நீயே
துயர்செய்து ஆற்றா யாகி, பெயர்புஆங்கு,
உள்ளினை – வாழிய நெஞ்சே! வென்வேல்–
மாவண் கழுவுள் காமூர் ஆங்கண்,
பூதம் தந்த பொரிஅரை வேங்கைத்
தண்கமழ் புதுமலர் நாறும்
அம்சில் ஓதி ஆய்மடத் தகையே.

தெளிவுரை

“நெஞ்சே! அகன்ற வானத்தில் நிறைந்த இருள் பரவுமாறு ஞாயிற்றை மறையச்செய்து, பசிய தோற்றத்துடன், மிக்க துன்பத்தினைச் செய்யும் மாலைக்காலம் வந்துள்ளது.

“காட்டுயானை பாலைவழியிலுள்ள நடுகல்லை ஆள் எனக் கருதி உதைத்தமையால் அதன் வளவிய பெருநகம் சிதைவுற்றுப்

பனை நுங்கின் தோடுபோல முரிந்து வீழும்; அவ்விடத்தே வலிமை பொருந்திய ஆறலை கள்வர் கொள்ளை கொள்ள அம்பு எய்யும் முயற்சியோடு பதுங்கியிருப்பர். காட்டில் நிகழும் கொடுமையால் வருவார் போவார் இன்மையால் அக்கள்வரின் வறுமையை நீக்குவார் இல்லாத இடமாய் அஃது இருந்தது. வெயில் நிலைபெற்ற அக்கொடிய சுரவழியில் மாலைக்காலத்தே என்னை நீ அழைத்து வந்துவிட்டாய்.

"எனக்குத் துன்பத்தைத் தந்த நீயும், என்னைப் போலவே தலைவியின் பிரிவால் உண்டான துன்பத்தைப் பொறுக்கும் ஆற்றல் அற்றவன் ஆனாய்; வெற்றி தரும் வேலினையும் பெரும் வள்ளல் தன்மையையும் கொண்டவன், கழுவுள் என்பவன்; அவனது காமூர் என்னுமிடத்தில் பூதத்தால் வழங்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய பொரிந்த அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் மணங்கமழும் குளிர்ச்சி பொருந்திய மலர் போன்ற அழகிய கூந்தலைக் கொண்ட நம் தலைவியின் அழகிய இளமைத் தன்மையை நீ நினைந்து மீளக் கருதுகின்றாய்."

கருத்து

நெஞ்சே! தலைவியின் இளமையை நினைந்து உடனே ஊர் திரும்ப விரும்புகிறாய்!

விளக்கம்

'என் நெஞ்சமே! வாழிய! மாலைக்காலத்தில் கொடிய சுரவழியில் என்னை அழைத்து வந்தாய்; அதனால் எனக்குத் துயர் செய்து, நீயும் ஆற்றாமை அடைந்து, நம் தலைவியின் அழகிய இளமைத் தன்மையை நினைக்கத் தொடங்கினாய்' என, பிரிந்து செல்லும் தலைவன் இடைவழியில் தலைவியை நினைத்து, மயங்கும் நெஞ்சத்தினிடம் இடித்துச் சொன்னது.

சொற்பொருள்

1. அகல்வாய் - அகன்ற இடம் கொண்ட; ஆல்இருள் - நிறைந்த இருள்.
2. பகல் ஆற்றுப்படுத்த - ஞாயிற்றைப் போக்கிய; பையென் - பசிய.
3. சினவல் போகிய - சினம் மிக்க; புன்கண் - துன்பம் (செய்யும்); மாலை - மாலைக்காலம் (வந்துற்றது).

4. நடுகல் - போரில் இறந்தவர் பெயரும் பீடும் பொறித்து நடப்பட்ட கல்.
5. கதுவாய் - சிதைவுற்ற; வள்உகிர் - வளமையான நகம்.
6. இதக்கை - (பனை) நுங்கின் தோடு; ஆங்கண் - அவ்விடம்.
7. ஏமுயல் - அம்பு எய்யும் முயற்சி (ஏ - அம்பு); கிடக்கை - பதுங்கி யிருத்தல்.
8. களையுர் - (தம் வறுமையை) நீக்குபவர்.
9. என்றூழ் - வெப்பம்; தந்த - அழைத்து வந்த; நீயே - (என் நெஞ்சமாகிய) நீயே.
10. ஆற்றாய் ஆகி - பொறுக்கும் ஆற்றல் அற்றவனானாய்; பெயர்பு ஆங்கு - திரும்புவதற்கு; உள்ளினை - நினைத்தாய்.
11. வெவ்வேல் - வெற்றி வேல்.
12. மாவண் - பெரிய வள்ளல் தன்மை; கழுவுள் - சிற்றரசருள் ஒருவன்; காமூர் - கழுவுள் என்பவனுக்குரிய ஊர்.
13. பொரிஅரை - பொரிந்த அடிமரம்.
15. அம்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தல்; ஆய் மடத்தகை - அழகிய இளமைத் தன்மை.

தலைவன் கூற்று

அகநானூறு 109 **கடுந்தொடைக் காவினார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் ஈட்டச் சென்றான். நெடுந்தொலைவு சென்றபின் தலைவியை நினைந்து அவன் நெஞ்சம் கவலைப்பட்டது. அந்த நெஞ்சினை நோக்கித் தலைவன் கூறியது.

பல்இதழ் மென்மலர் உண்கண், நல்யாழ்
நரம்புஇசைத் தன்ன இன்தீம் கிளவி,
நலம்நல்கு ஒருத்தி இருந்த ஊரே
கோடுஉழு களிற்றின் தொழுதி ஈண்டிக்

காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளில் ஆடும் கழைவளர் நனந்தலை,
வெள்நுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்
எண்ணுவரம்பு அறியா உவல்இடு பதுக்கைச்
சுரம்கெழு கவலை கோட்பால் பட்டென,
வழங்குநர் மடிந்த அத்தம் இறந்தோர்,
கைப்பொருள் இல்லை ஆயினும் மெய்க்கொண்டு
இன்உயிர் செகாஅர் விட்டுஅகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரிஅதள் இறுக்கும்
அறன்இல் வேந்தன் ஆளும்
வறன்உறு குன்றம் பல்விலங் கினவே.

தெளிவுரை

தந்தங்களைக் கொண்ட வீரம்மிக்க ஆண்யானைக் கூட்டங்களைக் கொண்ட நீண்ட மரச்சோலைகள் உள்ளன. அவற்றிற்கு அடுத்து அணில்கள் தங்களுக்குள் இன்புற்று விளையாடுவதற்கு ஏற்ற மூங்கில்கள் வளர்ந்திருக்கும் அகன்ற இடங்களைக் கொண்ட பாலைநிலம் உள்ளது. அங்கு அம்பால் உயிர் பறிக்கப்பெற்றுக் கிடக்கும் இறந்தவர்களின் உடல்களைத் தழையிட்டு மூடப்பட்ட கற்குவியல்கள் இத்துணை என்று எண்ண இயலாத அளவுக்கு இருக்கின்ற, எவரும் போவதற்கு அஞ்சும் பாலை நிலம் உள்ளது. அவ்வழியில் கைப்பொருள் இன்றி வந்தோரை உயிரோடு செல்ல விட்டு, பொருள் இன்றி வறிதே வந்த தவற்றுக்காக, வழிப்பறி கள்வரை யானைக் கொம்புகளையும் புலித்தோலையும் தண்டமாய்க் கொண்டு வரக் கட்டளையிட்டுத் தண்டிக்கும் கொடுங்கோல் அரசனின் ஆட்சி நிலவும் குன்றுகள் உள்ளன. இதழ்கள் பல கொண்ட மென்மையான மலர் போன்ற அழகிய கண்களையும், இனிய யாழின் இசை போன்ற மொழியினையும் கொண்டவளாய் நமக்கு நலம் தரும் ஒருத்தி தங்கியிருக்கும் ஊர் குறுக்கிட்டு இருக்கும் அவ்விடங்கள் அனைத்தையும் அடுத்துத் தலைவியின் ஊர் நெடுந்தொலைவில் உள்ளது. (இவ்வளவு தொலைவும் கடந்து வந்து வினை முடியாமல் வறிதே மீள்வது இயலாது) எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான்.

கருத்து

"நெஞ்சே! தலைவி இருக்கும் ஊரானது பல வகைப்பட்ட நிலங்களையும், பாலையையும், மலையினையும் கடந்து அப்பால் உள்ளது. இவை இல்லையாயின் இப்போதே சென்றுவிடுவேன்.

விளக்கம்

"பகைவர்கள் மார்பினைக் குத்துகின்ற தந்தங்களைக் கொண்ட யானைகள் வாழும் அகன்ற காடாகும் அது. வேடர்கள் அக்காட்டு வழியே வரும் புதியவர்களின் உயிரைப் பறித்து விழுந்து கிடக்கும் உடல்களைத் தழைக் குவியலை இட்டு மறைப்பர். (இக்குவியல் பதுக்கை எனப்படும்.) அக்காட்டில் இத்தகைய பதுக்கைகள் எண்ணிலடங்காதவை உள்ளன. வழியில் செல்பவர்கள் கையில் பொருளில்லையாயினும் அவர்கள் உயிரைப் பறிக்க வேண்டும். கையில் பொருளில்லாதவர் உயிரைப் பறிக்காது விடுதல் தவறு. அத்தவற்றுக்காக அவர்கள், காட்டரசனுக்கு யானைத்தந்தமும் புலியின் தோலும் தண்டமாய்க் கொடுக்க வேண்டும். அறனில்லாத அந்த அரசன் ஆளுகின்ற குன்றும் மற்றும் பல பகுதிகளும் குறுக்கிட்டு நிற்கும் இடங்களுக்கு அப்பால் தலைவியின் ஊர் உள்ளது. இல்லையாயின், தலைவியிடம் இப்போதே சென்றுவிடுவேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

குறிப்பு

'அறனில் அரசன்' என்று இங்குக் குறிக்கப்பெற்றிருப்பவன், வேடர்களை ஆளும் காட்டரசன். வழிப்போக்கர் கையில் பொருள் இருந்தால் அஃதை ஆறலை கள்வர்கள் பறித்துக்கொள்வர். அவர்கள் கையில் பொருளில்லையாயின் அவர்கள் தலைகளை வெட்டி, உயிரற்ற முண்டங்கள் ஆடுவதைக் கண்டு களிப்பர். வழிப்போக்கர் சிலரிடம் கையில் பொருளில்லை என வேடுவர்கள் அவர்களைக் கொல்லாது உயிரோடு விட்டுவிட்டால், அதைக் குற்றம் எனக் கூறி, அக்குற்றத்திற்குத் தண்டமாய் யானைக்கொம்பும், புலித் தோலும் தரவேண்டுமெனக் காட்டரசன் கட்டளையிட்டான்.

சொற்பொருள்

1. உண்கண் - மை தீட்டப்பட்ட கண்.

2. இசைத்தன்ன - ஒலிப்பது போன்ற; இன்தீம் - மிக இனிய; கிளவி - சொல்.
3. நல்குதல் - தருதல்; ஒருத்தி - ஒப்பற்ற தலைவி.
4. கோடு - தந்தம்; உழு - பகையைக் குத்திக் கொல்லும்; தொழுதி - கூட்டம்; ஈண்டி - ஈண்ட - நெருங்க.
5. கால் யாத்த - பரந்த.
6. விழை வெளில் - கண்டார் விரும்பும் அணில் (வெளில் - அணில்).
7. வெள்நுனை - வெள்ளிய முனை; விசைஇட - வேகம் பட; வீழ்ந்தோர் - இறந்தோர்.
8. எண்ணு வரம்பு அறியா - எண்ணின் எல்லை அறிய இயலாத (இத்தனை என்று அறிய இயலாத); உவல் இடு பதுக்கை - தழையிட்டு மூடி மறைக்கப்பட்ட கற்குவியல்.
9. கெழு - பொருந்திய; கோள் பால் - ஆறலை கள்வரின் பகுதி; பட்டென - உள்ளதென.
10. வழங்குநர் - வழிப்போவார்; மடிந்த - செல்வார் அற்ற.
11. மெய்க்கொண்டு - உடலைப் பற்றிச் செல்லாமல்.
12. செகாஅர் - கொல்லாராய் (செகுத்தல் - கொல்லுதல்); விட்டு அகல் - உயிரோடு போகவிட்ட; தப்பல் - பிழைக்காக, தவற்றுக்காக.
13. மருப்பொடு - கொம்போடு; வரிஅதள் - புலித்தோல்; இறுக்கும் - தண்டமாகக் கொடுக்கச்செய்து தண்டிக்கும்.
15. வறன் உறு - வறட்சியுற்ற; பல் விலங்கின - பல குறுக்கிட்டுள்ளன.

தலைவன் கூற்று

அகநானூறு 299 **எயினந்தைமகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துப் போகாநின்ற தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது. (போகாநின்ற - போகிய)

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து செல்லும் தலைவன் இடைச்சுரத்துத் தன் தலைவியை நினைத்தான்; தான் பிரியும் பொழுது அவள் அடைந்த துன்பநிலை அவன் அகக்கண்முன் தோன்றி வருத்தியதனைத் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

எல்லையும் இரவும், வினைவயின் பிரிந்த
உள்ளம், முன்உறுபு அடைய உள்ளிய
பதிமறந்து உறைதல் வல்லினம் ஆயினும்,
அதுமறந்து உறைதல் அரிது ஆகின்றே—
கடுவளி எடுத்த கால்கழி தேக்கிலை
நெடுவிளிப் பருந்தின் வெறிஎழுந் தாங்கு,
விசும்புகண் புதையப் பாஅய், பலஉடன்
அகல்இடம் செல்லுநர் அறிவுகெடத் தாஅய்,
கவலை கரக்கும் காடுஅகல் அத்தம்,
செய்பொருள் மருங்கின் செலவுதனக்கு உரைத்தென,
வைகுநிலை மதியம் போலப் பையென,
புலம்புகொள் அவலமொடு, புதுக்கவின் இழந்த
நலம்கெழு திருமுகம் இறைஞ்சி, நிலம்கிளையா
நீரொடு பொருத ஈர்இதழ் மழைக்கண்
இகுதரு தெண்பனி ஆகத்து உறைப்பக்
கால்நிலை செல்லாது, கழிபடர்க் கலங்கி,
நாநடுக் குற்ற நவிலாக் கிளவியொடு,
அறல்மருள் கூந்தலின் மறையினள் திறல்மாண்டு,
திருந்துக மாதோ,நும் செலவுஎன வெய்துஉயிரா,
பருவரல் எவ்வமொடு அழிந்த
பெருவிதுப் புறுவி பேதுறு நிலையே.

தெளிவுரை

"நீண்டு ஒலிக்கும் பருந்துகள் ஒருசேர மேலெழுந்து வானத்தில் வட்டமிட்டாற் போன்று, காற்றினால் உதிர்க்கப் பட்டுக் காம்பு கழிந்த தேக்கின் இலைகள் பலவும் மேலெழுந்து சுழன்று வட்டமிட்டு, வானத்து இடமெல்லாம் மறையுமாறு பரவின. பின்னர் மண்ணில் வீழ்ந்து, கவர்த்த வழிகளை யெல்லாம் மறைத்தன. அதனால் அப்பாலைவழிச் செல்வார், செல்லும் வழியறியாது மயங்குவர். அத்தகைய அகன்ற காட்டு வழியினைக் கடந்து, ஈட்டும் பொருள் குறித்து நாம் செல்ல விருப்பதை அவளுக்கு உரைத்தேன்.

"தனிமை கொண்டு துன்புறும் தலைவி, அதனைக் கேட்டனள்; அழகுபொருந்திய அவள் முகம் விடியற்காலத்து நிலவினைப் போல, மெல்ல மெல்லத் தன் புத்தழகினை இழந்தது; நிலம் நோக்கி முகம் கவிழ்த்தாள்; தன் காற்பெரு விரலால் நிலத்தைக் கிளறினாள்; குளிர்ந்த இமைகளைக் கொண்ட மழை போன்ற கண்கள் நீர் சொரிந்தன; அக்கண்ணீர்த் துளிகள் அவள் மார்பில் துளிர்த்து வீழ்ந்தன; கால்கள் நிலைத்து நில்லாது தடுமாறத் துன்பத்தால் நெஞ்சு கலங்கினாள்; கடுமணலைப் போன்ற விரிந்த கூந்தல் அவிழ்ந்து தாழ, கவிழ்ந்த முகத்தை அதனுள் மறைத்தாள்; நா நடுக்கமுறத் திருந்தாத சொற்களால், 'உம் பொருள்வயிற்செலவு மாட்சிமை பெற்றுத் திருத்தமுறுக' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

"பொருள் ஈட்டும் வினையின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்த நெஞ்சமே! பண்டுதொட்டுப் பகலும் இரவும் நாம் நினைத்திருக்கும் நம் ஊரினை மறந்து இவ்விடம் தங்க நம்மால் இயலும்; ஆனால், துன்பம் தரும் வருத்தத்தால் மயங்கியுள்ள நம் தலைவியை மறந்து இவ்விடம் தங்குதல் அரிதாய் உள்ளது."

கருத்து

நெஞ்சே! நம் ஊரை மறந்து நம்மால் இருக்க இயலும்; ஆனால் தலைவி வருந்தியிருப்பதை மறந்து இங்கே தங்குதல் அரிதாய் உள்ளது.

விளக்கம்

பொருள்வயிற் பிரிந்து செல்லும் தலைவன் இடைவழியில் தன் நெஞ்சிற்குச் சொல்கிறான்:

"பொருள் ஈட்டத் தலைவியைப் பிரிந்த நெஞ்சமே! நம் ஊரை மறந்து நம்மால் இங்குத் தங்கியிருக்க இயலும்; ஆனால், நான் காட்டு வழியில் செல்லவிருப்பதைக் கூறியதும் தலைவி, தன் முகத்தைக் கவிழ்த்து, நிலம் கிளறி, கண்ணீர் மார்பில் சொட்ட, கூந்தலால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு, தடுமாறிய சொற்களால், 'உம் பயணம் செப்பமுற நிகழ்க' என்று கூறி மயக்கமுற்ற நிலையில் நின்றாளே! அதனை மறந்து இங்கே தங்குதல் இயலுமா? என் செய்வேன்?" என்று தலைவன் கூறுகிறான்.

சொற்பொருள்

1. எல்லை - பகல்; வினை - பொருளீட்டும் செயல்.
2. முன்உறுபு - முன்பு தொடங்கி, பண்டுதொட்டு; உள்ளிய - நினைத்திருக்கும்.
3. பதி - ஊர்; வல்லினம் - இயலும்.
4. அது - தலைவியின் நிலை.
5. கடுவளி - விரைந்து வீசும் காற்று; எடுத்த - உதிர்க்கப்பட்ட; கால்கழி - காம்பு நீங்கப்பெற்ற.
6. நெடுவிளி - நீண்ட நேரக் கூப்பீடு; வெறி - வட்டமாய்.
7. கண் - இடம்; புதைய - மறைய; பாஅய் - பரவி; பல உடன் - பலவும் (ஒன்றாய்ச் சேர்ந்து).
8. அறிவுகெட - (செல்லும் வழியறியாது) மயங்குமாறு; தாஅய் - பரவி.
9. கவலை - கவர்த்த வழி; கரக்கும் - மறைக்கும்; அகல் - அகன்ற; அத்தம் - வழி.
10. தனக்கு - நம் தலைவிக்கு.
11. வைகுநிலை - விடியற்காலத்து; மதியம் - நிலவு; பையென - மெதுவாய்.
12. புலம்பு - தனிமை; அவலம் - துன்பம்; புதுக் கவின் - புத்தழகு.
13. நலம் - அழகு; இறைஞ்சி - கவிழ்த்து; கிளையா - கிளறி.
14. நீர் - கண்ணீர்; ஈர் - குளிர்ந்த.
15. இகுதல் - உகுத்தல்; தெண்பனி - தெளிந்த நீர்; ஆகம் - மார்பு; உறைப்ப - விழ.
16. நிலை செல்லாது - நிலைத்து நிற்காது; கழிபடர் - மிக்க துன்பம்.
17. நடுக்குற்ற - தடுமாற; நவிலாக் கிளவி - திருந்தாத (பேச எழ மாட்டாத) சொற்கள்.
18. மறையினள் - மறைத்தனள்; திறல் - செயல்; மாண்டு - மாட்சிமைப்பட்டு.
19. வெய்து உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.
20. பருவரல் - துன்பம்; எவ்வம் - வருத்தம்.
21. விதுப்புறுதல் - விரைந்து சோர்தல்; பேதுறல் - மயக்கம் அடைதல்.

தலைவன் கூற்று

அகநானூறு 123 **காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிய மனமின்றித் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவன், இடைவழியில் அவள் நினைவு எழ, அவளை நோக்கிச் செல்லத் தொடங்கிய நெஞ்சத்தினிடம் சொல்லியது.

உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல,
வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லும்
கான யானை கவின்அழி குன்றம்
இறந்து,பொருள் தருதலும் ஆற்றாய், சிறந்த
சில்ஐங் கூந்தல்; நல்அகம் பொருந்தி
ஒழியின், வறுமை அஞ்சுதி, அழிதகவு
உடைமதி வாழிய நெஞ்சே; நிலவுஎன
நெய்கனி நெடுவேல் எஃகிலை இமைக்கும்
மழைமருள் பல்தோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை,
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல,
ஒன்றில் கொள்ளாய், சென்றுதரு பொருட்கே.

தெளிவுரை

"நெஞ்சே! வாழ்க! உண்ணாமையால் மெலிந்தும், நீராடாமை யால் அழுக்கடைந்தும் உள்ள விரத வாழ்க்கையைக் கொண்ட பெரியோர் வரிசையாய்ச் செல்வதுபோல, மலைகள் நெருங்கி உள்ள சிறிய வழிகளில் யானைகள் வரிசையாய்ச் செல்லும். அழகு அழியப்பெற்ற அக்குன்றுகளைக் கடந்து சென்று நீ பொருள் ஈட்ட இயலாமல் இருக்கிறாய். அழகிய கூந்தலைக் கொண்ட தலைவியைத் தழுவி வீட்டிலேயே தங்கிவிட்டால்

வறுமை ஏற்படுமே என்றும் அஞ்சுகின்றாய். இவ்வாறு பொருள் ஈட்ட முயலும் நிலையில் ஒரு முடிவுக்கு வர இயலாமல் தடுமாறுகிறாய்.

"நிலவுபோல் ஒளி வீசும் இலை போன்ற முனையைக் கொண்டதும் எண்ணெய் பூசப்பெற்றதுமான வேலினையும், கரிய மேகம்போல் நிறம் கொண்ட கேடயங்களையும் உடைய சோழ மன்னர், மிகுந்த வள்ளல் தன்மை வாய்ந்தவர். அச் சோழர்களின் காவிரி ஆறு, ஓடம் செலுத்தும் கோலையும் மறைக்கும் அளவிற்கு ஆழமிக்க கடல் நீரைக் கொண்டது. கடலொடு கலக்கும் புகார் என்னும் பெரும் துறையில் கடல் அலைகள் இறால் மீன்களை அடித்து வந்து ஆற்றின் கரையில் போட்டுவிட்டு, மகளிர் சூடி எறிந்த தலைமாலைகளோடு கடலுக்குத் திரும்பும். அந்த அலைபோலப் பொருள் ஈட்டப் போகலாமா? வேண்டாவா? என நெஞ்சமே அங்கும் இங்கும் அலைந்து ஒரு முடிவுக்கு வரவில்லை. இவ்வாறு ஒரு நிலையின்றி நிற்பாயாயின் உன் பெருமை அழியும்!" என்று தலைவன் தன் நெஞ்சத்திடம் கூறுகிறான்.

கருத்து

நெஞ்சே! பொருள் ஈட்டத் தொடர்ந்து செல்வதா, தலைவியை நினைந்து திரும்புவதா என்னும் இரண்டனுள் ஒரு முடிவுக்கு வர இயலாமல் நீ தடுமாறுகிறாய்.

விளக்கம்

பொருளீட்டி வரப் பிரிந்து செல்லும் தலைவன் இடை வழியில் தன் நெஞ்சிற்குச் சொல்லுகிறான்: "நெஞ்சே! மலைகளைக் கடந்து சென்று பொருள் தேடி வர இயலாமலும் இருக்கிறாய். தலைவியின் மார்பைத் தழுவி இல்லிலேயே தங்கலாம் என்றாலோ வறுமைக்கு அஞ்சுகிறாய்; எனவே, வருத்தம் மேலிட நீ மனமுடைந்து அழிவுறுகின்றாய்."

குறிப்பு

இறால் மீனொடு வந்து மாலையொடு திரும்பும் அலையின் நிலையில்லாத் தன்மை போல, நெஞ்சம் பொருள் ஈட்டச் செல்லுதல், தலைவியோடு ஒன்றி இருத்தல் என்பனவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்காது ஓயாது உழல்கிறது என்பதை உவமை விளக்குகிறது.

சொற்பொருள்

1. உயங்கிய - வருந்திய; மருங்கு - பக்கம்.
2. ஆடாப் படிவத்து ஆன்றோர் - நீராடா விரதம் கொண்ட சான்றோர் (தவசியர்).
3. நிரைபுடன் - கூட்டம் கூட்டமாய்.
4. கவின்அழி குன்றம் - அழகிழந்த குன்றுகள்.
5. பொருள் தருதல் - பொருள் ஈட்டி வருதல்.
6. ஐங்கூந்தல் - ஐந்தாய் வகுத்துப் பின்னப்பட்ட கூந்தலைக் கொண்ட (மனைவி).
7. ஒழியின் - இருந்தால்; அழிதகவு - துன்பம்.
9. எஃகிலை - எஃகினாலான வேலின் இலை போன்ற முனை; இமைத்தல் - ஒளி விடுதல்.
10. மழை - மேகம்; மருள் - ஒப்ப; தோல் - கிடுகு, கேடயம்.
11. கழை - மூங்கிலாலான ஓடக்கோல்; மாய் - முழுகும்படியான.
12. இறவு - இறால் மீன்; கோதை - தலைமாலை.
13. ஓதம் - அலை.
14. ஒன்றில் கொள்ளாய் - ஒன்றை உறுதியாய்க் கொள்ளாது உள்ளாய்.

தலைவன் கூற்று

நற்றிணை 103 — **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகன் இடைச் சுரத்து ஆற்றாதாகிய நெஞ்சினைக் கழறியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் இடைவழியில் தலைவியை நினைந்து பிரிவினை ஆற்ற இயலாதவனாய்த் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

ஒன்றுதெரிந்து உரைத்திசின் நெஞ்சே! புன்கால்
சிறியிலை வேம்பின் பெரிய கொன்று,
கடாஅம் செருக்கிய கடுஞ்சின முன்பின்
களிறுநின்று இறந்த நீர்அல் ஈரத்து,

பால்அவி தோல்முலை அகடுநிலம் சேர்த்திப்
பசிஅட முடங்கிய பைங்கண் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபின் பிணவுநினைந்து இரங்கும்
விருந்தின்வெங் காட்டு வருந்துதும் யாமே;
ஆள்வினைக்கு அகல்வாம் எனினும்,
மீள்வாம் எனினும் நீதுணிந் ததுவே.

தெளிவுரை

"நெஞ்சே! சிறிய இலைகளைக் கொண்ட வேப்ப மரத்தின் கிளைகளை முரித்து, மதஞ்செருக்கித் திரியும் சினமும் வலிமையும் கொண்ட ஆண்யானை சிறுநீரைக் கழித்துவிட்டுச் சென்றது. அந்தச் சிறுநீர் ஈரத்தில் பெண்செந்நாய் ஒன்று பால் வற்றித் தோல் சுருங்கிய முலைகளைக் கொண்ட தன் வயிற்றினை நிலத்தினோடு சேர்த்துப் பசியால் சுருண்டு கிடக்கிறது. அதன் உணவுக்காக ஆண் செந்நாய் வேட்டையாடச் சென்ற இடத்தில், தான் தன் பிணவோடு கூடித் துய்த்த புணர்ச்சியை நினைத்த வாறே தான் மீண்டு செல்வதைக் கருதி வருந்தி நிற்கிறது. இத்தகைய காட்சி கொண்ட வெப்பமிகு காட்டினுள் புகுந்து நானும் வருந்துகின்றேன். இனியும் தொடர்ந்து சென்று பொருளீட்டுதலில் ஈடுபடலாமா, காதலியைக் காண வீட்டினை நோக்கித் திரும்பலாமா என்பதை நெஞ்சமே! நீயே முடிவு செய்க" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினை நோக்கிக் கூறுகிறான்.

கருத்து

நெஞ்சே! பொருளீட்டத் தொடர்ந்து செல்வதா, அன்றித் திரும்புவதா என்பதை நீயே முடிவு செய்.

விளக்கம்

"யானை உலவும் ஈரமற்ற காட்டில் பசியால் வருந்தும் பெண் செந்நாய்க்கு இரை தேடச் செல்லும் ஆண்நாய், இரை தேடும் அந்த வேளையிலும் பெண்நாயோடு புணர்ந்திருந்ததையே நினைத்து உடனே திரும்ப எண்ணங்கொள்ளும். நானும் பொருள் தேடத் தலைவியை விட்டுப் பிரிந்து வந்திருந்தாலும்

அவளைப் பிரிந்திருப்பதைப் பொறுக்கவியலாமல், வருந்தியிருக்கிறேன். பொருளீட்டத் தொடர்ந்து செல்லலாமா? இப்பொழுதே திரும்பிக் காதலியிடம் சென்றுவிடலாமா? என்பதை நெஞ்சே! நீயே முடிவு செய்து கொள்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினை நோக்கிச் சொல்லுகின்றான்.

குறிப்பு

வேட்டைமேல் செல்லும் ஆண்செந்நாய், தன் பெண்நாயை நினைந்து வருந்தியிருப்பது போன்று, பொருள் தேடச் சென்ற தலைவனும், இடைவழியில் தலைவியை நினைந்து வருந்துகிறான்.

சொற்பொருள்

1. ஒன்று தெரிந்து - ஒன்றை ஆராய்ந்து; உரைத்திசின் - சொல்.
2. பெரிய - பெரிய கிளைகளை; கொன்று - முரித்து.
3. கடாஅம் - மதம்; முன்பு - வலிமை.
4. இறந்த - அகன்ற; நீர் அல் ஈரம் - களிறு தான் நின்ற இடத்தில் கழித்த சிறுநீர் ஈரம்.
5. பால்அவி - பால் வற்றிய; அகடு நிலம் - பரந்த நிலப்பகுதி.
6. பசிஅட - பசி தாக்க; முடங்கிய - சுருண்டு படுத்திருக்கும்; பைங்கண் - பசிய கண்; செந்நாய் - செந்நாயின் பெண்.
7. மாயா வேட்டம் - தப்பாத வேட்டை; கணவன் - ஆண் செந்நாய்.
8. பொய்யா மரபின் - அன்பு கொள்வதில் பொய்த்திடாத இயல்பு கொண்ட; பிணவு - பெண் நாயை; இரங்கும் - வருந்தும்.
9. விருந்தின் வெங்காடு - அதுவரை புகுந்து அறியாத புதிதாய்த் தோன்றும் வெப்பமான காடு.
10. ஆள்வினைக்கு - பொருளீட்ட; அகல்வாம் எனினும் - மேற்கொண்டு செல்வோம் என்றாலும்.
11. மீள்வாம் எனினும் - மீண்டு செல்வோம் என்றாலும்; நீ துணிந்து - அதனை நீ ஆராய்ந்து முடிவு செய்து கூறு.

தலைவன் கூற்று

நற்றிணை 284 **தேய்புரிப் பழங்கயிற்றினார்**

திணை : பாலை

கூற்று

பொருள் முடியாநின்ற தலைமகன் ஆற்றானாகிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்றிருந்த தலைவன் தன் பணி முடியுமுன் காதலி நினைவால் ஏங்குகிறான். பொருள் தேடுவதை விட்டுத் திரும்பச் சென்று தலைவியைக் காணலாமா என நினைக்கிறான்; அதே வேளை, கடமையை முடிக்காமல் திரும்புவது இகழ்ச்சியாகுமே எனவும் கருதுகிறான். இவ்விரு எண்ணங்களாலும் மனம் தடுமாறிய தலைவன் கூறியது.

'புறம்தாழ்பு இருண்ட கூந்தல், போதின்
நிறம்பெறும் ஈர்இதழ்ப் பொலிந்த உண்கண்,
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின்' நெஞ்சம்,
'செல்லல் தீர்கம்; செல்வாம் என்னும்,
'செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்'என,
உறுதி தூக்கத் தூங்கி, அறிவே,
சிறிதுநனி விரையல்' என்னும்; ஆயிடை,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல,
வீவது கொல்என் வருந்திய உடம்பே?

தெளிவுரை

"நீண்டு தாழ்ந்து முதுகில் கிடக்கும் கரிய கூந்தலையும் நெய்தல் போலும் மையுண்ட கரிய கண்களையும் கொண்டவளாகிய என் காதலி என் உள்ளத்தைப் பிணித்துக்கொண்டாள். 'பொருளீட்டுவதை விட்டுவிட்டு அவளிடம் திரும்பச் சென்று அவள் துன்பத்தைத் துடைக்கலாம்' என்கிறது என் உள்ளம்; செய்யக் கருதிய செயலை முடிக்காமல் இடையே திரும்புதல் இகழ்ச்சியைக் கொடுக்குமாதலால், 'பொருள் தேடி முடிக்காமல் வீட்டுக்குச் செல்ல விரையாதே' என்கிறது என் அறிவு.

இவ்வாறு மாறுபடும் உள்ளம், அறிவு ஆகிய இரண்டிற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் என் உடம்பானது தேய்ந்துபோன புரியைக் கொண்ட பழைய கயிறு ஒன்றனை அதன் இருபக்கமும் பக்கத்திற்கு ஒன்றாய் நின்று வலிமை மிக்க கொம்பினையுடைய களிற்றியானைகள் இழுக்க, அக்கயிறு இற்றொழிவதுபோல அழிய வேண்டியதுதானோ?" என்று வருந்துகிறான் தலைவன்.

கருத்து

பொருள் தேடுவதை விட்டுவிட்டு உடனே திரும்பிச் சென்று தலைவியைக் காணலாம் என்னும் உள்ளத்திற்கும், அவ்வாறு திரும்பினால் அஃது இழிவைத் தரும் எனக் கருதும் அறிவிற்கும் இடையே பெரிய போராட்டம் நிகழ்கிறது.

விளக்கம்

"பொருளீட்டச் சென்ற தலைவனை இடைவழியில் தலைவியின் நினைவு வாட்டுகிறது. அதனால் அவன் நெஞ்சம், பொருள் ஈட்டுவதை விட்டுவிட்டு, உடனே திரும்பிப் போய்த் தலைவியைக் கூட வேண்டும் என்கிறது. அறிவோ, கடமையை முடிக்காமல் திரும்புவது இகழ்ச்சியைத் தரும் என்கிறது; ஆதலால், இவ்வாறு நடக்கும் இந்தப் போராட்டத்தால் எனது உடம்பு, தேய்வுற்ற புரிகளால் ஆன பழைய கயிறு ஒன்று அதன் பக்கத்திற்கு ஒன்றாய் வலிமைமிக்க யானைகள் பற்றி இழுக்க, இற்று வீழ்வதுபோலத் துன்பத்தால் நைந்து அழிய வேண்டியதுதானோ?" என்று தலைவன் வருந்திக் கூறுகிறான்.

குறிப்பு

இப்பாடலை இயற்றிய ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை. 'தேய்புரிப் பழங்கயிறுபோல' எனும் அரிய உவமையை இப்பாடலில் இவர் பயன்படுத்தியிருப்பதால், 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என்றே இவர் வழங்கப்படுகிறார்.

சொற்பொருள்

1. புறம் தாழ்பு - முதுகில் கிடக்கும்; போது - நெய்தல் மலர்.
2. ஈர்இதழ் - ஈரமான இதழ்கள்.

3. பிணிக்கொண்டோள் - (உள்ளத்தைத்) தன்வயப்படுத்திக் கொண்டவள்; வயின் - இடம்.
4. 'செல்லல் தீர்கம்' - அவள் துன்பத்தைத் துடைப்பதற்காக; செல்வாம் - அவளிடம் திரும்பச் செல்லலாம்; என்னும் - என்று விரும்புகிறது என் உள்ளம்.
5. செய்வினை முடியாது - பொருள் ஈட்ட வேண்டிய செயல் முடியாது; எவ்வம் செய்தல் - (திரும்புதல்) இடையிலே ஊறு செய்தல்.
6. எய்யாமையோடு - செயலின் விளைவை எய்தாததோடு; இளிவு தலைத் தரும் - மானக்குறைவையும் ஏற்படுத்தும்.
7. உறுதி தூக்க - உறுதிப்பட அறிவு கூறுதலால்; தூங்கி - தெளிவு பெறாது கலங்கி.
8. அறிவு சிறுநனி விரையல் என்னும் - செய்தலைச் சிறிது தவிர்க்க என அறிவு உணர்த்துகின்றது; ஆயிடை - இவ்விரண்டு கருத்து களுக்கும் இடையே.
9. மருப்பின் - கொம்புகளைக் கொண்ட களிறுமாறு பற்றிய - இரு களிறுகள் கயிற்றை இரு பக்கத்தையும் தனித்தனியே பற்றி இழுக்கும்.
10. தேய்புரி - புரிகள் தேய்ந்த; பழங்கயிறுபோல - பழைய கயிறுபோல.
11. வீவது கொல் - அற்றுக் கெடுகிறதுபோலும்; என் வருந்திய உடம்பே - வருந்திய எனது மெலிந்த உயிர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 329 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்தின்கண் மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைமகன் உழை யர்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

சுரத்திடையே சென்றபோது, பாதி வழியில் தன் மனம் பொருள்மேல் செல்லுதலை விடுத்துத் தலைவியிடத்தே சென்று நிலைத்திருப்பது கண்டு தன்னோடு வருவாரிடம் தலைவன் சொல்லியது.

ஆள்வழக் கற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை அருஞ்சுரம் நீந்தி, நம்மொடு
மறுதரு வதுகொல் தானே, செறிதொடி
கழிந்துகு நிலைய ஆக
ஒழிந்தோள் கொண்டஎன் உரங்கெழு நெஞ்சே!

தெளிவுரை

"நாம் செல்லும் ஆள் நடமாட்டமில்லாத பாழ்பட்ட வழி, பரந்த இடத்திலுள்ளது; வெங்கொடுமை விளைவதற்கான தன்மை கொண்டது; கடத்தற்கரிய இக்காட்டுவழியைக் கடந்து, என் வலிமை பொருந்திய நெஞ்சம், என்னொடு எனக்குத் துணையாகி வருமா? அல்லது செறிவான தொடிகள் நெகிழப் பெற்றுத் தனித்திருக்கும் தலைவியையே பற்றிக்கொண்டு என்னைக் கைவிட்டு, அவளிடத்திலேயே மீண்டும் சென்று விடுமோ?"

கருத்து

தலைவியைப் பிரிந்து பொருள் தேடுவதற்குத் தூண்டிய என் நெஞ்சம் இப்போது இடைவழியில் தளர்ந்து, என்னைக் கைவிட்டு அவளிடமே சென்றுவிட நினைப்பது எதனாலே?

சொற்பொருள்

1. ஆள் வழக்கு அற்ற - மனித நடமாட்டம் இல்லாத; பாழ்படு நனந்தலை - பாழ்பட்டுக் கிடக்கும் அகன்ற இடம்.
2. நீந்தி - கடந்து.
3. மறுதருவது - மீண்டும் வருவது; செறிதொடி - இறுக்கமான வளையல்.
4. கழிந்து - கழன்று; உகு நிலைய ஆக - கழன்று விடுகின்ற நிலைமையினைக் கொண்டன ஆக.
5. ஒழிந்தோள் - பிரிந்திருப்போள், தலைவி; கொண்ட - பற்றிக்கொண்டுள்ள; உரம்கெழு நெஞ்சு - வலிமை மிக்க நெஞ்சு.

தலைவன் கூற்று

அகநானூறு 33 **மதுரை அழக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவன் இடைவழியில், தன் நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே, காட்டுவழியில் யான் தனித்திருப்ப, நீ அவளைச் சேரத் துணிந்தாய். இனியேனும் அவளைப் பிரியாது உறைவாய்; அதுவே என் விருப்பம்' என்று கூறினான்.

வினைநன்று ஆதல் வெறுப்பக் காட்டி,
மனைமாண் கற்பின் வாள்நுதல் ஒழியக்
கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து
ஒன்றுஒங்கு உயர்சினை இருந்த, வன்பறை,
வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிறம் பயிரும்
இளிதோர் தீம்குரல் இசைக்கும் அத்தம்
செலவுஅருங் குரைய என்னாது சென்று,அவண்
மலர்பாடு ஆன்ற, மைஎழில், மழைக்கண்
தெளியா நோக்கம் உள்ளினை, உளிவாய்
வெம்பரல் அதர குன்றுபல நீந்தி,
யாமே எமியம் ஆக, நீயே
ஒழியச் சூழ்ந்தனை ஆயின் முனாஅது
வெல்போர் வானவன் கொல்லி மீமிசை,
நுணங்குஅமை புரையும் வணங்குஇறைப் பணைத்தோள்
வரிஅணி அல்குல், வால்எயிற் றோள்வயின்
பிரியாய் ஆயின் நன்றுமன் தில்ல,
அன்றுநம் அறியாய் ஆயினும், இன்றுநம்
செய்வினை ஆற்றுற விலங்கின்,
எய்துவை அல்லையோ, பிறர்நகு பொருளே?

தெளிவுரை

நெஞ்சே! அறம் முதலிய பயனைப் பெறப் பொருள் தேவை என்று கருதி மாட்சிமைப்பட்ட கற்பினையும் ஒள்ளிய நெற்றியையும் கொண்ட தலைவியைப் பிரிந்து துணிவோடு என்னுடன் வந்தாய். வந்த வழி மிகக் கடுமையான வழி. தளிர்களும் கிளைத்தலும் இல்லாத யாமரத்தின் ஒன்றாய் ஓங்கி உயர்ந்த கிளையிலிருந்த வலிய சிறகினைக் கொண்ட, சிள்ளென்னும் ஓசையைக் கொண்ட ஆண்பருந்து, வளைந்த வாயைக் கொண்ட தன் பெடையைத் தன்னிடம் வருமாறு இனிமையுடன் அழைக்கும் காட்டுவழி அது. நடந்து செல்லும்போது உளி போன்று காலில் குத்தும் கூரிய கற்களைக் கொண்ட வழியுமாகும்.

இவ்வாறான வழிகள் செல்வதற்கு அரியனவாம் என்று கருதாமல் இவ்வளவு தொலைவு வந்த பிறகு, நீல மலர் தன் பெருமை குறைவதற்குக் காரணமான தலைவியின் மையணிந்த அழகிய மழைக் கண்ணின் வெருவிய பார்வையை நீ நினைத்து விட்டாய். உளியின் வாய் போன்ற கூரிய பரல்கள் நிரம்பிய வழிகளைக் கொண்ட மலைகள் பலவற்றைக் கடந்து வந்த பிறகு என்னை இங்குத் தனியே விட்டுவிட்டு நீ அவளிடம் போகக் கருதுகிறாய்.

போர்த்திறம் மிக்க சேரனது கொல்லி மலையில் விளைந்த மூங்கில் போன்ற அழகிய தோளையும், தேமல் கொண்ட இடைப் பகுதியினையும், வெண்மையான கூரிய பற்களையும் கொண்ட தலைவியினை அன்றே பிரியும்போது, நாம் ஆறுதலாய்க் கூறிய உரைகளை அவள் ஏற்கவில்லை என்பதை அவள் பார்வை உணர்த்திற்று. அப்போதே பிரிவினைத் தவிர்த்திருக்கலாம். அன்று அவ்வாறு செய்யாமல், இன்று பொருள் தேடும் முயற்சியைத் தடை செய்து, தலைவியிடம் செல்லக் கருதுவாயானால் பிறரின் இகழ்ச்சிக்கு ஆளாக மாட்டாயா? (நினைத்துப் பார்)" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.

கருத்து

நெஞ்சே! பொருளைத் தேட என்னோடு வந்தாய்; இடைவழியில் திரும்பிச் சென்று தலைவியை அடைய விரும்புகிறாய். வந்த வேலை முடியாமல் திரும்பிச் சென்றால் நீ இகழ்ச்சிக்கு ஆளாவாய். ஆதலால், திரும்ப முயலாதே.

விளக்கம்

பொருள்வயிற் பிரிந்து செல்லும் தலைவன் இடைவழியில் தன் நெஞ்சத்தினை நோக்கிச் சொல்லுகிறான்: 'நெஞ்சே! பொருளீட்டும் சிறப்பினைச் சொல்லி என்னை வீட்டைவிட்டுப் பிரியச் செய்தாய். இப்போது கடுமையான வழியினுக்கு இடையே நான் இருக்க, நீ தலைவியிடம் சென்று சேர முடிவு செய்கிறாய். புறப்படும்போதே தலைவியைப் பிரிந்திருத்தல் அரிது என்று சொன்னேன்; அதை நீ ஏற்கவில்லை. இப்போது நாம் மேற்கொண்ட வேலையை முடிக்காமல் திரும்பினால் ஊர் சிரிக்கும்' என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லித் தேற்றுகிறான்.

சொற்பொருள்

1. வினை - பொருளீட்டும் செயல்; வெறுப்ப - மிகுதியாக.
3. கவை - கிளை; முறி - தளிர்; யாஅ - யா மரம்.
4. வன்பறை - வலிய சிறகு.
5. வீளை - ஒலியெழுப்பும்; கோள்வல் - இரையைக் கொள்ளும் திறமை கொண்ட; சேவல் - ஆண் பருந்து.
6. பேடை - பெண்; வருதிறம் - தன்னிடம் வரும்படி; பயிரும் - அழைக்கும்.
7. 'இளி'தேர் - 'இளி' என்னும் பண்ணை ஒத்த.
8. அருங்குரைய - அரிது; அவண் - ஆங்கே (இடைவழியில்.)
9. மலர் பாடு ஆன்ற - மலர் தன் பெருமையை இழக்கும்படியான, பாடு - பெருமை.
10. தெளியா - மயங்கிய; உளிவாய் - உளியின் வாய் போன்ற கூரிய.
11. பரல் - பரல் கற்கள்; அதர் - வழி; நீந்தி - கடந்து.
12. எமியம் ஆக - தனிமையில் இருப்பவன் ஆக.
13. ஒழிய - (என்னை விட்டுப் பிரிய); சூழ்ந்தனை - கருதினை; முனாஅது - பழையது.

14. வானவன் - சேரன்; கொல்லி - கொல்லிமலை.
15. நுணங்குஅமை - சிறிய மூங்கில்; வணங்குதல் - வளைதல்.
18. அன்று - பிரிகின்ற அன்று; நம் அறியாய் - நம் இயல்பை அறிந்து கொள்ளாவிடினும்.
19. ஆற்றுற - இடை வழியில்; செய்வினை விலங்கின் - பொருளீட்டும் செயலிலிருந்து விலகினால்.
20. பிறர் நகு பொருள் - பிறர் சிரிக்கத்தக்க இகழ்ச்சியை; எய்துவை - அடைவாய்.

தலைவன் கூற்று

அகநானூறு 291 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் சேர்க்கும் நோக்கத்துடன் தலைவியைப் பிரிந்து சென்றான். நெடுந்தொலைவைக் கடந்த பின்னும் தலைவியை எண்ணி அவனது நெஞ்சம் கலங்கியது. அதனால் அவன் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

வானம் பெயல்வளம் கரப்ப, கானம்
உலறி இலைஇல வாக, பலஉடன்
ஏறுடை ஆயத்து இனம்பசி தெறுப்ப,
கயன்அற வறந்த கோடையொடு நயன்அறப்
பெருவரை நிவந்த மருங்கில், கொடுவரிப்
புலியொடு பொருது சினம்சிறந்து, வலியோடு
உரவுக்களிறு ஒதுங்கிய மருங்கில், பரூஉப்பரல்
சிறுபல் மின்மினி கடுப்ப, எவ்வாயும்
நிறைவன இமைக்கும் நிரம்பா நீள்இடை
எருவை இருஞ்சிறை இரீஇய, விரிஇணர்த்
தாதுஉண் தும்பி முரல்இசை கடுப்ப,
பரியினது உயிர்க்கும் அம்பினர், வெருவர
உவலை சூடிய தலையர், கவலை

ஆர்த்து,உடன் அரும்பொருள் வவ்வலின், யாவதும்
சாத்துஇடை வழங்காச் சேண்சிமை அதர
சிறிஇலை நெல்லித் தீம்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தம் – தவிர்வுஇன்று,
புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி,
அறுமருப்பு ஒழித்த தலைய, தோல்பொதி,
மறுமருப்பு இளங்கோடு அதிரக் கூஉம்
சுடர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்து,ஆங்கு
உள்ளினை வாழிய, நெஞ்சே! போதுஎனப்
புலம்கமழ் நாற்றத்து இரும்பல் கூந்தல்,
நல்எழில், மழைக்கண்நம் காதலி
மெல்இறைப் பணைத்தோள் விளங்கும்மாண் கவினே.

தெளிவுரை

"நெஞ்சே! வாழ்க! பொருள் ஈட்டுவதற்காக நாம் செல்லும் காட்டு வழியில் கோடை காலமாதலால் மழை பெய்யவில்லை. காடுகள் எல்லாம் காய்ந்து மரங்கள் இலையற்று வாடி நிற்கின்றன. குளங்களிலும் தண்ணீர் அறவே இல்லை. காளை மாட்டைத் தலைமையாய்க் கொண்ட பசுக்கூட்டத்தைப் பசி வருத்துகிறது.

"புலியோடு போர் செய்த வலிமை பொருந்திய யானை செருக்கோடு நடந்த வழியில் பரற்கற்கள் மின்மினிப் பூச்சிபோல் எல்லா இடங்களிலும் இரவில் மின்னுகின்றன.

"பெரிய சிறகினைக் கொண்ட எருவைச் சேவல் அஞ்சி யோடுமாறு வண்டினம் முரல்வது போன்ற ஒலியுடன் செல்லுகின்ற அம்பினை ஆறலை கள்வர் கொண்டிருப்பர். அவர்கள் காண்பார்க்கு அச்சம் வருமாறு தலைக்கண்ணியை அணிந்திருப்பர். வழிச்செல்வாரின் அரிய பொருள்களை அவர்கள் கொள்ளையடித்துப் பறித்துக் கொள்வதால் வணிகர் கூட்டம் எதுவும் அவ்வழியில் செல்லாது.

"மலை உச்சியில் நெல்லி மரங்களிலிருந்து கோடைக்காற்றால் உதிர்க்கப்பெற்ற சுவை நிரம்பிய காய்கள் உதிர்ந்து பரந்து கிடக்கும். அவற்றை ஆண் மான்கள் தின்னாமல், தண்ணீர்

இல்லாமையால் வருந்தியிருக்கும் பெண்மான்களுக்கு அவற்றை ஊட்டும். இத்தகைய நீரற்ற வறண்ட வெப்பம் மிகுந்த கொடிய வழியில் சென்றாலும் நம்மால் தலைவியை மறக்க இயலவில்லை. மலர் மணம் கமழும் கரிய திரண்ட கூந்தலையும், அழகிய குளிர்ச்சி பொருந்திய கண்களையும், பருத்த தோளையும் கொண்ட அவளது அழகு வழித்துன்பத்திற்கு இடையிலும் நம் கண்முன் தோன்றிய வண்ணம் இருக்கிறது."

கருத்து

நெஞ்சே! நீண்ட வழியில், அரிய காடுகளைக் கடந்து வந்து, நம் காதலியின் பருத்த தோளின் மாண்பமை அழகை நினைக்கிறாய். இப்பொழுது பிரிந்து நெடுந்தொலைவில் உள்ளோம். ஆதலின், வருந்துவதல்லது வேறு என்ன செய்ய இயலும்?

சொற்பொருள்

1. வானம் - மேகம்; கரப்ப - மறைய.
2. உலறி - வற்றி.
3. ஏறு - காளை; ஆயத்து இனம் - பசுக்கூட்டம்; தெறுப்ப - வருந்த.
4. கயன் - கயம் - குளம்; அற - நீரற்றுப்போக; நயன் - வளம்.
6. வலியோடு - செருக்குடன்; உரவுக்களிறு - வலிய யானை (உரம் - வலிமை); ஒதுங்கிய - நடந்த; பரூஉ - பெரிய; பரல் - பரல் கற்கள்.
8. எவ்வாயும் - எவ்விடத்தும்.
10. எருவை - பருந்து; இரும்சிறை - பெரிய சிறகு; இரீஇய - அஞ்சியோட.
11. முரலல் - ஒலித்தல்.
12. பரியினது - விரைந்து செல்வதாய் (பாய்ந்து செல்வது); உயிர்க்கும் - ஒலிக்கும்; வெருவர - அச்சம் தர.
13. உவல் - தழை.
14. ஆர்த்து - ஆரவாரித்து; வவ்வுதல் - கவருதல்.
15. சாத்து - வணிகர் கூட்டம்; வழங்கா - இயங்குதல் அற்ற; சிமை - மலை உச்சி; அதர - வழிகளைக் கொண்ட
17. தாஅம் - பரவிக் கிடக்கும்.
18. அம் பிணை - அழகிய பெண்மான்; உள்ளி - நினைத்து.
19. அறுமருப்பு - அற்று விழும் கொம்பு; தோல் பொதி - தோலால் மூடப்பட்ட.

20. மறுமருப்பு - இரண்டாவது முறை முளைத்த கொம்பு (மான்களுக்கு முதலில் முளைத்த கொம்புகள் வீழ்ந்து விட்டால் அவ்விடத்தில் புதிய இளங் கொம்புகள் தோன்றும். அக்கொம்புகள் தோலால் மூடப்பட்டிருக்கும்; மான்கள் கூவும்போது அவை அதிரும்.)
22. போது - மலர்.
23. புலம் - இடம்.
25. இறை - சந்து.

தலைவன் கூற்று

அகநானூறு 343 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று :

தலைமகன் இடைச்சுரந்து மீளக் கருதிய நெஞ்சினைக் கழறிப் பேசியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டத் தலைவியைப் பிரிந்து சென்றான். பணி முடியுமுன் இடைவழியில் அவன் மனம் திரும்பிச் செல்லக் கருதியது. அதனை அவன் இடித்துக் கூறியது.

வாங்குஅமை புரையும் வீங்குஇறைப் பணைத்தோள்
சில்சுணங்கு அணிந்த, பல்பூண், மென்முலை
நல்லெழில் ஆகம் புல்லுதல் நயந்து
மரங்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகற்
கண்ணி வாடிய மண்ணா மருங்குற்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்
கண்பொரி கவலைய கானத் தாங்கண்
நன்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை
இல்போல் நீழற் செல்வெயில் ஒழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கால் ஏற்றைப்
புறநிறை பண்டத்துப் பொறையசாஅக் களைந்த
பெயர்படைகொள்ளார்க் குயவுத்துணை யாகி

உயர்ந்த ஆள்வினை புரிந்தோய் பெயர்ந்துநின்று
உள்ளினை வாழியென் நெஞ்சே கள்ளின்
மகிழின் மகிழ்ந்த அரிமதர் மழைக்கண்
சின்மொழிப் பொலிந்த துவர்வாய்ப்
பல்மாண் பேதையிற் பிரிந்த நீயே.

தெளிவுரை

என் நெஞ்சமே வாழி! கள்ளின் மகிழ்ச்சிபோல் களித்தற்குக் காரணமாகிய செவ்வரி படர்ந்த செருக்குமிக்க குளிர்ச்சி பொருந்திய கண்களையும், சிலவாகிய மொழிகளைப் பேசுகின்ற அழகிய பவளம் போன்ற சிவந்த வாயினையும், பலவாய மாண்புகளையுமுடைய நம் தலைவியை நீ பிரிந்து வந்துள்ளாய்!

உப்பு வாணிகம் செய்வோன் ஓட்டிச் செல்லும் மரத்தாலான வண்டி இயங்கிடக் காரணமான உருளையின் பொலிவற்ற பூண் சிதைத்த வலிய பாறையில் நடுகல் ஒன்று உள்ளது. அந்நடு கல்லில் அணியப்பட்ட மாலை வாடியிருப்பதோடு நீராட்டப் படாததாயும் இருக்கிறது. அதில் கூர்மையான உளி கொண்டு செதுக்கப் பெற்ற கீறல்கள் மறைந்த எழுத்துகள், அவ்வழியில் செல்லும் புதியவரான வழிப்போக்கர்களுக்கு, வேறு பொருள் உடையனவாக மாறுபட்டுக் காணப்படுகின்றன. இடங்கள் பொரிந்து கிடக்கும் பிரிவுபட்ட வழிகளைக் கொண்ட அக்காட்டின் அகன்ற இடத்தில் நிற்கின்ற யாமரத்தின் அழகிய தளிர்களையுடைய பெரிய கிளைகள், இல்லத்தில் இருப்பது போன்ற நிழலைத் தருகின்றது. அந்த நிழலில் வாணிகர்கள் தாம் வந்த வெயிலின் வெப்பம் தீரும் பொருட்டுத் தங்குவதோடு, நீண்ட காதினையும் குறுகிய கால்களையும் கொண்ட ஆண் கழுதையின் முதுகிலே நிறைந்திருக்கும் பண்டங்களின் சுமையினால் ஏற்பட்ட இளைப்பையும் நீங்கச் செய்வர். இவ்வாறு தங்கி மீண்டும் புறப்படாதிருந்த அந்த வாணிகர்கட்கு வழித் துணையாகி, மிக உயர்ந்த முயற்சிமிக்க செயலாகிய பொருள் தேடுவதை விரும்பினாய்!

வளைந்த மூங்கிலை ஒத்த, (இப்போது மணிக்கட்டினைக் கொண்ட) பெருந்தோளையும், படர்ந்துள்ள சில தேமல்களுடன் பல அணிகலன்களையும் அணிந்துள்ள மென்மையான முலைகளையும் பெற்றுள்ள தலைவியின் நல்ல அழகிய மார்பினைத்

தழுவ விரும்பி, பொருள் தேடும் உன் முயற்சியைக் கைவிட நினைத்துள்ளாய். அது தகுமோ?

கருத்து

நெஞ்சே! தலைவியைப் பிரிந்து பொருள் தேடி வரக் காட்டுவழியில் செல்லும் உயர்ந்த செயலை மேற்கொண்டாய். இப்போதோ, தலைவியின் மென்முலை ஆகம் தழுவுதலைக் கருதி, செயல் முடியுமுன் திரும்ப நினைக்கின்றாய். இது தகுமா?

குறிப்பு

உப்பு வாணிகம் செய்வோர் காட்டிலுள் யாமர நிழலில் தங்கள் வண்டிகளை அவிழ்த்து விட்டு ஓய்வு கொள்வர். அதேவேளை கழுதை சுமந்து வந்த பண்டங்களை இறக்கி அக்கழுதைகளையும் இளைப்பாறச் செய்வர்.

போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு, அதன்மேல் அவர் பெயரையும் சிறப்புகளையும் எழுதி, மாலை சூட்டி, நீராட்டி வழிபடுவர். அவ்வாறான நடுகல் நடப்பட்டு நீண்ட நாள் ஆனதால் மாலை வாடிக் கிடந்தது; நீராட்டப்படவும் இல்லை. வாணிகர்களின் வண்டிப்பூண் உராய்ந்ததால் எழுத்துகள் தேய்ந்து கீறல்களாகி, விவரம் அறிய இயலா நிலையிலும் இருந்தது.

சொற்பொருள்

1. வாங்கு - வளைந்த; அமை - மூங்கில்; வீங்கிறை - பெருத்த சந்தினையுடைய; பணை - பெரிய.
2. சுணங்கு - தேமல்; பல்பூண் - பலவகையான அணிகலன்கள்.
3. ஆகம் - மார்பு; புல்லுதல் - தழுவுதல்; நயந்து - விரும்பி.
4. மரங்கோள் - மரத்தால் செய்யப்பட்ட வண்டி; உமண்மகன் - உப்பு வாணிகன்; பேரும் பருதி - சுழலும் சக்கரம்.
5. வன்றலை - பாறை; நடுகல் - போரில் வீரமரணமடைந்த வீரர்களைப் பெருமைப்படுத்த நடப்படும் கல்.
6. கண்ணி - மாலை; மண்ணா - கழுவப்படாத.
7. கூருளி - கூர்மையான உளி; குயின்ற - செதுக்கப்பட்ட; கோடுமாய் எழுத்து - எழுத்தின் கோடுகள் மறைந்து.
8. ஆறு - வழி; வம்பலர் - புதியவர்; வேறுபயம் - வேறு பொருள்.
9. கண்பொரி - இடங்கள் பொரிந்த; கவலைய - கவர்ந்த.

10. நன்தலை - அகன்ற இடம்; யா - யாமரம்; சினை - கிளை.
11. இல்போல் நீழல் - இல்லத்தில் உள்ளது போன்ற நிழல்; ஒழிமார் - ஒழிதற்கு.
12. ஏற்றை - ஆண்குரங்கு.
13. புறம்நிறை - முதுகில் ஏற்றப்பட்ட பாரம்; அசா - தளர்ச்சி.
14. பெயர்படை கொள்ளார் - மீண்டும் புறப்படாதிருந்தவர்க்கு.
15. ஆள்வினை - முயற்சி.
16. உள்ளினை - நினைந்தனை.
17. மகிழ் - கள், மது; அரி - செவ்வரி; மதர் - அழகு.
18. துவர்வாய் - பவளம் போன்ற சிவந்த வாய்,
19. பல்மாண் - பல்வகையான மாட்சிமைப்பட்ட; பேதை - பெண் (தலைவி).

தலைவன் கூற்று

அகநானூறு 79 | **குடவாயிற் கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்தான். அவ்வாறு போகும் வழியில் அவனது நெஞ்சம் தலைவியை எண்ணி வருந்தியது. அப்பொழுது தலைவன் தன் நெஞ்சைக் கடிந்து கூறியது.

தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நூறி, வினைப்படர்ந்து
கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்
பார்உடை மருங்கின் ஊறல் மண்டிய
வன்புலம் துமியப் போகி, கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்குநிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத்துகள்
அகல்இரு விசும்பின் ஊன்றித் தோன்றும்
நனந்தலை அழுவம், நம்மொடு துணைப்ப

வல்லாங்கு வருதும் என்னாது, அல்குவர
வருந்தினை வாழி,என் நெஞ்சே இருஞ்சிறை
வளைவாய்ப் பருந்தின் வான்கட் பேடை
ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடிக்
கொடுவில் எயினர் கோட்சுரம் படர
நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீள்இடைக்
கல்பிறங்கு அத்தம் போகி
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீயே.

தெளிவுரை

"நெஞ்சே! நாம் பொருள் தேடச் செல்லும் வழியில் உள்ள காடு, அடிக்குந்தோறும் ஒலிக்கும் அழகிய வாய்ப் பகுதியினைக் கொண்ட கடிய துடியினையும், வளைந்த வில்லினையும் கொண்ட எயினர்கள், வழிப்போவாரைக் கொல்லும் கொடுமை யான காட்சியினைக் கொண்டது. அச்சம் தரும் பெரிய சிறகுகளையும், வளைந்த வாயையும் கொண்ட ஆண்பருந்து வெண்மையான கண்களைக் கொண்ட பெண்பருந்தினைப் பல முறை அழைப்பதற்குக் காரணமான முடிவு பெறா நீண்ட இடத்தினைக் கொண்டது. பொருள்மீது கொண்ட பற்றினால் கற்கள் பொருந்திய இக்காட்டைக் கடந்து செல்லுகிறோம். தோளிலே கட்டுச்சோற்றினைச் சுமக்கும் ஆடவர் வலிமை யினைக் கொண்ட தம் கைகளால் தீப்பொறி பறக்கப் பாறைகளைத் தகர்த்துக் கிணறு வெட்ட, அங்கே ஊறும் தண்ணீரைப் பருகும் விருப்பத்துடன் கூட்டமாய்ச் செல்லும் கொங்கரது ஆநிரையின் குளம்பிலிருந்து கிளம்பிய செம்மண் புழுதி வானில் மிக்குத் தோன்றும். தலைவியை விட்டுப் பிரியும் போது, இத்தகைய இடமகன்ற காட்டில் நம்மோடு தலைவியைத் துணையாக அழைத்துச் செல்வோம் என்று நினையாமல் இந்தத் தனி வழியில் வந்த பின்பு தனிமையில் வருந்துகின்றாயே, ஏன்?"

கருத்து

நெஞ்சே! பொருள் தேடப் புறப்பட்டபோது 'அவளை உடனழைத்துச் செல்லலாம் என்று எண்ணாமல், இப்போது இப்படித் தனி வழியில் வந்த பின்பு வருந்தி நிற்கலாமா?'

விளக்கம்

'நெஞ்சே! கற்கள் நிறைந்த காட்டுவழியே செல்கிறோம். வளைந்த வில்லினைக் கொண்ட வேடுவர் உடுக்கையை அடித்து வேட்டைக்குச் செல்லுகின்றனர். அதனைக் கண்டஞ்சும் பெண் பருந்து வளைந்த வாயைக் கொண்ட தன் துணையை அழைக்கும். கொங்கர் தோண்டிய உவர்க்கேணியில் ஊறிய சிறிதளவு நீரைப் பருகப் பசுக்கூட்டங்கள் விரைந்து செல்கின்றன; அதனால் எழும் செம்புழுதி நிறைந்து ஆகாயம் செக்கர் வானம்போலக் காட்சியளிக்கிறது. பொருள் தேட வரும்போது இத்தகைய இடமகன்ற காட்டில், 'நாமும் துணையோடு செல்வோம்' என்று நினையாமல் இங்கு வந்து இவ்விடத்தில் அவளையே நினைந்து நினைந்து வருந்துகின்றாயே!' என்று, தலைவியைத் தன்னோடு அழைத்து வாராது தனியே வந்ததால் தான் இப்போது வருந்துவதாய்த் தலைவன் நெஞ்சத்தினிடம் சொல்கிறான்.

சொற்பொருள்

1. தோட்பதன் - தோளிலே தொங்கவிடும் கட்டுச்சோறு; கருங்கை - வலிய கை.
2. கனைபொறி - மிக்க தீப்பொறி; நூறி - வெட்டி; வினைப் படர்ந்து - (கிணறு வெட்டும்) தொழிலில் ஈடுபட்டு.
3. கல்லுறுத்தல் - தோண்டுதல்; வல்உவர் - மிக்க உவர்; படு - கிணறு.
4. ஊறல் - ஊறிய தண்ணீர்; மண்டுதல் - குடித்தல் (வேண்டி).
5. துமிய - அறுபட; கொங்கர் - கொங்கு நாட்டவர்.
6. படுமணி - மணி ஒலிக்கும்; ஆயம் - பசுக்கூட்டம்; நிமிர்ந்து - விரைந்து.
7. சேதா - செம்மையான பசுக்கள்; எடுத்த - எழுப்பிய; குரூஉ - செம்மண் நிறம்; துகள் - புழுதி.
8. ஊன்றி - நின்று, பரவி; தோன்றும் - (செக்கர் வானம்போலக்) காட்சி தரும்.
9. நனந்தலை - அகன்ற இடம்; அழுவம் - காடு; துணைப்ப - துணையாய்.
10. வருதும் - போவோம், செல்லுவோம்; அல்கு வர - இங்கு வந்த அளவிலே; இருஞ்சிறை - பெரிய சிறகு.
12. வான்கண் - வெள்ளிய கண்.

13. ஆடுதொறு கனையும் - அசைக்கும்தோறும் ஒலிக்கும்; அவ்வாய் - அழகிய வாயினைக் கொண்ட; துடி - உடுக்கை.
14. எயினர் - மறவர்; கோள் சுரம் - வழிச்செல்வோரை வளைத்து அவரிடமிருந்து பொருளைக் கொள்ளை கொள்வதற்குரிய சுரம்.
15. நெடுவிளி - நீண்ட குரல்; நிரம்பா - நடந்தும் முடிவுறாத நீண்ட.
16. பிறங்குதல் - விளங்குதல்.
17. நில்லா - நிலையில்லாத; பொருள்பிணி - பொருளைக் கைப்பற்றி வர.

தலைவன் கூற்று

அகநானூறு 361 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுதற்குத் தலைவியைப் பிரிந்து செல்கின்ற தலைவன் இடைச்சுரத்தில் தலைவியை நினைந்து அலைமோதும் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

தூமலர்த் தாமரைப் பூவின் அம்கண்,
மாஇதழ்க் குவளை மலர்பிணைந் தன்ன,
திருமுகத்து அலமரும் பெருமதர் மழைக்கண்,
அணிவளை முன்கை, ஆய்இதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூல்இடை விலங்கினும்,
கவவுப்புலந்து உறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியில் சிறந்ததுஒன்று இல்என
அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்,
பொருள்புரி வுண்ட மருளி நெஞ்சே
கரியாப் பூவில் பெரியோர் ஆர,
அழல்எழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு,

உள்ளுதல் ஓம்புமதி, இனிநீ, முள்எயிற்று,
சின்மொழி, அரிவை தோளே பன்மலை
வெவ்வறை மருங்கின் வியன்சுரம்,
எவ்வம் கூர, இறந்தனம் யாமே.

தெளிவுரை

"நெஞ்சே! தாமரைப் பூவைப்போன்ற அழகிய முகத்தில் குவளை மலர்கள் இரண்டனை வைத்தாற் போன்ற பெரிய கண்கள், வளை அணிந்த முன் கைகள், அழகிய உதடுகள், கச்சணிந்த மார்பு ஆகியவற்றைக் கொண்ட தலைவியின் முலைப் பரப்பின் முயக்கத்தில் ஒரு நூல் இடையே தடுப்பினும் அதனை வெறுத்து, 'மிகச்சிறந்த இந்த இன்பத்தைத் துய்ப்பதைக் காட்டிலும் மேம்பட்டது இல்லை' என்று நான் கூறும் சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் பொருளை விரும்பி வந்த மயக்கம் கொண்ட நெஞ்சே! மலைகளையும் வெம்மையான பாறைகளையும் கொண்ட நீண்ட வழியைத் துன்பத்தோடு கடந்து வந்துள்ளோம். வாடாத மலர்களைச் சூடியுள்ள தேவர் உண்பதற்குச் செந்தீ ஓங்கிய வேள்விக்குண்டத்தில் இடப்பெற்ற ஆமை தான் முன்பிருந்த நிழல் பொருந்திய பொய்கைக்குச் செல்ல விரும்பியதைப் போல உள்ளது, முள் போன்ற பற்களைக் கொண்டுள்ள, நற்சொற்களைக் கூறுகின்ற தலைவியின் தோளை இப்போது நீ நினைப்பது. பொருள் தேடி முடியும்வரை இவ்வெண்ணத்தைக் கைவிடு."

கருத்து

தலைவியின் அழகைக் கருத்தில் கொள்ளாது புறப்பட்ட நெஞ்சமே! பல மலைகளைக் கடந்து வந்தாயிற்று. இனி பொருள் தேடி முடியும்வரை தலைவியைப் பற்றி நினையாதே.

விளக்கம்

"மிகப் பெரும் காமத்தோடு கூடிய இன்ப நுகர்ச்சியைக் காட்டிலும் சிறந்தது ஒன்று இல்லை என்று சொல்லிய என் மொழியை ஏற்றுக்கொள்ளாமல், பொருள் தேடுதலில் ஆசையுற்ற மயக்கம் கொண்ட நெஞ்சமே! பல மலைகளையும்,

நீண்ட பாலை வழியையும் துன்பம் மிக நாம் கடந்து வந்துள்ளோம். ஆதலின், தலைவியை இனி நினையாதே!"

குறிப்பு

வேள்வித்தீயில் இடப்பட்ட ஆமை வெளியே மீண்டு செல்ல இயலாது; அதுபோல, நீயும் பொருள் தேடும் முயற்சி முடியும் வரை அதில் ஈடுபட்டுத்தான் ஆக வேண்டும்; விலகித் தலைவியிடம் செல்ல இயலாது.

சொற்பொருள்

1. அம்கண் - (அவ்) இடத்தில்.
2. பிணைந்து அன்ன - பிணைத்து வைத்தாற்போன்ற.
3. அலமரும் - சுழலும்; மதர் - செருக்கு.
4. ஆய் இதழ் - அழகிய உதடுகள்.
5. வார் - கச்சு; நூல் இடை விலங்கினும் - ஒரு நூல் இடையே தடுப்பினும்.
6. கவவு - முயக்கம்; புலத்தல் - வெறுத்தல்; கழிபெரும் - மிகப்பெரிய.
7. இன்புறு நுகர்ச்சியில் - இன்பம் துய்க்கும் நுகர்ச்சியைக் காட்டிலும்.
9. பொருள் புரிவுண்ட - பொருளை விரும்பி வந்த; மருளி - மயக்கத்தைக் கொண்ட.
10. கரியா - வாடாத, கருகாத; ஆர - உண்ண.
11. தித்தியம் - வேள்விக் குண்டம்; மடுத்த - இடப்பெற்ற; யாமை - ஆமை.
12. கயம் - பொய்கை; வேட்டாஅங்கு - (போதலை) விரும்பியது போல.
13. ஓம்புமதி - ஒழி.
15. அறை - பாறை; வியன்சுரம் - நீண்ட சுரம்.
16. எவ்வம் - துன்பம்; கூர - மிக; இறத்தல் - கடத்தல்.

தலைவன் கூற்று

நற்றிணை 105 **முடத்திருமாறன்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்து மீளலுற்ற நெஞ்சினைத் தலைமகன் கழறியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் இடைவழியில் தலைவியை நினைந்து திரும்பிவிடலாமா என்று எண்ணிய தன் நெஞ்சத்தினிடம், அவ்வாறு திரும்புவது தன் முயற்சிக்குச் சிறப்பளிக்காது என்று கூறியது.

முளிகொடி வலந்த முள்அரை இலவத்து
ஒளிர்சினை அதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயில் மருங்கில்,
கடுநடை யானை கன்றொடு வருந்த,
நெடுநீர் அற்ற நிழல்இல் ஆங்கண்
அருஞ்சுரக் கவலையை என்னாய்; நெடுஞ்சேண்
பட்டனை, வாழிய நெஞ்சே! குட்டுவன்
குடவரைச் சுனைய மாஇதழ்க் குவளை
வண்டுபடு வான்போது கமழும்
அஞ்சில் ஓதி அரும்படர் உறவே.

தெளிவுரை

"நெஞ்சே! அது, காய்ந்த கொடிகளால் சுற்றப்பட்டதும் முள்கள் நிறைந்த அடிமரத்தைக் கொண்டதுமான இலவ மரத்தின் கிளைகள் முரிந்து விழுமாறு வெம்மையான காற்று வீசும் மூங்கிலடர்ந்த காட்டுவழி; அங்கு விரைந்த நடையினைக் கொண்ட யானை தன் கன்றோடு வருந்தி நிற்க, நீரும் நிழலு மில்லாத அக்காட்டுவழி பல கிளைகளாய்ப் பிரிந்து செல்லு கின்றது.

"குட்டுவனது மேற்கு மலைச்சுனையில் பூத்த அழகிய இதழ்களைக் கொண்ட குவளையின் வண்டு மொய்க்கும் பெரிய மலரைச் சூடுதலால் மணங்கமழும் அழகிய கூந்தலைக் கொண்டவள், நம் தலைவி. நீக்குதற்கரிய துன்பத்திலே அவளை

வருந்தவிட்டு நீ நீண்ட தொலைவு வந்துவிட்டாய்! இங்கு வந்த பின்பு மீளக் கருதுவது நன்றன்று! நீ மேற்கொண்ட முயற்சியினை நிறைவேற்றுவதையே இப்போது நினை! நீ வாழ்க!" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

கருத்து

பொருள் தேடுவதை விட்டுவிட்டு உடனே திரும்பிவிடலாமா என்று எண்ணும் நெஞ்சமே, 'மேற்கொண்ட முயற்சி நிறைவு பெறுவது குறித்து மட்டுமே இப்போது நினை.'

விளக்கம்

"குவளை மலர் சூடப் பெற்ற மணங்கமழும் அழகிய கூந்தலைக் கொண்ட தலைவியை வருத்தம் கொள்ளச் செய்து பொருள் தேடப் புறப்பட்டு வந்து விட்டாய். மூங்கில் நிறைந்ததும், யானைகள் உலாவப் பெறுவதும், கவர்த்த வழிகளைக் கொண்டதுமான காட்டு வழியைக் கடந்து நெடுந்தொலைவு வந்தபின் தலைவியை நினைந்து, வந்த நோக்கத்தை நிறை வேற்றாமல் மீளக் கருதுவது நன்றன்று. நெஞ்சமே! எந்த நோக்கத்திற்காகப் புறப்பட்டாயோ அதை நிறைவேற்றிய பின்னரே திரும்ப வேண்டும்! அந்த எண்ணம் உன்னிடம் நிலைக் கட்டும்; நீ வாழ்க" என்று கூறி, இடைவழியில் மீள நினைக்கும் நெஞ்சத்தினிடம் கடிந்து கூறித் தலைவன் பயணத்தைத் தொடர்கிறான்.

சொற்பொருள்

1. முளி - காய்ந்த; வலந்த - சுற்றப்பட்ட; முள்அரை - முள் நிறைந்த அடி மரத்தைக் கொண்ட.
2. அதிர வீசி விளிபட - அசைத்து முரியுமாறு வீசி.
3. வெவ்வளி வழங்கும் - வெம்மையான காற்று வீசும்; வேய் பயில் - மூங்கில்கள் நிறைந்த; மருங்கில் - பகுதியில்.
4. கடுநடை - விரைந்த நடை.
5. ஆங்கண் - அவ்விடத்தில்.
6. அருஞ்சுரம் - அரிய காட்டின்; கவலை - கவர்த்த வழியை; என்னாய் - கருதாய்; நெடுஞ்சேண் - நெடுந்தொலைவு.
7. பட்டனை - வந்துவிட்டாய்; குட்டுவன் - சேர மன்னன்.

8. குடவரை - மேற்குமலை; சுனைய - சுனையிலுள்ள.
9. வான்போது - பெரிய பூ.
10. அரும்படர் உறவே - நீக்குதற்கரிய வருத்தத்தை எய்தி வருந்த.

தலைவன் கூற்று

அகநானூறு 47 **ஆலம்பேரிச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவனின் நெஞ்சம் இடைவழியில் பிரிவாற்றாமையால் வருந்தியது. அந்நெஞ்சினை வற்புறுத்தி, தான் மேற்கொண்ட செயலில் தொடர்ந்து விரைந்து செல்லுமாறு ஊக்கியது.

அழிவுஇல் உள்ளம் வழிவழிச் சிறப்ப,
வினைஇவண் முடித்தனம் ஆயின், வல்விரைந்து
எழுஇனி – வாழிய நெஞ்சே, ஒலிதலை
அலங்குகழை நரலத் தாக்கி, விலங்குஎழுந்து
கடுவளி உருத்திய கொடிவிடு கூர்எரி
விடர்முகை அடுக்கம் பாய்தலின், உடன்இயைந்து,
அமைக்கண் விடுநொடி கணக்கலை அகற்றும்
வெம்முனை அருஞ்சுரம் நீந்தி, கைம்மிக்கு,
அகன்சுடர் கல்சேர்பு மறைய, மனைவயின்
ஒண்தொடி மகளிர் வெண்திரிக் கொளாஅலின்,
குறுநடைப் புறவின் செங்கால் சேவல்
நெடுநிலை வியல்நகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை,
'யாண்டுஉளர் கொல்'எனக் கலுழ்வோள் எய்தி,
இழைஅணி நெடுந்தேர்க் கைவண் செழியன்
மழைவிளை யாடும் வளம்கெழு சிறுமலைச்
சிலம்பின் கூதளங் கமழும் வெற்பின்
வேய்புரை பணைத்தோள், பாயும்
நோய்அசா வீட, முயங்குகம் பலவே.

தெளிவுரை

"நெஞ்சே! நீ வாழ்க!

"சூறைக்காற்று, தழைத்து வளர்ந்து அசைந்தாடும் மூங்கிலை ஒலியுண்டாகத் தாக்கி வெப்பமுறச்செய்தது. அதனால் எழுந்த தீ, கொழுந்துவிட்டு எரிந்து, குகைகளைக் கொண்ட மலைப்பக்கங் களில் பரவியது; மிக்க தீயால் மூங்கில் கணுக்கள் வெடித்தபோது எழுந்த ஒலி, கூட்டமான கலைமான்களைத் துரத்தியது. அன்ன தன்மையதான கொடிய போர் நிகழும் இடங்களைக் கொண்ட அரிய சுர வழியைக் கடந்து வந்துள்ளோம்.

"விரிந்த சுடரைக் கொண்ட ஞாயிறு மேற்கு மலையினைச் சார்ந்து மறைந்தது; ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்கள், இல்லங்களில் வெண்மையான திரியினைக் கொளுத்தி விளக்கினை ஏற்றியுள்ளனர். குறுகுறுவென நடக்கும் நடையினையும் சிவந்த கால்களையும் கொண்ட புறாச்சேவல், மேல்மாடங்களைக் கொண்ட பெரிய வீடுகளில் தன்னிடம் அன்பு கொண்டுள்ள பேடையை அன்புடன் அழைத்து நிற்கிறது.

"நம் தலைவியோ, இம்மாலைப்பொழுதில் நம் தலைவன் இப்போது எவ்விடத்து உள்ளான் என நினைந்து கலங்கி, அளவு கடந்து அழுதுகொண்டிருப்பாள்.

"சோர்விலா நம் உள்ளம் மேன்மேலும் ஊக்கத்தால் சிறந் தோங்குமாறு இவ்விடத்தே நாம் மேற்கொண்ட வினையைச் செய்து முடித்தல் வேண்டும்.

"(அங்ஙனம் முடித்தோமானால்) அணிகள் அணியப்பெற்ற நெடுந்தேரினையும் கொடைத் தன்மையையும் கொண்ட செழியனின், மேகங்கள் தவழ்ந்து கூதளம் கமழ்கின்ற வளம் மிக்க சிறுமலை என்னும் மலையிலுள்ள மூங்கிலைப் போன்ற நம் தலைவியின் பெரிய தோளிடத்துப் பரவியுள்ள பசலை நோய் நீங்குமாறு நாம் பல முறை முயங்குவோம்.

"ஆதலால், இப்போது வினைமேல் செல்லுதற்கு என்னுடன் விரைந்து புறப்படு."

கருத்து

வந்த வேலையினை முடித்து வெற்றியுடன் திரும்பித் தலைவியைத் தழுவ வேண்டும். அதனால் நெஞ்சே! செயல்மேற் செல்லுதற்கு என்னுடன் விரைந்து எழு.

விளக்கம்

பொருள் தேடிப் பிரிந்து சென்றபோது இடைவழியில் வருந்திய தன் நெஞ்சத்தினை நோக்கித் தலைவன் சொல்லியது:

"நெஞ்சே! பொருள் ஈட்டக் கடுமையான வழிகளைக் கடந்து வந்துள்ளோம். நம் தலைவி நாம் இப்போது எவ்விடத்தி லிருப்போம் என நினைந்து வருந்தியிருப்பாள்.

"ஊக்கத்தோடு நாம் மேற்கொண்ட செயலை நாம் முடிக்க வேண்டும்.

"செயல் முடிந்து திரும்பியதும் மூங்கில்போலும் பெரிய தோளினைக் கொண்ட தலைவியைப் பன்முறையும் முயங்கி மகிழ்வோம்.

"ஆதலால், வினைமேல் செல்லுதற்கு என்னுடன் உடனே புறப்படு. (இடைவழியில், செயலை முடிக்காமல் திரும்ப வேண்டும் என்று எண்ணிச் சோர்வடையாதே!)"

சொற்பொருள்

1. அழிவுஇல் - சோர்தல் இல்லாத; வழிவழி - மேலும் மேலும்; சிறப்ப - ஊக்கத்தால் சிறப்ப.
2. வினை - (பொருளீட்டும்) செயல்; இவண - இங்கே; ஆயின் - ஆதலால்; வல் - மிகவும்.
3. ஒலிதலை - தழைத்த உச்சியினைக் கொண்ட.
4. அலங்கு - அசையும்; கழை - மூங்கில்; நரல - ஒலியுண்டாக்க; விலங்கு எழுந்து - பக்கங்களில் எழுந்து.
5. கடுவளி - சூறாவளி (வளி - காற்று); கொடிவிடு - கொழுந்துவிட்டு (எரியும்); கூர்எரி - மிக்க தீ.
6. விடர் - பிளப்பு; முகை - முழைஞ்சு; அடுக்கம் - பக்க மலை.
7. அமைக்கண் - மூங்கிலின் கணு; விடுநொடி - எழும் ஒலி; கணக்கலை - கலைமான்களின் கூட்டம்; அகற்றும் - துரத்தும்.

8. வெம்முனை - கொடிய போர்க்களம்; நீந்தி - கடந்து; கைம்மிக்கு - அளவு கடந்து.
9. அகன் சுடர் - பெரிய ஞாயிறு.
10. திரிக் கொளாஅல் - (விளக்கின்) திரியில் தீப்பற்றச் செய்து ஒளிரச் செய்தல்.
12. நெடுநிலை வியல் நகர் - உயர்ந்த மேல்நிலைகளைக் கொண்ட பெரிய இல்லம்; வீழ் துணை - அன்புள்ள பெடையை; பயிரும் - அழைக்கும்.
13. புலம்பு - தனிமை; புன்கண் - துன்பம் (தரும்).
14. கலுழ்வோள் - அழுதுகொண்டிருப்பவள் (தலைவி); எய்தி - அடைந்து.
15. கைவண் - கைவண்மை (வண்மை - வள்ளல் தன்மை); செழியன் - பாண்டியன்.
16. மழை - மேகம்; சிறுமலை - ஒரு மலையின் பெயர்.
17. சிலம்பு - மலை; கூதளம் - கூதாளம் - ஒரு வகைக் கொடிமலர்; வெற்பு - மலை.
18. வேய் - மூங்கில்; பாயும் நோய் - பரவியுள்ள நோய்.
19. அசா - வருத்தம்; வீட - நீங்க.

தலைவன் கூற்று

அகநானூறு 21 **காவன் முல்லைப்பூதனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து நின்று மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுப் பிரிந்த தலைவன், இடைவழியில் நின்று, மீண்டும் தலைவியை நாடிச் செல்லும் தன் நெஞ்சத்தினை நோக்கி, 'தலைவியின் அழகு கெடுமாறு பொருள் தேட நெடுந்தொலைவு செல்லாதே என்று யான் பலமுறை கூறியும், அதற்கிணங்காது பொருள் தேடப் புறப்பட்டாய். இப்பொழுது மீண்டும் தலைவியிடம் செல்லக் கருதுகின்றாயே' என்று உரைத்தது.

மனைஇள நொச்சி மௌவல் வால்முகைத்
துணைநிரைத்து அன்ன, மாவீழ், வெண்பல்,
அவ்வயிற்று அகன்ற அல்குல், தைஇத்
தாழ்மென் கூந்தல், தடமென் பணைத்தோள்,
மடந்தை மாண்நலம் புலம்ப, சேய்நாட்டுச்
செல்லல் என்றுயான் சொல்லவும், ஒல்லாய்,
வினைநயந்து அமைந்தனை; ஆயின், மனைநகப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே,
எழுஇனி, வாழி, என்நெஞ்சே புரிஇணர்
மெல்அவிழ் அம்சினை புலம்ப, வல்லோன்
கோடுஅறை கொம்பின் வீஉகத் தீண்டி,
மராஅம் அலைத்த மணவாய்த் தென்றல்,
சுரம்செல் மள்ளர் சுரியல் தூற்றும்,
என்றூழ் நின்ற புன்தலை வைப்பில்,
பருந்துஇளைப் படூஉம் பாறுதலை ஓமை
இருங்கல் விடரகத்து, ஈன்றுஇளைப் பட்ட,
மென்புனிற்று அம்பிணவு பசித்தென, பைங்கண்
செந்நாய் ஏற்றை கேழல் தாக்க,
இரியற் பிணவல் தீண்டலின், பரீஇச்
செங்காய் உதிர்ந்த பைங்குலை ஈந்தின்
பரல்மண் சுவல் முரண்நிலம் உடைத்த
வல்வாய்க் கணிச்சி, கூழ்ஆர், கோவலர்
ஊறாது அட்ட உவலைக் கூவல்,
வெண்கோடு நயந்த அன்புஇல் கானவர்
இகழ்ந்துஇயங்கு இயவின் அகழ்ந்த குழிசெத்து
இருங்களிற்று இனநிரை, தூர்க்கும்
பெருங்கல் அத்தம் விலங்கிய காடே.

தெளிவுரை

" 'நெஞ்சே! முல்லை அரும்புகளை நிரைத்து வைத்தாற் போன்ற அழகிய வெண்பற்களையும், அகன்ற அழகிய அடிவயிற்றினையும், தழை ஆடையையும், நீண்ட மென்மையான கூந்தலையும், பருத்த தோள்களையும் கொண்ட தலைவியின் மாண்புறு அழகு கெடுமாறு, அவளை விட்டுப் பிரிந்து பொருள்

தேடத் தொலைவிலுள்ள நாட்டிற்குச் செல்லாதே' என்று உன்னிடம் நான் சொன்னேன், நீ அதனை எற்கவில்லை. பொருள் தேடுவதை விரும்பி ஏற்று வந்தாய். பாதி தொலைவு வந்த பின்பு நம் பயணம் தொடர முடியாதபடி தலைவியைக் காண விரும்புகின்றாய். ஆயினும், வெப்பம் மிகுதியான காட்டுவழியில் நாம் செல்ல 'என் பின் வருக' என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்கிறான்.

“காடு மிகுந்த வெப்பம் கொண்டது. மரக் கொம்பினை அடித்து அசைக்கும் பூக் கொள்வோனின் கோல்போலத் தென்றல், வலப் பக்கமாய் முறுக்கேறிய பூக்களைக் கொண்டுள்ள மராமரத்தைத் தாக்கிப் பூக்களை உதிரச் செய்யும். உதிரும் அம்மலர்கள் காட்டு வழியிற் செல்லும் வீரர்களின் சுருண்ட தலை மயிரில் வீழும். குஞ்சுகளை ஈன்ற பருந்துகள் தங்கியிருக்கும் ஓமை மரங்களைக் கொண்ட மலைப்பிளவுகளில் உள்ள குகைகளில் குட்டிகளை ஈன்ற பெண்நாயின் பசியைப் போக்க ஆண் செந்நாய், ஆண்பன்றியைத் தாக்கும். அதைக் கண்டு பெண்பன்றி பயந்து ஓடி ஈச்ச மரத்தில் மோதுவதால் ஈந்தின் செங்காய்கள் உதிரும். அத்தகைய ஈந்த மரத்தோடு பரற்கற்கள் கூடிய மேட்டு வன்னிலத்தில் கிணறு வெட்டுவோர் தோண்டிப் பார்த்தும் நீர் ஊறாததால் விட்டுச் சென்ற பள்ளங்களைச் சருகுகள் மூடியிருக்கும். அப்பள்ளங்களை வேடர்கள், தந்தம் பெறுதற்கு யானைகளைப் பிடிக்கத் தோண்டிய குழி எனக் கருதிப் பெரிய யானைக் கூட்டம் அக்குழிகளைக் கற்களால் மூடும். அத்தகைய கற்கள் நிறைந்த காட்டு வழியில் என்னுடன் விரைந்து வா. தலைவி மகிழப் பல்கூறுபட்ட செல்வக் குவியலை நாம் ஈட்டிவருவோம்!”

கருத்து

நெஞ்சே! பொருளை விரும்பி என்னுடன் வந்தாய்; இடைவழியில் தாமதிக்கிறாய்; பருக நீர் இல்லாத வழியே செல்கிறோம்; என் பின்னே வா; தலைவி மகிழப் பெரும்பொருள் ஈட்டித் திரும்புவோம்.

விளக்கம்

பொருள் தேடப் பிரிந்த தலைவன், இடைவழியில் நின்று, மீண்டு தன் தலைவியை நாடிச் செல்லலுற்ற தன் நெஞ்சத்தினை

நோக்கி, "என் நெஞ்சே! வாழி! 'தலைவியின் அழகு தனிமையில் வாடும்படி விட்டுவிட்டு நெடுந்தொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்று பொருள் தேட முயலாதே' என்று நான் சொன்னேன்; அதற்குச் சம்மதியாமல் பொருள் தேட விரும்பிப் புறப்பட்டாய். ஆதலின், இப்போது இடைவழியில் காட்டிடத்தே தாமதம் செய்யாதே; தலைவி மகிழும்படி பல்வேறு வகைச் செல்வங் களை ஈட்டிக் கொணர்ந்து தருவோம்; விரைவாய் என் பின்னே வா" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான். (நான் வேண்டா என்றேன்; நீ புறப்படு என்றாய்; இப்போது வருந்தி என்ன பயன்? என் பின்னே விரைந்து வா.)

சொற்பொருள்

1. மனை இள நொச்சி - முன்றிலில் வளர்ந்த நொச்சி(யில் படர்ந்த); மெளவல் - முல்லை மலர்.
2. துணை நிரைத்தன்ன - ஒத்த அளவில் உள்ளவற்றை நிரல்பட வைத்தது போன்ற; மாவீழ் - வண்டுகள் விரும்பும்.
3. தைஇ - ஒப்பனை செய்யப்பெற்ற.
4. தாழ் மென் கூந்தல் - நீண்டு வளர்ந்த மென்மையான கூந்தல்.
5. புலம்ப - கெட; சேய்நாடு - தொலைவில் உள்ள நாடு.
6. ஒல்லாய் - உடன்படாய்.
7. வினை - பொருளீட்டுதல்; நயந்து - விரும்பி; மனைநக - தலைவி மகிழ.
8. வெறுக்கை - செல்வம்; தருகம் - ஈட்டித் தருவோம்.
9. புரிஇணர் - வலப் பக்கமாய் முறுக்கேறிய பூங்கொத்துகள்.
10. புலம்ப - தனிமையுற; வல்லோன் - உடல் வன்மை கொண்டவன்.
11. கோடு - பூக்கொம்பு; அறை - அடித்து; வீ - மலர்; உக - உதிர.
12. மராஅம் - மரா மரம் (வெண்கடம்பு).
13. சுரியல் - சுருண்ட தலைமயிர்.
14. என்றூழ் நின்ற - வெம்மை நிலைபெற்ற; புன்தலை - சிறிய; வைப்பு - இடம், ஊர்.
15. இளைப்படூஉம் -காவற்படும்; பாறுதலை - சிதறிய நுனி; ஓமை - ஒரு வகை மரம்.
16. விடர் - பிளப்பு, முழைஞ்சு.
17. புனிறு - அண்மையில் ஈன்ற; பிணவு - பெண் (நாய்).
18. ஏற்றை - ஆண்; கேழல் - பன்றி.

19. இரியல் - அஞ்சி ஓடுதல்; பிணவல் - பெண் (பன்றி); பரீஇ - அறுபட்டு.
20. பைங்குலை - பசிய குலை; ஈந்து - ஈச்ச மரம்.
21. சுவல் - மேடு (மேட்டு நிலம்); முரண் நிலம் - வன்னிலம்.
22. வல்வாய் - கூரிய முனை; கணிச்சி - குந்தாலி; கூழ்ஆர் - கூழினைக் குடிக்கும்; கோவலர் - இடையர்.
23. அட்ட - தோண்டிய; உவலை - சருகு; கூவல் - கிணறு.
24. வெண்கோடு நயந்த - யானைத் தந்தங்களை விரும்பி; கானவர் - வேடுவர்.
25. குழிசெத்து - தங்களை அகப்படுத்த வெட்டப்பட்ட குழிகளாய்க் கருதி.
26. தூர்க்கும் - மூடும்.

தலைவன் கூற்று

அகநானூறு 19 **பொருந்தில் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

நெஞ்சினாற் பொருள் வலிக்கப்பட்டுப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன், தலைமகள் நலன் நயந்து உள்ளிய நெஞ்சினைக் கழறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேட நெஞ்சில் உறுதி கொண்டு பிரிந்த தலைவன், இடைவழியில் தலைவியின் நலம் விரும்பி வருந்திய நெஞ்சத்தினை நோக்கிச் சொல்லியது.

அன்றுஅவண் ஒழிந்தன்றும் இலையே, வந்துநனி
வருந்தினை வாழிஎன் நெஞ்சே! பருந்துஇருந்து
உயாவிளி பயிற்றும், யாஉயர், நனந்தலை,
உருள்துடி மகுளியின் பொருள்தெரிந்து இசைக்கும்
கடுங்குரல் குடிஞைய நெடும்பெரும் குன்றம்,
எம்மொடு இறத்தலும் செல்லாய், பின்நின்று,
ஒழியச் சூழ்ந்தனை ஆயின், தவிராது,
செல்இனி சிறக்கநின் உள்ளம் வல்லே
மறவல் ஓம்புமதி, எம்மே நறவின்

சேயிதழ் அனைய ஆகி, குவளை
மாஇதழ் புரையும் மலிர்கொள் ஈர்இமை,
உள்ளகம் கனல உள்ளுதொறு உலறி,
பழங்கண் கொண்ட, கதழ்ந்துவீழ், அவிர்அறல்
வெய்ய உகுதர, வெரீஇ, பையென,
சில்வளை சொரிந்த மெல்இறை முன்கை
பூவீ கொடியின் புல்லெனப் போகி,
அடர்செய் ஆய்அகல் சுடர்துணை ஆக,
இயங்காது வதிந்தநம் காதலி
உயங்குசாய் சிறுபுறம் முயங்கிய பின்னே.

தெளிவுரை

“நெஞ்சே! நீ பொருள் தேட வேண்டித் தலைவியைப் பிரிந்த அன்று, ‘நான் வாரேன்’ என்று கூறி நம் மனையில் தங்கி விட்டாயோ; அன்று; என்னுடன் வந்தாய்; வந்த நீ, இடைவழியில் தலைவியை நினைந்து மிகவும் வருந்துகிறாய். பொருள் தேடச் செல்லும் வழியில் யாமரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. அங்குப் பருந்து தங்கித் தன் பேடையை நினைந்து எழுப்பும் துன்பக் குரல் வழிச்செல்வோரை வருத்தும். ஆந்தைகள் பறையடிப்பனபோல் கடுமையான குரலில் ஒலிக்கும். குன்றுகள் கலந்த பாலை நில வழியில் என்னுடன் தொடர்ந்து வரக் கருதாது தலைவியை மிகுதியாய் நினைத்து அவளிடமே செல்ல விரும்புகிறாய். அவ்வாறாயின் தடையின்றி இப்பொழுதே விரைந்து செல்; நீ எண்ணியது நிறைவேறட்டும்.

“நீ திரும்பச் சென்று, பிரிவுத்துன்பத்தால் கண்ணீர் சொரிந்து, கை வளைகள் கழலப் பெற்று, பூக்கள் நீங்கிய கொடிபோல் பொலிவற்று வாடி, அகலில் தான் ஏற்றிய விளக்கே துணையாக, எங்கும் செல்லாது, ஓரிடத்துத் தனித்து இருக்கும் என் காதலியைத் தழுவிய பின்பு நெஞ்சே நீ, என்னை மறந்துவிடாதே!” (என்று நெஞ்சத்தினிடம் சொல்வதுபோலத் தான் திரும்பிச் செல்ல இயலாததைக் குறிப்பால் வெளிப்படுத்துகிறான்.)

கருத்து

நெஞ்சே! பொருளீட்டச் செல்லும் என்னுடன் வாராது இடைவழியில் வருந்துகிறாய். என்னுடன் வரவும் மாட்டாய்; நீ விரும்பியவாறே

தலைவியிடம் திரும்பச் செல். அங்குச் சென்று அவளை அணைத்ததும் என்னை மறந்து விடாதே!

விளக்கம்

"என் நெஞ்சே! வீட்டிலேயே தலைவியுடன் பிரியாது தங்கினாயோ; அன்று; என்னுடன் வந்து இவ்விடைவழியில் வருந்துகின்றாய். என்னோடு சேர்ந்து இப்பெருமலையைக் கடக்க விரும்பாது பின் தங்கி, தலைவியிடம் செல்ல விரும்பினால் தடையின்றிச் செல். இல்லத்தில் அகல்விளக்குச் சுடரே துணையாய், வெளியிலே செல்லாது தங்கியிருக்கும் நம் காதலியின் வாடி வதங்கிய முதுகைத் தழுவிய பிறகு என்னை மறந்துவிடாதே" என்று கூறித் தலைவன் தன்னைத் தேற்றிக் கொள்கிறான். ('தலைவியைப் பிரிய மனமின்றி என் உடல் மட்டும் பயணம் செய்து கொண்டிருப்பதாய்க் கூறு' என்கிறான்.)

சொற்பொருள்

1. ஒழிந்தன்றும் இலையே - வாரேன் என்றும் சொல்லவில்லை.
3. உயாவிளி - துன்பக்குரல் ஓசை; பயிற்றும் - பலகாலும் செய்யும்; யா - யா மரங்கள்; நனந்தலை - அகன்ற இடம்.
4. உருள் துடி - ஒரு வகைச் சிறுபறை; மகுளி - ஓசை.
5. குடிஞை - ஆந்தை.
6. இறத்தல் - கடத்தல்.
7-8. பின்னே நின்று திரும்பிச் செல்லக் கருதினாய் ஆயின், தடையின்றிச் செல்.
8. வல் - விரைந்து.
9. ஓம்பு மதி - மறந்துவிடாதே; நறவு - ஒரு வகை மரம்.
10. சேயிதழ் - சிவந்த இதழ்.
11. மலிர்கொள் - மிகுந்த ஈரம் கொண்ட; ஈர்இமை - குளிர்ச்சி பொருந்திய கண் இமை.
12. கனல - கொதிக்க; உலறி - வற்றி.
13. கதழ்ந்து - விரைந்து; அவிர் அறல் - அறல் நீர், (கண்ணீர்.)
14. வெரீஇ - அஞ்சி; பைய - மெல்ல.
15. சொரிந்த - கழன்று விழ.
16. பூவீ - பூக்கள் உதிர்ந்த; புல்லென - பொலிவற்று.
17. அடர் - பொன் தகடு; அகல் - அகல் விளக்கு.
18. இயங்காது - எங்கும் செல்லாது.
19. உயங்குசாய் - வருந்தி மெலிந்த; சிறுபுறம் - பிடர், புறக்கழுத்து.

தலைவன் கூற்று

அகநானூறு 181 **பரணர்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்து ஒழியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டுதற்காகப் பிரிந்த தலைவன், இடைவழியில் திரும்பிச் செல்ல விரும்பிய நெஞ்சத்தினிடம் சொல்லியது.

துன்அருங் கானமும் துணிதல் ஆற்றாய்,
பின்நின்று பெயரச் சூழ்ந்தனை; ஆயின்,
என்நிலை உரைமோ – நெஞ்சே! ஒன்னார்
ஓம்புஅரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ,
முருகுஉறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப,
ஆஅய் எயினன் வீழ்ந்தென, ஞாயிற்று
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர ஆடி, மொசிந்துஉடன்,
பூவிரி அகன்துறைக் கனைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற்று அயிர்கொண்டு ஈண்டி,
எக்கர் இட்ட குப்பை வெண்மணல்,
வைப்பின் யாணர் வளம்கெழு வேந்தர்
ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை,
நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்,
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரம் தோன்றாச் சேண்உயர் நல்இல்
புகாஅர் நல்நாட் டதுவே பகாஅர்
பண்டம் நாறும் வண்டுஅடர் ஐம்பால்,

பணைத்தகைத் தடைஇய காண்புஇன் மென்தோள்,
அணங்குசால், அரிவை இருந்த
மணம்கமழ் மறுகின் மணற்பெருங் குன்றே.

தெளிவுரை

"நெஞ்சே! நம் தலைவி நறுமணம் மிக்கதும் வண்டுகள் மொய்ப்பதும் ஐந்து பகுதிகளாய்ப் பின்னப்பட்டதுமாகிய கூந்தலையுடையவள். மூங்கிலின் தன்மையினைக் கொண்டன வாயும், வளைந்தனவாயும் காண்பதற்கு இனியனவாயும் மெல்லிய தோள்களையும் கொண்டவள். அழகுமிக்க அவள் இருப்பது, மணம் கமழும் தெருக்களைக் கொண்ட, 'மணற் பெருங்குன்றம்' என்னும் ஊர்.

"மிஞிலி என்பவன் பகைவரின் கோட்டைகள் பலவற்றை வென்றவன்; மிகுதியான சேனைகளைக் கொண்டவன்; அவனோடு ஆய்எயினன் என்பவன் போர்க்களம் குருதியால் சிவப்புறுமாறு பொருது இறந்தான்.

"எயினன் பறவைக்குப் பாதுகாவலன். அதனால் அப்பகுதியில் உள்ளனவும், அங்கில்லாத புதிய பறவைகளும் வந்து ஒன்றாய்க் கூடி, வெயில் அவன் உடம்பில் படாதவாறு, வானத்தில் சிறிதும் இடைவெளியின்றிச் சிறகை விரித்து வட்டமிட்டுப் பறந்தன. பின்பு, அவை ஒன்றுசேர்ந்து காவிரியாற்றங்கரையில் பரவி யிருந்த மணலைக் கொண்டுவந்து, அவன் உடலின்மீது இட்டு மணல் மேடாக்கின.

"அதற்கு அருகில் நான்கு வேதங்களாகிய பழைய நூலை அருளிய முக்கண்ணனான சிவபெருமான் கோவில் உள்ளது. அது செல்வம் மிக்க சோழ வேந்தர்களால் பாதுகாக்கப்படுவது. அத்திருக்கோவில் உள்ள இடம் 'ஆலமுற்றம்' என்னும் பெயர் கொண்டது. அங்குள்ள பொய்கையைச் சூழ்ந்த பொழிலில் சிறுமிகள் சிற்றில் இழைத்து விளையாடுவர்; அச்சிறுமிகள் அழகுறச் செய்த பொம்மைகள் துறையில் கிடக்கும். முன்பு குறிப்பிட்ட அப்பறவைகள் அந்த ஆலமரத்தில் வந்து தங்கும்.

"மீனக் கொடியை உச்சியில் கொண்ட வான் தீண்டும் மதிலையும், உச்சி அறியப்படாத உயர்ந்த நல்ல மாடங்களையும்

கொண்ட காவிரிப்பூம்பட்டினம் உள்ள சோழ நாட்டில்தான் தலைவியின் மணற்பெருங்குன்றம் என்னும் ஊரும் உள்ளது.

"நெஞ்சே! நீ செல்வம் ஈட்டப் புறப்பட்டு வந்தும் அரிய காடுகளைக் கடக்கத் துணிவின்றி இருக்கிறாய்; திரும்பிச் செல்லவும் விரும்புகிறாய்; அவ்வாறு கருதினையாயின் நீ அங்குச் சென்றதும் என் நிலையினைத் தலைவியிடம் சொல்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்வதால், தான் திரும்பப் போவதில்லை என்பதை நெஞ்சுக்குத் தெளிவுபடுத்துகிறான்.

கருத்து

நெஞ்சே! இக்காட்டைக் கடக்க நீ துணியவில்லை. திரும்பிச் செல்ல விரும்புகின்றாய்; திரும்பிச் சென்றால் முதலில் என் நிலைமையைத் தலைவியிடம் சொல்.

விளக்கம்

"நெஞ்சே! கரிய கூந்தலையும், மென்மையான தோளினையும் கொண்ட அழகுமிக்க நம் காதலி இருக்கும் மணற்பெருங்குன்றம் சோழ நாட்டில் உள்ளது. நீ செல்வம் ஈட்டப் புறப்பட்டு வந்தும் அரிய காடுகளைக் கடக்கத் துணிவின்றி இருக்கிறாய்; திரும்பிச் செல்லவும் விரும்புகின்றாய். அப்படித் திரும்பிச் சென்றால் நம்மை எதிர்பார்த்திருக்கும் தலைவியிடம் என் நிலையைப் பற்றிச் சொல். நீ திரும்பச் சென்றாலும் நான் பொருளீட்டி முடித்த பின்னரே திரும்புவேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.

சொற்பொருள்

1. துன்னல் - நெருங்குதல், அணுகுதல்; துணிதல் ஆற்றாய் - துணிய மாட்டாய்.
2. பெயர - திரும்பிச் செல்ல; சூழ்தல் - கருதுதல்.
3. ஒன்னார் - பகைவர்.
4. ஓம்புதல் - பாதுகாத்தல்.
5. அடுபோர் - வெல்லும் போர்; மிஞிலி - படைத் தலைவருள் ஒருவன்; உடைஇ - தோற்று.
6. முருகு - முருகன்; உறழ் - ஒத்த; முன்பு - வலிமை; சிவப்ப - (குருதியால்) சிவப்படைய.

7. ஆஅய் எயினன் - படைத் தலைவருள் ஒருவன்; வீழ்ந்தென - இறந்துவிழ.
8. உருப்பம் - வெப்பம்; புதைய - மறைய; ஓராங்கு - ஒன்றுசேர்ந்து.
9. வம்பப் புள் - புதிய பறவை; கம்பலை - ஆரவாரம்; தோடு - தொகுதி.
10. தூர ஆடி - விசும்பிடம் மறைய வட்டமிட்டு; மொசிந்து - மொய்த்து.
11. கனை விசை - மிக்க வேகம்; கடுநீர் - மிக்க விசையுடன் ஓடும் நீர்.
12. அயிர் - நுண்மணல்; ஈண்டுதல் - தொகுத்தல்.
13. எக்கர் - மணல்மேடு; குப்பை - குவியல்.
14. வைப்பு - இடம், ஊர்; யாணர் - புது வருவாய்.
15. நாறும் - பரவும்; இசை - புகழ்.
16. முக்கண் செல்வன் - மூன்று கண்களைக் கொண்ட சிவபெருமான்.
17. ஆலமுற்றம் - ஆலமுற்றம் என்னும் இடம்; தைஇய - இயற்றப்பட்ட.
18. பொழில் மனை மகளிர் - சோலையில் சிறு வீடு கட்டி விளையாடும் மகளிர்.
19. பாவை - விளையாட்டுப்பாவை; இறுக்கும் - வந்து தங்கும்.
20. மகர நெற்றி - மீனக்கொடியை உச்சியில் கொண்ட; புரிசை - கோட்டை.
21. சிகரம் தோன்றா - உச்சி கண்ணுக்குப் புலப்படாத.
22. புகாஅர் - காவிரிப்பூம்பட்டினம்; பகாஅர் - விலை பகர்பவர்.
23. அடர் - மொய்க்கும்.
24. பணைத் தகை - மூங்கிலின் தன்மை; தடைஇய - பருத்த, வளைந்த.
25. காண்பு இன் - காண்பதற்கு இனிய; அணங்குசால் - வருத்தும் தெய்வம் போன்ற.
26. மறுகு - தெரு.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 330 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரிந்து செல்லும் தலைவன் இடைவழியில் மீளக் கருதிய தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

வெந்துகள் ஆகிய வெயிற்கடம் நீந்தி
வந்தனம் ஆயினும், ஒழிகினிச் செலவே!
அழுத கண்ணள் ஆய்நலம் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுரம் நினைக்கும்
அவிர்கோல் ஆய்தொடி உள்ளத்துப் படரே!

தெளிவுரை

"தலைவி ஒளி பொருந்திய திரண்ட வளையல்களை அணிந்தவள். அழுத கண்ணோடும் மெலிந்த உடலோடும் கதிரவன் வருத்தும் காட்டுவழியே செல்லும் என்னை நினைத்து அவள் உள்ளம் வருந்தும். ஆதலால், வெந்து தூளாக்கும் வெயில் மிகுந்த காட்டுவழியைப் பாதி கடந்து வந்துவிட்டோம்; என்றாலும், மேலும் செல்லாது பயணத்தை நிறுத்துவோம்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

கருத்து

நெஞ்சே! தொடர்ந்து காட்டுவழியில் சென்று பெறுகின்ற செல்வத்தினை விட, மீண்டு சென்று காதலியின் துயர் தீர்த்தலே பெரிது.

சொற்பொருள்

1. வெம்துகள் - வெயில் வெப்பத்தால் கல்லும் மண்ணும் கட்டுக் குலைந்து பொடியாகிய தூசி; கடம் - பாலை நிலம்; நீந்தி - கடந்து.
2. ஒழிகினி - ஒழிக இனி; ஒழிகினிச் செலவே - இனிமேல் செல்ல விருக்கும் பயணத்தை நிறுத்து.
3. ஆய்நலம் - அழகிய நலம்; சிதைய - அழிய.
4. கதிர் - சூரியக்கதிர்; தெறும் - சுடும்.
5. அவிர்கோல் - ஒளிவிடும் திரட்சியினைக் கொண்ட; ஆய்தொடி - ஆய்ந்தெடுத்த வளையல்களை அணிந்தவள்; படர் - துன்பம்.

வருவார் என வற்புறுத்திக் கூறியது.

தோழி கூற்று

அகநானூறு 129 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தி மெலிந்தாள், தலைவி. முன்னர்க் களவுக் காலத்தில் அவளிடம் தலைவன் தன் காதல் மிகுதியைத் தெரிவித்துச் சொன்னதைக் கூறி, 'அவன் வருவான்' என்று தோழி கூறியது.

'உள்ளல் வேண்டும் ஒழிந்த பின்'என,
நள்ளென் கங்குல் நடுங்குதுணை ஆயவர்
நின்மறந்து உறைதல் யாவது? புல்மறந்து
அலங்கல் வான்கழை உதிர்நெல் நோக்கி,
கலைபிணை விளிக்கும் கானத்து ஆங்கண்,
கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்
தாழிமுதல் கலித்த கோழிலைப் பருத்திப்
பொதிவயிற்று இளங்காய் பேடை ஊட்டி,
போகில் பிளந்திட்ட பொங்கல் வெண்காழ்
நல்கூர் பெண்டிர் அல்கல் கூட்டும்
கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்ப,
கொழுப்புஆ தின்ற கூர்ம்படை மழவர்,
செருப்புடை அடியர் தெண்சுனை மண்டும்
அருஞ்சுரம் அரிய அல்ல; வார்கோல்
திருந்துஇழைப் பணைத்தோள்; தேன்நாறு கதுப்பின்,
குவளை உண்கண் இவளொடு செலற்குஎன
நெஞ்சுவாய் அவிழ்ந்தனர் காதலர்
அம்சில் ஓதி ஆயிழை நமக்கே.

தெளிவுரை

"*சிறிய அளவிலான, அழகிய கூந்தலையும், தேர்ந்தெடுத்த அணிகலன்களையும் கொண்ட தலைவியே! தலைவர்*

உன்னோடு இருந்த நாள்களில், ஒருநாள், நடு இரவில், 'இவளை நாம் பிரிந்து சென்ற பிறகு, இவளை இல்லத்தில் விட்டு வந்தோமே என்று இரங்க வேண்டி வரும்' என்று நினைத்து நடுங்கினார் போலும்! (அதனால், தாம் செல்ல வேண்டிய பாலைநில வழியின் தன்மையைக் கூறுபவர் போலப் பேசத் தொடங்கினார்.) 'ஆண்மான் புல் தின்னுதலை மறந்து, நெடிய மூங்கிலிலிருந்து நெல் உதிர்வதைப் பார்த்து, தனது பெண் மானை அழைப்பதற்கு இடனான காடு. அங்கே, ஒரு பாறையைச் சார்ந்திருந்த பழைய, சிதைந்த குடிசையில், பானையில் தழைத்து வளர்ந்த பருத்திச்செடியின் பஞ்சு பொதிந்த இளங்காயை, ஆண் பறவைகள், தம் பேடைகளை உண்ணச்செய்து, பஞ்சு சூழ்ந்துள்ள அவற்றின் கொட்டைகளைப் போட்டு விட்டுச் செல்லும். வறுமையுற்ற மகளிர், அடுத்த வேளை உணவாக, அவற்றைச் சேர்த்து வைப்பர். மக்களை மனங்கலங்கச்செய்யும் போர்கள் நடக்கும் சிற்றூர்களில், அவர்கள் தலையில் கை வைத்து அலறும்படி செருப்பினை அணிந்த மழவர்கள் பசுக்களைக் கொள்ளையிட்டுச் சென்று, அவற்றைக் கொன்று தின்று, சுனையின் தெளிந்த நீரைத் தொகுதியாய்ப் பருகுவர். இத்தகைய அச்சம் மிக்க காட்சிகளைக் கொண்ட காட்டு வழிகளில் செல்ல வேண்டும்' என்றார்.

"பிறகு, 'வாட்டமான வளையல்களும், செவ்விய அணிகலன்களும், மூங்கிலை ஒத்த தோளும், இனிய மணம் கொண்ட கூந்தலும், கருங்குவளை போன்ற மை தீட்டிய கண்களும் கொண்ட இவளோடு சேர்ந்து செல்வதாயின், இந்த வழிகள் துன்பம் செய்யா' என்று, தம் நெஞ்சம் திறந்து நமக்குக் கூறினார்.

"ஆதலால், 'இவளது நடுக்கம் நீங்கிய பின்னரே நாம் பொருளீட்டி வரக் கருத வேண்டும்' என்று கூறி, நள்ளிரவில் உன் நடுக்கத்தைத் தீர்க்கத் துணையாயிருந்த அவர், இப்பொழுது உன்னை மறந்து, வேற்று நாட்டில் எப்படித் தங்கியிருப்பார்?" என்று தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

பிரிவிற்கு அஞ்சி நடுங்கிய காதலர், உன்னோடு செல்வதாயின் கடத்தற்கரிய சுரங்களும் அரியனவல்ல எனத் தம் அன்பை

வெளிப்படுத்தினாரே! அதனை மறந்து அவர் வேற்று நாட்டில் தங்குவாரா? உடனே வருவார்; ஆற்றியிரு.

விளக்கம்

“தலைவியே! உன் நடுக்கம் நீங்கிய பின்னரே தாம் பொருளீட்டச் செல்ல வேண்டும் என்று கருதி, நள்ளிரவில் உன் நடுக்கத்தைத் தீர்க்கத் துணையாய் இருந்தார். பிறகு அவர், ‘இத்தலைவியுடன் சென்றால் கானங்கள் கடத்தற்கரியன அல்ல’ என்னும் தன் மனக் கருத்தையும் வெளியிட்டார். அத்தகையவர் உன்னை மறந்து வேற்று நாட்டில் தங்கியிருத்தல் எவ்வாறு இயலும்?” என்று தலைவியைத் தோழி தேற்றினாள்.

குறிப்பு

1. பிரிவுக்கு அஞ்சியமையாலும், தலைவியை உடனழைத்துச் செல்ல விரும்பினார் என்பதாலும், அவளை மறந்து வேற்று நாட்டில் தலைவர் தங்கமாட்டார் எனக் கூறித் தோழி, தலைவியை அமைதிப்படுத்துகின்றாள்.

2. கலை, பிணையை விளிக்கும் என்றதனால், தலைவர் தாமே வந்து தலைவியை அழைத்து அளாவுவார் என்பதாம்.

3. ‘கலை புல் மறந்து’ என்பது மழையின்மையைக் காட்டும்; மூங்கிற்கணு வெடித்து நெல் சிதறியமை பாலையின் வெம்மையைக் காட்டும்; அந்த நெல்லும் கிடைக்கப்பெறாது, பருத்தி விதையை மக்கள் உண்டமை அவர்களது வறுமையைக் காட்டும். இவற்றிற்கு மாறாய்த் தலைவன் தலைவியை அவ்வழியில் அழைத்துச் செல்ல விரும்பியது, அவன் அவளுக்குச் செய்த அருளைக் காட்டும்.

சொற்பொருள்

1. ஒழிந்த பின் - இவளைப் பிரிந்து சென்ற பின்; உள்ளல் வேண்டும் - இவளை எண்ணி நாம் இரங்கல் வேண்டும்; என - எனக் கருதி.
2. நள் என் கங்குல் - நள் என்னும் ஒலிக் கொண்ட நடு இரவு; நடுங்குதுணை யாயவர் - நடுங்கும் துணையினரான (நம் தலைவர்).
3. உறைதல் - (வேற்று நாட்டில்) தங்குதல்; யாவது? - எங்ஙனம் இயலும்?; புல் மறந்து - புல் உண்ணுதலை மறந்து.
4. அலங்கல் - அசையும்; வான்கழை - நெடிய மூங்கில்.
5. கலை - ஆண்மான்; பிணை விளிக்கும் - பெண்மானை அழைக்கும்.

6. கல்சேர்பு - பாறையைச் சேர்ந்து; கதுவாய் - சிதைவுற்ற; குரம்பை - குடில்.
7. தாழிமுதல் கலித்த - தாழி (பானை) யிடத்துத் தழைத்த; கோழ் இலை - கொழுவிய இலைகளைக் கொண்ட; பருத்தி - பருத்திச் செடியின்.
8. பொதிவயிற்று - (பருத்த) பஞ்சைப் பொதிந்த வயிற்றினையுடைய; பேடை - (பறவை தன்) பெட்டைக்கு; ஊட்டி - கொடுத்து.
9. போகில் - பறவைப் பொதுப்பெயர், இங்கு ஆண் பறவை; பிளந்திட்ட - பிளந்து போட்ட; பொங்கல் - பஞ்சினைக் கொண்ட; வெண்காழ் - வெண்மையான கொட்டையை.
10. நல்கூர் பெண்டிர் - வறுமையுற்ற பெண்டிர்; அல்கல் கூட்டும் - வைத்துண்ணும் உணவாய்ச் சேர்த்து வைக்கும்.
11. கலங்குமுனை - கலங்குதற்கு ஏதுவாய்ப் போர் நிகழும் இடம்; சீறூர் - சிற்றூரில் உள்ளார்; கைதலை வைப்ப - கையைத் தலையில் வைத்து (அலற).
12. கொழுப்பு ஆ - (அவர்களுடைய) கொழுத்த பசுக்களை; தின்ற - (கவர்ந்து சென்று கொன்று) தின்ற; கூர்ம் படை மழவர் - கூரிய படை களையுடைய மழவர்கள்.
13. தெண்சுனை - தெளிந்த சுனைநீரை; மண்டும் - மிகுதியாய்ப் பருகும்.
14. வார்கோல் - நீண்ட கோல் தொழில் அமைந்த.
15. திருந்துஇழை - திருந்திய அணிகலன்களையும்; பணைத்தோள் - மூங்கில் போன்ற தோளினையும்; தேன்நாறு - தேன் மணக்கும்; கதுப்பு - கூந்தலினையும்.
16. குவளை - குவளை மலர் போன்ற; உண்கண் - மை உண்ட (எழுதப் பட்ட) கண்களையும்; இவளொடு - (கொண்டுள்ள) இத் தலைவியோடு; செலற்கு - செல்லுதற்கு (துன்பம் செய்யா என).
17. நெஞ்சுவாய் அவிழ்ந்தனர் - (நமக்குத்) தம் உள்ளக் கருத்தை வாய் விட்டுப் மொழிந்தனர்.
18. அம்சில் ஓதி - அழகிய சிறிய அளவிலான கூந்தல்; ஆய் இழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்கள்.

தோழி கூற்று

அகநானூறு 209 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது. (வற்புறீஇயது - - வருந்துதல் கூடாது என வற்புறுத்திக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டும்பொருட்டுப் பிரிந்தான்; பிரிவாற்றாது தலைவி மிகவும் வருந்தினாள். அது கண்ட தோழி, 'உன் அழகினை அவனால் மறந்து விட இயலுமா? அதனால் இப்பொழுதே திரும்பி வருவான். நீ வருந்தாதே' என வற்புறுத்திக் கூறியது.

'தோளும் தொல்கவின் தொலைந்தன; நாளும்
அன்னையும் அருந்துயர் உற்றனள்; அலரே,
பொன்அணி நெடுந்தேர்த் தென்னர் கோமான்,
எழுஉறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்,
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத்து ஆர்ப்பினும் பெரிது'என,
ஆழல்– வாழி! தோழி!– அவரே,
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறைஇறந்து அகன்றனர் ஆயினும், நிறைஇறந்து,
உள்ளார்ஆதலோ அரிதே– செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி,
நிலைபெறு கடவுள் ஆக்கிய,
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே.

தெளிவுரை

"தலைவி! வாழ்க! 'என் தோளில் முன்பிருந்த அழகு இல்லை. தாயோ, இன்னதென அறியாமல், நாளுக்குநாள் மிகுதியாய்த்

துன்புறுகின்றாள். ஊரிலோ பழிச்சொல் பெருகிவிட்டது. 'பொன்னால் அழகு செய்யப்பெற்ற தேரினையும், கணையம் ஒத்த வலிய நன்கு இயன்ற தோள்களையும் கொண்டவன், பாண்டியன் நெடுஞ்செழியன். அவன் தனக்குப் பகையாய் எழுந்த சோழன், சேரன் உள்ளிட்ட ஏழு மன்னரையும் தான் ஒருவனே எதிர்த்துத் தலையாலங்கானத்துப் போரில் வென்றான். அப்போது, அப்போர்க்களத்தில் எழுந்த மகிழ்ச்சி ஆரவாரத்தைவிடப் பெரிதாகிவிட்டது, ஊரார் கூறும் பழிச்சொல்'. இவ்வாறு கூறித் துயரில் அழுந்தாதே. நம் தலைவர், பெரிய யானையையும், வீரத்தோடு போர் புரியும் பண்பையும் உடைய புல்லி என்பவனது உயர்ந்த மூங்கில்கள் வளரும் சாரல்களுடன் திகழும் வேங்கட மலைக்கு அப்பாலுள்ள பல குன்றுகளையும் கடந்து நம்மைப் பிரிந்து சென்றுள்ளார்.

"ஆயினும், உன்னை மறவார். முள்ளூருக்கு மன்னனும், சிவந்த வேலை ஏந்தியவனும், வீரவளை அணிந்தவனுமாகிய மலையமான் திருமுடிக்காரி வள்ளன்மை பூண்டு மாயாப்புகழ் கொண்டவன். அவன் வில்வல்லோனாகிய ஓரியைக் கொன்று, கொல்லிமலையைச் சேர மன்னனுக்குக் கொடுத்தான். வேர்ப்பலா மரங்கள் நிறைந்த அம்மலையில் தெய்வச்சிற்பி செய்து நிறுவிய பேரழகுப்பாவையைப் பலரும் புகழ்வர். அதன் அழகினை ஒத்த உன் அழகை, நம் தலைவரால் நினைத்துப் பாராமலிருக்க இயலாது. (ஆகவே, விரைந்து வருவார்)" என்று தோழி தலைவியிடம் கூறி, அவளை வருந்த வேண்டா எனத் தேற்றுகிறாள்.

கருத்து

கொல்லிப்பாவையின் அழகினைப் போன்ற உன் பேரழகினை நம் தலைவரால் மறத்திடல் இயலாது. எனவே, அவர் விரைவில் மீண்டு வருதல் உறுதி. அவர் வருமளவும் ஆற்றியிரு.

விளக்கம்

"தலைவியே, வாழி! 'என் தோள்கள் பண்டைய அழகினை இழந்தன; தாயும் மிகத் துயர் உற்றனள்; அலர் பெரிதாயிற்று'

என்று கூறி அழாதே. அவர் வேங்கடத்துக்கு அப்பால் உள்ள குன்றுகளையும் தாண்டிச் சென்றுள்ளார்; ஆயினும், அவரால், கொல்லிப்பாவையின் பேரழகன்ன உன் அழகினை எண்ணிப் பாராமல் இருத்தல் அரிது; விரைவில் வருவார்" என்று கூறித் தோழி, தலைவியை ஆற்றுவித்தாள்.

வரலாற்றுக்குறிப்பு

1. பாண்டியன் நெடுஞ்செழியனைச் சேரன், செம்பியன், திதியன், பொலம்பூண் எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மாள், பொருநன் என மன்னவர் எழுவர் எதிர்த்துப் போரிட்டனர். தலையாலங்கானத்தில் நிகழ்ந்த போரில் இவர்கள் எழுவரையும் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒருவனே எதிர்த்து வென்றான்.

2. காரி, ஓரி ஆகிய இருவரும் கடையெழு வள்ளல்களுள் இருவர். ஓரி மீது படையெடுத்த சேரர்க்குக் காரி துணையாய் நின்று, ஓரியை வென்று, அவன் கொல்லி நாட்டினைச் சேரர்க்குத் தந்தான்.

சொற்பொருள்

1. தொல்கவின் - பழைய அழகு; தொலைதல் - கெட்டுப்போதல்.
2. அலர் - பழிச்சொல்.
3. பொன் அணி - பொன்னாலான அணிகள் அணிந்த; தென்னர் கோமான் - பாண்டியன்.
4. எழுஉறழ் - கணைய மரத்தினை ஒத்த; இயல்தேர் - நன்கு இயற்றப்பட்ட; செழியன் - பாண்டியன் நெடுஞ்செழியன்.
5. நேரா எழுவர் - பகைத்த எழுவர்; அடிப்பட - முற்ற; கடந்த - வென்ற.
6. ஆலங்கானம் - தலையாலங்கானம் எனும் போர்க்களம்; ஆர்ப்பு - ஆரவாரம்.
7. ஆழல் - அழாதே.
8. மாஅல் - பெரிய; மறப்போர் - வீரப்போர்; புல்லி - மன்னருள் ஒருவன்.
9. காம்பு - மூங்கில்; வேங்கடம் - வேங்கட மலை; உம்பர் - அப்பால்.
10. அறை இறந்து - குன்றுகளைக் கடந்து; நிறைஇறந்து - நெஞ்சை நிறுத்தும் தன்மை மிக்கு.
11. உள்ளார் - நினையாராய்; ஆதல் - இருத்தல்; செவ்வேல் - சிவந்த வேல்.

12. முள்ளூர் மன்னன் - முள்ளூருக்கு அரசன்; கழல்தொடி - வீரக்கழல்; காரி - காரி என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.
13. செல்லா - கெடாத; நல்இசை - நல்ல புகழ்; நிறுத்த - நிலை நாட்டிய (தன் வள்ளல் தன்மையால் அழியாத நல்ல புகழை நிலை நிறுத்திய); வல்வில் ஓரி - வல்வில் ஓரி என்னும் வள்ளல், கொல்லிமலையை ஆண்டவன்.
14. சேரலர்க்கு ஈத்த - (ஓரியின் நாட்டினை வென்று) சேரர்க்குக் கொடுத்த.
15. செவ்வேர் - சிவந்த வேர்; பலவின் - பலா மரத்தின்; பயம்கெழு - பயன்கெழு - பயன் பொருந்திய; கொல்லி - கொல்லிமலை.
16. நிலைபெறு - நிலை பெற்ற; கடவுள் ஆக்கிய - தெய்வத்தச்சனால் இயற்றப்பட்ட.
17. பாவை - கொல்லிப்பாவை; அன்ன - போன்ற; நின் நலன் - உன் அழகு.

தோழி கூற்று

அகநானூறு 177 **செல்லூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தமையால் தலைவி வருந்தித் துன்புற்றாள். அது கண்ட தோழி, தலைவனின் அன்பை எடுத்துக் காட்டி, 'தலைவன் வரும்வரை ஆற்றி இருப்பது உன் கடமை' என வற்புறுத்தியது.

'தொல்நலம் சிதையச் சாஅய், அல்கலும்,
இன்னும் வாரார், இனிஎவன் செய்கு?'எனப்
பெரும்புலம் புறுதல் ஓம்புமதி– சிறுகண்
இரும்பிடித் தடக்கை மான, நெய்அருந்து
ஒருங்குபிணித்து இயன்ற நெறிகொள் ஐம்பால்
தேம்கமழ் வெறிமலர் பெய்ம்மார், காண்பின்
கழைஅமல் சிலம்பின் வழைதலை வாடக்

கதிர்கதம் கற்ற ஏகல் நெறியிடைப்
பைங்கொடிப் பாகல் செங்கனி நசைஇ,
கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்று அடைகரை வயிரின் நரலும்
காடுஇறந்து அகன்றோர் நீடினர் ஆயினும்,
வல்லே வருவர் போலும் வென்வேல்
இலைநிறம் பெயர ஓச்சி, மாற்றோர்
மலைமருள் யானை மண்டுஅமர் ஒழித்த
கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்
நிழல்கயம் தழீஇய நெடுங்கால் மாவின்
தளிர்ஏர் ஆகம் தகைபெற முகைந்த
அணங்குடை வனமுலைத் தாஅயநின்
சுணங்கிடை வரித்தல் தொய்யிலை நினைந்தே.

தெளிவுரை

"தலைவி! காணுதற்கு இனிய மூங்கில் நிறைந்த மலைச்சாரலில் வளர்ந்துள்ள சுரபுன்னைமரங்களின் உச்சி ஞாயிற்றின் கதிர்கள் சினந்து எரித்தலால் வாடின. காட்டு வழியில் அங்குப் பசிய பாகற்கொடியின் சிவந்த பழத்தை விரும்பி, நிறைந்த கருவினைக் கொண்ட கரிய பெடைமயில் தாம் திரும்புவதாய்க் கூறிச் சென்ற அயிரி என்னும் ஆற்றங்கரையில் ஊதப்படும் ஊதுகொம்பு போல அகவும். இத்தகைய காட்சிகளைக் கொண்ட வறண்ட காட்டு வழியில் நம் தலைவர் சென்றுள்ளார்.

"அவர் பருவம் கடந்தும் இன்னும் வந்திலர்; ஆயினும், சிறிய கண்ணைக் கொண்ட பெரிய பெண்யானையின் பெரிய கையினைப் போல, ஒன்றுசேரக் கட்டப்பெற்றதும், நெய் பூசப்பெற்று நறுமணம் கொண்டதுமான உன் கூந்தலிலே தேன் மணக்கும் நறுமலரைப் பெய்வதற்கும்;

"பண்ணன் என்னும் குறுநில மன்னன் போர்க்களத்தில் பகைவருடைய யானைகளின்மீது வேலை வீசி, அவ்வேல்முனை இரத்தத்தால் சிவக்கும்படி மலைபோலும் யானைகளைக் கொன்று, பகைவரின் கோட்டையைப் பிடித்து வாகை சூடுவான். வீரக் கழலணிந்த அவனுக்கு உரியதான காவிரியாற்றிற்கு

வடக்கே, குளிர்ந்த குளக்கரையை அடுத்து உயர்ந்து நிற்கும் மா மரத்தின் தளிர்களைப் போன்ற நிறம் கொண்ட உன் மார்பில் அழகு பெற அரும்பியுள்ள உன் அழகிய முலையில் படர்ந்துள்ள தேமலின் இடையிலே தொய்யில் எழுதிடவும் நினைத்து, தலைவர் விரைவில் வருவார்.

"நீ உன் பழைய அழகு கெடுமாறு கண்ணீர் சிந்தி அழாதே. நாள்தோறும், 'நான் என் செய்வேன், அவர் வரவில்லையே' என்று கூறி வருந்தாதே" என்று தோழி, தலைவியை ஆற்று விக்கிறாள்.

கருத்து

தலைவன் இன்னும் வரவில்லையே என்று கலங்காதே; பின்னிய உன் கூந்தலில் பூச்சூட்டவும், அழகிய மார்பில் தேமலுக்கு இடையே தொய்யில் எழுதவும் விரைவில் வந்து சேர்வார்; வருந்தாதே!

விளக்கம்

"தலைவி! காடுகளைத் தாண்டிச் சென்றுள்ள தலைவர், குறித்த காலத்தில் வரவில்லை; ஆயினும், நறுமணம் கமழும் உன் கூந்தலில் மலர் சூட்டிடவும், மாந்தளிர் ஒத்த உன் மார்பில் அழகு பெற அரும்பிய, உன் அழகிய முலையில் பரந்துள்ள தேமலிடையே தொய்யில் கோலம் எழுதிடவும் விரும்பி விரைந்து வந்தருள்வார். ஆதலால், பழைய அழகு சிதைந்திடுமாறு, நாள்தோறும், 'அவர் இன்னும் வந்திலர்; இனி என் செய்வேன்?' என்று மிகவும் வருந்தியிருத்தலை நீக்கு" என்று சொல்லித் தலைவியைத் தோழி ஆற்றினாள்.

சொற்பொருள்

1. தொல் நலம் - பழைய அழகு; சிதைய - அழிந்திட; சாஅய் - வருந்தி; அல்கலும் - நாடோறும்.
2. எவன் செய்கு? - என்ன செய்வேன்?
3. புலம்புறுதல் - மிக்க வருத்தமுறுதல்; ஓம்பு - தவிர்; சிறுகண் - சிறிய கண்.
4. இரும்பிடி - பெரிய பெண்யானை; தடக்கை - பெரிய கை; மான - ஒப்ப; நெய் அருந்து - நெய் பூசப்பெற்ற.

5. ஒருங்கு பிணித்து இயன்ற - ஒன்றாய்ச் சேரக் கட்டிவிட்ட; நெறி கொள் - நறுநாற்றம் கொண்ட; ஐம்பால் - ஐந்தாகப் பகுக்கப் பெற்ற கூந்தல்.
6. தேம்கமழ் - தேன் மணக்கும்; வெறி மலர் - நறிய மலர்; பெய்ம்மார் - சூட்ட; காண்பு இன் - காண்பதற்கு இனிய.
7. கழை - மூங்கில்; அமல் - நிறைந்த; சிலம்பு - பக்க மலை; வழை - சுரபுன்னை; தலை - உச்சி.
8. கதிர் - ஞாயிற்றுக்கதிர்; கதம் கற்ற - சினத்தைப் பயின்ற; ஏகல் - பெரிய கற்கள் (பொருந்திய).
9. பைங்கொடி - பசிய கொடி; பாகல் செங்கனி - சிவந்த பாகல் கனி; நசைஇ - விரும்பி.
10. மஞ்ஞை - மயில்; கமம்சூல் - நிறைந்த கரு; மாப்பெடை - கரிய பெட்டை.
11. அயிரி - ஓர் ஆறு; வயிர் - சங்கு, ஊதுகொம்பு; நரலும் - ஒலிக்கும்.
12. நீடினர் - காலம் தாழ்ந்து, பருவம் கடந்து.
13. வல்லே - விரைந்து; வென்வேல் - வெற்றிவேல்;
14. இலை - இலையின் உச்சிப்பகுதி; நிறம் பெயர - நிறம் மாறி (செந்நிறம் அடைய); ஓச்சி - செலுத்தி; மாற்றோர் - பகைவர்.
15. மலைமருள் - மலை போலும்; மண்டுஅமர் - மிக்க போர்; ஒழித்த - அழித்த.
16. பண்ணன் - வள்ளல்களுள் ஒருவன்; வடவயின் - வடபுறம்.
17. நிழல்கயம் - குளிர்ந்த குளம்; தழீஇய - அடுத்து உள்ள; நெடுங்கால் - நெடிய அடிமரம்; மா - மா மரம்.
18. தளிர்ஏர் - தளிரையொத்த; ஆகம் - மார்பு; தகைபெற - அழகு பெற; முகைந்த - அரும்பிய.
19. அணங்குடை - வருத்தும் இயல்பினைக் கொண்ட; வனமுலை - அழகிய முலை; தாஅய - பரந்த.
20. சுணங்கு - தேமல்; இடை - இடையே; தொய்யிலை வரித்தல் - தொய்யில் எழுதுதல்.

தோழி கூற்று

அகநானூறு 233 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அவன் பிரிவாற்றாது வருந்தினாள், தலைவி. அது கண்ட தோழி அவளை ஆற்றி இருக்குமாறு சொல்லியது.

அலமரல் மழைக்கண் மல்குபனி வார,நின்
அலர்முலை நனைய, அழாஅல்– தோழி!–
எரிகவர்பு உண்ட கரிபுறப் பெருநிலம்
பீடுகெழு மருங்கின் ஓடுமழை துறந்தென,
ஊன்இல் யானை உயங்கும் வேனில்,
மறப்படைக் குதிரை, மாறா மைந்தின்,
துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு,
குறியவும் நெடியவும் குன்றுதலை மணந்த
சுரன்இறந்து அகன்றனர் ஆயினும், மிகநனி
மடங்கா உள்ளமொடு மதிமயக் குறாஅ,
பொருள்வயின் நீடலோ இலர்,நின்
இருள்ஐங் கூந்தல் இன்துயில் மறந்தே.

தெளிவுரை

"தலைவி! குளிர்ச்சி பொருந்திய கலங்குகின்ற உன் கண்களிலிருந்து வழியும் நிறைந்த நீர், அடி பரந்த உன் முலைகளை நனைக்கிறது. அழாதே!

"நெருப்புச் சூழ்ந்து எரித்து உண்டமையால் கரிந்து போன இடங்களைக் கொண்ட பெரிய நிலத்தில் மழை பெய்யாது நீங்கிய மேகங்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டன.

அதனால் உணவு பெறாது ஊன் வற்றிப் போன யானைகள் பசியால் வாடி வருந்தும் இளவேனிற் காலம் இது.

வீரம் பொருந்திய குதிரைப்படைகளையும், புறமுதுகிடாத வலிமையையும் கொண்ட உதியஞ்சேரலாதன் என்னும் மன்னன், துறக்கம் அடைந்த புகழ் நிறைந்த தன் நல்ல முன்னோர்க்குச் செயற்கரிய தென்புலக்கடனைச் செய்தான். அப்போது அவர்க்குப் பலியாகப் பெருஞ்சோறு படைத்தபோது, சிறிய பெரிய கரிய பேய்களின் சுற்றங்கள் அதனை உண்பதற்குக் கூடின.

அப்பேய்கள் போலும் சிறியனவும் பெரியனவுமாய் உள்ள குன்றுகள் இடந்தோறும் நெருங்கிக் கலந்து கிடக்கும் காட்டினைக் கடந்து, உள்ளத்தே எழுந்த ஊக்கத்தால், அறிவு மயக்குற்றுப் பொருளீட்டுதலைக் கருதித் தலைவர் சென் றுள்ளார். ஆயினும், ஐவகையாகப் பகுத்துப் பின்னப்பட்ட உன் கூந்தலிற் படுத்துறங்கி இன்பம் கண்ட அவர், அத்துயிலின் இனிமையை நினைந்து அங்கே காலம் தாழ்த்தி இரார்; விரைந்து வருவார்; அதுகாறும் ஆற்றியிரு.''

கருத்து

தலைவர் பொருள் ஈட்டப் பிரிந்து காடுகளைக் கடந்து சென்றுள்ளாராயினும் உன் கூந்தலில் கிடந்து உறங்கிப் பெறும் இன்பத்தை மறவாது உடனே வந்து சேர்வார்.

விளக்கம்

“தலைவி! அழாதே! வேனிற்காலத்து அருவழிகளைக் கடந்து பொருள் தேட நம் தலைவர் சென்றுள்ளார்; ஆயினும், உன் கூந்தலில் கிடந்து பெறும் இன்பத்தை மறந்து அங்கே காலம் தாழ்த்து இரார்; விரைந்து வருவார்” என்று தலைவியிடம் கூறி அவளைத் தோழி ஆற்றுவித்தாள்.

சொற்பொருள்

1. அலமருதல் - கலக்கத்தை அடைதல்; மழை - குளிர்ச்சி; மல்குபனி - நிறைந்த நீர்; வார - ஒழுக.
2. அலர் - அடிபரந்த; அழாஅல் - அழாதே.
3. எரி - நெருப்பு; கவர்பு உண்ட - கவர்ந்து எரித்த.

4. பீடுகெழு மருங்கின் - வளம் பொருந்திய வேறிடங்கட்கு; ஓடுமழை - ஓடுகின்ற மேகம்; துறந்தென - சென்றுவிட்டதாய்.
5. ஊன் இல் - தசை ஒழிந்த; உயங்கும் - வருந்தும்; வேனில் - வேனிற் காலம்.
6. மறப்படைக்குதிரை - வீரம் பொருந்திய குதிரைப்படை; மாறா - புறங்கொடாத; மைந்து - வலிமை.
7. துறக்கம் - சுவர்க்கம்; தொய்யா - கெடாத; நல்இசை - நல்ல புகழ்.
8. முதியர் - முன்னோர்; உதியஞ்சேரல் - சேர மன்னருள் ஒருவன்.
9. பெருஞ்சோறு - பலியாகப் படைக்கப்பட்ட சோறு; ஞான்று - பொழுது; இரு பல் - கரிய பல்.
10. கூளிச் சுற்றம் - பேய்க்கூட்டம்; குழீஇ - கூடி.
11. தலை மணத்தல் - நெருங்கிக் கலத்தல்.
12. சுரன் - காடு; இறந்து - கடந்து; மிகநனி - மிகப்பெரிது.
13. மடங்கா உள்ளம் - வளையாத நெஞ்சம்; மதி - அறிவு; மயக்குறாஅ - மயக்கமுற்று.
14. நீடலோ இலர் - நீட்டித்து இரார்.
15. இருள் - கரிய; ஐங்கூந்தல் - ஐந்து பகுப்புகளைக் கொண்ட கூந்தல்; இன்துயில் - இனிய உறக்கம்.

தோழி கூற்று

அகநானூறு 223 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் சென்றான். அதனால் தலைவி வருந்தினாள். "அவர் உன்மீது கொண்ட காதல் மிகுதியால் காலம் தாழ்த்த மாட்டார். அவர் வரும்வரை ஆற்றி இருத்தலே கடமை. விரைவில் வருவார்" எனத் தோழி தலைவியிடம் தேறுதல் மொழி கூறியது.

'பிரிதல் வல்லியர், இதுநத் துறந்தோர்
மறந்தும் அமைகுவர் கொல்?'என்று எண்ணி,
ஆழல்– வாழி, தோழி!– கேழல்
வளைமருப்பு உறழும் உளைநெடும் பெருங்காய்
நனைமுதிர் முருக்கின் சினைசேர் பெருங்கல்,
காய்சினக் கடுவளி எடுத்தலின், வெங்காட்டு
அழல்பொழி யானையின் ஐயெனத் தோன்றும்
நிழல்இல் ஓமை நீர்இல் நீள்இடை,
இறந்தனர் ஆயினும், காதலர் நம்வயின்
மறந்துகண் படுதல் யாவது– புறம்தாழ்
அம்பணை நெடுந்தோள் தங்கி, தும்பி
அரியினம் கடுக்கும் சுரிவணர் ஐம்பால்
நுண்கேழ் அடங்க வாரி பையுள்கெட,
நன்முகை அதிரல் போதொடு குவளைத்
தண்நறுங் கமழ்தொடை வேய்ந்த,நின்
மண்ஆர் கூந்தல் மரீஇய துயிலே?

தெளிவுரை

"தலைவி! வாழ்க! '(நம்மைப்) பிரிவதற்கும் நம் தலைவர் மனம் இசைந்ததே! சென்றவர் நம்மை மறந்து தொலைவிலுள்ள அந்த நாட்டிலேயே இருந்துவிடுவாரோ? அதற்கும் அவர் மனம் உடன் படுமோ?' என்று துயரத்தில் அழுந்தாதே.

"நம் தலைவர், கடமையைக் கருதிப் பாலைநிலக் காட்டின் வழியாகச் சென்றுள்ளார். அங்கு வெயில் நெருப்பாய்க் கொளுத்தும். அங்கு ஒரு முருக்க மரத்தை ஒட்டிப் பெரிய பாறை ஒன்று இருக்கும். அம்மரத்திலுள்ள நீண்ட பெரிய காயின் காம்பு காட்டுப்பன்றியின் வளைந்த கொம்பை ஒத்திருக்கும். அதன் கிளைகளில் உள்ள அரும்புகள் முதிர்ந்து மலராகும் பதத்தில் இருக்கும். அம்மரத்தின் ஒரு கிளை, அந்தப் பாறையை ஒட்டித் தாழ்ந்திருக்கும். வெயிலோடு கடுங்காற்றும் வீசுவதால், தீயினால் சூழப்பெற்ற யானையைப் போல் அப்பாறை தோன்றும். அத்தகைய நிழலும், நீரும் இல்லாத, ஓமை மரங்களைக் கொண்ட நீண்ட காட்டுவழியைத் தலைவர் கடந்து சென் றுள்ளார். ஆயினும்,

"உன்னோடு இங்கு வாழ்ந்த வாழ்க்கையை அவரால் மறக்க இயலுமா? அழகிய மூங்கில் போன்று நீண்ட உனது தோளில் வண்டுக்கூட்டத்தை ஒத்து உன் கூந்தல் படிந்திருக்கிறது. சுருண்டு நுண்மையாய் உள்ள அந்தக் கருங்கூந்தல் மனச்சோர்வு நீங்க நன்கு வாரப்பட்டு, அதில் மல்லிகையின் மொட்டும் மலருமாய் உள்ள கொத்துகளும், குவளை மலர்களும் வைத்துத் தொடுக்கப் பெற்ற மாலை சூட்டப் பெற்றுள்ளது. மஞ்சன நீராட்டப் பெற்ற அக்கூந்தலில் உன்னோடு பொருந்தித் துயிலும் இன்பத்தை மறந்து சென்றவிடத்தே எவ்வாறு அவருக்கு உறங்க இயலும்? (ஆகவே, எங்கும் தங்கியிருக்க மாட்டார், விரைந்து வருவார்)" என்று தோழி கூறினாள்.

கருத்து

உன் கூந்தலில் பெற்ற இனிய துயிலை மறந்து தலைவரால் அங்கே எவ்வாறு துயில முடியும்? அதனால் விரைவில் வருவார்; ஆற்றியிரு.

விளக்கம்

"தலைவி! வாழி! நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் நம்மை மறந்து தங்குவார் என்றெண்ணி வருந்தாதே. காதலர் நீரில்லாத நீண்ட வழியில் சென்றுள்ளார்; ஆயினும், மலர் சூட்டப் பெற்ற உன் கூந்தலில் பொருந்தித் தூங்கும் இன்பத்தை மறந்து, அங்கு அவரால் எவ்வாறு தூங்க இயலும்? இவ்வின்பத்தைப் பெற அவர் விரைவில் வந்து சேர்வார்; வருந்தாதே!" என்று சொல்லித் துன்பத்தைப் பொறுத்திருக்குமாறு தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. வல்லியர் - வன்மை கொண்டவர், மனவலிமை.
2. மறந்தும் அமைகுவர் கொல் - மறந்து தங்குதலும் செய்வரோ? (செய்யார்).
3. ஆழல் - துயரில் அழுந்தாதே; கேழல் - பன்றி.
4. வளைமருப்பு - வளைந்த கொம்பு; உறழும் - ஒத்த; உளை - காம்பு.
5. நனை - அரும்பு; முருக்கு - முருக்க மரம்; சினை - கிளை; பெருங்கல் - பாறை.

6. காய்சினம் - மிக்க வேகம்; கடுவளி - கடுமையான காற்று; எடுத்தலின் - வீசுதலால்; வெம் காடு - வெம்மை மிக்க காடு.
7. அழல்பொழி யானையின் - அழலால் மூடப்பெற்ற யானையைப் போன்று; ஐஎன - வியக்குமாறு.
8. நிழல்இல் - நிழலில்லாத; ஓமை - ஒரு வகை மரம்; நீர் இல் - நீர் இல்லாத; நீள்இடை - நீண்ட வழி.
9. இறந்தனர் - கடந்து சென்றார்; நம்வயின் - நம்மிடத்தே (நம்மை).
10. கண் படுதல் - தூங்குதல்; யாவது? - எவ்வாறு?; புறம்தாழ் - புறத்தில் கிடந்து தொங்கும்.
11. அம்பணை - அழகிய மூங்கில்; நெடுந்தோள் - நீண்ட தோள்; தங்கி - படிந்து; தும்பி, அரி இனம் - தும்பி, அரி எனும் வண்டுக் கூட்டம்.
12. சுரிவணர் - சுருண்டு வளைந்த; ஐம்பால் - ஐவகையாய்ப் பகுக்கப்பட்ட (கூந்தல்).
13. நுண்கேழ் - நுண்ணிய கருநிறம்; அடங்க வாரி - முழுவதும் வாரி; பையுள் - வருத்தம்; கெட - ஒழிய.
14. நன்முகை - நல்ல அரும்பு; அதிரல் - காட்டுமல்லிகை; போது - மலர்; குவளை - குவளை மலர்.
15. கமழ் - மணம் கமழும்; தொடை - மாலை; வேய்ந்த - சூட்டிய.
16. மண்ஆர் கூந்தல் - கழுவப்பெற்ற கூந்தல்; மரீஇய - பொருந்திய; துயில் - உறக்கம், தூக்கம்.

தோழி கூற்று

அகநானூறு 393 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் ஈட்டச் சென்றான்; அவனது பிரிவினை ஆற்றவியலாது தலைவி வருந்தினாள்; அதைக் கண்ட தோழி, ‘உன் கூந்தற் பாயலில் துயின்று இன்பங்கண்டவர், அதனை மறந்து, சென்ற இடத்தில் காலந்தாழ்த்திரார்; விரைந்து வருவார்; அவர் வருந்துணையும் நீ ஆற்றியிருத்தல் வேண்டும்’ என்று கூறியது.

கோடுஉயர் பிறங்கல் குன்றுபல நீந்தி,
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து,
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய,
இதைச்சுவல் கலித்த ஈர்இலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி,
கவட்டுஅடிப் பொருத பல்சினை உதிர்வை
அகன்கண் பாறைச் செவ்வயின் தெறீஇ,
வரிஅணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்
பண்ணை வெண்பழத்து அரிசி ஏய்ப்ப,
சுழல்மரம் சொலித்த சுளகுஅலை வெண்காழ்
தொடிமாண் உலக்கை ஊழில் போக்கி,
உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை,
ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவா,
களிபடு குழிசிக் கல்அடுப்பு ஏற்றி,
இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதின்,
குடவர் புழுக்கிய பொங்குஅவிழ்ப் புன்கம்
மதர்வை நல்ஆன் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை நல்நாட்டு உம்பர்,
வேங்கடம் இறந்தனர் ஆயினும், ஆண்டுஅவர்
நீடலர்– வாழி, தோழி!– தோடுகொள்!–
உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்ப,
தகரம் மண்ணிய தண்நறு முச்சி,
புகர்இல் குவளைப் போதொடு தெரிஇதழ்
வேனில் அதிரல் வேய்ந்தநின்
ஏமுறு புணர்ச்சி இன்துயில் மறந்தே.

தெளிவுரை

இடையர்கள் புதிய கொல்லையில் தழைத்த குளிர்ச்சி பொருந்திய இலையின் நீண்ட இதழ்களைக் கொண்ட கதிரோடு கூடிய வரகின் தட்டைகளைக் குவியலாய்த் தொகுத்தனர். அக் குவியல் மீது மாடுகளைப் பிளவுபட்ட குளம்புகளால் மிதிக்கச் செய்து பல கிளைகளிலிருந்தும் உதிர்ந்த வரகுகளை, அகலமான பாறையில் குவித்தனர். வரிகள் பொருந்திய பெரிய தோள்

களையும், நீண்ட செவிகளையும் கொண்ட தாய்மார், அவ்வரகு களைத் திருகையில் இட்டு அரைத்து, பின் முறத்தில் இட்டு அதனைப் புடைத்துப் பண்ணைக்கீரையின் வெண்மையான பழத்தின் அரிசியைப் போன்ற தினை அரிசியை எடுத்தனர். அடுத்து அதனை உரலில் பெய்து, சிறந்த பூண் பிடிக்கப்பட்ட உலக்கையால் முறையாகக் குற்றித் தீட்டினர். உரலின் குழியில் நிறைந்திருந்த அரிசியை, அங்குள்ள பெருஞ்சுனை நீருடன் முகந்து, களிமண்ணாற் செய்யப்பட்ட பானையில் இட்டு, பின், அதனைக் கற்களை இட்டு அமைக்கப் பெற்ற அடுப்பின்மேல் ஏற்றிச் சமைத்தனர். இவ்வாறு கொத்துகள் நிறைந்த கொன்றைப் பூவின் தாது போல், இடையர் சமைத்த அவிழாகிய சோற்றினை, மதர்த்த நல்ல பசுவின் பாலொடு சேர்த்து வழிப்போக்கர்க்குப் படைத்து அவர்கள் பசிபோக்கி அக மகிழ்வர்.

ஆநிரைகளை மிகுதியாய்ப் பெற்ற சிறப்பினைக் கொண்ட புகழ் மிக்கவன், புல்லி. தேன் இறால்கள் தொங்கும் உயர்ந்த மலைச் சிகரங்களைக் கொண்ட அவனுடைய நல்ல நாட்டிற்கு அப்பால் உள்ள வேங்கட மலையைக் கடந்து, பொருள் ஈட்டி வரவேண்டும் என்னும் ஊக்கம் கொண்ட உள்ளத்துடன் நம் தலைவர் சென்றுள்ளார்.

அழகு பொருந்திய மயில்தோகை போன்ற மயிர்ச்சாந்து பூசப் பெற்றுக் குளிர்ந்து விளங்கும் நறுமணக்கூந்தலில் குவளை மலருடன் வேனிற்காலத்தில் பூக்கும் காட்டுமல்லிகையினையும் சேர்த்துக் கட்டிச் சூடியுள்ள உன் கூந்தலில் கிடந்து பெற்ற இனிய துயிலினை மறந்து, சென்ற இடத்தில் காலம் தாழ்த்து இரார்; (விரைவில் திரும்புவார்.)

கருத்து

உன் கூந்தலில் துயில்வதை மறந்து அங்கே தங்கியிரார். வினை முடிந்ததும் உடனே திரும்புவார்.

விளக்கம்

"தலைவி! வாழி! நம் தலைவர் குன்றுபல கடந்து சென்று, பொருள் தேடும் முயற்சியினைக் கொண்ட உள்ளத்தால் வேங்கட மலையைக் கடந்து சென்றுள்ளார்; ஆயினும்,

மயிர்ச்சாந்து பூசப் பெற்றுக் காட்டுமல்லிகை சூட்டப் பெற்ற உன் கூந்தலில் கிடந்து பெற்ற இனிய துயிலினை மறந்து சிறிதும் காலம் தாழ்த்தி இரார்; விரைந்து வருகுவர்; ஆற்றியிரு" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. கோடு உயர் - உயர்ந்த உச்சி; பிறங்கல் - மலை; நீந்தி - கடந்து.
2. வேறுபுலம் - வேற்று நாடு; படர்ந்த - சென்ற; வினைதரல் உள்ளம் - பொருள் தேடும் முயற்சியினைக் கொண்ட உள்ளம்.
3. வம்பலர் - புதியவர்; காய் பசி - மிக்க பசி; தீரிய - ஒழிய, தீர்க்க.
4. இதைச் சுவல் - காட்டைத் திருத்தி மேட்டுநிலமாக்கப்பட்ட புதுக் கொல்லை; கலித்த - தழைத்த; ஈர் இலை - ஈரமான இலை; நெடுந்தோடு - நீண்ட இதழ்.
5. கவைக் கதிர் - கவர்த்த (பிரிவுபட்ட) கதிர்; பொங்கழி - தூற்றாப் பொலி (குவியல்).
6. கவட்டு அடி - மாடுகளின் கால்களில் உள்ள கவர்த்த (பிளவுபட்ட) குளம்புகள்; பொருத - துவைக்கப்பட்ட, மிதிக்கப்பட்ட; பல்சினை - பல கிளைகள்; உதிர்வை - உதிர்ந்த தானிய மணிகள்.
7. அகன்கண் - அகன்ற இடம் கொண்ட; செவ்வயின் - செவ்விய இடத்தில், தெறீஇ - குவித்து வைத்து.
8. வரி அணி - வரிகள் பொருந்திய அழகிய; வார்செவி - நீண்ட செவி; தன்னையர் - தாயர்.
9. பண்ணை - பண்ணைக் கீரையின்; வெண்பழம் - வெள்ளிய பழம்; ஏய்ப்ப - ஒப்ப.
10. சுழல்மரம் - திரிமரம், திரிகை; சொலித்த - தேய்த்த; சுளகு - முறம்; அலை - கொழிக்கப்பெற்ற; வெண்காழ் - வெள்ளிய அரிசி.
11. தொடி மாண் - மாட்சிமைப்பட்ட பூண்; ஊழில் - முறையாய்.
12. உரல் முகம் காட்டிய - உரலிற் பெய்து தீட்டிய; சுரை நிறை - உரலின் குழி நிறைந்த; கொள்ளை - (அவ்) அரிசியை.
13. ஆங்கண் - அங்கு (இருந்த); இருஞ்சுனை - பெரிய சுனை; முகவா - முகந்து.
14. களிபடு - மண்ணாற்செய்த; குழிசி - பானை.
15. இணர்ததை - பூங்கொத்துகள் நிறைந்த; கடுக்கை - கொன்றை; ஈண்டிய - நிறைந்த; தாது - பூந்தாது.
16. குடவர் - இடையர்; புழுக்கிய - ஆக்கிய; அவிழ் - சோறு; புன்கம் - சோறு, உணவு.

17. மதர்வை - மதர்த்த; ஆன் - பசு; பகுக்கும் - அளிக்கும்.
18. நிரை பல - பல பசு நிரைகளை; குழீஇய - மிகப்பெற்ற; நெடுமொழி - மிக்க புகழைக் கொண்ட; புல்லி - தலைவருள் ஒருவன்.
19. தேன் - தேன் இறால்; தூங்கும் - தொங்கும்; வரை - மலை; உம்பர் - அப்பால்.
20. வேங்கடம் - வேங்கட மலை; ஆண்டவர் - ஆண்டு அவர் - அங்கே அவர் (தலைவர்).
21. நீடலர் - காலம் தாழ்த்த மாட்டார்; தோடு கொள் - அழகு பொருந்திய.
22. உருகெழு - நிறம் பொருந்திய; மஞ்ஞை - மயில்; ஒலிசீர் - தழைத்த தோகை.
23. தகரம் - மயிர்ச்சாந்து; மண்ணிய - பூசப்பெற்ற; தண் - குளிர்ந்த; முச்சி - தலை உச்சி, உச்சிக்கொண்டை, கூந்தல்.
24. புகர்இல் - குற்றம் இல்லாத; போது - மலர்; தெரிஇதழ் - விளங்கும் இதழ்.
25. வேனில் - வேனிற்காலத்தில் (பூக்கும்); அதிரல் - காட்டுமல்லிகை; வேய்ந்த - சூடிய.
26. ஏம் உறு - இன்பம் வாய்ந்த; புணர்ச்சி - கூடுதல்; இன்துயில் - இனிய உறக்கம்.

தோழி கூற்று

அகநானூறு 399 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற் பிரிந்த தலைவன் பிரிவை ஆற்ற இயலாது வருந்திய தலைவியை ஆற்றுவதற்குத் தோழி தலைவனது காதல்மிகுதியைச் சொல்லியது.

சிமையக் குரல சாந்துஅருந்தி, இருளி,
இமையக் கானம் நாறும் கூந்தல்,
நல்நுதல் அரிவை! இன்உறல் ஆகம்
பருகு வன்ன காதல் உள்ளமொடு,
திருகுபு முயங்கல் இன்றி,அவண் நீடார்—
கடற்றுஅடை மருங்கின் கணிச்சியின் குழித்த
உடைக்கண் நீடுஅமை ஊறல் உண்ட,
பாடுஇன் தெண்மணி பயம்கெழு பெருநிரை,
வாடுபுனல் புக்கென, கோடுதுவைத்து அகற்றி,
ஒல்குநிலைக் கடுக்கை அல்குநிழல் அசைஇ,
பல்ஆன் கோவலர் கல்லாது ஊதும்
சிறுவெதிர்ந் தீம்குழல் புலம்புகொள் தெள்விளி,
மைஇல் பளிங்கின் அன்ன தோற்றப்
பல்கோள் நெல்லிப் பைங்காய் அருந்தி,
மெல்கிடு மடமரை ஓர்க்கும் அத்தம்,
காய்கதிர் கடுகிய கவின்அழி பிறங்கல்,
வேய்கண் உடைந்த சிமைய,
வாய்படு மருங்கின் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தலை உச்சியில் பூங்கொத்துகள் சூட்டப் பெற்ற மயிர்ச்சாந்து பூசப் பெற்று இமயமலையிலுள்ள கானம் போன்று மணங் கமழும் இருண்ட கூந்தலையும், அழகிய நெற்றியினையும் கொண்ட தலைவியே!

"பாறை சார்ந்த பகுதியில் பசுக்கூட்டங்கள் பலவற்றைக் கொண்ட கோவலர் குந்தாலியால் குழி தோண்டினர்; அக் குழியில் ஊறிய நீரையுண்டு, இனிய ஓசையினைக் கொண்ட மணிகள் பூட்டப் பெற்ற பால் தரும் பசுக்கள், வறண்ட பாலை நிலத்திற் சென்று புகுந்தன; அதனை அறிந்த ஆயர்கள், ஊதுகொம்பினால் ஒலியெழுப்பி, அவற்றை அவ்விடத் தினின்றும் விலக்கிக் கொன்றை மரத்தின் குறுநிழலில் தங்கச் செய்தனர்; இசையறிவு இல்லாத அம்மக்கள், குழல் ஊதி எழுப்பிய தெளிந்த இனிய ஓசையினை, மாசற்ற பளிங்கினைப் போன்ற தோற்றம் கொண்ட நன்கு முற்றிய பசிய நெல்லிக்

கனிகளை உண்டு அசையிடும் இளைய மரைமான்கள் கூர்ந்து கேட்கும். அக்கானகத்தில், காயும் ஞாயிற்றால் மூங்கில் கணுக்கள் உடைந்து சிதறுண்டன. பாறைகளும் தம் அழகினை இழந்தன; அத்தகைய, இடமகன்ற பக்கமலையினைக் கொண்ட மலையினைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

அவ்வாறு சென்றுள்ள நம் தலைவர், பருகுதல் போலும் காதல் மிக்க உள்ளத்துடன் உன் அழகிய மார்பினைத் தழுவி இன்பங்காண விரும்புவாரேயன்றிச் சென்றவிடத்துக் காலந் தாழ்த்தி இருக்க விரும்ப மாட்டார்; விரைந்து நம் தலைவர் வருவார்; அதுகாறும் ஆற்றியிரு."

கருத்து

உன் மார்பினைத் தழுவ விரும்பி, உடனே புறப்பட்டு வருவார்; ஆற்றியிரு.

விளக்கம்

"நன்னுதல் அரிவை! மலைவழிகளைக் கடந்து சென்ற நம் தலைவர் இனிமை பொருந்திய உன் மார்பினைப் பருகுதல் போலும் காதல்மிக்க உள்ளத்துடன் பின்னித் தழுவ விரும்பு வதன்றிப் பொருளீட்டச் சென்ற இடத்தில் தங்கியிருக்க மாட்டார் (விரைந்து வருவார்)" என்றாள், தோழி.

சொற்பொருள்

1. சிமையம் - உச்சி; குரல - பூங்கொத்து; சாந்து - மயிர்ச்சாந்து; அருந்தி - பூசப்பெற்று; இருளி - இருண்டு.
2. இமையம் - இமய மலை; கானம் - காடு; நாறும் - மணக்கும்.
3. நுதல் - நெற்றி; அரிவை - பெண் (தலைவியே!); இன்உறல் - இனிமை பொருந்திய; ஆகம் - மார்பு.
4. பருகு அன்ன - பருகுதல் போலும்.
5. திருகுபு முயங்கல் - பின்னித் தழுவுதல்; அவண் - ஆங்கு; நீடார் - காலந்தாழ்த்தி இரார்.
6. கடற்றுஅடை - காடு சார்ந்த (கடறு - காடு); மருங்கு - பக்கம்; கணிச்சி - குந்தாலி.
7. உடைக்கண் - குழியிடத்தில்; நீடுஅமை - ஆழத்தில் பொருந்திய; ஊறல் - ஊற்றுநீர்.

8. பாடுஇன் - இனிமையாய் ஒலிக்கும்; தெண்மணி - தெளிந்த மணி; பயம்கெழு - பயன்மிக்க; பெருநிரை - பெரிய பசுக்கூட்டம்.
9. வாடுபுனல் - வறண்ட பாலை நிலம்; புக்கென - புகுந்ததாக; கோடு - ஊதுகொம்பு; துவைத்து - ஒலியை உண்டாக்கி; அகற்றி - அவற்றை அங்கிருந்தும் விலக்கி.
10. ஒல்கு நிலை - தளர்ந்த நிலையினைக் கொண்ட; கடுக்கை - கொன்றை; அல்கு நிழல் - குறைந்த நிழல்; அசைஇ - தங்கி.
11. பல்ஆன் - பல பசுக்கள் (உடைய); கோவலர் - இடையர்; கல்லாது - இசையைக் கல்லாது.
12. சிறுவெதிர் - சிறிய மூங்கில்; தீம்குழல் - இனிய குழல்; புலம்பு கொள் - தனிமை கொண்ட; தெள்விளி - தெளிந்த ஓசை.
13. மை இல் - குற்றம் இல்லாத.
14. பல்கோள் - பலவாய்க் காய்த்த; பைங்காய் - பசிய காய்; அருந்தி - உண்டு.
15. மெல்கிடு - அசையிடுகின்ற; மடமரை - இளைய மரைமான்; ஓர்க்கும் - கூர்ந்து கேட்கும்.
16. காய்கதிர் - காயும் ஞாயிறு; கடுகிய - எரித்த.
17. வேய் - மூங்கில்; கண் - கணு; சிமையம் - மலைச்சிகரம்.
18. வாய்படு - இடம் அகன்ற; மருங்கு - பக்க மலை; இறந்தோர் - கடந்து சென்றவர் (நம் தலைவர்).

தோழி கூற்று

அகநானூறு 61 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிய வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடப் பிரிய நேர்ந்தபோது தலைவியிடம் கண்ட ஆற்றாமையை நீக்கத் தோழி, ‘தலைவர் எவ்வளவு பெரிய செல்வம் பெறினும் உன் மார்பு தழுவுதலை மறந்து அங்கேயே தங்கிடமாட்டார்’ எனக் கூறியது.

நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார்,பிறர் கொளவிளிந் தோர்எனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்—
நாள்இழை நெடுஞ்சுவர் நோக்கி, நோய்உழந்து
ஆழல் வாழி, தோழி! தாழாது,
உரும்எனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ,
அருநிறத்து அழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு,
நறவுநொடை நெல்லின் நாள்மகிழ் அயரும்
கழல்புனை திருந்துஅடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்,
பழகுவர் ஆதலோ அரிதே— முனாஅது
முழவுஉறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்
ஒண்கேழ் வன்முலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதல் மறந்தே.

தெளிவுரை

"*மனையின் நெடுஞ்சுவரிலே, நம் தலைவன் பிரிந்துபோன நாள்களைக் கோடிட்டு வைத்து, அக்கோடுகளையே நோக்கி நோக்கி (சென்ற நாள்களை எண்ணி எண்ணி, உணர்ந்து) மிக்க துன்பத்திலே ஆழ்ந்திடாதே! தலைவி, நீ வாழ்க!*

"*குறித்த நாளிலே கூற்றத்தால் உயிர் கொள்ளப் பெற்று அதனால் இறவாமல், பிறர் தம் உயிரைக் கொள்ளும்படியாகப் போரிலே இறந்தவர்கள் நோன்பு இயற்றியவராவர். இங்ஙனம் எண்ணித் தம் முயற்சியை வெற்றி பொருந்தியதாக்கக் கருதித் தொலைவான நாட்டிற்குப் பிரிந்து சென்றுள்ளார், நம் தலைவர்.*

"*பசிய காலும் மாண்புறு வரியும் கொண்ட தம் வலிமையான வில்லிலே இடைவெளியாகச் சிறிது காலம்கூட அளித்திடாமல் தொடர்ந்து முழங்கும் தம் வில்லிலே வலிய நாணினைப் பூட்டி ஒலித்தவாறே, பகைவரின் மார்புகளிலே அம்பினைப்*

பாய்ச்சுகின்ற இளைஞர்கள் பலருடன், தலைமையான யானையின் வெண்மையான தந்தங்களையும் கைப்பற்றிக் கொணர்ந்து கள்ளினையும் விற்றதனால் கொண்ட நெல்லினால் தனது நாளோலக்கச் சிறப்பினைச் செய்பவன் புல்லி என்பவன். அவன், வீரக்கழல் அணிந்த அழகிய திருவடிகளையும், மிகுந்த வள்ளன்மையையும் கொண்டவன்; கள்வர் கோமானாய்த் திகழ்ந்த அவன், மழவரை வென்று, தனக்குத் திறை செலுத்தச் செய்தவன். அவனது பேரூர், திருவேங்கடம்; அத்தகைய வேங்கடத்தையே பெறுவதாயினும் தலைவர் அங்கேயே தங்கிட மாட்டார்.

"முழவினையொத்த திண்மையான தோள்களைக் கொண் டவன், நெடுவேள் ஆவி. மிகத் தொன்மை வாய்ந்ததும், பொன் மிகுதியாய்க் கொண்டதுமான அவனுடைய பொதினி மலையைப் போன்றவை, ஒளி விளங்கும் உன் அழகிய முலைகள். அவற்றால் சிறப்புற்ற, நுண்ணிய பூண் அணிந்த உன் மார்பகத்தைப் பொருந்துதலை மறந்து, அவர் சென்ற இடத்தில் தங்கியிருக்க மாட்டார்; உடனே திரும்புவார்."

கருத்து

நுண்ணிய பூணினை அணிந்த உன் மார்பில் பொருந்தி மகிழ்தலை மறந்து தலைவர் தாம் சென்ற இடத்திலே தங்கியிருக்க மாட்டார்; உடனே திரும்புவார்; வருந்தாது ஆற்றியிரு.

விளக்கம்

"தலைவி! தலைவர் சென்ற ஒவ்வொரு நாளையும் கோடிட்டுக் குறித்து வைத்திருக்கின்ற நீண்ட சுவரை நோக்கி அழாதே! அறப் பயன் கருதித் தலைவர் பொருளீட்டச் சென்றுள்ளார். பகைவரை வென்று யானையைப் பெறுபவனும், கள்ளைப் பண்டமாற்றாய்த் தந்து நெல்லைப் பெறுபவனும் ஆகிய புல்லி என்பவனது விழாக்களால் சிறப்புப்பெற்ற வேங்கடத்தையே பெறுவதாயினும், நெடுவேள் ஆவியின் பொன் நிறைந்த பொதினி (பழநி) என்னும் நகரையொத்துப் பொலிவு பெற்றி ருக்கும் அழகிய உன் முலையினைக் கொண்ட உன் மார்பினைத் தழுவிட மறந்து பொருள் தேடச் சென்ற இடத்திலே தலைவர்

தங்கிவிட மாட்டார்; வந்துவிடுவார்" எனத் தோழி தலைவியிடம் ஆறுதல் மொழி கூறுகிறாள்.

குறிப்பு

1. 'கூற்றும் கோளுற விளிதல்' என்பது பிணி மூப்புகளால் இறத்தலையும், 'பிறர் கொள விளித்தல்' என்பது போர்க்களத்தில் பிறரால் கொலையுண்டிறத்தலையும் குறிக்கும்.

2. புல்லி - இவன் கள்வர் என்னும் ஒரு வகை வீரர்க்குத் தலைவன்; வேங்கட மலையையும் அதனைச் சூழ்ந்த நாட்டினையுமுடையவன்; மழவர் தேயத்தைப் பணிய வைத்துத் திறை கொண்டவன்; மேம்பட்ட வள்ளல் தன்மை வாய்ந்தவன்; இவன் நாட்டிளையர் யானை பிடிப்பவர்.

3. பொதினி, நெடுவேள் ஆவி என்பானுக்குச் சொந்தமாயிருந்தது; இவன் ஆவியர் குடியைச் சார்ந்தவன்.

4. பிரிந்து சென்று, எத்தனை நாள்கள் ஆயின என்பதை அறியப் பெண்டிர் சுவரில் தினம் ஒரு கோடு இடும் பழக்கம் அன்று இருந்ததை இப்பாடல் தெரிவிக்கிறது.

5. கள்ளை விற்று நெல் வாங்கும் பண்டமாற்று முறை அன்று இருந்திருக்கிறது.

சொற்பொருள்

1. நோற்றோர் மன்ற - உறுதியாய் நோன்பு மேற்கொண்டோர்; கூற்றம் - கூற்றுவன்.
2. கோள்உற - கொள்ள; விளியார் - (வறிதே) இறந்தோர்; பிறர் கொள - போரிலே பிறர் தம் உயிரைக் கொள்ளும்படியாக; விளிந்தோர் - இறந்தவர்.
3. தாள் - ஊக்கம்; வலம் படுப்ப - வெற்றியுறுவிக்க; சேண்புலம் - தொலைவில் உள்ள இடம்; படர்ந்தோர் - சென்றவர்.
4. நாள்இழை நெடுஞ்சுவர் - (தலைவர்) பிரிந்து சென்று எத்தனை நாள் ஆனது என அறிய தினம் ஒரு கோடு குறித்து வைத்த நீண்ட சுவர்; நோய் - துன்பம்; உழந்து - வருந்தி.
5. ஆழல் - ஆழ்ந்திடாதே; தாழாது - தாழ்த்திடாது.
6. உரும் - இடி; சிலைக்கும் - ஒலிக்கும்; பைங்கால் - பசிய கால்.

7. வரிமாண் - மாண்புறும் வரி (உடைய); நோன்ஞாண் - வலிய வில் நாண்; வன்சிலை - வலிய வில்; கொளீஇ - கொண்டு.
8. அரு நிறம் - அரிய மார்பு; அழுத்திய - செலுத்திய; அம்பினர் - அம்புகளையுடையவர்.
9. அண்ணல் - பெருமை; கோடு - கொம்பு, தந்தம்.
10. நறவுநொடை - (அக் கொம்புடன்) கள்ளினை விற்றுக்கொண்ட; நாள் மகிழ் - நாளோலக்கச் சிறப்பு; அயரும் - விரும்பும்.
11. கழல்புனை - வீரக்கழலினைத் தரித்த; கள்வர் கோமான் - கள்வர் பெருமான்.
12. மழபுலம் - மழவரது நிலத்தை; வணக்கிய - வணங்கச்செய்த; மாவண் - மிக்க வலிமைக் கொண்ட; புல்லி - தலைவருள் ஒருவன்.
13. விழவுடை - விழாக்களைக் கொண்ட; விழுச்சீர் - மிக்க சிறப்பு; வேங்கடம் - வேங்கட மலை.
14. பழகுவர் - (அங்கே) பழகி; ஆதல் - தங்கியிருத்தல்; முனாஅது - பழமை வாய்ந்த.
15. முழவு உறழ் - முழவினை ஒத்த; திணிதோள் - வலிய தோள்; நெடுவேள் ஆவி - பெரிய வேளாகிய ஆவி என்பவன்.
16. பொன்னுடை - பொன் நிறைந்த; நெடுநகர் - பெரிய நகரம்; பொதினி - பொதினி மலையிலுள்ள நகரம்.
17. ஒண்கேழ் - ஒளி விளங்கும்; வன்முலை - அழகிய முலை; பொலிந்த - சிறந்த.
18. நுண்பூண் - நுண்ணிய அணிகலன்; ஆகம் - மார்பு; பொருந்துதல் - தழுவியிருத்தல்.

தோழி கூற்று

குறுந்தொகை 253 **பூங்கண்ணன்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றமையால் வருத்தமுற்று மெலிந்த தலைவியை நோக்கி, 'உன் காதலர் உன் துன்பத்தைக் கேட்பாராயின் உடனே திரும்பி விடுவார்' எனக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவிப்பது.

கேளார் ஆகுவர் தோழி! கேட்பின்,
விழுமிது கழிவது ஆயினும், நெகிழ்நூல்
பூச்சேர் அணையில் பெருங்கவின் தொலைந்தநின்
நாள்துயர் கெடப்பின் நீடலர் மாதோ
ஒலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரல்,
புலிபுகா உறுத்த புலவுநாறு கல்அளை
ஆறுசெல் மாக்கள் சேக்கும்
கோடுஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! மலைச்சாரலில் மூங்கில்கள் வளர்ந்திருக்கும்; அவை காற்றினால் அசைந்து ஒலியெழுப்பிக்கொண்டிருக்கும். அங்குக் கற்குகையில் புலி தன் உணவைக் கொண்டுபோய்த் திணித்து வைத்திருக்கும். புலால் நாற்றம் வீசும் அக்கற்குகையில், அவ் வழியே செல்லும் மக்கள் தங்கிச் செல்வர். அத்தகைய உச்சிகளைக் கொண்டு உயர்ந்து விளங்குகின்ற மலைகளைக் கடந்து சென்றுள்ளார், உன் காதலர். முறுக்கற்ற நூலில் தொடுக்கப்பெற்ற பூக்கள் உதிர்ந்து கிடக்கின்ற படுக்கையில் சோர்ந்து கிடந்து நீ உன் அழகினை இழந்துவிட்ட துன்பத்தை அவரிடம் போய்ச் சொல்வார் எவரும் இலர். அறிவாராயின் தாம் தேடிச் சென்ற சிறந்த செல்வம் கிட்டாமல் போவதே யாயினும், தன் பிரிவை நீட்டியாது உடனே திரும்பிவந்து உன் துன்பத்தை நீக்குவார்."

கருத்து

"தலைவியே! தலைவர் உன்னிடம் மிகுந்த காதல் கொண்டவர். நீ இங்குப் படும் துயரத்தை அவரிடம் போய்ச் சொல்வார் எவரும் இலர். உன் துன்பத்தை அவர் கேட்டால், தாம் விரும்பிய பொருள் கிட்டாவிடினும் அவர் உடனே திரும்பி வந்து உன் துன்பத்தைப் போக்குவார்" எனத் தோழி தலைவியிடம் ஆறுதலாய்ச் சொன்னாள்.

குறிப்பு

தூது விடுத்துத் தலைவனை விரைந்து வரச்செய்யலாம். அவ்வாறு செய்தால், 'அறச்செயல்களுக்காகப் பொருளீட்டச் சென்றுள்ள அவன் பணி

கெடும்; அந்நிலையைத் தலைவனுக்கு உண்டாக்காது, தலைவி தன் துயரை அடக்கிக் கொள்ள வேண்டும்' என்பதைத் தோழி குறிப்பாய்த் தெரிவிக்கிறாள்.

சொற்பொருள்

1. கேளார் ஆகுவர் - உன் துன்பத்தை அவர் கேள்விப்பட்டிலர்.
2. விழுமிது கழிவது ஆயினும் - சிறந்த செல்வம் கிட்டவில்லையெனும்; நெகிழ்நூல் - முறுக்கில்லாத நூல்.
3. அணை - படுக்கை; தொலைந்த - நீங்கிய, இழந்த.
4. நாள்துயர் - ஒவ்வொரு நாளும் படும் துன்பம்; கெட - நீங்கும்படியாக; நீடலர் - நீட்டிக்க மாட்டார்; மாதோ - அசைச்சொல். இதற்குப் பொருளில்லை.
5. கழை - மூங்கில்; நிவந்த - உயர்ந்து வளர்ந்துள்ள.
6. புகா - உணவு; உறுத்த - திணித்து வைத்துள்ள; அளை - குகை.
7. சேக்கும் - தங்கும்.
8. கோடு - உச்சி; பிறங்கல் - கண்ணுக்கு விளங்குகின்ற; இறந்தோர் - கடந்து சென்றவர்.

பொருளே பெரிதெனச் சென்று விட்டார்.

தலைவி கூற்று

நற்றிணை 243 **காமக்கணிப்பசலையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரிதலால் மெலிந்த தலைவி கலங்கிக் கூறியது.

தேம்படு சிலம்பில் தெள்அறல் தழீஇய
துறுகல் அயல தூமணல் அடைகரை,
அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்
பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்,

கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கைஇட்டு
அகறல் ஓம்புமின், அறிவுடை யீர்!எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல,
மெய்உற இருந்து மேவர நுவல,
இன்னாது ஆகிய காலை, பொருள்வயின்
பிரியல் ஆடவர்க்கு இயல்புஎனின்,
அரிதுமன் றம்ம, அறத்தினும் பொருளே?

தெளிவுரை

தேன் உண்டாகும் பக்க மலையில் தெளிந்த நீர் சூழ்ந்து துறு கல்லின் அருகில் மணல் பரந்த கரையிருக்கும். அங்கே, அசைகின்ற கிளைகளிலே, நறுமணம் மிக்க மாவடுக்கள் நிரம்பிய மாமரங்கள் நிறைந்த சோலை விளங்கும். அச்சோலைகளில் சிவந்த கண்ணினைக் கொண்ட கருங்குயில்கள் தங்கியிருக்கும். அக்குயில்கள், "அறிவுடையீர்! சூதாட்டக்கருவி உருண்டோடுவது போல வாழ்க்கை நிலையற்றது. பொருளீட்டுதலே வாழ்க்கை எனக் கொண்டு உங்கள் காதலியரை விட்டுப் பிரிந்து செல்லாதீர்; சேர்ந்தே இரும்" என்று காதலியரைக் கைவிட்டுப் பிரிவோரை இடித்துரைப்பதுபோல ஆணும் பெண்ணுமாய் உடலோடு உடல் பொருந்திக் கூவியிருக்கும். பிரியும்போதே துன்பந்தரும் இளவேனிற்காலத்தில் பொருள்வயிற் பிரிவது இயல்பு என்று கூறப்படுமானால் அறத்தைவிடப் பொருள்தான் அருமை வாய்ந்தது போலும்!

கருத்து

'உன்னைப் பிரியேன்' என அன்று அறச்சொற்களைச் சொன்ன தலைவருக்கு இப்போது அவ்வறத்தினும் பொருள்தான் பெரியதாயிற்றோ?

விளக்கம்

வேனிற்காலத்தில் மாமரங்களிலிருந்து குயில்கள், "வாழ்க்கை உருண்டோடும் சூதாட்டக்கருவிபோல நிலையில்லாதது. ஆதலால், கூடியிருங்கள்! காதலியைப் பிரிந்து நீங்குவதைக் கைவிடுவீர்" என்று பிரிவோரை இடித்துரைப்பதுபோலக் கூவுகின்றன. இதனை நன்கறிந்தும் காதலர் பிரிந்து நீங்குகின்றனர்

என்றால், என்னோடு கூடியிருந்து செய்யும் அறத்தினும் பிரிந்திருந்து செய்யும் பொருள்தான் அவர்க்குச் சிறந்தது போலும்!

சொற்பொருள்

1. தேம்படு - தேன் உண்டாகும்; அறல் - நீர்.
2. துறுகல் - பாறை; அயல - அருகில்; அடைகரை - கரைப்பகுதி.
3. அலங்குதல் - அசைதல்; சினை - கிளை; பொதுளிய - தழைத் துள்ள; நறுவடி - நறுமணமிக்க மாவடு; மாஅத்து - மாமரத்தில்.
4. பொதும்பு - சோலை; அல்கும் - தங்கும்; பூங்கண் - அழகிய சிவந்த கண்.
5. கவறு - சூதாடு கருவி; பெயர்த்து அன்ன - உருண்டோடுவது போல.
6. அகறல் - நீங்குதல்; ஓம்புமின் - செய்யாதீர்.
7. கையற - செயலற; கழறுவ - கூறுவது.
8. மெய் உற இருந்து - உடலோடு உடல் பொருந்தி இருந்து; மேவர் - விருப்பம் உண்டாக; நுவல - சொல்ல.
9. இன்னாது ஆகிய காலை - பிரியும்போதே துன்பந்தரும் இளவேனிற் காலம்.
10. இயல்பு எனின் - இயல்பு என்று கூறப்படுமானால்.
11. அறத்தினும் - 'உன்னைப் பிரியேன்' என்று அவர் கூறிய அறச்சொற் களை விட; பொருள் - செல்வம்.

தலைவி கூற்று

அகநானூறு 53 **சீத்தலைச்சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வரவில்லை. அதனால் ஆற்றாமை கொண்ட தலைவியிடம் தோழி, 'நம் தலைவர் அன்பு கொண்டவர்; விரைவில் வருவார்' என்று வற்புறுத்தியபொழுது, தலைவி தோழி சொல்லை மறுத்துக் கூறியது.

அறியாய், வாழி தோழி! இருள்அற
விசும்புடன் விளங்கும் விரைசெலல் திகிரிக்
கடுங்கதிர் எறித்த விடுவாய் நிறைய,
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்,
நீர்அற வறந்த நிரம்பா நீள்இடை,
வள்எயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளிஅம் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ஊன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரிஅரை புதைத்த புலம்புகொள் இயவின்,
விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி, என்றும்,
'இல்லோர்க்கு இல்'என்று இயைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்
பொருளே காதலர் காதல்;
'அருளே காதலர்' என்றி, நீயே.

தெளிவுரை

“வானத்தே இருளையகற்றி விரைந்து செல்லும் சூரியனின் கடுமையான கதிர்கள் எரித்தலால் தரை பிளவுபட்டுப் பள்ளங்கள் ஏற்பட்டிருக்கும். அவ்வாறு பிளவுற்ற இடம் நிறையுமாறு நீண்ட அடிமரத்தினைக் கொண்ட முருங்கையின் வெண்மையான பூக்கள் பரந்து கிடக்கும், அத்தகைய நீரற்று வறண்டுள்ள நீண்ட வழியில் நம் தலைவர் சென்றுள்ளார்.

“கள்ளி மரங்கள் சூழ்ந்த காட்டில் வற்றிய வாகை மரங்களின் அடிப்பகுதியில் சுரிந்த மூக்கினைக் கொண்டுள்ள நொள்ளை என்னும் பெயர் கொண்ட நத்தைகள் பற்றிக்கொண்டிருக்கும். தனிமை கொண்ட அவ்வழியில் மறவர்கள் எய்த அம்பால், உயிர் பிரிந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பெற்ற இடத்தில், நாட்டப் பெற்ற நடுகற்களின் நிழலில், கூரிய பற்களைக் கொண்ட செந்நாய் பசியால் வாடும் தன் பெண்நாயுடன் தங்கியிருக்கும். இவ்வாறான அச்சம் தரும் காட்சி கொண்ட அரிய பாலைநில வழியைக் கடந்து, வறியவர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுப்பதற்கான பொருளினை ஈட்டி வரத் தலைவர்

சென்றுள்ளார். அவர் பொருளைக் காதலிப்பவரே அல்லாமல் என்னைக் காதலிப்பவர் அல்லர். ஆனால் நீயோ, 'அவர் என்மீது அன்பு கொண்டவர்' என்று கூறுகிறாய்; நீ அவரைப் பற்றி அறியாய்" எனத் தோழியின் சொற்களை மறுத்துத் தலைவி கூறுகிறாள்.

கருத்து

தலைவர் நம்மைவிடப் பொருளையே பெரிதெனக் கருதிவிட்டார்.

விளக்கம்

"தோழி! தம்மிடம் வந்து கேட்பவர்க்கு இல்லையென்று சொல்லி மறுக்காது கொடுப்பதற்காகப் பொருள் ஈட்டி வரத் தலைவர் சென்றுள்ளார். அவர்க்கு என் மேல் உள்ள காதலைவிடப் பொருள்மீதுள்ள காதலே பெரிது. ஆனால், நீ அவர் என்மேல் அன்பு கொண்டவர் என்று அறியாமல் சொல்கிறாய்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

2. விசும்பு - வானம்; திகிரி - சூரியன்.
3. விடுவாய் - பிளவுற்ற பிளப்பு.
4. முருங்கை - ஒரு வகை மரம்; தாஅய் - பரந்து கிடக்க.
5. நிரம்பா - நடந்து விரைவில் முடிக்க இயலாத, தொலையா; நீள்இடை - நீண்ட வழி.
6. வள்எயிறு - கூரிய பல்; பிணவு - பெண்நாய்.
7. காட்ட - காட்டினைக் கொண்ட; கடம் - அரிய வழி; உழிஞ்சில் - வாகை மரம்.
8. நொள்ளை - சிறு நத்தை.
9. பொரிஅரை - பொருக்கினைக் கொண்ட அடி மரம்; இயவு - வழி.
10. தொடை - அம்பு; வில்இட - அம்பு எய்ய; வீழ்ந்தோர் - விழுந்து இறந்தோர்.
11. எழுத்துடை நடுகல் - பெயரும் பெருமையும் பொறித்து நடப்பட்டுள்ள கல்; வதியும் - தங்கும்.
12. சுரம் - பாலை; கவலை - கவர்பட்ட வழி; நீந்தி - கடந்து.
13. இல்லோர்க்கு - இல்லை என்று கேட்போர்க்கு, வறியவர்க்கு; கரத்தல் வல்லா - மறைக்க இயலாத.
14. வலிப்ப - வற்புறுத்தலின்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 337 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்துழித் தன் முயக்கினும் அவற்குப் பிற்காலத்துப்பொருள் சிறந்ததெனத் தலைமகள் இரங்கித் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவனுக்கு இன்று துய்க்கும் காதலின்பத்தினும், பிற்காலப் பயன்பாட்டிற்குப் பயன்படும் பொருள் தேடுவதில் உண்டாகும் இன்பம் உயர்ந்ததாய்த் தெரிகிறது' என்று தோழியிடம் தலைவி வருந்திக் கூறியது.

அம்ம வாழி தோழி, நம்வயின்
மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினும்
இனிய மன்ற தாமே
பனிஇருங் குன்றம் சென்றோர்க்குப் பொருளே.

தெளிவுரை

"தோழியே கேள்! நம் தலைவர் குளிர்ச்சி பொருந்திய பெரிய குன்றைக் கடந்து பொருள் தேடும்பொருட்டுச் சென்றுள்ளார். அவருக்கு என் உடம்பினை விருப்பத்தோடு கைகளால் கட்டித் தழுவிப் பிரியாதிருக்கும் இன்பத்தைவிடப் பொருள் தரும் இன்பம் பெரிதாகத் தெரிகின்றது" என்று தலைவி தோழியிடம் வருந்திக் கூறினாள்.

கருத்து

நம்மினும் பொருள்தான் அவருக்குப் பெரிதாகத் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. நம் வயின் - என் இடத்தில்.
2. மெய்யுற - உடம்பு பொருந்த; கைகவர் முயக்கினும் - கைகளால் கட்டித் தழுவுதலைக்காட்டிலும்.
4. பனி இரும் குன்றம் - குளிர்ச்சி பொருந்திய பெரிய குன்று.

தலைவி கூற்று

அகநானூறு 265 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருளீட்டச் சென்றான். காலம் நீண்டது. அதனால் வருந்திய தலைவி தோழியிடம் கூறியது.

புகையின் பொங்கி, வியல்விசும்பு உகந்து,
பனிஊர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செவ்வரை மானும் கொல்லோ?
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ?
எவன்கொல்? – வாழி, தோழி!– வயங்குஒளி
நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல்,
குழற்குரல், பாவை இரங்க, நத்துறந்து,
ஒண்தொடி நெகிழச் சாஅய், செல்லலொடு
கண்பனி கலுழ்ந்துயாம் ஒழிய, பொறைஅடைந்து,
இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத்துஎடுத்து,
அணங்குஅரு மரபின் பேஎய் போல,
விளர்ஊன் தின்ற வேட்கை நீங்க,
துகள்அற விளைந்த தோப்பி பருகி,
குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடவர்
புலாஅல் கையர், பூசா வாயர்,
ஒராஅ உருள்துடி குடுமிக் குராஅலொடு
மராஅஞ் சீறூர் மருங்கில் தூங்கும்
செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ,
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே!

தெளிவுரை

"தோழி! வாழ்க! நிழலிடத்தே விளங்கும் கருமணல் அடுக்குப் போன்ற நெளிந்த கூந்தலினையும், குழலினைப் போன்ற இனிய குரலினையும், பாவை போன்ற அழகினையும் கொண்டவளான நீ வருந்துகின்றாய்; உன் ஒளி பொருந்திய வளையல்களும் நெகிழ்ந்து சரிகின்றன. உன் உடல் மெலிந்து, கண்கள் ஓயாது கண்ணீரினைச் சொரிந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு நாம் தனித்து வருந்த நம் தலைவர் நம்மைக் கைவிட்டுச் சென்று விட்டார்.

"அவர் சென்ற காட்டுவழியில் வளைந்த வலிய வில்லும், கொடிய பார்வையும் கொண்ட வழிப்பறிக் கொள்ளையர் குன்றத்தினை அடைந்து, இனிய முழக்கம் செய்யும் எழுச்சியுள்ள எருதினைக் கண்டு அதைக் கொல்வர்; கொழுப்புப் பொதிந்த வளமான அதன் தசையினை நெருப்பில் சுட்டுத் தின்பர். கண்டவரை வருத்தும் கொடிய பேய்களைப் போலத் திரிகின்ற அவர்கள், வெளுத்த அவ்வூனைத் தின்றதால் உண்டாகிய நீர்வேட்கை தீர முதிர்ந்த தோப்பிக் கள்ளைக் குடிப்பர்; புலால் நீங்காத கையுடனும் கழுவப் பெறாத வாயுடனும் தம் சிற்றூருக்குத் திரும்புவர். அங்கே, இடையறாது விட்டுவிட்டு ஒலிக்கும் குடுமியினைக் கொண்ட கோட்டானின் குரலோடும் கூடி, வெண்கடப்ப மரங்கள் உள்ள பக்கத்தே மகிழ்ச்சியுடன் கூத்தாடுவர். அத்தகைய காடுகளைக் கொண்டுள்ளது, வேங்கட மலை. சிவந்த நெற்றியினைக் கொண்ட யானைகளைக் கொண்ட அவ்வேங்கட மலையைச் சார்ந்து, மறவர்கள் வாழும் குடியிருப்பு களைக் கடந்து தலைவர் சென்றுள்ளார்.

"அவர் நம்மைக்காட்டிலும் சிறந்ததாய்க் கருதியுள்ள செல்வம் அவ்வளவு பெரிதா? அப்பொருள், அகன்ற வானிடத்தே உயர்ந்து புகைபோலப் பொலிவுற்றுப் பனி தவழும் தீச்சுடரைப் போலத் தோன்றும் இமயமலையைக்காட்டிலும் உயர்ந்ததா? அல்லது போர் வெற்றியைக் கொண்ட நந்தர்கள், பாடலி புரத்தில் குழுமி, (பகைவர் படையெடுப்புக் காலங்களில் கொண்டுபோய்விடக் கூடாது என்று கருதி) கங்கையில் நீருக்கு

அடியில் மறைத்து வைத்திருந்த பெருஞ்செல்வத்தைவிட மிகுதி யானதா? அல்லது வேறு எவ்வகையிலேனும் சிறப்புடையதோ?" என்று தலைவி பெரிதும் வருத்தத்துடன் தோழியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

நம்மைக்காட்டிலும் தலைவர்க்குப் பொருள் பெரிதாகத் தோன்றி விட்டதோ?

விளக்கம்

"தோழி! வாழி! பாவை போன்ற நீ இரங்க, நம்மைத் துறந்து, நம் கண்கள் கண்ணீர் சொரியும்வண்ணம் நம் தலைவர் பொருள் தேடச் சென்றுள்ளார். தலைவர் நம்மினும் பெரிதாய் மதித்த பொருள் இமயமலையினும் உயர்ந்ததா? அல்லது நந்த அரசர் பாடலிபுரத்திலே குழுமி, கங்கைநீருக்கு அடியில் மறைத்து வைத்த செல்வத்தைவிட மிகுதியானதா? அவ்விரு வகையிலும் சிறப்பானது அன்றெனில் அவர் நம்மை விட்டுப் பிரிந்ததற்கு வேறு காரணம் என்ன?" என்று தலைவி தோழியிடம் கேட்டாள்.

சொற்பொருள்

1. புகையின் - புகையைப் போல; வியல்விசும்பு - அகன்ற வானம்; உகந்து - உயர்ந்து.
2. பனிஊர் - பனி தவழும்; அழல் கொடி - தீச்சுடர்; கடுப்ப - ஒப்ப.
3. இமயச் செவ்வரை - இமய மலை; மானும் - ஒக்கும்.
4. நந்தர் - பாடலிபுரத்தை ஆண்ட அரசருள் ஒரு பிரிவினர்.
5 பாடலி - பாடலிபுரம்.
6. கங்கை நீர்முதல் கரந்த - கங்கை நீருக்கு அடியில் மறைத்து வைத்திருந்த; நிதியம் - செல்வம்.
7. வயங்குஒளி - விளங்கும் ஒளி.
8. நிழல்பால் - நிழலில் உள்ள; அறல் - கருமணல்; நெறித்த - நெளிந்த.
9. குழல் குரல் - இனிய குரல்; நத்துறந்து - நம்மை விட்டு நீங்கி.
10. நெகிழ - கழன்று விழ; சாஅய் - மெலிந்து; செல்லல் - துன்பம்.
11. பனி - நீர்; கலுழ்தல் - பெருகுதல், சொரிதல்; பொறை - குன்று.
13. நிணம்பொதி - கொழுப்பு நிறைந்த; விழுத்தடி - ஊன் துண்டு.

14. அணங்குதல் - வருத்துதல்; அரு மரபின் - அரிய திறன் கொண்ட.
15. விளர் - வெளுத்த; வேட்கை - தாகம் - நீர்வேட்கை.
16. துகள்அற - குற்றமற; தோப்பி - நெல் கொண்டு அமைந்த கள்.
17. குலாஅ - வளைந்த; வல் - வலிமையான; கொடுநோக்கு ஆடவர் - கடுமையான பார்வையினைக் கொண்ட வழிப்பறி கள்வர்.
18. புலாஅல் - ஊன்; பூசா - கழுவாத.
19. ஒராஅ - இடையறாது; உருள்துடி - விட்டுவிட்டு ஒலிக்கும் குரல்; குராஅல் - கோட்டான்.
20. மரா - வெண் கடப்ப மரம்.
21. செந்நுதல் - சிவந்த நெற்றி; வேங்கடம் - வேங்கடமலை; தழீஇ - கடந்து.
22. வெம்முனை - கொடிய குடியிருப்பு; அருஞ்சுரம் - கடத்தற்கரிய பாலை நிலம்.
23. வலிதாத் தூக்கிய - சிறப்பாய்க் கருதிய.

தலைவி கூற்று

அகநானூறு 349 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதை நினைந்து வருந்தியிருந்த தலைவியைத் தோழி தேற்றி உரைத்தனள். அந்நிலையில் தலைவி தன் ஆற்றாமையினைத் தோழியிடம் கூறியது.

அரம்போழ் அவ்வளை செறிந்த முன்கை
வரைந்துதாம் பிணித்த தொல்கவின் தொலைய,
எவன்ஆய்ந் தனர்கொல்– தோழி! – ஞெமன்
தெரிகோல் அன்ன, செயிர்தீர் செம்மொழி,
உலைந்த ஒக்கல், பாடுநர் செலினே,
உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக,
அருங்குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை

சூழாது சுரக்கும் நன்னன் நல்நாட்டு,
ஏழிற் குன்றத்துக் கவாஅன், கேழ்கொள,
திருந்துஅரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவளம் மாந்தி, களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்ஊர் பாம்பின் தோன்றும்
சொல்பெயர் தேஎத்த சுரன்இறந் தோரே?

தெளிவுரை

தோழி! நன்னன் என்பவன் துலாக்கோல்போல நடுவுநிலை திரியாது விளங்கும் சிறப்பினைக் கொண்டவன். வறுமையில் வாடும் பாணர் தம் சுற்றத்தாருடன் அவனிடம் சென்றால், அவர்களின் வறுமையினைப் போக்கும் வகையில் அவன் தன் பகைவரோடு போரிட்டு அழித்து, அவரிடமிருந்து திறையாகப் பெற்ற விலை மதிப்புமிக்க அணிகலன்களை அப்பாணர்களுக்கு மிகுதியாய் வழங்குவான். அவனது நல்ல நாட்டிலுள்ள ஏழில் என்பது எழில் மிகுந்த மலைச்சாரல். அங்குக் கருநிறம் கொண்ட அடிமரத்துடன் உயர்ந்து வளர்ந்துள்ள வேங்கை மரத்தின் நெருப்பை ஒத்த பூக்களை ஆண்யானை உண்ணும். உண்டதும் அந்த யானை தன் வரிகள் பொருந்திய வலிமை குறைந்த பெரிய துதிக்கையைத் தன் நெற்றி மேல் வைக்க, அக்காட்சி குன்றின்மேல் ஊர்ந்து செல்லும் பாம்புபோல் தோன்றும். இத்தகைய காட்சிகளைக் கொண்ட மொழி வேறுபட்ட நாட்டில் உள்ள பாலை நில வழியை நம் தலைவர் கடந்து சென்றுள்ளார்.

அரத்தால் அறுத்துச் செய்யப்பெற்ற அழகிய வளைகள் என் முன்கையில் செறிந்திருக்க என் கையைப் பற்றி முன்பு மணம் செய்து கொண்டவர், நம் தலைவர். அவர் இன்று என் முந்தைய அழகு கெடுமாறு நம்மினும் சிறப்புடையதாய்ப் பொருளைக் கருதிச் சென்றாரோ? (என்று அறிய இயலாமல் நான் வருந்தி யிருக்கின்றேன்) என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

என் அழகினும் பொருள் சிறந்தது என்று கருதித் தலைவர் சென்றுள் ளாரோ?

விளக்கம்

"வறுமையுற்ற பாணர் தம் சுற்றத்துடன் தன்னை வந்தணுகும் போது, பகைவரோடு போரிட்டு வென்று, அவர்களிடமிருந்து கைப்பற்றிய பெரும்பொருளை அப்பாணர்க்கு மிகுதியாய் கொடுப்பவன், நன்னன். அவனுடைய நாட்டில் உள்ள மலைச் சாரலில் கரிய அடிமரத்துடன் ஓங்கி வளர்ந்துள்ள வேங்கை மரத்தின் நெருப்பினை ஒத்த செந்நிறப் பூக்களை ஆண்யானை உண்டு, தன் வலிமை குறைந்த துதிக்கையைத் தன் நெற்றிமேல் வைத்த காட்சி, மலைமேல் ஏறும் பாம்புபோலத் தோன்றும். இத்தகைய காட்சிகளைக் கொண்ட மொழி வேறுபட்ட நாட்டின் பாலைநில வழியே சென்றுள்ள தலைவர், நம் அழகினும் சிறந்ததாய்ப் பொருளைக் கருதியிருக்கின்றாரோ?" என்று தலைவி தோழியிடம் வருந்திக் கூறினாள்.

சொற்பொருள்

1. போழ்தல் - அறுத்தல்; அவ்வளை - அழகிய வளையல்.
2. வரைந்து - மணந்துகொண்டு; பிணித்த - பற்றிய; தொலைய - நீங்க.
3. எவன்? - எவ்வாறு?; ஞெமன் - அளவினை அறியும்.
4. தெரிகோல் - தராசுக்கோல்; செயிர் - குற்றம்.
5. உலைந்த - வறுமையால் வாடிய; ஒக்கல் - சுற்றம்; பாடுநர் - பாணர்.
6. உரன்மலி - ஊக்கம் மிக்க; முனை - போர்முனை; பாழ்பட - அழிந்து பட.
7. குறும்பு - பகைவர் அரண்; பெருங்கலம் - சிறந்த அணிகலன்; வெறுக்கை - செல்வம்.
8. சூழாது - தகுதி முதலியவற்றை ஆராயாது; சுரக்கும் - கொடுக்கும்; நன்னன் - குறுநில மன்னருள் ஒருவன்.
9. ஏழில் - ஒரு குன்றின் பெயர்; கவாஅன் - பக்கமலை, மலைச்சாரல்; கேழ் - நிறம்.
10. திருந்துஅரை - செவ்விதாய அடிமரம்; நிவந்த - உயர்ந்த.
11. எரிமருள் - நெருப்பினை ஒத்த; கவளம் - உணவு உருண்டை; மாந்தி - உண்டு.
12. வலிதேம்பு - வலிமை குறைந்த; தடக்கை - பெரிய துதிக்கை.
13. கல் - மலை; ஊர் - ஊர்ந்து செல்லும்.
14. சொல்பெயர் - மொழி வேறுபட்ட; தேஎம் - தேசம்.

தோழி கூற்று

அகநானூறு 91 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டக் கருதித் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். சென்றவன் தான் திரும்பி வருவதாய்க் குறித்துச் சொன்ன பருவத்தில் வரவில்லை. தலைவியோ பிரிவாற்றாமையால் வருந்தினாள். தோழி அவளை ஆற்றி இருக்குமாறு வற்புறுத்தினாள்.

விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளம்கெழு மாமலை பயம்கெடத் தெறுதலின்,
அருவி ஆன்ற பெருவரை மருங்கில்
சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணாது,
பாசி தின்ற பைங்கண் யானை
ஓய்பசிப் பிடியொடு ஒருதிறன் ஒடுங்க,
வேய்கண் உடைந்த வெயில்அவிர் நனந்தலை
அரும்பொருள் வேட்கையின் அகன்றனர் ஆயினும்,
பெரும்பேர் அன்பினர்– தோழி!– இருங்கேழ்
இரலை சேக்கும், பரல்உயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவுஉழவு எழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டு உம்பர்,
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசிஎன அறியாப் பணைபயில் இருக்கை,
தடமருப்பு எருமை தாமரை முனையின்,
முடம்முதிர் பலவின் கொழுநிழல் வதியும்,
குடநாடு பெறினும் தவிரலர்–
மடமான் நோக்கி! நின் மாண்நலம் மறந்தே.

தெளிவுரை

"*தலைவி! உலகம் விளங்கித் தோன்றுதற்குக் காரணமாகப் பகற் பொழுதினை ஏற்படச் செய்து உதவும் பல கதிர்களைக்*

கொண்ட ஞாயிறு, வளம் கெழுமிய பெரிய மலைச்சாரல்களும் தம் பயன்கெட்டு ஒழியுமாறு, காய்ந்தது. அதனால், அருவிகள் நீர் வற்றி விட்ட பெரிய மலைச்சாரல்களிலே, அச்சமூட்டும் சுனைகளைத் துழாவியும், அவற்றுள் நீரைக் காணாது, பாசியினைத் தின்ற பசிய கண்ணினைக் கொண்ட ஆண்யானை ஒன்று, வயிற்றிலே அயர்வினை ஏற்படுத்தும் பசியோடு, அயலே அயர்ந்து கிடந்த தன் பிடியுடன் ஒரு பக்கத்தே ஒடுங்கிக் கிடக்கும். மூங்கில்களின் கணுக்கள் வெடித்துச் சிதறுமாறு வெயில் எரித்துக்கொண்டிருக்கும், அகன்ற அப்பாலை நில வழியில் அரிய பொருள் வேட்கையின் காரணமாக, நம் தலைவர் நம்மை விட்டு அகன்று போயினர். ஆயினும், அவர், நம்மீது பெரிதும் பேரன்பு கொண்டவரே ஆவர்!

'ஒடுங்காடு' என்னும் ஊர், நீண்ட அடிமரத்தைக் கொண்ட ஆசினிப்பலா மரங்கள் செறிந்த அகன்ற காடுகளைக் கொண் டது. அக்காடுகளில் பரற்கற்களாலான உயர்ந்த கற்குவியலில் இரலை மான்கள் தங்கியிருக்கும்; அஞ்சாமைமிக்க வலிமையான மறவர்கள் பசுக்களைக் களவாடிச் செல்வர். அந்த ஊருக்கு அப்பால், இறுகப் பிணித்த முழவினையுடைய குட்டுவன் என்பான் காத்து வருதலால், பசி என்பதனையே அறியாத, மருதவளம் மிக்க ஊர்கள் பல உள்ளன. வளைந்த கொம்புகளைக் கொண்ட எருமை, தாமரை மலர்களை உண்பதை வெறுத்தால், வளைவுமிக்க முதிர்ந்த பலாவின் கொழுவிய நிழலிலே படுத்து உறங்கும். அத்தகைய குடநாட்டினையே பெற்றாலும், மட மானைப் போன்ற பார்வையினைக் கொண்ட, மாட்சிமையுற்ற உன் நலத்தினை மறந்து, அவர் அங்குத் தங்குபவர் அல்லர். (அதனால் நீ ஆற்றியிரு)" என்றாள் தோழி.

கருத்து

குடநாடே கிட்டுவதாயினும், உன் நலம் மறந்து தலைவர் அங்குத் தங்க மாட்டார்; உடனே திரும்புவார்.

விளக்கம்

"சூரிய வெப்பம் காய்தலால் அருவி வற்றிய பெரும் பாறைக்கு அருகில், சுனையைத் துழாவி, பசுமை காணாது, நீர்ப்பாசியைத்

தின்ற ஆண்யானை, பசியோடு பெண்யானையுடன் படுத் துறங்கும். மூங்கில் கணுக்கள் வெப்பத்தால் வெடிக்கும். அத்தகைய பாலை நில வழியே தலைவன் பொருள் தேடச் சென்றுள்ளான்.

பலா மரங்களை மிகுதியாய்க் கொண்ட 'ஓங்காடு' என்னும் ஊருக்கு அப்பால் குட்டுவன் என்பவனால் காக்கப்படும் நீர்வளம் மிக்க ஊர்கள் சூழ்ந்த குடநாட்டையே பெறுவதாயினும் தலைவன், உன் மாண்புறு நலத்தை மறந்து அங்கே தங்க மாட்டான். குறித்த காலத்தில் வந்துவிடுவான்; வருந்தாதே" எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. விளங்குபகல் - உலகம் விளங்குதற்குக் காரணமாயுள்ள பகல்.
2. கெழு - பொருந்திய; பயம் - பயன்; தெறுதலின் - காய்தலின்.
3. ஆன்ற - இல்லாமற்போன; மருங்கில் - அருகே.
4. சூர்ச்சுனை - அச்சமூட்டும் சுனை (சூர் - அச்சம், தெய்வம்); துழைஇ - துழாவி; நீர்ப்பயம் - நீராகிய பயன்.
5. பைங்கண் - பசிய கண்.
6. ஒய்பசி - அயர்வினை உண்டாக்கும் பசி; பிடி - பெண்யானை; ஒருதிறன் - ஒரு பக்கம்; ஒடுங்க - ஒடுங்கிக் கிடக்க.
7. வேய் - மூங்கில்; கண் - கணு; அவிர் - விளங்கும்; நனந்தலை - அகன்ற இடம்.
8. வேட்கை - விருப்பம்; அகன்றனர் - சென்றனர்.
9. பெரும்பேர் - மிகப்பெரிய; இருங்கேழ் - கரிய நிறம்.
10. சேக்கும் - தங்கும்; பரல் - பருக்கைக் கற்கள்; பதுக்கை - கற்குவியல்.
11. கடுங்கண் - வன்கண்மையினைக் கொண்ட, வலிமை வாய்ந்த; மழவர் - வீரர்; களவு உழவு - களவாகிய உழவிற்கு (களவாடுதற்கு).
12. நெடுங்கால் - நீண்ட அடிமரம்; ஆசினி - ஒருவகைப் பலா மரம்; ஒடுங்காடு - ஓர் ஊர்; உம்பர் - அப்பால்.
13. விசிபிணி - இறுகப் பிணித்த; முழவின் - முழவினையுடைய; குட்டுவன் - சேர மன்னன்.
14. பணைபயில் - மருதள வளஞ்சான்ற; இருக்கை - ஊர்கள்.
15. தடமருப்பு - வளைந்த கொம்பு; முனையின் - வெறுத்தால்.
16. முடம்முதிர் - வளைவு மிக்க; பலவு - பலா மரம்; கொழுநிழல் - கொழுவிய (வளமையான) நிழல்; வதியும் - தங்கும் (படுத்து உறங்கும்).

17. தவிரலர் - தங்குவார் அல்லர் (தங்க மாட்டார்).
18. மடமான் - இளமான்; நோக்கு - பார்வை; மாண்நலம் - மாண்புற்ற நலம், சிறந்த அழகு.

தோழி கூற்று

அகநானூறு 237 **தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். பிரிவாற்றாமல் தலைவி பெரிதும் வருந்தினாள். அவளைத் தோழி ஆற்றுவித்தது.

'புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ
நுண்கொடி அதிரலொடு நுணங்குஅறல் வரிப்ப,
அரவுஎயிற்று அன்ன அரும்புமுதிர் குரவின்
தேன்இமிர் நறுஞ்சினைத் தென்றல் போழ,
குயில்குரல் கற்ற வேனிலும் துயில்துறந்து
இன்னா கழியும் கங்குல்' என்றுநின்
நல்மா மேனி அணிநலம் புலம்ப,
இனைதல் ஆன்றிசின்— ஆயிழை!— கனைதிறல்
செந்தீ அணங்கிய செழுநிணக் கொழுங்குறை
மென்தினைப் புன்கம் உதிர்த்த மண்டையொடு
இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்
விளைகழை பிழிந்த அம்தீம் சேற்றொடு,
பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்
புனல்பொரு புதவின், உறந்தை எய்தினும்,
வினைபொரு ளாகத் தவிர்விலர், கடைசிவந்து—
ஐய அமர்த்த உண்கண்நின்
வைஎர் வால்எயிறு ஊறிய நீரே.

தெளிவுரை

"*அழகிய அணிலகன்கள் அணிந்த தலைவியே! இந்த வேனிற் காலத்தில் பாதிரி மரத்தின் வரிகள் பொருந்திய நிறமுள்ள திரண்ட பூக்கள், மல்லிகைப்பூக்களோடு உதிர்ந்து நுண்ணிய மணலில் கோலம் செய்யும். பாம்பின் பற்கள்போல அரும்புகள் முதிர்ந்து மலர்ந்த குரா மரத்தின் வண்டுகள் ஒலிக்கும் நறிய கிளைகளின் ஊடே தென்றல் காற்றுத் தவழ்ந்து செல்லும்; குயில்கள் கூவும்.*

'மகிழ்ச்சி நிறைந்த இந்த வேனிற்காலத்திலும் எனக்கு இரவு களெல்லாம் உறக்கமின்றித் துன்பத்துடன் கழியுமோ?' என்று கூறி, உன் மேனியின் சிறந்த அழகு சிதையும்படி வருந்துவதை நிறுத்து.

"நம் தலைவர் பொருளீட்டச் சென்ற ஊர் உறையூராகவே இருக்கட்டுமே! அவ்வூரில் உள்ளோர் பாணர்களுக்கு விருந் தளிப்பர். தீயில் சுட்ட கொழுவிய மீன் துண்டுகளுடன் கூடிய மெல்லிய திணைச்சோற்றையும் பெரிய நெற்கதிர்கள் காற்றிலாடும் வயலில், முற்றி வெட்டியெடுத்த கரும்புகளை ஆலையில் ஆட்டி எடுத்த சாற்றோடு பாலையும் கலந்து, அவலை அதில் வேகவிட்டு எடுத்துப் பாணருடைய உண்கலத்தில் உணவாய் வழங்குவர். அத்தகைய வளம் கொண்ட உறையூரில் கரையை மோதும் நீரும் மதகினைக் கொண்ட வாய்க்கால்களும் அமைந்திருக்கும். அந்த ஊரைப் போன்ற செல்வத்தையே பெற்றாலும், நம் தலைவர் உன்னை மறக்க மாட்டார்; பார்த்தவர் வியக்குமாறு, கடை சிவந்த, மை தீட்டப்பட்ட உன் கண்ணை மறக்க மாட்டார்; உனது வாய் முத்தம் கொள்ளுதலையும் மறக்க மாட்டார். ஆதலின், விரைந்து வருவார்."

கருத்து

உறையூர் போன்ற செல்வத்தைப் பெறுவதாயினும் தலைவர் உன்னை மறக்க மாட்டார்; உடனே திரும்புவார்.

விளக்கம்

" '*ஆயிழை! குயில் கூவும் இளவேனிற்காலத்தில் தலைவர் இன்றி இரவு இன்னாததாய்க் கழிகிறது' என்று உன் நல்ல மேனி*

நலங்கெடுமாறு வருந்தாதே. உறையூர் மக்கள் பாணர்களுக்கு உணவாய் மீன் துண்டுடன் கூடிய தினைச்சோற்றையும், கரும்புச்சாற்றில் பால் கலந்து அவலை அதில் வேக வைத்துத் தருவர். தலைவர் சென்ற இடத்தில் உறையூர் போன்ற செல்வத்தையே பெறுவதாயினும், உன் கூரிய அழகுற்ற வெண்ணிறப் பற்களில் சுரக்கும் நீரை, பொருளீட்டுதலின் காரணமாய் உண்ணாது தவிர்த்திருக்க மாட்டார். அதனை உண்ணும் ஆர்வத்தால் விரைந்து வருவார்" என்று சொல்லி, தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

சொற்பொருள்

1. பாதிரி - பாதிரி மரம்; அரிநிறம் - வரிகள் பொருந்திய நிறம்; திரள் - திரண்ட, பெரிய; வீ - மலர்.
2. அதிரல் - ஒரு வகைக் கொடி; நுணங்கல் - நுண்மை; அறல் - கருமணல்; வரிப்ப - கோலம் செய்ய.
3. அரவு - பாம்பு; குரவு - குரா மரம்.
4. தேன் - வண்டு; போழ - ஊடறுத்துச் செல்ல.
5. வேனில் - வேனிற்காலம்; துயில் - உறக்கம்.
6. இன்னா - துன்பம்; கங்குல் - இரவு.
7. புலம்ப - ஒழிய.
8. இனைதல் - வருந்துதல்; ஆன்றிசின் - ஒழிக; கனைதிறல் - செறிந்த வலிய.
9. அணங்குதல் - வருத்துதல், சுடுதல்; கொழுங்குறை - கொழுவிய துண்டுகள்.
10. புன்கம் - சோறு, உணவு; உதிர்த்த - படைத்த; மண்டை - உண்கலம்.
11. இருங்கதிர் - பெரிய நெற்கதிர்; அலமரும் - சுழல்கின்ற; கழனி - வயல்.
12. விளைகழை - முற்றிய கரும்பு; சேறு - பாகு.
13. பாசவல் - பசிய அவல்; பகுக்கும் - பகுத்துக் கொடுக்கும்.
14. புதவு - மதகு; உறந்தை - உறையூர் (சோழர் தலைநகர்).
15. வினை பொருளாக - பொருளீட்டுதல் காரணமாக; தவிர்விலர் - தங்க மாட்டார்; கடை - கண்ணின் கடைப்பகுதி.
16. ஐய அமர்த்த - வியக்குமாறு பொருந்திய; உண்கண் - மையுண்ட கண்.
17. வை - கூரிய; ஏர் - அழகிய; வால் எயிறு - வெண்மையான பற்கள்; ஊறிய - சுரக்கும்.

தோழி கூற்று

அகநானூறு 159 **ஆமூர்க் கவுதமன் சாதேவனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து போனமையால் தனிமைத்துயரில் வாடிய தலைவியின் உடல் அழகு வேறுபட்டுத் தோன்றியது. தலைவன் தான் குறித்துச் சொன்ன அந்நாளில் வருவான் என்று கூறித் தோழி அவளை ஆற்றுவித்தது.

தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின்
கொள்ளை சாற்றிய கொடுநுக ஒழுகை
உரனுடைச் சுவல பகடுபல பரப்பி,
உமண்உயிர்த்து இறந்த ஒழிகல் அடுப்பின்,
வடிஉறு பகழிக் கொடுவில் ஆடவர்,
அணங்குடை நோன்சிலை வணங்க வாங்கி,
பல்ஆன் நெடுநிரை தழீஇ, கல்லென
அருமுலை அலைத்த பெரும்புகல் வலத்தர்,
கனைகுரற் கடுந்துடிப் பாணி தூங்கி,
உவலைக் கண்ணியர், ஊன்புழுக்கு அயரும்
கவலை, 'காதலர் இறந்தனர்' என,நனி
அவலம் கொள்ளல்மா, காதல்அம் தோழி!
விசும்பின் நல்ஏறு சிலைக்கும் சேண்சிமை
நறும்பூஞ் சாரல் குறும்பொறைக் குணாஅது–
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறி,
கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்
சேண்விளங்கு சிறப்பின்– ஆமூர் எய்தினும்,
ஆண்டுஅமைந்து உறையுநர் அல்லர்,நின்
பூண்தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்தே.

தெளிவுரை

"அன்பார்ந்த அழகிய தலைவி! உப்பு வாணிகர், உப்பங்கழியில் விளைந்த வெள்ளை நிற உப்பினை வளைந்த நுகத்தைக் கொண்ட வண்டிகளில், வலிமையுள்ள காளைகளைப் பூட்டி ஓட்டிச் சென்று விலை கூறி விற்றனர்; வண்டிகளின் காளைகளை அவிழ்த்து மேயவிட்டு, கல்லடுப்பு வைத்துச் சமைத்துண்டு, இளைப்பாறிச் சென்றனர்.

"தீட்டிய அம்புகளையும், வளைந்த வில்லையும் கொண்ட வீரர் வருத்தத்தை விளைக்கும் வில்லை வளையும்படி இழுத்து அம்பு செலுத்திப் பகைவரின் பசுக்கூட்டம் பலவற்றைக் 'கல்' என்னும் ஒலியுடன் கவர்ந்து சென்றனர். அவர்கள் பசுக்களை வெருட்டி ஓட்டியதால் அவற்றின் மடிகள் துவண்டன. பெரிய வெற்றியினைக் கொண்ட அவர்கள், கடுமையாய் ஒலிக்கும் உடுக்கையை முழக்கி, அதன் தாளத்திற்கேற்பத் தழையால் கட்டிய மாலையைச் சூடி ஆடுவர். அவர்கள் உமணர் விட்டுச் சென்ற கல் அடுப்பில் ஊனைச் சமைத்து உண்டு செல்வர். அத்தகைய வழியில் தலைவர் சென்றார் என்று பெரிதும் வருந்தாதே. (ஏனெனில், தலைவர் உன்னை மறந்து எங்கும் தங்கிவிட மாட்டார்.)

"வானில் முழங்கும் இடி, மலையுச்சியில் இடித்ததோ என்னுமாறு, வானளாவிய உச்சியைக் கொண்டதும், நறுமண மலர்கள் நிறைந்த சாரல்களைக் கொண்டதுமான குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கே உள்ளது, ஆமூர். அவ்வூருக் குரியவன் வில் பொருந்திய கைகளையும் போர் வெற்றியையும் கொண்ட சேர மன்னன். மதம் ஒழுகுவதால் வண்டு மொய்க்கும் கன்னங்களைக் கொண்ட அவனுடைய யானைகளின் கொம்புகள் ஒடியுமாறு அவற்றை அழித்து அவனை வென்று ஆமூரைக் கொடுமுடி என்பவன் கைப்பற்றினான்.

"ஆமூர் அழகுற அமைந்த, நீண்டுயர்ந்த மதிலைக் கொண்டது. அது நெடுந்தொலைவில் உள்ளோரும் அறிந்த புகழைக் கொண்டது. அதனையே பெறுவதாயினும், தலைவர், உனது அணிகலம் திகழும் மார்பகத்தைத் தழுவுதலை மறந்து, அங்கு மன அமைதியுடன் தங்கியிருக்க மாட்டார். (ஆதலின், வருந் தாதே)" எனத் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

கருத்து

புகழ் பெற்ற ஆமூர் என்னும் ஊரையே பெறுவதாயிருந்தாலும், உன் அணி திகழும் மார்பினைத் தழுவுதலை மறந்து தலைவர் அங்குத் தங்க மாட்டார்.

விளக்கம்

"அன்புக்குரிய தலைவி! பிரிவுபட்ட அரிய வழியில் காதலர் சென்றுள்ளார் எனக் கவலை கொள்ளாதே! மிகுசிறப்பினைக் கொண்ட ஆமூரையே பெற்றாலும், அணிகள் அணியப் பெற்ற மார்பில் பொருந்துதலை மறந்து அங்கே தங்குவார் அல்லர்; விரைந்து வருவார்" எனத் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

சொற்பொருள்

1. தெண்கழி - தெளிந்த உப்பங்கழி.
2. கொள்ளை சாற்றிய - விலையைக் கூறி விற்ற; கொடுநுகம் - வளைந்த நுகம்; ஒழுகை - வண்டி, வண்டி ஒழுங்கு.
3. உரனுடை - வலிமையுள்ள; சுவல் - பிடரி; பகடு - எருது; பல பரப்பி - பலவற்றையும் மேயும்படி அவிழ்த்துவிட்டு.
4. உமண் - உப்பு வாணிகர்; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; இறந்த - விட்டுச் சென்ற; ஒழிகல் - பயன்படுத்தப்படாது கிடந்த கல் (அடுப்பு).
5. வடிஉறு - தீட்டுதல் அமைந்த; பகழி - அம்பு; கொடுவில் - வளைந்த வில்; ஆடவர் - வீரர்.
6. அணங்குடை - வருத்தத்தை விளைக்கும்; நோன் - வலிய; சிலை - வில்; வணங்க - வளையும்படி; வாங்கி - இழுத்து.
7. பல்ஆன் - பல பசு; நெடுநிரை - நீண்ட வரிசை; தழீஇ - கவர்ந்து கொண்டு; கல் என - 'கல்' என்ற ஒலியுடன்.
8. அருமுலை அலைத்த - (விரட்டுதலால்) அப்பசுக்களின் பால்மடி துவளுமாறு செய்த; பெரும் புகல் - மிகுந்த செருக்கினைக் கொண்ட; வலத்தர் - வெற்றி வீரர்.
9. கனைகுரல் - ஒலிக்கின்ற குரல் (கொண்ட); கடும் துடி - கடிய துடி (கொட்டி); பாணி - அதன் தாள ஒத்தின்படி; தூங்கி - ஆடி.
10. உவலை - தழை; கண்ணி - தலைமாலை; ஊன்புழுக்கு - ஊன் சோறு (புழுக்கல் - சோறு); அயரும் - உண்ணும்.
11. கவலை - கவர்த்த வழி; நனி - மிகவும்.

12. அவலம் - துன்பம்; கொள்ளல் மா - மிகவும் கொள்ளாதே.
13. விசும்பின் - வானிடத்தே; நல்ஏறு - சிறந்த இடி; சிலைக்கும் - ஒலிக்கும்; சேண்சிமை - நெடிய உச்சி.
14. நறும்பூ - நறிய பூக்கள்; சாரல் - மலைச்சாரல்; குறும்பொறை - குறும்பொறை என்னும் மலை; குணாஅது - கிழக்கே.
15. வில்கெழு - வில் பொருந்திய; தடக்கை - பெரிய கை; வெல்போர் - போரில் வெற்றி பெறும்; வானவன் - சேர மன்னன்.
16. மிஞிறு - வண்டுகள்; மூசு - மொய்க்கும்; கவுள - (மதம் வழியும்) கன்னத்தையும்.
17. தொடியுடை - பூண் பூண்ட; தட மருப்பு - பெரிய கொம்பு; நூறி - அழித்து.
18. கொடுமுடி - கொடுமுடி என்பவன்; குரூஉக்கண் - பெரிய இடமகன்ற.
19. சேண் - நெடுந்தொலைவு; விளங்கு - (சென்று) விளங்கும்; ஆமூர் - கொடுமுடி என்பவன் காத்துவரும் ஓர் ஊர்.
20. ஆண்டுஅமைந்து - அங்கே தங்கி; உறைதல் - இருத்தல் (தங்குதல்).
21. தாங்கு - சுமந்த; ஆகம் - மார்பு.

தோழி கூற்று

அகநானூறு 201 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் சேர்க்கப் பிரிந்து சென்றான். தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன காலத்தில் வரவில்லை. எனவே, தலைவி வருந்தினாள். அவளிடம் தோழி, தலைவன் வரும்வரை ஆற்றி இருக்கும்படி கூறியது.

அம்ம, வாழி– தோழி! பொன்னின்
அவிர்எழில் நுடங்கும் அணிகிளர் ஓடை
வினைநவில் யானை விறல்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை,

அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,
தழைஅணிப் பொலிந்த கோடுஏந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறைப் பரவப்
பகலோன் மறைந்த அந்தி ஆர்இடை,
உருகெழு பெருங்கடல் உவவுக்கிளர்ந் தாங்கு,
அலரும் மன்றுபட் டன்றே; அன்னையும்
பொருந்தாக் கண்ணள், வெய்ய உயிர்க்கும்என்று
எவன்கை அற்றனை, இகுளை? சோழர்
வெண்ணெல் வைப்பின் நல்நாடு பெறினும்,
ஆண்டுஅமைந்து உறைநர் அல்லர்– முனாஅது
வான்புகு தலைய குன்றத்துக் கவாஅன்,
பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை
இருள்துணிந் தன்ன குவவுமயிர்க் குருளைத்
தோள்முலைப் பிணவொடு திளைக்கும்
வேனில் நீடிய சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"என் அருமைத் தலைவியே! ஒளி வீசும் பொன்முகபடாத்தை அணிந்த, போர்ப்பயிற்சி பெற்ற யானைகளைக்கொண்டு வெற்றி கொள்ளும் போர்களை நிகழ்த்தும் பாண்டியனுக்கு உரிமை யானது, கொற்கைத் துறைமுகம். அங்குக் கிடைக்கும் முத்துகள் உலகப்புகழ் பெற்றவை. அத்துறைமுகத்தில் நெய்தல் நிலத்து மக்களின் சிறுமியர் அந்திமாலையில் இடையில் தழைஉடை அணிந்து முத்துகளையும், வலம்புரிச்சங்குகளையும் கொண்டு கடல் தெய்வமாகிய வருணனை வழிபடுவர். ஞாயிறு மறைந்த அம்மாலை நேரத்தில் பௌர்ணமி நாளில் அச்சம் பொருந்திய பெரிய கடல் ஆரவாரித்துப் பொங்கும். அப்பொழுது எழும் பேரொலி போன்று ஊரில் பொதுவிடங்களிளெல்லாம் மக்கள் வெளிப்படையாகவே நம்மீது பழி தூற்றுகின்றனர்.

"இதைக் கேட்ட தாயும் இரவெல்லாம் உறக்கம் கொள் ளாமல் மகளுக்கு என்ன ஏற்றபட்டதோ ஏது நேர்ந்ததோ என்று துயரப் பெருமூச்சு விடுகின்றாள். இதையெல்லாம் நினைத்து

ஏன் செயலற்று அமர்ந்திருக்கிறாய்? (தலைவர் வினைமேற் கொண்டு பிரிந்திருக்கும் இக்காலத்தில் ஆற்றியிருப்பதே உன் கடமை.) பழமையான மலை வானுயர்ந்து நிற்கும் வழியில் நம் தலைவர் சென்றுள்ளார். அம்மலைச்சாரலில் பெரிய கையையும், பிளந்த வாயையும் கொண்ட ஆண்கரடி இருளை வெட்டி எடுத்தாற் போன்ற திரண்ட முடியைக் கொண்ட குட்டியோடும், சுருண்டு தொய்ந்த பாலூட்டும் காம்புகளைக் கொண்ட பெண்கரடியோடும் மகிழ்ந்திருக்கும். வெம்மை யினைக் கொண்ட இத்தகைய பாலை நிலத்தைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

"அவர் சென்ற நாட்டில், வெண்ணெல் விளையும் சோழ மன்னர்களின் ஊர்களைக் கொண்ட நாடு முழுவதையும் பெறுவதாயினும் நம் தலைவர் அதனால் மகிழ்ந்து அங்கேயே தங்கிவிடும் பண்பினர் அல்லர். ஆதலின், கவலையுறாதே" என்று சொல்லித் தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வேண்டுகிறாள்.

கருத்து

சோழர்களது வெண்ணெல் விளையும் ஊர்களைக் கொண்ட நாடு முழுவதையும் பெறுவதானாலும் தலைவர் உன்னை மறந்து அங்கே தங்கி விடுபவர் அல்லர்.

விளக்கம்

"தலைவன் பொருள்வயிற்பிரிந்தவழி வேறுபட்ட தலைவியை நோக்கி, "தலைவி! வாழி! நான் சொல்வதைக் கேள். 'ஊரார் கூறும் அலரும் ஊர் முழுவதும் பரவி விட்டது. தாயும் கண் துயிலாமல் வெப்பப்பெருமூச்சு விடுகிறாள்' என்று சொல்லி ஏன் செயலற்று வருந்துகிறாய்? அருவழிகளைக் கடந்து பொருளீட்டச் சென்ற தலைவர் சோழரது வெண்ணெல் விளையும் நல்ல நாட்டினை முழுதும் பெற்றாராயினும் அங்கே மனம் பொருந்தித் தங்கி விடுவார் அல்லர்" என்று ஆறுதல் கூறித் தோழி தேற்றினாள்.

குறிப்பு

'எண்கின் ஏற்றை குருளையொடும் பிணவொடும் திளைக்கும்' என்றது, அன்பு நிறைந்த அக்காட்சியைக் கண்டு தலைவர் விரைவில் மீள்வர் என்னும் குறிப்பினைக் கொண்டுள்ளது.

உவமை

கரடிக்குட்டிகளின் நிறம் இருளை வெட்டிப் போட்டதுபோல் உள்ளது என்று கூறப்பட்ட உவமை, நயம் மிக்கது.

சொற்பொருள்

1. பொன்னின் - பொன்னினாலான.
2. அவிர்எழில் - விட்டு விளங்கும் அழகிய ஒளி; நுடங்கும் - அசையும்; அணிகிளர் - அழகு மிக்க; ஓடை - நெற்றிப்பட்டம்.
3. வினைநவில் - போர்ப் பயிற்சி பெற்ற; விறல்போர் - வெற்றி கொள்ளும் போர்; பாண்டியன் - பாண்டிய மன்னன்.
4. மலி - மிக்க; கொற்கை - முத்து விளையும் பாண்டியர் துறைமுகம்; முன்துறை - கடற்றுறையிலே.
5. அவிர்கதிர் - விளங்கும் ஒளி; முத்தம் - முத்து; வலம்புரி - வலம்புரிச் சங்கு.
6. தழைஅணிப் பொலிந்த - தழையாடையால் பொலிவு பெற்ற; கோடு ஏந்து - பக்கம் உயர்ந்த.
7. பழையர் - நெய்தல் நில மக்கள்; பனித்துறை - குளிர்ச்சி பொருந்திய துறையில்; பரவ - தெய்வத்தை வணங்கி நிற்க.
8. ஆர்இடை - அரிய பொழுதில்.
9. உருகெழு - அச்சம் பொருந்திய; உவவுக் கிளர்ந்தாங்கு - (நிறைமதி நாளில்) ஆரவாரித்து எழுந்தாற்போல.
10. அலர் - ஊரார் பழிச்சொல்; மன்றுபட்டு - மன்றத்திலே பரவிவிட்டது.
11. பொருந்தாக் கண்ணள் - துயிலாதவளாகி; வெய்ய - வெம்மைக் கொண்ட; உயிர்க்கும் - பெருமூச்சு விடும்; என்று - என்று கூறி.
12. எவன் கையற்றனை - ஏன் செயலற்று விட்டாய்; இகுளை - தோழியே!; சோழர் - சோழ மன்னர்.
13. வைப்பின் - விளையும்.
14. ஆண்டமைந்து - அங்கே தங்கி; உறைநர் - தங்குபவர்; முனாஅது - பழையதாகிய.

15. வான்புகு தலைய - வானில் ஓங்கிய உச்சியைக் கொண்ட; கவாஅன் - மலைச்சாரல்.
16. எண்கு - கரடி; பேழ்வாய் - பிளந்த வாய்; ஏற்றை - ஆண்.
17. இருள்துணிந்து அன்ன - இருளை வெட்டி வைத்தாற்போன்ற; குவவுமயிர் - திரண்ட மயிர்; குருளை - குட்டி.
18. தோள்முலை - திரங்கிய முலை; பிணவு - பெண்கரடி; திளைக்கும் - மகிழ்ந்திருக்கும்.
19. வேனில் நீடிய - வெம்மை மிக்க; சுரன் - பாலை வழி; இறந்தோர் - கடந்து சென்ற நம் தலைவர்.

தோழி கூற்று

அகநானூறு 251 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அதனை ஆற்ற மாட்டாத தலைவி வருந்தினாள். அவள் வருத்தம் கண்ட தோழி, 'நம் தலைவர் அன்பு மிக்கவர்; நம் தூதரும் அவரிடம் செய்தி கூறச் சென்றுள்ளனர். ஆதலால், அவர் இப்பொழுதே வருவார்' என்று கூறி ஆற்றுவித்தது.

தூதும் சென்றன; தோளும் செற்றும்;
ஓதி ஒள்நுதல் பசலையும் மாயும்;
வீங்குஇறை நெகிழச் சாஅய், செல்லலொடு,
நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்,
நந்தன் வெறுக்கை எய்தினும், மற்றுஅவண்
தங்கலர்— வாழி, தோழி! வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொல்முது ஆலத்து அரும்பணைப் பொதியில்,
இன்இசை முரசம் கடிப்புஇகுத்து இரங்க,

தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியா மையின், பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் அருவிய அறைவாய் உம்பர்,
மாசுஇல் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ், வயப்புலி
மாநிலம் நெளியக் குத்தி, புகலொடு
காப்புஇல வைகும் தேக்குஅமல் சோலை
நிரம்பா நீள்இடைப் போகி,
அரம்போழ் அவ்வளை நிலைநெகிழ்த் தோரே.

தெளிவுரை

“தலைவி! வாழ்க! தலைவனிடம் நம் தூதர்கள் சென்றிருக்கின்றனர். நாம் நம்முடைய அணிகள் கழன்று விழ, மெலிந்து வருந்திக்கொண்டிருக்கும் துயரத்தை அவர்கள் கூற நம் தலைவர் கேட்டால், சென்ற இடத்திலே தங்கியிருக்க மாட்டார்.

“வெற்றிக்கொடி அசையத் தேரினைக் காற்றைப்போல விரைந்து செலுத்தும் கோசர்கள் தம் பகைவரோடு போருக்குப் புறப்பட்டனர். அப்பொழுது அவர்கள் ஊரில் பழமையான ஆல மரத்தின் நிழலில் அமைந்த மன்றத்திலுள்ள குறுந்தடியால் அடிக்கப் பெற்றுப் போர்முரசு முழங்கிற்று. அதைக் கேட்டு மறவர்கள் பகைவரது போர் முனையை அழித்த காலத்தே மோகூரை ஆண்ட பழையன் என்பவனைப் போரில் வெல்ல முடியவில்லை. (அதனால் கோசர்கள் வேண்ட வடநாட்டிலிருந்து வந்தனர், மோரியர்.)

“மோரியர்கள் தங்களின் அலங்கரிக்கப்பெற்ற தேர்ச்சக்கரம் தடைபடாமல் நன்கு உருண்டு செல்லுதற்கு வசதியாய் அருவிகளைக் கொண்ட மலைகளை உடைத்து வழி செய்தனர். அவ்வழியில், குற்றமற்ற வெண்மையான கொம்பினைக் கொண்ட பெருமை வாய்ந்த யானை ஒன்று, தனக்கு எதிர்ப்பட்டுத் தப்பிய, புலியைப் பின் தொடர்ந்து ஓடி, அதைத் தரையில் வீழ்த்தி, அந்தத் தரையே பிளக்கும்படி குத்திக்

கொன்றது. அதன் பிறகு அது செருக்கு மிகுந்து தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கருதாமல் தேக்குமரங்கள் நெருங்கிய சோலையில் சென்று தங்கியிருக்கும். நம் தலைவரும் நீண்ட அவ்வழிகளில் நடந்து போயுள்ளார். அதனால், நாம் பிரிவாற்றாமல் வருந்துகிறோம். நம் உடல் மெலிந்தது; வளைகள் கழன்றுவிட்டன.

"அத்தகைய நம் தலைவர் நம் தூதரின் சொல்லைக் கேட்டால், தாம் சென்ற இடத்தில், மோரிய மன்னனாகிய நந்தன் என்பவன் சேர்த்து வைத்த செல்வத்தையே பெற வாய்ப்புக் கிட்டினும் அங்குத் தங்கியிருக்க மாட்டார். (விரைந்து வருவார்.)

"ஆதலால், நம் தோளில் வளைசெறியப்பெறும். கூந்தல் சூழ்ந்த நம் நெற்றியில் உள்ள பசலையும் மறையும்."

கருத்து

மோரிய மன்னன் நந்தனின் முழுச்செல்வத்தையும் பெற வாய்ப்புக் கிட்டினும் நம் தலைவர் அங்குத் தங்கமாட்டார்; திரும்புவார்; வருந்தாதே.

விளக்கம்

"தலைவி! வாழி! நாம் அனுப்பிய தூதர்கள் தலைவரிடம் சென்றுள்ளனர். நீண்ட வழியில் சென்று, நம் வளை நெகிழச் செய்த தலைவர், நம் துன்பம் கேட்டால் பெருஞ்செல்வம் பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டினாலும் அங்கே தங்க மாட்டார்; திரும்புவார்; அதனால் நம் தோள் வளை செறியப்பெறும்; நெற்றியில் உள்ள பசலையும் மறைந்து விடும்; துன்புறாதே" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

சொற்பொருள்

1. தோளும் செற்றும் - தோள்வளையும் செறியப்பெறும்.
2. ஓதி - கூந்தல்; மாயும் - மறையும்.
3. வீங்குஇழை - செறிவாக அணியப்பெற்ற அணிகள்; சாஅய் - மெலிந்து; செல்லல் - துன்பம்.
4. படர் - துன்பம்.
5. நந்தன் - நந்தன் (என்பான் தொகுத்து வைத்த); வெறுக்கை - செல்வம்; எய்தினும் - பெற்றாலும்; அவண் - அங்கே.

6. தங்கலர் - தங்க மாட்டார்; வெல்கொடி - வெல்லும் கொடி.
7. துனை - விரைவு; கால் - காற்று; புனைதேர் - அழகு செய்யப்பெற்ற தேர்; கோசர் - இனம் ஒன்றைச் சார்ந்தவர்.
8. தொல் மூது ஆலம் - பழைய முதுமையான ஆலமரம்; அரும்பணை - அரிய கிளைகள்; பொதியில் - பொது இல் - அம்பலம், பொது மன்றம்.
9. கடிப்பு - குறுந்தடி; இகுத்தல் - அடித்தல்; இரங்க - ஒலிக்க.
10. தெம்முனை - பகைவரது போர்முனை; சிதைத்த - அழித்த; ஞான்றை - பொழுது; மோகூர் - ஓர் ஊர்.
11. பணியாமையின் - (அவ்வூர் மன்னன் பழையன்) பணியாமையால்; பகைதலை வந்த - அவனிடம் பகை மேற்கொண்ட.
12. மாகெழு தானை - குதிரைகள் பொருந்திய சேனை; வம்ப - புதியவர்களாகிய; மோரியர் - இனம் ஒன்றைச் சார்ந்தவர்.
13. நேமி - சக்கரம்; உருளிய - (தடையின்றி) உருளும்பொருட்டு; குறைத்த - உடைத்த.
14. அறைவாய் - மலை வழி; உம்பர் - அப்பால்.
15. அண்ணல் - பெருமை.
16. வாயுள் தப்பிய - வாயிலிருந்து தப்பிய; அருங்கேழ் - அரிய நிறம்; வயம் - வலிமை.
17. மா நிலம் - பெரிய நிலம்; நெளிய - குழி விழும்படி, நெளியும்படி; புகல் - மனச்செருக்கு.
18. காப்பு இல - பாதுகாப்பு இன்றி; வைகும் - தங்கியிருக்கும்; தேக்கு - தேக்கு மரம்; அமல் - செறிந்த, நெருங்கிய.
19. நிரம்பா நீள் இடை - நீண்ட தொலைவு நடந்தும் முடிவு பெறாத நீண்ட வழி.
20. அரம்போழ் - அரத்தால் அறுத்துச் செய்யப்பெற்ற; அவ்வளை - அழகிய வளையல்; நிலை - நிற்கும் நிலையினின்றும்; நெகிழ்த்தோர் - நெகிழும்படி (கழலும்படி) செய்தவர்.

தோழி கூற்று

அகநானூறு 213 **தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டச் சென்ற தலைவன் திரும்ப வாராததால் தலைவி வருந்திக் கொண்டிருந்தாள். அது கண்ட தோழி, 'அவர் அருளாளர்; விரைவில் மீண்டு வருவார்; அதுவரை நீ ஆற்றியிரு' என்று தலைவியிடம் வற்புறுத்திக் கூறியது.

வினைநவில் யானை விறல்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றுஅரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் அருவி வேங்கடத்து உம்பர்,
கொய்குழை அதிரல் வைகுபுலர் அலரி
சுரிஇரும் பித்தை சுரும்புபடச் சூடி,
இகல்முனைத் தரீஇய ஏறுடைப் பெருநிரை
நனைமுதிர் நறவின் நாள்பலி கொடுக்கும்
வால்நிணப் புகவின் வடுகர் தேஎத்து,
நிழற்கவின் இழந்த நீர்இல் நீள்இடை
அழல்அவிர் அருஞ்சுரம் நெடிய என்னாது,
அகறல் ஆய்ந்தனர் ஆயினும், பகல்செலப்
பல்கதிர் வாங்கிய படுசுடர் அமையத்துப்
பெருமரம் கொன்ற கால்புகு வியன்புனத்து,
எரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
வேய்ஒழுக்கு அன்ன, சாய்இறைப் பணைத்தோள்
பெருங்கவின் சிதைய நீங்கி, ஆன்றோர்
அரும்பெறல் உலகம் அமிழ்தொடு பெறினும்,
சென்றுதாம் நீடலோ இலரே– என்றும்
கலம்பெயக் கவிழ்ந்த கழல்தொடித் தடக்கை,
வலம்படு வென்றி வாய்வாள், சோழர்
இலங்குநீர்க் காவிரி இழிபுனல் வரித்த

அறல்என நெறிந்த கூந்தல்,
உறல்இன் சாயலொடு ஒன்றுதல் மறந்தே.

தெளிவுரை

"*தலைவி! நம் தலைவர் வேங்கட மலையைக் கடந்து சென்றுள்ளார். அம்மலை, போர்ப்பயிற்சி பெற்ற யானைகளைக்கொண்டு போர் புரியவல்ல தொண்டையர் எனும் இனமக்களுக்கு உரிமை கொண்டது. மேகங்கள் தவழும் அம்மலையின் உயர்ந்த உச்சியில் அருவிகள் கொட்டும். அதைக் கடந்து அப்பால் சென்றால், வடுகர் வாழும் நாடு புலப்படும். அவர்கள் காட்டுமல்லிகையின் இலைகளைக் கொய்துவிட்ட கொடியில், வைகறை நேரத்தில் மலரும் பூக்களை வண்டுகள் மொய்க்கும் படியாய்த் தம் தலையில் சூடிக் கொள்வர்; பகைவரை வென்று, காளைகளுடன் கூடிய பசுக் கூட்டத்தைக் கைப்பற்றுவதற்காகக் காலை நேரத்திலேயே தம் தெய்வத்துக்கு முதிர்ந்த கள்ளைப் பலியாகச் செலுத்துவர்; தம் உணவாகப் புலால் கலந்த சோற்றை உண்பர்.*

"*அவ்வடுகர் நாடு, மரங்களின் நிழலால் உண்டாகின்ற அழகையும் நீர்வளத்தையும் இழந்தது; நீண்ட இடத்தைக் கொண்ட தீப்பொறி பறக்கும் பாலைநில வழிகள் கடத்தற்கு அரியன என்று கருதாமல், தலைவர் நம்மைப் பிரிந்து போகத் துணிந்தார். ஆயினும், உன்னை மறப்பாரோ?*

"*இரவலர்க்கு அணிகலன்களை வழங்குவதற்காகக் கவிழ்ந்த கழலும் வளைகளையும், போர் விருப்பத்தால் என்றும் வாளையும் கொண்ட சோழர்களுக்கு உரிமையான காவிரியாற்றில் வெள்ளம் வடிந்த பிறகு, கருமணல் அடுக்கடுக்காய் வரிகளாய்ப் படிந்திருப்பது போன்று நெளிநெளியான கூந்தலைக் கொண்டவள் நீ. அடைவதற்கு இனிமை தரும் மென்மையான அக் கூந்தலில் பொருந்தியிருத்தலைத் தலைவர் மறந்திருப்பாரோ? ஒரு நாளும் மறவார்.*

"*பகல்பொழுது முடிவடைந்து சூரிய ஒளி மங்கிய அந்தி நேரத்தில், கொல்லிமலையில், மரங்களை வெட்டித்*

தள்ளியதால் அங்குக் காற்று நன்கு வீசுகின்ற அகன்ற அந்த இடத்தில் அழகிய இரத்தினங்கள் தீப்போன்ற ஒளியை வீசிக் கொண்டிருக்கும். சேர மன்னர்க்கு உரிய அம்மலையின் மேற்குப் பக்கச் சாரலில் மூங்கில்கள் அடர்ந்து நிற்கும். அம் மூங்கிற் கணுக்களுக்கு இடையே உள்ள நேரிய பகுதியை ஒத்துத் திரண்டு வளைந்த முன்கையை கொண்ட உன் பெரிய தோளின் பேரழகு கெடுமாறு பிரிந்து சென்ற தலைவர், பெறுதற்கரிய தேவர் உலகத்தில் கிட்டும் அமிழ்தத்தையே பெறுவதற்கு வாய்ப்பு அமையுமாயினும் அந்த இடத்தில் நீண்ட காலம் தங்கியிரார்" என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

கருத்து

விண்ணுலகில் இருக்கும் அமிழ்தம் கிட்டுவதற்கு வாய்ப்பு அமைந்தாலும், உன் கூந்தலைத் தடவிக் கொண்டு தோளினை அணையும் பேற்றினை மறந்து தலைவர் சென்ற இடத்திலே தங்க மாட்டார்; விரைந்து வருவார்.

விளக்கம்

"தலைவி! நம் தலைவர் வேங்கட மலைக்கு அப்பால் உள்ள வடுகர் நாட்டு அரிய வழிகளைக் கடந்து செல்லத் துணிந்தார். ஆயினும், உன் அறல் போன்ற கூந்தலின் மென்மையோடு ஒன்றுதலை மறந்து, உன் பருத்த தோளின் பேரழகு கெடப் பிரிந்து சென்று, பெறுதற்கரிய விண்ணுலகத் தேவர் அருந்தும் அமிழ்தத்தையே பெறும் வாய்ப்புக் கிட்டினாலும், அங்கே தாமதித்து இருந்துவிட மாட்டார்; விரைவில் வருவார்" என்று கூறித் தோழி, தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

குறிப்பு

1. தொண்டையர் - தொண்டை நாட்டார். வேங்கடப் பகுதிக்குத் தொண்டை நாடு என்னும் பெயர் இருந்ததை அறிய இயல்கிறது.

2. சோழ மன்னர், வள்ளல் தன்மை மிக்கவர். எப்பொழுதும் பெரிய அணிகலன்களை இரவலர்க்கு வழங்குவதாலே அவர்தம் கை, கீழ்நோக்கிக் கழன்று விழும் தொடியுடன் விளங்கியது.

சொற்பொருள்

1. வினைநவில் - போர்த்தொழில் பயின்ற; விறல் - வலிமை, வெற்றி; போர்த்தொண்டையர் - போர்த்தொழில் பயின்ற தொண்டை நாட்டுப் பழங்குடியினர்.
2. இனமழை - கூட்டமான மேகங்கள்; ஏற்றுஅரு - ஏறுதற்கரிய; நெடுங்கோடு - உயர்ந்த உச்சி.
3. ஓங்கு - உயர்ந்து தோன்றும்; வேங்கடம் - வேங்கட மலை; உம்பர் - அப்பால்.
4. கொய் - கொய்யப்பெற்ற; குழை - தழை; அதிரல் - காட்டுமல்லிகை; வைகுபுலர் - வைகறை; அலரி - மலர்ந்த பூ.
5. சுரிஇரும் பித்தை - சுருண்ட கரிய மயிர்; சுரும்புபட - வண்டுகள் மொய்க்க.
6. இகல்முனை - பகைவர் போர்முனை; தரீஇய - (வென்று) தந்த; ஏறு உடை - காளையைக் கொண்ட; பெரு நிரை - பெரிய பசுக்கூட்டம்.
7. முதிர் - முதிர்ந்த; நறவு - கள்; நாள்பலி கொடுக்கும் - விடியற்காலத்தே பலியாய்ச் செலுத்தும்.
8. வால் - வெள்ளிய; நிணப்புகவு - நிணச்சோறு (புகவு - உணவு); வடுகர் - வடுகர் இனத்தார்; தேஎம் - தேயம்.
9. கவின் - அழகு; நீர்இல் - நீர் இல்லாத; நீள்இடை - நீண்ட வழி.
10. அழல்அவிர் - தீப்பொறி பறக்கும்; அருஞ்சுரம் - கடத்தற்கரிய காடுகள்; நெடிய - நீண்டன.
11. அகறல் - பிரிந்து செல்லுதல்; ஆய்ந்தனர் - துணிந்தனர்; பகல் செல - பகற்பொழுது நீங்க.
12. பல்கதிர் வாங்கிய - ஞாயிறு தனது பல கதிர்களையும் சுருக்கிய; படுசுடர் - மறையும் ஞாயிறு; அமையம் - (சுடர் மழுங்கிய) பொழுது.
13. பெருமரம் - பெரிய மரம்; கொன்ற - வெட்டித் தள்ளியதால்; கால்புகு - காற்றுப் புகும்; வியன்புனம் - பெரிய கொல்லை.
14. எரிமருள் - தீப் போன்ற; கதிர - கதிர்களைக் கொண்ட; திருமணி - அழகிய மணி; இமைக்கும் - மிளிரும்.
15. வெல்போர் - வெல்லும் போரினைக் கொண்ட; வானவன் - சேரன்; கொல்லி - கொல்லிமலை; குடவரை - மேற்குப் பக்கம்.
16. வேய் ஒழுக்கு அன்ன - மூங்கிலின் நேரிய பகுதியை ஒத்த; சாய்இறை - வளைந்த முன்கை; பணைத்தோள் - பருத்த தோள்.

17. கவின் - அழகு; ஆன்றோர் - தேவர்.
18. அரும்பெறல் - பெறுதற்கரிய; உலகம் - தேவருலகம்.
19. தாம் நீடலோ இலர் - தாம் அங்குக் காலந்தாழ்த்திரார்; என்றும் - எப்பொழுதும்.
20. கலம்பெய - அணிகளைப் பெய்வதற்கு; கவிழ்ந்த - கவிழ்ந்துள்ள; கழல் தொடி - கழலும் தொடியினை (அணிந்த); தடக்கை - பெரிய கை.
21. வலம்படு வென்றி - வலிமையால் எய்திய வெற்றி பொருந்திய; வாய்வாள் - தப்பாத வாள்.
22. இலங்குதல் - விளங்குதல்; இழிபுனல் - வடிந்த நீர், வழியும் வெள்ளம்; வரித்த - வரிவரியாய்ச் செய்திட்ட.
23. அறல் - கருமணல்; என - போன்று; நெறிந்த - நெளிவான.
24. உறல்இன் சாயல் - அடைவதற்கு இனிதான மென்மை; ஒன்றுதல் - பொருந்துதல்.

வழிக்கொடுமை நினைந்து வருந்துகிறேன்.

தலைவி கூற்று

நற்றிணை 240 **நப்பாலத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிவுத் துன்பம் தலைவியை வாட்டியது. தலைவன் சென்ற பாலை வழியின் கொடுமையை எண்ணினாள். அதனால் அவள் அடைந்த வருத்தத்தை உருக்கத்துடன் கூறியது.

ஐதே கம்மஇவ் வுலகுபடைத் தோனே,
வையோர் வால்எயிற்று ஒள்நுதற் குறுமகள்!
கைகவர் முயக்கம் மெய்யுறத் திருகி
ஏங்குயிர்ப் பட்ட வீங்குமுலை ஆகம்
துயிலிடைப் படூஉம் தன்மையது ஆயினும்
வெயில்வெய் துற்ற பரல்அவல் ஒதுக்கில்

கணிச்சியிற் குழித்த கூவல் நண்ணி
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை இனநிரை வௌவும்
கானந் திண்ணிய மலைபோன் றிசினே!

தெளிவுரை

கூர்மையினையும், அழகினையும், வெண்மையினையும் கொண்ட பற்களுடன் ஒளி பொருந்திய நெற்றியையும் கொண்டவளே எனப் பாராட்டி என்னைக் காதலர் தம் கையால் அணைத்துத் தழுவி, மெய்யொடு மெய் பொருந்திட முயங்கியிருப்பார். அம்முயக்கத்திலிருந்து சிறிது விலகினாலும் அதற்குப் பொறாது ஏக்கப் பெருமூச்சு விடுகின்ற பருத்த கொங்கைகளைக் கொண்டது, என் மார்பகம். அஃது இனித் தனித்துத் துயில இயலாது பெருந்துன்பத்தை அடையும்.

சூரிய வெப்பத்தால் கொதிப்புற்ற பரல் கற்களைக் கொண்ட பள்ளங்களின் ஒரு பக்கமாய்க் கணிச்சியால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றனுக்கு அருகே பசுக்கூட்டத்தைக் காக்கும் ஆயர் சென்று, சிறுகுழியைத் தோண்டி, அதில் நீரிறைத்து, ஊற்றிப் பசுக்கள் குடிப்பதற்காக அக்குழியில் உள்ள நீரை, நீர் கிட்டாது வாடும் யானையினம் குடித்துச் சென்றுவிடும். இத்தகைய வறட்சியைக் கொண்ட மலைபோன்ற கடினமான காட்டு வழியிலே காதலர் சென்றிருப்பதை நினைக்கும்போது, நான் தூங்காமல் படும் அவதியைக் காட்டிலும் அவர் படும் துயரம் பெரிதெனப் பெருங்கலக்கம் கொள்கிறேன். இக்காட்டுவழியில் இவ்வுலகைப் படைத்தவன் மெல்ல நடந்து துன்பப்படட்டும். (அப்போதுதான் அவன் படைப்பின் கொடுமையை அவனே அறிவான்.)

கருத்து

கணவன் சென்றுள்ள காட்டுவழியின் கொடுமையை, அவ்வழியைப் படைத்த கடவுள், தான் அதிலே நடந்து பார்த்தால்தான் அறிவான்.

விளக்கம்

"தலைவன் தலைவியை அணைத்து மகிழ்ந்து அவள் மார்பிடைத் துயில்வதை விடுத்துப் பிரிந்துவிட்டான்; தலைவி

பெருந்துயருற்றாள். தன் காதலன் சென்ற கானகத்தின் வெயிலின் கொடுமையையும், பரல் நிறைந்த வழியையும், பசு மாடுகள் பருகுவதற்காக அவற்றை மேய்ப்போர் தோண்டி அதில் நிரப்பிய நீரை, அம்மாடுகள் குடிப்பதற்கில்லாதவாறு யானையினம் குடித்துச் சென்றுவிடும் கொடுமையையும் எண்ணித் தன் துயரினும் அவன் படும் துயரம் பெரிதெனக் கலங்குகிறாள். உலகு படைத்தவன்தானே இக்காட்டினையும் படைத்தான்! அவனே இங்கு வந்து, மெல்ல நடந்து துன்புறட்டும். அப்போதாவது தன் படைப்பின் குறைபாட்டினை அவன் உணர்வான்" என்று தலைவி கூறுகிறாள்.

இறைச்சி

ஆன்வழிப் படுநர்தோண்டிய பத்தல் யானை இனநிரை வெளவும் - ஆநிரை பருகுவதற்காகக் குழியில் நிரப்பப்பட்ட நீரை யானை குடித்துவிடும் என்னும் தொடர் மூலம், தலைவன் கொள்ள வேண்டிய தலைவியின் நலனையெல்லாம் பசலை உண்டொழிக்கும் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. ஐது - மெல்ல; ஏக - நடந்து செல்லட்டும்.
2. வை - கூரிய; ஏர் - அழகு; வால் - வெண்மை; எயிறு - பல்; ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
3. கைகவர் - கையால் அணைத்தல்; மெய்யுறத் திருகி - மெய்யொடு மெய் நன்கு பொருந்துதலால்.
4. ஏங்குயிர்ப் பட்ட - களித்து ஏங்கிப் பெருமூச்செறிய; ஆகம் - மார்பகம்.
5. துயிலிடைப் படூஉம் - தனித்துத் துயில இயலாது பெருந்துன்பம் அடையும்.
6. பரல் - பரல் கற்கள்; அவல் - பள்ளம்.
7. கணிச்சி - குழி தோண்டப் பயன்படும் கருவி, குந்தாலி; கூவல் - கிணறு.
8. ஆன் - பசு; வழிப்படுநர் - காப்பவராய ஆயர்; பத்தல் - பள்ளம்.
9. வெளவும் - கௌவிக்கொள்ளும், குடித்துவிடும்.
10. திண்ணிய - கடினமான.

தலைவி கூற்று

குறுந்தொகை 12 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறியது. (ஆற்றாள் - பிரிவைத் தாங்க மாட்டாள்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதை ஆற்றாது வருந்தியிருக்கிறாள் தலைவி என்று கவலையுற்ற தோழி கேட்கும்படி, 'தலைவன் சென்ற வழியின் கொடுமை நினைந்தே வருந்தியிருக்கிறேன். அதை உணராமல் இவ்வூர் ஏதேதோ கூறுகின்றது' என்று தலைவி சொல்லியது.

எறும்பி அளையின் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடுவில் எயினர், பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப,அவர் சென்ற ஆறே;
அதுமற்று அவலம் கொள்ளாது,
நொதுமல் கழறும்இவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

"தலைவன் சென்ற வழி எறும்புக்குழிகளைப் போன்ற குறுகிய பல சுனைகளைக் கொண்ட பாலைவழியாகும். அங்குள்ள பாறைகள் கொல்லன் உலைக்களத்திலுள்ள பட்டடைக்கல் போல எப்போதும் வெப்பமாயிருக்கும். அப்பாறைகளின் மேல் ஏறி நின்று கொடிய வில்லையுடைய வேடர்கள் தங்கள் அம்புகளைத் தீட்டிக் கொண்டிருப்பர்; அவ்வழியோ பல பக்கங்களிலும் பிரிந்து செல்லும் தன்மையது. அவ்வழியைப் பற்றிச் சிறிதும் வருத்தம் கொள்ளாது இவ்வாரவாரம் மிக்க ஊர் எப்பொழுதும் தொடர்பில்லாமல் ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கிறது; என்னையும் பிழையாக இடித்துரைக்கிறது.

கருத்து

நான் பிரிவால் வருந்தவில்லை; அவர் சென்ற வழியின் கொடுமையை நினைந்தே ஆற்ற இயலாதவளாகின்றேன்.

குறிப்பு

'அவர் சென்ற வழியில் கிட்டும் உணவோ, எறும்பு திரட்டி வைத்திருக்கும் புல்லரிசி; நீரோ, வற்றிய சுனையில் உள்ள சிறிதளவு நீரே; தங்குமிடங்களோ, உலைக்களப் பட்டடைக்கல் அன்ன பாறைகள்; அங்குள்ள வேடர்களோ அம்புகளைத் தீட்டியபடியிருப்பர்' எனக் காட்டுவழியின் கொடுமையைக் கூறுகிறாள், தலைவி.

சொற்பொருள்

1. எறும்பி - எறும்பு; அளை - குழி; குறும் - குறுகிய; சுனைய - சுனையைக் கொண்டது.
2. உலைக்கல் - கொல்லன் உளைகளப் பட்டடைக் கல்.
3. கொடு - வளைந்த; எயினர் - வேடர்கள்; பகழி - அம்பு; மாய்க்கும் - தேய்க்கும்.
4. கவலைத்து - பல பக்கங்களிலும் பிரிந்து செல்வது; ஆறு - வழி.
5. அவலம் - கவலை.
6. நொதுமல் - தொடர்பில்லாதது; கழறும் - இடித்துரைக்கும்; அழுங்கல் - ஆரவாரம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 39 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

'பிரிவிடை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்கு, 'யாங்ஙனம் ஆற்றுவேன்?' எனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவால் வருந்தியிருந்த தலைவியைத் தோழி, 'ஆற்றியிருக்க வேண்டும்' என்று கூற, தலைவி தன் நிலையைத் தோழியிடம் கூறியது.

வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென,
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்பநம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே.

தெளிவுரை

"தோழி! நம் தலைவர் என் கொங்கைகளைத் தழுவி இன்புற்றுத் துயில வேண்டியவர். அதனை வெறுத்துப் பொருளீட்டச் சென்றுள்ளார். அவர் சென்ற வழி கடுமை யானது. அங்கு வெப்பம்மிக்க வலிமையான காற்று, மரக்கிளை களிடையே மிகவும் வேகமாய் வீசும். அதனால் வாகை மரத்தின் வற்றல்களாகிய முற்றிய காய்கள் ஆரவாரிக்கும். மேலும், மலைகளைக் கொண்ட கடத்தற்கரிய பாலைவழி அது என்றும் அறிந்தோர் கூறுவர். அதனைக் கேட்டே ஆற்றமுடியாதவளாய் இருக்கின்றேன்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

தலைவர் சென்ற வழியின் கடுமையை நினைந்தே வருந்துகின்றேன்.

குறிப்பு

'முலையிடைத் துயிலுதலை வெறுத்தனர்' என்றது, பொருளினை விரும்பினவர் என்னும் குறிப்பினைக் கொண்டது.

சொற்பொருள்

1. வெம் திறல் - வெப்பம் மிக்க வலிமை; கடுவளி - வேகமாய் வீசும் காற்று; பொங்கர் - மரக்கிளைகள்; போந்தென - உள்ளே புகுந்து வீச.
2. நெற்று - முற்றிய காய்; உழிஞ்சில் - வாகை மரம்; வற்றல் - வற்றிய காய்; ஆர்க்கும் - ஒலிக்கும்.
4. முனிநர் - வெறுப்புற்றவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 281 **குடவாயிற் கீரத்தன்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு, தோழி வற்புறுப்பாட்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தி உடலில் வேறுபாடு கொண்டிருந்த தலைவியை, 'ஆற்றியிருத்தலே உனக்குக் கடமையாகும்' என்று வற்புறுத்திய தோழியிடம் தலைவி தன் கவலை மிகுதியைக் கூறியது.

வெண்மணற் பொதுளிய பைங்கால் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்தோட்டு,
அத்த வேம்பின் அமலை வான்பூச்
சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி,
குன்றுதலை மணந்த கானம்
சென்றனர் கொல்லோ? சேயிழை! நமரே.

தெளிவுரை

"உயர்ந்த அணிகலன்களைக் கொண்ட தோழியே! நம் தலைவர் சென்ற வழியில் வெண்மணற்பாங்கில், தழைத்திருப் பவையும், பசுமையான அடிமரத்தையும், கருக்கையும் கொண் டவையுமான பனைமரங்கள் உள்ளன. அவற்றின் திரட்சியான உச்சியிலே உள்ள வெண்மையான குருத்தோலையில், பாலை நிலத்து வேம்பின் நெருக்கமான வெண் பூக்களைக் கட்டி, அதனைச் சுருள் பொருந்திய மயிரைக் கொண்ட தன் தலையுச்சியில் (குடுமியில்) விளக்கமாய்ச் சூட்டிக்கொண்டு, மலைகள் பொருந்திய காட்டுவழியைக் கடந்து நம் தலைவர் சென்று விட்டாரே! (நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?)" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

அவர் பாலைநில வழியை ஊறின்றிக் கடந்தாரோ என நினைத்தே வருந்தியுள்ளேன்.

குறிப்பு

வேம்பு பூக்கின்ற இளவேனிற்காலத்தில் அவர் பிரிந்தார். பிரிதற்கு உரியதல்லாத இக்காலத்தே தலைவர் பிரிந்து சென்றுள்ளாரே என்றெண்ணித் தலைவி கலங்குகிறாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. பொதுளிய - தழைத்த; கால் - அடிமரம்; கருக்கு - முள்ளை ஓரத்தில் கொண்டிருக்கும் பனைமட்டை.
2. கொம்மை - திரட்சி; போந்தை - பனைமரம்; குடுமி - உச்சி; தோடு - ஓலை.
3. அத்தம் - பாலை வழி; அமலை - நெருக்கம், திரட்சி; வான் பூ - வெண்ணிறப்பூ.
4. சுரிஆர் - சுருள் நிறைந்த; உளைத்தலை - மயிரைக் கொண்ட தலை; பொலிய - விளக்கமாய், அழகாய்.
5. குன்றுதலை மணந்த - மலைகளை இடையிடையே கொண்ட.
6. சே இழை - உயர்ந்த அணிகலன்; நமர் - நம்மவர், தலைவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 283 — **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்தவழி ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு, 'அவர் பிரிய ஆற்றேனாயினேன் அல்லேன், அவர் போயின கானத்துத் தன்மை நினைந்து வேறுபட்டேன்' என்று கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டச் சென்ற காலத்தில் தலைவி வருந்தி யிருப்பாளே என வருத்தமுற்றிருந்த தோழியை நோக்கி, 'அவர் பிரிவு கருதி நான் வருந்தவில்லை; அவர் சென்ற பாலைநில வழியின் கொடுமை எண்ணியே அஞ்சினேன்' என்று தலைவி கூறியது.

'உள்ளது சிதைப்போர்' உளர்எனப் படாஅர்;
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி! என்றும்
கூற்றத்து அன்ன கொலைவேல் மறவர்
ஆற்றுஇருந்து அல்கி, வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீர்இல் ஆறே.

தெளிவுரை

"'முன்னோர் தேடி வைத்துச் சென்ற செல்வத்தை அழிப்போர், செல்வத்தைக் கொண்டவர் என்று கூறப்பட மாட்டார். தம் முயற்சியால் பொருள் தேடாது வறியவராய் வாழ்வது பிச்சையெடுத்தலைக் காட்டிலும் இழிவு வாய்ந்தது.' இவ்வாறு சான்றோர் சொல்லிய உறுதிச் சொற்களை நமக்குத் தெளிவாய் எடுத்துச் சொல்லிய பிறகே தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார். ஆதலால், அவர் சென்றதற்காக நான் வருந்தவில்லை. ஆனால், அவர் சென்ற வழியிலே கூற்றுவனைப் போன்ற கொலைத்தொழில் மிக்க நீண்ட வேலினையுடைய மறவர் தங்கியிருப்பர். அவர்கள் வழிப்போக்கரைக் கொல்வதால் உண்டாகும் மிக்க முடைநாற்றம் கொண்ட புலாலைத் தின்பதற்காகப் பருந்துகள் எதிர்பார்த்துக் காத்திருக்கும். அத்தகைய நெடிய பழைய இடங்களைக் கொண்ட, நீரில்லா வழிகளிலே தலைவர் சென்றுள்ளார். அதற்காகவே நான் வருந்துகிறேன்" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

ஆறலை கள்வர்கள் திரியும் நீரற்ற காட்டுவழியில் சென்றுள்ளாரே என்றே வருந்துகிறேன்.

விளக்கம்

"தலைவர் பொருள்வயிற்பிரியும் போது அவர் சொல்லிச் சென்ற ஆன்றோர் தெளிவுரையை மனத்தினில் கொண்டு ஆற்றியிருப்பேன். ஆனால், அவர், வழிப்போக்கரைக் கொல்லும் மறவர்கள் மிக்கிருக்கும் நீரற்ற வழியிலே சென்றுகொண்டிருப்

பதை நினைக்குந்தோறும் ஆற்றாமை மிகுகின்றது" எனத் தலைவி வருந்திக் கூறுகின்றாள்.

குறிப்பு

தன் முயற்சியால் சேர்த்த செல்வத்தைக்கொண்டே இல்லறம் நடத்த வேண்டும்; தன் முயற்சியின்றி முன்னோர் தேடி வைத்த பொருளைக் கொண்டு வாழ்வதைக் காட்டிலும், பிச்சை ஏற்று வாழ்தல் சிறந்தது.

சொற்பொருள்

1. உள்ளது - தன்னிடம் உள்ள முன்னோர் தேடிய செல்வம்; சிதைப்போர் - அழிப்போர்; உளர் - செல்வம் உள்ளவர்.
2. இரத்தல் - பிச்சை ஏற்ற.
3. வன்மை - உறுதிச்சொல்; தெளியக் காட்டி - தெளிவாய் எடுத்துச் சொல்லி.
5. கூற்றம் - கூற்றுவன், எமன்; மறவர் - ஆறலை கள்வர், வழிப்பறி செய்வோர்.
6. அல்கி - தங்கி; வழங்குநர் - வழியிற்செல்வோர்; செகுத்த - கொன்ற.
7. படுமுடை - மிக்க முடைநாற்றம் கொண்ட.
8. நெடுமூது இடைய - நீண்ட பழைய வழி.

சுர வெம்மை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 320 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிச் சுரத்து வெம்மை நினைந்து, தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து காட்டுவழியில் சென்ற பின்னர், அக் காட்டின் கொடுமை நினைந்து தலைவி சொல்லியது.

முள்அரை இலவத்து ஒள்இணர் வான்பூ
முழங்குஅழல் அசைவளி எடுப்ப, வானத்து
உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும்
கவலை அருஞ்சுரம் போயினர்,
தவல்இல் அருநோய் தலைதந் தோரே!

தெளிவுரை

“முள்கள் பொருந்திய அடிமரத்தைக் கொண்ட இலவ மரம் வெண்மையான பெரிய பூக்களைக் கொத்தாகக் கொண்டுள்ளது. ஓசையோடு முழங்கும் காட்டுத்தீயினைக் காற்று மோதி அலைத்து வீசும். அதனால் இடி ஏற்படும்போது உண்டாகும் நெருப்புப் போல இலவ மரத்தின் பூக்கள் உதிரும். கவர்த்த வழிகள் பல கொண்ட இத்தகைய காட்டைக் கடந்து சென்ற நம் காதலர், நமக்கு நீங்குதற்கு அரிய பிரிவுத் துன்பத்தினைத் தந்துவிட்டார்.”

கருத்து

வெப்பமிக்க பாலை வழியைத் தலைவர் தீதின்றிக் கடப்பாரா?

விளக்கம்

‘பொருளீட்டப் போன தலைவர் பிரிவினை ஆற்றியிருத்தல் வேண்டும். நீ அவ்வாறு இல்லாது துன்பப்படுவது ஏன்?’ என்று தோழி தலைவியிடம் கேட்டாள். அதற்கு அவள், ‘நான் வருந்துவது அவர் பிரிந்ததற்காக அன்று; வெப்ப மிக்க பாலைக் கொடுநெறியைத் தலைவர் எவ்வாறு கடப்பார் என்று நினைந்தே வருந்துகின்றேன்’ என்று கூறுகின்றாள்.

சொற்பொருள்

1. முள் அரை - முள் பொருந்திய அடிமரம்; இலவம் - ஒரு வகை மரம்; ஒள் இணர் - ஒளி விடும் பூங்கொத்து; வான்பூ - வெண்மையான பூ.
2. முழங்கு அழல் - முழங்கும் தீ; அசைவளி - அசைக்கும் காற்று; எடுப்ப - எடுத்து வீச.
3. உருமுப்படு - இடிக்கும்போது தோன்றுகின்ற; கனலின் - நெருப்பைப் போல; இரு நிலம் - பெரிய இடம்; உறைக்கும் - உதிரும்.

4. கவலை - கவர்த்த வழி; அருஞ்சுரம் - கொடிய பாலைநில வழி.
5. தவல் இல் - நீங்கவியலாத; அருநோய் - கடுமையான பிரிவுத்துயரம்; தலை தந்தோர் - தந்துவிட்டவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 319 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழி அவன் உணர்த்தாது பிரிந்தமை கூறிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் எவரிடமும் சொல்லாமலேயே பிரிந்து சென்றுவிட்டான். அவன் பிரிந்து சென்றதைத் தோழி வருத்தத்தோடு சொல்லக் கேட்ட தலைவி சொல்லியது.

கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரமுளி கானம்
இறந்தன ரோ,நம் காதலர்
மறந்தன ரோ,தில் மறவா நம்மே.

தெளிவுரை

"தலைவர் சென்ற பாலைவழி, கண்களைத் தாக்கும் கதிரொளி மிகுந்த இடங்களைக் கொண்டது. குவிந்த மண்மேடு களையும் உலர்ந்த மரங்களையும் கொண்ட கருகிய காடுகளால் ஆனது. அவற்றை நம் காதலர் கடந்து சென்றார். அவரை மறவாத நம்மை அவர் மறந்து சென்றார்."

கருத்து

உலர்ந்து கருகிய காட்டினைத் தலைவர் கடந்து செல்ல வேண்டியுள்ளதே.

சொற்பொருள்

1. கண் பொர - கண்களைத் தாக்க; கதிர் தெறு - சூரியன் சுடுகின்ற; வைப்பு - இடம்.

2. மண்புரை - மண்மேடு; மரம் முளி கானம் - மரங்களால் ஆன உலர்ந்த காடு.
3. இறந்தனர் - கடந்து சென்றனர்.
4. மறந்தனரோ மறவா நம்மே - மறவாத நம்மைக் காதலர் மறந்தனரோ!

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 335 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் சென்ற சுரத்தினிடத்துக் கொடுமை பிறர் கூறக் கேட்ட தலைமகள் ஆற்றாது தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற காட்டுவழியின் கொடுமையைப் பிறர் கூறக் கேட்ட தலைவி, அதனைப் பொறுக்க மாட்டாதவளாய்த் தோழியிடம் சொல்லியது.

அம்மா வாழி தோழி! நம்வயின்
நெய்த்தோர் அன்ன செவிய எருவை
கற்புடை மருங்கிற் கடுமுடை பார்க்கும்
காடுநனி கடிய என்ப;
நீடியிவண் வருநர் சென்ற ஆறே!

தெளிவுரை

"தோழியே கேள்! கழுகுகள், குருதி போன்ற சிவந்த காதுகளைக் கொண்ட வழிப்பறி செய்வோரால் கொல்லப்பட்டோரின் உடல் துண்டங்களைக் கற்களிடையே எதிர்பார்த்துக் காத்திருக்கும். தலைவன் சென்றுள்ள அக்காடு அத்தகைய அஞ்சத்தக்க காட்சியினைக் கொண்டது என்பர். அவ்வழியிலே சென்றுள்ள நம் தலைவர் விரைவாய்த் திரும்பி வாராது காலம் நீட்டிப்பதால் என் நெஞ்சு வருந்துகின்றது."

கருத்து

காட்டுவழியைத் தலைவன் கடக்க வேண்டியுள்ளதே என்று நெஞ்சம் துடிதுடித்து அல்லற்படுகின்றது.

சொற்பொருள்

1. நம்வயின் - நம்மிடத்தில்.
2. நெய்த்தோர் - குருதி; செவிய எருவை - செவியைக் கொண்ட கழுகு.
3. கல்புடை மருங்கு - கற்களின் பக்கத்தில்; கடுமுடை - மிகுந்த நாற்றம் கொண்ட ஊன்துண்டம்; பார்க்கும் - எதிர்பார்த்திருக்கும்.
4. காடு நனி கடிய - காடு மிகவும் கொடிய நிகழ்வினைக் கொண்டது.
5. நீடி இவண் வருநர் - காலந்தாழ்த்தி இங்கே திரும்பி வரும் தலைவர்.

தலைவி கூற்று

அகநானூறு 247 மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவனின் பிரிவினை ஆற்றாத தலைவியின் உடல் மெலிவுற்றது. அதைக் கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி, ‘நம் தலைவர் நம்மைவிடப் பொருளை மிகுதியாய் விரும்புவாராயின் நம்மால் என்ன செய்ய இயலும்?’ என்று வருந்திக் கூறியது.

மண்ணா முத்தம் ஒழுக்கிய வனமுலை
நல்மாண் ஆகம் புலம்பத் துறந்தோர்
அருள்இலர்– வாழி, தோழி!– பொருள்புரிந்து,
இருங்கிளை எண்கின் அழல்வாய் ஏற்றை
கருங்கோட்டு இருப்பை வெண்பூ முனையின்,
பெருஞ்செம் புற்றின் இருந்தலை இடக்கும்

அரிய கானம் என்னார், பகைபட
முனைபாழ் பட்ட ஆங்கண், ஆள்பார்த்துக்
கொலைவல் யானை சுரம்கடி கொள்ளும்
ஊறுபடு கவலைய ஆறுபல நீந்தி,
படுமுடை நசைஇய பறைநெடுங் கழுத்தின்
பாறுகிளை சேக்கும் சேண்சிமைக்
கோடுஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தோழி! நம் தலைவர் பொருளை ஈட்டிவர அச்சம் தரும் காட்டு வழியில் சென்றுள்ளார். அக்காட்டில் அழல் போன்ற வெம்மை கொண்ட வாயினையும் பெருஞ்சுற்றத்தினையும் கொண்ட ஆண்கரடி, கருமை நிறக் கிளைகளைக் கொண்ட இருப்பை மரத்தின் வெண்ணிறப் பூக்களை உண்ணும். அதை வெறுக்குமாயின் புற்றாஞ்சோற்றுக்காகப் பெரிய செம்மண் புற்றின் உச்சியைப் பெயர்த்தெடுக்கும்.

மலைகளில் மறவர்கள் மாறுகொண்டு போர் செய்தலால் சிற்றூர்கள் பாழ்பட்டிருக்கும். கொல்லும் தன்மையினைக் கொண்ட யானை, வழி வருவோரின் வருகையை எதிர்நோக்கிக் காட்டுவழியில் காத்து நிற்கும். இத்தகைய இடையூறுகள் மிக்க, பிரிவுபட்டுள்ள வழிகள் பலவற்றைக் கொண்ட காட்டுவழியினை அவர் கடந்து சென்றுள்ளார்.

நம் மார்பகம் கண்ணீர்த்துளிகளால் நனையுமாறு வருந்தும் நம்மைப் பிரிந்து சென்றுள்ள தலைவர் நம்மிடம் அருளில்லாத வரே! அதனால், வருந்தி என்ன பயன்?"

கருத்து

நம்மீது அருளில்லாது, கொடுமையான காட்சிகளைக் கொண்ட வழிகள் பல கடந்து தலைவர் பொருளீட்டச் சென்றுள்ளார்.

விளக்கம்

"தோழி! செலற்கரியது காடு எனக் கருதாதவராய், பொருளை விரும்பி இடையூறுகள் மிகுந்த வழிகள் பலவற்றையும் மலை

உச்சியையும் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார். என் மார்பகம் தனிமையுற்று இருக்கப் பிரிந்து சென்றுள்ள அவர் அருள் இல்லாதவரே!" எனக் கூறித் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. மண்ணா முத்தம் - (கழுவப்படாத முத்து) கண்ணீர்; ஒழுக்கிய - ஒழுக விடப்பெற்ற.
2. ஆகம் - மார்பு; புலம்ப - தனிமையுற.
3. பொருள்புரிந்து - பொருளை விரும்பி.
4. இருங்கிளை - பெருஞ்சுற்றம்; எண்கு - கரடி; அழல்வாய் - அழல் போலும் வெம்மை கொண்ட வாய்; ஏற்றை - ஆண்.
5. கோடு - கிளை; இருப்பை - ஒரு வகை மரம்; முனையின் - வெறுத்தால்.
6. செம்புற்று - செந்நிறம் கொண்ட புற்று; இருந்தலை - உயரமான உச்சி; இடக்கும் - பெயர்க்கும், தோண்டும்.
7. பகைபட - மாறு கொண்டு போரிட.
8. முனை - பகைப்புலம், பகைவர் இடம்.
9. சுரம் - பாலை வழி; கடி கொள்ளும் - காத்து இருக்கும், விரைந்து செல்லும்.
10. ஊறு - துன்பம்; கவலைய - பிரிவுபட்ட வழிகளைக் கொண்ட; ஆறு - வழி; நீந்தி - கடந்து.
11. படுமுடை - புலால் நாற்றம்; நசைஇய - விரும்பி; பறை - பறத்தலைக் கொண்ட.
12. பாறு - பருந்து; கிளை - மரக்கிளை; சேக்கும் - தங்கியிருக்கும்; சேண்சிமை - உயர்ந்த சிகரம்.
13. கோடு - மலை; பிறங்கல் மலை - பக்க மலை; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

அகநானூறு 1 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

காதலன் பிரிந்து சென்றதனால் ஆற்றாமை மிகப்பெற்ற தலைவி, தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறியது.

'வண்டுபடத் ததைந்த கண்ணி, ஒண்கழல்,
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி,
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்,
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கல்போல் பிரியலம்' என்ற சொல்தாம்
மறந்தனர் கொல்லோ தோழி! சிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழ, சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக,
அழல்போல் வெங்கதிர் பைதுஅறத் தெறுதலின்,
நிழல்தேய்ந்து உலறிய மரத்த; அறைகாய்பு,
அறுநீர்ப் பைஞ்சுனை ஆம்அறப் புலர்தலின்,
உகுநெல் பொரியும் வெம்மைய; யாவரும்
வழங்குநர் இன்மையின் வௌவுநர் மடிய,
சுரம்புல் லென்ற ஆற்ற; அலங்குசினை
நார்இல் முருங்கை நவிரல் வான்பூச்
சூரல்அம் கடுவளி எடுப்ப, ஆருற்று,
உடைதிரைப் பிதிர்வின் பொங்கிமுன்
கடல்போல் தோன்றல காடுஇறந் தோரே?

தெளிவுரை

"*ஆவி என்பான் வண்டுகள் மொய்க்கும் தலைமாலை அணிந்தவன்; காலில் ஒள்ளிய வீரக்கழல் அணிந்தவன்; அஞ்சத்தக்க குதிரைகளையுடைய மழவரை வென்றவன்; முருகக் கடவுளைப்*

போன்ற போர் வெற்றி கொண்டவன். அவனுடைய பொதினி மலையில் அறுத்துத் திருத்தப்பட்ட கொம்புகளைக் கொண்ட யானைகள் மிகுதியாய் உள்ளன. அப்பொதினி மலைச்சாரலில், 'சாணைக்கல் செய்வோன் அரக்கொடு சேர்த்தியற்றிய கல்லைப்போல உறுதியாய்ப் பிரியாதிருப்போம் என்று தலைவர் முன்பு சொன்ன சொல்லை மறந்து விட்டாரோ?'

"மூங்கில் போலும் பருத்த என் தோள் நெகிழும்படியாய் என்னைப் பிரிந்து தொலைவில் உள்ள நாட்டிற்கு சென்று, பொன்னால் அமைந்த அணிகலன்களையும், செல்வத்தையும் பெறுவதற்காகத் தலைவர் பாலைநிலக் காட்டினைக் கடந்து சென்றுள்ளார்.

"நிலம் வெடிக்குமாறு கதிரவன் கதிர்களை வீசி மிகுதியாகச் சுடுதலால் அந்நிலம் நிழல் இல்லாத உலர்ந்துபோன மரங்களைக் கொண்டுள்ளது; பாறைகள் கொதிப்புற்றும், பசிய சுனைகள் நீரின்றியும் உள்ளன; அங்குச் சொரியப்படும் நெல்லும் பொரிந்து விடும்; இதனால் வழிச்செல்வோர் இல்லாமையால் வழிப்பறி கள்வர்களும் வறுமையால் வாடுமளவிற்குப் பாலை நிலம் பொலிவற்ற வழிகளைக் கொண்டுள்ளது. அங்கு வீசும் சூறாவளிக் காற்றால் ஈரமற்று உலர்ந்த முருங்கைமரப் பூக்கள் நீர்த்துளிகளைப் போல உதிர்ந்து கடலுக்குக் கரையமைத்தாற் போலப் பரவிக் கிடக்கின்றன.

"இத்தகைய கொடுமையான காட்சிகளைக் கொண்ட காட்டினை நம் தலைவர் கடந்து சென்றுள்ளாரே!"

கருத்து

பொருளீட்டி வர, தலைவர் கொடுமையான காட்சிகளைக் கொண்ட காட்டினைக் கடந்து சென்றுள்ளாரே!

விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதால் ஆற்றாமையுற்ற தலைவி, "வேள் ஆவியின் பொதினி மலையில், இயற்கைப் புணர்ச்சியில் கூடிய பொழுது, 'சாணைக்கல் செய்வோன் அரக்கினையும் கல்லினையும் கூட்டிச் செய்த உறுதியான கல்லைப்போல நாம் என்றுமே

பிரியாதிருப்போம்' என்று தலைவன் என்னிடம் சொல்லிய சொற்களை மறந்துவிட்டாரா? அதனால்தான், கொடிய காட்டிடையே சென்றுள்ளாரா?" என்று தோழியிடம் இரங்கிக் கூறினாள்.

சொற்பொருள்

1. பட - மொய்த்திட; ததைந்த - மலர்ந்த.
2. உரு - அச்சம்; மழவர் - வீர இனத்தவர்.
3. வேள் ஆவி - குறுநில மன்னருள் ஒருவன்.
4. அறுகோடு - அறுத்துத் திருத்தப்பட்ட கொம்பு; பொதினி - பொதிய மலை.
5. காரோடன் - சாணைக்கல் செய்பவன்; பயின் - அரக்கு, பிசின்.
8. வேய் - மூங்கில்; பணை - பெரிய; சேய் - தொலைவு.
9. பொலம் - பொன்; வெறுக்கை - செல்வம்; தருமார் - ஈட்டி வருவதற்காக; பக - பிளக்க.
10. பைது - பசுமை; தெறுதல் - சுடுதல்.
11. உலறிய - வற்றிய; அறை - பாறை.
12. ஆம்அற - ஈரம் இல்லையாம்படி (ஆம் - நீர், ஈரம்); புலர்தலின் - சாய்தலின்.
13. உகு - சொரியும்.
14. வழங்குநர் - வழிச் செல்வோர்; வௌவுநர் - பொருளைக் கவர்பவர் (ஆறலை போர்).
15. புல்லென்ற - பொலிவில்லாத; ஆற்ற - வழியை உடையது; அலங்கு - அசைகின்ற.
16. நவிரல் - குலைந்த.
17. சூரல் - சூறாவளி.
18. பிதிர்வு - துளி.

தலைவி கூற்று

அகநானூறு 67 **நோய்பாடியார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்தவழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் காரணமாய்ப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்திய தலைவியை நோக்கிப் பிரிவுத்துன்பத்தை ஆற்றியிருக்குமாறு கூறித் தோழி தேற்றினாள். அது கேட்ட தலைவி, தலைவன் சென்ற காட்டுவழியின் அருமையைக் கருதித் தான் கவலையடைவதாய்க் கூறியது.

யான்எவன் செய்கோ? தோழி! பொறிவரி
வானம் வாழ்த்திப் பாடவும், அருளாது
உறைதுறந்து எழிலி நீங்கலின், பறைஉடன்,
மரம்புல் லென்ற முரம்புஉயர் நனந்தலை,
அரம்போழ் நுதிய வாளி அம்பின்,
நிரம்பா நோக்கின் நிரையம் கொண்மார்,
நெல்லி நீளிடை எல்லி மண்டி,
நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎம் தருமார், மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன,
உவல்இடு பதுக்கை ஆள்உகு பறந்தலை,
'உருஇல் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போல, பலஉடன்
இலங்குபரல் இமைக்கும்' என்பநம்
நலம்துறந்து உறைநர் சென்ற ஆறே!

தெளிவுரை

"தோழி! புள்ளிகளையும் வரிகளையும் கொண்ட வானம் பாடிப் பறவை குரல் கொடுத்து வேண்டியும், மேகம் மழை

பெய்யாது அருளின்றி அகன்றது. இலைகள் உதிர்ந்து மரங்கள் பொலிவிழந்தன. கற்குவியல்களையும் நெல்லி மரங்களையும் கொண்ட அகன்ற நிலத்தில் அமைந்த நெடிய வழியில் கூர்மையான அம்புகளையும் இடுக்கிய பார்வையினையும் கொண்டவரான கரந்தை வீரர்கள் தம் பசுக்களைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்களிடமிருந்து அப்பசுக்களை மீட்டுச் செல்லப் போரிட்டனர். அப்போரில் இறந்த கரந்தை வீரர்களுக்கு நடுகற்களில் அவர்களின் பெயரும் பெருமையும் எழுதப்பட்டு நடப்பட்டிருக்கும். அந்நடுகற்கள் மயில்தோகை சூட்டப்பெற்றும் வேலும் கேடயமும் முன்னே ஊன்றப்பெற்றும் காட்சியளிக்கும்.

இக்காட்சியினைக் கொண்ட வழியிலே, வேற்று மொழி நாட்டினைக் கைப்பற்றச் செல்லும் வீரர்களின் கைகளிலுள்ள கேடயங்களைப் போல, வழி நெடுகிலும் இறந்தவர்களின் உடல்கள் தழையிட்டு மூடப் பெற்ற கற்குவியல்களைக் காண நேர்ந்திடும். இத்தகைய பாழிடங்களில் கானல் நீரன்றி வேறு குடிநீரைக் காண இயலாது. அதுமட்டுமன்றி, வழியெங்கும் மின்மினிப் பூச்சிபோல, மின்னும் பரற்கற்கள் நிறைந்திருக்கும். இந்த வழியிலேதான் நம்மோடும் கொள்ளும் இன்பத்தைக் கைவிட்டு நம் தலைவர் சென்றுள்ளார் என்பதை நினைக்கவே அச்சமாய் உள்ளதால் எங்ஙனம் ஆற்றியிருக்க இயலும்?" என்கிறாள், தலைவி.

கருத்து

தலைவன் சென்றுள்ள காட்டுவழியின் கொடுமையான காட்சிகளை நினைக்கும்போது எங்ஙனம் என்னால் ஆற்றியிருக்க இயலும்?

விளக்கம்

"என் நலம் துறந்து சென்ற தலைவர் சென்ற வழி, மழை பெய்யாமையால் மரங்கள் பொலிவிழந்துள்ள அகன்ற இடமாகும். அங்கு ஆநிரை மீட்கும் போரில் இறந்த வீரர்க்கு நடப்பட்ட நடுகற்களைப் போன்று, ஆறலை கள்வரால் கொல்லப் பட்டோரின் உடல்கள் மீது தழையிட்டு மூடி, அவற்றின்மேல் இடப்பட்ட கற்குவியல்கள் தோன்றும். கானல்நீரைத் தவிர

அங்கு வேறு நீரைக் காண இயலாது. மின்மினிப்பூச்சி மின்னுவது இத்தகைய வழியே போலக் கூரிய முனையினைக் கொண்ட மின்னும் பரற்கற்கள் பரந்து கிடக்கும். அவர் சென்ற காட்டை நினைந்து நான் வருந்தாமல் என்னால் வேறு என்ன செய்ய இயலும்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

வெட்சி - பகைவருடைய பசுக்களைக் கவர்ந்து செல்லுதல். கரந்தை - பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வருதல்.

சொற்பொருள்

1. எவன் செய்கோ? - என்ன செய்வேன்?; பொறி - புள்ளி.
2. வானம் வாழ்த்தி - வானம்பாடிப் பறவை.
3. உறை - நீர்த்துளி; துறந்து - பெய்தலை மறந்து; எழிலி - மேகம்; பறை - இலை (உதிர்ந்து).
4. புல் என்ற - பொலிவற்றிருக்கும்; முரம்பு - பருக்கைக்கல்; நனந்தலை - அகன்ற இடம்.
5. போழ்தல் - அராவுதல்; நுதி - முனை; வாளி அம்பு - பற்களைக் கொண்ட அம்பு.
6. நிரம்பா நோக்கு - இடுக்கிய பார்வை; நிரையம் கொண்மார் - நரகம் புகுவார்.
7. நெல்லி - நெல்லிமரம்; நீளிடை - நீண்ட வழி; எல்லி - இரவு; மண்டி - விரைந்து சென்று.
8. அமர் - போர்; கடந்த - வென்ற; மறவர் - (பசுக்களை மீட்கும்) வீரர்.
9. பீடு - பெருமை; எழுதி - பொறித்து; அதர்தொறும் - வழியெங்கும்.
10. பீலி - மயில் தோகை; பிறங்குநிலை - விளங்கும் நிலை.
11. வேலூன்று பலகை - வேலை நட்டு அதன்மீது சார்த்தப்பட்ட பலகை; வேற்றுமுனை - பகைவருடன் போர் செய்யும் இடம்.
12. மொழிபெயர் - வேற்று மொழி பேசும்; தேஎம் - தேசம்; தருமார் - கொள்வதற்காக.
13. கழிப்பிணி - கழியால் கட்டப்பட்ட; கறைத்தோல் - கரிய கேடயம் (கறை - கறுப்பு); தோல் - கேடயம் (பரிசை); நிரை - வரிசை.
14. உவல் - தழை, சருகு; பதுக்கை - கற்குவியல்; ஆள் உகு - ஆள்களை இட்டு; பறந்தலை - பாழிடம் (உயிர் நீங்கிய உடல்களைத் தழை கொண்டு மூடி கற்களைக் குவித்து வைத்துள்ள பாழிடம்.)

15. உருஇல் - உரு இல்லாத; ஊரா - ஊர்ந்து செல்லாத; தேர் - பேய்த் தேர், கானல் நீர்.
16. நிலம்படு - நிலத்தே பொருந்திய.
17. இலங்குபரல் - விளங்குகின்ற பரற்கற்கள்; இமைக்கும் - ஒளி விடும்.

தலைவி கூற்று

அகநானூறு 103 **காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண், தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்பி வரக் காலம் நீட்டித்ததால் வருந்திய தலைவி, தோழியிடம், 'தலைவன் மீண்டு வந்து நம் துன்பத்தைப் போக்கி அருளானோ?' என்று கூறியது.

நிழல்அறு நனந்தலை, எழாஅல்ஏறு குறித்த
கதிர்த்த சென்னி, நுணங்குசெந் நாவின்,
விதிர்த்த போலும் அம்நுண் பல்பொறி,
காமர் சேவல் ஏமம் சேப்ப;
முளிஅரில் புலம்பப் போகி, முனாஅது,
முரம்புஅடைந் திருந்த மூரி மன்றத்து,
அதர்பார்த்து அல்கும் ஆகெழு சிறுகுடி,
உறையுநர் போகிய ஓங்குநிலை வியல்மனை,
இறைநிழல் ஒருசிறைப் புலம்புஅயா உயிர்க்கும்
வெம்முனை அருஞ்சுரம் நீங்கி, தம்வயின்
ஈண்டுவினை மருங்கின் மீண்டோர் மன்என,
நள்ளென் யாமத்து உயவுத்துணை ஆக,
நம்மொடு பசலை நோன்று, தம்மொடு
தானே சென்ற நலனும்
நல்கார் கொல்லோ,நாம் நயந்திசி னோரே?

தெளிவுரை

“பெரிய தலையினையும் நுணுகிய சிறந்த நாவினையும், சிதறப் பட்டவை போன்ற அழகிய நுண்ணிய பல புள்ளிகளையும் கொண்ட குறும்பூழ்ச் சேவல் ஒன்று வல்லூறால் தாக்கப்படு வதிலிருந்து தப்புவதற்காகத் தான் தங்கியிருந்த, காய்ந்துபோன சிறிய புதரிலிருந்து வெளியேறி எதிரே இருக்கும் வன்னிலத்திற்குச் செல்லும். அவ்வன்னிலத்தைச் சார்ந்த பெரிய மன்றத்தில் வழிப்பறி கள்வர், வழியைப் பார்த்துக்கொண்டு தங்கியிருப்பர்.

“பசுக்களை உடைமையாய்க் கொண்டு அச்சிற்றூரில் குடியிருந்தோர் வெளியேறியமையால் பாழடைந்ததும் உயர்ந்த நிலையினைக் கொண்டதுமான ஓர் அகன்ற கூரைவீட்டின் இறப்பில் அந்தக் குறும்பூழ்ச் சேவல் தங்கிச் சோர்வினால் பெருமூச்சு விட்டிருக்கும்.

“விருப்பத்திற்குரிய நம் தலைவன் அத்தகைய கொடிய போர் முனைக் குடியிருப்புகளைக் கொண்ட அரிய காட்டுவழியைக் கடந்து, தான் மேற்கொண்டுள்ள பொருளீட்டும் செயலில் ஈடுபட்டுச் சென்றுள்ளான்.

“‘நள்’ என்ற நடுயாமத்தில் நம் வருத்தத்தைப் போக்கப் பேச்சுத் துணையாகப் பசலைநோயை என்னோடு இருக்கச் செய்துவிட்டு, அத்தலைவனுடன் தானே வலிந்து சென்றுவிட்ட நம் பெண்மை நலனையாவது தலைவன் நமக்குத் திரும்பத் தந்து அருள மாட்டானா?” என்று தலைவி தன் ஏக்கத்தைத் தோழி யிடம் தெரிவித்தாள்.

கருத்து

கடுமையான வழியிலே சென்ற காதலன் எனக்குப் பசலையைத் தந்து விட்டு என் பெண்மை நலனைத் தன்னுடன் கொண்டுசென்றுவிட்டான்.

விளக்கம்

“வல்லூறுப் பறவையால் அலைக்கழிக்கப்பட்டுத் தப்பித்த காடை, காட்டின் பாழ்மனை ஒன்றன் தாழ்வாரத்தில் பாதுகாப் பாய்த் தங்கிப் பெருமூச்சு வாங்கியது. அங்கு வழிப்பறி கள்வர், வழிச் செல்வோரை எதிர்பார்த்துத் தங்கியிருப்பர். அத்தகைய

அச்சம் பொருந்திய போர்முனைக் குடியிருப்புகளைக் கடந்து கடுமையான காட்டுவழியில் நம் தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளான். நள்ளிரவில் எனக்குப் பேச்சுத்துணையாய் இருந்த என் நலன், என்னோடு சேர்ந்து பசலையைப் பொறுத் திருந்தது. இதுவரை தலைவன் மீள வரவில்லை என்பதால் என் நலனும் அவனிடம் வலியச் சென்றுவிட்டது. தலைவன் தான் வாராவிட்டாலும் என் பெண்மை நலனையாவது (அழகினை யாவது) திருப்பி அனுப்ப மாட்டானா?" எனத் தலைவி, தலைவன் பிரிவால் பசலையூர்ந்து அழகிழந்திருப்பதை வருத்தம் தோன்றச் சொல்கிறாள்.

சொற்பொருள்

1. நனந்தலை - அகன்ற இடம்; எழாஅல் - வல்லூறு; ஏறு குறித்தல் - வெளவுதல் குறிக்கப்பட்ட.
2. கதிர்த்த - பெரிய; சென்னி - தலை; நுணங்குதல் - நுண்மையாதல், வளைதல்.
3. விதிர்த்த - தெளித்த.
4. காமர் சேவல் - அழகிய காடைச்சேவல்; ஏமம் சேப்ப - பாதுகாப்பான இடத்திற்குச் சென்று தங்க.
5. முளி - காய்ந்த; அரில் - சிறுதூறு; முனாஅது - முன்னிடத்தில் உள்ள.
6. முரம்பு - வன்னிலம், கல்; மூரி - பெரிய.
7. அதர் - வழி; அல்கும் - தங்கும்; சிறுகுடி - சிற்றூர்.
8. வியல்மனை - அகன்ற வீடு.
9. இறை - வீட்டு இறப்பு; ஒருசிறை - ஒரு பக்கம்; புலம்பு - தனிமை; அயாஉயிர்க்கும் - பெருமூச்சு விடும்.
10. வெம்முனை - கொடிய போர்முனை; நீங்கி - கடந்து.
11. ஈண்டு வினை - பொருளீட்டும் செயல்.
12. உயவுத் துணை - பேச்சுத்துணை.
13. நோன்று - பொறுத்திருந்து; தம்மொடு - தலைவனுடன்.
14. நலன் - அழகு.
15. நல்கார் கொல்லோ - கொடுக்க மாட்டாரோ; நாம் நயந்திசினோர் - நம்மால் விரும்பப்பட்ட தலைவர்.

தலைவி கூற்று

அகநானூறு 329 **உறையூர் முதுகூத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்ற நிலையில் தலைவி, தலைவன் செல்லும் பாலை வழியின் ஏதம் குறித்துத் தோழியிடம் கூறியது.

பூங்கணும் நுதலும் பசப்ப, நோய்கூர்ந்து,
ஈங்குயான் வருந்தவும், நீங்குதல் துணிந்து,
வாழ்தல் வல்லுநர் ஆயின், காதலர்—
குவிந்த குரம்பை அம்குடிச் சீறூர்,
படுமணி இயம்பப் பகல்இயைந்து, உமணர்
கொடுநுகம் பிணித்த செங்கயிற்று ஒழுகைப்
பகடுஅயாக் கொள்ளும் வெம்முனைத் துகள்தொகுத்து,
எறிவளி சுழற்றும் அத்தம் சிறிதுஅசைந்து,
ஏகுவர் கொல்லோ தாமே— பாய்கொள்பு,
உறுவெரிந் ஒடிக்கும் சிறுவரிக் குருளை
நெடுநல் யானை நீர்நசைக்கு இட்ட
கைகறித்து உரறும் மைதூங்கு இறும்பில்,
புலிபுக்கு ஈனும் வறுஞ்சுனை,
பனிபடு சிமையப் பல்மலை இறந்தே.

தெளிவுரை

தோழி! மலர் போன்ற என் கண்கள் சோர்ந்தலாலும் அழகிய நெற்றியில் பசலை படர்ந்தலாலும் நான் வருந்தியிருக்க நம்மைப் பிரிந்து தனித்து வாழக்கூடிய வல்லமை நம் தலைவனுக்கு இருக்குமாயின் அவன் செல்லட்டும்.

தலைவர் செல்லும் வழியில், தலை கூம்பிய குடிசைகளையும், அழகிய குடியிருப்புகளையும் கொண்ட சிற்றூர்கள் உள்ளன. அங்கு உப்பு வாணிகர்களையும் கொண்ட எயினர்களின் நுகத்தின் இருபுறத்தும் தேர்ந்தெடுத்த இணையொத்த

எருதுகளைச் செவ்வையான கயிற்றால் வண்டி கட்டி பூட்ட, எருதுகள் தம் கழுத்திலுள்ள மணிகள் ஆரவாரித்து ஒலிக்க வருந்தி வண்டியை இழுக்கும். வெப்பமான இடங்களில் எழுகின்ற புழுதியைத் திரட்டி வாரி வீசும் காற்று அங்குச் சுழன்றடிக்கும்; அப்பொழுது சிறிது ஓய்வு கொண்டு தலைவன் மீண்டும் புறப்படுவான்.

மேகம் துஞ்சும் காட்டில், பாய்வதற்காகத் தன் முதுகினை நெளிக்கும் சிறிய வரிகளைக் கொண்ட புலிக்குட்டி, நீண்டு உயர்ந்த யானை நீர்வேட்கை கொண்டு சுனையில் நீட்டிய துதிக்கையினைக் கடித்து முழக்கமிடும் காட்டில் புலி புகுந்து குட்டிகளை ஈனும். இத்தகைய காட்சிகள் கொண்ட வறிய சுனைகளையும் பனி உறைந்த உச்சிகளையும் கொண்ட மலைகள் பலவற்றையும் தலைவன் கடந்து செல்வனோ?

கருத்து

காட்டுவிலங்குகள் வாழும் மலைகள் பலவற்றைத் தலைவன் கடந்து செல்ல வேண்டியுள்ளதே!

விளக்கம்

'தோழி! நான் இங்கே வருந்தியிருக்க, தனித்து வாழ வன்மை கொண்டவனாய்த் தலைவன் பிரிந்து செல்லலாயினன். அவன் சுர நெறியில் சிறிது தங்கியிருந்து, பிறகு பல மலைகளையும் கடந்து செல்வனோ' என்று தலைவி தன் ஆற்றாமை புலப்படக் கூறினாள்.

சொற்பொருள்

1. பூங்கண் - பூப் போன்ற கண்; நோய்கூர்ந்து - துன்பம் மிக்கு.
4. குவிந்த குரம்பை - தலை கூம்பிய குடிசை; அம்குடிச் சீறூர் - அழகிய குடியிருப்புகள்.
5. பகல்இயைந்து - நுகத்தின் இருபுறத்தும் இணையொத்த வலிமை கொண்ட எருதுகளைத் தேர்ந்தெடுத்து; பகல் - நுகத்தாணி; இயைதல் - ஒத்தல்; உமணர் - உப்பு வாணிகர்.
6. கொடுநுகம் - வளைந்த நுகம்; பிணித்தல் - கட்டுதல்; ஒழுகை - வண்டி

7. பகடு - எருது; அயாக் கொள்ளும் - வருந்தியிருக்கும்; வெம் முனை - கொடிய இடம்; துகள் - புழுதி; தொகுத்து - திரட்டி.
8. எறிவளி - வீசும் காற்று; அத்தம் - வழி; அசைதல் - தங்கியிருத்தல்.
9. ஏகுவர் - செல்வர்; தாம் - தலைவர்; பாய்கொள்பு - பாய்தல் கொண்டு.
10. உறுவெரிந் - நேரிய முதுகினை; ஒடிக்கும் - வளைக்கும்; சிறுவரி - சிறிய வரிகளைக் கொண்ட; குருளை - புலிக்குட்டி.
11. நீர்நசை - நீர் வேட்கை; இட்ட - நீட்டிய.
12. கறித்து - கடித்து; உரறும் - முழங்கும்; மைதூங்கு - மேகம் துஞ்சும்; இறும்பு - காடு.
13. புக்கு - நுழைந்து; ஈனும் - குட்டியைப் பெற்றெடுக்கும்; வறுஞ்சுனை - நீரில்லாது வறட்சியுற்றுப் போன சுனை.
14. பனிபடு - பனி உறைந்துள்ள; சிமையம் - உச்சி; பன்மலை - பல மலை.

தலைவி கூற்று

கைந்நிலை 21 புல்லங்காடனார்

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாத தலைவி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, பிரிவைத் தாளாது தோழியிடம் கூறியது.

ஆந்தை குறுங்கலி கொள்ளநம் ஆடவர்
காய்ந்து கதிர்தெறூஉம் கானம் கடந்தார்பின்
ஏந்தல் இளமுலை ஈர்எயிற்றாய் என்நெஞ்சு
நீந்தும் நெடுஇடைச் சென்று.

தெளிவுரை

“மேலெழுந்துள்ள மார்பகங்களையும் குளிர்ச்சி பொருந்திய பற்களையும் கொண்ட என் தோழியே! நம் தலைவர், ஆந்தைகள் மரப்பொந்துகளிலிருந்து சிறிய ஒலி எழுப்பும்படியாகச் சூரியன் காய்ந்து வருத்தும் பாலை நிலக்காட்டின் வழியாகச் சென்

றுள்ளார். எனவே, என் நெஞ்சும் அவர் சென்ற நீண்ட வழிகளில் போய்க்கொண்டிருக்கின்றது. அவர் பிரிவை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.”

கருத்து

என் நெஞ்சு அவர் சென்ற பாலைநிலக் காட்டின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

சொற்பொருள்

1. ஆந்தை - ஒரு வகைப் பறவை; குறுங்கலி - சிறிய ஒலி; ஆடவர் - தலைவர்.
2. தெறூஉம் - வருத்தும்.
3. ஏந்தல் - மேலெழுந்திருத்தல்; ஈர் - குளிர்ச்சி பொருந்திய; எயிறு - பல்.
4. நீந்தும் - ஓடும்; நெடு இடை - நீண்ட வழி.

தலைவி கூற்று

கைந்நிலை 23 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் ஆற்றாமையை அறிந்து வருந்திய தோழியிடம் தலைவி, ‘நான் ஆற்றியிருப்பேன்’ என்பது தோன்றக் கூறியது.

சிலையொலி வெங்கணையர், சிந்தியா நெஞ்சில்
கொலைபுரி வில்லொடு கூற்றுப்போல் ஓடும்
இலையொலி வெங்கானத்து இப்பருவம் சென்றார்
தொலைவு(இ)லர்கொல் தோழி நமர்.

தெளிவுரை

"ஆறலை கள்வர்கள் நாணேற்றிய வில்லுடனும், கொடிய அம்புகளுடனும் எதைப்பற்றியும் சிந்திக்காது கொல்லுந் தொழிலில் நாட்டங்கொண்டவர். அவர்கள் கொலை புரியப் பயன்படும் வில்லோடு இயமனைப் போல உலர்ந்த இலை எழுப்பும் ஒலியோடு கூடிய வெப்பம்மிக்க காட்டில் திரிவர். அக் காட்டில் இளவேனிற் காலத்தில் நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவர் சோர்வில்லாது இருப்பாரோ? என் தோழியே! நீயே கூறு" எனத் தலைவி கூறினாள்.

கருத்து

ஆறலை கள்வர்கள் திரியும் காட்டுவழியில் தலைவர் சோர்வின்றிச் செல்வாரோ?

சொற்பொருள்

1. சிலை - வில்; வெம்கணை - கொடிய அம்பு.
2. கூற்று - இயமன்; ஓடும் - திரிகின்ற.
3. வெம்கானம் - வெப்பம் மிக்க காடு; இப்பருவம் - இந்த இளவேனிற் காலத்தில்.
4. தொலைவு இலர்கொல் - தளர்ச்சியில்லாதவராய் இருப்பாரோ?; நமர் - நம் தலைவர்.

தோழி கூற்று

நற்றிணை 274 **காவன்முல்லைப் பூதனார்**

திணை : பாலை

கூற்று

தோழி பருவம் மாறுபட்டது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் காரணமாய்ப் பிரிந்து சென்றிருந்தபோது, தலைவி அவன் செல்லும் காடு கொடியது என்று வருந்தினாள். அது கண்ட தோழி, "அவர் சென்றுள்ள பாலை வழியில் மழை பெய்துகொண்டிருப்பதால் காடு கடுமையானதாய் இராது" என்று கூறித் தலைவியைத் தேற்றியது.

நெடுவான் மின்னி, குறுந்துளி தலைஇ,
படுமழை பொழிந்த பகுவாய்க் குன்றத்து,
உழைமான் அம்பிணை தீண்டலின், இழைமகள்
பொன்செய் காசின், ஒண்பழம் தாஅம்
குமிழ்தலை மயங்கிய குறும்பல் அத்தம்,
'எம்மொடு வருதியோ, பொம்மல் ஓதி?' எனக்
கூறின்றும் உடையரோ மற்றே வேறுபட்டு
இரும்புலி வழங்கும் சோலை,
பெருங்கல் வைப்பின் சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"கருமையான புலி சினமுற்று உலாவுகின்ற பெரிய மலையிடத்தில் அமைந்த பாலைநில வழியில் நம் காதலர் பிரிந்து சென்றுள்ளார். அங்கு நெடிய மேகங்கள் மின்னிச் சிறிய துளிகளாய்ப் பெய்யத் தொடங்கிப் பின்பு, பிளவுகளைக் கொண்ட குன்றத்தில் மிகுந்த மழை பெய்துள்ளது. அங்கு உழை மானின் அழகிய பிணை உராய்வதால் குமிழ மரங்கள் பழங்களை உதிர்க்கும். அப்பழங்கள், அணிகள் அணிந்துள்ள பெண்ணொருத்தியின் பொன்னாலாகிய கலன்களைப் பரப்பினாற்போல ஒளியுடன் விளங்கும். இத்தகைய குமிழ மரங்கள் நிரம்பிய குறுகிய பல வழிகளைக் கொண்ட பாலை வழியில் செல்லப் புறப்பட்டபோது 'பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்டோய்! என்னுடன் நீயும் வருகிறாயா?' எனக் கேட்ட பின்புதானே சென்றார். அதனால் அவர் செல்லும் வழி வெம்மை கொண்டதாய் இராது என்பதை நீ அறிக" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

தலைவன் சென்ற வழியில் மழை பெய்துள்ளமையால் குளிர்ச்சி பெற்றுள்ளது; மயங்காதே.

விளக்கம்

தலைவன் சென்ற காட்டுவழியை நினைத்துத் தலைவி வருந்தியிருந்தாள். அது கண்ட தோழி, தலைவன் செல்லும் வழியில் பெருமழை பெய்துள்ளதையும், மான்கள் உராய்வதால்

குமிழம் பழங்கள் உதிர்ந்து கிடப்பதையும் கூறி, வழியில் வெம்மை மாறியிருக்கும் என்று கூறினாள். புறப்படும்போது 'நீயும் வருகிறாயா?' என்று கேட்டதால், உறுதியாய் வழி கொடுமையானதாய் இராது. ஆதலின், நீ வருந்தாதே என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

குறிப்பு

வெப்பம் மிகுந்து வழி கடுமையானதாயிருந்திருப்பின் தலைவன் தலைவியை உடன்வர அழைத்திருக்க மாட்டான் என்பதைத் தோழி தலைவியிடம் எடுத்துரைத்து உணர்த்தினாள்.

இறைச்சி

உழைமான் அம்பிணை தீண்டலின் இழைமகள் பொன்செய் காசின் ஒண்பழம் தாஅம் - 'மான் சென்று உராய்ந்ததும் குமிழ மரத்திலிருந்து பழங்கள் உதிர்ந்தன' - இத்தொடர்மூலம், தலைவர் சென்று பொருளீட்டத் தொடங்கியதும் உடனே பொருள் கைகூடும்' என்னும் இறைச்சிப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. குறுந்துளி - சிறிய மழைத்துளி; தலைஇ - பெய்யத் தொடங்கி.
2. படுமழை - மிகுதியான மழை; பகுவாய் - பிளவுகளையுடைய.
3. உழைமான் பிணை - உழைமானின் பிணை; தீண்டலின் - உராய்தலால்; இழை மகள் - அணிகலன் அணிந்த பெண் ஒருத்தியின்.
4. பொன் செய் காசின் - பொன்னால் செய்யப்பட்ட காசினைப் போல; தாஅம் - உதிரும்.
5. குமிழ் - குமிழ மரங்கள்; குறும்பல் - குறுகிய பல.
6. பொம்மல் - அடர்ந்து.
7. கூறின்றும் - கூறியதும் (உண்டே); வேறுபட்டு - மாறுபாடு கொண்டு.
9. பெருங்கல் வைப்பு - மலைநாட்டைச் சார்ந்த நிலம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 431 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். அதற்குத் தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற்காலம் நீங்கிக் கார் காலம் தொடங்கி விட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
அணிநிற இரும்பொறை மீமிசை
மணிநிற உருவின தோகையும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற அழகிய நிறம் பொருந்திய பெரிய மலை வழி, நீலமணிபோலும் தோற்றம் கொண்ட மயில்களைக் கொண்டிருக்கிறது. அதனாலே வழிச்செலவு மகிழ்ச்சியுடையதாய் இருக்கும். (வருந்தாதே.)"

கருத்து

தலைவன் சென்ற பெரிய மலைவழி ஆடும் மயில்களைக் கொண்டு அழகிய காட்சியினைத் தருவது.

குறிப்பு

கார் காலம் தொடங்கியதால் காட்டுவழி மழையினைப் பெற்றும், பசுமையால் போர்த்தப்பட்டும் பல வண்ண மலர்கள் பூக்கப் பெற்றும், அழகுடன் விளங்கும். அவ்வழிச் செல்வதால் வருத்தம் தோன்றாது.

சொற்பொருள்

1. ஆறு - வழி.
2. அணி நிறம் - அழகான நிறம்; இரும்பொறை - பெரிய மலை; மீமிசை - மேலே.
3. மணிநிற உருவின தோகை - நீலமணி போன்ற தோற்றம் கொண்ட மயில்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 432 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது' என்று கலங்குகிறேன் என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
சுடுபொன் அன்ன கொன்றை சூடிக்
கடிபுகு வனர்போல் மள்ளரும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்றவழி, பொன்னைப் போன்ற கொன்றை மலரைத் தலையிலே சூடி மணவீட்டுக்குள் புகுபவர் போன்ற இளைய வீரர்கள் பலரைக் கொண்டது. (எனவே, அது காட்சிக்கு இனிது; கடத்தற்கும் எளிது.)"

கருத்து

காட்டுவழி கொன்றை மலரால் பொலிவு பெற்றுள்ளது; அவ்வழியில் செல்பவர்க்கு அது நலம் அளிப்பதாய்த் திகழும்.

குறிப்பு

வழியில் உள்ள வீரர் விழாக் கோலம் பூண்டு விளங்குவர்; அவர் காட்டிடத்தே துணையாயிருப்பர்; கவலையின்றிச் செல்லலாம்.

சொற்பொருள்

2. சுடுபொன் - சுட்டெடுத்த பசும்பொன்; கொன்றை - கொன்றை மலர்.
3. கடி புகுவனர் - மணவீட்டுக்குச் செல்வோர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 433 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
நீர்ப்பட எழிலி வீசும்
கார்ப்பெயற் கெதிரிய கானமும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழி நன்மை மிகுந்தது. நீருண்ட மேகங்கள் கார் கால மழையினைப் பொழிதற்கு இடமான வளமிகுந்த காடுகளைக் கொண்டது. எனவே, அவ்வழி செல்வதற்கு எளியது; காண்பதற்குக் குளிர்ச்சி பொருந்தியது."

கருத்து

கார் காலத்துப் பெருமழையால் கானம் வெம்மை தீர்ந்து தண்ணெனக் குளிர்ந்திருக்கும்.

சொற்பொருள்

2. நீர்ப்பட - நீர்வளம் உண்டாக; எழிலி - மேகம்; வீசும் - பொழியும்.
3. கார்ப் பெயற்கு எதிரிய - மழை பொழிதலை ஏற்றுக்கொண்ட; கானம் - காடு; உடைத்து - உடையது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 434 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
மறியுடை மான்பிணை உகளத்
தண்பெயல் பொழிந்த இன்பமும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழியில் குட்டியோடும் கூடிய பெண் மான்கள் துள்ளிக் குதித்து இன்பம் கொள்ளும்; குளிர்ச்சி பொருந்திய மழை பொழிந்ததால், பசுமைமிக்க காட்சிகளைக் கொண்டது. எனவே, அதனைக் கடந்து செல்வது எளிது."

கருத்து

காதலர் சென்ற காட்டுவழியில் கன்றினைக் கொண்ட மான் பிணை துள்ளித் திரியும். குளிர்ச்சி பொருந்திய மழை பொழிந்தமையால் எங்கும் இன்பம் அளிக்கும் காட்சிகளைக் கொண்டிருந்தது.

குறிப்பு

மான் பிணை குட்டியோடு திரிந்து கொண்டு இருக்கும் என்றமையால், காடு ஏதமில்லா நெறியைக் கொண்டது என்பதாம்.

சொற்பொருள்

2. மறிஉடை - குட்டியினைக் கொண்ட; மான் பிணை - பெண்மான்; உகள - துள்ளித் திரிய.
3. தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை, குளிர்ச்சியான கார் கால மழை; இன்பம் - மழை பொழிதலாலே உண்டாகும் பசுமையும் அழகும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 435 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
நிலன்அணி நெய்தல் மலரப்
பொலன்அணி கொன்றையும் பிடவமும் உடைத்தே.

தெளிவுரை

"நிலத்திற்கு அணி செய்யும் நெய்தற்பூக்கள் மலர்ந்திருக்கின்றன; நம் தலைவர் சென்றுள்ள வழி பொன்போன்ற அழகிய நிறம் கொண்ட கொன்றை மலரையும் பிடவச் செடிகளையும் தன்பால் கொண்டதாதலின், அவ்வழி மிகவும் இனிதாய் இருக்கும்."

கருத்து

செல்லுகின்ற வழியெல்லாம் மலர்கள் தோன்றி இன்பமூட்டுவதால், நடைச் செலவு மகிழ்ச்சியானதாயிருக்கும்.

சொற்பொருள்

2. நிலன் அணி - நிலத்திற்கு அழகு செய்யும்; நெய்தல் - நெய்தல் மலர்.
3. பொலன் அணி - பொன்போன்ற அழகு; பிடவம் - பிடவ மலர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 436 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
நன்பொன் அன்ன சுடர்இணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா ருடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழி பொன்னைப் போல ஒளி சுடரும் பூங்கொத்துகளைக் கொண்ட கொன்றையோடு, மலர்ந்துள்ள குருந்த மரங்களையும் கொண்டது. அவ்வழியில் செல்தல் எளிதே!"

கருத்து

மலர்களைக் கண்டுகொண்டே வழிநடை வருத்தமின்றிச் செல்லலாம்.

சொற்பொருள்

2. சுடர்இணர் - ஒளி வீசும் பூங்கொத்து.
3. கொன்றை, குருந்து - மர வகைகள்; மார் : அசைச்சொல்; உடைத்தே - உடையது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 437 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகறகரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைமகன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
ஆலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழி, ஆலங்கட்டிகள் பொருந்திய குளிர்ச்சி பொருந்திய மழை பொழிதலால், வெண்ணிறப் பூக்களைப் பூத்திருக்கும் முல்லைக் கொடிகளைக் கொண்டது. எனவே, அவ்வழியில் செல்லல் இனிது."

கருத்து

கண்ணுக்கினிய மலர்க் காட்சி வழி நடையை எளிதாக்கும்.

குறிப்பு

முல்லை, கற்பின் சின்னம். அதனைக் காணும் காதலன், காதலியின் கற்பின் பெருமையை நினைந்து வழிச்செலவின் துன்பத்தை மறப்பான்.

சொற்பொருள்

2. ஆலி - ஆலங்கட்டி மழை; தலைஇய - பரந்த.

3. வாலிய - வெண்மையுள்ளனவாய், வெள்ளிய; முல்லை - முல்லை மலர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 440 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைமகன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
தண்பெயல் அளித்த பொழுதின்
ஒண்சுடர்த் தோன்றியும் தளவமும் உடைத்தே.

தெளிவுரை

"*நம் காதலர் சென்ற வழி, குளிர்ச்சி பொருந்திய மழை பொழிந்த கார் காலத்திலே பூத்த ஒள்ளிய சுடர் வீசும் தோன்றி மலரையும் தளவ மலரையும் கொண்டிருக்கும். அம்மலர்களின் அழகைக் கண்டு மகிழ்ந்தவாறு வழியில் செல்லலாம்.*"

கருத்து

மலர்கள் நிறைந்த வழி; மணத்தை நுகர்ந்துகொண்டே மகிழ்வுடன் செல்லலாம்.

சொற்பொருள்

2. தண் - குளிர்ந்த; பெயல் - மேகம்; அளித்த - அருள் செய்த; பொழுது - கார்ப்பொழுது.
3. ஒண் சுடர்த் தோன்றி - ஒள்ளிய சுடர்போலும் தோன்றிப்பூ; தளவம் - செம்முல்லை மலர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 438 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைமகன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
பைம்புதற் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்புமார் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழியில் பசுமையான புதர்களில் பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும்; அதனால் அவ்வழிச் செல்வோர்க்குப் பேரின்பம் தரும் தன்மையினைக் கொண்டது. ஆதலின், அவ்வழியில் மகிழ்ச்சியோடு பயணம் செய்யலாம்."

கருத்து

புதரில் உள்ள செடிகொடிகள் பசுமையாய்த் தழைத்தும் அவற்றில் பல்வகைப் பூக்கள் மலர்ந்துமிருப்பதால், அவ்வழி குளிர்ச்சியும் எழிலும் கொண்டதாயிருக்கும்.

சொற்பொருள்

2. பைம்புதல் - பசிய பூக்கள்; பல்பூ - பல வகையான பூக்கள்.
3. பண்பு - இயல்பு; இன்புறத் தகுந - இன்பமடையத் தக்கன; மார் - அசை நிலை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 439 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவுடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை?' என்று வினவிய வழி, 'அவர் போன சுரம் போகற்கரிதென்று ஆற்றேன் ஆகின்றேன்' என்ற தலைமகட்கு, 'வேனிற்காலம் கழிந்தது; கார்ப் பருவத் தோற்றத்திலே பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியை நோக்கி, 'தலைமகன் பிரியும்போது அதற்கு இசைந்து இப்போது வருந்துவது ஏன்?' என்று கேட்டாள். தலைவி, 'அவர் சென்ற வழி கடுமையானது என்று கலங்குகிறேன்' என்றாள். அதற்குத் தோழி, 'வேனிற் காலம் நீங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது; எனவே, அவர் வருத்தமின்றிச் செல்லலாம்' எனத் தலைவியைத் தேற்றியது.

நன்றே காதலர் சென்ற ஆறே
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் நிலைஇய பாக்கமும் உடைத்தே.

தெளிவுரை

"நம் காதலர் சென்ற வழி, குருந்த மலர் மாலைகளை அணிந்த கோவலர்களையும், அவர்கள் வாழும் மிகவும் குளிர்ச்சி

பொருந்திய குடியிருப்புகளையும் இடையிடையே கொண்டிருக் கிறது. எனவே, எவ்வித இடையூறுமின்றிப் பயணம் செய்ய லாம்.”

கருத்து

வழியில் தலைவன் இடையிடையே தங்கி, ஆயரில்லத்தவரின் விருந்தினை ஏற்று அயர்வின்றிச் செல்லலாம்.

சொற்பொருள்

2. குருந்தங்கண்ணி - குருந்த மலராலான மாலை; கோவலர் - ஆநிரைக் குரிய பொதுவர், இடையர்.
3. பெருந்தண் நிலைஇய - பெருமையும் குளிர்ச்சியும் நிலையாய் உள்ள; பாக்கம் - கோவலர் தங்குமிடம், சிற்றூர்.

தோழி ஆறுதல் கூறலும் தலைவி வருந்தலும்.

தோழி கூற்று

நற்றிணை 28 **முதுகூத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடப் பிரிந்து சென்றமையால் ஆற்றாது வருந்திய தலைவியை நோக்கித் தோழி கூறியது.

என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டுஎன் நல்நுதல் நீவியும்,
அன்னை போல இனிய கூறியும்,
கள்வர் போலக் கொடியன் மாதோ
மணிஎன இழிதரும் அருவிப் பொன்என
வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து,
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்கும் சென்னிக்
கோடுஉயர் பிறங்கல் மலைகிழ வோனே!

தெளிவுரை

"நீலமணிபோல் தெளிந்த நீரினைக் கொண்ட அருவி, மலையிலிருந்து இழிகின்றது; உயர்ந்த மலையிலுள்ள வேங்கை மரங்கள் பொன் போன்ற மலர்களை உதிர்க்கின்றன; அசைகின்ற கணுக்களைக் கொண்ட மூங்கில் மரங்கள், வானில் அசைந்து செல்லும் மேகங்களைக் கிழிக்கின்றன. அத்தகைய உச்சியைக் கொண்ட மலைக்கு உரிமையுடையவன், நம் தலைவன். அவன், முன்பு நாம் கூடியிருந்த காலத்தில் என் கைகளைத் தன் கண்ணில் ஒற்றியும், தன் கைகளால் எனது நல்ல நெற்றியைத் தடவியும், தாய்போல இனிய சொற்களைக் கூறியும் அன்பு காட்டினான். இப்போது கள்வரைப்போலக் கொடியவனாய் உள்ளான். அவன் இயல்பு ஏன் இத்தகையதாயிற்று?" என்று தோழி தலைவியிடம் வினவினாள்.

கருத்து

தலைவியே! முன்பு அன்பு காட்டியவன் இப்போது கொடியவனா யுள்ளான். அவன் செயலை நினைந்து வாடி நலனழியாதிருத்தலே, இனி செய்யத்தக்கது.

விளக்கம்

இனியவன்போல நம்மோடு இருந்தவன் கள்வனைப் போலப் பிரிந்துவிட்டான் எனத் தோழி தலைவனின் இயல்பைப் பழிப்பதுபோலப் பேசினாள். 'நாம் ஆற்றாது இருப்பதால் தானே இப்படிப் பழித்துப் பேசுகிறாள். நாம் ஆற்றி, இயல்பாய் இருந்தால் தலைவனைத் தோழி பழிப்பதற்கிடமில்லை யன்றோ?' என்று, தலைவி ஆற்றியிருப்பாள் எனக் கருதியே தோழி இவ்வாறு கூறினாள்.

குறிப்பு

அகப்பொருளில் தோழியும் தலைவியும் தான் வேறு, மற்றவள் வேறு என்று கொள்ளார். அதனால், தலைவன் தலைவிக்கு அருளியதைத் தோழி தன் மேலேற்றிக் கூறுகிறாள். தோழி 'என்' என்று கூறுவது இங்குத் தலைவியையே குறிக்கும்.

சொற்பொருள்

1. ஒற்றுதல் - ஒட்டிக்கொள்ளுதல்.
2. நல் நுதல் - நல்ல நெற்றி.
3. அன்னை - தாய்.
4. கள்வர் - திருடர்.
5. மணி - நீலமணி; இழிதரும் - கீழிறங்கும், வீழும்.
6. வேங்கை - வேங்கை மலர்கள்; தாய - பரவிக் கிடக்கும்; அடுக்கம் - பக்க மலை.
7. ஆடு கழை - அசைகின்ற மூங்கில்; நிவந்த - ஓங்கி வளர்ந்த; பைங்கண் - பசிய கணுக்கள்.
8. ஒடு மழை - அசைந்து செல்லும் மேகம்; சென்னி - உச்சி.
10. கோடுஉயர் - உயர்ந்த சிகரங்கள்; பிறங்கல் - மலை; மலை கிழவோன் - மலைக்குரிய தலைவன்.

தோழி கூற்று

நற்றிணை 92 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவால் நலனழிந்திருந்த தலைவியை நோக்கித் தோழி, 'தலைவன் நம் வேதனையை அறிய இயலாதவனாயும் அன்பற்ற வனாயுமிருக்கிறான்' என்று அவன் இயல்பைப் பழிப்பதுபோலக் கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறியது.

உள்ளார் கொல்லோ தோழி! துணையொடு
வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி, அவண
வறன்பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்
வேட்டச் சீறூர் அகன்கண் கேணிப்
பயன்நிரைக்கு எடுத்த மணிநீர்ப் பத்தர்,
புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர,

வில்கடிந்து ஊட்டின பெயரும்
கொல்களிற்று ஒருத்தல் சுரன்இறந் தோரே?

தெளிவுரை

“தலைவி! முதுவேனில் கோடை வெம்மையால் வருந்திய நடை கொண்ட ஒந்தி ஆகிய வழலை, தன் துணையோடு, வரிகளைக் கொண்ட மரல் மரத்தின் குருத்தைப்போல் வாடி, அங்குள்ள வற்றிய மரங்களில் பொருந்தியிருக்கும். அவ்விடத்தே வறட்சி யுற்ற குன்றத்தின் உச்சியின் ஒரு பக்கத்தே வேட்டுவர் வாழும் சிற்றூர் இருக்கும். அதையடுத்துள்ள அகன்ற மேற்புறத்தைக் கொண்ட கிணற்றின் கரையில் பால் தரும் பசுக்கள் குடிப்பதற் காகக் கட்டப்பட்ட தொட்டியில், வேடுவர் தெளிந்த நீரை நிறைத்திருப்பர். அத்தொட்டியின்மேல் நிறுவியுள்ள விற் பொறியை அகற்றிவிட்டு, ஆண்யானை, தன் இளைய பெண் யானையையும் கன்றினையும் நீரருந்தச்செய்து அகன்று செல்லும். பாலை நிலத்தில் இத்தகைய காட்சிகளைக் கண்டும், நம்மைப்பற்றி நினைத்துத் திரும்புகின்ற எண்ணமின்றி அன்பில்லாதவர் ஆயினார், நம் தலைவர். நாம் மட்டும் அவரை நினைத்து வருந்தியிருப்பதில் என்ன பயன்?” என்று கூறித் தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு சொல்கிறாள்.

கருத்து

அவர் அன்பிலர்; நம்மை நினைத்திலர்; அவர் குறித்து நீ ஏங்கி அழிதல் வேண்டா.

விளக்கம்

“வெப்பம் மிக்க பாலையில் உள்ள விலங்குகள்கூடத் தம் துணையைப் பிரியாது அன்புடனிருக்கின்றன. வெப்பத்தால் வருந்தி மெலிந்த ஒந்தி தன் துணையுடன் மரத்தில் பொருந்தி யிருக்கிறது. வேடுவர்கள் பசுக்களுக்காகத் தொட்டியில் தண்ணீரை ஊற்றி மூடி வைத்திருந்தனர். ஆண்யானை, அம் மூடியை நீக்கிவிட்டுத் தன் பெண்யானையையும் கன்றினையும் நீரருந்தச்செய்து அழைத்துச் செல்கின்றது. இக்காட்சிகளைக் கண்டும் நம் மேல் அன்பு கொண்டு உடனே திரும்பாத தலைவன்பொருட்டு நாம் மட்டும் வருந்தி என்ன பயன்?” என்று

தலைவியிடம் கூறிய தோழி, அவளை ஆற்றியிருக்குமாறு சொல்லுகிறாள்.

குறிப்பு

அகப்பொருளில் தோழியும் தலைவியும் தான் வேறு, மற்றவள் வேறு என்று கருதாது வாழ்வர். அதனால் தலைவி கூற்றைத் தன் கூற்றாகத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. உள்ளார் கொல் - நினைக்க மாட்டாரோ?
2. ஓதி - ஓந்தி; பாடு நடை - வருந்திய நடையைக் கொண்ட; வழலை - ஓந்தி ஆகிய வழலை.
3. வரிமரல் - வரிகளைக் கொண்ட கற்றாழை; நுகும்பு - இளமடல், குருத்து; அவண - அங்குள்ள.
4. வறன் - வற்றிய மரங்களில்; பொருந்து - பொருந்தியிருக்கும்; கவாஅன் - பக்க மலை.
5. வேட்டச் சீறூர் - வேட்டுவர்களின் சிறிய ஊர்; அகன்கண் - அகன்ற மேற்புறத்தைக் கொண்ட; கேணி - கிணறு.
6. பயன் நிரை - பயன் (பால்) தரும் பசுக்கூட்டம்; பத்தர் - பள்ளம், தொட்டி.
7. புன்தலை - சிறிய தலை; மடப்பிடி - இளம் பெண்யானை; ஆர - அருந்த.
8. வில் கடிந்து - (தொட்டியின் மேல் நிறுவப்பட்டுள்ள) விற்பொறிகளை அகற்றிவிட்டு; ஊட்டின - நீர் குடிக்கச் செய்து; பெயரும் - நீங்கும்.
10. கொல் களிற்று - கொல்லும் தன்மை கொண்ட களிறு; ஒருத்தல் - தலைமை கொண்ட ஆண், கொல்லுதலில் வல்ல.

தோழி கூற்று

நற்றிணை 189 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்த தலைவி பெரிதும் கவலையுடன் வருந்தி யிருந்தாள். தோழி அவளிடம் தலைவன் விரைவில் திரும்புவான் என்று கூறி, வருத்தம் கொள்ளாதிருக்குமாறு வற்புறுத்திச் சொல்லியது.

தம்அலது இல்லா நம்நயந்து அருளி
இன்னும் வாரார்; ஆயினும், சென்னியர்,
தெறல்அருங் கடவுள் முன்னர்ச் சீறியாழ்
நரம்புஇசைத் தன்ன தீங்குரல் குருகின்
கங்கை வங்கம் போகுவர் கொல்லோ
எவ்வினை செய்வர்கொல் தாமே? வெவ்வினைக்
கொலைவல் வேட்டுவன் வலைபரிந்து போகிய
கானப் புறவின் சேவல் வாய்நூல்
சிலம்பி அம்சினை வெரூஉம்,
அலங்கல் உலவையங் காடுஇறந் தோரே.

தெளிவுரை

"கொலைத்தொழிலில் வல்லவனாகிய வேட்டுவன் விரித்து வைத்த வலையை அறுத்துக் கொண்டு பறந்த காட்டுச் சேவற்புறா, சிலந்தி வாயில் உண்டாகும் நூலாலே கட்டப்பட்ட வலையைக் கண்டஞ்சியது. அத்தகைய காட்சியினைக் கொண் டதும், சூறைக்காற்று சுழன்றடிக்கும் இடமுமான பாலைநில வழியில் நம் தலைவர் சென்றுள்ளார். அவரில்லாமல் வாழ இயலாத நமக்கு, விரும்பி அருள் செய்வதற்கு அவர் இன்னும் வரவில்லை! என்றாலும், வேறு எங்கே செல்வார்? சினத்தைக் கொண்ட தெய்வத்தின் முன்பு அத்தெய்வத்தின் சினத்தைத் தணிப்பதற்காகப் பாணர் நரம்பை மீட்டி இசைப்பது போன்ற குரலினைக் கொண்ட குருகுப் பறவைகள் நிறைந்திருக்கும்

கங்கையாற்றில் ஓடும் வங்கத்திலேறி எங்காவது சென்றிருப்பார் என்று கருதுகின்றாயா? வேறு ஏதேனும் தொழில் கருதி அகன்றிருப்பாரோ என்று ஐயப்படுகிறாயா? அவர் ஓரிடத்துக்கும் போகார்; பொருளீட்டி முடிந்ததும் உடனே வருவார். வருந்தாதே; ஆற்றியிரு" எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

தலைவர் வேறெங்கும் செல்ல மாட்டார்; பொருளீட்டி முடிந்ததும் உடனே திரும்பி வருவார்; வருந்தாதே; ஆற்றியிரு.

விளக்கம்

தலைவி! அவரின்றி ஒரு நொடி நேரமும் நம்மால் வாழ்தல் இயலாது என்பதை நன்கு அறிந்தவர், அவர். அதனால் தாம் மேற்கொண்ட செயல் முடிந்தவுடனே காலந்தாழ்த்தாது திரும்ப வந்து சேர்வார். 'அவர் கங்கையிலே வங்கமேறி வேறு எங்கேனும் சென்றுவிடுவார்; அல்லது வேறு ஏதேனும் தொழில் செய்யக் கருதியிருப்பார்' என்று கருதுகிறாயா? அவ்வாறு ஒருபோதும் நடவாது. தம் பணி முடிந்ததும் உடனே திரும்புவார்; வருந்தாதே! பொறுத்திரு!

இறைச்சி

கொலைவல் வேட்டுவன் வலைபரிந்து போகிய கானப் புறவின் சேவல் வாய்நூல் சிலம்பி அம்சினை வெரூஉம் - வேட்டுவன் விரித்த வலையில் சிக்கித் தப்பிய புறாச்சேவல், சிலந்தியின் வலை தனக்கொரு கேடும் செய்யாதெனினும், தான் முன்னர் அகப்பட்டுக் கொண்ட வலையின் நினைவினாலே அதனையும் கண்டு அஞ்சும். இவ்வடி மூலம், முன்னர்க் களவுக் காலத்தில் சிறு பிரிவுக்கே நலனழிந்த தலைவி, இப்போது தலைவன் பொருள்வயிற் பிரிந்ததற்கு அஞ்சுகிறாள் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. தம் அலது இல்லா - தம்மையன்றி வேறு பற்றுக்கோடில்லாத; நம் - நம்மை; நயந்து - விரும்பி; அருளி - அருள் செய்து.
2. ஆயினும் - ஆராயுமிடத்து; சென்னியர் - பாண குடியினர்.

3. தெறல் அரும் - தண்டித்தலில் வல்ல (கடவுள் முன் யாழ்நரம்பை இசைத்ததுபோல).
4. தீங்குரல் - இனிய குரலைக் கொண்ட; குருகு - நீர் நாரைகள் (வாழும்).
5. கங்கை - கங்கையாற்றில் ஓடும்; வங்கம் - தோணியில்; போகுவர் கொல்லோ - போயிருப்பாரோ?.
6. வெவ்வினை - கொடிய தொழில் செய்யும்.
7. வலைபரிந்து போகிய - வலையை அறுத்துக்கொண்டு சென்ற.
8-9. வாய்நூல் சிலம்பி - சிலந்தி தன் வாயினின்று வெளிப்படும் நூலினால் ஆன கூடு (அமைந்துள்ள).
9. அம்சினை - அழகிய மரக்கிளையைக் கண்டு; வெரூஉம் - அஞ்சி நீங்கும்.
10. அலங்கல் - அசைகின்ற; உலவை - வறட்சி; இறந்தோர் - கடந்து சென்ற காதலர்.

(காட்டினைக் கடந்து சென்ற தலைவர் கங்கையாற்றில் வங்கத்தில் ஏறி எங்கேனும் சென்றிருப்பாரா?; சென்றிருக்க மாட்டார்; திரும்ப வந்து சேர்வார்; ஆற்றியிரு.)

தோழி கூற்று

நற்றிணை 208 **நொச்சி நியமங்கிழார்**

திணை : பாலை

கூற்று

செலவுற்றாரது குறிப்பறிந்து ஆற்றாளாய தலைமகள் உரைப்பத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுதல் காரணமாகத் தலைவன், தலைவியைப் பிரிந்துள்ளான். அதனால் தலைவி பெரிதும் வருந்தி நலிய, அவளைத் தேற்றுவதற்காகத் தோழி கூறியது.

விறல்சாய் விளங்குஇழை நெகிழ விம்மி,
அறல்போல் தெள்மணி இடைமுலை நனைப்ப,
விளிவுஇல கலுழும் கண்ணொடு பெரிதுஅழிந்து,
எவன்இனைபு வாடுதி? சுடர்நுதற் குறுமகள்!
செல்வார் அல்லர்நம் காதலர்; செலினும்,
நோன்மார் அல்லர் நோயே; மற்றுஅவர்
கொன்னும் நம்பும் குரையர் தாமே;
சிறந்த அன்பினர்; சாயலும் உரியர்;
பிரிந்த நம்மினும் இரங்கி, அரும்பொருள்,
முடியாது ஆயினும் வருவர்; அதன்தலை,
இன்துணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலும்,இப் பெருமழைக் குரலே!

தெளிவுரை

ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட இளமகளே! உன் மேனியழகு வேறுபட்டு அழகிய அணிகள் யாவும் நீங்கும் படியாய் விம்முகின்றாய். முத்துப்போலும் கண்ணீர்த்துளிகள் மார்பகங்களினிடையே விழுந்து நனைந்தபடி உள்ளன. விடாது அழுகின்ற கண்களோடு பெரிதும் நலனழிந்து நீ எதனை நினைந்தோ வாடுகின்றாய். நம் காதலர் உன்னைப் பிரிந்து செல்பவரே அல்லர்! அவ்வாறே சென்றாரானாலும், தமக்கு உண்டாகும் காமநோயைப் பொறுத்திருப்பவரும் அல்லர். அவர் உன்னிடம் மிகுந்த விருப்பமும், சிறந்த அன்பும் கொண்டவர்; மிக்க மென்மைத் தன்மை வாய்ந்தவர். அவரைப் பிரிந்து வாழும் நம்மைவிட இரக்கம் மிக்கவர். அவர் தாம் தேடிச் சென்ற அரும் பொருள் ஈட்டி முற்றுப்பெறாத நிலையில் இருந்தாலும், காலத்தை நீட்டியாது, உடனே நம்மிடம் வந்து சேர்வார். மேலும், பெரிய மேகத்தின் இடி முழக்கமும், 'இனிய துணையினைப் பிரிந்திருப்போரே ஒன்றுசேருங்கள்' என்று சொல்வதுபோலும் ஒலிக்கின்றது. நீயும் இனி வருந்தாதிரு.

கருத்து

தலைவர் உன் பிரிவைப் பொறுத்திடாதவர்; உரிய காலத்தில் வந்து சேர்வார்; வருந்தாதிரு.

விளக்கம்

"தலைவி! நீ இளையள் ஆதலின், வாழ்க்கையின் இயல்பையும் தலைவனின் மன மாண்பையும் அறியாமல் பிரிவு ஏற்பட்டதை நினைந்து கண்ணீர் சொரிந்து வருந்துகின்றாய். காதலர் உன்னைப் பிரிந்து செல்பவர் அல்லர்; செல்ல நேரிட்டாலும் பிரிவுத் துன்பத்தை ஆற்றும் இயல்பினரும் அல்லர். உன்னைப் பெரிதும் காதலிப்பவராதலின், சிறந்த அன்பினையும் மென்மை யினையும் கொண்டவர்; மேலும், அவர் நம்மினும் பிரிவைப் பொறுத்திட இயலாதவர்; ஆதலின், செல்லுமிடத்தில் குறித்த காலத்திற்குள் பொருளை ஈட்ட இயலவில்லை என்றாலும், அவர் தவறாது வந்து சேர்வார். ஒரு வேளை அவர் மறந்தாலும், அவர் குறித்த காலத்தை மேக முழக்கம் அவருக்கு நினைப்பூட்டி உடனே வந்து சேரச் செய்யும்" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

சொற்பொருள்

1. விறல் - பெருமை; நெகிழ - நீங்கும்படியாக.
2. தெள்மணி - தெள்ளிய மணி போலும் கண்ணீர்த்துளிகள்.
3. விளிவு இல - இடையறவு இன்றி; கலுழும் - அழுகின்ற.
4. எவன் - எதனை நினைந்து; இனைபு - மெலிந்து.
5. செல்வார் அல்லர் - செல்ல மாட்டார்.
6. நோன்மார் - பொறுப்பவர்; நோய் - காமநோய்.
7. கொன் - மிகுதி; நம்பு - விருப்பம்; குரைய - ஓர் அசை நிலை.
8. சாயல் - மென்மைத் தன்மை.
9. நம்மினும் - நம்மைவிட.
10. அதன் தலை - அதன் மேலும்.

11-12. நாடித் தருவதுபோலும் - உறையுமிடத்தை நாடிச் சென்று அவரைக் கொணர்ந்து கூட்டுவது போன்று உளது.

12. பெருமழை - பெரிய மழை முகில்; குரல் - முழக்கும்.

தோழி கூற்று

குறுந்தொகை 59 **மோசிகீரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை அழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. (அழிந்த - வருந்திய; வற்புறுத்தியது - ஆற்றியிருக்கச் சொல்லியது.)

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடச் சென்ற காலத்தில் அவனது பிரிவை ஆற்றாமல் வருந்திய தலைவியை நோக்கி, 'தலைவர் உன்னை என்றும் மறவாதவர்; பொருள் தேடவும் காலம் நீட்டித்திட மாட்டார்; உடனே திரும்புவார்' என்று தோழி கூறியது.

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத்து அகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையொடு பொதிந்த குளவி நாறும்நின்
நறுநுதல் மறப்பரோ? மற்றே முயலவும்,
சுரம்பல விலங்கிய அரும்பொருள்
நிரம்பா ஆகலின், நீடலோ இன்றே.

தெளிவுரை

"கிணைப்பறை என்னும் இசைக்கருவியைத் தாளத்தோடு இசைக்கும் பரிசிலர்களைப் பாதுகாக்கும் தலைவன், அதலை என்னும் குன்றில் உள்ளவன். அக்குன்றின் அகலமான மேற்பரப்பையும் மிக்க ஆழத்தையும் கொண்ட சுனையில் பூத்த குவளை மலர்களோடு சேர்த்துக் கட்டிய காட்டுமல்லிகையின் மணத்தினைக் கொண்ட உன் நெற்றியைத் தலைவர் என்றும் மறவாதவர். பாலைநில வழிகள் இடையிட்ட நாடுகளுக்குச் சென்று அரிய பொருளைத் தேடுதற்குப் பல நாள் தங்கியிருந் தாலும், முற்றாகக் கிட்டாது. ஆதலின், பொருளை முற்றும் பெற்றே மீள்வேன் என்று தலைவர் தன் பிரிவினை நீட்டித்திட மாட்டார் (விரைந்து திரும்புவார்; வருந்தாதே)" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

கருத்து

'தலைவர் உன்னை எப்போதும் மறவாதவர்; பொருள் ஈட்டுவதில் காலத்தையும் வீணே நீட்டித்திட மாட்டார்; வருந்தாதே! உடனே திரும்புவார்!' எனத் தோழி தலைவியைத் தேற்றினாள்.

விளக்கம்

"தலைவர் பிரியும்போது உன் நெற்றியைத் தடவிக் கொடுத்தார்; இன்னுரைகள் பல கூறினார்; தம் வருகை நீடித்தால், உன் அழகு சிதையும் என்பதையும் அவர் அறிவார். சுனைகளில் பூத்திருக்கும் மலர்களைக் காணும்போதெல்லாம், உன் முகத்தோற்றமே அவர் கண்முன் நிற்கும். ஆதலின், விரைவில் வருவார்; வருந்த வேண்டா" எனச் சொல்லித் தலைவியைத் தோழி தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. பதலை - கிணைப்பறை என்னும் இசைக்கருவி; பாணி - தாள ஒழுங்கு.
2. அகல் வாய் - அகன்ற மேற்புறம்; குண்டு - ஆழம்.
3. பொதிந்த - சேர்த்துக் கட்டிய; குளவி - காட்டுமல்லிகை; நாறும் - மணக்கும்.
5. சுரம் - பாலை வழி; விலங்கிய - இடையிட்ட.
6. நீடல் - நீளுதல், நீட்டித்தல்; இன்று - இல்லை.

திருக்குறள் - அதிகாரம் 124 உறுப்பு நலன் அழிதல்.

தோழி கூற்று

திருக்குறள் 1231 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்க முடியாது வருந்தியிருந்த தலைவியைப் பொறுத்திருக்குமாறு தோழி சொல்லியது.

சிறுமை நமக்(கு)ஒழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

தெளிவுரை

"*பிரிவாற்றாமையால் வரும் துன்பத்தை நமக்குத் தந்து, நெடுந் தொலைவு சென்றுள்ளார், நம் தலைவர். அவரை நினைத்து அழுதமையால் உன் கண்கள் முன்பிருந்த அழகை இழந்து, நறுமணமுள்ள மலர்களைக் காணும்பொழுது நாணம் அடைகின்றன" என்று கூறித் தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறினாள்.*

கருத்து

ஆற்றாமையால் உன் கண்கள் அழகிழந்தன; ஆதலின் ஆற்றியிரு.

விளக்கம்

தலைவியின் கண்கள் மலர்களின் அழகை விஞ்சிப் பெருமை பெற்றிருந்தன. மலர்கள், தாம் அழகிய தலைவியின் கண்களைப் போன்றில்லையே என நாணம் கொண்டிருந்தன. இப்போது தலைவியின் கண்கள் வருந்திக் குலைந்து அழகிழந்திருந்ததால் அவை, அழகு கொண்ட பூக்களைக் காண நாணம் அடைகின்றன.

குறிப்பு

நாணியவரைக் கண்டு நாணம் அடைதல் கொடுமை.

சொற்பொருள்

1. சிறுமை - ஆற்றாமையால் வரும் துன்பத்தை; சேண்சென்றார் - நெடுந்தொலைவு சென்றுள்ள தலைவரை; உள்ளி - நினைத்து (அழுதமையால்).
2. கண் - (அழகிழந்த உன்) கண்கள்; நறுமலர் - (முன்னே தமக்கு நாணிய) நறுமண மலர்களுக்கு; நாணின - (இன்று) நாணுகின்றன.

தோழி கூற்று

திருக்குறள் 1232 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்க முடியாது வருந்தியிருந்த தலைவியைப் பொறுத்திருக்குமாறு தோழி சொல்லியது.

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.

தெளிவுரை

நிறம் வேறுபட்டு கண்ணீரைச் சொரியும் உன் கண்கள், நீ அன்பு செலுத்தியவர் உனக்கு அன்பு செய்யாமையை ஊராருக்குச் சொல்லுவனபோல இருக்கின்றன.

கருத்து

நீர் சொரியும் கண்கள், தலைவர் அருள் செய்யாமையைப் பிறர்க்குச் சொல்வனபோல உள்ளன.

விளக்கம்

'தலைவர் பிரிவால் பசலை நோய் அடைந்து ஓயாமல் நீர் சொரியும் உன் கண்கள், தலைவர் அன்பு காட்டாமல் அகன்று

விட்டதைப் பிறர்க்குச் சொல்வனபோல் இருக்கின்றன. இதனைக் காணுவோர் காதலரைக் குறை கூறுவர். ஆதலின் ஆற்றியிரு' எனத் தலைவிக்குத் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

ஆற்றியிருந்து அழுதலை நிறுத்து.

சொற்பொருள்

2. பசந்து - நிறம் வேறுபட்டு; பனி வாரும் கண் - நீர் சொரியும் உன் கண்கள்.
1. நயந்தவர் - நீ விரும்பிய தலைவர்; நல்காமை - உனக்கு அன்பு செய்யாமையை; சொல்லுவ போலும் - (ஊராருக்கு) சொல்லுவன போல இருக்கின்றன.

தோழி கூற்று

திருக்குறள் 1233 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்க முடியாது வருந்தியிருந்த தலைவியைப் பொறுத்திருக்குமாறு தோழி சொல்லியது.

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

தெளிவுரை

கூடியிருந்த காலத்தில் பூரித்திருந்த தலைவியின் தோள்கள், மெலிந்து, தலைவன் பிரிந்தமையை நன்றாகப் பிறர்க்குத் தெரிவிக் கின்றன.

கருத்து

தலைவியின் மெலிந்த தோள்கள், தலைவன் பிரிவைப் பிறர்க்கு வெளிப் படுத்துகின்றன.

விளக்கம்

கூடியிருந்த காலத்தில் இன்ப மிகுதியால் தலைவியின் தோள்கள் பூரித்துப் பருத்திருந்தன. இன்று தலைவனைப் பிரிந்திருப்பதால், அவை வாடி இளைத்திருக்கின்றன. அந்த வாட்டம் தலைவன் பிரிவைப் பிறர்க்கு வெளிப்படுத்துகிறது. (ஆதலால் உன் துன்பத்தை வெளிப்படுத்தாது 'ஆற்றியிரு' என்கிறாள் தோழி!)

குறிப்பு

உடல் உறுப்புகள் இன்பக் களிப்பால் பூரிக்கும்; துன்ப மிகுதியால் மெலியும்.

சொற்பொருள்

2. மணந்த நாள் - (தலைவனொடு) கூடியிருந்த காலத்தில்; வீங்கிய தோள் - பூரித்துப் பருத்திருந்த தோள்கள்.
1. (மெலிந்து) தணந்தமை - தலைவன் பிரிந்தமையை; சால அறிவிப்ப - நன்றாகப் பிறர்க்குத் தெரிவிப்பன; போலும் - போன்றிருக்கிறது.

தோழி கூற்று

திருக்குறள் 1234 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்க முடியாது வருந்தியிருந்த தலைவியைப் பொறுத்திருக்குமாறு தோழி சொல்லியது.

பணைநீங்கிப் பைந்தொடி சோரும், துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

தெளிவுரை

துணைவரைப் பிரிந்தமையால், உன் பழைய அழகு கெட்டு மெலிந்த தோள், தன் பருமை குறைந்து பசிய வளையல்களைக் கழலச் செய்கிறது.

கருத்து

தலைவன் பிரிவால் தலைவியின் தோள் வாடி மெலிந்து வளையல் களைக் கழலச் செய்கின்றது.

விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியின் அழகு கெட்டு உடலுறுப்புகள் இளைத்துச் சுருங்கின. அதனால் தோளிலணிந் திருந்த வளையல் கழன்று விழுந்தது. ('இவை நேராவண்ணம் நீ ஆற்றியிரு' என்று தோழி, தலைவிக்குக் கூறுகிறாள்.)

குறிப்பு

பிரிவினால் வருந்தும் தலைவியின் உடல் உறுப்புகள் மெலிவதால், அணிகலன்கள் கழலும் அல்லது தளரும்.

சொற்பொருள்

1. துணை நீங்கி - துணைவரைப் பிரிந்தமையால்.
2. தொல் கவின் வாடிய தோள் - பழைய அழகு கெட்டு மெலிந்த தோள்கள்.
1. பணைநீங்கி - பருமை குறைந்து (இளைத்து); பைந்தொடி - பசிய வளையல்களை; சோரும் - கழலச் செய்யும்.

தோழி கூற்று

திருக்குறள் 1235 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுக்க முடியாது வருந்தியிருந்த தலைவியைப் பொறுத்திருக்குமாறு தோழி சொல்லியது.

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

தெளிவுரை

வளையல்களும் கழன்று பழைய அழகும் கெட்டு மெலிந் திருக்கும் தோள்கள், இரக்கமின்றிப் பிரிந்து சென்ற தலைவனின் கொடுமையைத் தெரிவிக்கின்றன.

கருத்து

தோள் மெலிந்து கழன்று விழும் வளையல்கள், தலைவனின் கொடிய தன்மையைத் தெரிவிக்கின்றன.

விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவி வருந்தியிருப்பதை, இளைத்த தோள்கள் காட்டுகின்றன. கழன்று விழும் வளையல்கள், அவன் கொடுமையைத் தெரிவிக்கின்றன.

குறிப்பு

தலைவியின் பிரிவுத் துயரை அழகிழப்பும், உறுப்பு இளைப்பும், அணி கழல்தலும் அறிவித்துவிடுகின்றன.

சொற்பொருள்

1. தொடியொடு - வளையல்கள் கழன்று.
2. தொல்கவின் - பழைய அழகும் கெட்டு; வாடிய தோள் - மெலிந் திருக்கும் தோள்கள்.
1. கொடியார் - தலைவனின்; கொடுமை - கொடுமையை; உரைக்கும் - தெரிவிக்கும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1236 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தான் ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வாராமையால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைவன் கொடியவன் எனக் குறை கூறிப் பேசிய தோழிக்குத் தலைவி கூறியது.

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

தெளிவுரை

என் கைவளைகள் கழல்வதையும், தோள்கள் மெலிவதையும் கண்டு, என் தலைவரைக் கொடியவர் என்று பிறர் கூறுவதைப் பொறுக்காமல் வருந்துகிறேன்.

கருத்து

தலைவரைப் பிறர் குறை கூறுவதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

விளக்கம்

தலைவர் பிரிந்திருப்பதைத் தலைவியால் பொறுத்திருக்க முடியவில்லை. அவள் உடல் இளைத்து அணிகலன்கள் கழன்று விழுகின்றன. இதற்குக் காரணமாய் விளங்கும் தலைவரைப் பிறர் பழி கூறுவதை அவளால் பொறுக்க முடியவில்லை.

குறிப்பு

தலைவரைப் பழித்துப் பேசிய தோழியைத் தலைவி, 'பிறர்' என்று குறிப்பிடுகிறாள். (தனக்கு மிகவும் அணுக்கமான தோழிகூடத் தலைவரைப் பழிப்பதைத் தலைவி விரும்பவில்லை.)

சொற்பொருள்

1. தொடியொடு தோள் நெகிழ - என் வளையல்கள் கழல்வதையும் தோள்கள் மெலிவதையும் (கண்டு); அவரை - தலைவரை.
2. கொடியர் எனக் கூறல் நொந்து - கொடியவர் என்று பிறர் கூறுதலைப் பொறுக்காது வருந்துகின்றேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1237 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

அவ் இயற்பழிப்புப் பொறாது தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இயல்பைத் தோழி குறை கூறிப் பேசியதைப் பொறுக்க முடியாத தலைவி, தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

பாடு பெறுதியோ நெஞ்சே! கொடியார்க்(கு)என்
வாடுதோள் பூசல் உரைத்து.

தெளிவுரை

மனமே! எனக்கு இவ்வளவு கொடுமை செய்துவிட்ட தலைவரிடம் சென்று, என் தோள் மிகவும் மெலிந்து வளையல்கள் கழன்று ஓசையிடுவதைச் சொல்லி அவரை இங்கு அழைத்து வந்து பெருமை கொள்ளமாட்டாயா? (அவ்வாறு நீ வரச் செய்தால் அவரை யாரும் இயற்பழித்துப் பேசமாட்டா ரன்றோ?

கருத்து

மனமே! நீ தலைவனிடம் சென்று என் மெலிவை எடுத்துச் சொல்லி, அவரை உடனே அழைத்து வந்து பெருமை பெறமாட்டாயா?

குறிப்பு

தலைவரைத் தோழி இயற்பழித்துப் பேசுவதை நிறுத்த, அவரை உடனே இங்கு அழைத்து வரவேண்டும்.

சொற்பொருள்

1. நெஞ்சே! - மனமே!; கொடியார்க்கு - எனக்கு இவ்வளவு கொடுமை செய்து விட்ட தலைவரிடம் சென்று.

1-2.என் வாடுதோள் பூசல் உரைத்து - என் தோள் மிகவும் மெலிந்து வளையல் கழன்று ஓசையிடுவதைச் சொல்லி.

1. பாடு பெறுதியோ - (அவரை இங்கு அழைத்து வந்து) பெருமை பெற மாட்டாயா?

தோழி கூற்று

குறுந்தொகை 130 — **வெள்ளி வீதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. 'நீ அவர் பிரிந்தாரென்று ஆற்றாயாகின்றது என்னை? யான் அவர் உள்வழி அறிந்து தூது விட்டுக் கொணர்வேன். நின் ஆற்றாமை நீங்குக' எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருக்கும்போது வருந்தியிருந்த தலைவியிடம், 'அவர் எங்கிருந்தாலும் தேடிக் கொண்டு வருவேன்; வருந்தாதே' என்று உறுதிபடத் தோழி ஆறுதல் கூறியது.

நிலம்தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்குஇரு முந்நீர் காலின் செல்லார்;
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்,
கெடுநரும் உளரோ?நம் காத லோரே.

தெளிவுரை

"நம் அன்பிற்குரிய தலைவர், நிலத்தைத் தோண்டி அதனுள்ளே புகுந்துவிடமாட்டார்; வானத்தில் ஏறி மேலே சென்று மறைந்துவிடவுமாட்டார்; குறுக்கிட்டுக் கிடக்கும் கடலில் காலால் நடந்து சென்று தொலை நாடுகளுக்குச் சென்றுவிடவு

மாட்டார்; அவரை, உலகில் உள்ள ஒவ்வொரு நாடாய், ஒவ்வொரு ஊராய், ஒவ்வொரு குடியாய்த் தேடி ஆராய்ந்து பார்த்தால், அவர் அகப்படாமல் தப்பமாட்டார்."

கருத்து

தலைவர் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து சேர்ப்பேன்; நீ தளராதிரு.

குறிப்பு

நிலத்தினுள் புகுந்து வாழ்தல், வானத்தில் செல்லுதல், நீர்மேல் நடத்தல் ஆகியவைபற்றிய எண்ணம் பண்டைத் தமிழரிடத்தில் இருந்திருக்கிறது.

சொற்பொருள்

1. தொட்டு - தோண்டி; புகார் - புகுந்துவிடமாட்டார்.
2. விலங்கு - குறுக்காய்; இரும் - பெரிய; முந்நீர் - கடல்; காலின் - காலால் நடந்து.
4. குடிமுறை - தனித்தனிக்குடி; தேரின் - ஆராய்ந்து பார்த்தால்.
5. கெடுநரும் உளரோ? - அகப்படாமல் இருப்பாரோ?

திருக்குறள் - அதிகாரம் 127 அவர்வயின் விதும்பல்.

தலைவி கூற்று

திருக்குறள் 1261 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் காண்டல் விதுப்பினால் சொல்லியது. (விதுப்பு - பரபரப்பு.)

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்திருந்த தலைவி, அவனை விரைவில் காண வேண்டும் எனும் பரபரப்புடன் தோழிக்குச் சொல்லியது.

வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல்.

தெளிவுரை

காதலரின் வரவினை எதிர்நோக்கிப் பார்த்துப் பார்த்து என்னுடைய கண்களும் ஒளியிழந்து அழகு கெட்டன. அவர் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரில் குறியிட்டு வைத்த கோடுகளை எண்ணி எண்ணி என் விரல்களும் தேய்ந்தன.

கருத்து

காதலன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால், அவள் மனம் பரபரப்படைகிறது.

விளக்கம்

காதலன் பிரிந்த நாளிலிருந்து காதலி ஒவ்வொரு நாளும் சுவரில் கோடிட்டு, அவன் சென்று எத்தனை நாள்கள் ஆயின என்று நாளும் அவற்றை எண்ணிக் கொண்டிருப்பாள். இவ்வாறு கோடு போட்டு அவள் விரல் தேய்ந்தது. அவன் வரவை எதிர்பார்த்து அவள் கண்களும் ஒளியிழந்தன.

குறிப்பு

பண்டை நாள்களில் ஒருவர் பிரிந்த நாளிலிருந்து சுவரில் ஒவ்வொரு நாளும் ஒரு கோடிட்டு, அக்கோடுகளை எண்ணி அவர் சென்று எத்தனை நாள்கள் ஆயின எனக் கணக்கிட்டு அறிவது வழக்கமாயிருந்தது என்பது தெரிகிறது.

சொற்பொருள்

1. **கண்ணும் - கண்களும்; வாள் அற்று - ஒளியிழந்து; புற்கென்ற - ஒளியிழந்துவிட்டன.**
2. **விரல் - விரலும்.**

1-2.**அவர் சென்ற நாள் ஒற்றி - அவர் சென்ற நாளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோடு வரைந்து வந்ததால்; தேய்ந்த - தேய்ந்து போயின.**

தலைவி கூற்று

திருக்குறள் 1262 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதலின் இடையறாது நினைக்கற்பாலையல்லை, சிறிது மறக்க வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது. (நினைக்கற்பாலையல்லை - நினைக்க வேண்டா.)

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவால் அவனையே நினைந்து இடைவிடாது வருந்தி யிருப்பதை மறந்து ஆற்றியிருத்தல் வேண்டும்' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

இலங்கிழாய்! இன்று மறப்பின்என் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து.

தெளிவுரை

அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! (பிரிவால் வாடும் நான், என் காதலரை நினைத்துக் கொண்டிருப்பதால் உயிர் வாழ்ந்திருக்கிறேன்.) நீ சொல்வதுபோல் அவரை மறந்தால், என் உடல் இளைத்துத் தோள் வளைகள் கழன்று விழும்; என் அழகும் அழிந்துவிடும்.

கருத்து

அவரை மறந்தால் என் வளை கழலும்; அழகு அழியும்.

விளக்கம்

தோழி! அவரை மறந்து ஆற்றியிருக்க வேண்டும் என்கிறாய். மறந்தால், என் உயிர் நீங்கிவிடும்; நினைத்திருப்பதால்தான் இளைத்து அழகிழந்தாவது, வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

குறிப்பு

அவரை நினைந்திருப்பதால்தான் நான் வாழ்ந்திருக்கிறேன். மறந்தால் அக்கணமே மடிவேன் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. இலங்கு இழாய் - விளங்கும் அணிகலன்கள் அணிந்த தோழியே!; இன்று மறப்பின் - (காதலரை) இன்று மறப்பேன் என்றால்.
2. காரிகை நீத்து - அழகு நீங்கி.
1. என் தோள்மேல் - என் தோள்மேல் உள்ள.
2. கலம் கழியும் - அணிகலன் கழன்று விடும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1263 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதலின் இடையறாது நினைக்கற்பாலையல்லை, சிறிது மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவால் அவனையே நினைந்து இடைவிடாது வருந்தி யிருப்பதை மறந்து ஆற்றியிருத்தல் வேண்டும்' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

தெளிவுரை

போரில் வெற்றியை விரும்பி மனஉறுதியையே துணையாய்க் கொண்டு நெடுந்தொலைவு சென்றுள்ள காதலர் திரும்பி வருவதை விரும்பியே, நான் இன்னும் உயிர் வாழ்ந்துள்ளேன்.

கருத்து

'காதலர் வருவதை விரும்பியே நான் வாழ்ந்துள்ளேன்.'

விளக்கம்

தோழி! தலைவர் பிரிந்திருப்பதை நான் மறந்திருக்க வேண்டு மென்கிறாய். மறந்தால் அக்கணமே என் உயிர் மாயும். அவரை நினைந்து அவர் திரும்பி வருவதை விரும்பியே உயிர் வாழ்கிறேன்' என்று, தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

அவரை நினையாதிருப்பின் இதற்குள் இறந்துபட்டிருப்பேன்.

சொற்பொருள்

1. **உரன் நசைஇ - வெற்றியை விரும்பி; உள்ளம் துணையாக - ஊக்கமே துணையாக; சென்றார் - சென்றுள்ள காதலர்.**
2. **வரல் நசைஇ - வருதலை விரும்பி; இன்னும் உளேன் - இன்னும் உயிரோடு இருக்கின்றேன்.**

தலைவி கூற்று

திருக்குறள் 1264 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை மிகுதலின் இடையறாது நினைக்கற்பாலையல்லை, சிறிது மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவால் அவனையே நினைந்து இடைவிடாது வருந்தியிருப்பதை மறந்து ஆற்றியிருத்தல் வேண்டும்' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூடிய காமம் பிரிந்தார் வர(வு)உள்ளிக்
கோடுகொ(டு) ஏறும்என் நெஞ்சு.

தெளிவுரை

மிகுந்த காதல் வயப்பட்டுக் கூடியிருந்த காதலர் பிரிந்து சென்றார். அவர் வருவதை எதிர்நோக்கி என் நெஞ்சம் மரத்தின் உச்சிக் கொம்பில் ஏறிப் பார்த்திருக்கின்றது.

கருத்து

தலைவன் விரைந்து வரவேண்டுமென்பதை, நெஞ்சம் பரபரப்புடன் எதிர்பார்க்கின்றது.

விளக்கம்

தலைவன் வருகையைத் தொலைவிலேயே காண வேண்டு மென்பதற்காய், நெஞ்சம் மரத்தின்மேல் ஏறிப் பார்க்கின்றது.

குறிப்பு

குரங்கு கிளைக்குக் கிளை தாவி உச்சியைச் சென்று அடைவதுபோல, மனமும் கொம்பு கொம்பாய் ஏறி மரத்தின் உச்சியிற் சென்று நின்று பார்க்கின்றது என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. கூடிய காமம் பிரிந்தோர் - மிகுந்த காதல் வயப்பட்டுக் கூடியிருந்து பிரிந்து சென்ற காதலர்; வரவு உள்ளி - வருவதை எதிர்நோக்கி.
2. என் நெஞ்சு - என்னுடைய நெஞ்சம்; கோடுகொடு ஏறும் - மரத்தின் கொம்பு கொம்பாய் ஏறிப் பார்க்கும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1265 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரவு கூறி, ஆற்றாளாய்ப் பசக்கற்பாலையல்லை என்ற தோழிக்குச் சொல்லியது. (பசக்கற்பாலையல்லை - பசப்படைய வேண்டா.)

கூற்று விளக்கம்

'உன் கணவர் வந்து கொண்டேயுள்ளார்; ஆதலின் வருத்தம் இன்றிப் பசலை நீங்கி மகிழ்வுடன் இரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

காண்கமன் கொண்கனைக் கண்ஆரக் கண்டபின்
நீங்கும்,என் மென்தோள் பசப்பு.

தெளிவுரை

என் கணவனை என் கண்ணாரக் கண்ட பின்பே, என் மெல்லிய தோள்களில் படர்ந்துள்ள பசலை நீங்கும்.

கருத்து

கணவன் நேரில் வரட்டும். கண்டதும் பசலை பறந்தோடிவிடும்.

விளக்கம்

தோழி! கணவன் வந்து கொண்டிருக்கின்றான் என்று சொல்கிறாயே அன்றி, அவரை நான் இன்னும் காணவில்லை. அவரை நேரில் கண்ட பிறகே என் பசலை நீங்கும்.

குறிப்பு

தோழி! நீ சொல்வதை நான் நம்பலாம்; ஆனால், பசலை மற்றவர் சொல்வதை நம்பாது; கண்டால்தான் நம்பும்.

சொற்பொருள்

1. கொண்கனை - கணவனை; கண்ணாரக் காண்க - கண்கள் நேரில் காணட்டும்; கண்டபின் - அவ்வாறு கண்ட பின்.
2. என் மென்தோள் பசப்பு - என்னுடைய மெல்லிய தோளில் படர்ந்துள்ள பசலை; நீங்கும் - அகலும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1266 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரவு கூறி, ஆற்றாளாய்ப் பசக்கற்பாலையல்லை என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன் கணவர் வந்து கொண்டேயுள்ளார்; ஆதலின் வருத்தம் இன்றிப் பசலை நீங்கி மகிழ்வுடன் இரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

வருகமன் கொண்கன் ஒருநாள்; பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.

தெளிவுரை

பிரிந்து சென்ற கணவர் ஒருநாள் திரும்ப வருவான். வந்ததும் என் துன்ப நோய் முழுவதும் தீர, அவரை நான் கூடி மகிழ்வேன்.

கருத்து

கணவன் வரட்டும். அவனை மருந்தாய்ப் பருகி என் காதல் நோய் தீர்ப்பேன்.

விளக்கம்

தோழி! என் கணவர் வந்து கொண்டிருக்கிறார் என்கிறாய். வந்து சேரட்டும். அவர் நெடுநாள் பிரிவினால் எனக்கு உண்டாக்கிய நோயை அவரையே மருந்தாய் நுகர்ந்து ஒரே நாளில் தீர்ப்பேன்.

குறிப்பு

அவர் உண்டாக்கிய நோய்க்கு அவரையே மருந்தாய்க் கொள்வேன்.

சொற்பொருள்

1. கொண்கன் - கணவன்; வருக ஒருநாள் - ஒருநாள் வந்து சேரட்டும்.
2. பைதல் நோய் - அவர் பிரிவினால் உண்டான துன்ப நோய்; எல்லாம் கெட - முற்றிலுமாய் நீங்க; பருகுவேன் - அவரை நுகர்வேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1267 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரவு கூறி, ஆற்றாளாய்ப் பசக்கற்பாலையல்லை என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன் கணவர் வந்து கொண்டேயுள்ளார்; ஆதலின் வருத்தம் இன்றிப் பசலை நீங்கி மகிழ்வுடன் இரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

> புலப்பேன்கொல், புல்லுவேன் கொல்லோ; கலப்பேன்கொல்
> கண்அன்ன கேளிர் வரின்.

தெளிவுரை

என் கண் போன்ற காதலர் வருவாரானால், நான் ஊடுவேனா அல்லது தழுவுவேனா அல்லது இரண்டறக் கலந்து விடுவேனா? என்ன செய்வேன் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

கருத்து

காதலர் வந்ததும் அவரிடம் எவ்வாறு நடந்து கொள்வேன் என்பது எனக்கு எதுவும் தெரியவில்லையே.

விளக்கம்

"தோழி! காதலர் வந்தவுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்று தெரியாது மயங்குகிறேன். நீண்ட நாள் காதலன் பிரிந்திருந்ததால், காதலனிடம் ஊடுவதா? இழந்த இன்பத்தைப் பெற உடனே அவனைத் தழுவிக் கொள்வதா? இந்த இரண்டும் செய்யாமல் ஆசை மிகுதியால் இரண்டறக் கலப்பதா? என்ன செய்வது என்று என்னால் அறியமுடியவில்லையே" எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

நீண்ட நாள் வருத்தம் நீங்கித் திடீரென இன்பம் தோன்ற இருப்பதை அறியும்போது ஏற்படும் மனத் தத்தளிப்பு, இங்குப் புலப்படுத்தப் பட்டுள்ளது.

சொற்பொருள்

2. **கண் அன்ன - கண் போன்ற; கேளிர் - காதலர்; வரின் - வருவாரானால்.**
1. **புலப்பேன்கொல் - ஊடுவேனா; புல்லுவேன் கொல் - தழுவுவேனா; கலப்பேன்கொல் - இரண்டறக் கலப்பேனா? (அறியேன்)**

தோழி கூற்று

அகநானூறு 211 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தமையால் தலைவி மெலிவுற்றாள். அதனைக் கண்ட தோழி, 'தலைவன் வரும்வரை பொறுத்திரு' என்று கூறியது.

கேளாய், எல்ல! தோழி!– வாலிய
சுதைவிரிந் தன்ன பல்பூ மராஅம்
பறைகண் டன்ன பாஅடி நோன்தாள்
திண்நிலை மருப்பின் வயக்களிறு உரிஞுதொறும்
தண்மழை ஆலியின் தாஅய், உழவர்
வெண்ணெல் வித்தின் அறைமிசை உணங்கும்
பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்,
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும், நல்குவர்–
குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழிய,
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சேண் நாட்டில் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்எறிந்து அழுத்திய
வன்கண் கதவின் வெண்மணி வாயில்,
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை,
நீர்ஒலித் தன்ன பேஎர்
அலர்நமக்கு ஒழிய, அழப்பிரிந் தோரே.

தெளிவுரை

"தலைவி! நான் கூறுவதைக் கேள். சோழ மன்னனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து குறுநில மன்னர் தத்தம் பணியாளரைக்கொண்டு, பெருங்குழிகளைத் தோண்டி, பிடி, கன்றுகளுடன் புதிய யானைகளைப் பிடிக்கும் முயற்சியில்

ஈடுபட்டனர். நெடுந்தொலைவில், குறுநிலத்தை ஆளும் எழினி, போர்த்தொழில் கல்லாதவன்; அவன் அப்பணிக்கு வரவில்லை.

"அதனால் சினம் கொண்ட சோழன், எழினிக்குப் பாடம் கற்பிக்குமாறு மத்தி என்பவனை ஏவ, அவன் எழினிமீது படையெடுத்துச் சென்று, முதற்படையிலேயே அவனைச் சிறைப் பிடித்து, அவனது பல்லைப் பிடுங்கி வந்தான். கடற்கரை ஊராகிய வெண்மணியின் வலிமையான கோட்டைக் கதவில் (பிறருக்குப் பாடமாய்) அந்தப் பல்லைப் பதித்து வைத்தான். தன் வெற்றிக்கு அடையாளமாய் அவ்வூர்க் கடற்கரையில் ஒரு கல்லையும் நாட்டினான். அத்தகு கல் விளங்கும் துறைமுகத்தில் அலைகள் கரையில் மோதி ஆரவாரித்தலால் எழும் ஒலிபோல, இவ்வூரில் நம்மைப் பற்றிய பழிச்சொல் பெருகிவிட்டது. அப் பழிச்சொல் நம்மிடம் நிற்க, நாம் அதைக் கேட்டுத் துடிதுடித்து அழுமாறு தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார்.

"அவர் சென்ற இடம் வேங்கடமலைக்கு அப்பால் உள்ளது. வேற்று மொழி வழங்கும் அங்கு, வெண்கடப்ப மரங்கள் மிகுதியாய் இருக்கும். திண்மையான கொம்பினைக் கொண்ட யானை, தன் தினவைத் தீர்ப்பதற்காக அம்மரங்களில் உராயும். அப்போது பனிக்கட்டிகள் உதிர்ந்துவிழுவதுபோல, மரத்திலி ருந்து வெண்மையான பூக்கள், பாறையின்மீது விழுந்து உழவர் காய வைத்திருக்கும் செந்நெல்போலக் கிடக்கும். அத்தகைய நாட்டுக்கு நம் தலைவர் சென்று செயலாற்றினாலும், விரைந்து வந்து அருள் செய்வார், வருந்தாதே!" என்று தோழி தலைவி யிடம் கூறினாள்.

கருத்து

தலைவர் வேற்றுமொழி வழங்கும் நாட்டுக்குச் சென்றிருக்கிறார்; எனினும், விரைவில் வந்து சேர்வார். வருந்தாதே! பொறுத்திரு.

விளக்கம்

"தலைவி! நான் கூறுவதைக் கேள். ஊராரின் பழிச்சொல் நம்மிடம் தங்கி நிற்க, நாம் அழுமாறு நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வேங்கடமலைக்கு அப்பாலுள்ள வேற்று மொழி

வழங்கும் நாட்டில் இருந்தனராயினும், விரைந்து வந்து அருள் செய்வார்; வருந்தாதே" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

யானை வேட்டைக்கு 'எழினி' என்பவன் வாராத காரணத்தால், சினங் கொண்ட சோழ மன்னன் அவனைப் பிடித்துவர 'மத்தி' என்பானை ஏவினான்; அவனும் படை கொண்டு எழினியுடன் போரிட்டு, முதற்படையிலேயே அவனை அகப்படுத்தி, அவன் பல்லினைப் பிடுங்கி வந்து, 'வெண்மணி' என்னும் ஊரின் கோட்டை வாயிற்கதவில் பதித்தான் என்பதும், அவ்வெற்றிக்கு அடையாளமாய் அவ்வூர்த்துறையில் கல் ஒன்று நாட்டினான் என்பதும் இப்பாடல்வழி அறியப்படும் வரலாற்றுச் செய்தி.

சொற்பொருள்

1. எல்ல - ஏடி!; வாலிய - வெண்மையான.
2. சுதை - சுண்ணாம்பு; விரிந்தன்ன - பரந்திருந்தால் ஒத்த; பல்பூ - பல பூக்களைக் கொண்ட; மராஅம் - வெண்கடப்ப மரம்.
3. பறைகண்டன்ன - பறையை ஒத்த; பாஅடி - பரந்த அடி; நோன்தாள் - வலிமை மிக்க கால்கள்.
4. திண்மை - உறுதி; மருப்பு - கொம்பு; வய - வலிமை; களிறு - ஆண் யானை; உரிஞுதொறும் - உராயும்தோறும்.
5. ஆலி - பனிக்கட்டி; தாஅய் - பரவி.
6. வித்தின் - விதை போல; அறைமிசை - பாறைமீது; உணங்கும் - காய்ந்து கிடக்கும்.
7. வேங்கடம் - வேங்கட மலை; உம்பர் - அப்பால்.
8. மொழிபெயர் - வேற்று மொழி வழங்கும்; தேஎத்தர் - நாட்டில் (இருந்தாலும்); நல்குவர் - அருள் செய்வார்.
9. பெருநிரை - பெரிய யானைக்கூட்டம்.
10. பிடிபடு - (பள்ளத்தில்) அகப்படுத்தும்; பூசல் - ஆரவாரம், வேட்டை; எய்தாது ஒழிய - (எழினி என்பவன்) வாராது போக.
11. கடுஞ்சின வேந்தன் - மிக்க சினம் கொண்ட சோழ மன்னன்; ஏவலின் - கட்டளைப்படி; எய்தி - (மத்தி என்பவன்) சென்று.
12. நெடுஞ்சேண் - மிக்க தொலைவு; தலைத்தார்ப் பட்ட - முதற்படையில் அகப்பட்டுக்கொண்ட.
13. கல்லா எழினி - போர்க் கல்வி இல்லாத எழினி (என்பவனின்); பல் எறிந்து - பல்லைப் பிடுங்கி; அழுத்திய - பதித்த.

14. வன்கண் கதவு - வலிமை பொருந்திய கதவு; வெண்மணி - ஓர் ஊர்; வாயில் - வாயிலில்.
15. மத்தி - சோழனால் ஏவப்பட்டவன்; நாட்டிய - நட்ட; கல்கெழு - கல் பொருந்திய; பனித்துறை - குளிர்ச்சி பொருந்திய துறைமுகம்.
16. நீர் ஒலித்தன்ன - நீர் மோதி ஒலிப்பது போன்ற; பேஎர் - பெரிய.
17. அலர் - பழிச்சொல்; நமக்கு ஒழிய - நம்மிடம் எஞ்சியிருக்க; அழ - நாம் அழும்படியாக; பிரிந்தோர் - பிரிந்து சென்றவர் (தலைவர்).

தோழி கூற்று

அகநானூறு 295 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றான். அவன் பிரிவைப் பொறுத்திட இயலாத தலைவி பெரிதும் துன்பம் அடைய, அவளை ஆற்றுவிக்கத் தோழி கூறியது.

நிலம்நீர் அற்று நீள்சுனை வறப்ப,
குன்றுகோடு அகைய, கடுங்கதிர் தெறுதலின்,
என்றூழ் நீடிய வேய்படு நனந்தலை,
நிலவுநிற மருப்பின் பெருங்கை சேர்த்தி,
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோள்
ஓங்கல் யானை உயங்கி,மதம் தேம்பி,
பல்மரம் ஒருசிறைப் பிடியொடு வதியும்
கல்லுடை அதர கானம் நீந்தி,
கடல்நீர் உப்பின் கணம்சால் உமணர்
உயங்குபகடு உயிர்ப்ப அசைஇ, முரம்புஇடித்து,
அகல்இடம் குழித்த அகல்வாய்க் கூவல்
ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்,
புடையல்அம் கழற்கால் புல்லி குன்றத்து,
நடைஅருங் கானம் விலங்கி, நோன்சிலைத்

தொடைஅமை பகழித் துவன்றுநிலை வடுகர்,
பிழிஆர் மகிழர், கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்,
பழிதீர் மாண்நலம் தருகுவர் மாதோ—
மாரிப் பித்திகத்து ஈர்இதழ் புரையும்
அம்கலுழ் கொண்ட செங்கடை மழைக்கண்,
மணம்கமழ் ஐம்பால் மடந்தை!நின்
அணங்குநிலை பெற்ற தடமென் தோளே.

தெளிவுரை

“நிலமெங்கும் நீர்வளம் அற்றது; ஆழ்ந்த சுனைகளும் வறட்சியுற்றன; மலையிலிருந்த மரக்கிளைகளும் பற்றி எரிகின்றன; ஞாயிற்றுக்கதிர்கள் வெம்மையாய்ச் சுடுதலால் எங்கும் வெப்பம் மிகுதியாக, அதனால் மூங்கில்களும் வெடித்துச் சிதறின. அகன்ற அவ்விடங்களிலே, வேங்கைப்புலியினை வென்ற, அச்சம் தரும் பணைத்த கையினைக் கொண்ட, உயரமான குன்றுபோல விளங்கும் யானையும் வருந்தி மதமழிந்து நிலாப் போலும் நிறத்தைக் கொண்ட தன் கொம்பிலே தன் பெருங்கையினை வைத்துக் கொண்டு பல மரங்களுள்ள ஒரு பக்கத்திலே, தன் பிடியோடுங்கூடி வருத்தத்துடன் தங்கியிருக்கும்.

“கற்கள் பொருந்திய பாதைகளைக் கொண்ட காடுகளையும் கடந்து தலைவர் சென்றுள்ளார். அங்கு உப்புச்சுமை ஏற்றிய வண்டிகளை இழுத்து வரும் மாடுகள் வருத்தமுற்றன. அவற்றின் களைப்பு நீங்க ஓரிடத்தே தங்கி, வன்னிலத்தை இடித்து, உமணர்கள் தோண்டிய அகன்ற வாயினைக் கொண்ட கிணறு, அவ்வழியே செல்லும் புதியவர்களின் தளர்ச்சி நீங்குவதற்குப் பயன்படும்படி நீர் ஊறி இருக்கும். ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த காலினைக் கொண்ட புல்லி என்பானது வேங்கடமலையைச் சார்ந்த, கடத்தற்கும் அரியதான காட்டினைக் கடந்து தலைவர் சென்றுள்ளார். வலிமை பொருந்திய வில்லில் எப்பொழுதும் அம்பைத் தொடுத்து, பகைவரைக் கொல்வதையே கருத்தாய்க் கொண்டு திரிபவர், வடுகர்கள். அவர்கள் கள்ளுண்டு மகிழ்ந்து செருக்குமிகுதியால் ஆரவாரித்துக் கொண்டிருக்கும், வேற்று

மொழி வழங்கும் தேயத்தையும் கடந்து சென்றுள்ளார், நம் தலைவர்.

"ஆயினும், மாரிக்காலத்தே மலரும் பிச்சியின் குளிர்ந்த இதழ் போன்ற அழகொழுகும் சிவந்த கடையினைக் கொண்ட குளிர்ச்சியான கண்களையும், ஐம்பகுப்பாய் முடிக்கப் பெறும் மணம் கமழுகின்ற கூந்தலினையும் கொண்ட மடந்தையே!

"அழகு நிலைபெற்ற, பரந்த மென்மையான தோள்களினது குற்றமற்ற மாட்சிமை கொண்ட நலத்தினை மறவாது, உன் காதலர் வந்தருள்வார்; (அதனால், நீயும் தேறியிரு)" என்று, பிரிவிடை வேறுபட்ட தலைவியிடம் தோழி சொன்னாள்.

கருத்து

தலைவர் எவ்வளவு தொலைவு சென்றிருந்தாலும், விரைந்து வந்து உன் இன்னல் நீக்கி இன்பம் தருவார்.

விளக்கம்

"மடந்தையே! நம் தலைவர் கற்கள் பொருந்திய காட்டினைக் கடந்து, வேற்றுமொழி வழங்கும் தேயத்தையும் கடந்து சென்றுள்ளார். ஆயினும், உன் அழகு நிலைபெற்ற பெரிய மென்மையான தோளின் குற்றமற்ற நலத்தினை மீண்டுவந்து தந்தருள்வார்."

சொற்பொருள்

1. அற்று - நீங்கி; நீள் - நெடிய; வறப்ப - வற்றிவிட.
2. கோடு - மரக்கிளைகள்; அகைய - எரிய; கடுங்கதிர் - வெப்பமான ஞாயிற்றின் கதிர்கள்; தெறுதலின் - சுடுதலால்.
3. என்றூழ் - வெப்பம்; வேய் - மூங்கில்; படு - வெடிக்கின்ற; நனந்தலை - அகன்ற இடம்.
4. மருப்பின் - தந்தத்தில்; பெருங்கை - துதிக்கை.
5. வேங்கை - புலி; வெருவரு - அச்சம் தரும்; பணை - பெரிய.
6. ஓங்கல் யானை - மலை போன்ற யானை, மலையிடத்தே உள்ள யானை; உயங்கி - வருந்தி; மதம் தேம்பி - மதநீர் வற்றப்பெற்று.
7. ஒருசிறை - ஒரு பக்கம்; பிடி - பெண்யானை; வதியும் - தங்கி யிருக்கும்.

8. கல்லுடை - கற்கள் பொருந்திய; அதர் - வழி; நீந்தி - கடந்து.
9. கணம்சால் உமணர் - உப்பு வாணிகர் கூட்டம்.
10. உயங்கு பகடு - வருந்திய எருதுகள்; உயிர்ப்ப - இளைப்பாற; அசைஇ - தங்கி; முரம்பு - வன்னிலம்.
11. குழித்த - தோண்டிய; அகல்வாய் - அகன்ற வாயைக் கொண்ட; கூவல் - கிணறு.
12. வம்பலர் - புதியவர்; அசைவிட - தளர்ச்சி நீங்க.
13. புடையல் - ஒலி; அம் - அழகிய; கழற்கால் - வீரக்கழலணிந்த கால்; புல்லி - வீரருள் ஒருவன்.
14. விலங்கி - நடந்து; நோன்சிலை - வலிய வில்.
15. தொடை - தொடுத்தல்; பகழி - அம்பு; துவன்றுநிலை - செறிந்த நிலை; வடுகர் - ஒரு கூட்டத்தினர்.
16. பிழிஆர் மகிழர் - கள்ளைக் குடித்து மகிழ்பவர் (பிழி - கள்); கலி - செருக்கு; ஆர்க்கும் - ஆரவாரிக்கும், ஒலி எழுப்பும்.
17. மொழிபெயர் - வேற்று மொழி பேசும்; தேஎம் - தேயம்; இறந்தனர் - கடந்து சென்றனர்.
19. மாரி - மழை; பித்திகம் - பிச்சி மலர்; ஈர்இதழ் - ஈரமான இதழ்.
20. அம்கலுழ் - அழகு ஒழுகும்; செம்கடை - சிவந்த கடைப்பகுதி; மழை - குளிர்ச்சி.
21. ஐம்பால் - ஐவகையாய்ப் பகுக்கப்பட்ட கூந்தல்.
22. அணங்கு - அழகு; தடமென் - பெரிய மென்மையான.

தோழி கூற்று

அகநானூறு 227 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தொழில்மேற்சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறித்த நாளிலே வாராமை காரணமாய்த் தலைவி வருத்தமுற்றாள். அவள் உடல் நலம் குன்றி வேறுபாடு கொண்டது. அப்போது, அவளைத் தேற்றுவாளாய்த் தோழி சொல்லியது.

நுதல்பசந் தன்றே; தோள்சா யினவே;
திதலை அல்குல் வரியும் வாடின;
என்ஆ குவள்கொல் இவள்?எனப் பல்நாள்
நீர்மலி கண்ணொடு நெடிதுநினைந்து ஒற்றி,
இனையல்– வாழி, தோழி!– நனைகவுள்
காய்சினம் சிறந்த வாய்புகு கடாத்தொடு
முன்நிலை பொறாஅது முரணி, பொன்இணர்ப்
புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப,
முதல்பாய்ந் திட்ட முழுவலி ஒருத்தல்
செந்நிலப் படுநீறு ஆடி, செருமலைந்து,
களம்கொள் மள்ளரின் முழங்கும் அத்தம்
பலஇறந்து அகன்றனர் ஆயினும், நிலைஇ,
நோய்இல ராகநம் காதலர், வாய்வாள்!–
தமிழ்அகப் படுத்த இமிழ்இசை முரசின்,
வருநர் வரையாப் பெருநாள் இருக்கை,
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்இசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்,
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்,
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து,
எல்உமிழ் ஆவணத்து அன்ன,
கல்லென் கம்பலை செய்துஅகன் றோரே!

தெளிவுரை

"தலைவி! வாழி! 'நெற்றி பசந்துள்ளது; தோள்கள் மெலிந்து விட்டன; தேமல் பரந்த அல்குலின் வரிகளும் வாட்டமுற்றன. இனி, இவள் எந்நிலை அடைவாளோ?' என்று பல நாளாய் நீர் நிறைந்த கண்ணோடு நீள நினைத்து ஆராய்ந்து வருந்தாதே!

"தலைவன் சென்றுள்ள பாலைநிலக் காட்டில் மிக்க வலிமை கொண்ட களிறு ஒன்று, புலியின் நிறம் கொண்ட பொன்னிற மான பூங்கொத்துகளைக் கொண்ட வேங்கை மரத்தினைக் கண்டது; அம்மரத்தினைத் தன் பகையென்று கருதி முரண் பட்டது; அதனைப் புலி எனக் கருதிச் சினம் மிகக் கொண்டு

கன்னத்தை நனைத்து வாயிற்புகும் மதநீரோடு, அம்மரம் தன் முன்னே நிற்பதைப் பொறாது, அதன் பூக்கள் உதிர்ந்து கொம்புகள் தனிமையுறுமாறு அதன் அடிமரத்தின்மீது பாய்ந்தது. பின்னர், செம்மண் நிலத்தின் புழுதியில் கிடந்து புரண்டமையால் புழுதி உடல் முழுவதும் பூசியதுபோல் ஆக, போர் புரிந்து களத்தினைத் தனதாக்கிக்கொண்ட வீரன்போல முழக்கமிட்டது. பாலை வழிகள் பலவற்றைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார். குறி தப்பாது அம்புகளைச் செலுத்துவதில் வல்லவன் தழும்பன் என்பான்; அவனது வலிமையும், கொடைத் தன்மையும் தமிழகம் முழுவதும் பரவிக் கிடந்தமையால், முழங்குகின்ற புகழ் முரசினைத் தன்னகத்தே கொண்டவன். பாடி வருவோர்க்குக் குறைவின்றிப் பெருங்கொடை வழங்கும் நாளோலக்க இருக்கையினை (அரச அவையை) உடையவன்; 'தூங்கல் ஓரியார்' என்னும் புலவரால் பாடப் பெற்ற பெரும்புகழ் வாய்ந்தவன்; போர்க்களத்தில் பெண்யானை மிதித்ததால், வழுதுணங்காய் போன்ற தழும்பினைப் பெற்று, 'வழுதுணைத் தழும்பன்' என்னும் பெயரினைப் பெற்றவன்.

அவனது காவல் பொருந்திய மதில் சூழ்ந்த 'ஊணூர்' என்னும் ஊருக்கு அப்பால் உள்ளது 'மருங்கூர்' என்னும் பட்டினம்; அப் பட்டினம் சிறந்த செல்வங்களால் நிலைபெற்று, பொலிவு பெறத் தோன்றுவது; உப்பங்கழியிடத்து உப்பு விளையும் வயல்களைக் கொண்ட அவ்வழகிய பட்டினத்து ஒளி வீசும் கடைத்தெருவில் எழும் ஆரவாரத்தைப் போன்ற, 'கல்' என்னும் ஒலியுடன், நம் ஊரில் அலர் எழுமாறு நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவன் நோய் நொடியின்றி நிலைபெற்று வாழ்வானாக!" என்று தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

நாம் வருந்தப் பிரிந்து சென்றவனேயாயினும் நம் தலைவன் நோயின்றி நிலைபெற்று வாழட்டும்.

விளக்கம்

"தலைவி! வாழி! 'நுதலில் பசலை பூத்தது; தோள் மெலிந்தது; இவள் என்னாவளோ' என்று வருந்தாதே! காட்டுவழிகள்

பலவற்றைக் கடந்து சென்ற தலைவன், 'கல்' என்னும் ஒலியுடன் ஊரில் நமக்குப் பழிச்சொல் உண்டாகுமாறு செய்து பிரிந்து சென்றுவிட்டான்; ஆயினும், அவன் நோயில்லாது நிலைபெற்று வாழ்க!" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

தூங்கலோரியார் என்பவர் சங்கப்புலவர். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும் (60), குறுந்தொகையில் இரு பாடல்களும் (151, 295) உள்ளன. இவர் தழும்பனைப் பற்றிப் பாடிய பாட்டுக் கிடைக்கப் பெற்றிலது.

தலைவியிடத்து வேறுபாடு உண்டாகுமாறு தலைவன் பிரிந்து சென்றா னாயினும், தலைவியும் தோழியும் தலைவனை வாழ்த்தியே பேசுகின்றனர்.

'மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியும்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப' (தொல். பொருளியல். 244)

என்னும் நூற்பாவில், 'மங்கல மொழி' என்பதற்கு, 'தலைவற்குத் தீங்குட்நரும் என்று உட்கொண்டு, தோழியும் தலைவியும் அதற்கஞ்சி அவனை வழுத்துதலும்' என்று பொருளுரைத்து, அதற்கு, 'நோயிலராக நம் காதலர்' எனும் இப்பாடலடியை எடுத்துக் காட்டியுள்ளார், நச்சினார்க்கினியர்.

சொற்பொருள்

1. பசந்தன்று - பசலையுற்றது; சாயின - மெலிந்துவிட்டன.
2. திதலை - தேமல்.
3. என் ஆகுவள் கொல் - என்ன நிலை அடைவாளோ?
4. ஒற்றி - ஆராய்ந்து.
5. இனையல் - வருந்தாதே; நனைகவுள் - நனைந்த கன்னம்.
6. சிறந்த - மிக்கமையால்; கடாம் - மத நீர்.
7. முன்நிலை - முன் நிற்றலை; பொறாஅது - பொறுக்காது; முரண் - பகை, மாறுபாடு; பொன்இணர் - பொன் நிறப் பூங்கொத்து.
8. கேழ் - நிறம்; பூஞ்சினை - பூங்கொம்புகள்; புலம்ப - தனிமையுற.
9. முதல் - அடிமரம்; ஒருத்தல் - களிறு.
10. செந்நிலம் - செம்மண் நிலம்; படு - பொருந்திய; நீறு - புழுதி; ஆடி - அளைந்து; செருமலைதல் - போர் புரிதல்.

11. மள்ளர் - வீரர்; முழங்கும் - பிளிறும்; அத்தம் - காட்டுவழி.
12. இறந்து - கடந்து; நிலைஇ - நிலை பெற்று.
13. வாய்வாள் - குறி தப்பாத வாள்.
14. தமிழ் அகப்படுத்த - தமிழ்நாடு முழுவதையும் அகப்படுத்திக் கொண்ட; இமிழ் - ஒலி; இசை - புகழ்.
15. வருநர் - தன்னைப் பாடி வருவார்; வரையாமை - குறைவுபடாது வழங்குதல்; பெருநாள் இருக்கை - பெரிய நாளோலக்க இருக்கை (அரசவை).
16. தூங்கல் - தூங்கல் ஓரியார் என்னும் புலவர்.
17. பிடி மிதி - பெண்யானை மிதித்தமையால்; வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன் - வழுதுணங்காய் போலும் தழும்பினைக் கொண்டமையால் வழுதுணைத் தழும்பன் என்னும் சிறப்புப் பெயரினையுடையவன்.
18. கடி - காவல்; வரைப்பு - எல்லை; ஊணூர் - ஓர் ஊர்; உம்பர் - அப்பால்.
19. விழுநிதி - மிக்க பொருள்; துஞ்சும் - நிலை பெற்றிருக்கும்; வீறு - பொலிவு.
20. இருங்கழிப் படப்பை - உப்பு விளையும் பெரிய வயல்.
21. எல்உமிழ் - ஒளி வீசும்; ஆவணம் - கடைத்தெரு.
22. கம்பலை - ஆரவாரம்; அகன்றோர் - பிரிந்து சென்றவர் (தலைவர்).

ஆற்றாளாய தோழியைத் தலைவி வற்புறுத்தியது.

தலைவி கூற்று

அகநானூறு 267 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளது ஆற்றாமை கண்டு ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்றான். குறித்த காலத்தில் அவன் திரும்பி வாராத நிலையில் தலைவியின் நிலை கண்டு

தோழி மிகவும் வருந்தியிருந்தாள். அத்தோழியைத் தலைவி தேற்றியது.

நெஞ்சு நெகிழ்தகுந கூறி, அன்புகலந்து,
அறாஅ வஞ்சினம் செய்தோர், வினைபுரிந்து,
திறம்வேறு ஆகல் எற்று?என்று ஒற்றி,
இனைதல் ஆன்றிசின், நீயே; சினைபாய்ந்து,
உதிர்த்த கோடை, உட்குவரு கடத்திடை,
வெருக்குஅடி அன்ன குவிமுகிழ் இருப்பை,
மருப்புக் கடைந்தன்ன, கொள்ளை வான்பூ
மயிர்க்கால் எண்கின் ஈர்இனம் கவர,
மைபட் டன்ன மாமுக முசுவினம்
பைதுஅறு நெடுங்கழை பாய்தலின், ஒய்யென
வெதிர்படு வெண்ணெல் வெவ்அறைத் தாஅய்,
உகிர்நெரி ஓசையின் பொங்குவன பொரியும்
ஓங்கல் வெற்பின் சுரம்பல இறந்தோர்
தாம்பழி உடையர் அல்லர்; நாளும்
நயந்தோர்ப் பிணித்தல் தேற்றா, வயங்குவினை
வாள்ஏர் எல்வளை நெகிழ்த்த,
தோளே– தோழி!– தவறுஉடை யவ்வே!

தெளிவுரை

தோழி! தலைவர் நம்மை முதன்முதலாய்க் கண்டபோது நம் நெஞ்சம் நெகிழத்தக்கவற்றைக் கூறி, அன்பினால் உள்ளம் கலந்து, 'உன்னை என்றும் பிரியேன்' என்று உறுதி கூறினார். இன்று பொருளீட்டுதலை விரும்பி, வேறு தன்மையர் ஆயது எதனால் என்று ஆராய்ந்து வருந்தாதே.

தலைவர் சென்றுள்ள அச்சம் தோன்றும் காட்டில் கோடைக் காற்று இருப்பை மரத்தின் கிளைகளின்மீது வேகமாய் வீசும். அதனால் பூனையின் பாதம் போன்ற இருப்பை அரும்புகளும், யானைத் தந்தத்தைக் கடைந்து செய்தது போன்ற வெள்ளை நிறப் பூக்களும் கீழே உதிரும். அவற்றை அங்கு வந்த மயிரடர்ந்த காலினையுடைய கரடியின் பெரிய கூட்டம் அள்ளி உண்ணும்.

மை பூசினாலொத்த கரிய முகத்தினைக் கொண்ட ஆண் குரங்கு, பசுமையற்ற நீண்ட மூங்கிலின்மீது பாயும். அதனால்

மூங்கிலில் விளைந்த வெள்ளிய நெல்கள் வெப்பம் மிகுந்த பாறையில் உதிர்ந்து பரந்து, நகத்தை நெரிப்பது போன்ற ஓசையுடன் பொரிந்து வறுபடும். அத்தகைய உயர்ந்த மலை களையடுத்துள்ள காடு பலவற்றையும் கடந்து சென்றுள்ள நம் தலைவர், பழி கூறத்தக்கவர் அல்லர்.

எப்போதும் நம்மீது விருப்பம் கொண்டுள்ள அவரை விடாது பற்றிக் கொள்ளுதலை அறியாமல், தொழில் திறம் வாய்ந்தோர் வாளால் அறுத்து அழகுறச் செய்த ஒளி பொருந்திய வளையலை நெகிழ விட்ட என் தோள்களே தவறு செய்தவை.

கருத்து

தோழி! பிரியேன் என்று உறுதிமொழி கூறிய தலைவர் எவ்வாறு பிரிந்தார் என்று ஆராய்ச்சி செய்து வருந்தாதே. நம்மை விரும்பி வந்த அவரை விடாது பற்றிக்கொள்ளுதலை அறியாத நம் தோள்களே தவறு செய்தவை.

விளக்கம்

"தோழி! 'நான் என்றும் பிரியேன்' என்று சூளுரை கூறிய தலைவர் பொருளீட்ட விரும்பிப் பிரிந்து சென்றது எவ்வாறு என்று ஆராய்ந்து அவரைக் குறை கூறாதே. அவர் பழி கூறத்தக்கவர் அல்லர். நம்மை விரும்பி வந்த தலைவரை இறுகப் பற்றிக் கொள்ளாது, வளைகளை நெகிழவிட்ட நம் தோள்களே தவறு செய்தவை" என்றாள் தலைவி!

சொற்பொருள்

1. நெஞ்சு - நெஞ்சம்; நெகிழ்தகுந - நெகிழத் தக்கவை.
2. அறாஅ வஞ்சினம் - என்றும் பிரியாமைக்குரிய சூளுறவு; வினை புரிந்து - பொருளீட்டும் தொழிலை விரும்பி.
3. திறம் வேறு ஆகல் - வேறு தன்மையினர் ஆயினர்; எற்று? - எதனால்? ஒற்றி - ஆராய்ந்து.
4 இனைதல் ஆன்றிசின் - வருந்துதல் நீங்கு; சினைபாய்ந்து - கிளையிற் புகுந்து.
5. கோடை - கோடைக்காற்று , உட்குவரு கடத்திடை - அச்சம் தோன்றும் காட்டிடத்தே.
6. வெருக்கு - பூனை; குவிமுகிழ் - குவிந்த மொட்டு; இருப்பை - ஒரு வகை மரம்.

7. மருப்பு - தந்தம்; கொள்ளை - மிகுதியான; வெண்பூ - வெள்ளைப்பூ.
8. எண்கு - கரடி; ஈர்இனம் - பெரிய கூட்டம்; கவர - கவந்து உண்ண.
9. மைபட்டன்ன - மை பூசினாலொத்த; முசுவினம் - ஆண்முசுக் குரங்கு (முசு - குரங்கில் ஒரு வகை).
10. பைதுஅறு - பசுமையற்ற; கழை - மூங்கில்; ஒய்யென - விரைய.
11. வெதிர் - மூங்கில்; படு - விளைந்த; வெவ்அறை - வெம்மையான பாறை; தாஅய் - பரவி.
12. உகிர்நெரி ஓசை - நகத்தோடு நகம் சேர்த்து நெறித்தலால் எழும் ஒலி; பொறியும் - வறுபடும்.
15. நயந்தோர் - நம்மை விரும்பியவர்; வயங்குவினை - தொழில் திறம் விளங்கும்.
16. வாள்அர் - வாளால் அறுத்து அழகுறுத்தப்பெற்ற; எல்வளை - ஒளி வீசும் வளையல்; நெகிழ்த்த - கழலும்படியாக.

தலைவி கூற்று

நற்றிணை 314 **மூப்பேர் நாகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியோடு கூடியிருந்தபோது, 'முதுமை எய்தியவர் இளமையை அடைதல் இல்லை; வாழ்நாள் இவ்வளவென அறிந்தவரும் இல்லை. ஆதலால், உன்னை நான் என்றும் பிரியாது இப்பொழுதுள்ளவாறே இருப்பேன்' என்று கூறியவன், இப்போது தன் சொல் பொய்க்கும்படி பிரிந்து சென்றதை நினைந்து தலைவி வருந்திக் கூறியது.

'முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்;
வாழ்நாள் வகைஅளவு அறிஞரும் இல்லை;
மாரிப் பித்திகத்து ஈர்இதழ் அலரி
நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார்பில்,
குறும்பொறிக் கொண்ட கொம்மைஅம் புகர்ப்பின்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்

கழிவதாக, கங்குல்' என்றுதாம்
மொழிவன் மையின் பொய்த்தனர், வாழிய!
நொடிவிடு அன்ன காய்விடு கள்ளி
அலங்கல்அம் பாவை ஏறி, புலம்புகொள்
புன்புறா வீழ்பெடைப் பயிரும்
என்றூழ் நீளிடைச் சென்றிசி னோரே!

தெளிவுரை

"கையால் நொடிப்பது போன்ற ஒலியுடன் காய்கள் தெறிக்கின்ற கள்ளியின் கிளைகளில் ஏறித் தனியே வீற்றிருக்கும் புல்லிய ஆண் புறாக்கள் தம் பெடையோடு இணையும் கருத்துடன் அழைக்கும் வெயிலின் வெப்பம் மிகுந்த நீண்ட பாலைநில வழியில் நம் தலைவர் சென்றுள்ளார். 'முதுமை அடைந்தவர், அழிந்த இளமையை எய்திடார்; நாம் வாழும் நாள் இவ்வளவு என்பதை வரையறுத்து அறிவதற்கும் இயலாது' (ஆகவே, உன்னைப் பிரியாது இருப்பேன்) என்று நம்மோடு இணைந்திருந்தபோது தலைவர் கூறினார். மழைக் காலத்தில் மலரும் பித்திகையின் ஈரமான இதழ்களைக் கொண்ட மலரினை மாலையாய்க் கட்டி அணிந்தவராய், நறுமணம் கமழும் சந்தனத்தை அரைத்துப் பூசிய தம் மார்பிலே, சிறுசிறு தேமற் புள்ளிகளுடன் இளமையும் அழகும் கொண்ட என் கருமையான முலைக்கண்கள் அழுந்துமாறு தழுவி, 'இனி இவ்வாறே என்றும் நம் காலம் கழியும்' என்று கூறியவர், தலைவர். அவரே அவர் கூறிய சொற்கள் பொய்யாகும்படி பிரிந்து சென்றுவிட்டார். அங்ஙனம் பொய் கூறியவர், தீதேதுமின்றி நெடுங்காலம் வாழ்க" என்று தலைவி கூறுகிறாள்

கருத்து

தலைவியோடு கூடி இன்பத்தினை நுகர்ந்து கொண்டிருந்த தலைவன் இளமையின் நிலையாமையையும் வாழ்நாள் இவ்வளவே என்று அளவிட்டுக் கூற இயலாமையையும் எடுத்துக் கூறி, 'உன்னைப் பிரியாது என்றும் இதே நிலையில் இருப்பேன்' என்றும் சொன்னான். ஆனால், அவன் தன் பிரிவால், தான் கூறிய மொழி பொய்யாகும்படி செய்துவிட்டான். பொய் கூறிய அவன் தீதேதுமின்றி வாழ்க என்றாள், தலைவி.

சொற்பொருள்

1. அழிந்தும் இளமை - அழிந்த இளமையை; எய்தார் - மீண்டும் பெற மாட்டார்.
2. வகை அளவு - வாழும் நாள் அளவு.
3. மாரி - மழைக்காலம்; பித்திக அலரி - பித்திக மலர்; ஈர்இதழ் - ஈரமான இதழ்களைக் கொண்ட.
4. காழ் - முற்றிய; ஆரம் - சந்தனக்குழம்பு; மிடைந்த - நிறைந்த.
5. குறும்பொறி - (தலைவியின் மார்பில் விளங்கும்) சிறிய தேமல் புள்ளிகள்; கொம்மை - திரட்சி; புகர் - அழகு.
6. கருங்கண் - கருமையான முலைநுனிக் கண்கள்; வெம்முலை - விருப்பம் தரும் மார்பகம்; ஞெமுங்க - அழுந்த; புல்லி - தழுவி.
7. கங்குல் - இரவுப்பொழுது.
8. மொழிவன்மை - சொன்ன உறுதியான மொழி.
9. நொடி விடு அன்ன - கையினை நொடிப்பதுபோல; விடு - வெடிக்கும்.
10. பாவை - (கள்ளியின்) கிளை; புலம்பு - தனிமை.
11. வீழ் பெடை - விரும்பும் பெடையை; பயிரும் - அழைக்கும்.
12. என்றூழ் - வெப்பம் ; நீளிடை - நீண்ட வழி; சென்றிசினோர் - சென்றவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 336 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவதற்கு முன்பு தங்களிடம் அவன் ஒழுகிய திறம் நினைந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிவதற்கு முன்னால் தலைவன் தன்னிடம் நடந்துகொண்ட முறையை நினைத்துத் தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி தோழி! நம்வயின்
பிரியலர் போலப் புணர்ந்தோர் மன்ற;
நின்றதில் பொருட்பிணி முற்றிய
என்றூழ் நீடிய சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"தோழி! நீ வாழ்க! நம் தலைவர், முன்பு நம்மோடு முதன்முதலாய்க் கூடிய களவுக் காலத்தில் இனிமேல் என்றுமே பிரிய மாட்டார் என்பதுபோலக் கூடி மகிழ்ந்திருந்தார். ஆனால் அவர், இன்று நிலையில்லாத பொருளினைத் தேடும் பொருட்டு, காட்டினைக் கடந்து வெயில் நீடிய வழியில் சென்றுள்ளார். (அவர் செயலை என்ன என்று சொல்வது?)" எனத் தலைவி தோழிக்குக் கூறினாள்.

கருத்து

'என்றும் பிரியேன்' என்றவர் இன்று பிரிந்து சென்றிருக்கிறார். இவர் கூறவதினை நம்புவது எப்படி?

சொற்பொருள்

1. வயின் - இடம்.
2. பிரியலர் - பிரியாதவர்; புணர்ந்தோர் - கூடியிருந்தவர்.
3. நின்றது இல் - நிலைத்தல் இல்லாத; பொருட்பிணி - பொருள் வேட்கையால் பிடிப்புண்டு; முற்றிய - அதைத் தேட முயற்சி மேற்கொண்டு.
4. என்றூழ் - வெயில்.

தலைவி கூற்று

அகநானூறு 135 **பரணர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்திருந்தான். பிரிவாற்றாது வருந்திய தலைவியின் உடல் வேறுபட்டது. அதனால் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூற, அத்தோழியை நோக்கித் தலைவி கூறியது.

திதலை மாமை தளிர்வனப்பு அழுங்க,
புதல்இவர் பீரின் எதிர்மலர் கடுப்பப்
பசலை பாய்ந்த நுதலேன் ஆகி,
எழுதுஎழில் மழைக்கண் கலுழ, நோய்கூர்ந்து,
ஆதி மந்தியின் அறிவுபிறிது ஆகி,
பேதுற் றிசினே– காதல்அம் தோழி!
காய்கதிர் திருகலின் கனைந்துகால் கடுகி,
ஆடுதளிர் இருப்பைக் கூடுகுவி வான்பூ,
கோடுகடை கழங்கின், அறைமிசைத் தாஅம்
காடுஇறந் தனரே, காதலர் அடுபோர்;
வீயா விழுப்புகழ், விண்தோய் வியன்குடை,
ஈர்எழு வேளிர் இயைந்துஒருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாது,அவர்த் தெளிந்தஎன் நெஞ்சே.

தெளிவுரை

“அன்புள்ள தோழியே! நம் காதலர் பாலைநிலக்காட்டின் வழியாக இக்கோடைக் காலத்தில் சென்றார். அங்கு ஞாயிற்றின் வெப்பம் மிகுதலால் காற்று மிகுதியாய் வீச, அசையும் தளிர்களைக் கொண்ட இருப்பை மரத்தின் இதழ் குவிந்த வெண்ணிறப் பூக்கள், யானைத் தந்தத்தால் கடைந்து செய்யப் பெற்ற கழற்சிக்காய்போலப் பாறைமீது பரவிக் கிடக்கும்.

"பகைவர் எதிர்த்தால் அவரோடு போர் செய்து கொல்லும் வல்லமையும், அழியாத சிறந்த புகழும், வானளாவிய வெண் கொற்றக் குடையும் கொண்டுள்ள 'கழுவுள்' என்பவனுக்கு உரியது, காமூர். அவ்வூரைப் பதினான்கு வேளிர் ஒன்றுசேர்ந்து தாக்கியபோது அங்குள்ளோர் கலங்கியதுபோலத் தலைவர் விரைந்து வருவார் என்று தெளிவுற்றிருந்த நெஞ்சம், அவர் வரவில்லையாதலின் கலங்குகிறது.

"தேமல் படர்ந்ததால், என் மேனியின் மாந்தளிர் நிறம் மறைந்து விட்டது; நெற்றியோ, புதர்களில் படர்ந்து கிடக்கும் பீர்க்கினது பூவினைப் போன்று பசலை நிறம் பெற்றது; ஓவியம் எழுதவல்லார் பார்த்து எழுதும்வண்ணம் பேரழகு கொண்ட என் கண்கள் கண்ணீர் சொரிகின்றன. ஆதிமந்தியைப் போல என் அறிவும் திரிந்ததால் மயங்கித் துன்புற்றேன்" என்று தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

காதலர் பிரிந்ததால் என் அழகு கெட்டு அறிவும் மயங்கியதால் துன்புற்றேன்.

விளக்கம்

'தோழி! நம் காதலர் துன்பம் மிகுந்த பாலைவனத்தில் சென்றுள்ளார். என் மேனி மாமை நிறத்தை இழந்தது; நெற்றியில் பசலை படர்ந்துவிட்டது; என் கண்கள் நீரைச் சொரிந்தன. அறிவு வேறுபட்டதால் மயங்கித் துன்பமுற்றேன். அவர் விரைந்து வருவார் என்று நம்பியிருந்த என் மனம் மிகவும் கலங்குகிறது' எனத் தலைவி தன் ஆற்றாமையைத் தோழியிடம் புலப் படுத்தினாள்.

குறிப்பு

ஆதிமந்தி என்பவள் கரிகால் வளவன் மகள். காவிரி நீராட்டு விழாவில் இவள் கணவன் ஆட்டனத்தியைக் காவிரி இழுத்துச் சென்றுவிட்டது. கணவனைத் தேடி ஆதிமந்தி அலைந்து திரிந்ததால் அவள் அறிவு மயங்கியது.

சொற்பொருள்

1. திதலை - தேமல்; மாமை - மாந்தளிர் நிறம்; அழுங்கல் - கெட்டொழிதல், மறைதல்.
2. இவர் - படர்ந்த; பீரின் எதிர்மலர் - பீர்க்கின் புதிய மலர்.
4. எழுது எழில் - ஓவியம் வல்லார் பார்த்து எழுதுதற்குரிய அழகிய; கலுழ்தல் - கண்ணீர் சொரிதல், அழுதல்.
5. ஆதிமந்தி - ஆட்டனத்திக்கு மனைவி, கரிகால் வளவனுக்கு மகள்; அறிவு பிறிதாகி - அறிவு திரிந்து.
6. பேதுறுதல் - மயங்குதல்.
7. திருகல் - மிகுதல், தாக்குதல்; கனை - மிகுதி; கால் - காற்று.
8. கூடு குவி வான்பூ - இதழ் குவிந்த வெள்ளிய பூக்கள்.
9. கோடு - யானைத்தந்தம்; கழங்கு - கழற்சிக்காய்; அறை - பாறை.
11. வீயா - அழியாத.
12. ஈர் எழு - பதினான்கு; இயைந்து - ஒன்றுசேர்ந்து; எறிந்த - தாக்கிய.
15. கழுவுள் - சிறந்த போராற்றல் கொண்ட வள்ளல்; காமூர் - ஓர் ஊர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 43 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்றபோது மெலிவடைந்த தலைவி வருந்திக் கூறியது.

'செல்வார் அல்லர்'என்று யான்இகழ்ந் தனனே;
'ஒல்வாள் அல்லள்'என்று அவர்இகழ்ந் தனரே;
ஆயிடை, இருபேர் ஆண்மை செய்த பூசல்,
நல்அராக் கதுவி யாங்கு,என்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே.

தெளிவுரை

தலைவர் என்னைப் பிரிந்து செல்ல மாட்டார் என்னும் துணிவினால் நான் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டேன். (அலட்சியமாயிருந்துவிட்டேன்.) தன் பிரிவினை அவள் உடன்பட மாட்டாள் என்றெண்ணி அவரும் என்னிடம் பிரிவை உணர்த்தாமல் சென்றுவிட்டார். இவ்வாறு எங்கள் இருவரிடமும் தோன்றிய வலிமையான எண்ணம் காரணமாகத் தலைவர் பிரிவால் துன்புற்றிருந்த என் உள்ளம், நல்ல பாம்பு கௌவிக் கடித்ததைப் போன்ற பெருந்துன்பத்தை மேலும் பெற்று மயக்கமடைகின்றது.

கருத்து

நானும் அவரைத் தடுக்காது விட்டேன்; அவரும் என்னிடம் சொல்லாமல் போய்விட்டார். அதனால் என் நெஞ்சம் குழம்புகிறது.

சொற்பொருள்

1. இகழ்ந்தனன் - எதுவும் செய்யாது இருந்துவிட்டேன்.
2. ஒல்வாள் அல்லள் - பொறுத்துக் கொள்ளமாட்டாள்.
3. ஆயிடை - அவற்றினிடையே; இரு பேர் - இரு பெரிய; ஆண்மை - மன ஆளுமை; பூசல் - போர்.
4. நல்அரா - நல்ல பாம்பு; கதுவுதல் - கௌவிக் கடித்தல்.
5. அலமலக்குறுதல் - பெருந்துன்பத்தால் மயக்கமடைகின்றது.

தலைவி கூற்று

குறுந்தொகை 67 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாது தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவை ஆற்றாது மெலிந்த தலைவி, 'பிரிந்து சென்ற தலைவர் நம்மை நினைந்திடவும் இல்லையோ? நினைந்திருந்தால் திரும்பி வந்திருப்பாரே' என்று வருந்திச் சொல்லியது.

உள்ளார் கொல்லோ தோழி! கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்உகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்
நிலம்கரி கள்ளிஅம் காடுஇறந் தோரே?

தெளிவுரை

தோழி! கிளி தன் வளைந்த அலகில் வைத்திருக்கும் ஒளிமிக்க வேப்பம்பழம், பொன்னாபரணத்தில் புதிய பொற்கம்பியை நுழைக்கும் பொற்கொல்லன், தன் கூரிய நகங்களிடையே வைத்திருக்கும் ஒரு பொற்காசினைப் போலத் தோன்றும். வெப்பத்தால் நிலங்கரிந்துள்ள கள்ளிக்காட்டைக் கடந்து செல்லும்போது நம் தலைவர் நம்மை நினைந்திடவும் மாட்டாரோ?

கருத்து

தலைவர் நம்மை நினைக்க மாட்டாரோ?

விளக்கம்

பாலை நிலம்; கள்ளிக்காடு; கள்ளியின்மேல் அமர்ந்துள்ள கிளி தன் அலகில் வேப்பம்பழம் ஒன்றைக் கொண்டிருக்கிறது. அக்காட்சி, பொற்கொல்லன் ஒருவன் தன் கூரிய நகங்களுக்கிடையே பிடித்துள்ள ஒரு பொற்காசினைப் போலத் தோற்றமளிக்கிறது.

கிளியின் அலகுக்குப் பொற்கொல்லனின் கைவிரல் நகங்களும், வேப்பம்பழத்திற்கு உருண்டையான பொற்காசும் உவமைகள்.

குறிப்பு

'வேம்பு பூப்பதற்கு முன் வந்துவிடுவேன்' என்று கூறிச் சென்றான், தலைவன். வேம்பு பூத்துக் காய்த்துக் கனிந்த பின்னரும் அவன் வரவில்லையே எனத் தலைவி ஏங்கியிருக்கிறாள்.

சொற்பொருள்

1. உள்ளுதல் - நினைத்தல்; கிள்ளை - கிளி.
2. வளைவாய் - வளைந்த வாய்; கொண்ட - பற்றிக்கொண்டிருந்த; ஒண்பழம் - ஒளி மிக்க பழம்.
3. நாண் - கம்பி; நுதி - நுனி; வள் உகிர் - கூரிய நகம்.
4. பொலங்கலம் - பொன் அணிகலன்; ஏய்க்கும் - ஒத்திருக்கும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 60 — **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடை ஆற்றாமையின் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவை ஆற்றாத தலைவி தோழியை நோக்கி, 'தலைவன் என்னிடம் அன்பு காட்டவில்லையாயினும், அவன் அருகிலிருந்தால் அவனைக் கண்ணால் காண்பதிலாவது இன்பம் பெறுவேன். இப்போது அக்காட்சியும் கிட்டவில்லையே' என்று கூறியது.

குறுந்தாள் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்,
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து,
சுட்டுபு நக்கியாங்கு, காதலர்
நல்கார் நயவார் ஆயினும்,
பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே.

தெளிவுரை

குட்டையான தண்டினைக் கொண்ட கூதளஞ்செடி மேல் காற்றால் அசைகின்ற உயர்ந்த மலைமுகட்டில் இருந்த பெரிய தேனடையைக் குறுகிய கால்களைக் கொண்ட முடவன் ஒருவன் கண்டான். அத்தேன்கூட்டின் கீழே இருந்தபடி தன் உள்ளங்கை யைப் பாத்திரம் போலச் சிறிது குவித்து, மேலேயுள்ள தேன் கூட்டைத் தன் விரலால் சுட்டிக் காட்டினான். அக்கூட்டிலிருந்து தேன் விழுந்ததுபோலக் கருதித் தன் கையை நக்கி இன்புற்றான். அதுபோல, நம் காதலர் நம்மீது அன்பு கொள்ளாதவராயினும், அருள் புரியாதவராயினும், அவரைப் பலமுறை கண்ணால் கண்டாலே போதும்; அதுவே உள்ளத்திற்கு இன்பம் தரும்.

கருத்து

தலைவர் அன்பில்லாதவர், அருள் புரியாதவராயினும் அவரைக் கண்ணால் கண்டாலே போதும்.

விளக்கம்

தேனிறாலில் உள்ள தேன் தன் கையில் விழப்பெறவில்லை யாயினும், முடவன் அதனைக் கண்ணால் கண்ட அளவிலே இன்பம் பெறுவதைப்போல, தலைவனின் அன்பையும் அருளை யும் பெறாதவளாயினும் அவனைக் கண்ணால் கண்டாலே போதும்; அது எனக்கு இன்பத்தைத் தரும் என்கிறார், தலைவி.

குறிப்பு

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல என்பது பழமொழி.

சொற்பொருள்

1. குறுந்தாள் - குட்டையான தண்டு; கூதளி - கூதளஞ்செடி; ஆடிய - அசைந்த; வரை - மலை.
2. பெருந்தேன் - பெரிய தேன் இறால்; இருங்கால் - பெரிய கால்; முடவன் - நொண்டி.
3. உட்கை -உள்ளங்கை; கோலி - குவித்து.
4. சுட்டுபு - சுட்டிக்காட்டி.
5. நல்குதல் - அருள் செய்தல்; நயத்தல் - விரும்புதல்.
6. பல்கால் - பலமுறை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 318 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'நம்மைப் பிரியார்' என்று கருதியிருந்த தலைமகள், அவன் பிரிந்துழி, இரங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியான் என நம்பியிருந்த தலைவி, தன் நம்பிக்கை பயனற்றதானபோது வருந்திச் சொல்லியது.

ஆய்நலம் பசப்ப அரும்படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்இழை நெகிழ
நசைநனி கொன்றோர் மன்ற விசைநிமிர்ந்து
ஒடுஎரி நடந்த வைப்பின்
கோடுஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

"காட்டுத் தீ, ஓசையோடு பற்றி எரிந்து எங்கும் பரவி எல்லா வற்றையும் அழிக்கும். அத்தகைய பாலை நிலத்தில் உயர்ந்த உச்சி களைக் கொண்ட நெருக்கமான மலைகளைத் தாண்டி நம் தலைவர் சென்றார். அவர் சென்றதால், நம் அழகு குன்றி உடலெங்கும் பசப்பு ஏற்பட்டது. பொறுக்கவியலாத துயரத் தால் உடம்பு மெலிந்தது. மூங்கில்போலும் பருத்த தோளில் அணிந்த ஒளிபொருந்திய அணிகலன்கள் நெகிழ்ந்தன; நம் மனத்தில் எழும் காதல் விருப்பத்தினையும் முற்றிலுமாய் அழித்துவிட்டார்."

கருத்து

அவர் நம் ஆசையை அடியோடு அழித்துவிட்டார்.

சொற்பொருள்

1. ஆய்நலம் - ஆராய்ந்து சொல்லப்பட்ட அழகு; பசப்ப - பசலை பெற; அரும்படர் - அரிய துன்பம்; நலிய - வருத்த.
2. வேய் - மூங்கில்; மருள் - போன்ற; பணைத்தோள் - பருத்த தோள்; வில் இழை - ஒளி பொருந்திய அணிகலன்.

3. நசை - விருப்பம்; நனி - மிகவும்; கொன்றோர் - அழித்தவர்; விசை - வேகம்; நிமிர்ந்து - மிகுந்து.
4. ஓடு எரி - பற்றிப் பரவும் நெருப்பு; வைப்பு - இடம், பாலை நிலம்.
5. கோடு - உச்சி; பிறங்கல் - மலை; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 77 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தமையால் ஆற்றாமைமிக்க தலைவியிடம், 'நீ இவ்வாறு மெலிந்து வாடுவது ஏன்?' என்று தோழி வினவினாள். அப்போது தோழியிடம் தலைவி கூறியது.

அம்ம வாழி, தோழி! யாவதும்,
தவறுஎனின், தவறோ இலவே, வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவல்இடு பதுக்கை
நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளிய ஆகிய தடமென் தோளே.

தெளிவுரை

தோழி! வாழ்க! நான் கூறுவதைக் கேள்! கொடிய பாலை நில வழியில் ஆறலை கள்வரால் கொல்லப்பட்ட வழிப்போக்கர் உடல்கள் தழைகளால் மறைத்து மூடப்பட்டு அவற்றின் மேல் இடப்பட்ட கற்குவியல்கள் உயர்ந்த நல்ல யானைக்கு, நிழலைத் தருதற்குப் பயன்படும். பிரிந்து சென்ற தலைவர் செல்வதற்கரிய அத்தகைய வழியில் சென்றதால் என் மெல்லிய தோள்கள் மெலிந்தன என்று நீ கூறினால், அது சிறிதும் தவறானது ஆகாது.

கருத்து

என் தோள்கள் மெலிவுக்குத் தலைவர் பிரிந்து சென்றதே காரணம்.

விளக்கம்

தலைவி தோழியை நோக்கி, " 'நீ ஆற்றாமையால் தோள்கள் மெலிவுற வருந்துதல் தவறாகும்' என்கிறாய். கடத்தற்கரிய பாலை நிலத்தின்வழி தலைவர் சென்றுள்ளார் என்று நான் எண்ணும் போது, இத்தோள்கள் மெலிவுற நான் வருந்துதல் எங்ஙனம் தவறானதாகும்?" என்று கேட்கிறாள்.

சொற்பொருள்

1. யாவதும் - சிறிதும்.
2. தவறோ இலவே - தவறானது அன்று.
3. உலந்த - இறந்துபோன; வம்பலர் - புதியவர், வழிப்போக்கர்; உவல் - தழை; பதுக்கை - (தழை) மேல் இடப்பட்ட கற்குவியல்.
4. இடுநிழல் - செயற்கையாய் இடப்பட்ட நிழல்.

தலைவி கூற்று

அகநானூறு 31 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

'பிரிவிடை ஆற்றாளாயினாள்' என்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதால் வருந்தும் தலைவி, தோழியிடம் 'கானகம் சென்ற தலைவரைப்பற்றி ஊரார் எதுவும் சொல்லாமல், அவர் பிரிந்ததால் வருந்தும் என்னை மட்டுமே, 'இவள் பொறுக்க மாட்டாதவளாயிருக்கிறாள் என்கின்றனரே' என்று வருந்திக் கூறியது.

நெருப்புஎனச் சிவந்த உருப்புஅவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின், ஞொள்கி,
'நிலம்புடை பெயர்வது அன்றுகொல், இன்றுஎன,
மன்உயிர் மடிந்த மழைமாறு அமையத்து,
இலைஇல ஓங்கிய நிலைஉயர் யாஅத்து
மேற்கவட்டு இருந்த பார்ப்பினங் கட்கு,
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்இட,
நிணவரிக் குறைந்த நிறத்த அதர்தொறும்,
கணவிர மாலை இடூஉக் கழிந்தன்ன,
புண்உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்உமிழ் கழுகின் கானம் நீந்தி,
சென்றார்' அன்புஇலர்– தோழி! வென்றியொடு
வில்அலைத்து உண்ணும் வல்ஆண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பல்மலை இறந்தே.

தெளிவுரை

“தோழி! ‘தீயைப் போன்று சினந்தெழுந்த ஞாயிற்று மண்டிலம் விளைநிலத்தேயுள்ள பயிர்களைத் தீய்த்தொழித்தது. அதனால் நில புலங்கள் வளம் கெட்டுக் குறைவுற்றன. மக்களும் இடம் விட்டுப் பெயர்ந்து செல்லும் காலமும் ஆயிற்று' என்று சொல்லும்படியாக உயிரினங்கள் வெப்பத்தால் மடிந்து கொண்டிருக்கின்றன.

“மழையற்று விட்ட இக்காலத்திலே, இலைகளே இல்லா தனவாய் உயரமாய் வளர்ந்திருக்கும் மாமரத்தின் மேற்கிளை களில் கழுகுகள் குஞ்சுகளுடன் தங்கியிருக்கும்.

“கற்களைக் கொண்ட சிற்றூரிலுள்ள மறவர்கள் எய்த அம்புகளால், வழியெங்கும் செவ்வரிமாலை சூடப்பட்டவர் போல உடல்களிலிருந்து நிணம் வெளிப்பட்டுக் குருதி வழிந் தோடப் பலர் இறந்துகிடப்பர். அவர்களின் கண்களைக் கொத்திப் பிடுங்கி, மாமரத்தில் உள்ள கழுகுகள் தம் குஞ்சுகட்கு உணவாய்க் கொடுக்கும். இத்தகைய கொடிய காட்டைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

"விற்போரில் பகைவர்களை அழித்து, அதனால் கிடைக்கும் பொருள்களைப் பெற்று வாழ்கின்ற வேற்று மொழி பேசுவோர் வாழும் நாட்டைத் தமிழ் வேந்தர்கள் சென்று காத்து வருகின்றனர். அந்நாட்டிலுள்ள மலைகள் பலவற்றையும் கடந்து பொருளீட்டச் சென்றுள்ளார், அன்பிலாத நம் தலைவர்.

கருத்து

தம் பிரிவால் எனக்கு வருத்தம் உண்டாக்கியவரை ஏதும் கூறாது, அவரால் வருந்தும் என்னைக் குறை கூறுகின்றனரே, ஏன்?

விளக்கம்

"பிரிந்து சென்று அதனால் என்னை வருத்தும் தலைவரை ஏதும் சொல்லாமல், 'பிரிவைப் பொறுத்துக்கொள்ள இயலாதவள்' என்று என்னையே குறை கூறுகின்றனரே! அஃதேன்?" என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. சிவந்த - சினங்கொண்ட; உருப்புஅவிர் - வெப்பம் விளங்கும்; மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம்.
2. புலம் - நிலம்; கடை மடங்க - பயிர்கள் தீய; ஞொள்கி - குறைவுற்று.
3. நிலம் - நிலத்தில் வாழும் மக்கள்; புடை பெயர்வது - வெளியேறுவது.
4. மன்உயிர் - நிலை பெறும் உயிர்கள்; மடிதல் - இறத்தல் (அதற்குக் காரணமான); மழைமாறு அமையம் - மழை பெய்யாத காலம்.
5. இல - இல்லாத; யாஅத்து - யாமரத்து.
6. கவடு - கிளை; பார்ப்பு - குஞ்சு.
7. குறும்பு - சிற்றூர்; வயவர் - மறவர், வீரர்.
8. நிணவரி - நிணத்தின் ஒழுக்கு; அதர்தொறும் - வழியிடமெங்கும்.
9. கணவிரம் - செவ்வலரி; இடூஉ - சூடப்பட்டு; கழிந்தன்ன - இறந்து கிடந்தாலொப்ப.
10. பரிப்ப - சூழ.
11. கண்உமிழ் - கண்ணைப் (பிடுங்கிச் சென்று குஞ்சின் வாயில்) உமிழ்தல்; கானம் - காடு; நீந்தி - கடந்து.
13. வில்அலைத்து - விற்போர் செய்து; வல்ஆண் - வலிய ஆண்மையினைக் கொண்ட.
14. தமிழ்கெழு மூவர் - தமிழ் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்.
15. மொழிபெயர் தேஎத்த - (தமிழல்லாத) வேறு மொழி பேசும் நாடு.

தலைவி கூற்று

அகநானூறு 45 **வெள்ளிவீதியார்**

திணை : பாலை

கூற்று

வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவனை நினைந்து வருந்தியிருந்த தலைவியை நோக்கித் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறு தோழி வற்புறுத்திக் கூறினாள். அப்போது, தலைவி தன்னால் துன்பத்தை ஆற்றியிருத்தல் இயலாது என்று தோழியை நோக்கிக் கூறியது.

வாடல் உழுஞ்சில் விளைநெற்று அம்துணர்
ஆடுகளப் பறையின், அரிப்பன ஒலிப்பக்
கோடை நீடிய அகன்பெருங் குன்றத்து,
நீர்இல்ஆர் ஆற்று நிவப்பன களிறுஅட்டு,
ஆள்இல் அத்தத்து உழுவை உகளும்
காடுஇறந் தனரே, காதலர், மாமை,
அரிநுண் பசலை பாஅய், பீரத்து
எழில்மலர் புரைதல் வேண்டும், அலரே,
அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி,
புன்னை குறைத்த ஞான்றை, வயிரியர்
இன்இசை ஆர்ப்பினும் பெரிதே, யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு, நோய்கூர்ந்து,
ஆதிமந்தி போலப் பேதுற்று,
அலந்தனென் உழல்வென் கொல்லோ— பொலந்தார்க்
கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்,
வான வரம்பன் அடல்முனைக் கலங்கிய
உடைமதில் ஓர்அரண் போல,
அஞ்சுவரு நோயொடு, துஞ்சா தேனே!

தெளிவுரை

தோழி! வற்றிய வாகை மரத்தின் முதிர்ந்த நெற்றுக்கொத்து, கூத்தரின் ஆடுகளத்தில் ஒலிக்கும் பறைபோல விட்டுவிட்டு

ஒலிக்கக் கோடை வெப்பம் மிக்க அகன்ற பெரிய குன்றில், நீரில்லாத அரிய காட்டுவழியில் மக்கள் நடமாட்டமில்லாத நிலையில் யானைகளைக் கொல்லும் புலி திரியும். அத்தகைய வழியைக் கடந்து நம் தலைவர் சென்றுள்ளார்.

அவர் பிரிவால் மாமை நிறத்துடன் கூடிய பீர்க்க மலரை ஒத்த மஞ்சள் நிறப் பசலை என்மீது பரவியது. இதனைக் கண்டு இவ்வூர் அலர் எழுப்பியுள்ளது. அந்த அலர், குறுக்கை என்னும் ஊரில் நடந்த போரில், ஐம்பெரும் வேளிருள் ஒருவனாகிய திதியனின் காவல்மரமாகிய புன்னையை அன்னி என்பவன் வெட்டி வீழ்த்தியபோது, கூத்தர் எடுத்த இன்னிசைப் புகழ் முழக்கத்தினும் பெரிதாயுள்ளது.

வானவரம்பன் என்ற அரசன் பொன்மாலை பூண்டவன்; வேற்படை கொண்டவன்; கடலிடத்தே படை நடத்திப் பகைவரை வெற்றி கொண்டவன். அவன் பல அரண்களைக் கடந்து, இருந்த ஒரே மதிலாகிய அரணை உடைக்க, அவ்வரணை நம்பி அதனுள் இருப்போர் அச்சத்தால் துயிலாதிருப்பதுபோல, நான் இப்போது உறக்கத்தைத் துறந்துள்ளேன்.

காதலனைக் காணாதொழிந்த சிறுமையால் மிக்க வருத்தத்துடன் துன்புற்று அவரைத் தேடி அலைந்த ஆதிமந்தியைப் போல, அறிவு கலங்கப் பெற்று நானும் அலைந்து திரிவேனோ?

கருத்து

காதலன் பிரிவால் ஏற்பட்ட பழிச்சொல் போர்க்களத்தில் எழும் ஆரவாரத்தினும் பெரிதாயுள்ளது. நானும் ஆதிமந்தியைப் போலக் காதலனைத் தேடி அலைய வேண்டியவள்தானோ?

விளக்கம்

“கோடை நீடிய மலைப்பகுதியில், நீரில்லாத வழியில், யானைகளைக் கொன்று புலி திரியும் காட்டைக் கடந்து சென்றார், காதலர். என் உடலில் பசலை பரவியதால் ஊரில் எழுந்துள்ள அலர், அன்னி என்பான் திதியனுக்குரிய காவல்மரமாகிய புன்னையை வெட்டியபோது, கூத்தரது இன்னிசையால் உண்டான மனக்கலக்கமுற்ற ஆரவாரத்தினும்

பெரிதாயுள்ளது. கடல் பிறக்கோட்டிய வானவரம்பனின் போர் முனையில் ஒரே மதிலாகிய அரணுள் இருப்போர்போல, அச்சத்தோடு உறங்காதிருக்கிறேன். காதலனைத் தொலைத்து விட்டதால் ஆதிமந்தி என்பாள்போல, நானும் காதலனை மயக்கத்தோடு தேடி அலைவேனா?" என்று தலைவி மனமழிந்து ஆற்றாது புலம்புகின்றாள்.

குறிப்பு

ஆதிமந்தி என்பவள் கரிகாற்சோழன் பெற்ற அருமை மகள்; சேரர் படைத் தலைவனும் குறுநில மன்னனுமாகிய ஆட்டனத்தி (அத்தி) என்பானை மணந்தாள். கரிகாற்சோழன், கழாஅர் என்னும் காவிரித் துறையில் நீர் விழாக் கொண்டாட்டத்தின்போது, நீரிலாடியபோது ஆட்டனத்தியைக் காவிரியாறு இழுத்துச் சென்றுவிட்டது. ஆதிமந்தி அவனைத் தேடி அலைந்தாள்; காவிரி செல்லும் வழியே ஓடிக் கடலை அடைந்தாள். கடல் ஆட்டனத்தியைக் கொடுக்க, ஆதிமந்தி அவனைத் தழுவி மீண்டனள்.

சொற்பொருள்

1. வாடல் - வற்றல், வதங்கல்; உழிஞ்சில் - வாகை மரம்; அம்துணர் - அழகிய கொத்து.
2. அரிப்பன ஒலிப்ப - விட்டுவிட்டு ஒலிக்க.
3. அகன்பெரும் - அகன்ற பெரிய.
4. நீர்இல் - நீரில்லாத; ஆர் ஆற்று - அரிய வழி; நிவப்பன - ஓங்கின; அட்டு - கொன்று.
5. அத்தம் - வழி; உழுவை - புலி; உகளும் - திரியும்.
7. பாஅய் - பரத்தலால்; பீரம் - பீர்க்கு.
8. புரைதல் - ஒத்தல் (புரைய - உவம உருபு).
9. அன்னி - குறுநிலத் தலைவருள் ஒருவன்; குறுக்கை - ஓர் ஊர்; பறந்தலை - ஒரு போர்க்களம்; திதியன் - அரசருள் ஒருவன்.
10. முழுமுதல் - பெரிய அடிமரம்; துமிய - அழிய.
11. குறைத்த - வெட்டித் துண்டிக்கப்பட்ட; ஞான்றை - பொழுது; வயிரியர் - கூத்தர்.
12. ஆர்ப்பு - ஒலி, ஆரவாரம்.
13. கெடுத்த - தொலைத்த; நோய்கூர்ந்து - துன்பம் மிக்கு.
14. ஆதிமந்தி - கரிகால் சோழ மன்னன் மகள்; பேதுற்று - அறிவு கலங்கி.

15. அலந்தனென் - துன்புற்றுத் தேடி; உழல்வென் கொல்லோ? - திரிவேனோ?; பொலந்தார் - பொன் மாலை.
16. கடல்கால் கிளர்ந்த - கடலிடம் புடைபெயர; (கால் - இடம்); வென்றி - வெற்றி.
17. வான வரம்பன் - சேர மன்னன்; அடல்முனை - வெற்றி பொருந்திய போர்முனை.
18. மதில் - அரண்.
19. அஞ்சுவரு - அச்சம் பொருந்திய; நோய் - துன்பம், வருத்தம்; துஞ்சுதல் - தூங்குதல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 79 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவினால் வருந்திய தலைவி, தோழியை நோக்கி, 'என்னிடம் சொன்னால் நான் உடன்பட மாட்டேன் என்று கருதிச் சொல்லாமலேயே பிரிந்து சென்ற தலைவர், அவர் சென்றுள்ள ஊரிலேயே தங்கிவிடுவாரோ?' என்று வருந்திக் கூறியது.

கான யானை தோல்நயந்து உண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை ஏறி, ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாம்தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லாது ஏகல் வல்லு வோரே.

தெளிவுரை

'என்னால் தலைவன் பிரிவைத் தாங்கியிருக்க இயலாது' என்று சொன்ன தவற்றால், என்னிடம் சொல்லாமலேயே பிரிந்து செல்வதில் உறுதி கொண்டவராய் இருந்துவிட்டார், நம் தலைவர். பட்டையைக் காட்டு யானை விரும்பி உண்டதால் பொரிந்த அடியைக் கொண்ட ஓமை மரத்தில் காற்று மோதுதலால் அசைகின்ற நெடிய கிளையின் வற்றி உலர்ந்த கொம்பில் அமர்ந்து, ஒய்யென்னும் தனிமையையும் வருத்தத்தையும் வெளிப்படுத்தும் குரலுடன் ஆண் புறாக்கள் தம் பெண் புறாக்களை அழைத்தவாறிருக்கும். அத்தன்மை வாய்ந்த பாலைநில வழியின் பக்கத்தேயுள்ள நல்ல குடிகளைக் கொண்ட சிற்றூரைச் சேர்ந்து, அங்கேயே அவர் தங்கிவிட்டாரோ?

கருத்து

பொருள் தேடச் சென்ற தலைவர் அங்கேயே தங்கி விட்டாரோ? திரும்ப மாட்டாரோ?

விளக்கம்

ஆண்புறாக்கள் தம் தனிமையைப் போக்கப் பெண்புறாக்களை அழைப்பதைக் கேட்டு, தலைவரும் தம் தனிமையை உணர்ந்து தன்னோடு சேர்வதற்கு விரைவில் திரும்ப மாட்டாரா என ஏங்குகிறது, தலைவியுள்ளம்.

சொற்பொருள்

1. தோல் - பட்டை.
2. பொரிதாள் - பொரிந்த அடிமரம்; ஓமை - ஒரு வகை மரம்.
3. அலங்கல் - அசைதல்; உலவை - வற்றல் கொம்பு; பயிரும் - அழைக்கும்.
5. அத்தம் - பாலை நிலம்.
7. ஒல்லேம் - உடன்பட மாட்டோம்; தப்பற்கு - தப்புக்காக.
8. ஏகல் - செல்லுதல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 104 **காவன் முல்லைப்பூதனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தமையால் வருந்தியிருந்த தலைவியிடம், 'நீ இவ்வாறு ஆற்றாதிருப்பது எதனால்?' என்று கேட்ட தோழியிடம் தலைவி தன் ஆற்றாமைக்குக் காரணம் கூறியது.

அம்ம வாழி, தோழி! காதலர்,
நூல்அறு முத்தின் தண்சிதர் உறைப்ப,
தாளித் தண்பவர் நாள்ஆ மேயும்
பனிபடு நாளே, பிரிந்தனர்;
பிரியும் நாளும் பலஆ குபவே!

தெளிவுரை

தோழி! நான் கூறுவதைக் கேள்! கோக்கப்பட்டிருந்த நூலறுந்ததால் முத்துமாலையிலிருந்த முத்துகள் சிதறிக் கிடப்பதுபோல, குளிர்ச்சி பொருந்திய பனித்துளிகள் புற்களின் மேல் பொருந்தியிருக்கும். இத்தகைய விடியற்காலத்தில் பசுக்கள் சென்று தாளியறுகின் குளிர்ச்சி பொருந்திய கொடியை மேயும். இவ்வாறு பனிவீசும் பின்பனிக் காலத்திலேயே நம் தலைவரும் நம்மைப் பிரிந்து சென்றார். அவர் பிரிந்து சென்று நாள்களும் பல ஆயின. இந்நிலையில், என்னால் எப்படி ஆற்றியிருக்க முடியும்?

கருத்து

பிரியக் கூடாக் காலத்தில் பிரிந்து சென்ற தலைவர், பிரிந்து பல நாள்கள் ஆகியும், இன்னும் திரும்பவில்லை. ஆதலின் வருந்துகிறேன்.

குறிப்பு

- பின்பனிக் காலத்தில் காதலர் காதலியுடன் இருத்தல் வேண்டும். அக் காலத்திலும் பிரிகின்ற வன்கண்மை உடையவரானார், தலைவர்.

அதனையும் பொறுத்திருந்தேன். பிரிந்து சென்று நாள்கள் பலவும் ஆயின. இன்னும் வரவில்லை. நான் எவ்வாறு பொறுத்திருப்பேன்?

பசு, தாளியின் கொடியை மேயும் என்றது, விலங்கும் தனக்கு வேண்டிய நுகர்ச்சியை எளிதிற்பெற, தலைவி மட்டும் தலைவனின் நுகர்ச்சியைப் பெறவில்லை என்னும் பொருளதாம்.

சொற்பொருள்

2. சிதர் - சிதறுபவை; உறைப்ப - துளியாய்ப் பொருந்த.
3. தாளி - தாளி அறுகு; பவர் - கொடி.
4. பனிபடு நாள் - பனி கொட்டும் பின்பனிக்காலம்.

தலைவி கூற்று

அகநானூறு 333 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வற்புறுத்துத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்ற போழ்தில் தலைவி பிரிவாற்றாமையால் பெரிதும் வருந்தியிருக்கத் தோழி தேற்றி உரைத்தாள். அதனைக் கேட்ட தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

யாஅ ஒண்தளிர் அரக்குவிதிர்த் தன்னநின்
ஆக மேனி அம்பசப்பு ஊர,
அழிவுபெரிது உடையை யாகி, அவர்வயின்;
பழிதலைத் தருதல் வேண்டுதி; மொழிகொண்டு
தாங்கல் ஒல்லுமோ மற்றே, ஆங்குநின்
எவ்வம் பெருமை உரைப்பின்; செய்பொருள்
வயங்காது ஆயினும் பயம்கெடத் தூக்கி,
நீடலர்– வாழி, தோழி!– கோடையில்
குறுத்துஇறுபு உக்க வருத்தம் சொலாது,
தூம்புடைத் துய்த்தலைக் கூம்புபு திரங்கிய,
வேனில், வெளிற்றுப்பனை போலக் கைஎடுத்து,

யானைப் பெருநிரை வானம் பயிரும்
மலைச்சேண் இகந்தனர் ஆயினும் நிலைபெயர்ந்து,
நாள்இடைப் படாமை வருவர் நமர்,என,
பயம்தரு கொள்கையின் நயம்தலை திரியா
நின்வாய் இன்மொழி நன்வா யாக
வருவர் ஆயினோ நன்றே; வாராது,
அவணர் காதலர்ஆயினும், இவண்நம்,
பசலை மாய்தல் எளிதுமன் தில்ல—
சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி,
மறுதரல் உள்ளத்தர் எனினும்,
குறுகுபெரு நசையொடு தூதுவரப் பெறினே.

தெளிவுரை

“தோழி! வாழ்க! யா மரத்தின் ஒள்ளிய தளிரில் அரக்குப் பொடியினைச் சிதறினாற்போன்று, என் உடலில் பசலை படர்ந்துள்ளது. நீ வருத்தம் மிகுதியும் கொண்டவளாய், அவர்மீது பழி கூற விரும்புகின்றாய். அவரிடம் சென்று என் மிகுதியான துன்பம்பற்றி யாரேனும் கூறினால், அச்சொற்களைக் கேட்டு அவரால் என் துன்பத்தைத் தாங்கியிருக்க இயலுமா? பொருளீட்டும் செயல் முழுமை பெறாவிடினும், இன்பப் பயன் கெடுமாறு அங்கேயே இருந்து காலம் தாழ்த்த மாட்டார்.

“வேனிற்காலத்தில், மேல்காற்றால் குருத்துகள் இற்று ஒடிந்து விழுந்து, துளை கொண்ட மென்மையான உச்சிப்பகுதி கூம்பி வற்றிய இளைய பனை மரம்போல், யானையின் பெருங்கூட்டம் கையை உயர்த்தியவாறு மேகத்தை நோக்கிக் கதறும் மலையைக் கடந்து தொலைவில் சென்றாராயினும், தாம் கூறிச் சென்ற கால எல்லை கடந்திடாது நாள்கள் இடைப்படாமல் தலைவர் வருவார்” என்று கூறிய தோழியே! பயனை உண்டாக்கும் கொள்கையோடு இனிமை நீங்காது கூறப்படும் உன் இனிய சொற்கள் உண்மையாகும்படி வருவாரெனில், அது மிகவும் நல்லதே!

"அங்ஙனம் வாராமல் காதலர் அங்கேயே தங்குவார் என்றாலும், தாம் சென்றுள்ள இடத்தில் பொருளீட்டும் தொழிலை முடித்துக் கொண்டு திரும்பும் எண்ணம் உடைய வராயினும், அவ்விருப்பத்தினைத் தெரிவித்திட அவரிடமிருந்து ஏதேனும் தூது வருமெனின், என் பசலை மறைதல் எளிதாம்.

கருத்து

அவர் பணி இன்னும் முடியவில்லை. என்றாலும், அவரிடமிருந்து 'முடிந்ததும் வருவேன்' என்னும் தூது வருமாயின் என் பசலை நீங்கும்.

விளக்கம்

"தலைவி! வாழி! 'உன் மேனி பசப்பூர வருத்த மிகுதியால் அவர்மீது பழி கூற விரும்புகின்றனை; உன் துன்ப மிகுதியை அவரிடம் யாரேனும் சென்றுரைப்பாராயின் அவரால் அத்துன்பத்தைத் தாங்க இயலுமா? நாள்கள் இடைப்படாமல் குறித்த காலத்தில் வருவார்' என்று தோழியே நீ கூறும் சொற்கள் உண்மையாகும்படி வந்துவிடுவாராயின் அது மிகவும் நல்லதே; அவ்வாறு வாராமல் தம் செயல் முற்றித் திரும்பும் எண்ணம் உடையவராயினும், அவர் விடுக்கும் தூது வரப்பெறுவோ மாயின் என் பசலை மறைதல் எளிதாம்" என்று தலைவி தன் ஆசையைப் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. யாஅ - யா மரம்; விதிர்த்தன்ன - சிதறினாற்போல, தூவினாற்போல.
2. ஆக மேனி - உடம்பின் மேனி (மேனி - அங்கம், உறுப்பு); அம் - அழகிய.
3. அழிவு - வருத்தம்; வயின் - இடம்.
4. பழிதலைத் தருதல் - பழிச்சொற்களைச் சேர்த்தல்; மொழி - சொல்.
5. ஒல்லுமோ - இயலுமோ?
6. எவ்வம் - துன்பம்; பெருமை - மிகுதி; செய்பொருள் - செய்யப்படும் பொருள்.
7. வயங்காதாயினும் - முற்றுப் பெறாதாயினும்; பயம்கெட - இன்பப் பயன் கெடுமாறு; தூக்கி - ஆராய்ந்து.
8. நீடலர் - தாழ்த்த மாட்டார்; தாமதிக்க மாட்டார், கோடை - மேல்காற்று.

9. இறுபு - ஒடிந்து; உக்க - விழுந்த; சொலாது - நீங்காது.
10. தூம்பு - துளை; துய்த்தலை - மென்மையான உச்சி; கூம்புபு - கூம்பி; திரங்கிய - வற்றிய.
11, வெளிறு - இளைய; பனை - பனைமரம்; கை - துதிக்கை; எடுத்து - தூக்கி.
12. பெருநிரை - பெருங்கூட்டம்; பயிரும் - கதறும்.
13. சேண் - தொலைவு; இகந்தனர் - கடந்து சென்றனர்; நிலை பெயர்ந்து - (தாம் கூறிய) கால எல்லை கடந்திட.
14. இடைப்படாமை - இடைப்படாமல்; நமர் - நம் தலைவர்.
15. பயம்தரு - பயன் தருகின்ற; நயம் - இனிமை; தலை திரியா - நீங்காது.
16. நின்வாய் - உன் வாயிலிருந்து வரும்; இன்மொழி - இனிய மொழி; நன்வாயாக - நல்ல உண்மையாக.
18. அவணர் - அவ்விடத்தில்; இவண் - இங்கு.
19. மாய்தல் - மறைதல், நீங்குதல்.
20. தேஎம் - தேசம்; செய்வினை - பொருளீட்டும் செயல்; முற்றி - நிறைவேறி.
21. மறுதரல் - திரும்புதல்.
22. குறுகுபெரு நசை - மீண்டு வரும் பெருவிருப்பம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 11 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள், தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவினை ஆற்றாளாய்க் கலங்கிச் சோர்ந்த தலைவி, தன் தோழி கேட்பத் தன் மனத்தினிடத்தில் சொல்லியது.

கோடுஈர் இலங்குவளை நெகிழ நாளும்
பாடுஇல கலிழும் கண்ணொடு புலம்பி,
ஈங்குஇவண் உறைதலும் உய்குவம்; ஆங்கே
எழு,இனி வாழி,என் நெஞ்சே! முனாஅது,
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நல்நாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்,
வழிபடல் சூழ்ந்திசின், அவருடை நாட்டே.

தெளிவுரை

"என் நெஞ்சமே! வாழ்க! சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட ஒளி விளங்கும் வளையல்கள் உடல் மெலிவினால் கைகளினின் றும் கழன்று விழுகின்றன. நாளெல்லாம் கண்கள் இமை பொருந்தாமல் கலங்கிக் கண்ணீர் சிந்தி அழுகின்றன. இங்கே தனித்துத் தங்கிக் கொண்டிருப்பதினின்றும் விடுபட வேண்டும்.

"கண் முன்னே காணப்படும் கஞ்சங்குல்லை மலரால் தொடுக்கப் பட்ட மாலையை அணிந்த வடுகர் நாட்டிற்கு அருகே கட்டி என்பவனுடைய நல்ல நாடு இருக்கின்றது. வேற்படையைக் கொண்ட சிறந்த வீரனாகிய அந்தக் கட்டியின் நாட்டுக்கு அப்பால் உள்ள வேறு மொழி வழங்கும் நாட்டிலே நம் தலைவன் தங்கியிருக்கிறான். அங்குச் சென்று அவனைக் கண்டு வழிபட முடிவு செய்து விட்டேன்! ஆதலால், அங்குச் செல்ல, நெஞ்சமே! உடனே புறப்படு" என்று தன் தோழி கேட்பத் தன் நெஞ்சத்தினி டத்தில் கூறுகிறாள்.

கருத்து

நெஞ்சே! தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் துன்பத்தை இனியும் பொறுத்திருக்க இயலாது. அவன் இருக்குமிடம் சென்று அவனைக் காண முடிவு செய்துவிட்டேன்! உடனே புறப்படு!

விளக்கம்

மொழிபெயர் தேஎம் - வேற்று மொழி வழங்கும் நாடு. இது தமிழ்நாட்டை அடுத்துள்ள தெலுங்கு நாட்டைக் குறித்தது.

குறிப்பு

கட்டி என்பவன் சேரன் படைத்தலைவர்களுள் ஒருவன்; சிறந்த வீரன்; கொடையாளன். இவன் கங்க நாட்டுத் தலைவன் என்றும் கூறப்படுகின்றான்.

சொற்பொருள்

1. கோடு - சங்கு; ஈர்தல் - அறுத்தல்; இலங்கு - ஒளி விளங்கும்; வளை - கை வளையல்கள்; நெகிழ - கழன்று விழ.
2. பாடு இல - இமையோடு இமை பொருந்தாமல்; கலிழும் - கலங்கிக் கண்ணீர் விழும்; புலம்பி - தனித்திருந்து.
3. ஈங்கு - இப்படி; இவண் - இங்கே; உய்குவம் - விடுபடுவோம், தப்பித்துக் கொள்வோம்; ஆங்கே - அங்கே.
4. எழு - புறப்படு; இனி - இப்பொழுதே; முனாது - முன்னே காணப்படும்.
5. குல்லை - கஞ்சங்குல்லை மலர்; கண்ணி - மாலை; வடுகர் - ஓர் இனத்தைச் சார்ந்தவர்; முனையது - அருகில் உள்ளது.
6. பல்வேல் - பல வேல்களைக் கொண்ட; கட்டி - வீரருள் ஒருவன்; உம்பல் - அப்பால்.
7. மொழிபெயர் - வேற்று மொழி வழங்கப்படும்; தேஎம் - தேயம் - நாடு.
8. சூழ்ந்திசின் - முடிவு செய்துள்ளேன்.

தலைவி கூற்று

அகநானூறு 40 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பொருள்வயிற் பிரிந்துவழி, கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டத் தலைவன் பிரிந்ததால் அவன் பிரிவைப் பொறுக்க வியலாது தலைவி மிகவும் வருந்தினாள். தன்னை ஆற்றியிருக்குமாறு தேற்றிய தோழியை நோக்கித் தலைவி வருந்திக் கூறியது.

கானல், மாலைக் கழிப்பூக் கூம்ப,
நீல்நிறப் பெருங்கடல் பாடுஎழுந்து ஒலிப்ப,
மீன்ஆர் குருகின் மென்பறைத் தொழுதி
குவைஇரும் புன்னைக் குடம்பை சேர,
அசைவண்டு ஆர்க்கும் அல்குறு காலை,
தாழை தளரத் தூக்கி, மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சம் கையறுபு இனைய,
துயரம் செய்துநம் அருளார் ஆயினும்—
அறாஅ லியரோ அவருடைக் கேண்மை!
அளிஇன் மையின் அவண்உறை முனைஇ,
வாரற்க தில்ல தோழி! கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரின் பிளிற்றி, பெண்ணை
அகமடல் சேக்கும் துறைவன்
இன்துயில் மார்பில் சென்றஎன் நெஞ்சே!

தெளிவுரை

"தோழியே! கடற்கரைச்சோலையில் உள்ள மலர்கள் குவிந்தன. நீல நிறப் பெருங்கடல் மிகுதியாய் ஒலித்தது. மீனை உண்ணும் மெல்லிய சிறகினைக் கொண்ட பறவைக்கூட்டம் திரட்சி பொருந்திய பெரிய புன்னை மரத்திலுள்ள கூடுகளைச் சென்றடைந்தது. சுற்றித் திரியும் வண்டுகள் ஒலி எழுப்பின. இவ்வாறு யாவும் தத்தம் இடங்களுக்குச் சென்றடையும் மாலைப்பொழுதில் தாழைகள் தளருமாறு கீழ்க்காற்று அசைந்து வீசுகின்றது. பிரிந்தோர் நெஞ்சம் செயலற்று வருந்துமாறு பிரிவுத்துன்பத்தைத் தந்த தலைவன் நமக்கு அருள் செய்ய வில்லையாயினும் அவர் நட்பு நம்மை விட்டு நீங்காது.

"வயலில் நெல் அறுப்போர் ஒலிக்கும் பறை ஒலி கேட்டு அஞ்சிய நீண்ட கால்களைக் கொண்ட நாரை, ஊதுகொம்பைப் போல் ஒலித்த வண்ணம் சென்று பனைமர மடலில் தங்கும் கடல் துறையையுடையவன், நம் தலைவன். இனிமையாய்த் துயில் தற்கு அவன் மார்பை விரும்பி என் நெஞ்சம் அவனிடம்

சென்றுள்ளது. அவன் அதற்கு அருள் செய்யவில்லை என்றாலும் அதற்காக அவனை வெறுத்துத் திரும்பிவிடாது அவன் கருணை காட்டும்வரை அங்கேயே தங்கியிருக்கட்டும்" எனத் தலைவி தோழிக்குக் கூறினாள்.

கருத்து

அவன் இருக்குமிடம் செல்லும் நெஞ்சே, அவன் அருளவில்லை என்பதற்காகத் திரும்பிவிடாதே! அவனுடனேயே தங்கியிரு.

விளக்கம்

மாலைக் காலத்தே என் நெஞ்சு செயலற்று வருந்துமாறு துயரளித்து, நமக்கு அருளாதவனாய்த் தலைவன் பிரிந்திருப் பினும், அவனிடம் சென்றால் அவன் மார்பில் இனிது துயிலலாம் எனக் கருதி என் நெஞ்சம் அவனிடம் சென்றுள்ளது. அவன் அருளவில்லையென்றாலும், வெறுப்புற்று இங்கே வாராதிருக்கட்டும். வந்தால் என்னோடு சேர்ந்து இங்கே துன்பமே அடையும். அங்கே அவனருகே இருந்தாவது இன்ப மடையட்டும்.

சொற்பொருள்

1. கானல் - கடற்கரைச்சோலை; கழி - உப்பங்கழி; கூம்ப - குவிய.
2. நீல்நிறம் - நீல நிறம்; பாடு எழுந்து - மிகவும் ஒலியெழ.
3. ஆர் - உண்ணும்; குருகு - கடற்பறவை; பறை - சிறகு; தொழுதி - கூட்டம்.
4. குவைஇரும் - திரட்சி பொருந்திய பெரிய; குடம்பை - கூடு.
5. அசை - சுற்றித் திரியும்; ஆர்க்கும் - ஒலிக்கும்; அல்குதல் - தங்குதல்; காலை - பொழுது.
6. தளர - தளருமாறு; தூக்கி - அசைத்து.
7. அழிதக - (பிரிந்திருப்போர்) வருந்த; கொண்டல் - கீழ்க்காற்று; கழிபடர் - மிக்க துன்பம்.
8. கையறுபு - செயலற்று; இனைய - வருந்த.
10. அறாஅலியர் - அறாதிருத்தல், நீங்காதிருத்தல்; கேண்மை - நட்பு.
11. அளி - அருள்; அவண் - அங்கு; உறை - தங்குதல்; முனைஇ - வெறுத்து.
12. வாரற்க - வாராதிருக்கட்டும்; கழனி - வயல்.
13. அரிநர் - அறுப்போர்; ததும்பும் - ஒலிக்கும்.

14. தண்ணுமை - ஒரு வகை பறை; வெரீஇய - அஞ்சிய; தடந்தாள் - நீண்ட கால்.
15. செறிமடை - செறிந்த மூட்டுவாயினைக் கொண்ட; வயிர் - ஊதுகொம்பு; பிளிற்றி - ஒலித்து.
16. அகமடல் - மடலினுள்ளே; சேக்கும் - தங்கும்.

தலைவி கூற்று

அகநானூறு 113 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தான் திரும்பும் காலத்தை நீட்டிக்கத் தலைவி பிரிவாற்றாது வருந்தினாள். தலைவியை ஆற்றி யிருக்குமாறு தேற்றித் தோழி கூறத் தலைவி தன் ஆற்றாமையைக் கூறியது.

நன்றுஅல் காலையும் நட்பின் கோடார்,
சென்று வழிப்படூஉம் திரிபுஇல் சூழ்ச்சியில்,
புன்தலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
அமர்வீசு வண்மகிழ் அஃதை போற்றி,
காப்புக் கைந்நிறுத்த பல்வேல் கோசர்
இளங்கள் கமழும் நெய்தல்அம் செறுவின்
வளம்கெழு நல்நாடு அன்னஎன் தோள்மணந்து,
அழுங்கல் மூதூர் அலர்எடுத்து அரற்ற,
நல்காது துறந்த காதலர், 'என்றும்
கல்பொரூஉ மெலியாப் பரட்டின் நோன்அடி
அகல்சூல் அம்சுரைப் பெய்த வல்சியர்
இகந்தனர் ஆயினும், இடம்பார்த்துப் பகைவர்
ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில்
குவைஇமில் விடைய வேற்றுஆ ஒய்யும்
கனைஇருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்
விழவுஅயர்ந் தன்ன கொழும்பல் திற்றி

எழாஅப் பாணன் நல்நாட்டு உம்பர்,
நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்
எறிபடை கழீஇய சேயரிச் சில்நீர்
அறுதுறை அயிர்மணற் படுகரைப் போகி,
சேயர் என்றலின், சிறுமை உற்றஎன்,
கையறு நெஞ்சத்து எவ்வம் நீங்க,
அழாஅம் உறைதலும் உரியம்–பராரை
அலங்கல் அம்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கில் புள்எழுந் தாங்கு,
மெய்இவண் ஒழியப் போகிஅவர்
செய்வினை மருங்கில் செலீஇயர் என் உயிரே!

தெளிவுரை

"தம்மோடு நட்புக் கொண்டவர் கேடுற்ற காலத்திலும் தங்கள் நட்புத் தன்மையில் மாறுகாட்டாது, அந்நட்பினரிடம் சென்று அவர் குறிப்பின்படி நடந்துகொள்ளும் அறிவு வாய்ந்தவர், கோசர்கள். வேற்படையையுடைய அக்கோசர்கள், போரில் பெறும் இளைய பெண் யானைகளை ஆடுநர்க்கும் பாடுநர்க்கும் பெருமளவில் கொடுத்து மகிழும் அஃதை என்பானுக்கு ஓர் இடர் நேரிட்டபோது அவனைப் பாதுகாத்ததோடு, பின்னரும் இடர் நேர்ந்துவிடாதவாறு பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்துக் காத்தனர்.

"பாணன் என்பவன் எந்நாளும் கல்லைப் பொருது மெலியாத இனிய வலிய அடியினைக் கொண்டவன்; மிக்க வலிமையான பருத்த சுரைக்குடுக்கையில் (மூங்கிற்குழாயில்) பெய்து வைத்த உணவை உண்பவன்; தன் நாட்டு எல்லையைக் கடந்து தொலைவிலிருப்பவையாயினும், பகைவர்தம் அரண்களில் மிகுந்த உணவுடன் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் திமிலைக் கொண்ட எருதுகளுடன் கூடிய பசுக்களைத் தக்க சமயம் பார்த்துக் கவர்ந்து ஓட்டி வருபவன்; செறிந்த கரிய பூணினைக் காலில் அணிந்து, நெய் கனிந்த தண்டினைக் கொண்ட வேலினைக் கையில் ஏந்தியிருப்பவன்; கொழுவிய பற்பல உணவுகளைக் கொண்டிருப்பவன்; போரில் புறமுதுகிட்டார் மேல் போருக்கெழாத பண்பினன்.

"அவனுடைய நல்ல நாட்டிற்கும் அப்பால் தலைவர் சென்றுள்ளார். அங்கு வழியிலே செல்லும் புதியவர்களைக் கொல்வர், ஆறலை கள்வர்கள். அக்கள்வர்கள் அப்புதியவர்களைக் கொல்லப் பயன்படுத்திய கருவிகளிலிருந்து ஒழுகிய குருதியைக் கழுவியதால் செந்நிறம் பெற்ற சிறிதளவு நீர் அறுத்தோடுகின்ற நுண்மணல் பொருந்திய கரையினைத் தாண்டி வெகுதொலைவில் தலைவர் உள்ளார் எனப் பலரும் கூறுகின்றனர்.

பருத்த அடிமரத்தைக் கொண்ட மரக்கிளையிலுள்ள அசையும் தன் கூடு தனித்தொழியத் தான் செல்ல விரும்பிய வேற்றிடத்திற்குப் பறவை பறந்து சென்றடையும். அப்பறவை போல, என்னுடன் இங்குத் தனித்துத் தங்கியுள்ள என் உயிர், தலைவர் தங்கியிருக்கும் அவ்விடத்தைச் சென்றடையட்டும். அவ்வாறு செல்லுமாயின் நானும் அழாதிருப்பேன்" என்று தலைவி தன்னைத் தேற்றும் தோழியை நோக்கிக் கூறுகிறாள்.

கருத்து

கூட்டிலிருந்து பறவை பறந்து வேற்றிடம் செல்வதுபோல, என் உயிர் அவர் இருக்கும் இடத்திற்குச் செல்லுமாயின் நான் அழாமல் இருப்பேன்.

விளக்கம்

"அஃதை என்னும் வள்ளல், கூத்தர்க்கும் பாணர்க்கும் தான் போரில் பெற்ற இளைய யானைகள் பலவற்றைக் கொடுத்து மகிழ்வான். அவனுக்குத் துன்பம் வந்துற்றபோது, சிறந்த வேற்படையை உடைய கோசர், அவனைப் பாதுகாத்ததோடு, பின்னரும் அவனுக்கு ஏதும் துன்பம் நேர்ந்துவிடாது காவலளித்துப் பாதுகாத்தனர். அக்கோசரின் நெய்தலஞ்சோறு என்னும் வளநாடு போன்ற நலமிக்க என் தோளை மணந்த தலைவர், ஊரார் அலர் கூறுமாறு என்னைப் பிரிந்து சென்றுவிட்டார். பகைவரின் பசுக்களைக் கவர்பவனும், போரில் புறங்கொடாதவனுமாகிய பாணன் என்பானுடைய நாட்டினையும் தாண்டித் தலைவர் சென்றுவிட்டார் எனப் பலரும் கூறுகின்றனர். அவர் பிரிவினால் நான் வருந்தி அழாமல் இருக்க

வேண்டும் என்கிறாய். பறவை, தான் தங்கியிருந்த கூட்டை நீங்கி, வேறோர் இடத்திற்குச் சென்று தங்கப் பறந்து சென்றதுபோல, என் உயிரும் என்னை நீங்கித் தலைவனிடம் சென்று சேருமாயின் என்னால் அழாதிருக்க இயலும்" எனத் தன்னைத் தேற்றிய தோழியிடம் தலைவி கூறினாள்.

குறிப்பு

வாய்மை தவறாது நட்பினைப் பேணிக் காக்கும் கோசர்போலத் தலைவனும் தன் துயரத்து எல்லையிலும் வந்து அருளாததேனோ? என்பது தலைவியின் குறிப்பு.

சொற்பொருள்

1. நன்றுஅல் காலை - துயருற்ற பொழுது; நட்பின் கோடார் - நட்புத் தன்மையில் திரியாதவர்.
2. சென்று - அந்நண்பரிடம் சென்று; வழிப்படூஉம் - அவர் குறிப்பின்படி நடக்கும்; திரிபுஇல் - மாறுபாடில்லாத; சூழ்ச்சி - அறிவுடைமை.
3. புன்தலை - புல்லிய தலை; மடப்பிடி - இளைய பெண்யானை; அகவுநர் பெருமகன் - கூத்தரைப் புரக்கும் தலைவன்.
4. அமர்வீசு வண்மகிழ் - அமரில் பெற்றதைக் கொடுக்கும் வள்ளல் தன்மையால் மகிழும்; அஃதை - வள்ளல்களுள் ஒருவன்.
5. காப்புக் கைந்நிறுத்த - பாதுகாவலாக வைத்துக் காத்தல்; கோசர் - ஓர் இனத்தவர்.
6. இளங்கள் - புதிய கள்; நெய்தலஞ்செறு - ஓர் ஊர் (கடல்சார்ந்த நாடு என்றும் கொள்ளலாம்).
7. மணந்து - கூடி.
8. அழுங்கல் மூதூர் - ஆரவாரத்தினைக் கொண்ட பழைய ஊர்; அரற்ற - மிகுத்துக் கூற.
9. நல்குதல் - அருளுதல்; துறத்தல் - நீங்குதல்; என்றும் - எஞ்ஞான்றும்.
10. கல்பொரூஉ - கல்லை மோதி; மெலியா - மெலிவுறாது; பரடு - காலில் அணியப்பெறுவது; நோன் அடி - வலிய அடி.
11. அகல்சூல் - நிறைந்த சூல் போன்ற; சுரை - சுரைக்குடுக்கை (மூங்கிற் குழாய் என்னலும் ஆம்); வல்சி - உணவு.

12. இகந்தனர் - (தன் நாட்டெல்லையைக்) கடந்து சென்றனர்; இடம் பார்த்து - கவரும் செவ்வி பார்த்து.
13. ஓம்பினர் - (ஆவினைப்) பாதுகாப்பவர்; கூழ் - உணவு; குறும்பு - அரண்.
14. குவை இமில் - திரண்ட திமிலைக் கொண்ட; விடை - எருது; வேற்றுஆ - (பகைப் புலத்திலுள்ள) பசுக்கள்; ஒய்யும் - கவர்ந்து செல்லும்.
15. கனை - செறிந்த; சுருணை - பூண்; கனிகாழ் - நெய் கனிந்த தண்டு.
16. அயர்தல் - செய்தல்; கொழும்பல் - கொழுவிய பல; திற்றி - உணவு.
17. எழா - போரில் புற முதுகிட்டார்மேல் போருக்கு எழாத; பாணன் - தலைவன் ஒருவன்; உம்பர் - அப்பால்.
18. நெறி - வழி; வம்பலர் - புதியவர்; தெவ்வர் - பகைவர்.
19. எறிபடை - எறிந்த படைக்கலங்கள்; கழீஇ - கழுவிய; சேயரி - சிவந்த நிறமுடைய அறுத்தோடும்.
20. அறுதுறை - அறுத்துச் செல்லும் துறை; அயிர்மணல் - நுண்மணல்; போகி - தாண்டி.
21. சேயர் - சேய்மையில் உள்ளார்; சிறுமை - நோய், துன்பம்.
22. கையறுதல் - செயலற்றுப்போதல்; எவ்வம் - துன்பம்.
23. அழாஅம் - அழாமல்; பராரை - பரு ஆரை - பருத்த அடி.
24. அலங்கல் - அசைதல்; குடம்பை - கூடு; புல் என - பொலிவற்றுப் போதல்.
25. புலம்பெயர் மருங்கு - தான் பெயர்ந்து போக எண்ணிய இடம்; புள் - பறவை; எழுந்தாங்கு - புறப்பட்டுச் சென்றாற்போல.
26. மெய் - உடம்பு; இவண் - இங்கே.
27. செய்வினை - செய்யும் தொழில் - பொருளீட்டுதல்.

தலைவி கூற்று

அகநானூறு 309 **கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் மிகவும் துன்புற்றுத் தலைவி வருந்தியிருப்பதைக் கண்ட தோழி தானும் வருந்தித் தளர்ந்தாள். அப்போது தோழியின் வேறுபாட்டைப் போக்கும் வகையில் தலைவி தோழிக்குக் கூறியது.

வயவாள் எறிந்து, வில்லின் நீக்கி,
பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்,
அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென,
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்புஆ எறிந்து, குருதி தூஉய்,
புலவுப் புழுக்குஉண்ட வான்கண் அகல்அறை,
களிறுபுறம் உரிஞ்சிய கருங்கால் இலவத்து
அரலை வெண்காழ் ஆலியில் தாஅம்
காடுமிக நெடிய என்னார், கோடியர்
பெரும்படைக் குதிரை, நற்போர் வானவன்
திருந்துகழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு,
நாம்செலின்– எவனோ, தோழி! காம்பின்
வனைகழை உடைந்த கவண்விசைக் கடிஇடிக்
கனைசுடர் அமையத்து வழங்கல் செல்லாது,
இரவுப்புனம் மேய்ந்த உரவுச் சினவேழம்
தண்பெரும் படாஅர் வெரூஉம்
குன்றுவிலங்கு இயவின், அவர் சென்ற நாட்டே?

தெளிவுரை

தோழி! பசுக்கூட்டங்களைக் கவர்ந்துகொண்ட வெட்சி வீரர்கள் பசுவை மீட்கத் தம்மொடு பொருதவர்களை (கரந்தை யரை) விரட்டி நீக்கிய பின்னர்த் தாம் கவர்ந்து வந்த பசுக்கூட்டங்

களைத் தெய்வத் தன்மை கொண்ட வேப்ப மரத்தடியில் இருத்தித் தங்கினர். அங்குக் கொழுத்த பசுவைப் பலியிட்டு, அதன் குருதியை மரத்தின்மீது தெளித்து, அப்பசுவின் புலாலை உண்டு களித்தனர். பாறை பொருந்திய அந்நிலத்தில் இருந்த களிறு, தன் தினவு தீருமாறு உடம்பினை இலவ மரத்தின்மீது உராய, அதனால் மரத்திலிருந்து வெண்ணிறக் கொட்டைகள் உதிர்ந்து, ஆலங்கட்டி போன்று எங்கும் பரவின.

"அத்தகைய கானகம் நெடுந்தொலைவில் உள்ளது என எண்ணிப் பாராது கூத்தர்கள், போர்த்திறன் மிக்க வீரக் கழலணிந்த சேர மன்னனை நாடிப் பரிசில் பெறும்பொருட்டுச் செல்வர். அவர்கள் வெம்மை கொண்ட பகற்பொழுதில் சென்றால் மூங்கில்களின் தண்டுகள் சிதறித் தெறிக்கும் என அஞ்சி, இரவிலே பயணம் செய்வர். அங்குத் தினைப்புனத்தை மேய்ந்த யானைகள், குளிர்ச்சி பொருந்திய தூறுகளைப் பாம்பு என அஞ்சி நிற்கும். அத்தகைய குன்றுகள் குறுக்கிடும் வழிகளைக் கடந்து அமைந்துள்ளது, நம் தலைவர் சென்றுள்ள நாடு. கூத்தர் களைப் போல நாமும் நம் தலைவரை நாடிச் செல்வோமா?"

கருத்து

தலைவன் இருக்குமிடத்திற்கு நாமும் செல்வோமா?

விளக்கம்

"தோழி! கூத்தர்கள் சேரனது திருவடி வணங்கிப் பரிசில் பெற விரும்பிக் காடு மிக நெடிது என்று கருதாமல் செல்வர். அதுபோல நாமும் மலைகளால் தடுக்கப்பெற்ற வழியில் சென்று, தலைவன் சென்றுள்ள நாட்டை அடைந்தால் என்ன?" என்று தோழியிடம் தலைவி கூறினாள்.

கூத்தர்கள் சேர மன்னனிடம் சென்று பரிசிலை நாடுதல் போன்று, தலைவியும் தலைவனை நாடிச் செல்லக் கருதுவதை இப்பாடல் தெரிவிக்கிறது.

சொற்பொருள்

1. வயவாள் - வெற்றி பொருந்திய வாள்.

2. பயம்நிரை - பயன் தரும் பசுக்கூட்டம்; தழீஇய - கவர்ந்த; கடுங்கண் மழவர் - அஞ்சாமை பொருந்திய வெட்சி வீரர்.
3. சேண் படுத்து - நெடுந்தூரம் போக்கிவிட்டு; வன்புலம் - வலிய காட்டு நிலம்; உய்த்தல் - செலுத்துதல்.
4. தெய்வம் சேர்ந்த - தெய்வம் தங்கிய; பராரை - பருத்த அடி மரம்; வேம்பு - வேப்ப மரம்.
5. ஆ எறிந்து - பசு மாட்டினைப் பலியிட்டு; குருதி தூஉய் - குருதியை மரத்தின்மீது தூவி.
6. புலவுப் புழுக்கு - புலால் உணவு; வான்கண் - உயரிய இடம்; அகல் அறை - அகன்ற பாறை.
7. உரிஞ்சிய - உரசிக்கொண்ட, உராய; கருங்கால் - கரிய கொம்பு களையுடைய; இலவம் - இலவ மரம்.
8. அரலை - விதை; வெண்காழ் - வெண்ணிறக் கொட்டைகள்; ஆலி - பனிக்கட்டி, ஆலங்கட்டி; தாஅம் - பரவிக் கிடக்கும்.
9. கோடியர் - கூத்தர்.
10. வானவன் - சேரன்.
11. கழல் - வீரக்கழல் (அணிந்த); சேஅடி - சிவந்த அடி; நசைஇ - விரும்பி; படர்ந்தாங்கு - சென்றது போல.
12. செலின் - சென்றால்; எவன் - என்ன?; காம்பு - மூங்கில்.
13. கழை - தண்டு; கவண்விசை - கவண் கல்லின் வேகம் தங்கிய; கடி இடி - கடிய தாக்குதலை கொண்ட.
14. கனைசுடர் அமையம் - வெப்ப மிக்க கதிர்களைக் கொண்ட பகற்பொழுது; வழங்கல் - நடத்தல்.
15. உரவுச் சினம் - வலிய சினம்; வேழம் - யானை.
16. படாஅர் - தூறுகள்; வெரூஉம் - அஞ்சும்.
17. விலங்கு - குறுக்கிடும்; இயவு - வழி.

தலைவி கூற்று

அகநானூறு 303 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேட்கைமீதூர்ந்த தலைமகள், தன் நெஞ்சிற்குச் சொல்லியது

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டி வரும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்தான். பிரிவாற்றாது வருந்திய தலைவி மிகப்பெரிய காமவேட்கை கொண்டு, தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இடைபிறர் அறிதல் அஞ்சி, மறைகரந்து,
பேஎய் கண்ட கனவின், பல்மாண்
நுண்ணிதின் இயைந்த காமம் வென்வேல்,
மறம்மிகு தானை பசும்பூண், பொறையன்
கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை
மாஇருங் கொல்லி உச்சித் தாஅய்,
ததைந்துசெல் அருவியின் அலர்எழப் பிரிந்தோர்
புலம்கந் தாக இரவலர் செலினே,
வரைபுரை களிற்றொடு நன்கலம் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி,
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர், ஓராங்கு
இரைதேர் கொட்பின ஆகி, பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு,
வருவர்என்று உணர்ந்த, மடம்கெழு, நெஞ்சம்!
ஐயம் தெளியரோ, நீயே; பலஉடன்,
வறல்மரம் பொருந்திய சிள்வீடு, உமணர்
கணநிரை மணியின் ஆர்க்கும் சுரன்இறந்து,
அழிநீர் மீன்பெயர்ந் தாங்கு,அவர்
வழிநடைச் சேறல் வலித்திசின், யானே.

தெளிவுரை

“நெஞ்சே! நம்மிடையே நிகழ்ந்தவற்றைப் பிறர் அறிதற்குப் பயந்து, பேய்ப் பற்றி, தான் கண்ட கனவினைப் பிறருக்குக் கூறாதது போல, இரகசியம் வெளிப்படுத்தப்படாமல் பல்வகைப்பட்ட மாண்புகளுடன் நுட்பமாய்க் காக்கப்பட்டது நம் காதல்!

பசிய பூண்களை அணிந்த பொறையன் என்பவன் வெற்றி பொருந்திய வேலினையும், வீரம் மிக்க சேனையையும் கொண்டவன். ஆரவாரித்து எழுந்து அச்சத்தை விளைவிக்கும் மேகங்கள் பொருந்தியதும், தெய்வம் விரும்பி உறையப் பெறுவதுமான அகன்ற இடத்தைக் கொண்ட மிகப் பெரிய கொல்லிமலை அவனுக்கு உரியது. அம்மலையின் உச்சி யினின்றும் வீழ்ந்து, மிக்குப் பெருகிச் செல்லுகின்ற அருவிநீர் ஒலியினைப் போல, ஊரிலே அலர் ஒலி எழுமாறு நம் காதலர் பிரிந்து சென்றுள்ளார்.

“அறிவு ஒன்றையே பற்றுக்கோடாய்க் கொண்டு இரப்போர் செல்வாராயின் அவர்களுக்கு மலைபோலும் யானைகளுடன் நல்ல அணிகலன்களையும் அளிப்பவன், போற்றுதற்குரிய புகழினைக் கொண்ட வள்ளல் பாரி. அவனுடைய பறம்பு அரணில் வரிசையாகப் பறக்கும் குருவிக்கூட்டம் காலையில் அரணுக்கு வெளியே சென்று, வளைந்த புறத்தைக் கொண்ட செந்நெற்கதிர்களைக் கொண்டு தருவதற்காக, அந்நெற்கதிர்கள் உள்ள இடத்தைத் தேடித் திரிந்து, ஞாயிறு மறையும் துன்பம் மிக்க மாலைப்பொழுதில் மீண்டும் அரணுள் வந்து சேரும். அதைப்போல, பொருள் தேடச் சென்றவர் திரும்பி வருவார் என்று எண்ணுகின்ற அறியாமை பொருந்திய நெஞ்சமே! (அவர் திரும்பும் அறிகுறியே இல்லை என்பதை) ஐயப்படாமல் நன்கு தெளிவாய் உணர்க.

“வற்றல், மரங்களிலுள்ள ‘சிள் வீடு’ என்னும் மரவண்டுகள் பல ஒன்றுசேர்ந்து கூட்டமாய்ச் செல்லும் உப்பு வாணிகரின் வண்டி மாடுகளின் கழுத்திலுள்ள மணிபோல ஒலிக்கும் பாலை நிலத்தினைக் கடந்து அவர் சென்றுள்ளார். நீர் வற்றத் தொடங்கும்போது குளத்திலிருந்து மீன்கள் நீருள்ள இடம்

நோக்கிச் செல்வதுபோல நானும் அவர் சென்ற வழியே செல்லத் துணிந்துள்ளேன். (இதனை நீ அறிக.)"

கருத்து

தலைவர் திரும்பி வருதற்கான அறிகுறியே இல்லை. நான் அவர் இருக்கும் இடம் நோக்கிச் செல்லத் துணிந்துவிட்டேன்

விளக்கம்

"நெஞ்சமே! பிறர் அறியாதவாறு மறைத்து நுட்பமாய்க் கொண்டிருந்த நம் காதல், தலைவர் பிரிந்ததால் அலராய் வெளிப்பட்டது. பொருளீட்டப் பிரிந்து சென்றுள்ள நம் காதலர் வருவார் என்று நம்பிய நெஞ்சமே! நீ உன் ஐயத்தைப் போக்கிக் கொள். (அவர் இப்போது திரும்ப மாட்டார்.) ஆதலால், காட்டு வழியைக் கடந்து அவர் சென்ற வழியே நானும் செல்லத் துணிந் துள்ளேன்" என்று தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்திக் கூறுகிறாள்.

குறிப்பு

பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் சுற்றி வளைத்து முற்றுகையிட் டிருந்தனர். ஆண்டுக்கணக்கில் இது தொடரவே, பறம்பு மலை அரணுள்ளே இருப்போர்க்கு உணவு தருவதற்காக, கபிலர் கிளிகளைப் பழக்கி, அவற்றை வெளியே அனுப்பி, நெற்கதிர்களைக் கொத்திக் கொணர்ந்து அரணுள் சேர்க்குமாறு செய்தார் என்பது வரலாறு.

சொற்பொருள்

1. மறை கரந்து - இரகசியத்தை வெளிப்படுத்தாது.
2. பேஎய் கண்ட கனவின் - தான் கனவிலே கண்ட பேயினைப் பற்றிப் பிறர்க்குக் கூறாதது போன்று.
3. காமம் - காதல்; வென்வேல் - வெற்றி பொருந்திய வேல்.
4. மறம்மிகு - வீரம் மிக்க; தானை - சேனை; பொறையன் - சேர மன்னன்.
5. கார் - மேகம்; புகன்றெடுத்த - ஆரவாரித்து எழுந்த; சூர் - தெய்வம்; புகல் - தங்கும்; நனந்தலை - அகன்ற இடம்.
6. மா இரும் - மிகப்பெரிய; கொல்லி - கொல்லி மலை; தாஅய் - பரவி.
7. ததைந்து செல் - மிகவும் பெருகிச் செல்லுகின்ற.

8. புலம் - அறிவு; கந்து - பற்றுக்கோடு; செலினே - சென்றால்.
9. வரை - மலை; நன்கலன் - நல்ல அணிகலன்கள்; ஈயும் - வழங்கும்.
10. உரைசால் - மிகுதியும் போற்றப்படும்; வண்புகழ் - வள்ளல் தன்மை கொண்ட புகழ்; பாரி - வள்ளல்; பறம்பு - பாரியின் மலை.
11. நிரைபறை - வரிசையாய்ப் பறக்கும்; குரீஇ - குருவி; இனம் - கூட்டம்; காலை - காலைப் பொழுதில்; போகி - புறப்பட்டுச் சென்று.
12. முடங்குபுறம் - வளைந்த மேற்புறம்; தரீஇயர் - கொண்டுவந்து தருவதற்கு; ஓராங்கு - ஒருசேர.
13. கொட்பு - சுழன்று திரிதல்; பொழுது பட - ஞாயிறு மறையும்.
14. படர்கொள் - துன்பத்தைத் தரும்; மாலை - மாலைப்பொழுது.
15. மடம்கெழு - அறியாமை பொருந்திய.
16. ஐயம் தெளி - ஐயம் நீங்கித் தெளிவுறுக.
17. வறல் மரம் - வற்றல் மரம்; சிள்வீடு - ஒருவகை மரவண்டு; உமணர் - உப்பு வணிகர்.
18. கணநிரை - கூட்டமாகிய எருது; ஆர்க்கும் - ஒலிக்கும்.
19. அழிநீர் மீன் பெயர்தல் - நீர் வற்றும் பொழுது அங்கிருந்து நீங்கி நீர் உள்ள இடத்திற்குப் பெயர்ந்து செல்லும் மீன்.
20. வழிநடை - சென்ற வழியே; வலித்திசின் - துணிந்துளேன்.

தலைவி கூற்று

அகநானூறு 255 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், ஆற்றாமைமீதூரத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அவன் தான் குறித்த காலத்தில் திரும்பி வாராது காலம் தாழ்த்தியமையால் மிகவும் வருந்திய தலைவி தோழியை நோக்கி, தன் துன்பத்தைத் தலைவனிடம் எடுத்துரைக்கும் அன்புள்ளாரைத் தான் பெறவில்லையே என்று வருந்திக் கூறியது.

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ,
இரவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி,
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்ட,
கோடுஉயர் திணிமணல் அகன்துறை, நீகான்
மாட ஒள்ளெரி மருங்குஅறிந்து ஒய்ய,
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே, அழிபடர் அகல,
வருவர் மன்னால், தோழி!— தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்ஊர் ஆங்கண்,
கருவிளை முரணிய தண்புதல் பகன்றை
பெருவளம் மலர அல்லி தீண்டி,
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறன்இன்று அலைக்கும் ஆனா வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீச,
'திருந்துஇழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய,
நிரைவளை ஊருந் தோள்'என,
உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறினே.

தெளிவுரை

தோழி! நம் தலைவர் உலகு பெயர்ந்து செல்வதொப்ப அச்சம் தரும் நாவாயில் பொருளீட்டுவதற்குக் கடல் கடந்து சென்றுள் ளார். அந்நாவாய், காற்றுச் செலுத்த, அலைகளைக் கொண்ட கடல் நீரைக் கிழித்துக்கொண்டு, இரவுபகலாய் எங்கும் தங்காமல் விரைவாய்ச் செல்லும் இயல்பினது. நாவாய் ஓட்டுவோன், கடற் கரையில், மணல் நிறைந்த உயரமான மேட்டில் மாடத்தின்மீது வைக்கப்பட்டுள்ள விளக்கினால் இடமறிந்து செலுத்துவான். தலைவர் அந்நாவாயில் சென்றுள்ளார்.

பனிக்காலம் தொடங்கிவிட்டது. குளிர்ச்சி பொருந்திய வயல்களும் குளங்களும் உள்ள நம் ஊரில் கடுமையான வாடைக் காற்று வீசுகிறது; அது கருவிளையின் பூக்களோடு மாறுபட்ட நிறங்கொண்ட புதராய் வளரும் பகன்றைச்செடியின் வெண்ணிற

மலர்களை அளைந்து செல்கிறது; பலாக்காய்போலும் புறத்தினைக் கொண்ட அழகிய பழத்தினைக் கொண்ட பாகற் கொடிகளைக் கூதாளஞ்செடியின் முற்றிய இலைகளைக் கொண்ட கொடிகளில் கிடந்து அசையும்படி செய்கிறது; அறமில்லாது வருத்தும் அவ்வாடைக்காற்று காவல் பொருந்திய நம் மாளிகையின் மாடத்தில் புகுந்து இரவெல்லாம் வீசுகிறது. அதனால் திருந்திய என் அணிகள் நெகிழ்ந்தன; பெரிய அழகு கெட்டுவிட்டது; தோளில் அணியப்பட்டு வளையல்கள் வரிசையாய்க் கழன்று விழுந்தன. என் துன்பத்தைத் தலைவரிடம் சென்று கூறினால், அவர் விரைவில் வருவார். அவ்வாறு சென்று உரைப்போர் எவரும் இலரே! என் செய்வேன்?

கருத்து

என் துன்பத்தைத் தலைவரிடம் சென்று கூறி, அவர் விரைவில் திரும்ப வழி செய்யும் அன்பு கொண்டவர் எவரும் இலரே!

விளக்கம்

"தோழி! பொருளீட்டி வர நம் தலைவர் கடல் கடந்து சென்றுள்ளார். வாடைக்காலம் வந்து பனிக்காற்று வீசுகிறது; என் அணிகலன்கள் நெகிழ்ந்தமையால் என் அழகு கெட்டது; தோள் வளைகள் நெகிழ்ந்து விழுகின்றன. என் நிலையைத் தலைவரிடம் சென்று சொல்லும் அன்பு கொண்டவர் இருந்தால் அவர் நாள் பல கழியாமல் உடனே விரைந்து வருவார்" என்று தலைவி தோழியிடம் கூறினாள். (தோழியாகிய நீ, இதற்கு வழி செய்திருக்க வேண்டும் என்பது தலைவியின் எதிர்பார்ப்பு.)

சொற்பொருள்

1. உலகு கிளர்ந்தன்ன - உலகு பெயர்ந்து செல்வதொப்ப; உருகெழு - அச்சம் பொருந்திய; வங்கம் - நாவாய், கப்பல்.
2. புலவுத்திரை - புலால் நாற்றம் கொண்ட அலை; போழ - கிழித்துச் செல்ல.
3. எல்லை - பகல்; அசைவுஇன்று - எங்கும் தங்காமல்.
4. இயற்கை - இயல்பு கொண்ட; வங்கூழ் ஆட்ட - காற்று அசைத்துச் செலுத்த.
5. கோடு உயர் - கரை உயர்ந்த; நீகான் - நீரான் - நாவாயைச் செலுத்துபவன்.

6. ஒள்ளரி - ஒளி தரும் விளக்கு; மருங்கறிந்து - இடமறிந்து; ஒய்ய - செலுத்த.
7. நாள்பல கழியாமை - பல நாள் தாழ்த்தாது.
8. அழிபடர் - மிக்க துன்பம்.
9. தண்பணை - குளிர்ந்த மருத நிலம்.
10. பொருபுனல் - நீர் மோதும்; வைப்பு - இடம், நிலப்பகுதி.
11. கருவிளை - ஒரு வகைப் பூ; முரணிய - மாறுபட்ட; பகன்றை - கொடிகளுள் ஒன்று.
12. பெருவளம் - மிக்க செழுமை; தீண்டி - அசைத்து.
13. பலவுக்காய் - பலாக்காய் (போன்ற); புறத்த - முதுகினைக் கொண்ட; பசும்பழம் - பசிய நிறப் பழம்; பாகல், கூதாளம் - கொடி வகைகள்.
14. மூதிலை - முதிர்ந்த இலை; தூங்க - அசையும்படி செய்து.
15. அலைக்கும் - வருத்தும்; ஆனா வாடை - பொருந்தாத வாடைக்காற்று.
16. கடி - காவல்; கடிமனை - காவலமைந்த மாளிகை; கங்குல் - இரவு.
17. திருந்துஇழை - திருத்தமான அணிகலன்; கவின் - அழகு; சாய - கெட.
18. நிரைவளை - வரிசையான வளையல்கள்; ஊரும் - கீழே விழும்.
19. உரையொடு செல்லும் - தூதாய்ச் செல்லுகின்ற; பெறின் - பெற்றால்.

பருவங்காட்டித் தோழி கூறியது.

தோழி கூற்று

நற்றிணை 112 **பெருங்குன்றூர்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றாளாய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்துச் சொன்ன காலத்தில் வருவதையறிந்த தோழி, தலைவியை நோக்கி, தலைவன் சொல் பிழையாமல் விரைவில் வந்து சேருவான் எனத் தேற்றிக் கூறியது.

விருந்துஎவன் செய்கோ? தோழி! சாரல்
அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கைச்
சுரும்புஇமிர் அடுக்கம் புலம்பக் களிறுஅட்டு,
உரும்புஇல் உள்ளத்து அரிமா வழங்கும்
பெருங்கல் நாடன் வரவுஅறிந்து விரும்பி,
மாக்கடல் முகந்து மணிநிறத்து அருவித்
தாழ்நீர் நனந்தலை அழுந்துபடப் பாஅய்,
மலைஇமைப் பதுபோல் மின்னிச்
சிலைவல் ஏற்றொடு செறிந்தஇம் மழைக்கே.

தெளிவுரை

"தலைவி! மலைச்சாரலில் அரும்புகள் முழுவதும் ஒரு சேர மலர்ந்த கரிய கிளைகளைக் கொண்ட வேங்கை மரங்களை வண்டினங்கள் மொய்த்திருக்கும். அம்மலையிலுள்ள விலங்குகளெல்லாம் அஞ்சி நடுங்கும்படி ஆண்யானையைக் கொன்று அச்சமின்றிச் சிங்கம் உலவி கொண்டிருக்கும். இத்தகைய மலைக்குரியவன், நம் தலைவன். அவன், 'மழைக்காலத்தில் வருவேன்' என்று கூறிச் சென்றபடி வந்து கொண்டிருக்கிறான் என்பதை முன்னறிந்து இம்மழை நமக்கறிவிக்கிறது. மேகம் விருப்பமுடன் கருமையான கடலில் சென்று நீருண்டு, மணி போலும் நிறம் கொண்ட அருவி வீழும் பகுதிகள் எல்லாம் மறையும்வண்ணம் மழையைப் பொழிகின்றது; மலை, கண் விழித்து இமைப்பதுபோல மின்னல் மின்னுகின்றது; முழங்குகின்ற வலிமையான இடியுடன் கலந்து மழை பெய்கிறது. தலைவன் வருகையை உணர்த்தி நிற்கும் இந்த மழைக்கு நாம் என்ன விருந்து செய்வோம்?" என்று மகிழ்ச்சி தோன்றத் தோழி தலைவன் வருகையைத் தலைவியிடம் கூறி அவளை ஆற்றியிருக்கச் செய்கிறாள்.

கருத்து

கார்ப்பருவம் தோன்றிவிட்டது; தலைவன் திரும்ப வந்துகொண்டிருக்கிறான்; ஆதலின், ஆற்றியிரு.

விளக்கம்

"மலைகளிலுள்ள பிற விலங்குகள் அஞ்சுமாறு களிற்றைக் கொன்று இயங்கும் அரிமா உலவுகின்ற காட்டிற்குரிய நம் தலைவன், இப்போது கார்ப்பருவத்தில் திரும்ப வருகின்றான். மழை எங்கும் பரவி மின்னி இடி முழங்குகின்றது. கார்ப் பருவத்தைத் தோற்றுவிக்கும் இம்மழைக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய இயலும்?" என்று கூறித் தோழி தலைவியை ஆற்றியிருக்கச் செய்கிறாள்.

இறைச்சி

அடுக்கம் புலம்பக் களிறுஅட்டு உரும்புஇல் உள்ளத்து அரிமா வழங்கும்: மலைமீதுள்ள விலங்குகள் புலம்புமாறு களிற்றியானையைக் கொன்று சிங்கம் இயங்கும். இத்தொடர் மூலம், தலைவியின் பசலை கெடுமாறு தலைவன் பலகாலும் அவளைத் தழுவிப் பெருமிதத்துடன் இருப்பான் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. எவன் செய்கோ? - என்ன செய்வோம்?
2. அரும்பு அற - அரும்பு இல்லையாகும்படி (முற்றிலும்).
3. சுரும்பு - வண்டுகள்; இமிர் - ஒலிக்கும்; அடுக்கம் - மலைப்பக்கம்; புலம்ப - வருந்த; களிறு அட்டு - களிற்றினைக் கொன்று.
4. உரும்புஇல் - அச்சம் இல்லாத; அரிமா - சிங்கம்; வழங்கும் - உலவும்.
5. வரவு அறிந்து - திரும்பி வருவதை அறிந்து.
6. முகந்து - மொண்டு; மணி - நீலமணி.
7. தாழ்நீர் - ஒழுகும் தன்மை கொண்ட நீர்; நனந்தலை - அகன்ற இடம்; அழுந்து பட - மறையுமாறு; பாஅய் - பாய்ந்து.
9. சிலை - மலை; வல் ஏறு - வலிமையான இடி, பேரிடி; செறிந்த - செறிவுற்றுள்ள.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 3 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான், தலைவன். கார் காலம் தொடங்கியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று தோழி வருந்தினாள்.

மின்னும் முழக்கும் இடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய – முல்லை
முகைவென்ற பல்லினாய்! இல்லையோ மற்று
நமர்சென்ற நாட்டுள்இக் கார்.

தெளிவுரை

“முல்லை முகையினை வென்ற அழகிய பற்களைக் கொண்ட தலைவியே! நம் காதலர் பிரிந்து சென்றிருக்கும் நாட்டில் இங்குக் காணப்படும் மின்னலும் இடியும் இவை போன்ற பிறவுமான பிரிந்தாரை வருத்துதற்குரிய கொலைப்படை இல்லாமலா போயிற்று? (அங்கும் இருக்கும்)” எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

அவர் சென்ற நாட்டிலும் இக்கார்ப்பருவம் தோன்றும்; உடனே தலைவர் வந்து சேர்வார்; வருந்தாதிரு எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. மின் - மின்னல்; முழக்கும் இடி - ஆரவாரம் மிக்க இடி.
2. சால - மிகுதியாய்.
3. முகை - அரும்பு.
4. நமர் - நம் உறவினர், காதலர்.

தோழி கூற்று

குறுந்தொகை 275 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண், வரவு நிமித்தம் தோன்ற, தோழி தலைமகட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் மீண்டு வருவதாய்க் குறித்துச் சென்ற பருவம் தொடங்கியபோது தொலைவில் மணியோசையைக் கேட்ட தோழி, அது தலைவனின் தேர் மணியொலியா என்று அறிந்து வரலாம் எனத் தலைவியிடம் கூறியது.

முல்லை ஊர்ந்த கல்உயர்பு ஏறிக்
கண்டனம் வருகம்; சென்மோ தோழி!
எல்ஊர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்
புல்ஆர் நல்ஆன் பூண்மணி கொல்லோ?
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற,
ஈர்மணல் காட்டாறு வரூஉம்
தேர்மணி கொல்?ஆண்டு இயம்பிய உளவே.

தெளிவுரை

“தலைவி! தொலைவில் மணியோசை கேட்கிறது. அவ்வோசை மாலை நேரத்தில் ஊரை நோக்கி வருகின்ற காளையைக் கொண்ட பசு மந்தையில், புல்லை மேய்ந்து வருகின்ற நல்ல பசுவின் கழுத்தில் பூண்டிருக்கும் மணியின் ஓசையா? அன்றி, செய்யக் கருதிச் சென்ற செயலை வெற்றியுடன் முடித்து, நிறைவான உள்ளத்துடன், வலிய வில்லை ஏந்திய வீரர்கள் பக்கத்திலே பாதுகாத்து வர, ஈரமான மணல் பொருந்திய காட்டுவழியிலே வருகின்ற தலைவனுடைய தேரின் மணியோசையா என்பதை முல்லைக்கொடி படர்ந்த கல்லின் மேலே ஏறி நின்று கண்டு வருவோம், வா” என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

தலைவன் கார் காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்றான். தொலைவில் கேட்கும் மணியொலி அவன் தேர்மணி ஒலியாகத்தானிருக்கும். வா, நாம் போய்ப் பார்ப்போம்.

விளக்கம்

அது கார் காலம். தொலைவில் மணியோசை ஒலிப்பதைத் தோழி கேட்டாள். புல் மேய்ந்துவிட்டு வீடு திரும்பும் பசுக்களின் கழுத்தில் கட்டப்பட்ட மணிகளின் ஓசையாயும் இருக்கலாம்; அன்றி, தலைவனின் தேரின் மணியிலிருந்து எழும் ஒலியாயும் இருக்கலாம். 'தலைவன் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் இதுவேயாதலின் இந்த ஒலி, தேர்மணியின் ஒலியாகத்தான் இருக்கும்' எனத் தலைவன் வருவதைத் தோழி உறுதி செய்கிறாள்.

சொற்பொருள்

1. ஊர்ந்த - படர்ந்த; கல்உயர்பு - கல்லின் மேலே.
2. கண்டனம் வருகம் - கண்டு வருவோம்; சென்மோ - செல்வோம்.
3. எல் - ஒளி, சூரியன் (இங்கு மாலைக்காலம்); ஊர்ச்சேர்தரும் - ஊரை அடையும்; ஏறு - காளை; இனம் - பசுவின் நிரை.
4. புல்ஆர் - புல்லை மேய்ந்து; ஆன் - பசு; பூண்மணி - பூண்டுள்ள மணி.
5. செய்வினை - பொருளீட்டும் செயல்; செம்மல் - பெருமை, நிறைவு.
6. இளையர் - வீரர், ஏவலாளர்; பக்கம் போற்ற - இருபக்கமும் பாதுகாத்து வர.
7. ஈர் மணல் - ஈரமான மணல்.
8. ஆண்டு - அங்கு; இயம்பிய உள - ஒலித்துக்கொண்டிருப்பது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 469 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவு நீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, 'அவரை நமக்குத் தருவதற்கு வந்ததுகாண் இப்பருவம்' எனக் காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியிடம் தோழி, 'தலைவனை நம்முடன் சேர்ப்பதற்காகத்தான் இக்கார்ப்பருவம் தொடங்கியிருக்கிறது' எனப் பருவத்தைச் சுட்டிக் காட்டி, தலைவன் வருகையைத் தோழி வற்புறுத்திச் சொல்லியது.

பைந்திணை உணங்கல் செம்பூழ் கவரும்
வன்புல நாடன் தரீஇய வலன்ஏர்பு
அம்கண் இருவிசும்பு அதிர ஏறொடு
பெயல்தொடங் கின்றே வானம்
காண்குவம் வம்மோ பூங்கண் ணோயே.

தெளிவுரை

"பூப்போன்ற கண்களைக் கொண்ட தலைவியே! உலர்ந்த பசிய தினையினைச் செம்பூழ்ப் பறவைகள் கவர்ந்து செல்லும் முல்லைக் காடுகளைக் கொண்ட நாடன், நம் தலைவன். அவனை நம்மிடத்தே கொணர்ந்து தருவதன்பொருட்டாகவே இக்கார்ப் பருவம் தொடங்கியுள்ளது; வலங்கொண்டு எழுந்த மேகங்கள் அழகிய இடமகன்ற பெரிய வானம் அதிரும்படி முழங்கி இடியோடும் கூடி மழை பெய்யத் தொடங்கியுள்ளன. கார்ப் பருவம் தொடங்கியிருப்பதையும் தலைவன் தேர் வருவதையும் காண்போம்; வா!"

கருத்து

கார்ப்பருவம் தொடங்கியது; தலைவன் தேர் வருவதைக் காணலாம், வா!

சொற்பொருள்

1. பைந்தினை - பசிய தினை; உணங்கல் - வற்றல், காய வைக்கப்பட்டுள்ள தானியம்; செம்பூழ் - காடை போன்ற ஒரு வகைப் பறவை; கவரும் - உண்ணும்.
2. வன்புலம் - வலிய நிலம், புன்செய் நிலப்பகுதி; நாடன் - தலைவனை; தரீஇய - தருவதற்காக; வலன் ஏர்பு - வலமாய் எழுந்து.
3. அம் கண் - அழகிய இடமகன்ற; இருவிசும்பு - பெரிய ஆகாய வெளி; ஏறொடு - இடியுடன்.
4. பெயல் தொடங்கின்று - மழையைப் பெய்யத் தொடங்கியுள்ளது.
5. வம்மோ - வருவாய்; பூங்கண்ணோய் - பூப்போன்ற கண்களைக் கொண்டவளே!

தோழி கூற்று

ஐங்குறுநூறு 468 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவு நீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி பருவங்காட்டி 'இன்றே வருவர்' என வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியிடம் தோழி, கார்ப்பருவம் தொடங்கியிருப்பதைக் காட்டி, 'தலைவன் இன்றே வருவான்' என வற்புறுத்திச் சொல்லியது.

வரிநுணல் கறங்க, தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே காலை; இனிநின்
நேர்இறைப் பணைத்தோட்கு ஆர்விருந்து ஆக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவர் இன்றுநம் காத லோரே!

தெளிவுரை

"தலைவி! வரிகளைக் கொண்ட தவளைகள் ஒலிக்கின்றன; தேரைகள் தெவிட்டுகின்றன; கார்ப்பருவமும் இப்போது தொடங்கிவிட்டது. இனி உன் நேரிய முன்கையைக் கொண்ட

மூங்கில் போலும் அழகு கொண்ட தோளுக்குப் பொருந்திய விருந்தாகுமாறு, வடித்த மணியினைக் கொண்ட நெடுந்தேரைச் செலுத்திக் காதலரும் இன்றே திரும்பி வந்துவிடுவார். எனவே, நீ உன் சோர்வு நீங்கப் பெற்று இனிதே இரு!"

கருத்து

தவளைகள் ஒலிக்கின்றன; கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; தலைவர் இன்றே திரும்பி வந்து சேர்வார்.

சொற்பொருள்

1. வரி நுணல் - வரிகளைக் கொண்ட தவளை; கறங்க - ஒலிக்க; தேரை - ஒருவகை தவளை; தெவிட்ட - ஒலிக்க.
3. இறை - முன்கை; பணைத்தோட்கு - மூங்கில் போன்ற தோளுக்கு; ஆர்விருந்து ஆக - பொருந்திய விருந்தாகும்படி.
4. வடிமணி - வார்ப்பில் வடித்தெடுக்கப்பட்ட மணி, தெளிவான ஓசையினைக் கொண்ட மணி; கடைஇ - செலுத்தி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 470 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் வந்தது கண்டு, தாம் குறித்த இதனை மறந்தாரென வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. தலைவன் வரவில்லை; அவன் மறந்தான் எனத் தலைவி வருந்தினாள். தலைவன் வருகையை உறுதிப்படுத்தித் தோழி, தலைவியைத் தேற்றியது.

இருநிலம் குளிர்ப்ப வீசி அல்கலும்
அரும்பனி அளைஇய அற்சிரக் காலை
உள்ளார் காதலர் ஆயின் ஒள்இழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோநின் மாமைக் கவினே.

தெளிவுரை

"ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த தலைவியே! இப் பெருநிலம் குளிர்ச்சி பெறுமாறு மழை பெய்கிறது. பொறுக்க வியலாத பனியோடு வாடைக் காற்றும் கலந்து வீசும் இம் முன்பனிக் காலத்தில் உன் காதலர் உன்னை நினையாதிருக்கிறார் என்று நீ சொல்கிறாய். ஆனால், பெருமையுடன் விளங்கும் உன் தோற்றச் சிறப்பும் மாந்தளிரனைய மேனியின் அழகும் அவரை நினைக்காதிருக்க விடுமோ? (விடா; அவர் வந்துவிடுவார்.)"

கருத்து

தலைவன் பருவத்தை மறந்தாலும் உன் தளிரனைய மேனியழகை மறந்துவிட இயலாது; ஆதலின், உடனே வருவான்.

குறிப்பு

பனிக் காலம் காதலர் சேர்ந்திருந்து காதலின்பம் நுகர விழையும் காலம். ஒருவேளை இப்பொழுதினை அவர் மறந்தாலும், உன் பேரழகு உன்னை நினைக்குமாறு அவரைத் தூண்டும்.

சொற்பொருள்

1. இருநிலம் - பெரிய நிலம்; குளிர்ப்ப - குளிர்ச்சி பெறுமாறு; அல்கலும் - நாள்தோறும்.
2. பனி அளைஇய - பனி கலந்த; அற்சிரக்காலை - முன்பனிக்காலம்.
3. உள்ளார் - நினையார்; ஒள்இழை - ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்தவளே!
4. காட்சி - அழகு.
5. மாமைக் கவின் - மாந்தளிர் மேனி அழகு.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 22 **கண்ணஞ் சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய நிகழ்வுகளை எடுத்துக்கூறி, வருத்த முறாதிருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

மென்முலைமேல் ஊர்ந்த பசலைமற்(று) என்ஆம்கொல்?
நல்நுதல் மாதராய்! ஈதோநமர் வருவர்
பல்நிற முல்லை அரும்பப் பருவம்செய்(து)
இன்நிறம் கொண்ட(து)இக் கார்.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, "அழகிய நெற்றியைக் கொண்டவளே! கார் காலம் நம் பற்களைப் போன்ற வெண்மை நிறம் கொண்ட முல்லை அரும்புகளைத் தோற்றுவித்துள்ளது. வெளுப்புற்றிருந்த மேகங்கள் கருநிறம் கொண்டுள்ளன. ஆகவே, நம் தலைவர் இப்போதே வந்து சேர்வார். அதனால், உன் மெல்லிய முலைகளின்மேல் படர்ந்துள்ள பசலை இனி என்ன செய்யும்? (நீங்கிவிடும்)" என்றுரைத்தாள்.

கருத்து

கருநிற மேகம் சூழக் கார் காலம் வந்துவிட்டது; தலைவர் வருவார்; தலைவியின் பசலை மறையும்.

சொற்பொருள்

1. ஊர்ந்த - படர்ந்த; பசலை - பசப்பு; என்ஆம் - என்ன ஆகும்?
2. நல் - அழகிய; நுதல் - நெற்றி; ஈதோ - இப்பொழுதே; நமர் - நம்மவர், நம் தலைவர்; வருவர் - வந்து சேர்வார்.
3. பருவம் செய்து - கார்ப்பருவத்தைத் தோற்றுவித்து.
4. இன்நிறம் - கண்டார்க்கு இனிய நிறம்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 23 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய நிகழ்வுகளை எடுத்துக் கூறி, வருத்த முறாதிருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

சென்றார்; வருவர்; செறிதொடீஇ! கார்இஃதோ
வெஞ்சின வேந்தர் முரசின் இடித்துரறி,
தண்கடல் நீத்தம் பருகி, தலைசிறந்து
இன்றையின் நாளை மிகும்.

தெளிவுரை

“செறிந்த வளையலையணிந்த தலைவியே! இதோ பார்! கொடிய சினம் கொண்ட மன்னரின் முரசுகள்போல மேகங்கள் இடித்து முழங்குகின்றன; குளிர்ச்சி பொருந்திய கடல்நீரைப் பருகி மேலும் மேலும் அவற்றின் சிறப்புகள் பெருகுகின்றன. (கருத்துகள் பரவுகின்றன.) கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. ஆகவே, பொருளை விரும்பிப் பிரிந்த நம் தலைவர் இன்றேனும் நாளையேனும் வருவார். நீ வருந்த வேண்டா” என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

மன்னர் முரசுபோல இடி முழங்கக் கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; தலைவர் இன்றோ நாளையோ வந்து சேர்வார்; வருத்தம் நீங்கு.

சொற்பொருள்

1. சென்றார் - பொருள் தேடச் சென்றிருப்பவர்; வருவார் - வந்து சேர்வார்; கார் - கார்ப்பருவம்; இஃதோ - இதோ பார்.
2. வெஞ்சினம் - கொடிய சினத்தை கொண்ட; வேந்தர் - அரசர்; உரறி - முழங்கி.
3. நீத்தம் - நீர்; தலைசிறந்து - மேலும் மேலும் சிறப்புற்று.
4. இன்றையின் - இன்றைக்கோ; நாளை - நாளைக்கோ; மிகும் - தலைசிறந்து மிகும்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 24 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய காரணங்களை எடுத்துக்காட்டி வருத்தமுறா திருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

செஞ்சுணங்கின் மென்முலையாய்! சேர்பசலை தீர்இஃதோ
வஞ்சினம் சொல்லி வலித்தார் வருகுறியால்;
வெஞ்சினம் பொங்கி, இடித்(து)உரறிக், கார்வானம்
தண்பெயல் கான்ற, புறவு.

தெளிவுரை

"அழகிய தேமல் படர்ந்த மென்மையான மார்பகங்களைக் கொண்ட தலைவியே! மேகத்துடன் வானம் கொடிய சினத்துடன் பொங்கி, நான்கு பக்கங்களிலும் பேரிடிகளுடன் முழங்கிக் குளிர்ச்சி பொருந்திய மழையைப் பொழிகிறது. இக்கார் காலம், 'விரைவில் வருவேன்' என்று நம்மிடம் உறுதி மொழி கூறிச் சென்ற தலைவர் வருவதற்கான அடையாளம். எனவே, உன் பசலை நீங்கப் பெற்று மகிழ்ச்சி கொள்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் வருகைக்கான அறிகுறியாய் இடி முழங்கிடக் கார் காலம் வந்து விட்டது. எனவே, கவலை நீங்கி மகிழ்வு கொள்.

சொற்பொருள்

1. செஞ்சுணங்கு - அழகிய தேமல்; பசலை - பசப்பு; தீர் - நீங்கி; இஃதோ - இதோ பார்.
2. வஞ்சினம் சொல்லி - (நம்மிடம் பலவகையான) உறுதிமொழிகளைக் கூறி; வலித்தார் - வற்புறுத்திச் சென்றவர்; வருகுறி - வருகின்ற அடையாளம்.

3. வெஞ்சினம் - கொடிய சினம்; பொங்கி - நாற்புறமும் நிறைந்து; உரறி - முழங்கி; கார் - கார் காலம்.
4. பெயல் - மழை; கான்ற - பெய்தன.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 25 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய நிகழ்வுகளை எடுத்துக் கூறி வருத்த முறாதிருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

கருஇயல் கார்மழை கால்கலந்(து) ஏந்த
உருகு மடமான் பிணையோ(டு) உகளும்
உருவ முலையாய்!நம் காதலர் இன்னே
வருவர் வலிக்கும் பொழுது.

தெளிவுரை

"*அழகிய கொங்கைகளைக் கொண்ட தலைவியே! நீராகிய கருவுடன் புறப்பட்டு வந்த மேகம் காற்றுடன் கூடி, வானிலிருந்து கொட்டுகிறது. மழையில்லாமையால் முன்பு வாடியிருந்த இளைய ஆண்மான்கள் மழையைக் கண்டவுடன் தம் பெண் மான்களுடன் துள்ளி விளையாடுகின்றன. ஆதலின், இப்போதே நம் தலைவர் நம்மிடம் வருவார். இக்கார் காலமே அதனைத் தெளிவுபடுத்துகிறது*" என்று தோழி தலைவியிடம் உரைத்தாள்.

கருத்து

காட்டில் மான்கள் துள்ளி விளையாடுகின்றன. கார் காலத் தோற்றம் காணப்படுகிறது; தலைவர் இப்போதே வருவார்.

சொற்பொருள்

1. கரு - நீராகிய கருவினோடு; இயல் - புறப்பட்டு வந்த; கார் மழை - கார் கால மேகம்; கால் - காற்று; ஏந்த - மிகுதியாகப் (பெய்ய).
2. உருகும் - வாடியிருந்த, மெலிந்த; மடமான் - இளைய ஆண்மான்; பிணை - பெண்மான்; உகளும் - துள்ளிக் குதிக்கும்.
3. உருவம் - அழகிய; இன்னே - இப்பொழுதே.
4. வலிக்கும் - வற்புறுத்தித் தெரிவிக்கும்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 26 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய நிகழ்வுகளை எடுத்துக் கூறி வருத்த முறாதிருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

இருங்கடல் மாந்திய ஏர்கொள் எழிலி
கருங்கொடி முல்லை கவின முழங்கிப்
பெரும்பெயல் தாழப் பெயர்குறி செய்தார்
பொருந்த நமக்குரைத்த போழ்து.

தெளிவுரை

“தலைவியே! பரந்த கடல்நீரைப் பருகிய அழகு கொண்ட மேகங்கள், கரிய கொடிகளைக் கொண்ட முல்லைக்கொடிகள் அரும்புகளுடன் அழகு பெறுமாறு ஒலித்துப் பெருமழை பொழிவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தலைவர் திரும்புவதாய் உறுதி கூறிச் சென்ற காலமும் இதுவே. ஆதலால், நீ மயக்கமுறாதே” எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

முல்லைகள் அரும்பிக் கார் கால வரவை அறிவிக்கின்றன. தலைவர் வாக்களித்தபடி தவறாது வருவார்.

சொற்பொருள்

1. இரு - பெரிய; மாந்திய - குடித்த; ஏர் - அழகு; எழிலி - மேகம்.
2. கவின - அழகு பெற; முழங்கி - இடித்து.
3. பெயல் - மழை; தாழ - பெய்ய; பெயர் குறி - திரும்பி வருவதற்கான அடையாளம்.
4. பொருந்த (நம் மனத்தே) பதியும்படியாக; போழ்து - காலம் (அவர் திரும்பி வருவதாய்ச் சொன்ன காலம் இதுவே).

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 27 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரவுக்குரிய நிகழ்வுகளை எடுத்துக் கூறி வருத்த முறாதிருக்கும்படி தோழி, தலைவியை வற்புறுத்துதல்.

ஆயர்இனம் பெயர்த்து ஆம்பல் அடைதர
பாய முழங்கிப் பாடுகடலுள் நீர்முகந்து
மாஇரு ஞாலம் இருள்கூர் மருள்மாலை
சேயவர், செய்த குறி.

தெளிவுரை

"*தலைவியே! ஆயர் பசுக்கூட்டங்களை வீடுகளுக்குத் திரும்ப ஓட்டி வருகின்றனர்; ஆம்பல் என்னும் பெரிய புல்லாங்குழலை வாயில் வைத்து ஊதியபடி செல்கின்றனர்; கடலில் நீர் முகந்து கருத்த மேகங்கள் இருண்டு திரண்டு எழுந்து மழை பொழிய ஆர்ப்பரிக்கின்றன. பரந்த இவ்வுலகில் இருள் மிகுந்து மயக்கம் தரும் இம்மாலைப் பொழுது, தொலைவில் சென்ற நம் காதலர், தாம் திரும்புவதாய்க் கூறிச் சென்ற கார் கால மாலைப் பொழுதாகும். தலைவர் சொன்ன அடையாளம் தோன்றி விட்டது. எனவே, தலைவியே நீ மயங்காதே*" *என்று தோழி தலைவியிடம் கூறினாள்.*

கருத்து

ஆயர்கள் புல்லாங்குழலை ஊதியபடி மாலையில் பசுக்கூட்டங்களுடன் வீடு திரும்புகின்றனர். தலைவர் திரும்பி வருவதாய்ச் சொன்ன கார் கால அடையாளங்கள் தோன்றிவிட்டன. உடனே அவர் வந்துவிடுவார்.

சொற்பொருள்

1. ஆயர் - இடையர்; இனம் - பசுக்கூட்டம்; பெயர்த்து - வீடுகட்குத் திரும்பியோட்டி வர; ஆம்பல் - ஆம்பல் என்னும் பெயர் கொண்ட புல்லாங்குழல்; அடைதர - (வாயில் வைத்து) இசை ஒலியை எழுப்பிக் கொண்டு செல்ல.
2. பாய - பல பக்கங்களிலும் பரவும்படி; பாடு - ஒலிக்கின்ற.
3. மாஇரு - மிகவும் பெரிய; ஞாலம் - பூமி; இருள் கூர் - இருள் மிகுந்து; மருள் - மயக்கம்.
4. சேயவர் - சேய்மையில் சென்றவர்; செய்த - (தாம் திரும்புவதாய்க்) கூறிச் சென்ற; குறி - அடையாளம்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 28 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்காட்டிய தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவத்தைக் காண்பித்துத் தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறியது.

அதிர்குரல் ஏறோ(டு) அலைகடல் மாந்தி
முதிர்மணி நாகம் அனுங்க முழங்கிக்
கதிர்மறை மாலை கனைபெயல் தாழப்
பிதிரும் முலைமேல் சுணங்கு.

தெளிவுரை

"கதிரவனின் ஒளிக்கதிர்கள் மறைந்த மாலைப்பொழுது; அலைகின்ற கடல்நீரை அருந்திய மேகம் மாணிக்கத்தைக் கொண்ட பாம்புகள் அஞ்சும்வண்ணம், ஒலியுடன் இடித்து முழங்கிச் செறிந்த மழையைப் பொழிகின்றது. தலைவியின் மேனியில் படர்ந்திருக்கும் பசலை இனிச் சிதறி ஓடிவிடும்" என்று தோழி தலைவியிடம் கார்ப்பருவம் தொடங்கியிருப்பதைத் தெரிவித்தாள்.

கருத்து

பாம்புகள் அஞ்சுமாறு இடி முழங்கி மழை பொழியக் கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவியின் உடலில் ஏற்பட்ட பசலை சிதறி ஓடும் வண்ணம் தலைவன் வந்து சேர்வான்.

குறிப்பு

பாம்பிற்கு இடி ஓசை ஆகாது என்பதும், பாம்பிடம் மாணிக்கம் தோன்றும் என்பதும் அக்கால நம்பிக்கை.

சொற்பொருள்

1. அதிர்குரல் - அதிரச்செய்கின்ற ஒலியோடு; ஏறு - இடியேறு; மாந்தி - குடித்து.
2. முதிர்மணி - விளைந்த மாணிக்கம்; நாகம் - நாகப்பாம்பு; அனுங்க - வருந்தும்படி; முழங்கி - இடித்து.
3. கதிர்மறை - (ஞாயிற்றின்) கதிர்கள் மறையப்பெற்ற; கனைபெயல் - செறிந்த மழை; தாழ - பெய்தலால்.
4. பிதிரும் - சிதறவிட்டாற்போலப் பரந்து காணப்பெறும்; சுணங்கு - தேமல்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 29 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்காட்டிய தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவத்தைக் காண்பித்துத் தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறியது.

கோடல்அம் கூர்முகை கோள்அரா நேர்கருதக்
காடெலாம் கார்செய்து முல்லை அரும்(பு)ஈன
ஆறெலாம் நுண்ணறல் வார அணியிழாய்!
போதராய் காண்பாம் புறவு.

தெளிவுரை

"*அழகிய அணிகலன்களை அணிந்த தலைவியே! முல்லை நிலப் பகுதியில் முகில் முழங்கி மழையாய்ப் பொழிகிறது; காந்தள் செடிகள் பாம்புக்கு ஒப்பாகும் கூர்மையான அரும்பு களைத் தோற்றுவித்துள்ளன. முல்லைக் கொடிகள் அரும்புகளை ஈன்றுள்ளன. நடக்கும் வழியெல்லாம் நுட்பமான கருமணல் மழைநீரால் வழிந்து நனைந்து கிடக்கின்றது. கார் காலத்து முல்லைநிலக் காட்சியைக் கண்டு களிக்கலாம்! தலைவியே! வெளியே வா!*"

கருத்து

கார்ப்பருவ அழகிய காட்சிகள் தோன்றியிருப்பதைப் பார்; தவறாது தலைவர் வந்து சேர்வார்.

சொற்பொருள்

1. கோடல் – காந்தள்; அம் – அழகிய; கூர் முகை – கூர்மையான அரும்பு; கோள் – வலிமைமிக்க; அரா – அரவம் – பாம்பு; நேர் கருத – ஒப்பாக கருதும்படியாக.
2. காடு – முல்லைநிலம்; கார் செய்து – முகில்கள் முழங்கிப் பெய்தலால்; ஈன – தோற்றுவித்துள்ளன.

3. ஆறு எலாம் - நடக்கும் வழியெல்லாம்; நுண் அறல் - நுண்ணிய கருமணல்; வார - வழிந்து கிடக்க.
4. போதராய் - (வெளியே) புறப்பட்டு வா; புறவு - முல்லை நிலம்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 30 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்காட்டிய தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார்ப் பருவத்தைக் காண்பித்துத் தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறியது.

அருவி அதிரக் குருகிலை பூப்பத்
தெரிஆ இனநிரை தீம்பால் பிலிற்ற
வரிவளைத் தோளி! வருவார் நமர்கொல்
பெரிய மலர்ந்த(து)இக் கார்.

தெளிவுரை

"வரிகளைக் கொண்ட வளையல்களை அணிந்த தோள்களைக் கொண்ட தலைவியே! அருவிகள் பெருகி ஒலிக்கவும், குருக்கத்திச் செடிகள் செழிப்புற்றுத் தழைக்கவும், சுரத்தல் தன்மை வாய்ந்த பசுக் கூட்டங்கள் குறைவில்லாது இனிய பாலைப் பொழியவும் மேகம் மிகுதியும் மழையைப் பொழிகிறது. கார் காலம் வந்துவிட்டது. ஆதலால், நம் தலைவர் இப்போது வந்துவிடுவார்."

கருத்து

குருக்கத்திச் செடிகள் தழைத்திடுமாறு கார் காலம் தோன்றிவிட்டது; தலைவரும் இப்போதே வந்து சேர்வார்.

சொற்பொருள்

1. அதிர - ஒலிக்க; குருகு - குருக்கத்திச் செடி; பூப்ப - பொலிவுடன் விளங்க.
2. தெரி - பால் சுரத்தலைத் தெரிந்து அறியப்பட்ட; ஆஇனம் - பசுக் கூட்டங்கள்; தீம்பால் - இனிய பால்; பிலிற்ற - பொழிய.
3. வரிவளை - வரிகளைக் கொண்ட வளையல்கள்; நமர் - நம்மவரான தலைவர்.
4. பெரிய - மிகுதியும்; மலர்ந்தது - பரந்து பொழிகின்றது; இக்கார் - இம்முகில்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 1 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார் வருமுன் தன் தேர் வருமெனத் தலைவன் தேற்றிச் சென்றான். அவன் குறிப்பிட்ட கார்ப்பருவம் வந்துவிட்டதைத் தோழி தலைவியிடம் கூறித் தலைவன் வரவு அண்மையது எனத் தேற்றுவித்தாள்.

மல்லர்க் கடந்தான் நிறம்போல் திரண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி – நல்லாய்
இயங்கெயில் எய்தவன் தார்பூப்ப ஈதோ
மயங்கி வலன்ஏருங் கார்.

தெளிவுரை

"நல்ல பண்புகளைக் கொண்ட தலைவியே! மேகங்கள் நான்கு திசைகளிலும் சூழ்ந்து, கம்சனால் அனுப்பப்பட்ட வீரர்களை வென்ற கண்ணபிரானின் கரிய நிறம்போல இருள் எங்கும் பரவியுள்ளது. வளமையினைக் கொண்ட கடப்ப மலர் மாலையைச் சூடிய முருகப்பெருமானின் வேல்போல் மின்னல்கள் மின்னுகின்றன. இடம் பெயர்ந்து செல்லக்கூடிய பொன்னாலும், வெள்ளியாலும், இரும்பாலும் ஆன மூன்று மதில்களைத் தன்

சிரிப்பால் பொடியாக்கிய சிவபெருமான் அணியும் மாலை போலக் கொன்றை மலர்கள் பூத்துள்ளன. மேகம் வலமாய்ச் சுழன்று எழுந்து கார் காலத்தை நமக்கு அறிவிக்கிறது" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

கொன்றை மலர்ந்திடுமாறு கார் காலம் தோன்றிவிட்டது; தலைவன் வந்து விடுவான்.

சொற்பொருள்

1. மல்லர் - (கம்சனால் அனுப்பப்பெற்ற) வீரர்கள்; கடந்தான் - வெற்றி கொண்டவன் (கண்ணபிரான்); நிறம் - கறுப்பு.
2. கடம்பு - கடம்ப மலர்; அமர்ந்தான் - விரும்பியவன் (முருகன்).
3. இயங்கு எயில் - இயங்கும் கோட்டை; எய்தவன் - சிவபெருமான் (அசுரர் மூவர் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகள்மீது அமர்ந்து சென்று உலவித் தேவர்களை அழித்தனர். சிவன் அக்கோட்டை களைப் பார்த்துச் சிரித்த அளவிலேயே அவை அழிந்தன என்பது புராணக்குறிப்பு); தார் - மாலை - சிவனுடைய மாலையாகிய கொன்றை.
4. வலன் ஏரும் - வலமாய்ச் சுழன்று எழும்; கார் - மேகம்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 2 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்றான். கார் காலம் தோன்றியும் அவன் திரும்பி வாராமையால் வருந்திய தலைவி, தோழியிடம் சொல்லியது.

அணிநிற மஞ்ஞை அகவ, இரங்கி,
மணிநிற மாமலைமேல் தாழ்ந்து – பணிமொழி!
கார்நீர்மை கொண்ட கலிவானம் காண்தொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்.

தெளிவுரை

பணிவான மொழியினைக் கூறுபவளே! அழகிய மயில்கள் அழைக்கக் கார் கால மேகம் முழக்கத்தோடு வந்து, நீலமணி நிறங் கொண்ட மாமலைகளின்மேல் படிந்துள்ளது. இம்முகில்களைக் காணும்தோறும் தலைவனின் பிரிவாற்றாமையால் என் தோள்கள் பீர்க்கம் பூ நிறத்தினை ஒத்த பொன்போன்ற பசலையைக் கொண்டுள்ளன.

கருத்து

மயில் அகவ, கார் மேகம் வந்து சேர்ந்தது; ஆனால், தலைவன் வரவில்லை; எனவே, என் தோள்களில் பசலை பூத்தது.

குறிப்பு

மயில் அகவுவதற்கு இரங்கி உயிரில்லாத பொருளாகிய கார் மே வந்துற்றது. ஆனால், பிரிவாற்றாமையால் மிகவும் வருந்தும் என் நிலையைத் தலைவர் எண்ணிப் பார்க்கவில்லையே என்பது உட்பொருள்.

அருஞ்சொற்பொருள்

1. அணி - அழகிய; மஞ்ஞை - மயில்; அகவ - கூவி அழைக்க.
2. மணி நிறம் - நீலமணி போன்ற நிறம்; தாழ்ந்து - படிந்து.
3. கார் நீர்மை - கார் காலத்தின் தன்மை; கலிவானம் - நீர் நிரம்பிய மேகத் திரட்டு.
4. பீர்நீர்மை - பீர்க்கம் பூவின் தன்மை (பொன்போன்ற பசலை நிறம்)

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல்களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-9
ISBN: 978-81-8379-776-4
9 788183 797764

விலை ரூ. 7200/